ஆய்வுக் கோவை 2004

பல்துறையியல்

பதிப்பாசிரியர்

சிற்பி பாலசுப்பிரமணியம்
ஒய். டென்னிசன்
சிலம்பு நா. செல்வராசு
பெ. சுபாசு சந்திர போசு
சா. கிருட்டினமூர்த்தி
(அமைப்புச் செயலர்)

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
35-ஆம் கருத்தரங்கம்

திருவள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 9, 10

2004 மே, 22, 23

★ ★ ★ ★ ★

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை

★ ★ ★ ★

பதிப்புதவி

முனைவர் அன்னிதாமசு

முனைவர் ஜீன் லாறன்ஸ்

முனைவர் ச. சிவகாமி

முனைவர் தா. ரெங்கநாதன்

முனைவர் சூ. நிர்மலாதேவி

முனைவர் மு. வளர்மதி

ஆய்வுக்கோவை

பல்துறையியல்

பதிப்பாசிரியர்

சிற்பி பாலசுப்பிரமணியம்

ஒய். டென்னிசன்

சிலம்பு நா. செல்வராசு

பெ. சுபாசுசந்திரபோசு

சா. கிருட்டினமூர்த்தி
(அமைப்புச் செயலர்)

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்

தமிழாய்வுத்துறை

பிஷப் ஹீபர் கல்லூரி

திருச்சிராப்பள்ளி – 620 017

★ ஆய்வுக்கோவை
பல்துறையியல்

★ இ.ப.த. மன்றம்
தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 017

★ முதற் பதிப்பு
திருவள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி, 9
2004 மே 22

★ விலை : உருபாய் 200/-

கணினி அச்சு : சடாநாயகம் பிரிண்டர்ஸ்
176, கீழரத வீதி, சிதம்பரம் - 608 001. ✆ : 223040, 223020

மெல்லச்சு : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
101-D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, லஸ், மயிலாப்பூர்
சென்னை - 600 004 ✆ : 24984693, 24661807

உள்ளே... உள்ளே... உள்ளே...

பல்துறையியல்

தொல்காப்பியரின் பெண்

ப. சாந்தி

பல்கலைக்கழகக் கல்லூரி
திருவனந்தபுரம்

தமிழில் கிடைக்கும் முதல் எழுத்து வடிவநூல் தொல்காப்பியம். இது ஓர் இலக்கண நூல்தான். சங்க இலக்கியத்திற்கான இலக்கணம். பெரும்பான்மையான சங்க இலக்கியப் பாடல்களைத் தொல் காப்பியத்தின் துணையால் மட்டுமே விளக்கமுடியும். தொல்காப்பியம் இலக்கியத்தில் பயின்றுவரும் மொழிக்கும் இலக்கியத்தின் உள்ளடக்கத்திற்கும் இலக்கணம் கூறுகிறது. தமிழர்களின் வாழ்க்கை மதிப்பீடுகளின் முதல் பதிவே தொல்காப்பியத்தில் தான் இருக்கிறது. நம் மதிப்பீடுகளில் இன்றளவும் பெருமளவு மாறுதல்களை எதிர் கொள்ளாத மதிப்பீடு பெண்மை தொடர்பானதுதான். பெண்மை தொடர்பான நம் மதிப்பீடுகளின் துவக்கப்புள்ளி தொல்காப்பியத் திலேயே நிலைகொள்கிறது. காலத்தின் முன் நம் மதிப்பீடுகள் பெரும் கேள்விக்குள்ளாகியுள்ள இன்றைய சூழலில் இத்துவக்கப் புள்ளி குறித்த பார்வை இன்றியமையாததே.

தொல்காப்பியர் முன்வைத்த கருத்து நிலையில் காலப்போக்கில் தோற்றம் கொண்ட மாறுதல்களை உரையாசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். வாழ்வின் மதிப்பீடுகள் எவ்வாறு மாறுதலடைந்து வந்துள்ளன என்பனவற்றை உரைகள் மூலமாகவே அறிய இயலும்.

தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல் என்றாலும்கூட வாழ்வின் மதிப்பீடுகளின் சேமிப்புக் கிடங்காக இது விளங்குகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம் இதன் நிலைக்களனாகிறது. அகத்திணையியல் - களவியல், கற்பியல் என்னும் மூன்று இயல்களும் இவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன. நம் வாழ்க்கை மதிப்பீடுகளில் பெண்மை தொடர்பான மதிப்பீடு காலத்தால் பழமையானது மட்டுமல்ல நூற்றாண்டுகளாக இடையறாது தொடர்வது. தொல்காப்பியத்தில் இதன் ஊற்றுக்கண் உள்ளது. கற்பைப் பற்றிக் கூறும் தொல்காப்பியம் கற்பு பெண்ணுக்கு மட்டுமே உரியது என்று வரையறுக்கிறது.

''கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்

விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்
பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்
முகம் புகன் முறைமையிற் கிழவோள் குரைத்தல்
அகம் புகன் மரபின் வாயில்கட் குரிய'' (தொல். கற்பியல் - 11)

அகம் புகல் மரபின் வாயில்களான பாணர், கூத்தர் முதலியோர் களின் கூற்று நிகழுமிடம் குறித்துக் கூறுமிடத்தில் மனைக்கிழத்திக் குரிய மாண்புகளைக் கூறும்போது கற்பை வரையறுத்துக் கூறுகிறார். இளம்பூரணர் இதைப் பற்றி விளக்கிக் கூறவில்லை. ஆனால் நச்சினார்க்கினியர் இதை ''கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் திரியாத நல்லொழுக்கமும், அன்பும், எல்லாவற்றானும் தங்குலத்திற்கு ஏற்றவாற்றான் ஒழுகும் ஒழுக்கமும், பொறையும், மறைபுலப் படாமை நிறுக்கும் நெஞ்சுடைமையும், விருந்தினரைப் பாதுகாத்து அவர் மனமகிழ்வித்தலும் அவை போல்வன பிறவுமாகிய தலைவியுடைய மாட்சிமைகள்'' என்று விளக்குகிறார், இங்கு இல்வாழ்க்கையில் பெண் கணவனுக்குக் கட்டுப்பட்டவள். அவன் சொற்படி அவனுக்கு உண்மையாக நடக்க வேண்டும் என்பது தெளிவாகிறது, இல்வாழ்க்கையின் கடமை குறித்து வரையறுக்க வில்லை, பெண்ணிற்கான ஒழுக்கங்களையே வரையறுக்கிறார்.

''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆங்கவை பிறவும் தோன்றுமன் பொருளே''

(தொல். களவு - 23)

இந்நூற்பா உயிரைவிட நாணம் சிறந்தது நாணைவிடக் கற்பு சிறந்தது என்று கூறுகிறது. இது தலைவிக்குக் கூறப்பட்டதே தலைமகனுக்கு அல்ல. ஆணுக்கு இது பாதிப்பதில்லை. எனவேதான் அவன் பரத்தமை ஒழுக்கம் கொண்டிருந்தான். இதற்கான சான்றும் தொல்காப்பியத்தில் உள்ளது.

''அடங்கா ஒழுக்கத் தவன் வயின் அழிந்தோளை
அடங்கா காட்டுதற் பொருளின் கண்ணும்'' (தொல். கற்பு-9)

என்ற நூற்பாவில் தோழி கூற்று நிகழுமிடங்களாகக் கூறுகிறது. ''பரத்தமையாகிய குற்றத்தினைப் புரிந்து வந்திருந்த தலைவனை இடித்துக் கூறிக் குற்றந்தீர்த்த நிலையில்'' என்று ஆய்வுரை 'அடங்கா ஒழுக்கம்' என்பதற்கு விளக்கம் தருகிறது. இந்நிலையைத்தான் பாரதி அன்றே கேள்விக்குள்ளாக்கினார். பாரதி சமூகத்தில் பெண்ணுக்கு மட்டுமே கற்பு என்பதை மறுக்கிறார். ஆண் கற்பொழுக்கம் கொள்ள

வில்லை என்றால் பெண் கற்பொழுக்கமுடையவளாக இருக்க முடியாது. ஆனால் இன்றைய திரைப்படங்கள் பெண்ணுக்கு மட்டுமே கற்பு என்பதைத்தான் முன் வைக்கிறது. இந்நிலை தொல்காப்பியத்தி லிருந்துதான் வேர்கொள்கிறது. இலக்கியத் தரம் கொண்ட எழுத்துக் களில் மட்டுமே இந்நிலையின் சரிவைக் காணமுடியும், இவை மதிப்பீடுகளின் சரிவைத் துலக்குகின்றன. ஆனால் திரைப்படங்களோ போலி மதிப்பீடுகளை முகமூடியாகக் கொண்டு பார்வையாளர்களைக் கவர்கின்றன.

தொல்காப்பியத்தின் அடிப்படையில் பெண் பிறப்பிலும் கூட இரண்டாவது நிலைக்குத் தள்ளப்படுகிறாள். தாய்மை தான் பெண்ணின் சிறப்பு. அத்தகுதிக்கு அவளை உயர்த்துவது அவள் புதல்வனைப் பெறுவதால் மட்டுமே என்று தொல்காப்பியம் கூறுகிறது. 'புதல்வனைப்' பெற்றதாய் என்று பல இடங்களில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். 'புதல்வியைப்' பெற்றவள் என்று எங்கும் குறிப்பிடவில்லை.

''கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ'' (தொல். கற்பு-6)

என்ற நூற்பா இதற்குச் சான்று பகர்கிறது. 'கயந்தலை' என்ற சொல்லுக்கு இளம்பூரணர் 'புதல்வன்' என்று பொருள் கொள்கிறார். நச்சினார்க்கினியர் 'யானைக் கன்று போலும் புதல்வன்' என்று பொருள் தருகிறார். எனவே புதல்வனைப் பெற்றவள் என்ற குறிப்பே எங்கும் காணப்படுகிறது. அதோடு புதல்வனைப் பெற்ற தாயே சிறப்படைகிறாள். புதல்வனுக்கே சிறப்பு செய்யப்படுகிறது. தலைவன் கூற்று நிகழுமிடம் கூறும்போது தொல்காப்பியர் இதைக் கூறுகிறார்.

''புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்''
(தொல். கற்பு-5)

புதல்வனைப் பெற்று ஈன்றணிமை நீங்கிய பொழுதின்கண் நெய்யாடல் புரிந்த தலைவியை நோக்கி அவளுடைய தமையன்மார் பக்கத்தாராக அவர்களைக் குறித்தும் அமர்புரிந்து தெய்வ நிலைபெற்ற தன் குடிமுதல்வராகிய வீரர்களைக் குறித்தும் செய்யப்படும் சிறப்புடைய நிகழ்ச்சியிற் கலந்து கொள்ளுமிடத்தும் தலைவன் கூற்று நிகழும் என்கிறார். தொல்காப்பியர் எல்லா இடங்களிலும் புதல்வனுக்கே முக்கியத்துவம் அளித்துள்ளார். புதல்விக்கு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. ஆண் குழந்தைதான் பெண்ணைத்

தாய் என்ற சிறப்பு நிலைக்கு உயர்த்தியதன் காரணம் ஆணுக்கு பல பெண்களைத் திருமணம் செய்வதற்குரிய உரிமை இருந்தது. தலைவிக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டிருந்தது. காமக்கிழத்தியர் கூற்று நிகழுமிடம் கூறும்போது இளம்பூரணர் ''காமக்கிழத்தியர் மூவகைப்படுவர் என்று விளக்குகிறார் ஒத்தகிழத்தியர், இழிந்த கிழத்தியர், வரையப்பட்டார் எனக் கூறுகிறார். ஒத்த கிழத்தியர் - முந்துற்ற மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னுந் தன் குலத்துள்ளாள் ஒருத்தியை வரைதல் என விளக்குகிறார். எனவே ஆண் ஒன்றிற்கதிகமான பெண்ணை மணந்துள்ளான்'' என்பது இதனால் தெளிவாகிறது.

ஆண், பெண் உறவு பற்றிக் கூறும்போது ஆணை முன்னிலைப் படுத்தியே தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆணின் விருப்பத்திற் கிணங்க தலைவி நடக்க வேண்டும் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. தலைவிக்குத் தன் வேட்கையை வெளிப்படுத்தும் உரிமை இல்லை. அவள் விரும்பினாலும் தன் இச்சையைக் கூறக்கூடாது. அவ்வாறு அவள் தன் விருப்பை வெளிப்படுத்தினால் அவள் இழிந்தவளாகக் கருதப்படுவாள்.

''தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்
எண்ணுங் காலை கிழத்திக்கு இல்லைப்
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப'' (தொல். களவு-28)

தலைவி தன் விருப்பைக் குறிப்பால் மட்டுமே உணர்த்தலாம், ஆனால் தலைவன் கூற்றினாலும் கூறலாம். தலைவனுக்காகத் தான் தலைவி என்றுதான் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். தலைவிக்காகத் தலைவன் இல்லை தலைவனின் இயல்புக்கேற்பத் தலைவி நடத்தல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

ஆண், பெண் தகுதிகள் பற்றிக் கூறும்போது ஆளுந்தன்மை ஆணுக்குரியது என்றும், அடங்கிப் போதல் பெண்ணுக்குரியது என்றும் கூறுகிறார்.

''பெருமையும் உரனும் ஆடூஉமேன' (தொல். களவு-7)

''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாஂற்கு உரிய என்ப'' (தொல். களவு-8)

ஆணுக்குரிய இயல்பு பெருமையும், உரனும் என்கிறார், பெண்ணுக் குரியது அச்சம், மடம், நாண் என்கிறார், பெண் அடங்கிப் போக வேண்டும் என்பதையே தொல்காப்பியம் கூறுகிறது. தொல்காப்பியர் கருத்துப்படி பெண் ஆள்வதற்குரியவள் அல்லள். இன்றைய

திரைப்படம் கூட இதைத்தான் கூறுகிறது. பெண் மேலாதிக்கம் செலுத்தும் குடும்பம் சிதைவுறும் என்பதைத்தான் திரைப்படமும் முன் வைக்கிறது. சில இலக்கியத்தரமான எழுத்துக்கள்தான் இங்கும் எதிர்வினை நிகழ்த்தியுள்ளன.

தலைவி எங்குச் செல்ல வேண்டும் என்ன பேசவேண்டும் என்பதிலும் கட்டுப்பாடு இருந்தது என்பதைத் தொல்காப்பியம் களவியல் சூத்திரம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

''காமக் கிழவன் உள்வழிப்படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆங்கவை பிறவும் தோன்றுமன் பொருளே''

(தொல். களவு. 23)

இச்சூத்திரம் தலைவி தலைவன் இருந்தவிடத்தே தானே செல்லுதலும், வருத்தமில்லாச் சொல்லைத் தலைவி சொல்லுதலுமாகிய அவ்வகை பிறவும் தோன்றும் அவை அகப்பொருளாம் என நச்சினார்க்கினியர் விளக்குகிறார். கடல் கடந்து செல்லுதலும் பெண் களுக்கு இல்லை, பிரிவு என்பதும் தலைவனுக்கு மட்டுமே உரியது.

திருமணம் தொடர்பான சடங்கு முறைகளைத் தொல்காப்பியர் மேலோர் எனப்படும் பார்ப்பனர்களை முன்னிறுத்தியே எழுதியுள்ளார். பிற்காலத்தில் அது கீழோருக்கும் உரித்தானது. இதை,

''மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்
கீழோர்க் காகிய காலமும் உண்டே'' (தொல். கற்பு-3)

என்னும் சூத்திரத்தால் தெரிந்து கொள்ளலாம். இதைத்தான் பின்னர் அனைவரும் கடைபிடித்தனர். பார்ப்பனீயத்தை எதிர்ப்பவர்களும் கூட இந்த பார்ப்பனீயத்தைப் பின்பற்றுகின்றனர். தொல்காப்பியர் காலத்திற்குமுன் இக்கட்டுப்பாடுகளும், வரையறைகளும் இல்லாத ஒரு சமூகம் இருந்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

முடிவுரை

தொல்காப்பியர் காலத்தில் பெண்ணுக்கொரு நியதியும், ஆணுக்கொரு நியதியும் இருந்தது. பெண் அடக்கப்பட்டவளாகத் தான் சித்தரிக்கப்பட்டுள்ளாள். அவள் வரையறைக்குட்பட்டு வாழ்ந்திருந்தாள். இன்றைய பெண்ணியம் தொடர்பான ஒரு நுனியைத் தொல்காப்பியர் காலத்தில் காண முடிகின்றது.

பெண் வருணனைகளில் கூற்றுநிலை மாற்றம்

அ. தத்தை பழனி
தாகூர் கலைக் கல்லூரி
புதுச்சேரி - 8

அகப்பொருள் பற்றிய செய்திகளைப் பாட முற்படுவோர் அதற்கான மரபினைப் பின்பற்றியே பாடுதல் வேண்டும். ''உள்ளுறை'', ''இறைச்சி'' முதலிய அகத்திணை மரபுகள் அகப்பொருளின் இன்றி யமையாத கூறுகளாகும். அகத்திணை மாந்தர்கள் தங்களது உள்ளத்து உணர்வை வெளிப்படையாகக் கூறுதல் மரபன்று. இதன் காரணமாக உருவாக்கப்பட்ட கோட்பாடுகளே உள்ளுறை, இறைச்சி ஆகும். இப்படி மரபு வயப்பட்ட சங்க இலக்கியங்களில் கூற்று, சில குறிப்பிட்ட வரன்முறைகளுக்குட்பட்டே நிகழ்த்தப்பட்டுள்ளது. இக்கூற்று நிகழ்தலிலும் தலைவிக்கு நெருக்கமானவர்களைத் தவிர மற்றவர்கள் தலைவியின் உடல் உறுப்புப் பற்றிய வருணனைகளைப் பேசுதல் இல்லை. ஆனால் இடைக்காலத்தில் எழுதப்பட்ட ''சீவக சிந்தாமணியில்'' தலைவியின் உடல் உறுப்புப் பற்றிய கூற்றுநிலை வேறுபாடின்றி எல்லா நிலை மாந்தர்களின் கூற்றுகளிலும் இடம் பெறுகின்றது. இக்கூற்றினை வரலாற்று நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியங்கள் எனப்படும் எட்டுத்தொகையும், பத்துப் பாட்டும் அகம் புறம் என்ற இருபெரும் பிரிவுகளைக் கொண்டன. இவ்விரு பிரிவுகளிலும் கூற்றினை அடிப்படையாகக் கொண்டே பாடல்கள் பாடப்பட்டுள்ளன என்பது தெளிவு. அகத்திணைப் பாடல்களைப் பாடும்போது மட்டும் இலக்கியக் கட்டுப்பாடுகளை மீறாமல் பாடுதல் வேண்டும். இலக்கிய மாந்தர்களில் குறிப்பிட்ட சிலருக்கே கூற்றுகள் இடம்பெற்றுள்ளன. இப்படிக் குறிப்பிட்ட கூற்றுகளிலும் கூடத் தலைவியின் உடல் உறுப்புகளைப் பாடுதல் என்பது தலைவியின் நெருக்கத் தொடர்புடையவர்கள் கூற்றில் மட்டுமே இடம்பெறும்.

1. தலைவன்
2. தோழி

ஆகியோரது கூற்றில் இடம்பெறும்.

''திதலை அல்கும் எம் காதலி (அகம். 54)

''சாயிரைப் பனைத்தோள் அவ்வரி அல்குல்'' (ஐங். 481)

''ஐது அகல் அல்குல் கவின் பெறப் புனைந்த'' (அகம். 390)

மேற்கண்ட பாடலடிகளின் மூலம், தலைவன் கூற்றில் தலைவியின் உடல் உறுப்புகள் பற்றிய செய்திகளை அறிய முடிந்தது.

சங்க மருவிய இலக்கியங்கள்

சங்க மருவிய காலத்தில் தனிப்பாடல்கள் மறைந்து, அற இலக்கியங்களும், தொடர் பாடல்களான காப்பியங்களும் உருவாயின. இவ்வகை இலக்கியங்களில் பெண்ணைப் பற்றிய வருணனைகள் கூற்று அடிப்படையில் ஆராயும்போது சில கருத்துக்களைப் பெற முடியும்.

சிலப்பதிகாரம்

தமிழர் காப்பியம் எனப் போற்றப்படும் சிலப்பதிகாரத்தில் தலைவன் கூற்றாகவும், ஆசிரியர் கூற்றாகவும் தலைவியின் அங்க உறுப்புக்களின் பெயர்கள் இடம்பெறுகின்றன.

''திருமுலைத் தடத்திடைத் தொய்யில் அன்றியும்''

என்று மனையறம் படுத்த காதையில் (69) தலைவன் (கோவலன்) தலைவியை (கண்ணகி) நோக்கிக் கூறுவதாகக் கூற்று அமைகின்றது.

''செந்துகிர்க் கோவை சென்றேந் தல்குல்
அருந்துகில் மேகலை அசைந்தன வருந்த''

''மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்குமம் எழுதாள்''

''ஏதிலாளன் கவலை கவற்ற
ஒருமுலை யறுத்த திருமா வுண்ணி''

என்ற வரிகள் ஆசிரியர் கூற்றாக அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் இடம்பெற்றுள்ளன.

திருக்குறள்

''கல்லாதான் சொல்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று''.

''கடாஅக் களிற்றின் மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்''

இப்பாடல்கள் நேரடியான ஆசிரியர் கூற்றாக அமைந்துள்ளன.

பக்திக்காலம்

பக்தி இயக்கம் துவங்கிய காலத்தில் பாடல்கள் அனைத்தும் கடவுளை நோக்கியே பாடப்பட்டன. இதில் தன்னை அடியவ ராகவும், இறைவனைத் தாயாகவும் பாடுவதோடு, ''நாயக, நாயகி'' பாவனைத் தோன்ற பாடியுள்ளனர். பக்தி இலக்கியம் என்று கூறப்படும் திருவாசகத்தில் ஆசிரியர் கூற்றாகவும், தலைவன் கூற்றாகவும் அமைந்த சில பாடல்களில் ''கொங்கை, முலை'' என்ற ஒரே பொருள் கொண்ட சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

மேற்கண்ட செய்திகளை ஆராயுமிடத்துத் தலைவியின் மிக நெருக்க உறவுடைய, ''தலைவன், தோழி, தாய்'' ஆகியோரது கூற்றுகளிலும், படைக்கும் ஆசிரியனது நேரடிக் கூற்றாகவும் தலைவியின் உடல் உறுப்பு வருணனைகள் இடம் பெறுகின்றன.

சீவக சிந்தாமணி

மேற்கண்ட கூற்று அடிப்படையிலான உறுப்பு வருணனை களைச் சீவக சிந்தாமணியோடு இணைத்துப் பார்க்கும்போது, மரபு மீறல் நடைபெற்றுள்ளதை அறிய முடிகின்றது. அமைச்சன், துஷவிகள், தந்தை பணியாளன் ஆகியோரது கூற்றுகள் தலைவியின் உறுப்பு களை வருணிப்பதாக அமைகின்றன.

அமைச்சன் (537), அச்சணந்தி அடிகள் (385), தந்தை (479, 480, 587, 844), பணியாளன் (984) போன்ற பாடலடிகளில் ''அல்குல், முலை'' என்ற பெண்ணின் உடல் உறுப்புகள், தலைவிக்கு நெருக்கமானவர்கள் என்று கூறமுடியாத நால்வரது கூற்றுகளில் நேரடியாக இடம் பெற்றுள்ளன.

இந்நால்வகைக் கூற்றுகளும் சங்க இலக்கியங்களில் காணப் படவில்லை என்பது தெளிவு. இந்த மாற்றத்திற்கான காரணத்தை அறிய

1. இவ்வகை கூற்று சமுதாய நடைமுறையின் வெளிப்பாடா?
2. இவ்வகை கூற்று இலக்கிய மரபின் வளர்ச்சிப் படிநிலையா?

என்ற வினாக்கள் ஆய்வுப்போக்கில் தெளிவை ஏற்படுத்தலாம்.

சமுதாய வெளிப்பாடு என்றால் ''இக்காப்பியக் காலக்கட்டத்தில் பெண்களது புறவாழ்வும், பொருளீட்டலில் பங்கேற்பும் முழுமை யாகத் தடைசெய்யப்பட்ட காலம். புறமணம் எனப்படும் களவு மணம் சமூகத்தில் எதிர்ப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த காலம் பெற்றோரின் முழு விருப்பு வெறுப்புக்கு ஆட்பட்டே திருமணங்கள் நடத்தப்பட்டன. பெண்களை வீட்டிற்குள் வைத்துப் பாதுகாக்கும் மரபு இருந்திருக்கின்றது.

இப்படிப்பட்ட சூழலில், பெண்களைப் பார்த்தல், கொச்சை யாகப் பாடுதல், யார் வேண்டுமானாலும் பாடுதல் என்ற சூழ்நிலையைச் சமுதாயம் கண்டிப்பாக அங்கிகரித்திருக்காது.

இலக்கிய மரபின் வளர்ச்சி நிலையா? எனும்போது, ஏன் இந்த மரபு விரிவாக்கம்? யாருக்காக இந்த விரிவாக்கம்?

முற்றிலும் துறந்த துறவியால் காமச்சுவையைப் பாட இயலாது என்ற கூற்றைப் பொய்யாக்க காமச்சுவை மிக்க காப்பியத்தைப் பாடியிருத்தல் வேண்டும். ''சமணம்'' வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயத்தில், சமணம் இல்லற வாழ்க்கைக்கோ, தாம்பத்திய வாழ்க்கைக்கோ எதிரானது அல்ல என்பதை விளக்கவும் இக்காப்பியம் காமச்சுவை மிக்கதாக எழுதப்பட்டிருக்கலாம். இதன் காரணமாகவே பெண் உறுப்புகள் வெகுவாக வருணிக்கப்பட்டுள்ளன.

யாருக்காகப் படைக்கப்பட்டது என்பதை ஆராயும்போது புலவர்கள் பரிசு பெறவும் நற்பெயரீட்டவும் அரசனைப் புகழ்ந்து பாடுதல் மரபு. அவ்வகையில் தேவர் துறவியாதலின் பரிசுப் பொருளாகச் சமணம் தழைக்க வேண்டும் என்பதைப் பெறவேண்டி, அரசனின் உணர்ச்சிகளுக்கு இன்பம் தரக்கூடிய, இவ்வகை சொற்றொடர்களைப் பயன்படுத்திக் காப்பியம் படைத்திருத்தல் வேண்டும். எனவே தான் இக்காப்பியம் சோழன் அவையில் அதிகம் படிக்கப்பட்டி ருக்கின்றது என்பது தெளிவு.

இலக்கிய வரலாற்று நூல்களில் - பெண் படைப்பாளர்களின் நிலை

த. மலைமதி

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி
விழுப்புரம் - 605 602

சமூக மக்களிடையே ஆண், பெண் என்ற பாகுபாடு இருப்பதைப் போன்றே இலக்கிய படைப்பாக்க முயற்சிகளிலும் ஆண், பெண் என்ற பாகுபாட்டின் அடிப்படையிலேயே படைப்புகள் தோற்றம் பெறுகின்றன. இவ்விருபாலர் தம் படைப்புகளிலும் அடிப்படையான நுண்ணிய வேறுபாடுகள் இருப்பது தவிர்க்க முடியாத ஒன்றே. இந்நிலையில் ஆண் படைப்புகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட குணநலன்களையும், அடிப்படை மாறுபாடுகளையும் (கதை, உவமை, அணி, மொழி அமைப்பு) கொண்டே பெண் படைப்புகள் வெளிவருகின்றன, இன்னும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இம்மாறுபாட்டினைக் கொண்டு தோற்றம் பெற்ற இலக்கிய படைப்புகள் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் சரிவரப் போற்றப் படாமைக்கான காரணத்தை ஆராய முற்படுகின்றது இக்கட்டுரை.

தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் - பெண் படைப்புகள்

தமிழ் இலக்கியத்தின் வரலாற்றினை ஆங்கிலத்தில் எழுதிய பூரணலிங்கம் பிள்ளை என்பவரே முதன் முதலில் இலக்கிய வரலாற்று நூலினை எழுதிய பெருமைக்குரியவர். அவரைத் தொடர்ந்து கா.சு. பிள்ளை என்பவர் தமிழிலக்கிய வரலாற்று நூலினைத் தமிழில் தொடங்கி வைத்தார். இவர்களைப் பின்பற்றியே அறிஞர்கள் பலர் இலக்கிய வரலாற்று நூல்கள் எழுதியும், எழுதிக்கொண்டும் வருகின்றனர். இதுவரை வெளிவந்துள்ள தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் பெண் படைப்பாளிகளின் (பெண் படைப்புகள்) நிலை எவ்வாறு உள்ளது என்பதைக் காண முற்படுகையில் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் மூன்று பிரிவுகளாகப் (சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், தற்கால இலக்கியம்) அப்படைப்புகள் பிரித்து எழுதப்பட்டுள்ளன. சங்க இலக்கிய வரலாற்றில் ஔவையார், பக்தி இலக்கிய வரலாற்றில் காரைக்காலம்மையார், ஆண்டாள் ஆகியோர் மட்டுமே இலக்கிய வரலாற்று நூல்களில் இடம் பெற்றுள்ளனர். இவை ஒருபுறமிருக்க தற்கால இலக்கியங் களான

நாவல், சிறுகதை, புதுக்கவிதை முதலிய படைப்புகளைப் பெண் படைப்பாளிகள் எழுதியும், எழுதிக் கொண்டும் வருகின்றனர். இவர்களில் ஒரு சில (லக்ஷ்மி, இராஜம்கிருஷ்ணன், கோதை நாயகி) படைப்பாளிகளின் பெயரைத் தவிர இலக்கிய வரலாற்று நூல் களில் வேறு எந்தவிதமான குறிப்புகளும் இடம் பெறவில்லை. இவர்கள் மட்டும் தான் பெண் படைப்பாளியா? இந்நிலைக்குத் காரணம் என்ன? இவ்வினாக்களுக்கு விடை காண முற்படுகையில் ஆண் படைப்பாளிகள் தரமான செய்திகளையும், சமூகத்திற்குத் தேவையான கருத்துக்களையும், சிந்தனைகளையும் தம் படைப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர் (மு.வ. ஜெயகாந்தன், அகிலன், கல்கி போன்ற படைப்பாளிகளை இலக்கிய வரலாற்று நூல்கள் வெளிப்படுத்தியுள்ள போக்கு இங்குக் குறிப்பிடத்தக்கது). இத்தகைய படைப்பினையும் விமர்சனத்தையும் தான் இலக்கிய வரலாற்று நூல்கள் காலந்தோறும் எடுத்துக்கூறி வருகின்றன என்று சமாதானம் சொல்ல வாய்ப்புண்டு.

குடும்பத்தைக் காப்பது, குழந்தையினைப் பேணுவது, வீட்டினைக் காப்பது போன்ற செய்திகளையே கதைக்கருவாக்கிப் படைப்புகளைப் பெண் படைப்பாளிகள் படைத்து வருகின்றனர் என்ற தவறான கருத்துகள் ஆண் திறனாய்வாளர்களிடையே நிலவுகின்றன. இக் கருத்தினைப் பொய்யாக்கும் நிலையில் கீழ்வரும் பெ.சு.மணி எழுதிய சங்ககாலப் பெண்பாற் புலவரும் சங்ககால ஔவையாரும் என்ற நூலில் உள்ள செய்தி அமைகிறது.

''கடைச்சங்க காலத்தில் பல பெண்கள் நற்புலமை வாய்ந்த வர்களாக இருந்தனர். மற்ற புலவர்களுடைய வாக்குக்கு எவ்வளவு சிறப்புண்டோ அவ்வளவு சிறப்பு இவர்களுடைய செய்யுட் களுக்கு உண்டு''(ப. 233).

கா.சு. பிள்ளையின் இலக்கிய வரலாற்றின் முதல் பாகம் ஔவையார் என்ற பெண்பாற் புலவர் பலபேர் இருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இரண்டாம் பாகத்தில் பக்தி இயக்க காலம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் வளர்ச்சிப் போக்குகள் வரை கூறப்பட்டுள்ளன. இவற்றில் ஒருசில பெண் படைப்பாளியும் இடம் பெற்றுள்ளனர் என்பதே சிறப்பான ஒன்று.

மு.வ. எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு எனும் நூலில் கதை இலக்கியம் எனும் பகுதியில் பெண் படைப்பாளிகளை அறிமுகப்படுத்தும் முறை

''பெண்கள் பலர் கதைகளைப் படைத்து அளித்துப் புகழ் பெற்றிருக்கிறார்கள். பெண்களின் மனப் போராட்டங்களையும்

குடும்பச் சிக்கல்களையும், குழந்தைப் பாசத்தையும் வாழ்வின் மென்மைப் பகுதிகளையும் சித்தரித்துச் சிறுகதைகளும் நாவல்களும் எழுதுவதில் அவர்களின் சிறப்பியல்புகள் விளங்குகிறது'' *(ப. 309)* என்பதாக அமைகிறது. இவர் கோதை நாயகி, இலக்ஷ்மி, இராஜம் கிருஷ்ணன் போன்றவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுச் செல்கிறார். மேலும்,

''சூடாமணியும் வசுமதி ராமசாமியும், சிறுகதை, நாவல் ஆகிய இரு துறைகளிலும் சிறந்து விளங்கியவர்கள். இத்தகைய பெண் எழுத்தாளர்களுள் இன்றைய சமுதாயத்தை எண்ணிக் கொதித்து எழுதுகிறவர்களையோ காண்பது அரிது. வாழ்வின் மாறுதல் களையும் ஏற்றத் தாழ்வுகளையும் சிக்கல்களையும் அவர்கள் காணும் காட்சி, ஒரு சோலையுள் வாழ்ந்து அதன் மாறுதல்களையும் பிறவற்றையும் அன்றாடம் கண்டு அனைத்தையும் சேர்த்தே கட்புலனுக்கு விருந்தாகக் காணும் பொறுமையான காட்சியாக உள்ளது'' *(ப. 310, த.இ.வ)* என்றும் கூறுகின்றார்.

விடுதலைப் போராட்டத்திற்கு முன்னமே பெண்கள் படைப்பு களை உருவாக்கியுள்ளனர். அப்படைப்புகள் சமுதாய முன்னேற்றம், விடுதலை உணர்வு, தேசப்பற்றுப் போன்ற கருத்துக்களை முன் வைத்து வெளிவந்திருக்கின்றன. ஆனால் இலக்கிய வரலாறு நூல் எழுது கின்ற ஆண் எழுத்தாளர்கள் பெண் படைப்பாளர்களை உயர்த்திக் கூறுவதற்கு முன்வரவில்லை. பெண்கள் விடுதலைக்கு முன்பே படைப்புகளை உருவாக்கியது போன்று, விடுதலைக்குப் பின்னும் படைப்புகளை வெளியிட்டுள்ளனர். அவர்களின் படைப்புகள் இன்றைய சமுதாயப் போக்கினை எண்ணியும், கொதித்தும், புரட்சி கரமான கருத்துக்களைத் தருவனவாய் அமைந்துள்ளன. இவற்றி லிருந்து முற்றிலும் மாறுபட்ட தன்மையிலேயே பெண் படைப்பாளி களை இலக்கிய வரலாற்றாசிரியர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாற்றினை எழுதிய தமிழண்ணல் பெண் படைப்பாளிகளைப் பற்றி, பின்வருமாறு கூறுகின்றார்.

''பெண் எழுத்தாளர்களில் ஆர். சூடாமணியின் சிறுகதைகள், ஒரு நேர்முக வருணனைபோல் அமைந்து, மன உணர்வுத் தடங்களைச் சித்தரிப்பன'' *(ப. 482)* என்றும்

''லட்சுமி, ஆர். சூடாமணி போன்ற பெண் எழுத்தாளர்கள் தமிழகக் குடும்ப வாழ்க்கைச் சிக்கல்களை மையமாக வைத்துப் புதினங்கள் படைத்துப் படைத்துள்ளனர். லக்ஷ்மி சாகித்தியக் கழகப் பரிசு பெற்றுள்ளனர். மகளிரில் லக்ஷ்மி, இராஜம் கிருஷ்ணன் இருவரும் தலைமை வாய்ந்த வளர்ச்சி கண்டவர்கள் என்றும்,

சிவசங்கரி, இந்துமதி, அனுராதா ரமணன் போன்றோர் பலரும் வார மாத இதழ்களில் புதினங்கள் படைத்து வருகின்றனர்'' (ப. 488) என்றும் பெண் படைப்பாளிகளின் நிலையினை அறிமுகம் செய்துள்ளதைக் காண முடிகின்றது.

பெண்களின் மதிப்பும், மரியாதையும் சமூகத்தில் எவ்வாறு இழிவுபடுத்தப்பட்டுள்ளதோ அதே நிலைதான் இலக்கிய உலகிலும் காணப்படுகின்றது என்பதை இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதிலிருந்து உணரமுடிகின்றது.

மேற்சுட்டிய இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பெண் படைப்பாளிகளை அறிமுகம் செய்துள்ளதைப் போன்றே அவர்களைப் பின்பற்றி இலக்கிய வரலாறு எழுதிய எழுத்தாளர்களும் பெண் படைப்பாளிகளை அறிமுகம் செய்வதில் சிக்கனம் காட்டியுள்ளனர். அதற்குச் சான்றாக சி. பாலசுப்பிரமணியம், அருணன், சங்கரலிங்கம், ஜெயம் போன்ற இலக்கிய வரலாற்றாசிரியர்களைச் சான்றாகக் கொள்ளலாம்.

> ''பெண் எழுத்தாளர்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை இவர்கள் கதைகள் என்றும் கவர்ந்ததில்லை. ஜனரஞ்சகப் பத்திரிக்கையில் பெண் பேராலும் எழுதப்பட்ட கதைகளை ஒரு பாரா கூட என்னால் படிக்க முடிந்ததில்லை. ஆயிரம் அசட்டுத்தனங்களின் புகலிடம் என்னும் சுந்தர ராமசாமியின் கருத்தை நான் ஏற்கிறேன்'' (பிரபஞ்சன், எழுபதுகளில் கலை இலக்கியம், ப. 43).

எனப் பிரபஞ்சன் கூறுகின்றார். முதன் முதலில் நாவல் எழுதிய வேதநாயகம் பிள்ளையின் காலத்திலேயே கிருபை சத்தியநாதன், வை. மு. கோதைநாயகி, இராஜாத்தி அம்மாள் போன்ற பெண் எழுத்தாளர்கள் நாவல் எழுதியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. பெண் எழுத்தாளர்கள் எழுதுவதைக் கண்டு பொறுக்க முடியாத ஆண் எழுத்தாளர்கள் அவர்களின் படைப்புகளைக் குறைகூற வேண்டும் என்ற எண்ணத்திலேயே குற்றம் சாட்டுகின்றனர். பெண் எழுத்தாளர்கள் சமூகத்திற்குத் தேவையான செய்திகளையும், கருத்துக் களையும், புதிய உத்திமுறைகளோடு தம் படைப்பின் மூலம் வெளிப் படுத்தினாலும் பெண் படைப்பாளர்கள் கூறவரும் செய்தி என்ன என்பதை ஆராயும் முயற்சி இதுவரை இல்லை என்பதே உண்மை.

விடுதலைக்கு முன் பெண் படைப்புகள்

மேலை நாட்டின் தாக்கத்தால் உருவான உரைநடையைப் பின்பற்றியே தமிழிலும் உரைநடை வடிவம் தோற்றம் பெற்றது. 1876-ல் வேதநாயகம் பிள்ளை என்பவர் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நாவலை வெளியிட்டார். இதுவே தமிழின் முதல் நாவல்

என்ற பெருமையினைப் பெற்றது. இவரின் காலகட்டத்திலேயே கிருபை சத்தியநாதன் (1862-1894) என்பவர் ஆங்கிலத்தில் நாவல் எழுதியவர் என்றாலும் மொழிபெயர்ப்பின் மூலம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமான முதல் பெண் நாவலாசிரியர் இவரே.

பண்டிதை விசாலாட்சி அம்மையாரே முதல் பெண் தமிழ் நாவலாசிரியர். இவர் பதினான்கிற்கும் மேற்பட்ட தமிழ் நாவல்களை எழுதிய பெருமையினையுடையவர். இவரது படைப்புகளில் சமுதாயச் சிந்தனை, பெண் முன்னேற்றம், கல்வி, விடுதலை உணர்வு போன்றவற்றையே கதைக்கருவாக்கிக் காட்டுகின்றார்.

வை.மு. கோதைநாயகி அம்மாள் நூற்றியம்பதுக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதிய பெருமையினைப் பெற்றவர். இவரின் படைப்புகளில் சமூக நோக்கு, விடுதலை உணர்வு, பெண் முன்னேற்றம் போன்றவற்றையே கதையின் கருவாக்கி நாவல்களைப் படைத்துள்ளனர். இவரைப் போல இன்னும் பல (கஜாம்பிகை, ராஜாம்பாள், மோகனரஞ்சனி, பாலாம்மாள், கனகமணி, சரஸ்வதி, ராஜலட்சுமி) பெண் நாவலாசிரியர்கள் இருந்துள்ளனர். இவர்களின் பெயர்கூட இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத் தகுந்தது.

இதுவரை வெளிவந்துள்ள தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் பெண் படைப்பாளிகள் என்ற வரிசையில் லக்ஷ்மி, இராஜம் கிருஷ்ணன் என்ற இருவரின் பெயர் மட்டுமே பெரும்பாலும் இடம்பெற்றுள்ளது. இந்நிலைக்கு இருவரும் சாகித்திய அகாடமி விருதினைப் பெற்றவர் என்பதே பொருத்தமான காரணமாகும். விருதினைப் பெறவில்லை என்றால் இவ்விருவரின் பெயர்கள்கூட இடம் தெரியாமல் போயிருக்கும் என்பதே உண்மை.

இலக்கிய வரலாறு எழுதும் பெண் இலக்கிய வரலாற்றாசிரியர்களே பெண்களுக்கான இடத்தை அளிக்காத நிலை நிலவி வருகின்றது. இத்தகைய சூழல் மாறி பெண் அறிஞர்களும், ஆய்வாளர்களும், ஆண்களுக்கு இணையாகப் படைப்புகளையும் விமர்சனத்தையும் முன் வைக்கும் இக்காலத்தில் இனிவரும் பெண் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பெண் படைப்பாளிகளையும் அவர்களின் படைப்புகளையும் தமிழிலக்கிய வரலாற்றில் இடம் பெறச் செய்ய வேண்டும். இன்னும் சிறப்பாகப் பெண்களின் படைப்புகளை ஒன்றாகச் சேகரித்துப் பெண் இலக்கிய வரலாறு என்று ஒரு தனி நூலினைப் பெண்ணே உருவாக்கினால் இந்நிலையில் இருந்து பெண் படைப்புகள் மறைக்கப்படாமல் இருப்பதற்கு வழிகோலும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.

கம்பன், புதுமைப்பித்தனில் அகலிகை

ச. இராமமூர்த்தி

யாதவர் கல்லூரி

மதுரை - 14

தழுவல் காப்பியமாகிய கம்பராமாயண 'அகலிகைப் படலத்' திற்கும் புதுமைப்பித்தன் படைத்த 'சாப விமோசனம்' என்ற மீட்டுரு வாக்கப் படைப்புச் சிறுகதைக்கும் இடையே காணப்பெறும் ஒற்றுமை, வேற்றுமைகள், மனவுணர்வு நிலையின் வெளிப்பாடு ஆகிய செய்தி களை எடுத்துரைப்பது இவ்ஆய்வுக் கட்டுரையின் களமாகும்.

கம்பன்

திருவெண்ணெய் நல்லூருக்கு அருகில் 'திருவழுந்தூர்' என்ற ஊரில் ஆதித்தன் என்பவக்கு மகனாகப் பிறந்தவர் கம்பன். அவரது மரபு உலச்சர் குலம் (பாரசவ வகுப்பு) என்பர் (மு. இராகவையங்கார், தெய்வப்புலவர் கம்பர், ப. 1). கம்பனின் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்றும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்றும் கருதுவர் (மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 168, எஸ். மகாராஜன், கம்பன், ப. 8) இவ்விரு கருத்துக்களையும் விளக்கிக் காட்டிக் கம்பனின் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டே என்பர் (எஸ். இராமகிருஷ்ணன், கம்பனும் மில்டனும் ஒரு புதிய பார்வை, ப. 390-401).

வடமொழியில் வான்மீகி எழுதிய இராமாயணத்தை அடிப்படை யாகக் கொண்டு கம்பராமாயணம் எழுந்தது என்றும், சங்க இலக்கியங்களில் அறியப்பெறும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கம்பராமாயணம் புனையப்பட்டது என்றும் கருத்துக்கள் கூறப்பெற்றுள்ளன.

அறுபதுக்கும் மேற்பட்ட சந்த நயங்களைக் கம்பராமாயணக் காப்பியத்தின் 10,500 பாடல்களில் பயன்படுத்தியுள்ள கம்பர் ஏர் எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, தனிப்பாடல்கள் 70 ஆகிய நூல்களையும் படைத்துள்ளார்.

வான்மீகியின் காப்பியத்தை ஒட்டித் தம் காப்பியத்தைச் செய்தபோதிலும் அதனை ஒரு புதுக்காப்பியம்போல் விளங்குமாறு படைத்துள்ளார் கம்பர் எனப் பாராட்டுகின்றார் மு. வரதராசன் (மு. வரதராசன், மு.நூ., ப. 172). முதல் நூலாம் வான்மீகி

இராமாயணத்தைக் காட்டிலும் கம்பராமாயணம் பல்வகையிலும் சிறப்புடையது என்ற வ.வே.சு. ஐயரின் கருத்து மு.வ.வின் கருத்துக்கு முன்னோடி என்பது இவண் நினையத்தக்கது.

புதுமைப்பித்தன்

25.04.1906-ஆம் ஆண்டு திருப்பாதிரிப்புலியூரில் சொக்கலிங்கம் பிள்ளை, பர்வதத்தம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்த புதுமைப் பித்தனின் இயற்பெயர் விருத்தாசலம் என்பதாகும். 1933 முதல் 1946 வரையிலான பனிரெண்டு ஆண்டுகளில் சிறுகதை நூல்கள் 7, மொழிபெயர்ப்புகள் 7, கட்டுரை நூல்கள் 3, வாழ்க்கை வரலாற்று நூல்கள் 2, கவிதை நூல் 1 என 20 படைப்புக்களைத் தந்துள்ளார். மணிக்கொடி, தினமணி, ஊழியன் போன்ற இதழ்களிலும் அவர் பணி யாற்றியுள்ளார். (நா. ஆறுமுகம், புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமர்சனம், ப. 24; வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன், ப. 84).

'தமிழ்நாட்டில் என்னைத் தவிர்த்து யார் கதை எழுது கின்றார்கள்?' (நா. ஆறுமுகம், மு.நூ., ப. 24) என்ற கருத்துடைய புதுமைப்பித்தன் சங்க இலக்கியங்கள், மேல்நாட்டு முற்போக்கு இலக்கியங்கள் எனப் பழமையிலும் புதுமையிலும் ஆழ்ந்த புலமை யுடையவராகத் திகழ்ந்ததால் தமிழில் எவரும் கண்டிராத இலக்கியப் பாணியையும் விமர்சனத்தையும் புதுமைப்பித்தனால் படைக்க முடிந்தது என்பர் (மேலது, ப. 24).

புராணம், இதிகாசம், காப்பியம் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள நிகழ்ச்சிகளை எடுத்துத் தம் காலநிலைக்கும் கருத்தோட்டத்திற்கும் தகப் புதுக்கியும் மாற்றியும் எழுதுவது இலக்கிய உலகில் மரபாகும். அவ்வகையில் புதுமைப்பித்தனும் 'அகல்யை', 'சாப விமோசனம்', 'அன்று இரவில்' ஆகிய சிறுகதைகளைப் படைத் துள்ளார். அகல்யை, சாபவிமோசனம் இரண்டும் ஒரு பொருள் பற்றிய வளர்ச்சியைக் காட்டும் கதைகளாகும். இனிக் கம்பனின் அகலிகை, புதுமைப்பித்தனின் அகலிகை ஆகியோருக்கு இடையேயான ஒற்றுமை, வேற்றுமைகளைக் காணலாம்.

கம்பனின் அகலிகை

கம்பனின் பாலகாண்டத்து 9-ஆம் படலமாகிய அகலிகைப் படலம் சனகனின் வேள்வியைக் காண விசுவாமித்ரன், இராமன், இலக்குவன் ஆகியோர் செல்லும் வழியிடைக் காட்சிகளைப் பற்றியும் அகலிகை வரலாற்றையும் உரைக்கும் படலமாகும்.

சோணை நதியைக் கடந்து கங்கை நதியை அடைந்த அவர்கள் மிதிலை நாட்டை அடைகின்றனர். சோலை, கழனி, பொய்கை,

நதி, ஓடை, குளம் ஆகியவற்றின் வளங்களைப் பாடிய கம்பர் 13-ஆம் பாடலில் மிதிலை நகரின் புறத்தே அகலிகை கல்லாய்க் கிடந்த கருங்கல்மேடு ஒன்றை இராமன் உள்ளிட்ட மூவரும் காண்பதாகக் குறித்துள்ளார்.

''மனையின் மாட்சியை அழித்து இழிமாதவன் பன்னி
கனையும் மேட்டுஉயர் கருங்கல் ஓர் வெள்ளிடைக் கண்டார்''
(ஆசிரியர் குழு (பதி.ஆ.), மு.நூ., ப. 87)

இராமனின் கால் தூசு கல்மீது படக் கல் அகலிகையாகப் பண்டைய வடிவெடுத்து நின்றனள். அப்போது அகலிகை வரலாற்றை இராமனுக்கு முனிவன் கூறுகின்றான். தீவினையை விரும்பிச் செய்த இந்திரனுக்கும் ஆயிரம் கண்களை அளித்த கோதமன் மனைவி அகலிகை இவள் என்று முனிவன் உரைக்க, அன்னை அனைய இவட்கு இத்துன்பம் நேரக் காரணம் என்ன என இராமன் வினவு கின்றான். அகலிகையின் அழகாலும் மன்மதன் அம்பாலும் துன்புற்ற இந்திரன், கோதமனின் உருவில் அவன் மனைக்குள் புகுந்தான்.

கோதமன் உருவில் வந்த இந்திரன், அகலிகையோடு இருந்த நிலையையும் அகலிகையின் காம மயக்கத்தையும்,

''... அவளொடும் காமப்புது மணமதுவின் தேறல்
ஒக்க உண்டு இருத்தலோடும், உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும்,
தக்கது எது அன்று என்ன ஓராள்; தாழ்ந்தனள் இருப்ப, தாழா
முக்காணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்''
(மேலது, ப. 88)

எனத் தவறினை உணர்ந்த பின்னும் அகலிகை உடன்பட்ட நிலையைப் பாடியுள்ளார்.

மீண்டு வந்த முனிவன் உண்மை உணர்ந்து இந்திரனையும் அகலிகையையும் சபித்தான். மீளும் வழிகேட்ட அகலிகைக்கு, இராமன் 'காலடித்துகள் கதுவ-கல்லியியல் உரு தவிர்தி' என விமோசனம் அளித்தான். மாதவன் அருள் உண்டாக வழிபடுக; துயருற வேண்டாம் என்ற இராமனை வணங்கி, அகலிகை செல்வதாக அகலிகைப் படலம் நிறைவுறுகின்றது.

புதுமைப்பித்தனின் அகலிகை

சாலையில் கிடந்த கற்சிலை இராமன் கால்தூசி பட்டதும் உயிர் பெறுகின்றது. சாப விமோசனம் கிடைக்கின்றது. இராமனின் காலில் விழுந்து அகலிகை வணங்குகின்றாள். விசுவாமித்ரன் வழி இராமன் உண்மையை உணருகின்றான். 'மனசுக்கும் கரண்சக்தியின் நிதானத்திற்கும் கட்டுப்படாத ஒரு காரியத்துக்கா இந்தத் தண்டனை'

என்று கூறி அகலிகை காலில் விழுந்து இராமன் வணங்குகின்றான். நெஞ்சினால் பிழை செய்யாத அவளை ஏற்க! என்று விசுவாமித்ரன் கூறுகின்றான். ஒட்டாத மனதோடு அவர்கள் வாழ்வு தொடங்குகின்றது.

தன்னைப் பிறர் கூர்ந்து பார்க்கக்கூட இடமளிக்காதபடி அகலிகை நடந்துகொண்டாள். சீதையின் வரவு அகலிகையின் மனத் துன்பத்தைத் தீர்த்து வைத்தது.

பதினான்கு வருடங்களுக்குப் பின்னர்ச் சரயூ நதிக்கரையின் பழைய குடிசைக்குத் திரும்பிய கோதமனும் அகலிகையும் இராமனையும் சீதையையும் சந்திக்கின்றனர். சீதையின் அக்னிப் பிரவேசத்தைக் கேட்ட அகலிகை துடித்துப் போகின்றாள். தனக்கொரு நீதி அவனுக்கு ஒரு நீதியா? என்கின்றாள். வெளியில் சென்று மீண்டு வந்த கோதமன் அகலிகையைத் தழுவுகின்றான். அகலிகை மீண்டும் கல்லாகின்றாள். கோதமன் மீண்டும் துறவியாகின்றான் என்று சாப விமோசனம் நிறைவடைகின்றது.

ஒப்பீடு

கம்பர், புதுமைப்பித்தன் இருவர் படைப்புகளிலும் இராமன் இளமைப் பருவத்தினன்; அகலிகை வரலாற்றை இராமனுக்குக் கூறியவன் விசுவாமித்ரன்; அகலிகையை அம்மா என இராமன் விளித்தல்; கோதமன் அகலிகையை விலைமகள் என்றது ஆகிய செய்திகள் பொதுவானவையாக இடம்பெற்றுள்ளன.

வந்தவன் கணவனல்லன் என்ற உண்மையை உணர்ந்தும் தவறினைத் தடுக்காதது; சாபத்திற்கு விமோசனம் கேட்டது; இராமனை வழிபட்டுச் செல்லுதல் ஆகியவை கம்பரின் காட்சிப் படுத்துதலாகும். விமோசனத்திற்குப் பிந்தைய நிலையை அப்படலம் கூறவில்லை. புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் பசுவை வலம் வந்து அகலிகையை மணந்தது; முனிவர்களுக்கு விருந்தோம்பியது; அகலிகையின் துன்பம் தீர்க்கும் மருந்தாகச் சீதை அமைந்தது; மகனைக் காண அகலிகையும் கோதமனும் மிதிலை வந்தது; தீர்த்த யாத்திரை சென்றது; 14 ஆண்டுகளின் பின்னர்ச் சரயூ நதிக்கரையில் கையேயியைச் சந்தித்தது; பரதன் எரி வளர்த்தது; சீதையின் அக்னிப் பிரவேசம்; அது பற்றிய அகலிகையின் மனக் கொதிப்பு; அகலிகையை கோதமன் தழுவுதல்; அகலிகை மீண்டும் கற்சிலை யாகுதல்; கோதமன் துறவியாகி கைலாயங்கிரி செல்லுதல் ஆகிய செய்திகளைக் கூறுகின்றது.

'இராமாயணம் படித்தவர்களுக்கு பிடிக்காமல்கூட இருக்கலாம். அதை நான் பொருட்படுத்தவில்லை' எனக் கதை தொடக்கத்திலேயே புதுமைப்பித்தன் குறிப்பிட்டிருப்பது கதைக்கு எழுந்த விமர்சனங்

களை உணர்த்துகின்றது. விமோசனத்திற்குப் பிந்தைய அகலிகையின் வாழ்வில் அனைவரும் அவளுக்கு இந்திரன்களாகவே தென்பட்டதும்; நெஞ்சில் பயம் குடியேறியதால் பழைய பேச்சும் விளையாட்டும் புதுமை போய்ச் செயற்கைத் தனமாக எல்லாம் ஆகிப்போனதும் புதுமைப்பித்தனின் கதைப்பொருட்களாகும்.

'எல்லோருக்கும் ஒரே நீதி தேவை' என்பது புதுமைப்பித்தனின் அகலிகை கூறும் கருத்து. திருமாலின் அவதாரமான இராமனின் செயலையும் குற்றஞ்சாட்டும் நிலையைப் புதுமைப்பித்தனின் அகலிகையிடம் காண முடிகின்றது.

தொகுப்புரை

சாபத்துக்கான காரணிகளையும் விமோசனத்தையும் கம்பர் அகலிகைப் படலத்தில் கூறிச்செல்ல, புதுமைப்பித்தன் விமோசனத் திற்குப் பிந்தைய வாழ்வில் அகலிகையின் வாழ்வு; அவளடைந்த மனத்துன்பங்கள்; பயமே உறைந்த நிம்மதியற்ற நிலை; இராமன், சீதையிடம் அக்னிப்பிரவேசம் செய்யச் சொன்ன அவனது செயல் கண்டு அகலிகையின் துடிப்பு, விமோசன வாழ்வைக் காட்டிலும் சாபவாழ்வே மேலானது போன்ற கருத்துக்களை முன்வைத்துள்ளார். உளவியல் நிலையில் புதுமைப்பித்தனின் இக்கருத்துக்கள் ஏற்கத் தகுந்தவை என்றே சொல்லலாம்.

துணைநூல்கள்

1. ஆசிரியர் குழு (பதி. ஆ.), கம்பராமாயணம் - இராமாவதாரம் - பாலகாண்டம், எஸ். இராஜம் பதிப்பு, சென்னை, *1958*.
2. சோமசுந்தரம், மீ. ப. (தொகு. ஆ.), புதுமைப்பித்தன் சிறுகதைகள், நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி, *1993 (5ம் அச்சு)*
3. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி, இராமாயணம் (சக்கரவர்த்தி திருமகன்), வானதி பதிப்பகம், சென்னை, *1993 (17- ஆம் பதிப்பு)*.
4. மீனாட்சி சுந்தரம் (மொ. பெ. ஆ.), கம்பன், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, *1996 (3-ஆம் பதிப்பு)*.
5. இராகவையங்கார், மு., தெய்வப்புலவர், கம்பர், கலைமதி பதிப்பகம், மதுரை, *1983 (2-ஆம் பதிப்பு)*.
6. வரதராசன், மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுதில்லி, *1983 (3-ஆம் பதிப்பு)*.
7. வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, *1996 (3-ஆம் பதிப்பு)*.
8. ரகுநாதன், தொ.மு.சி., புதுமைப்பித்தன் கதைகள் சில விமர்சனங்களும் விஷமத் தன்மங்களும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, *2000 (2-ஆம் அச்சு)*.
9. ஆறுமுகம், நா., புதுமைப்பித்தனின் கதைகளில் சமுதாய விமர்சனம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *1994*.
10. எஸ். இராமகிருஷ்ணன், கம்பனும், மில்டனும் ஒரு புதிய பார்வை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, *1978*.

திருவள்ளுவர் நோக்கில் பெண்மை

நா. லோகநாதன்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி

சங்கமருவிய காலத்தில், இலக்கியப் பண்புகளின் செறிவோடு இலங்கி அறக் கருத்துக்களைத் தனித்தன்மையோடு கூறும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் வாழ்வியல் அறநூல்களாகும். இந்நூல்களுக்கெல்லாம் தலையாய நூலாகத் திருக்குறள் இலங்குகிறது.

இனி, களவு, கற்பியலிலுள்ள பெண்மை, வாழ்க்கைத் துணை நலம், பிறன்மனை விழையாமையோடு பிறன் மனைவிழையாமை ஆகியவற்றை ஆய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

களவியல்

பால்வழிக் காரணமாக ஒத்த கிழவனும் கிழத்தியும் முதன் முதலாகச் சந்திக்கும்போது தலைவனுக்கு ஏற்படுகின்ற மனப்போராட்ட உணர்வுகளைத் தகையணங்குறுத்தல் மூலம் தெளிவுபடுத்துகிறார் வள்ளுவர். தலைவியின் அழகை வியந்தோதியும், தண்மை, வெம்மை, அமிழ்தம் ஆகிய இயல்புகளைக் கொண்டுள்ளவளாக, அதோடு ஐம்புலச் சுவைக்கு இன்பம் படைப்பவளாக, இலங்குவதை வள்ளுவர் ஏழியலில் ''எழில்பட இயம்பியுள்ளார். இதனூடே'' உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும் நடவா நின்றது.

கற்பியல்

கற்பியலைத் தொடங்கும்போதே பிரிவினடிப்படையில் தொடங்குகிறார். பிரிவின் துன்பத்தையும் தலைவியின் உடல் நிலையையும் உளநிலையையும் இனிய நிலையில் கூறுகிறார். மேலும் புலவி, புலவிநுணுக்கம் ஊடலுவகை ஆகிய அதிகாரங்களில் தலைவி, தலைவனுடைய அன்பின் திட்பத்தையும் ஒட்பத்தையும், கோட்டுப் பூச்சூடல், மிக்கக் காதலுடையேம், இம்மைப் பிறப்பில் பிரியலம், உள்ளினேன், தும்மலடக்கல், பணிந்து நோக்கல் ஆகிய சொற்களின் மூலம், தலைவனின் அன்பின் சிறப்பை; நிலத்தின் பெரிதாகவும் நீரிலும் ஆழமுடையதாகவும் வானினும் உயர்ந்ததாகவும் அறிந்து உவகைக் கொண்டு புலவி நீங்கி அவனோடு இணைந்து வாழ்கிறாள்.

ஊடல்

தொல்காப்பியர், ஊடலுக்குக் காரணமானவர்கள் காமக்கிழத்தி, காதற்பரத்தை, சேரிப்பரத்தை என்பர். சங்க இலக்கியங்களில் காமக்கிழத்தியரோடு கூடிவாழும் அறமிலாப் பண்புகள் மலிந்திருப் பதைக் காண்கிறோம்.

ஊடல் பெண் நிமித்தமாக வருவதை வள்ளுவரகம் விரும்ப வில்லை. ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்குப் பகையாவதை அவர் மனம் ஏற்கவில்லை. இதனால் அறக்கோட்பாடுகள் அழியும். சமுதாயம் சீர்கேடடையும். வள்ளுவர் புரட்சி உள்ளம் கொண்டவர், சீர்திருத்தச் செம்மல்.

வள்ளுவர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற அறக் கோட்பாடு உயிர் கோட்பாடாகும் என்று எண்ணுவதோடு ஊடலின் மாண்பினை மறுக்காமல் அதன் மூலம் காணும் அன்பின் ஆழத்தைக் காண முற்படுவதில் மாறுபடவில்லை. தொல்காப்பியர் காட்டும் ஊடல், பெண்மையின் மூலம் ஏற்படும் ஊடல். ஆனால் வள்ளுவர் சமுதாயம் செம்மையாக இயங்க, மனிதன் மனிதனாக மண்புற வேண்டும் என்ற நிலையில் ஊடலுக்கு, புதியதோர் மாற்றத்தை உருவாக்கினார். அதுவே தும்மல் ஆகும். இன்பத்துப்பாலில் ஒருதலைக் காமத்தையோ பொருந்தாக் காமத்தையோ யாண்டும் கூறவில்லை. வள்ளுவர் அன்பின் ஐந்திணையே இன்பத்துப்பாலில் கூறுகிறார். இன்பத்துப்பாலில் அறப்பண்பு சிறப்பான நிலையை அடைகிறது. விலங்கு நிலையிலிருந்த மனிதனை, மனிதனாக மாற்றும் இயல்பினை, இன்பத்துப்பால் கொண்டு இலங்குகிறது.

வாழ்க்கைத் துணைநலம்

இவ்வதிகாரத்தில் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் துணையாதல் இயற்கை விதி, தலைவனுக்குத் துணையா யிருந்து இல்லறக் கடமையை ஓம்பி; இல்வாழ்வின் இனிமையைக் காத்து வருபவர் தலைவியாவாள்.

> ''உடம்போடு யிரிடை யென்னமற் றன்ன
> மடந்தையொ டெம்மிடை நட்பு'' (குறள் - 1122)

என்பர் வள்ளுவர். தலைவற்குத் தலைவி உயிராகின்றாள். தலைவிக்குத் தலைவன் உயிராகின்றான். ஐம்புல இன்பத்தை இருவரும் நுகர்ந்து இல்வாழ்வின் பெருமையை யாண்டும் காத்து வருதலே அவர் தம் கடமையாகும்.

> ''இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
> இல்லவள் மாணாக் கடை'' (குறள் - 53)

என்றும்,

''பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்'' (குறள் - 54)

என்றும், வள்ளுவர் கற்பின் மாண்பை விளக்குகிறார்.

ஒரு பெண்ணிற்கு கற்பே சிறந்த பொருளாகும். இதனை தொல்காப்பியர்,

''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்ததன்று'' (தொல். 1059)

என்கிறார். இயற்கையாகவே ஒவ்வோர் உயிரும் தன்னைக் காத்துக் கொள்ளும் தன்மையைப் பெற்றுள்ளது. பெண் மென்மையானவள் ஆதலால் அவளுக்குத் தற்காப்பு உணர்வு மிகுதியாகத் தேவைப்படும்.

''தற்காத்துத் தற்கொண்டாள் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' (குறள் - 56)

என்பர் வள்ளுவர். மேலும்

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'' (குறள் - 55)

''என் தோழி அருமழை தரல்வேண்டின் தருகிற்கும்
பெருமையளே'' (கலி.பா.2)

இவ்விரு நூல்களும் பெண்ணின் மாண்பை உணர்த்தும். பெண்கள் திருமணம் ஆனபிறகு பிற தெய்வங்களை தொழார். அவள் படுத்துறங்கி எழுகின்றபோதே ஏற்படும் முதல் உணர்வு கணவனின் நினைவாகிய உணர்வே முதலில் தோன்ற மற்ற உணர்வுகள் பின் தோன்றும், அவள் நினைவெல்லாம் தலைவன், குடும்பம், மக்கள் என்ற சூழலில் சுழன்ற வண்ணமாயுள்ளன. தவத்தோர் இறைவனை உன்னி உன்னிப் பல ஆற்றல்களைக் கைவரப்பெற்று நிறைமொழி மாந்தராக இலங்குகின்றனர். அதுபோல இவளும் நிறை மகளாக இலங்குகிறாள். அத்தகையவள் பெய் எனச் சொன்னால் மழை பெய்யும் என்கிறார் வள்ளுவர்.

மனைக்கு விளக்கம் மடவார் (தண்டி) என்று மனையின் மாண்பைப் புகழ்கிறார். பெண் பிறப்பினும் பெருமை மிக்கப் பிறப்புப் பிறிதொன்றில்லை. ''மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்று கவிமணி இயம்புகிறார்.

''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்''

(பாரதி பதுமைப்பெண், ப. 173)

என்று பாரதி நவில்கிறார்.

பிறனில் விழையாமை

இல்லறத்தானாயிருந்தாலும் தனிமனிதனாயிருந்தாலும் தமக்கேற் படும் காம உந்துதலால் பிறன் மனையாளை இச்சையால் நோக்காத பேராண்மையானது சமுதாயத்தைக் காப்பாற்றும் அறமாகிறது. சமுதாயத்தின் ஒழுக்கமே அறம், தனிமனிதனுடைய அறமே ஒழுக்கமாகும்.

''ஒருமை மகளிரை போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு'' (குறள் - 974)

என்று கூறிய, வள்ளுவர் வாக்கிற்கிணங்க ஆண்கள் வாழ்தல் நலம். பிறனுக்குரிமையான மனைவியை விரும்புதல் அறநூல் பொருள் நூலை முறையாக ஆய்ந்தவர் பாலில்லை. பிறன்மனைவியை விரும்புவோர் இறந்தவனின் வேறல்லர். பிறன் மனைவியை இன்புறுதல் எளிதென எண்ணி இன்புற நினைக்கின் அவர்மாட்டுப் பகை, பழி, பாவம், அச்சம் நான்கும் நிலைத்து நிற்கும். இல்லறத்தான் என்பவன் யாரெனின் பிறன் மனையாளை விரும்பாதவனே.

''விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்'' (குறள் - 143)

என்பார் வள்ளுவர். விளிந்தார் என்ற சொல்லிற்கு உயிருடையரேனும் இறந்தாரேயாவர் என்கிறார் பரிமேலழகர். தோற்றத்தால் மக்களா யினும் செயலால் இறந்தாரை ஒப்பர்.

''பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற ஒழுக்கு'' (குறள் - 148)

இக்குறளின்கண் உள்ள பேராண்மையை நோக்குவோம். வள்ளுவர் தம் நூலில் பல ஆண்மைக் குறட்பாக்களைக் கூறியுள்ளார். அவ்வாண்மைகள் யாவற்றினும் பேராண்மையே சிறந்ததாகச் சுட்டுகிறார். பேராண்மை அகவழியியலும் தன்மையது. மற்றவை புறவழியியலும் தன்மையன.

இக்குறளில் நோக்காத என்று சொல்லுக்குப் பார்த்தல் என்ற பொருளன்று. மனமும் மெய்யும் இணைந்த நிலையில் நோக்கு கின்ற பார்வையைத்தான் ''நோக்காத'' என்றார்.

''உள்ளத்தால் உள்ளலும் தீதேபிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்''

மேற்குறித்த குறளோடு ஒப்பிட்டு நோக்குக.

பிறருக்குரிய மனையாளை உள்ளத்தால் நோக்காத ஆண்மையே பேராண்மையாகும். அது சால்புடையோர்க்கு அறனாகவும் முடிந்த ஒழுக்கமாகவும் இலங்கும். இக்கருத்தை வள்ளுவர்,

''அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று'' (குறள் - 150)

என்று விளக்குகிறார்.

''நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின''

நல்லது செய்ய இயலவில்லை என்றாலும் கவலற்க. ஆனால் தீமை செய்யாமல் இருங்கள் என்ற புறநானூற்றின்படி பிறன்மனை நச்சி வாழாமல் இருப்பது நன்று.

பிறன்மனை விழையாமை

பிறன்மனை விழைவோரைப் பற்றி வள்ளுவர் யாண்டும் வெளிப்படையாக இயம்பவில்லை. அக்காலத்தில் அத்தகைய பெண்கள் இல்லையா? கழிபடர் காமம் உந்துதல் அவர்கள் மாட்டில்லையா? எல்லாப் பெண்களும் ஒருமை மகளிரா? என்ற வினா நம்மகத்தே தோன்றாமலிரா.

வள்ளுவர் ''மனைமாட்சி இல்லாள்'' ''புகழ் புரிந்தில்லோர்'' ''இல்லவள் மாணாக்கடை'' என்ற சொற்களை ஆயும்போது குறிப்பாக மகளிர் பிறன்மனை புகுதல் இயல்பு என்று தொனிப் பொருளாகத் தெளிவாகிறது. புகழ்மைக்குரிய இல்லறப் பண்புகளைக் கொண்டில்லாதவர் நிலை என்னவாம். இக்குறள்களைக் கற்ற குமரகுருபரருக்கு பிறன்மனை விழையாமைக் கருத்துத் தோன்றி யிருக்கலாம்.

கணவன் மனைவி இருவரும் ஒருயிர்கிழமையோடு வாழ்ந்து கற்பினை உயிரெனக் காத்தல் நலம். கற்பு என்பது இருவருக்கும் பொதுமை. அக்கற்பினை மீறல் நன்றன்று. வள்ளுவர் ஆண்மகனின் செயலை மட்டும் கூறினாரே தவிர பெண் மகளைப் பற்றி வெளிப்படையாக யாண்டும் குறிப்பிடவில்லை.

அவர் பாடலிலிருந்து, அக்கால மகளிர் ஒருத்திக்கு உரிமையான கணவனை நயந்தனர் என்பது அகங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகத் தெரிகின்றது.

நிறைவு

இன்பத்துப்பாலில் இயங்கும் பெண் வாழ்வின் விளக்காக இலங்குகிறாள். வாழ்க்கைத் துணைநலத்தில் கூறிய பெண் தியாகச் சுடராக இலங்குகிறாள். பிறன்மனை விழையாமையில் சுட்டும் பெண் நற்பண்பற்ற பெண்ணாக இலங்குகிறாள். பிறன்மனை விழை யாமையில் சுட்டும் ஆண்மகன் சிறப்பற்றவனாக இலங்குகிறான்.

பாரதியின் பெண்ணியம்
(கட்டுரைகளின் வழி)

பெ. கௌரி

எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை - 8

தாம் வாழ்ந்த காலத்தைப் புரிந்துகொண்டு சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் புரட்சிகரமான எண்ணவோட்டங்களை வெளியிட்ட மிகச் சிறந்த பத்திரிகையாளன் புதுமைப்புலவன் பாரதி. அவனது சிந்தனைகள் தம் காலம் குறித்துப் பேசியதோடு காலத்தை வென்று இன்றும் நாளையும் நம்மைச் சிந்திக்கத் தூண்டுவன. இப்படிப்பட்ட யுகப் புரட்சியாளன் பாரதி பெண்ணியவாதியா? ஆம் என்றால் எப்படி என்பதை எடுத்துரைப்பதே இச்சிறிய ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

பாரதியார் பெண்ணியவாதியா? என்பதை ஆராய்வதற்கு முதலில் நாம் பெண்ணியம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். பெண்ணியம் என்றால் என்ன? பெண்ணியம் என்பது பெண்களைப் பற்றிப் பேசுவது அதாவது பெண்களின் விடுதலை, கல்வி, முன்னேற்றம் இவற்றுடன் முக்கியமாகச் 'சுதந்திரம்' பற்றிப் பேசுவது எனப் பொதுப்படையாகச் சொல்வர். பெண்ணியம் குறித்து ஆய்வாளர்களின் கருத்தை அறிய வேண்டியதும் அவசியமாகின்றது.

'பெண்ணியம்' என்ற நூலில் முனைவர் இரா. பிரேமா அவர்கள் பெண்ணியத்தின் தோற்றம், வளர்ச்சி இவைகளை விரிவாக விளக்கிக் கூறுவதுடன் பெண்ணியத்தின் வகைகளாக மூன்றினை (ப. 35-59) விரிவாக எடுத்துக்காட்டுகின்றார். அவை

1. தாராளப் பெண்ணியம் (*Liberal Feminism*)
2. சமதர்மப் பெண்ணியம் (*Socialist Feminism*)
3. தீவிரவாதப் பெண்ணியம் (*Radial Feminism*)

என்பன.

''தாராளப் பெண்ணியமானது ஏற்கனவே இருக்கும் சமூக அமைப்பை முன்னேற்றித் தேவையான மாறுதல்களைச் செய்து அதன் மூலம் பெண்களுக்குத் தேவையான அளவு விடுதலையும் மதிப்பும் தகுதியும் பெற்றுத்தர முயன்றது'' (ப. 39) சமூகத்தில்

நியாயமான வாய்ப்புகளைத் தங்கள் கோரிக்கையாகக் கொண்டிருக்கச் சமதர்மப் பெண்ணியம் முதலாளித்துவத்தின் வகுப்புவாத அடக்குமுறையை எதிர்த்து ஏற்றத்தாழ்வற்ற சமநிலையை வேண்டத் தீவிரவாதப் பெண்ணியம் ஆணாதிக்கத்தை எதிர்ப்பதாக எந்த ஒரு முன்னேற்ற இயக்கத்தையும் பின்பற்றாமல் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் தங்களுக்கென்று தனிப்பட்ட கொள்கைகளை வகுத்துக்கொண்டு பெண்களை இழிவுபடுத்தும் எதையும் வேரறுப்பது (ப.59) என்கிறார்.

டாக்டர் சி.இ. மறைமலை என்பார் தம்முடைய ''பெண்ணியத் திறனாய்வு'' என்ற நூலில் பெண்ணியப் புலமை நெறி (Feminist Scholarship) என்பது ''இதுகாறும் உலகப் பொதுமை வாய்ந்தனவாகக் கருதப்பட்டு வந்த கோட்பாடுகளைப் பெண்ணியப் புலமை நெறி மீள் ஆய்வு செய்கின்றது. அவை பொதுமை வாய்ந்தன அல்ல என்பதையும் குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழல்கள் குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் தோன்றியவை என்பதையும் நிலை நிறுத்துகிறது. அதன்பின் பெண்ணின் பட்டறிவையும் பண்பாட்டு வளர்ச்சியில் மகளிர் பங்களிப்பையும் பற்றிய விரிந்த அறிவைப் பெருக்கி அடிப்படையில் எல்லா அறிதுறைகளுக்கும் பெண்ணியப் பார்வை அல்லது பெண்ணிய அணுகுமுறையை வகுத்தளிக்கிறது'' (ப.32).

பெண்களைச் சமூகத்தின் உற்பத்திக் களன்களிலிருந்து ஒதுக்கி ஓரங்கட்டி விடும் அமைப்பு முறைகளிலிருந்து பெண்களை விடுதலையுறச் செய்யும் பெண் விடுதலை இயக்கங்களின் பெரு முயற்சிகளின் வெளிப்பாடாகத் தோன்றியது என்றும் இவை உலகை மாற்றியமைக்கவும் வல்லன என்கிறார். மேலும் ''ஃபிராய்டின் உளவியல் பகுப்பாய்வை முழுமையாக ஆய்ந்து அதன் பொருந்தாமை களையும் பாலின வாதப் போக்கையும் சுட்டிக்காட்டி பெண்ணிய நோக்குடன் கூடிய உளவியல் பகுப்பாய்வை முன் மொழிந்தவர்கள் உளவியல் பகுப்பாய்வு நிலைப் பெண்ணியம் (Psycho Analytic Feminism) உருவாக வழி வகுத்தனர்'' (ப. 145) என்று ஒரு புது வகைப்பாட்டினையும் எடுத்துக் காட்டுகின்றார்.

இக்கருத்துகளின் அடிப்படையில் பாரதியாரின் பெண்ணியச் சிந்தனைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் முயற்சியாக ''மாதர்'' என்ற தலைப்பில் பாரதியார் எழுதிய பத்திரிகைக் கட்டுரைகள் சான்றாக எடுத்தாளப் பெறுகின்றன. ''காலவரிசைப் படுத்தப்பட்ட பாரதி படைப்புகள்'' என்ற நூலிலிருந்து கட்டுரைகள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. அந்நூலில் எந்தப் பக்கத்தில் இக்கட்டுரைகள் இடம் பெற்றனவோ ஆங்காங்கே அவை குறிக்கப்பட்டுள்ளன.

பாரதியார் பெண்களை நோக்கி விண்ணப்பம் செய்யும்பொழுது ''தமிழ்நாட்டு மாதராகிய என் அன்புக்கும் வணக்கத்துக்குமுரிய சகோதரிகளே இத்தனை பெருமை வாய்ந்த தமிழ் நாகரிகத்தின் எதிர்கால வாழ்வு உங்களுடைய பயிற்சிகளையும் முயற்சிகளையும் பொறுத்திருக்கின்றது'' என்றே மதிப்பு மரியாதையுடன் விளிக்கின்றார்.

பெண்களின் எண்ணங்கள்

தம்மைப் பற்றியும் தம் நாட்டைப் பற்றியும் அக்காலப் பெண்கள் என்ன நினைத்திருந்தார்கள் என்பதை அவர்கள் வாய்மொழியாகக் காட்ட நினைத்து ''அன்னிப்பெசென்ட் அம்மையின் வேண்டுகோள்'' என்ற தலைப்பில் ''இந்தியா நற்கதியடைய வேண்டுமாயின் இந்தியர் களிடம் ஆண், பெண் அடங்கலும் கல்வியறிவு நிறைந்திராவிடின் ஒன்றும் நடக்காதென்று இம்மாது ஓயாமல் சொல்லச் சொல்லி இவருக்குத் தொண்டை வற்றிப் போய் விட்டது''. (கா.வ.பா. படைப்புகள், பக். 194) என்று பெண்கல்வியின் அவசியத்தை எடுத்துக் காட்டியதுடன் அக்காலத்தில் விதவை மறுமணம் குறித்துப் பெண்கள் கொண்டிருந்த எண்ணங்களையும் பல உயர்மட்டப் பெண்களைப் பேட்டிகண்டு வெளியிட்டுப் பெண்களின் நிலையைப் பெண்கள் அறியச் செய்வது தம் கடமையாகச் சொல்கிறார் பாரதி.

மேலும் ஹிந்து ஸ்திரீகளைப் பற்றி மிஸ்டர் ''ஃபிராய்டின் கொண்டிருக்கும் கருத்து (பக். 263-64) என்ற தலைப்பில் பிற நாட்டார் வணக்கம் செலுத்தக்கூடிய வகையில் போற்றும் விதமாகத் தமிழ்நாட்டு மாதர்கள் வாழ்ந்ததை எடுத்துரைக்கின்றார்.

மேல்நாட்டினர் நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்தை எடுத்துக் காட்டுவதுடன் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டியனவற்றைத் தவறாமல் அறிந்து கொள்ள வேண்டும் என்று ''விக்டோரியா சக்கரவர்த்தினியின் சரித்திரத்திலிருந்து நமது நாட்டு மாதர்களறியத்தக்க சில விஷயங்கள்'' என்ற தலைப்பில் (ப. 40-44) அவர் பெற்ற கல்வியறிவே அவர்களின் வாழ்க்கை வெற்றியின் இரகசியம் என்பதை விரிவாகப் படம்பிடித்துக் காட்டித் தமிழ்நாட்டு மாதர்களுக்குக் கல்வியறிவை வேண்டுகிறார். அத்துடன் கல்வி பெறுவதில் பெண்கள் பின் தங்கியுள்ளமையை ''1901-ம் வருஷத்து ஸென்ஸஸில் மாதர் கல்விக்கணக்கு'' என்ற தலைப்பில் (ப. 163-164) 1000-க்கு 94 ஸ்திரீகளே கல்வி பெற்றிருக்கின்றனர். அவர்களிலும் மூன்றாம் பாடத்தைத் தாண்டாதவர்களே அதிகம் என்று வருத்தத்துடன் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையை ஊர்பெயர்களுடன் பட்டியலிட்டுக் காட்டிப் பெண்களின் அறியாமை இருளைப் போக்க வேண்டியதன் அவசியத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார்.

''பவுத்த மார்க்கத்தில் மாதர்களின் நிலை'' (ப. 157-162) என்ற தலைப்பில் பிற நாடுகளில், பிற மார்க்கங்களில் பெண்கள் கல்வியறிவால் முன்னேறி இருப்பதையும், எளிமையான திருமண வைபவங்களையும் பெண்மையைப் போற்றும் குடும்ப மற்றும் சமூக விழாக்களையும் பெண்கள் மகிழ்வுடன் இருப்பதையும் முக்கியமான காரியங்களைப் பிறர் துணையின்றிப் பெண்கள் பொறுப்பேற்று நடத்துவதையும் வியப்புடன் எடுத்துக்காட்டி இம்மார்க்கத்தினை அப்படியே பின்பற்றவில்லையென்றாலும் இதிலுள்ள நன்மைகளைத் தெரிந்து கொண்டு பெண்கள் தங்களை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்று விழிப்புணர்வூட்டுகின்றார். கல்வியறிவு பெறுவது ஒன்றினாலேயே பெண்கள் முன்னேற முடியும் என்பதைப் பல வழிகளிலும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றார்.

காதல், குடும்பம் இவற்றில் பெண்களின் நிலைப் பற்றிக் ''காதல்'' (ப. 235-238) என்ற தலைப்பில் இருபாலரும் விட்டுக் கொடுத்து இரட்டைமாட்டு வண்டியில் பூட்டப்பட்ட காளைகளைப் போல ஒன்றுபட்டு வாழ வேண்டுவதுடன், கற்பு நிலையிலும் ஆண், பெண் இருபாலரும் நன்னெறியால் நிற்க வேண்டும் பெண்களைப் போல ஆண்களும் கற்புடைமையில் பெருகி நிற்க வேண்டும் என்று நெஞ்சார ஆசைப்படுகின்றார். மேலும் கற்பு நெறியில் நிற்காத ஆடவன் பெண்களிடம் அதை எதிர்பார்ப்பது மடமை என்றும் சாடுகின்றார்.

பெண்களின் வீரம் குறித்து எடுத்துக் காட்ட நினைத்த பாரதி ''அழியாப் புகழ்கொண்ட ஓர் பழங்காலத் தமிழ்மாது'' என்ற (ப. 550-552) தலைப்பில் புறநானூற்று மூதின் மகளிரின் வீரத்தை எடுத்துக்காட்டி வீரப் புதல்வர்களை உருவாக்குவதே பெண்களின் வீரமாக எடுத்துரைக்கின்றார். தீவிரப் பெண்ணியவாதிகள் இத்தகு குடும்ப அமைப்பும் ஆணை உருவாக்குவதும் பெண்ணியமில்லை, பெண்ணே தன் வீரசாகசங்களை வெளியிட வேண்டும் என்பர். இக்கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது இங்குப் பெண்ணியம் அடிபட்டுப் போகின்றது என்றாலும் பெண்ணால்தான் ஒரு வீரனை உருவாக்க முடியும் என்ற வகையில் பாரதியின் பெண்ணியம் பெண்களை மதிக்கின்றது.

''மாதர்களின் சுதந்திரங்கள்'' (ப. 212-217) என்ற தலைப்பில் பெண்கள் சுதந்திரமென்பது ஸ்வதர்மங்களையும் ஸ்வய ஆசாரங் களையும் புரட்டியெறிந்து விட்டுத் தடமாறிச் செல்லாமல், வீட்டி லிருந்து தனது குழந்தைகள் முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆவலுடன் அவர்களுக்கு கல்வியறிவு, ஆண்மை, வீரம் இவற்றைப் போதித்து கிரகத்தலைவியாக விளங்கக் கூடியவளுக்குப் பார்லிமெண்டில் என்ன வேலை என்ற விதத்தில் இல்லறத்திற்குள் மதிப்பு மரியாதை

யுடன் மகிழ்வுடன் பாதுகாக்கப்பட வேண்டியள் என்ற நிலை யிலேயே பெண்களின் சுதந்திரத்தை வரையறுக்கின்றார். மேலும் ''இங்கிலாந்தில் பெண்கள் எலெக்ஷன் சுதந்திரம் கேட்பது'' என்ற தலைப்பில் (ப. 833-835) சுதந்திரத்திற்காகப் பெண்கள் (பெரிய குடும்பத்தைச் சார்ந்த) பாடுபடுவதையும் அதனால் பல இன்னல்கள் பட்டு ஜெயிலுக்கும் செல்வதையும் எடுத்துக் காட்டிப் பெண்களே இத்தனை சுதந்திர தாகத்துடன் இருக்கும் பொழுது நம் நாட்டில் ஆடவர்கள்கூடச் சுதந்திர தாகமின்றி அடிமை மோகத்தில் திளைப்பது எங்ஙனம் என்று கொதிக்கின்றார். இதில் நாட்டு நன்மையின் பொருட்டுப் பெண்களும் பாடுபட வேண்டும் என்பதே தொனிக் கின்றது. இங்கே பெண்களை முன்னிறுத்த வில்லையென்றாலும் ஆடவரை ஊக்குவிக்க வேண்டியவள் பெண் என்ற நிலையில் நிற்கிறார். இதனையே ''பாரத குமாரிகள்'' (ப. 142-146) என்ற தலைப்பில் ''பாரத குமாரிகளே இந்நாட்டிற்கு ஞான உணர்வும், தோள்வலியும், மனத்திடனும் கொடுத்து இதனைக் கைதூக்கி விடுவது உமது பெருங்கடமையாகும். நீங்கள் என்றுவரை அலங்காரப் பொம்மை களாக நிற்பீர்களோ அதுவரையெமக்கெல்லாம் ஓர் கதியும் கிடையாது'' (ப. 146) பெண் விடுதலையும் கல்வியறிவு பெற்ற முன்னேற்றமுமே நாட்டின் விடுதலையும் முன்னேற்றமும் ஆகும் என்கிறார்.

தீவிரவாதப் பெண்ணியக் கருத்துக்களையும், உலகையே மாற்றும் பெண்ணியப் பண்பாட்டு உருவாக்கங்களையும் கொண்டு பாரதியாரின் பெண் சுதந்திரச் சிந்தனைகளை எடை போட்டால் பாரதியார் பெண்ணியவாதியில்லை என்று சொல்லத் தோன்றும். ஆயின் அவர் வாழ்ந்த காலக் கட்டத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கையில் நாட்டு விடுதலையும் சமூகக் கட்டுக்கோப்பும் தலையாய கடமையாக இருந்த காலக்கட்டத்தில் பெண்களைப் பற்றி எண்ணிப் பார்த்து அவர்களைச் சிந்திக்கத் தூண்டியதே பெண்ணியம் தோன்றுவதற்கு வழிகாட்டியாக முன்னோடியாகத் திகழ்கின்றது.

பெண்கல்வி, பெண் விடுதலை, பெண் முன்னேற்றம், குடும்பத்தில் பெண் தலைமை என்று தாராளப் பெண்ணியச் சிந்தனைகளைப் பிரதிபலித்தவர் என்ற வகையில் பாரதியார் பெண்ணியவாதிகளின் வரிசையில் முதலிடம் பெறுகிறார். அவரின் பெண்ணியம் விழிப்புணர்வைத் தூண்டும் வழிகாட்டும் பெண்ணியமாக விளங்குகிறது.

துணைநூல்கள்

1. கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள் (பதி) சீனி. விசுவநாதன் - 1998.
2. பெண்ணியம் - முனைவர் இரா. பிரேமா - 1994.
3. பெண்ணியத் திறனாய்வு - டாக்டர் சி.இ. மறைமலை - 1994.

பாரதி சுட்டும் 'குடும்பம்' - ஒரு பெண்ணிய நோக்கு

இரா. முருகன்

புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் பெண்களுக்கு எதிரான கொடுமைகளை எதிர்த்து மேலை நாடுகளில் பெண்ணிய இயக்கம் தோன்றி வலுப்பெற்றது. தமிழகப் பெண்ணிய வரலாற்றில் பெண்ணியக்கச் சார்பின்றித் தனி மனிதராக நின்று பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்தவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் பாரதியார். இவர் தமது கவிதைகளில் மட்டுமல்லாது பத்திரிகைக் கட்டுரைகளிலும் பெண் விடுதலையை மையப் பொருளாக்கி யுள்ளார். அதிலும் குறிப்பாகக் குடும்பப் பெண்களின் நிலையையே சுட்டிச் செல்கிறார். பாரதியின் இதழ்க்கட்டுரைகள் புலப்படுத்தும் 'குடும்பம்' எனும் சமூக அமைப்பைப் பெண்ணிய நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாரதி சுட்டும் குடும்பம்

சமூக நிறுவனங்களுள் முதன்மையாகக் குறிக்கத்தக்கது 'குடும்பம்' எனும் அமைப்பாகும். பாரதி தமது கட்டுரைகளில் குடும்பம் பற்றியோ அல்லது குடும்பத்தின் வகைகளைப் பற்றியோ பேச வில்லை. மாறாகக் குடும்ப உறுப்பினர்களான கணவன், மனைவி பற்றியே பேசுகிறார். அதிலும் குறிப்பாகப் பெண்களைப் பற்றியும், குடும்ப அமைப்பில் பெண்களின் நிலை பற்றியும் குறிக்கிறார்.

பெண் விருப்பமும் திருமணமும்

ஆணும் பெண்ணும் இணைவதற்காக நிகழ்த்தப்பெறும் சடங்கு திருமணம். இல்லறத்திற்கு அடிப்படையான திருமண நிகழ்வில் பெண்களின் ஒப்புதலைப் பெறவேண்டும் எனும் பாரதி, அவர் களுக்கு விருப்பமில்லாத ஆடவனை மணந்து கொள்ளும்படி வற்புறுத்தக் கூடாது என்றும் குறிக்கிறார். பெண்களை ஆண்களுக்கு இணையாகக் கருதும் பாரதி 'தமிழ்நாட்டின் விழிப்பு' எனும் கட்டுரையில், ''ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தி யுண்டு; ஐந்து புலன்கள் உண்டு; அவர்கள் செத்த யந்திரங்களல்லர்.

உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியாகவேதான். புறவுறுப்புகளில் மாறுதல்; ஆத்மா ஒரே மாதிரி'' (பாரதியார் கட்டுரைகள், ப. 12-13) என்கிறார்.

பெண்கள் அடிமைகளில்லை. அவர்களுக்கு முழுச் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்கிறார். 'பல' எனும் கட்டுரையின் உட்தலைப்பான 'ஸ்ரீமதி மங்களம்மாள்' எனும் கட்டுரையில், ''விவாகம் செய்யும்போது பெண்ணுடைய இஷ்டத்தை மீறிச் செய்வது அநாகரிக வழக்கமென்பதை இவர் நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். 'பெண்களாகிய நாம் ஆப்பிரிக்கா அடிமை களில்லை. குடும்பத்து எஜமானிகள்' என்று ஸ்ரீமதி மங்களம்மாள் சொல்லியதை எங்கள் வீட்டுப் பெண் குழந்தைக்கு வாசித்துக் காட்டினேன். குழந்தைக்குச் சந்தோஷம் பொறுக்க முடியவில்லை'' (பெ.தூரன், பாரதி தமிழ், ப.147) என்கிறார்.

திருமணத்திற்குப் பின் பெண்ணானவள் கணவனைச் சார்ந்து வாழவேண்டும் எனும் மனுதர்ம சாத்திரத்தை உடைத்தெறிய முற்படும் பாரதி 'தமிழ்நாட்டின் விழிப்பு' எனும் கட்டுரையில், ''ஸ்திரீகள் தமக்கிஷ்டமான பேரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்து கொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை; உயிர்த்துணை; வாழ்க்கைக்கு ஊன்றுகோல்; ஜீவனிலே ஒரு பகுதி; சிவனும் பார்வதியும் போலே'' (பாரதியார் கட்டுரைகள், ப.13) என்கிறார். ஆணும் பெண்ணும் இல்லற வாழ்வில் சமமாக மதிக்கத் தக்கவர்கள். அவர்களுக்குள் எவ்விதப் பேதமும் பாராட்டக் கூடாது என்று ஆணாதிக்கச் சமூகத்திற்குச் சாட்டையடி கொடுக்கிறார்.

குழந்தை மண எதிர்ப்பு

உறவுகளைத் தக்க வைத்துக்கொள்ளுதல், சொத்துரிமை கைமாறாமல் தடுத்தல் போன்ற அடிப்படைக் காரணங்களுக்காகவே பெரும்பாலும் உறவுமுறைகளுக்குள்ளாகக் குழந்தைத் திருமணம் மேற்கொள்ளப்பட்டது. கணவன் இறந்தால் அப்பெண்குழந்தை விதவையாகவே தன் வாழ்நாளைக் கழிக்க வேண்டும். இக்கொடுமை பிராமணச் சமூகத்தில் தலைவிரித்தாடியது. குழந்தை மணத்தை எதிர்க்கும் பாரதி சரியான வயதில் பெண்களுக்குத் திருமணம் செய்யவேண்டும் என்று விரும்புகிறார். இதனை 'ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்' எனும் கட்டுரையில், ''சென்னைப் பட்டணத்தில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தமது பெண்ணை ருதுவான பிறகு விவாகம் செய்து கொடுத்த செய்தி எனக்கு சந்தோஷமுண்டா கிறது.'' (பெ. தூரன், பாரதி தமிழ், ப. 177-179) என்கிறார். இதுபோன்ற முற்போக்குத் தனமான செயல்களைப் பேசிய பாரதியின் பண்பு அவரை ஒரு சிறந்த பெண்ணியவாதியாகப் பரிணமிக்கச் செய்கிறது.

வரதட்சணைக் கொடுமை

தாய்வழிச் சமூக அமைப்பில் மணப்பெண்ணின் வீட்டிற்குச் சென்று வேலை செய்தல் அல்லது மணப்பெண்ணுக்குப் பரிசப்பணம் தருதல் போன்ற நிலைகளில் தோற்றம் பெற்ற வரதட்சணையானது இன்று கொடிய சக்தியாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இதைக் கண்டு கொதித்தெழுந்த பாரதி 'எதிர் ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை' எனும் கட்டுரையில், ''பிராமணருக்குள் விவாக காலங்களிலே எதிர்ஜாமீன் கேட்கும் வழக்கம் இருந்து வருகிறது. மாப்பிள்ளை களுக்கு விலைத்தரங்கள் போட்டு இத்தனை ரூபாய் கிரயம் என்று முடிவு செய்து விவாகம் நடத்தும் வழக்கம் மானமுள்ள நாடுகளிலே இல்லை'' (பெ.தூரன், பாரதி தமிழ், ப. 132 - 133) என்கிறார். மேலும் திருமணம், ருதுசாந்தி, சீமந்தம் போன்ற காலங் களிலும் வரதட்சணை வாங்கும் கொடுமை நிலவியதைக் கட்டுரை வழி அறிய முடிகிறது.

இக்கொடுமைகளுக்குத் தீர்வு சொல்லும் பாரதி, 'தமிழ்ப் பெண்கள் செய்யத் தக்கது' எனும் கட்டுரையில், ''பரிபூர்ண ஸமத்வமில்லாத இடத்திலே ஆண் மக்களுடன் நாம் வாழ மாட்டோம் என்று சொல்வதனால் நமக்கு நம்முடைய புருஷர் களாலும் புருஷ சமூகத்தாராலும் ஏற்படக்கூடிய கொடுமைகள் எத்தனையோயாயினும், எத்தன்மையுடையனவாயினும், அவற்றால் நமக்கு மரணமே நேரிடினும், நாம் அஞ்சக்கூடாது. ஸஹோதரிகளே! ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. ஆதலால் ஸஹோதரிகளே பெண் விடுதலைக்காக அந்த க்ஷணத்திலேயே தர்ம யுத்தம் தொடங்குங்கள்'' என்று ஆணாதிக்கச் சக்திகளுக்கு எதிராகப் பெண்களைத் தூண்டி விடுகிறார். இந்து சமூக அமைப்பில் குடும்ப அமைப்பு வலுவாக இருப்பதால், கொடுமைக்கு ஆளாகும் பெண் குடும்பத்தை விட்டு வெளியேறும் ''தளைநீக்கம்'' எனும் பெண்ணியப் போக்கைப் பாரதி விரும்பவில்லை. எனவே, குடும்பத்திற்குள்ளே இருந்து ஆண்களைப் புறக்கணிக்கும் நிலையையே வேண்டுகிறார்.

விவாகரத்து உரிமை

சமூக அமைப்பில் பெண்களுக்கு இருக்கும் இரண்டாமிடத்தை மாற்றியமைக்கும் குறிக்கோளுடையதே இருத்தலியல் பெண்ணியம். இக்கருத்தை வலியுறுத்தும் பாரதி 'பெண்' எனும் கட்டுரையில், ''ருதுவான பிறகு பெண்ணுடைய இஷ்டப்படி கலியாணம் செய்ய வேண்டும்; புருஷன் கொடுமையைச் சகிக்க முடியாமலிருந்தால், ஸ்திரீ சட்டப்படி அவனைத் தியாஜ்யம் செய்துவிடச் சட்டமும் இடம் கொடுக்க வேண்டும்; ஊர்க்காரரும் தூஷணை செய்யக் கூடாது'' (பாரதியார் கட்டுரைகள், ப-9) என்கிறார். இதன்வழி

அரசியல் ரீதியாகச் சட்டமும், சமூக அளவில் மக்களும் பெண் களுக்கு எதிராகச் செயல்பட்டு வந்த பாரதி காலச் சமூகத்தைக் கண்ணுற முடிகிறது. விவாகரத்து உரிமை கேட்கும் இவர் விதவை மறுமணத்திற்கும் ஆதரவு தெரிவிக்கிறார்.

கற்புக் கோட்பாடு

தாய்த்தலைமையை அழிக்க நினைத்த ஆணாதிக்கத்தின் உச்சநிலை வெளிப்பாடாகவே 'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் கற்புக் கோட்பாடு நிலைபெற்றது. உண்மையில் 'ஒருத்திக்கு ஒருவன்' என்பதே தமிழ்ச் சமூகத்திய கற்புக் கோட்பாடு என்பதைத் தமிழிலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

பெண்களை வேறுபடுத்தும் அத்தனை அரசியல் அமைப்பு களையும் ஒழித்தல் எனும் நோக்கமுடைய மிதவாதப் பெண்ணியச் சார்பாளராகவே பாரதி விளங்குகிறார். 'தமிழ்ப்பெண்கள் செய்யத் தக்கது' எனும் கட்டுரையில், அடிமைப்பட்டு வாழமாட்டோம். ஸமத்வமாக நடத்தினாலன்றி உங்களுடன் சேர்ந்திருக்க விரும்போம்'' என்று பெண்களை ஆண்களுக்கு எதிராகக் கலகக்குரல் எழுப்பச் செய்கிறார். மேலும் இதே கட்டுரையில், ''நான் எல்லா வகையிலும் உனக்குச் சமமாக வாழ்வதில் உனக்குச் சம்மதமுண்டானால் உன்னுடன் வாழ்வேன். இல்லாவிட்டால் இன்று இராத்திரி சமையல் செய்ய மாட்டேன். எனக்கு வேண்டியதைப் பண்ணித் தின்று கொண்டிருப்பேன். உனக்குச் சோறு போடமாட்டேன். நீ அடித்து வெளியே தள்ளினால் ரெஸ்தாவில் கிடந்து சாவேன். இந்த வீடு என்னுடையது. இதை விட்டு வெளியேறவும் மாட்டேன்'' (பாரதியார் கட்டுரைகள், ப. 36-37) என்று ஆண்களுக்கு எதிராகப் பெண்களைப் போர்க்கொடி தூக்கச் செய்கிறார் பாரதி.

பெண்களைப் போகப் பொருளாகக் கருதும் எண்ணத்திற்கு எதிரான கொள்கையுடைய அதிநவீனப் பெண்ணியச் சிந்தனைவாதி யாகப் பாரதி விளங்கினார். கற்புக் கோட்பாட்டின் மறைபொருள் பாலியல் கொடுமையே. பாலுறவு, பிள்ளைப்பேறு போன்ற பெண்சார்ந்த நிகழ்வுகள் பெண்களின் விருப்பு, வெறுப்புகளைப் பொறுத்தே அமைய வேண்டும் என்கிறார். அவ்வாறு இல்லாத சூழலில் பெண்கள் ஆண்களைத் தூக்கியெறியவும் தயங்கக்கூடாது என்று உரத்துப் பேசுகிறார். பாரதியின் இச்சிந்தனைப் போக்கு தற்காலத் தீவிரவாதப் பெண்ணியத்திற்கு அடிகோலியது எனலாம். இதனைத், 'தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது' எனும் கட்டுரையில், ''ஆண்களுக்கு எதிராகக் கூறும் தீர்மான வார்த்தையை, இந்திரிய இன்பங்களை விரும்பியேனும், நகை, துணி முதலிய வீண்

டம்பங்களை இச்சித்தேனும், நிலையற்ற உயிர் வாழ்வைப் பெரிதாகப் பாராட்டியேனும் மாற்றக் கூடாது. 'சிறிது சிறிதாகப் படிப்படியாக ஞாயத்தை ஏற்படுத்திக் கொள்வோம்' எனும் கோழை நிதானக் காட்சியாரின் மூடத்தனத்தை நாம் கைக்கொள்ளக்கூடாது. நமக்கு ஞாயம் வேண்டும். அதுவும் இந்த க்ஷணத்தில் வேண்டும்'' என்று பெண்களைத் தாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்கும்படிக் கட்டளையிடுகிறார்.

கற்புக் கோட்பாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பாரதி பெண்ணியச் சார்பாளராகவே செயல்படுகிறார். அதனால்தான் பெண்களுக்கு மட்டுமே குறிக்கப்பட்ட கற்பு எனும் நிலைப்பாட்டை ஆண்களுக்கும் வலியுறுத்துகிறார். எனவே பெண்களை மட்டுமே மையப்படுத்திய கற்புத் தவறுதல் எனும் நிகழ்வில் ஆண்களையும் இணைத்துப் பேசுகிறார். இதனைப் 'பதிவிரதை' எனும் கட்டுரையில், ''ஸ்திரீகள் பதிவிரதையாக இருக்க வேண்டுமென்று எல்லாரும் விரும்புகிறார்கள். அதிலே கஷ்டம் என்னவென்றால், ஆண் பிள்ளைகள் யோக்கியர்கள் இல்லை. ஆண் மக்களில் ஒவ்வொரு வனும் தன் மனைவி, மக்கள் பதிவிரதைகளாக இருக்க வேண்டு மென்பதில் எத்தனை ஆவலோடு இருக்கிறானோ அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பதிவிரத்யத்திலே காட்டுவதில்லை'' (பாரதியார் கட்டுரைகள், ப.16) என்று ஆண்களின் கேவல நிலையை அம்பலப்படுத்துகிறார்.

சிக்கலை மட்டுமே பேசிப் பெயர் சம்பாதிப்பவர்களுக்கு மத்தியில், சிக்கலுக்கான தீர்வையும் தரும் மதிநுட்பம் பாரதிக்கு மட்டுமே உண்டு. பெண்கொடுமையைப் பற்றிப் பேசிய பாரதி அதற்கான தீர்வாகப் 'பதிவிரதை' எனும் கட்டுரையில், ''ஸ்திரீகள் புருஷரிடம் அன்புடன் இருக்க வேண்டினால், புருஷர் ஸ்திரீகளிடம் அசையாத பக்தி செலுத்த வேண்டும். பக்தியே பக்தியை விளைவிக்கும். அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது'' என்கிறார். ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் உண்மையான பெண்ணியத்தைப் பெறமுடியும் என்று இன்றைய பெண்ணிய வாதிகள் முன்வைக்கும் கருத்தைப் பாரதி அன்றே எண்ணியுள்ளது, அவரை மிகச் சிறந்த பெண்ணியவாதியாக அடையாளப்படுத்து கிறது எனில் மிகையாகாது.

துணைநூல்கள்

1. சுப்பிரமணிய பாரதி, சி., பாரதியார் கட்டுரைகள்.

2. தூரன், பெ., பாரதி தமிழ்.

துணிந்தவளும் துணித்தவளும்

ஏ.ஜே. சொர்ணராஜ்

பல்கலைக்கழகக் கல்லூரி

திருவனந்தபுரம்

ஆளும் வர்க்கத்தினரின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டுச் சுயச் சிந்தனையை இழந்து மற்றவர்களின் சிந்தனைகளையும் மழுங்கடிக்க முயற்சி செய்யும் வண்ணம் தன் முலைகளை அறுத்தெறிய முயற்சித்த காக்கைப் பாடினியார் நச்செள்ளையாரின் பாட்டுடைத் தலைவியின் வீரத்தையும் அவ்வாறு ஆதிக்கத்திற்கு ஆட்படாது அநியாயத்தை எதிர்த்து அதைத் தெருவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் தன் முலைகளை அறுத்தெறிந்து உயிர்துறந்து உறங்கிக் கிடந்த உலகுக்கு உணர்வூட்டிய திருவிதாங்கூர் வீரநங்கையின் வீரத்தையும் ஒப்பிடுவதே கட்டுரையின் நோக்கம்.

துணிந்தவளும் பின்புலமும்

எத்தகைய நிகழ்வுகளாயினும் சரி, அவற்றின் உண்மைத் தன்மைகளை உணர்ந்து கொள்ள வேண்டுமாயின் அந்நிகழ்வுகளின் சமூக வரலாற்றுப் பண்பாட்டுப் பின்புலங்களை முதலில் அறிந்து கொள்ளவேண்டும். பின்புலங்களை அறிந்து கொள்ளும் போதே நிகழ்வு களின் பன்முகத் தன்மையை நாம் உணர்ந்து கொள்ள இயலும்.

ஆதிக்கச் சக்திகள் எப்பொழுதும் தங்கள் மேலாண்மையையும் சுகபோக வாழ்க்கையையும் நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் பொதுவாகப் பண்பாடு, ஆன்மீகம், பொருளாதாரம் ஆகிய துறை களைப் பயன்படுத்தி வந்துள்ளதை இலக்கியங்களும் வரலாற்று நிகழ்வுகளும் நமக்கு உணர்த்துகின்றன. இவற்றின் அடிப்படையில் புதிய சட்டதிட்டங்களை உருவாக்கி ஆதிக்கத்திற்கு உள்ளாக்கப் படுவோர் மீது அவர்கள் வலுக்கட்டாயமாகத் திணித்துள்ளனர். எதிர்ப்புக்குரல் எங்கேனும் எழுந்து விடக்கூடாது என்பதற்காக அப்பாமரர்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் வண்ணம் மிகவும் தந்திரமாகச் சட்டதிட்டங்களை இயற்றிக் கலாச்சாரப் பின்புலத்துடன் அவற்றைப் பரப்பினர். அவ்வாறு பரப்புவதற்கு ஆதிக்க இனத்தினர் கலைவல்லுநர்களையும் புலவர்களையும் பயன்படுத்தியுள்ளனர்.

இந்தப் பின்புலத்தில் நச்செள்ளையாரின் பாடல் உணர்த்தும் கருத்தை ஆயவேண்டும். தன் மகன் போரில் புறங்காட்டி ஓடும்போது

முதுகில் புண்பட்டு இறந்தான் என முதியவள் ஒருத்தியின் மூலம் கேட்ட வீரத்தாய், ''என் மகன் அவ்வாறு இறந்தால் அவன் பால் குடித்த மார்பை அறுத்தெறிவேன்'' எனப் போர்க்களம் புகுந்து அவள் அங்குச் சிதறிக் கிடக்கும் பிணங்களிடையே தன் மகன் மார்பில் புண்பட்டு இறந்து கிடப்பதைக் கண்டு அவனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெருமகிழ்ச்சியடைந்தாள் என்பதே பாடலின் பொருள். இங்கு அவளுக்கு முலைகளைத் துணிக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை.

சங்ககாலத் தமிழ் மன்னர்கள் மற்றும் குறுநில மன்னர்கள் தங்கள் சுகபோக வாழ்க்கைக்காகத் தமிழர்களைச் சிந்திக்க விடாது மூளைச் சலவை செய்யப் புலவர்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். சிந்தனை தான் அனைத்திற்கும் மையம். அது அவனுக்கு மறுக்கப் பட்டது. உண்மைகளைப் பற்றித் தமிழன் சிந்திக்கவில்லை. அதைப் பற்றிய அக்கறையையும் அவன் காட்டவில்லை. பெரியவர்கள் மூலம் ஊட்டப்பட்டு நிலைபெற்ற பண்பாட்டு நம்பிக்கைகளைக் கண்ணெனப் போற்றி அவற்றை நம்பிச் சீரழிந்தான். உடனடிப் பயன்களைப் பற்றிச் சிந்தித்த அவன் நம்பிக்கைகளின் பின்னணியைச் சிந்திக்கத் துணியவில்லை.

மண்ணிற்காகவும் பெண்ணிற்காகவும் சண்டையிட்டு வாழ்ந்த சங்ககால மன்னர்கள் எப்போதும் சமாதானமாக வாழ்ந்ததில்லை. போர் என்பது அவர்களது வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த ஒன்றாகி விட்டது. போர் செய்யத் தமிழ் இளைஞர்கள் அவர் களுக்குத் தேவைப்பட்டனர். 'ஏன் நாம் போருக்குச் செல்ல வேண்டும்' எனத் தமிழன் சிந்திக்கத் துவங்கினால் தங்களது மேலாண்மையை நிலைநிறுத்திக் கொள்ள இயலாது என அவர்கள் அச்சப்பட்டனர். தமிழர்களைச் சுயாதீனமாகச் சிந்திக்க விடாது மூளைச் சலவை செய்யும் வழிமுறைகளை ஆய்ந்த அவர்கள், 'எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே' என்ற உணர்வில் செயல்பட்ட அக்காலக் கல்வி யாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். அவர்களும் உண்ட சோற்றுக்கு நன்றி காட்டும் வண்ணம் எதிர்காலத் தமிழ் இளைஞர்களைப் பற்றிக் கவலை கொள்ளாது அவர்களது மூளைக்குள் வீர உணர்வை உணர்ச்சி பூர்வமாகத் திணித்தனர். உணர்ச்சியின் உச்ச நிலையில் அறிவுக்கு இடமில்லை. அறிவுச் சுரண்டலுக்கு ஆட்பட்ட அவனை மன்னர்கள் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்தினர். அறிவின்மையை உண்மையான அறிவு என நம்பிய தமிழன் தன் சாராம்சத்தை இழந்து தானும் கெட்டதோடு தன் சமூக வாழ்க்கைக்கும் கேடு விளைவித்துக் கொண்டான்.

'விழுப்புண் படாநாளெல்லாம் வீழ்நாளே', போர்க்களத்தில் பட்டால் வீர சுவர்க்கம் அடையலாம், 'போர்க்குறிகாயம் புகழின் காயம்' என்பன போன்ற கருத்துக்கள் எல்லாம் தமிழனின் மூளையை மழுங்கடிப்பதற்கு வேண்டிப் பரப்பப்பட்ட செப்படிவித்தைகளே. மன்னனை இறைவனாக்கியதும் இந்த அடிப்படையில்தான்.

சுயச்சார்புச் சிந்தனைகளை மழுங்கடிக்க ஆளும் வர்க்கம் ஆண்பால் புலவர்களை நம்பியதைவிடப் பெண்பாற் புலவர்களையே அதிகம் நம்பியுள்ளது. பெண்கள் மூலமாக மூளைச் சலவை செய்யும் வேலையை ஆரம்பித்தால்தான் வெற்றியடைய இயலும் எனத் திட்டமிட்டுச் செயல்பட்டுள்ளனர். தன்னை உணர்தல், வியப்படைதல், விழித்துக் கொள்ளுதல், தேடல் ஆகியன மனிதனின் தலையாயப் பண்புக்ளாக அமைய வேண்டும். அப்பண்புகளை வளர்க்க அரசு முனைய வேண்டும். ஆனால் இங்கு அவை மழுங்கடிப்படவே அரசு முயற்சித்துள்ளது. அரசின் இத்தகைய முயற்சிக்குத் துணைப்போன பொன்முடியார், ஒக்கூர் மாசாத்தியார், நச்செள்ளையார், அள்ளூர் நன்முல்லையார் போன்றோர் இப்படிப்பட்ட போலித்தனமான நம்பிக்கைகளையே ஊட்டியுள்ளனர்.

நச்செள்ளையாரின் பாட்டுடைத் தலைவி அவரின் கற்பனையில் தோன்றியவள் என்பது வெள்ளிடை மலை. சுயமாகச் சிந்திக்காத மனிதன் தனக்கு மட்டும் கேடு விளைவிக்கவில்லை. சமூகத்திற்கே கேடு விளைவிக்கிறான். இத்தகைய கேட்டை வளர்க்கவே நச்செள்ளையார் முனைந்துள்ளார். இவரது பாட்டுடைத் தலைவி எந்தத் துன்பத்தையும் அடைந்து விடவில்லை.

துணித்தவளும் பின்புலமும்

நியாயங்களையும் தர்மங்களையும் மண்ணில் புதைத்துப் பெரு நீசத்தனங்களையெல்லாம் வேதங்களும் தத்துவங்களுமாக ஆக்கி அவற்றின் உதவியால் மேல்தட்டு வர்க்கத்தினர் அதாவது சமூக அந்தஸ்த்தில் உயர்வு பெற்றவர்கள் எனத் தங்களைத் தாங்களே கூறிக் கொண்டவர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தி அவர்களை அடிமைகளைப் போல நடத்திய காட்டாட்சி ஒரு கால கட்டத்தில் திருவிதாங்கூரில் நிலவியிருந்தது. சாதி, மதம், நிறம், பொருளாதாரம் ஆகியவற்றின் பெயரால் ஒருவன் மற்றவன் மேல் ஆதிக்கம் செலுத்த விரும்பினால் அங்கு மகிழ்ச்சி நிலவுமா? இத்தகைய நிலைதான் திருவிதாங்கூர் ஆட்சியில் நிலவியது.

அரசர்களும் மாடம்பிகளும் தாங்கள் சுகபோக வாழ்க்கையை அனுபவிப்பதற்கு ஏற்ற வகையில் சில விதிமுறைகளைச் சமூகச் சட்ட திட்டங்கள் என்ற பெயரில் உருவாக்கி அவற்றைக் கீழ்

சாதிக்காரர்கள் கடைபிடிக்கும்படி வற்புறுத்தினார். இதற்கு வசதியாக மாடம்பிகள் கிராம ஆட்சியையும் கோயில் நிர்வாகத்தையும் கையில் எடுத்துக் கொண்டனர்.

ஈழவர், சாணர் உட்பட்ட கீழ்ச் சாதிக்காரர்களுக்கு அழுவதற்கும் ஆர்ப்பரிப்பதற்கும் கூட அனுமதி மறுக்கப்பட்டது. விழாக்கள் நடத்தவும் குரவையிடவும் ஆபரணம் அணியவும் மேல் சாதிக்காரர்களின் அனுமதி தேவைப்பட்டது. மனித உரிமைகள் மறுக்கப்பட்டன. மக்கள் ஆடுமாடுகளை விடக் கீழாக நடத்தப் பட்டனர். கீழ்ச்சாதிக்காரர்களைக் காரணமின்றிக் கொல்ல அவர்களுக்கு அதிகாரம் இருந்தது. அதையாரும் கேள்வி கேட்கவில்லை. நல்ல துணி உடுக்கவும் ஒட்டுப் பாத்திரங்களைப் பயன்படுத்தவும், ஓட்டுவீடுகளில் வாழவும் அவர்கள் தடுக்கப்பட்டனர். உழைப்பின் வடிவான இம்மக்கள் பசுவை வளர்க்கலாம். ஆனால் பால் கறக்கும் நிலையில் அப்பசுவை ஆதிக்க சக்திகள் தங்கள் வீட்டிற்குப் பிடித்துக் கொண்டு போய்விடும். கறவை முடிந்தவுடன் மீண்டும் பசு இவனது வீட்டிற்கு வரும். பசுவை வளர்ப்பது மட்டுமே அவனுடைய வேலை.

அரசர், மாடம்பிகள், புரோகிதர் ஆகியோருடைய விளையாட்டுப் பொம்மையாக அவன் ஆக்கப்பட்டான். அரசு அவனது சிந்தனைக்குத் தடை போட்டது. நம்பிக்கை மீது அவனுக்கு அவநம்பிக்கைக் கொள்ள உரிமை மறுக்கப்பட்டது. இத்தகைய சூழலில்தான் திருவிதாங்கூரில் மக்கள் வாழ்ந்து வந்தனர். ''அறியாமையே துயரத்தின் தாய்'' என்றார் இங்கர்சால். இந்தக் காட்டாட்சியில் அறியாமையே பெற வேண்டியதும் போற்ற வேண்டியதுமான கல்வி எனக் கற்பிக்கப்பட்டது.

தாழ்ந்த சாதிக்காரனுக்கு மீசை வைக்க மேல் சாதிக்காரனின் அனுமதி தேவை. ஆறு கம்புகளைப் பயன்படுத்தி மண்வீடு கட்டவே அவனுக்கு உரிமை வழங்கப்பட்டது. கத்தி வைக்கவும், கடுக்கண் இடவும் அவனுக்கு உரிமை இல்லை. விளைவின் முதற்பலன் களை மேல் சாதிக்காரன் அனுபவிக்கும் வண்ணம் சட்டங்கள் இயற்றப்பட்டன. கீழ்சாதிக்காரப் பெண்கள் தங்களை மார்பை மறைக்கக் கூடாது. தண்ணீர் குடத்தை இடுப்பில் எடுக்காமல் தலையில் வைத்தே செல்லவேண்டும். மார்பை மறைக்காத நிலையில் தலையில் குடத்தைச் சுமந்து கொண்டு செல்லும் பெண்ணின் நிலையை கூறவும் இயலுமா? இச்சட்டங்கள் எல்லாம் ஆதிக்க வர்க்கத்தினரின் சிற்றின்பத்தை முன்னிட்டே உருவாக்கப்பட்டன. பார்வதி, இலட்சுமி, கல்யாணி எனப்பெயர் வைக்கக்கூட அவர்களுக்கு உரிமை அற்ற காலம்.

சில உரிமைகளுக்காக இம்மக்கள் அவர்களுக்குக் 'கரம்' (வரி) செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. கி.பி. 1751-ல் இராமையன் தளவாயின் காலத்தில் கீழ்ச்சாதிக்காரர்கள் மேல் ஏராளம் கரங்கள் சுமத்தப்பட்டன. அவற்றுள் ஒன்று முலைக்கரம். 16 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட கீழ்க் குலப் பெண்கள் இந்தக் கரத்தை அடைக்க நிர்ப்பந்தப்படுத்தப்பட்டனர். பண்பாட்டுச் சீரழிவுக்குள் சிறைப்பட்ட அச்சமூகம் கரத்தை முறையாக அடைத்து வந்தது. அநீதியையும் அதர்மத்தையும் எதிர்த்துப் பொருத்த இயலாத அச்சமூகத்தில் உட்பட்ட சேர்த்தலை என்ற இடத்தைச் சார்ந்த ஈழவப் பெண்மணி ஒருத்தி அதற்கு எதிராகப் பொங்கி எழுந்தாள். உணர்ச்சி மேலிட்ட அவள் கரம் பிரிக்க வந்த ஏவலாளினிடம் அவன் கண்முன் தன் முலைகளை அறுத்துக் கொடுத்து இரத்தம் சிந்தி உயிர்விட்டாள். முலைக்கரத்தின் பெயரில் இரத்த சாட்சியாக இறந்த அவளது கிராமம் இன்றும் 'முலச்சிப்பறம்பு' என அழைக்கப் பட்டு வருகிறது.

ஒப்பீடு

நச்செள்ளையாரின் வீரத்தாய் ஒரு கற்பனைப் பெண். அவள் வீர உரை நிகழ்த்தினாளே தவிர ஒன்றையும் இழந்து விடவில்லை. அவளது வீர உரையின் உள்நோக்கம் தமிழர்களின் சிந்தனைத் திறனை சிறைப்படுத்துவதாகவே அமைகின்றது.

கேரளத்துப் பெண்மணியோ சமூக நீதியை நிலைநாட்ட தன்னையே மாய்த்துக் கொண்டு இரத்த சாட்சியாகிறாள். இவள் ஒரு கற்பனைப் பெண் அல்லள். உண்மையான இப்புவியில் வாழ்ந்தவள். வாழ வேண்டிய பருவத்தில் தான் சார்ந்த சமூகத்தின் விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்தாள். அவனது வீரமரணம் ஆளுவோரைச் சிந்திக்க வைத்தது; அடிமைப்பட்டுக் கிடந்த அவளது சமூகத்தில் இன உணர்வு பொங்கி எழ வழிவகுத்தது. காலத்தின் முன் இவள் ஒரு வீராங்கனைதான் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

முடிவுரை

இவ்விருவரின் செயல்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது துணிந்தவளைவிடத் துணித்தவளே மேம்பட்டு விளங்குகிறாள் என்பது புலனாகும்.

பொன்னிறத்தாள் கதைப்பாடலில் உயிர்ப்பலி - பெண்ணிய ஆய்வு

அ. கலைச்செல்விசுந்தரம்

பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி
புதுச்சேரி - 3

உயிர்ப்பலியின் தோற்றமானது "இறந்து போனவரை உயிர்ப்பிப்பதற்கும் உயிர்ப்புச் சக்தியை அளிப்பதற்கும் மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் வழிவகைகளைத் தேடிக்கொண்டே இருந்தான். ஓர் உயிரைப் பலி கொடுப்பதன் மூலம் உயிருடன் உயிர்ப்புச் சக்தியை அளிக்கவும் இயலும் என மனிதன் நம்பினான்"[1] என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தான் உருவாகியிருக்கின்றது.

தொல்பழந் தெய்வ வழிபாட்டிலுள்ள பலி கொடுக்கும் வழக்கம் முற்பட்ட காலத்தில் சமயத்தின் கூறுகளிலிருந்து பெறப் பட்டிருக்கவேண்டும். அபரீதமான அமானுஷ்ய சக்தியைப் பெற மனிதனைப் பலிகொடுக்கவேண்டுமென்ற நம்பிக்கை உலகமெங்கும் பரவலாக இருந்திருக்கின்றது. தொல் பழந்தெய்வங்களுடன் தொடர்பு கொண்டிருந்த பூசாரி மருத்துவமும் தெரிந்தவனாக இருந்தான். அத்துடன் பிறரைவிடத் தான் மேலானவன் என்பதைக்காட்ட மனிதனைப் பலிகொடுத்து அந்த உடலின் ஒரு பகுதியை உண்ணவும் செய்தான். கி.பி. 6,7,8-ஆம் நூற்றாண்டளவில் பாசுபதர், கபாலிகர், காளமுகர் ஆகிய சைவ சமயப் பிரிவினர் இரத்தத்தையும் மதுவையும் தாங்கள் வழிபட்ட கடவுளுக்குப் படைத்திருக்கின்றனர்[2] என்று சு. சண்முகசுந்தரம் கூறுகின்றார். பலிகொடுப்பதன் நோக்கம், தெய்வத்தைத் திருப்திப்படுத்துவதன் மூலம் பலி கொடுப்பவன் திருப்தியடைதலாகும்.

நரபலி கொடுக்கும் வழக்கம் மனித நேயம் வளர்ந்த காலங் களில் மெல்ல குறைந்து நிறுத்தி வைக்கப்பட்டு, அந்த இடத்திற்கு, பறவைகளும் விலங்குகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன. தெய்வ வணக்கத்திற்கு வளர்ச்சியுள்ள சமுதாயத்தில் மனித பலிக்கு மாற்றாகத் தேங்காய் (இது மனித தலையின் குறியீடு) எலுமிச்சை (இதன் சாறு மனித இரத்தத்தின் குறியீடு) முதலானவற்றையும் பலியிட்டனர். இத்தகைய மாற்றுப் பலியிடு முறையை ஃபிரேசர் (Prazer), பாவனை

மனிதப்பலி (Mock Sucrifice) என்றும், மனிதனது பாவனைகளை விலங்குகளுக்கும் பறவைகளும் மாற்றலாம் என்னும் முறையைப் பலியாடுமுறை (Seape Goat Method) அல்லது மாற்றியமைக்கும் முறை (Transformary Method) என்றும் கூறுகின்றார்.[3] இனி சமூகக் கதைப் பாடல்களில் ஒன்றான பொன்னிறத்தாள் கதைப்பாடலில் உயிர்ப்பலிக் கொடுக்கும் முறையைக் காணலாம்.

பொன்னிறத்தாள் கதைப்பாடலில், நிறைமாத கர்ப்பிணியான பொன்னிறத்தாள் பேறுகாலத்திற்காகத் தாய்வீடு வந்திருக்கின்றாள். அவளைத் தோழியர் சுனையில் குளிப்பதற்காக அழைக்கின்றனர். வேலையை முடித்துவிட்டுப் பிறகு வருவதாகக் கூறி அவர்களை அனுப்பிவிடுகின்றாள். வேலையை முடித்துத் தனியாகப் புறப்படுகையில் அவளது தாய் தனியாகப் போக வேண்டாமென்று தடுத்தும், கேளாமல் சுனைக்கரைக்குப் போகின்றாள். இவ்விடத்தில் பொன்னிறத்தாள் ஏன்? சுனையாடப் போகவேண்டாமென்று தடைசெய்யப்படுகின்றாள் என்ற கேள்வி எழுகின்றது. ஒரு தாய் தன் மகளுக்கு, அங்கே எந்த ஆபத்தும் நேர்ந்துவிடக்கூடாது என்ற அச்சத்தால் போக வேண்டாமென்று கூறுகின்றாள் எனலாம். அதேசமயம் ஏன்? ஒரு நிறைமாத கர்ப்பிணியின் ஆசையை நிறைவேற்ற அவளே துணைக்குச் சென்றிருக்கக் கூடாது. அதைவிடுத்து, கணவன் (அ) தந்தைத் துணையின்றிப் போகக் கூடாது என்று கூறவேண்டும். ஏனெனில், பொன்னிறத்தாள், ஓர் ஆணின் (கணவனின்) ஆண்மையை, அவனது தந்தைத்தனத்தை இந்தச் சமுதாயத்திற்குப் பறைசாற்றக் கூடிய அவனது வாரிசை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கின்றாள். அக்குழந்தையை, சுகமாக முழுமையாகப் பெற்றெடுக்க வேண்டும். அதற்காக அவள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். எனவே, பொன்னிறத்தாள் சுனையாடப் போகவேண்டாமென்று தடை செய்யப்படுகின்றாள். பெண் என்பவள் மறு உற்பத்தி செய்பவளாக, ஆணின் உடைமைப் பொருளாகக் கருதப்படுவதால் ஆணுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமெனச் சமூகம் எதிர்ப்பார்க்கின்றது.

இக்கட்டுப்பாட்டை மீறிச்சென்று பொன்னிறத்தாள் தோழியருடன் சுனையில் குளிக்கும்பொழுது ஏற்பட்ட பெருமழையால் பிரிந்து விடுகின்றாள். பிரிந்தவள், காட்டில் வழி தெரியாமல் தவிக்கின்றாள். அங்கே, வேதியன் ஒருவன் காட்டாளம்மன் கோவிலுக்கு இரவு வழிபாடு செய்வதற்காகத் தண்ணீர் எடுத்துச் செல்லச் சுனைக்கு வருகின்றான். அங்குப் பொன்னிறத்தாளைக் கண்டு செய்தி அறிந்து, அவன் வழிபாட்டை முடித்து வீட்டிற்குச் செல்லும் பொழுது அவளையும் உடன் அழைத்துச் சென்று ஊரில் விட்டுவிடுவதாகவும், அதுவரை பொன்னிறத்தாளைச் சுனைக்

கரையில் இருக்குமாறும் கூறிவிட்டுக் கோவிலுக்குப் போகின்றான். கோவிலில் கள்ளர்கள் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி கருவூலத்தை எடுக்கப் பலி பொருளாக வேதியனைப் பிடித்துக் கொள்கின்றனர். வேதியன் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பொன்னிறத்தாளைக் காட்டிக் கொடுக்கின்றான்.

கள்ளர்கள் பொன்னிறத்தாளைச் சுனையிலிருந்து அவளது வீட்டிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறி அழைத்துச் செல்கின்றனர். அவர்கள் அழைத்து வந்து பாதை மிகவும் கடினமானதாகவும் அச்சம் தரக்கூடியதாகவும் இருப்பதை அறிந்த பொன்னிறத்தாள் அச்சத்தோடு அவர்களுடன் வருகின்றாள். இப்படி அழைத்து வரப்பட்ட பொன்னிறத்தாள், கள்ளர்களால் காட்டாளம்மன் கோவில் கருவூலத்தை எடுக்கப் பலியிடப்படுகின்றாள். இதனை,

''கையருவாள் கையிலெடுத்து காரிகையாள் யருகே வந்தான்
பொன்னிறத்தை முகம்மூடி புகழ்திரைக்குள்தான் புகுந்து''[4]

''வாழைமடல் கீறினாப்போல மங்கை நல்லாள் வயிற்றை
பொன்னிறத்தாள் திருவயிற்றை புகழ்பெறவே கீறுவானாம்
வயிறு கீறி கள்ளனவன் வலித்தெடுத்தான் பாலகனை
வல பிற மானதிலே மாபாவி கள்ளனவன்
தலை வாழை யானதிலே தான் கிடத்தி பாலகனை
தீ பாவி கள்ளனவன் தெளிவாகத்தான் கிடத்தி
பொன்னிறத்தாள் வயிறு தன்னை பிளந்தோர் தெருவாயில்
கோஸ்திரியும் தானாட்டி கொழுத்தினான் தீபதூபம்''[5]

என்ற கதைப்பாடல் வரிகளால் அறியலாம்.

கள்ளர்கள் பொன்னிறத்தாளைப் பலி கொடுப்பதற்கு முன்பாகத் துள்ளுமறி, சூலாடு, சூல்பன்றி, பூனை முதலியவற்றைப் பலி கொடுக்கின்றனர். கள்ளர்கள் பொன்னிறத்தாளைக் 'கருவூலம்' எடுக்கத்தான் 'பலி' கொடுத்தனர் என்றால், அவளது தலையை வெட்டாமல் ஏன்? தரையில் கிடத்தி அவளது கை, கால்களை மரச்சட்டத்தில் சேர்த்துக்கட்டி வாளால் அவளது வயிற்றைக் கிழித்துக் குழந்தையை உயிருடன் வெளியே எடுத்துத் தலை வாழை இலையில் கிடத்திவிட்டு, குருதி பொங்கும் அவளது நெஞ்சுக் குழியில் எரியும் பந்தத்தை நட்டு வைத்துச் சிறுகச் சிறுக இறக்கச் செய்யவேண்டும். ஏனெனில், தடையை மீறியவள் அதற்கான தண்டனையைப் பெறவேண்டும். அதே சமயம் ஆணின் வாரிசும் காப்பாற்றப்படவேண்டும். இவ்விரண்டும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும். எனவே தான் பொன்னிறத்தாள் இவ்வாறு பலியிடப்படுகின்றாள்.

பெண் வீட்டைவிட்டு ஆண் துணையின்றி வெளியே வரக் கூடாது என்ற தடையைப் பொன்னிறத்தாள் மீறுகின்ற பொழுது, அதைத் தடுத்து நிறுத்தும் கருவியாக அவளது தாய் செயல்படு கின்றாள். இங்கு ஆண் (தந்தை (அ) கணவன்) பெண்ணை வெளியில் போகவேண்டாமென்று தடுத்திருந்தால் அது பெண்ணுக்கு எதிரான ஆணின் செயலாக அமைந்துவிடும். இதிலிருந்து ஆண் தப்பித்துக்கொள்ளவும், பெண்ணை வீட்டைவிட்டுத் தன் துணை யின்றி வெளியில் செல்லவிடாமல் தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளவும், பெண்ணே பெண்ணுக்கு எதிரி என்ற கற்பிதத்தை ஏற்றி அவர்களுக்குள் விரிசல்களை ஏற்படுத்தவும், பெண்ணைக் கொண்டு பெண்ணை ஒடுக்கும் முயற்சி நடந்திருக் கின்றது எனக் கருதுவதில் தவறொன்றும் இல்லை எனலாம்.

குறிப்புகள்

1. ஆ. சிவசுப்பிரமணியன், (ப.ஆ.), ''பூச்சியம்மன் வில்லுப்பாட்டு'', பா.வரி. 507-512.
2. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி - IV, ப. 945.
3. சு. சண்முக சுந்தரம், ''சுடலைமாடன் வழிபாடு - சமூக மானிடவியல் ஆய்வு'', ப. 106 - 107.
4. ஆ. சிவசுப்பிரமணியன், ''மந்திரம் - சடங்குகள்'', ப.33.
5. சு. சக்திவேல், (ப.ஆ.), ''பொன்னிறத்தாள் கதைப்பாடல்'', பா.வரி. 1071 - 1072.

ஆண்அழகும், பெண்அழகும்: பெண்ணிய வாசிப்பு

மு. பழனியப்பன்

மா.மன்னர் கல்லூரி

புதுக்கோட்டை

ஆண், பெண் இருவரின் அங்க இலக்கணங்கள் குறித்துத் தமிழ் இலக்கியங்கள் ஆங்காங்கே சுட்டி வந்துள்ளன. திருவிளையாடற் புராணத்துள் ஆணுக்கான அழகு, பெண்ணுக்கான அழகு இரண்டும் தனித்தனியாக வகுத்துக் கூறப்பெற்றுள்ளன. இவற்றை மேலோட்டமாக வாசித்தால் உருவநலன் பற்றிய விளக்கமாக இப்பகுதி தோன்றும். பெண்ணிய வாசிப்பு அடிப்படையில் நோக்கினால், ஆணிற்கு வகுக்கப்பெற்ற உருவநலன்கள் அவனுக்கு - சமூகத்திற்கு நன்மை தரும் நோக்கில் வரையறுக்கப்பட்டிருப்பதும், பெண்ணிற்குக் காட்டப் பெற்ற உருவநலன்கள் அவள் சார்ந்துள்ள கணவனுக்கு உரிய, அவனை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கக் கூடிய நோக்கில் அமைக்கப்பட்டிருப்பதும் தெரியவரும்.

ஆணுக்கான 32 அங்க இலக்கணங்கள்

ஆணிற்கு ஆறு உறுப்புகள் உயர்ந்தும், ஐந்து உறுப்புகள் நீண்டும், ஐந்து உறுப்புகள் சிறுத்தும், நான்கு உறுப்புகள் குறுகியும், இரண்டு உறுப்புகள் அகன்றும், ஏழு உறுப்புகள் சிவந்தும், மூன்று உறுப்புகள் ஆழ்ந்தும் அமைய வேண்டும் என முப்பத்திரண்டு அங்க இலக்கணங்களை வரையறுக்கின்றது திருவிளையாடற்புராணம்.

ஒருவர்க்கு இகல்வலி, ஓசை, தொப்புள் ஆகியன ஆழ்ந்து இருப்பின் எல்லோர்க்கும் மேலானவனாக, நலம் நிறைந்தவனாக அமைவான். இவ்வழகுகளைச் சுந்தரபாண்டியன் (இறைவன்) கூறுவதாக அமைக்கப்பெற்றுள்ளது.

பெண் அழகு: பெண் அழகிற்கு மேற்காட்டியது போன்று ஒருவரையறை அமைக்கப்பெறவில்லை. 32 அழகுகள் என்ற எண் வரையறை இல்லாமல் கேசாதி பாத வருணனை நிலையில் ஒவ்வொரு உடற் பகுதியின் அழகுகளும் சுட்டப்பெறுகின்றன. திருவிளையாடற் புராணத்துள் காந்திமதி என்ற பெண்ணின்

உருவநலன் குறிப்பிடப் பெறும்போது பெண் உருவநலன்களை வியாழக்கடவுள் விரித்துரைப்பதாகக் காட்டப்பெற்றுள்ளது.

தலை: திண்மையான யானையின் மத்தகம் போன்ற தலையை யுடைய பெண்ணின் கணவன் வாழ்நாள் வளர்ந்து, உலகாளத் தகுதிபெறுவான்.

நெற்றி: எட்டாம்நாள் நிலவு போன்றமைந்து, மயிரும், நரம்பும் இலாத தசைப்பற்றுடைய மூன்று விரல் அளவினதாய் நெற்றி பெற்றவள் - நாயகனுக்கு நல்ல செல்வமும், உடல் நலமும் உண்டாக்குவாள்.

கண்: கடை சிவந்து, பாலென வெளுத்து, நடுவிழி கருத்து, இமைகள் கருமயிரை பெற்று அமைந்தால் இன்பம்.

புருவம்: வில் போன்ற வளைவின.

நாசி: இருதுளையும் ஒத்து, தாமரை மலர்மீது, எள்மலர் மலர்ந்தது போல அமைந்தால் நன்மை.

காதுகள்: வள்ளைத்தண்டு போன்று வார்தலைப் பெற்றுத் தாழ்ந்து மடல் சுழித்து அமைந்திருப்பின் அழகோடு நன்மையாம்.

கபோலம்: வட்டவடிவமாய், தசைப்பற்றுடையதாய் உயர்ந்து இருப்பின் இனிது.

இதழ்: கொவ்வைக் கனிபோலத் திரண்டு, இருபுறம் குவிந்து, சிவந்து நேரில் ரேகை இருப்பின் கணவனுக்கு எப்போதும் நட்பினள் ஆவாள்.

பற்கள்: முப்பத்திரண்டும் இடைவெளியின்றி, இரு வரிசைகளும் தம்முள் ஒத்து அமைந்தால், பசுவின் பால் போல் வெண்மை உடையதாய் இருந்தால் நன்மை உண்டாகும்.

நா: சிவந்த நாக்கை உடையவள் வேண்டியவற்றை வேண்டியவாறு பெறுவாள்.

மேல்வாய்: தசைப்பற்றுடன் வட்டமாய், அழகுடன் இருப்பின் நன்மை.

முகம்: தாமரை மலர் போன்று, மணம் வீசிக் களங்கமில்லாத சந்திரன் போலக் குளிர்வுடன் இருத்தல் நன்மை.

கழுத்து: சங்குபோலத் தசைவுற்று, நான்கு அங்குல அளவினதாகத் திரண்டு, மூன்று இரேகை வரை அளவினைப்பெற்றால் அவளின் கணவன் உலகாள்வான்.

மார்பகம்: தசையுடையதாய், பதினெட்டு அங்குலம் அளவினதாய், மயிரும் நரம்பும் இன்றி உயர்ந்திருப்பின் நன்மை; தசைப்பற்றினதாய், வட்டமாக அரும்பி, இருகுடம் போன்றதாய், ஈர்க்கு இடை போகமுடியாததாய் இருப்பின் நன்மை.

தோள்: மூங்கில் போன்று அமைந்து, தசைப்பற்றுடையதாய், மயிர் எலும்பு இன்றி இருப்பின் நன்மை.

கைகள்: உருண்டு, கணுக்கள் பெற்றுச் சிறுத்து இருக்குமாயின் செல்வத்தோடு இன்பம் தங்கும்.

கை நகங்கள்: கூர்மையாய், கண்ணும், மனமும் கவரும் தன்மையதாய்ச் சொரசொரப்பின்றி இருப்பின் நன்மை.

உள்ளங்கை: மென்மைத்தாய், சிவந்து, இடைவெளியின்றி, நடுவில் உயர்ந்து உத்தம இலக்கண ரேகைகள் இருப்பின் நன்மை.

வயிறு: நடுவில் மயிர் வரிசையற்று, மயிரும், நரம்பும் இல்லாத வயிற்றை உடையவள் விரும்பிய சிறந்த உணவைப் பெறுவாள்.

தொப்புள்: வலமாகச் சுழித்து, ஆழமுடையத்தாயின் செல்வம் பெருகும்.

இடை: மயிரும், நரம்பும் இன்றி, இருபத்துநான்கு விரல் அளவோடு வட்டவடிவமாய் இருத்தல் நன்மை.

அல்குல்: யானையின் மத்தகமும், ஆமையின் முதுகும் போல வடிவு சமமாய் இருத்தல் நன்மை.

தொடை: எலும்பும், மயிரும் இன்றி, வாழைத்தண்டு போலவும், துதிக்கை போலவும் அமைந்து இருந்தால் நன்மை.

முழங்கால்: வட்டவடிவமாய், எலும்பு தெரியாது அமையின் நன்மை.

கணைக்கால்: மயிரும், நரம்புமின்றி, திரண்டு, சிறுத்து அழகுடையதாயின் நன்மை.

புறவடி : நரம்பும், எலும்பும் இன்றி தசைத்து, ஆமை முதுகு போல இருப்பின் அவள் அரசனின் மனைவியாவாள்.

கால்விரல்: செங்கழுநீர் மலர்களை வரிசையாக வைத்தது போல, குற்றமின்றித் தசையுடன் இருப்பின் சிறப்பு.

உள்ளங்கால்: தசைப்பற்று, மென்மைத்தன்மை, சமம் ஆகியவற்றோடு இருப்பின் நலம்.

உடல்: மாந்தளிர் போன்றும், பொன்போல் பொலிந்தும், எப்போதும் வியர்வை தோன்றாமல் வெம்மையாய் இருப்பின் செல்வம் உண்டாகும்.

உடல்மணம்: பாதரி, நீலோற்பம், தாமரை, மல்லிகை, சண்பகம் ஆகிய மலர்களின் வாசனையை ஒத்திருக்க வேண்டும்.

குரல்: கிளியும், யாழுமாகிய ஓசைபோல இருக்க வேண்டும்.

மேற்கண்ட இருபகுதிகளையும் பெண்ணிய வாசிப்பில் ஒப்புநோக்கும் பொழுது கீழ்க்கண்ட சில முடிவுகளுக்கு வரமுடி கின்றது.

ஆண் அழகிற்கு இலக்கணமாக வகுக்கப் பெற்ற அழகு முறைமை, பெண் அழகைக் காட்டவரும் பொழுது வரையறுக்கப் படாமல் வருணனையாக காட்டப்பெற்றுள்ளது. இதனால் பெண் அழகு அவரவர் (ஆண்களின் சுய) விருப்பத்திற்கு ஏற்ப விரிவுபடும் தன்மையுடையது என்பது புலனாகின்றது.

ஆண்களின் உருவ அமைப்பு உவமைகள் இன்றி வருணனைகள் இன்றி வரையறுக்கப்பெற்றுள்ளன. ஆனால் உவமைகள், வருணனைகள் பெண் உறுப்புகளுக்கு அடுக்கித் தரப்பெற்றுள்ளன. இயல்பாய்ப் பெண் உருவநலனை விவரிக்க முடியாதவர்கள் ஆண்படைப்பாளர்கள் என்பதற்கு இவ்வுவமை, வருணனை அழகு முறைமை சான்றாகின்றது.

ஆணின் உருவநலன் ஆண் அறிந்து படைக்கப் பெறக்கூடியது. எவ்வாறுதான் ஆயினும் பெண் நலன், பெண் அழகு ஆகியன பெண்களால் மட்டுமே விரித்து உணர - உரைக்கத்தக்கது.

சதைப்பற்று உடையதாய், எலும்பும், நரம்பும், மயிரும் இன்றி பெண் உறுப்புகள் அமையவேண்டும் என்ற பொதுக் கருத்தே எல்லா அழகுகளிலும் காணப்பெறுகின்றது. இதன்படி 'பெண்ணின் தசை' என்ற போகநிலை விளக்கமாகவே பெண் அழகுப்பகுதிகள் அமைந்துள்ளன என்பது தெளிவாகின்றது.

பெண்ணின் உருவநலன் அவள் அடைந்த கணவனுக்கு உயர்வு, அரசபதவி, செல்வம் அளிப்பது என்று கூறப்படுவது

கவனிக்கத்தக்கது. ஆண் அழகு கூறப்படுகையில், அவன் அழகு பெண்ணைப் பாதிப்பதாகவோ, உயர்த்தப்படுவதாகவோ கூறப்படாத சூழலில் பெண் அழகு மட்டும் ஆணுக்காக ஆணை உயர்த்துவதாக வகுக்கப்பட்டிருப்பது ஏன் என்ற கேள்வி எழுகின்றது.

பெண்ணே, அவளின் அழகே, ஆடவனின் உயர்வு, தாழ்விற்குக் காரணம் எனக் கூறுவதால் அவளை ஆண் சார்ந்து இயக்கமுடியும் என்ற ஆண் அதிகாரக் கருத்து இங்கு இடம்பெற்றுள்ளது.

ஆண் அழகில் இடம்பெறாத உடல்மணம், குரல்வளம் பெண்ணிற்குச் சுட்டப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

மொத்தத்தில் பெண்ணானவள் அழகாலும், உருவாலும், மனத்தாலும், குரலாலும் மிக அழகுடையவளாக விளங்கி ஆணை மகிழ்விக்க வேண்டும் - என்ற போகப் பொருள் சிந்தனையே திருவிளையாடற்புராணத்துள் நிலைபெற்றுள்ளது என்பது உறுதி.

பெண்கள் சாதகத்தில் ஏழாமிடம்

அ. சிவபெருமான்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

உலகத்தில் பிறந்த திருமகளுக்கு ஒப்பாகிய பெண்களின் சாதகங்களைப் பற்றிப் பேசுவது எப்படி எனில், சென்ம லக்கினத்தையும், சந்திரலக்கினத்தையும் கொண்டு அவளுடைய அழகு, நிறம், குணம் முதலியவற்றைச் சொல்ல வேண்டும். ஏழாமிடத்தைக் கொண்டு அவளுடைய கணவன் குணம் முதலிய வற்றைச் சொல்ல வேண்டும். சென்ம லக்கினத்தில் சந்திரன் நின்றால் அவள் அழகுள்ளவள். இலக்கினத்திற்கு ஏழாமிடத்தில் சந்திரன் நின்றால் கணவன் அழகுள்ளவன். இக்கருத்தை,

''திருஅனைய மடவார்கள் அம்புவியின் மீது
சனித்தபல சாதகத்தின் திறமை கூறும்
கருஉதய காலலக் கினமும்சசிலக் கினமும்
கண்டுவடி உடன்நிறமும் கருதிட வேண்டும்
மருவியசத் தமராசி யால்அவள்தன் குணமும்
மகிழ்நன்குண மும்தெரிந்து வழுத்தலுமே வேண்டும்
உருஉதய லக்கினத்துஇந்து இருக்கில்அழகு உள்ளாள்
ஓர்ஏழில் சசிஉறப் பர்த்தாஅழகுள் ளானே.''[1]

என்ற பாடல் உணர்த்தும்.

மேற்பாட்டின் விளக்கம்

''மருவியசத் தமராசி யால்அவள்தன் குணமும்
மகிழ்நன்குண மும்தெரிந்து வழுத்தலுமே வேண்டும்''

என்பது நிரல்நிறை பொருள் கோளாகும். மருவிய ராசி என்பது பிறந்த ராசியையும், சத்தமராசி என்பது ஏழாமிடத்து ராசியையும் குறிக்கும். மருவிய ராசியால் அவளுடைய குணத்தையும், சத்தம ராசியால் அவள் கணவனுடைய குணத்தையும் அறிந்து பலன் கூற வேண்டும். இவ்விடத்தில் வந்துள்ள 'மருவிய' என்பது அடைச்சொல் இல்லை என்பதை நுணுகி உணர்க.

''பலங்கள் உரைக்கும் ஸ்திரீகளுக்குப்
பகரும் எட்டாம் இடம் விதவை;
துலங்கும் ஏழாம் இடம்தன்னால்
சுகமும் மகிழ்நன் பலம்அறியப்

பிலங்கொள் லக்கினம் அழகறிந்து
பேசும்; ஒன்பான் புத்திரரும்
தலங்கள் அறிந்தே மிகவுரைப்பர்
தாமும் கணித வல்லோரே''[2]

என்ற பாட்டையும் இவ்விடத்தில் நோக்குக.

பலதீபிகை என்ற சோதிட நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துகள் வருமாறு :

''ஏழாம் இடம் நல்லோர் வீடாய், நல்லோர் அம்சமாகவும், நல்லோர் சம்மந்தமாக இருப்பின் அவளுடைய கணவன் அழகு, புகழ், கல்வி, செல்வம் இவைகளோடு கூடினவன் ஆகியும் இருப்பன். மேலே சொன்னதற்கு மாறாயின் கணவன் அழகு இல்லாதவனாயும், பொய் உடையவனாயும், வஞ்சகனாயும், வறுமை உடையவனாயும் இருப்பன். கணவன், மனைவிக்குப் பிரிவை உண்டாக்குவன்''[3] என்பதாம்.

சாராவளி என்ற சோதிட நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துகள் வருமாறு

''ஸ்திரீ ஜாதகத்தில் எட்டாமிடத்தைக் கொண்டு வைதவ்யத்தையும் (கணவர் ஆயுள்), சந்திரனைக் கொண்டும் இலக்கினத்தைக் கொண்டும் சரீரத்தையும், ஏழாம் பாவத்தைக் கொண்டு பர்த்தாவின் சௌபாக்கியத்தையும் கூற வேண்டும்''[4] என்பதாம்.

வராகர் ஓரா சரித்திரம் என்ற சோதிட நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துகள் வருமாறு

''ஸ்திரீகளுக்குச் சரீர சௌந்தரியத்தை இலக்கினத்தைக் கொண்டும் சந்திரனைக் கொண்டும் நிருபிக்க வேண்டும். பர்த்தாவினுடைய சௌந்தரியத்தையும் சௌபாக்கியத்தையும் ஏழாம் இடத்தினாலே சொல்லுக''[5] என்பதாம்

சாதக அலங்காரம், பலதீபிகை, சாராவளி, வராகர் ஓரா சாத்திரம் முதலிய சோதிட நூல்கள் ஏழாம் இடத்தைக் கொண்டு கணவருடைய நிலையைக் கூறவேண்டுமெனக் கூறுகின்றன. சாதக அலங்காரத்தில் மேலும் சில பாடல்கள் இக்கருத்தைத் தெரிவிக்கின்றன. அதாவது 886, 887, 888, 889 ஆகிய நான்கு பாடல்களும் இதே கருத்தைத் தெரிவிக்கின்றன.

மேற்கூறியவற்றைத் தொகுத்துக் கூறின், பெண் சாதகத்தில் இலக்கினத்தைக் கொண்டு அவளைப் பற்றியும், ஏழாம் இடத்தைக் கொண்டு அவளுடைய கணவன் நிலையைப் பற்றியும் கூற வேண்டுமென்ற கருத்துக்கள் பெறப்பட்டன.

குறிப்புகள்

1. கீரனூர் நடராசர், சாதக அலங்காரம், செய்யுள் 859.
2. மேலது, செய்யுள் 893.
3. ஸ்ரீமந்திரேச முனிவர், பல தீபிகை, ப.77.
4. ஸ்ரீ கல்யாணவர்மனார், சாராவளி, ப. 365.
5. இலிங்கன், வராகர் ஓரா சாத்திரம், ப. 362.

மதச்சார்பற்ற பெண்ணியம்

கு.ர. சரளா

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

இயற்கைப் புதிரில் மனித வாழ்க்கையும் புதிரே, வலிமையுற்ற பெண் உயிர் ஆணிற்கு அடங்கியே உள்ளது. பெண்தான் அடிமைப்பட்டு இருக்கின்றோம் என்பதை உணர்ந்த காலந்தொட்டே பெண்ணியம் என்ற வித்து முளைக்க ஆரம்பித்தது. பின் அது இயக்கம், தத்துவம், கோட்பாடு என்றளவில், சமுதாயம், பொருளாதாரம், மதம் போன்ற பின்னணியில் நோக்கும் நிலையில் கொள்கைகளுக்கு ஏற்றவாறு பல கோட்பாடுகள் உருவாயின, இத்தகு மாற்றம் பெண்ணிய வளர்ச்சியின் ஒரு புரட்சி என்று கூடக் கூறலாம். பெண்கள் எவ்வகைகளில் அடிமைப்பட்டு இருக்கிறார்கள்? அதற்கான காரணங்கள் என்னென்ன என்று ஆராய முற்படும் பொழுது பெண்கள் முன்னேறுவதற்குரிய வழிகள் தோற்றம் பெறுகின்றன, பெண்களின் சிக்கல்கள் மத அடிப்படையில் இந்துப் பெண்ணியம், தலித் பெண்ணியம், முஸ்லீம் பெண்ணியம், கிறித்துவப் பெண்ணியம் எனும் நான்கு முறைகளில் இன்று அலசி ஆராயப்படுகின்றன. இத்தகு கோட்பாட்டுச் சிந்தனைகள் சில இக்கட்டுரையில் சுருக்கமாக ஆராயப்பெறுகின்றன.

பெண்ணிய வரையறை

ஆண்கள் எந்த அளவிற்குச் சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஈடுபட்டுக் கொண்டாடுகிறார்களோ அந்த அளவிற்குப் பெண்களுக்கும் உரிமைகள் வழங்கப்படவேண்டும். பெண்களுக்கு நன்கு வரையறுக்கப்பட்ட சமூக அமைப்பையும் அந்தஸ்தையும் உருவாக்கித்தரப் பெண்ணியக் கோட்பாடுகள் போராடுகின்றன.

பெண்ணியம் என்பதற்கான சில வரையறைகளும் விளக்கங்களையும் தரப்பெற்றுள்ளன. அறிஞர் சிலரின் விளக்கங்கள் பெண்ணியம் என்பதற்கான வரையறையைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

''பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு, அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம்

உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்'', எனச் சார்லட் பன்ச் கூறுவதாகக் குறிப்பிடுவர் (இரா. பிரேமா, ப.3) இதைப் பார்பரா ஸ்மித்தின் கூற்றில் விரிவாகக் காணமுடியும் என்றும் கூறுவார்.

''பெண்ணியம் என்பது எல்லாப் பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத்தளைகளிலிருந்து விடுவித்தல் என்ற கொள்கை உடையதாகும். இளம் பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப் பெண்கள், தன்னினச் சேர்க்கையுடைய பெண்கள், மூதாட்டிகள் மற்றும் பொருளாதார நிலையிலும், மரபு முறையிலும் துன்புறும் பெண்கள் இவர்கள் அனைவருக்கும் விடுதலைபெற்றுத் தருவதே இதன் இலக்காகும். இதன்றி இயல்பான அல்லது சற்றுக் குறைவான முயற்சியில் ஈடுபடுவது பெண்ணியம் ஆகாது''. (இரா. பிரேமா, ப.3) எனும் பார்பராஸ்மித்தின் கூற்றுபோல் காலங்காலமாகப் பல்வேறு காரணங்களால் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வரும் பெண்களுக்கு உரிமையை மீட்டு தருவது பெண்ணியத்தின் மைய இழையாக அமைகின்றது. இவ்வாறான சிறந்த கொள்கைகளையும் உட்கொண்டதாக பெண்ணியக் கோட்பாடுகள் அமைகின்றன.

மத அடிப்படையில் பெண்ணியச் சிந்தனைகள்

இந்துப் பெண்ணியமானது இந்து மதத்தையும் அதன் ஏற்றத்தாழ்வான சாதி அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டது. இதற்குக் காரணம் இந்தியாவில் சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் அவ்வப்போது வெடித்துப் பரவுகின்ற கலவரங்களில் பெண்கள் பல்வேறு வன்முறைகளுக்கு ஆளாகின்றார்கள். இந்துச் சாத்திரங்களில் பெண்களுக்குத் தாழ்ந்த மதிப்பீடுகளே பெரிதும் சாற்றப்பட்டுள்ளன என்பதைப் பின்வரும் மனுவாசகச் செய்தியின் மூலம் அறிய முடிகின்றது.

''பெண் எப்போதுமே மனதை அலைபாய விடுபவள். அவளைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிடில் ஆணின் சந்ததிகள் சத்தமின்றிப் போகும். எந்நேரமும் வீட்டு வேலைகளில் மூழ்கி இருப்பதுதான் பெண்ணுக்கு நல்லது. குழந்தைப் பருவத்தில் தந்தையாலும், இளமைப் பருவத்தில் கணவனாலும், முதுமைப் பருவத்தில் மகனாலும் பெண்ணைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். (க. பரிமளம். ப.50)

ஒரு சாதி அல்லது சிறுபான்மை இனம் சார்ந்த பெண்ணை இவற்றிற்கு வேறுபட்டவற்றை சேர்ந்த ஆண் வன்முறைக்கு உட்படுத்தும் செயல் தனி மனிதக் குற்றத்திற்கும் மேலாக அந்தப்

பெண்ணின் சாதி மத இனத்தையும் ஒடுக்கின்ற சமூகப்பரிமாண முள்ள குற்றங்களாக அமைகின்றது. ஆணைக் கருவியாகக் கொண்டு பெண்ணுக்குத் தீங்குகள் இழைக்கின்றவை இந்தியாவில் சாதி மதங்களாகவே இருக்கின்றன என்பதைச் ''சாதியின் சுத்தத்தை பேணு வதற்காக அகமண முறையைக் கடுத்தமாக அமல்படுத்துகிற சாதி அமைப்பில் பெண்ணின் பாலியல் சாதிய சமூக முக்கியத்துவம் பெற்று விடுகிறது'' (க. பரிமளம், ப. 17) எனும் கூற்று வெளிப்படுத்துகின்றது.

இந்து மதத்தில் பெண்களுக்குச் சம உரிமையும் சமத்துவமும் கொடுக்கப்படவில்லை, இதனை எதிர்த்து பெண்களின் உரிமையைப் பெற்று தர முனைந்துதான் இந்துப் பெண்ணியம் இதே போல் தலித்தியப் பெண்களின் பிரச்சனைகளை வெளிப்படுத்தி அவற்றிற்கான தீர்வினையும் கொடுக்க முயல்கிறது தலித் பெண்ணியம்.

உயர்சாதி ஆண்கள் ஏற்படுத்துகின்ற வன்முறைகள் அல்லாமல் தலித் ஆண்களே வன்முறையை மேற்கொள்ளும் போது அதனை வெளியே சொல்ல முடியாமலும் எதிர்த்துப் போரிட முடியாமலும் நெஞ்சுக்குள்ளேயே வைத்து குமறிக் கொண்டிருக்கிறார்கள் தலித் பெண்கள் தலித் பெண்ணியம் பற்றிய சில வரைவுகள் தலித் எழுத்தாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. தீண்டாமை என்பது ஒரு முரண்சமனியாகவும் செயற்பட்டதன் விளைவாகத் தலித் பெண்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் இந்துத்துவ ஆணாதிக்க மதிப்பீடுகள் குறைவாகவே வேரூன்றியுள்ளன. குடும்ப உறவுகள் நெகிழ்ச்சியாக உள்ளன.

தலித் பெண்கள் சிறப்புமிக்க இந்தத் தனித்துவமான கூறுகளைத் தலித் பெண்ணியம் உரத்துக்கூவும். உயர்த்திப் பிடிக்கும் (அ. மார்க்ஸ், ப.44) இப்பெண்ணியத்தின் செயற்பாடுகள் பற்றிக் கூறும்பொழுது தலித் பெண்கள் மீதான வன்கொடுமைகளில் அரசின் பங்கு முக்கிய மானதாக இருப்பதால் தனது இலக்குகளில் ஒன்றாக உயர் ஆணாதிக்க அரசைத் தலித் பெண்ணியம் கருதும் (அ. மார்க்ஸ், ப. 45) என்றும் தலித் பெண்ணியம் பற்றிப் பல்வேறு கருத்துகளும் விவாதங்களும் தலித் எழுத்தாளர்களால் முன்வைக்கப்படுகின்றன.

முஸ்லீம் மதம் பெண்களை ஒடுக்கியே வைத்துள்ளது. இச்சமுதாய ஆண் ''தலாக்'' என்று ஒரு வார்த்தையைக் கூறிவிட்டு எத்தனையோ பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றான், முஸ்லீம் பெண்கள் பர்தாவை அணிந்து கொண்டுதான் வெளியே வரவேண்டும் என்பன போன்ற அடக்குமுறைகள் முஸ்லீம் பெண்கள் மேல் அதிகம் திணிக்கப்பட்டு உள்ளன.

இதனை எதிர்த்துக் களைய முற்பட்டதுதான் முஸ்லீம் பெண்ணியம். கிறித்துவப் பெண்களின் பிரச்சனைகளை அலசி

ஆராய்ந்து அதற்கான ஒரு தீர்வினை முன்வைத்தது கிறித்துவப் பெண்ணியம். இவ்வாறான சிந்தனைகளுடன் நான்கு விதமான பெண்ணியக் கோட்பாடுகள் இன்று காணப்படுகின்றன. இதனை ஒரு விநோதப் போக்கு என்றுதான் கூறவேண்டும்.

பெண்ணியத் தீர்வுகள்

இந்து மதம் மட்டுமன்றிச் சிறுபான்மை இஸ்லாமிய கிறித்துவச் சட்டங்களும் பெண்விடுதலைக்குச் சிக்கலை உண்டாக்கி யுள்ளன. எந்த மதப் பெண்களுக்கும் தன் பூர்வீகச் சொத்தில் உரிமையில்லை என்பது பழைய நிலை. இந்நிலையை மாற்றி உரிமையுண்டு என இந்தியப் பெண்ணிய இயக்கங்கள் வலியுறுத்தி போராடி அதில் வெற்றியும் கண்டன.

இந்தியாவில் சாதி, மதம் மற்றும் அரசியல் யாவும் பெண் விடுதலைக்குச் சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றன என்பது யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும். சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு மதச்சாயம் பூசித்தனித்தனியாகப் பிரித்துப் பெண்ணியச் சிந்தனை வலுவிழந்து போய்விடும்.

பெண்ணடிமைத் தனத்தை நீக்கவும் பெண்களுக்கு உரிமை பெற்றுத் தரவும் தோற்றம் பெற்ற பெண்ணியவாதம் காலப்போக்கில் எழுந்த கொள்கை வேறுபாட்டால் ஆணாதிக்க எதிர்ப்புப் பிரச்சாரமாகத் திசை திரும்பிப்பின் ஆண் சமூகத்தை ஒதுக்கும் போக்காக வளர்ந்துள்ளது எதிர்ப்பவர்கள் எதிரிகளாகத்தானே இருக்க முடியும் பெண்களுக்காகப் போராடும் இவ்வியக்கத்தில் மதம் புகுந்தால் நல்ல கொள்களுக்காகப் போராடும் சிந்தனை கெட்டழியும் பெண்ணியம் என்ற நல் இலக்கு நீங்கி மதநோக்கு என்பதே மேலோங்கி நிற்கும்.

முடிவுரை

ஒவ்வொரு மதத்திலும் பெண்கள் பலவிதமான அடக்கு முறைகளுக்கு ஆளாகித்தான் உள்ளார்கள். இவர்களின் பிரச்சனைகளை ஒட்டு மொத்த பெண்களின் பிரச்சனைகளாகக் கருதிப் பெண்ணியத்தை மதங்களின் அடிப்படையில் ஆராயாமல் ஒரு மதச்சார்பற்ற பெண்ணியத்தை உருவாக்கினால் மட்டுமே பெண்ணினத்தை முன்னேற்ற இயலும்.

துணைநூல்கள்

1. பரிமளம், க, இந்துப்பெண்ணியம், சமுதாய சிந்தனை செயல் ஆய்வு மையம், மதுரை - 1995.
2. பிரேமா இரா., பெண்ணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 1994.
3. மார்க்ஸ், அ., தலித் பெண்ணியம், தலித் ஆதார மையம், மதுரை - 1997.
4. முத்துச் சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை - 1995.

கலைஞரின் பராசக்தியில் பெண்ணியம்

சா. வளவன்

பச்சையப்பன் கல்லூரி
சென்னை - 30

1952-ஆம் ஆண்டு தீபாவளி நாளில் வெளியிடப்பட்ட 'பராசக்தி' திரைப்படத்தின் கதை உரையாடலைக் கலைஞர் எழுதியுள்ளார். மக்களின் வரவேற்பால் அன்றைய ஆட்சி வழியே நெருக்கடியைத் தரும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு முதல் படம். திரைத்துறையில் அழுத்தமாகக் கால்பதித்துக்கொள்ள, கலைஞர், தம் பல்துறைப் புலமையையும் வெளிப்படுத்தியுள்ள படம். கலைஞரின் இலக்கிய, சமய, சித்தர், நாட்டுப்புற, நாடகப் பாடல்களில் இருந்த பயிற்சி, பகுத்தறிவுச் சிந்தனை, அரசியல் ஈடுபாடு, சென்னையின் போக்கினை உயர்த்தும் ஆர்வம், சமூகத்தின் குறை, அதனைக் களைவதற்குரிய தீர்வு, பெண்ணறிவும் அவர்தம் கூர்த்த மதியும், ஆணின் மனநிலையும் தன் முனைப்பும் எனப் பலவும் பராசக்தியில் வெளிப்பட்டுள்ளன.

மதுரைக்கு இரங்கூனில் இருந்து வரும் தமிழ்நாட்டுக்காரனான குணசேகரனைச் சென்னை ஏமாற்றுவதற்காக வரவேற்கிறது. இளைஞன் ஒருவன் பார்வையில் அன்றைய சென்னை (மதறாஸ்) ஏமாற்று நகரமாக, வறுமை, திருட்டு, வஞ்சகம், விபச்சாரம் வாட்டி வதைக்கும் நகரமாக, சொந்த நாட்டானையே சுரண்டும் நகரமாக, மானத்தை இழந்து மாடமாளிகை மனிதர், தாழ்ந்த உள்ளங்களும் உயர்ந்த கோபுரங்களும் கொண்ட நகரமாக உள்ளது. உறவற்றவன் ஒதுங்கி உறங்கிடத் திண்ணையைக்கூடத் தராத மனிதர், நடைபாதையில் படுக்கப் போனால் காவலர் ஐயங்கொண்டு விரட்டும் போக்கு, பித்தனாகத் திரிவோனைக் கண்டு அஞ்சும் சென்னை மக்கள், மனிதன் விலங்காக இருக்கும் நிலை ஆகியவற்றையும் வெளிப்படுத்தியுள்ளார் கலைஞர்.

பசிக்கொடுமையால் தவிப்பவர்க்கு உதவாத மனமே பலரிடம் இருக்கிறது. ஏழைப்பெண்ணுக்கு உதவும் எண்ணம் இருந்தும் உதவ முடியாதவளாக இருக்கிறாள். பழம் விற்றுப் பிழைக்கும் அந்தப் பெண்ணின் கூடையில் இருந்து பழத்தை எடுத்து உண்பவனைத் திட்டித் தீர்த்தாலும், கூலி வாங்காமால் உடன்

சுமந்து விற்றுத் தருவதாக அவன் கூறுவதைத் தடுத்துவிட்டுத் தானே விற்கப் போகிற இரக்கச் சிந்தனை மிக்கவளாகவே காட்டு கின்றார் கலைஞர். பைத்தியக்காரன் போல் ஏமாற்றித் திரிபவனைக் கண்டு காவலரே அஞ்சும் காட்சியைப் படைத்து, சென்னை மக்களின் அச்ச உணர்வைப் பதித்திருக்கிறார்.

''குணசேகரன் : பைத்தியக்கார உலகம். இந்த உலகத்தில் ஏமாற்றித் திரிபவன்தான் பிழைக்க முடியுமா? நான் திருடியது வேட்டி வாங்கிக் கொள்வதற்கா? அல்லது வீடு கட்டிக் கொள்வதற்கா? வயிற்றுப்பசி தாங்க மாட்டாமல் ஒரு பழம் திருடினேன். அதற்குப் பரிசு அடி, உதை, திட்டு. பைத்தியக்காரன் ஒரு சீப்புப் பழத்தை திருடுகிறான். உலகம் அவனுக்குப் பயப்படுகிறது. அவனை மன்னித்து விடுகிறது. இனி நாமும் வேறு வழியைக் கையாண்டால்தான் பிழைக்க முடியும்''.

என்று எண்ணும் சூழலை உருவாக்குவதையும் உணர்த்தியுள்ளார்.

சிறந்த சிந்தனையாளராகவும் சிக்கல்களைச் சரியாக அணுகு பவராகவும் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைப்பவராகவும் பெண் இருப்பதை அடையாளங் காட்டியுள்ளார் கலைஞர்.

தன் உணவினைத் திருடித் தின்றவனை விமலா எனும் பெண் பிடித்துவிடுகிறாள். அவனோ 'நான் திருடனில்லை நான் திருடனில்லை' என்று உரத்துக் கூறுகிறான். அதற்கு விமலா, 'நீ ஒன்றும் திருடனில்லை நான் அப்படி நினைக்கவில்லை. உன் பசிக்கு வேண்டியதை நீ எடுத்துக்கொண்டு போனாய். அதை என்னிடம் கேட்டாலே கொடுத்திருப்பேன். வாங்கிக்கொண்டு பேசாமல் நடந்தே போயிருக்கலாம் என்கிறாள்.

ஒருவனைப் பார்த்தபோதே சரியாக எடைபோடக் கூடியவள் பெண்; பசிக்கு வேண்டியதைத்தான் எடுத்திருக்கிறான், அது குற்றமன்று என்னும் இரக்க சிந்தனை கொண்டவள் பெண்; கேட்டிருந்தால், தன் பசியையும் பொருட்படுத்தாது தரக்கூடிய இளகிய மனங்கொண்டவள் பெண் ஆகிய கருத்துகளைக் கலைஞர் கொண்டிருந்ததை விமலாவின் பேச்சு நமக்குக் காட்டுகின்றது.

வெளிநாட்டிலிருந்து வந்த குணசேகரன் ஏமாற்றப்பட்டுப் பொருளிழந்து தங்கையைக் காண வந்தான். தங்கையோ வறுமையில் இருந்தாள். இவற்றைக் குணசேகரன் எடுத்துச் சொன்ன போது, விமலா,

''அன்பு இருக்கிற அளவுக்கு உன்னிடத்தில் அறிவு இல்லை. இப்படி சொல்கிறேனே என்று ஆத்திரப்படாதே. உன் செல்வம் கொள்ளையடிக்கப் பட்டபோதே நீ சென்றிருக்க வேண்டும் போலீசாரிடம்'' என்கிறாள்.

காவலரிடம் சொல்வதற்கு வெட்கமாக இருந்ததாகக் குணசேகரன் கூறுகிறான்.

''ஒரு பாவையோடு போனேன்...பானம் அருந்தினேன்... பணத்தைப் பறிகொடுத்தேன். இதை போலிசாரிடம் சொல்ல எனக்கு வெட்கமாயிருந்தது'' என்றதற்கு விமலா,

''பிச்சைக்காரனாய் திரிந்தாய் - வெட்கமில்லை, திருடனாய் மாறினாய் அப்போதும் வெட்கமில்லை, ஆனால் உன் ஏமாற்றத்தை வெளியில் சொல்ல மட்டும் வெட்கப்பட்டி ருக்கிறாய். வேடிக்கையான மனிதன்'' என்கிறாள்.

ஆணாதிக்க மனப்பான்மையைத் தெளிவாக விளங்க வைக்கிறாள் விமலா. பிச்சைக்காரனாக, திருடனாக மாறவும் அந்நியமாக இருக்கிற ஆண், பெண்ணிடம் ஏமாறிப் போனதை வெளியில் சொல்ல வெட்கப்படுகிறான். பெண்ணைத் தாழ்வாக நினைப்பதாலும் தன்னை உயர்வாக எண்ணிக்கொள்வதாலும், பிச்சைக்காரனாக உலவுவதைவிட திருடனாக வாழ்வதைவிட, பெண்ணிடம் ஏமாந்தது தாழ்வானது என்று கருதுகிறான்.

விமலா, சமுதாயத்தையும் அதில் ஓர் அங்கமான ஆணையும் மிக நன்றாக மதிப்பீடு செய்திருக்கிறாள். அதனால் தொடர்ந்து, தன்னை உயர்வானவன் என்று காட்டிக்கொள்வதற்காக வாதாடும் குணசேகரனின் ஆணாதிக்க மனப்பான்மைக்குத் தொய்வில்லாமல், தெளிவான சிந்தனையோடு, அவன் முட்டாள் என்பதை உணர்த்துகிறாள்.

'முட்டாளா? நானா?' என்று கேட்டுத் திணறுகிறான். குழப்பமான தன் அறிவிப்பிற்குத் தானே விளக்கமளிக்கிறாள் விமலா.

''ஆம், ஆயிரம் முறை சொல்கிறேன், பிச்சைக்கார உடையிலே எத்தனை பேர் பணக்காரராய் இருக்கிறார்கள். பைத்தியக்கார வேஷத்தில் எத்தனை பேர் லட்சாதிபதிகளாய் உலவுகிறார்கள். தேவாலயத் திருப்பணி, திருமாலுக்குத் திருவிழா...இந்தத் திரையிலே எத்தனைத் திருடர்கள் உலவுகிறார்கள். நீயும் மாறினாயே திருடனாய்...பித்தனாய்...பிச்சைக்காரனாய் முடிந்ததா உன்னால் அந்த மோகன வாழ்வு பெற?''

என்று கூறி, ஆணே ஏமாற்றுப் பேர்வழி என்பதனையும், ஆணே ஏமாறுபவன் என்றும், தானே சென்று ஏமாறுபவன் என்றும், சமுதாயத்தை ஏமாற்றிப் பிழைப்பவன் என்றும், பெண் ஏமாற்று பவள் என்றும் கூறுகிறான் என்பதனை விளங்க வைக்கின்றாள்.

தன்னால் தொடர்ந்து வாதாடமுடியாது என உணர்ந்து கொண்ட ஆண், பாசமிக்கவனாக காட்டிக்கொள்ள, பேச்சை மாற்றுகிறான்.

''எனக்குத் தேவையானது மோகன வாழ்வல்ல, கல்யாணி என் தங்கை கல்யாணி'' என்ற குணசேகரனுக்குத் தக்க விடையும் தருகிறாள். அவன் முட்டாள் என்பதற்கும் தன்னலவாதி என்பதற்கும் அவன் பேச்சே சான்றாக உள்ளதை விளங்க வைக்கிறாள்.

> ''இப்போதும் உன்னைக் குற்றம் சாட்டுகிறேன். நீ ஒரு சுயநலவாதி. உன் சொந்தத் தங்கைக்காக அவள் சோபித வாழ்வுக்காகச் சுருண்டு போனாயே தவிர நாட்டிலே எத்தனை தங்கைகள் நலிந்து கிடக்கிறார்கள் என்று நினைத்தாவது பார்த்தாயா?.....ஒரு கோடிக் கல்யாணிகள் கண்ணீரும் கம்பலையுமாகக் கதியற்ற நடைபிணமாய் நாட்டிலே நடமாடு கிறார்களே. அதற்காக உன் நாவு அசைந்ததுண்டா? உன் நெஞ்சு துடித்ததுண்டா?''

என்ற வினாக்களுக்கு விடைகூற முடியாத குணசேகரன், பாதிக்கப் பட்ட பெண்களைப் பற்றிச் சிந்திக்காமல் அவர்கள் பாதிப்பதற்குக் காரணமாய் இருந்த எத்தர்கள் துடிக்க வேண்டும் என்கிறான்.

> ''எனக்கேன் துடிக்கவேண்டும்? இந்தக் கேடுகெட்ட சமுதாயத் திற்கு, நன்றிகெட்ட நாட்டிற்கு, ஏழைகளை மிதித்து வாழும் எத்தர்களுக்குத் துடிக்க வேண்டும்''

என்கிறான். அதற்காக எந்த முயற்சியும் மேற்கொள்ள முயலத் தெரியவில்லை.

''அந்தச் சமுதாயத்தில் நீயும் ஒரு அங்கம்'' என்று விமலா சொன்னபோதும் தான் ஏழை என்பதையே விடையாக்குகிறான். அவன் ஒரு பெண்ணிடம் ஏமாறியதால் அவன் உணர்ந்து கொண்டவற்றை முறைப்படுத்த முயல்கின்றாள் விமலா.

> ''சமுதாயக் கோணல்களை வெறுக்கக் கற்றிருக்கிறாய். ஆனால் எரிமலையைத் தண்ணீர் ஊற்றி அணைக்கப் பார்க்கிறாய். மலைப்பாம்பை அடக்க மகுடி ஊதுகிறாய். சமுதாயப் புரட்சி ஆலகால விருட்சத்தின் கிளையை வெட்டுவதல்ல. அதன் ஆணிவேரையே பெயர்ப்பதுதான், வெட்கப்படு, நீ

மேற்கொண்ட வேலைகளுக்கு வேதனை தீர்க்கும் மார்க்கம் நீ போட்ட வேஷங்களல்ல. அதற்காக மட்டும் இருந்திருக்கக் கூடாது. அவதிபடும் ஆயிரமாயிரம் தங்கைகளுக்காக இருந்திருக்க வேண்டும். அதற்காக வெட்கப்படு. வேதனைப்படு. விசாரப் படு'' என்கிறாள்.

தனக்கேற்பட்ட அனுபவத்தால், சமுதாயத்தில் நிலவும் குறைகளை அறிந்து கொண்டான் குணசேகரன். அவற்றைத் தீர்க்கும் வழிமுறையைச் சரியாக அறிந்து கொள்ளவில்லை. வெட்ட வெட்ட வளரும் கிளைபோன்று, அவனது அணுகுமுறையால் சமுதாயக் குறைகள் மிகும் என்பதை விளக்குகின்றாள் விமலா. எந்த அனுபவமும் பெறாமல், பெண் சமுதாயக் குறைகளை உணர்ந்து கொள்வதோடு, அவற்றைத் தீர்க்க முயல்வோரின் தவறான அணுகுமுறையை அறிந்து கொள்வதோ்டு, சரியான தீர்வையும் சொல்கிறாள். பெண்ணறிவு பேதைமையன்று என்பதை விமலா வழியே கலைஞர் உணர்த்துகின்றார்.

பெண்களுக்குக் கல்வியறிவு இருக்குமானால், சமுதாயக் குறைகளைச் சரியாகச் சுட்டிக்காட்டவும் ஆய்ந்தறியவும் அவற்றைத் தீர்க்கவும் வழிகாட்டுவர் என்னும் கருத்துடையவராகவும் இருக்கின்றார். கலைஞர் தன்னலமின்றி, தன்முனைப்பின்றி, தவறினை மறுக்காமல், தான் செய்ததே சரி என்று வாதாடாமல், சமுதாயத்தைக் குற்றஞ்சாட்டாமல் ஆண் இருப்பானேயானால், பெண் கூறும் கருத்துகளைச் சிந்தித்து ஏற்றுக்கொள்வான் என்பதைக் குணசேகரன் வழியே படிப்படியே விளக்கியுள்ளார். பெண் கல்வியை வரவேற்பதோடு, பெண்ணறிவைப் போற்றும் கலைஞர், பெண்ணியச் சிந்தனையாளராகப் பராசக்தியில் விளங்குகின்றார் என்னும் கருத்தினை மறுப்பாரிலர்.

தி. ஜானகிராமன் நாவல்களில் பெண்ணிய வளர்ச்சி

மைதிலி வளவன்

பச்சையப்பன் கல்லூரி
சென்னை - 30

1945-இல் இருந்து தொடர்கதையாக நாவலை எழுதி வந்தவர் தி. ஜானகிராமன். கிராம ஊழியனில் தமது முதல் நாவலான அமிர்தத்தைத் தொடர்கதையாக எழுதினார். மலர் மஞ்சத்தையும் மோக முள்ளையும் சுதேச மித்திரனில் தொடர்கதைகளாக எழுதினார். இவை மூன்றும் முறையே நூலுருப்பெற்றன. தி. ஜானகி ராமனின் முதல் மூன்று நாவல்களாக இவை அமைகின்றன. இவற்றில் பெண்ணியச் சிந்தனை அரும்பி ஓரளவு வளர்ந்திருப்பதைக் காண முடிகின்றது.

விடுதலைக்கு முன்பே பெண்ணும் விடுதலை பெற்றால்தான் முழுச் சுதந்திரமாகும் என்று அரசியலாரும் பாரதி போன்ற படைப்பாளர்களும் வலியுறுத்தி வந்தனர். நாடு விடுதலை ஆவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னரே நாவல் எழுதத்தொடங்கிய தி. ஜானகிராமனுக்கு இக்கருத்து பதிந்திருக்கும். பள்ளி ஆசிரியராகவும், வானொலியில் கல்வி நிகழ்ச்சி அமைப்பாளராகவும் பணியாற்றிய ஆசிரியர்க்கு விடுதலை பற்றிய உணர்வும் பெண்ணுணர்வு பற்றிய உணர்வும் இருப்பதில் வியப்பில்லை. தாம் சார்ந்த தஞ்சை மண்ணின் வாழ்க்கை முறை அவர் மனத்தில் ஆழ வேரோடியிருக்கிறது.

நாவலின் சூழல் பாத்திரங்களின் வாழ்க்கை முறை முதலியன படைப்பாளரை நெறிப்படுத்துவதுண்டு. நாவல் வெளிவரும் பத்திரிக்கைச் சூழலும் ஓரளவு எல்லை வகுப்பதுண்டு. இவற்றிற்கு இடையில் நாவலாசிரியர் தம் மனத்துள் உருவான கருவை வளர்த்தெடுக்க வேண்டும். கருவின் வளர்ச்சியில் சமூக அக்கறை, சமூகம் திருந்தினால் நல்லது என்று நினைக்கும் மனநிலை, அதைச் சொல்லுகையில் தமக்கோ, பத்திரிகைக்கோ ஏதேனும் விளைவு ஏற்படுமோ என்ற எண்ணம் முதலியன குறுக்கிடக் கூடும். இவற்றையும் மீறிக் கருவினை வளர்த்துப் பலரும் படிக்கும் வண்ணம் நாவலைப் படைக்க வேண்டும்.

மேலும் ஒரு கருத்துரு வளர்வதற்குப் பல ஆண்டுகள் ஆகலாம். சூழல் படிப்பையோ அந்தக் கருத்துருவிற்கு நெருங்கி வரலாம். சிலபோது வேறு திசையில் சென்றுவிடலாம். அதனால் தோன்றிய கருத்துரு மாற்றம் பெறலாம். அல்லது விரைந்து வளர்ச்சி அடையலாம்.

இத்தகைய பின்னணியில் தி. ஜானகிராமனின் முதல் மூன்று நாவல்களை அணுகுவது பொருத்தமானது ஆகும். பெண்ணுரிமைப் பற்றிப் பாரதி பாடிய பாடல்கள் அவருடைய தேசிய விடுதலைப் பாடல்கள் அளவிற்கு வெற்றி பெறவில்லை. தஞ்சை மண்ணின் பெண்ணடிமைத்தனத்தை நன்குணர்ந்த கல்வியாளர் தி. ஜானகிராமன் போன்றோர்க்கும் பெண்ணுரிமை பற்றிய செய்தி சென்றடையவில்லை என்பது அமிர்தம் மலர்மஞ்சம் ஆகிய நாவல்களால் உறுதிப்படுகிறது.

ஆனால் பெண்களின் மனநிலை, சூழல், சிந்தனை வெளிப்பாடு முதலியவற்றைத் தி. ஜானகிராமன் சிறப்புறப் புலப்படுத்தியுள்ளார். இவற்றைக் கொண்டு பெண்கள் பழைமை வாதத்தினராகவே இருப்பதை அறிய முடிகிறது. பண்டைய காலத்திலேயே ஆண் களால் உருவாக்கப்பட்ட பாலியல் பங்கு நிலையின் நோக்கத்தினை இன்றைய பெண்களும் அறிந்து கொள்ளவில்லை என்பதனை அமிர்தம் நாவல் வழி ஆசிரியர் உணர்த்துகிறார். இப்பாலியல் பங்கு நிலையால் பெண் பாலியல் தொழிலாளர் உருவாக்கப் பட்டனர். தமிழகத்தில் 'தாசிகுலம்' எனப்பட்டது அடிமை என்ற பொருளிலேயே அச்சொல் வழங்குகிறது.

அச்சொல்லின் பொருளை உணரத் தொடங்கியபோது அப்பெண் களைத் தெய்வத்தின் அடிமை எனக் கூறத் தொடங்கினர். 'தேவ்' என்ற அடைமொழியுடன் அவர்கள் குறிப்பிடப் பெற்றனர். தேவதாசி எனப்பட்டனர். இப்படி ஒரு சாரரை ஆணினம் பாலியல் பங்கு நிலையில் அடிமைப்படுத்தியது. எஞ்சியிருக்கும் பெண்களைத் திருமணம் என்னும் சடங்கில் அடையுமாறு பழக்கப்படுத்தினர். பெண் குழந்தை பிறந்தவுடன் அவளை இன்னானுக்குக் கட்டி வைக்க வேண்டும் என்று பெண்களே பேசுமாறு சிந்தனையை வளர்த்தனர். பிறந்தது முதல் பாலியல்சார் எண்ணங்களை வளர்த்துக் கொண்டும் கற்பனையில் திளைத்துக் கொண்டும் இருந்து வருகின்றனர்.

ஒரு பெண் ஒரு துன்பத்திலிருந்து விடுபட அந்த துன்பத்தின் மற்றொரு கிளைக்குத் தாவுமாறு மூளைச் சலவை செய்து வைக்கப்படுகின்றாள். சற்று வயதாகிவிட்ட குஜலம் தன் மகள்

அமிர்தம் பருவ வயதை எட்டியதும் அவளை ஒரு பெரியவர்க்கு எழுபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு விற்க முயலுகிறாள். பாலியல் பங்குநிலை மரபாக ஊறியிருப்பதால் இளம்பெண் அமிர்தம் வயதானவனோடு பாலியில் பங்குநிலை கொள்ள மாட்டேன் என்று கூறுவதோடு நில்லாமல் யாரேனும் ஓர் இளைஞனுக்குக் கட்டிக் கொடுத்தால் நிம்மதியாக இருப்பேன் என்று கூறுகிறாள்.

அமிர்தத்தின் தாய் குஜலம் தன் மகளைப் பலரோடு இருக்கச் சொல்லவில்லை. சற்று வயதானவனோடு இருந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறாள். அதற்கு மகள் வேறொருவனைக் கட்டிக் கொள்ள விரும்புவதைக் கூறுகிறாள். தன் வாழ்க்கைச் சூழல் மாறுபட வேண்டும் என்றால் மாதவி மகள் மணிமேகலை போல் வாழும் எண்ணம் தோன்றியிருக்கக் கூடும். பாலியல் பங்கு நிலை அவளை வேறு வகையில் சிந்திக்கத் தூண்டவில்லை. அவளுக்கு வழிகாட்டும் தாயும், வேலைக்காரியும்கூட இப்பண்பாட்டுத் தளத்திலிருந்து வெளியே வரச் சிந்திக்கவில்லை.

வயதானவரின் மகனே அமிர்தத்தின் காதலனாகிறான். தன் மகனே தனக்குப் போட்டியாக முளைத்திருக்கிறான் என்பதால் அவனை அவமானப்படுத்தாமல் அமிர்தத்தைக் கேவலப்படுத்து கிறான். தந்தையை கேவலப்படுத்துவதாக நினைத்துக்கொண்டு அமிர்தத்தைப் பிரிந்து போன மகன் மீண்டும் அவளை மணம் புரிவேன் என்கிறான். இவை ஆணாதிக்கத்தின் கொடுமையான வெளிப்பாடுகள்.

மலர் மஞ்சமும் இதற்கு விதிவிலக்கன்று. ஆணைச் சார்ந்து வாழும் மனநிலை பெண்ணுக்கு இருப்பதை விவரிக்கிறது இந்நாவல். அமிர்தம் கூறுவதைப் போலவே மலர்மஞ்சத்தில் பாலியும் சார்ந்து வாழும் வாழ்க்கையை ஆமோதிக்கிறாள். பாலியின் தந்தை இராமையா நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொண்டவர். ஒவ்வொரு மனைவி இறந்த பின்னும் மறுமணம் செய்து கொள்கிறார். நான்காவது மனைவிக்குப் பிறந்தவள்தான் பாலி. அவளும் பாலி பிறந்தவுடன் இறந்து போனாள். இறந்து போவதற்கு முன் பாலிக்கு இன்னான்தான் மாப்பிள்ளை என்றும் சொல்லி விட்டுக் கண்ணை மூடிவிட்டாள். நான்கு பெண்களை மணந்து கொண்ட இராமையா தனக்கு மகள் பிறந்ததைக் கூறியவுடன் 'பெண்ணா' என்று இழுக்கிறார். அது மட்டுமல்ல. நான்கு பெண் களை மணந்து இழந்த இராமையாவை இந்தச் சமுதாயம் எதுவும் கூறவில்லை. ஆனால் ஒரு பெண் தன் கணவனை இழந்து விட்டால் அவளை 'ஆண் பிள்ளையை விழுங்கிய மொட்டச்சி'

என்று பெண் சமூகம் பழிப்பதை நாவலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

இரண்டாவது நாவலான மலர் மஞ்சத்தில் பாலி படித்தவளாக உள்ளாள். ஆனால் அவளாலும் சுயமாக முடிவெடுக்க முடிய வில்லை. படித்த முதல் தலைமுறைக்குத் துணிவும் சிந்தனையும் வளரவில்லை என்பதைக் காட்டியுள்ளார் ஆசிரியர். தன் தாயால் சுட்டப்பட்டவனையும் தான் காதலிப்பவனையும் எண்ணித் தடுமாறுகிறாள். மூன்றாவது நாவலான மோகமுள்ளில் பெண்ணிய வளர்ச்சி அரும்புவதைக் காணமுடிகிறது. பாபு என்னும் பாத்திரம் பெண்ணடிமைத்தனத்தை உணர்ந்திருப்பதாகக் காட்டப்படுகிறது. பெண்ணுக்குக் கல்வி தேவை; துணிவுதான் அறிவு ஆகிய கருத்துகளைப் பாபு கூறிப் பெண் சற்று உரத்துப் பேச அனுமதிக்க வேண்டும்; உலகின் பிறபகுதி பெண்கள் வாழும் முறையை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும்; தான் இப்படி வாழ்வது முட்டாள்தனம் என்பதைப் பெண் புரிந்து கொள்ளவேண்டும் என்றெல்லாம் பேசுகிறான். பேசுகிறவன் ஆணாக இருக்கிறான் கேட்பவனும் ஆணாக இருக்கிறான். மோக முள்ளில் ஆண் வழியாகப் பெண்ணியம் அரும்பத் தொடங்கியிருப்பதை ஆசிரியர் காட்டுகின்றார்.

அமிர்தத்தில் பழைமைவாதப் பெண்ணியம் மேலோங்கி இருக்கிறது. மலர் மஞ்சத்தில் படிக்கத் தொடங்கிய முதல் தலைமுறை சிந்தனை வளர்ச்சிப் பெறாமல் தேங்கியிருப்பதைக் காண முடிகிறது. மோக முள்ளில் பெண்ணுக்கு உரிமை வேண்டும் என்ற சிந்தனை ஆண் மனத்தில் அரும்பத் தொடங்கியிருப்பதாக ஆசிரியர் காட்டுவதை உணர முடிகிறது.

ஓல்காவின் பெண்ணியச் சிந்தனை

ஜே. மனுவேல்

திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி

காலச் சூழ்நிலைக்கேற்பத் தோன்றிய அநேக புரட்சிகளில் பெண்ணியமும் ஒன்றாகும். பெண் என்ற சொல் பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள் எனப் பொருள்படும். பெண்மை யாவது யாது? அடக்கம், பொறுமை, தியாகம், பிறநலம், இரக்கம், அழகு, ஒப்பரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்றுதான் பெண்மை எனப்படும். கெய்ல் ஓம்லெட் அவர்கள் பெண்ணியம் என்பது ஒடுக்கப்பட்ட ஒரு பிரிவினரான பெண்களின் விடுதலைச் சித்தாந்தம் என்கிறார். ''பெண்ணியம் என்பது தந்தை வழியாட்சி, முறையின் கட்டுப்பாடு குறித்த பெண்களின் உழைப்பு, கருவளம், பாலியல் ஆகியவற்றின் பொருள் கூறு என்று நந்திதா காந்தி, வசந்தா கண்ணபிரான் ஆகியோர் கூறுவர்.

பெண்ணியத்தின் விளக்கம் ஒரு சமுதாயத்தின் வரலாறு, ஒரு நாட்டின் பண்பாடு, இவற்றைப் பற்றிய உணர்வு, நோக்கு செயல்முறைகள் முதலியவற்றைப் பொறுத்துப் பொருள் மாறுபடும்.

தெலுங்கு மொழி இலக்கியத்தில் சிறந்த படைப்பாளராகக் கருதப்படும் ஓல்காவின் படைப்பான 'ஸ்வேச்சா' என்ற நாவலில் குறிப்பிட்டுள்ள பெண்ணியச் சிந்தனைகள் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி காலத்தில் பெண் சுதந்திரத்தைப் பேனா முனையில் சாதிக்க நினைத்தவர்களுள் 'ஓல்கா'வும் ஒருவராவர். இவர் ஒரு பெண் எழுத்தாளர். இவரது இயற்பெயர் ''போவூரி லலிதகுமாரி'' என்பதாகும். இவர் குண்டூரில் பிறந்தவர். தெலுங்கில் முதுகலைப் பட்டம் பெற்றவர். சில காலம் தெலுங்கு விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், சிறிது காலம் திரைப்படத் துறையில் கதையாசிரியராகவும் சிறந்து விளங்கினார். 1975-ஆம் ஆண்டிலிருந்து மகளிர் பிரச்சனைகளுக்காகப் பல போராட்டங்களில் ஈடுபட்டுப் பெண்ணியத்தின் வளர்ச்சிக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் திருமதி ஓல்கா. இவர் நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகள்

எழுதியுள்ளார். ஏறத்தாழ நூறு கதைகள் எழுதியுள்ளார். இவரது முதல் நாவல் 'சஹஜ' என்பது 1986-ல் வெளியானது. இந்நாவல் திருமண வாழ்க்கையில் பெண் ஈடுபடுத்தப்பட்டு அதன் பிறகு அவள் மீது சுமத்தப்படும் அன்பு, பாசம், நட்பு, குடும்பத் தலைவி, மனைவி, தாய், விருந்தோம்பல் போன்ற பொறுப்புக்களில் பெண் சிக்க வைக்கப்பட்டு அவள் படும் சிரமங்களைப் படம் பிடித்துக்காட்டும் வகையில் எழுதப்பட்ட நாவலாகும்.

இதையடுத்து 'சுவேச்சா' என்ற நாவலை வெளியிட்டார். சுவேச்சா என்றால் சுதந்திரம் என்று பொருள்படும். மேலும் சுவேச்சா என்ற தலைப்புக்குச் சுதந்திரம் (*Liberty*) சமத்துவம் (*Equality*), சகோதரத்துவம் (*Fraternity*) போன்ற புரட்சிகரமான பொருளை உணர்த்துவதாக அமைந்துள்ளது என்று நாவலாசிரியர் குறிப்பிடுவர். இந்த 'சுவேச்சா' என்ற சொல் தனித்துவம் (*Individuality*) என்ற பொருளிலும் ஒலிக்கிறது. ''சமத்துவம் இல்லாமலும் சுதந்திரம் இருக்கும் என்றாலும் சுதந்திரம் இல்லாமல் சமத்துவத் திற்கு பொருளிருக்காது. அப்படிப்பட்ட சமத்துவம் நீடிக்காது என்றும் கூறலாம். சமுதாயத்தில் காணப்படும் பலதரப்பட்ட ஏற்றத்தாழ்வு களை விலக்கிச் சமத்துவத்தைச் சாதிக்க வேண்டுமானாலும் சம உரிமைகள், வாய்ப்புகள், இருந்தாலும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் அனுசரித்து வாழவேண்டுமானாலும் முதலில் இந்த மனித சமுதாயம் சம்பாதிக்க வேண்டியது தனிமனித சுதந்திரமாகும் என்று மிக ஆணித்தரமாகத் தமது கருத்தை வெளிப்படுத்துகிறார். ஓல்காவின் தந்தை ஒரு முற்போக்கு வாதியாக இருந்தமையால், இவரது பெண்ணியச்சிந்தனைகளுக்குத் தடையாக இருக்காமல் நின்றது, ஒரு புதிய அத்தியாயத்திற்கு வழிகோலியது எனலாம்.

ஓல்காவின் பெண்ணியச் சிந்தனை

சமூகத்தில் இரு கண்களாக விளங்கும் ஆண், பெண் இரு பாலரும் இணையாக உரிமைகள் பெற்றுச் சிறந்தால் மட்டுமே ஒரு சமுதாயத்தில் பண்பாடும், நாகரீகமும் உயர்ந்து நிற்க முடியும். பெண்கள் ஆண்களைப் போலக் கல்வி கற்று அனைத்துத் துறை களிலும் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி வருகின்றார்கள். ஆனால் ஆண்களைச் சார்ந்தே பெண்கள் இருக்க வேண்டும் என்ற மரபுவழிப்பட்ட கட்டுப்பாடுகளை இன்னும் பேணிக்காத்து ஆண்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்தச் சமூகக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து, சுய மரியாதையும், சுதந்திரமும் வேண்டும் என்று கூறி ஆணாதிக்கத்தை எதிர்த்துத் தங்கள் உரிமைகளைத் திரும்பப் பெறும் போராட்டமே பெண்ணியம், அல்லது பெண் விடுதலை அல்லது பெண் சுதந்திரம் எனக் கருதப்பட்டு வருகின்றது.

ஓல்காவின் சுவேச்சா நாவலில் அருணா என்ற பட்டதாரி கல்லூரியில் வேலைக்குச் செல்கிறாள். ஆண்களைப் போலவே கை நிறைய சம்பாதித்த போதிலும், பெண்ணடிமை மாறவில்லை என்பதற்கு அருணாவின் திருமண வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு. தனது கணவனால் பலமுறை அவமதிக்கப்படுகிறாள். அருணா வேலைக்குச் செல்லக்கூடாது என்பதும், திருமணமான துவக்கத் திலேயே ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதும் இதனை உறுதிப்படுத்துகின்றது. தான் வீட்டில் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லையே என அருணா வேதனைப் படுகிறாள். சாதாரண குடும்பப் பராமரிப்பு, பணிப்பெண்ணாகவே தன்னை, நடத்தும், கணவனை நினைத்து விரக்தியடைகிறாள். குடும்பம் என்ற குறுகிய வட்டத்திற்குள் பெண் சமுதாயம் சித்ரவதைக்குள்ளாகி, குற்றுயிராய்க் கிடக்கும்போது இந்தப் பரந்த சமுதாயத்தில் அவர்களின் பங்களிப்புப் பாதிக்கப்படுகிறது என்பதற்கு அருணா வாழ்வு ஒரு எடுத்துகாட்டாக அமைகிறது. இதுபோன்றதொரு பெண்ணடிமை நிகழ்ச்சி ஓல்காவின் நாவலில் இடம் பெற்றுள்ளது.

'ஊருக்கு உபதேசம்' என்ற முதுமொழிக்கேற்ப, ஓல்காவின் சுவேச்சா நாவலில் இடம் பெற்றுள்ள நிகழ்ச்சி அமைந்துள்ளது. கேசவராவ் என்பவர் ஒரு சமுதாய சீர்திருத்தவாதி. சமுதாயத்தில் பெண்ணுக்கு எதிராக நடத்தப்படும் அனைத்து முரண்பாடுகளையும் கண்டித்து நிற்கிறான். பெண்ணடிமையை ஒழிப்பதற்குப் போராடும் தொண்டனாகவும் முத்திரைப் போட்டுக்கொள்கிறான். ஆனால் தனது மனைவியை மட்டும் பணிசெய்யும் பெண்ணாக, வாரிசு களை உருவாக்கும் இயந்திரமாக, அடிமைப் பெண்ணாக நடத்து கிறான். அவள் கல்வி கற்றவளாக இருந்தபோதிலும், உலக ஞானம் அற்றவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். ஒருவனுக்கு மனைவியான பிறகு பெண்ணுக்குத் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு இருக்கக் கூடாது. கணவனுக்குத் தெரியாமல் எந்த வேலையும் செய்யக் கூடாது, மனைவி என்பவள் கணவனுக்குச் சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற மரபு சார்ந்த கோட்பாட்டைத் தன் மனைவியிடம் நடைமுறைப் படுத்துகிறான் கேசவராவ். இவர் அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வந்ததும் "ஏண்டீ உன்னைத்தான்...என்ன செய்து கொண்டிருக்கிறாய்....இதோ உன்னைத்தான் என்று சத்தமிடுகிறான் இது ஆணின் ஆதிக்கத் திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

மேலும் இதே நாவலில் பிரகாசம் என்பவர் அருணாவைக் காதலித்து மணக்கிறார். அருணா குழந்தைப்பேற்றுக்குக் கொஞ்ச காலம் தள்ளிப்போட விரும்புகிறாள். ஆனால் பிரகாசம் வாரிசு

உடனடி வேண்டும் என்கிறான். ''குழந்தை வேண்டாம் என்று கூறும் நீயெல்லாம் ஒரு பெண்தானோ என்று அவள்மீது கோபப் படுகிறான். பெண் தனது விருப்பப்படி நடந்து கொள்ளுவதற்கு உரிமை மறுக்கப்படுவதை அறியலாம்.

மேலும் 'அருணா' பத்திரிகையில் எழுத்தாளராக இருப்பதும் கணவருக்குப் பிடிக்கவில்லை. வெளியூர், பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ள பிரகாசம் மறுப்புத் தெரிவிக்கிறார். இது போன்ற காரியங்களில் நீ ஈடுபடுவதால் நமது வாழ்க்கை கேள்விக் குறியாக மாறிவிடும். எனக்காகவும், பிள்ளைகளுக்காகவும் நீ வாழவேண்டும் என்று அருணாவை வற்புறுத்துகிறான். இவ்வாறாக ஆசிரியர் ஒல்கா அவர்கள் ஆணாதிக்கப் போக்கைப் பிரகாசின் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலும் பிரகாசம், அருணா தம்பதிகள் தங்களது திருமண நாளன்று உல்லாசமாகக் காலம் கழிக்க விருப்பம் கொள்கிறான். அருணா, தனது அலுவலகத்தில் ஏற்பட்ட அவல நிலையை எண்ணி குழப்பத்தில் ஆழ்ந்து கிடக்கிறாள் அமைதியின்றித் தவிக்கிறாள். கணவனுடன் பாலுறவு கொள்ள மறுத்த போதிலும், பிரகாசம் போராடி அவள் விருப்பத்திற்கு நேர்மாறாக நடந்து கொள்கிறான். இதனால் கணவர் மீது வெறுப்பு ஏற்படுகின்றது, புனிதமான பாலுறவில் அருவருப்பு மேலோங்குகின்றது. இந்நேரத்தில் ஜமீன்தார் களின் பாலியல் வன்முறைக்குப் பலியான சங்கம்மாவைப் பற்றிய பத்திரிகைச் செய்தியை நினைவு கூருகிறாள். தனது கணவர் செயலும் ஒரு கற்பழிப்பு அல்லாமல் போகுமா? என்று மனம் குமுறுகின்றார். இந்த கூற்றிலிருந்து ஒரு பெண்ணின் விருப்ப மில்லாமல் மேற்கொள்ளப்படும் பாலுறவு திருமணத்திற்கு முன்போ, பின்போ அது பாலியல் பலாத்காரமாகவே கருதப்படும் என்று இந்த ஆசிரியர் தமது படைப்பில் சுட்டிக் காட்டுகிறார்.

அலுவல் மகளிர் பிரச்சினை

குடும்பத்தலைவர் இறப்பு, பிரிவு, உயர்கல்வியில் நாட்டம், குடும்பத் தலைவர் வருவாய் போதாமை, பொழுது போக்கு, தாழ்வு மனப்பான்மை ஆகியவை ஒரு பெண் அலுவலகம் செல்லக் காரணங்களாக அமைகின்றன. இதனால் கணவனின் பணவேட்கை, சந்தேகம், பிற ஏமாற்றங்கள் போன்றவற்றைச் சமாளிக்க வேண்டி யுள்ளது. இத்தனை எதிர்ப்புகளையும் பொருட்படுத்திக் கொண்டு, அரசியலிலும், மருத்துவத்திலும், விளையாட்டுத் துறையிலும், எழுத்துப் பணியிலும், காவலர் பொறுப்பிலும் சிறந்து விளங்கு வதையும் காண முடிகின்றது. பெண் என்பவள் பொருளாதாரத்

தேவையை நிறைவு செய்ய உதவும் இயந்திரமாகவே சமூகம் கருதுகின்றது. இவளின் உணர்வுகள் மதிக்கப்படுவதில்லை, மீறினால் குடும்பத்தில் சிக்கல், சண்டை, பிரிவு தோன்றுகின்றன. மேலும் அவர்களின் ஒழுக்கமும் களங்கப் படுத்தப்படுகின்றது. இத்தனை இடையூறுகளுக்கிடையே பெண் வேலைக்குச் சென்றால் அங்கே, உடலுணர்வுகளோடு, உள்ளத்துணர்வுகளும் சிதைக்கப்பட்டு விடுகின்றன. காமத்துடன் உற்றுநோக்கல், விரசப் பேச்சுக்கள், உடல்நல விசாரிப்புகள், கேலி, பரியாசம் செய்தல், தனது ஆசைக்கு இணங்குமாறு வற்புறுத்தல், மறுத்தால் பதவி உயர்வு மறுத்தல், காலம் தாழ்த்துதல், சிறு, சிறு பிழைகளைக் குத்திக் காட்டுதல், கடுமையாகப் பேசுதல், போன்றவை இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளாகும்.

பெண்களின் பொருளாதாரப் பிரச்சனை

பெண்களின் நிலை உயரவேண்டுமானால், பெண்களுக்குப் பொருளாதார உரிமை வழங்கவேண்டும். பெண் சொத்துரிமை அடைந்து விட்டால், பொருளை முன்வைத்துச் சுழல்கின்ற இவ்வுலகில் மற்ற யாவும் வந்து அமையும் என்பது நம்பிக்கை ஆதலின் பூர்வீகச் சொத்தில் ஆண்களுக்கு உள்ள உரிமைகள் போலவே பெண்களுக்கும் சமமாகப் பங்கிட்டு அளிக்க வேண்டும் என்று ஒல்கா தமது படைப்பின் பாத்திரங்கள் வாயிலாக எடுத்துக் கூறுகின்றார்.

முடிவுரை

இதுவரை ஆராயப்பட்ட ஒல்காவின் 'சுவேச்சா' நாவலில், குடும்பத்தில் பெண்களின் நிலை, குடும்ப உறவு, இளமைப் பருவம், பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் உரிமைகள் மறுக்கப்படுதல், கல்வி உரிமை, பாதுகாப்பு என்ற பெயரில் தரப்படும் அச்சுறுத்தல்கள், கணவனின் ஆளுமை, எதிர்பார்ப்புக்குப் பெண்கள் ஒத்துழையாமை, ஆற்றவேண்டிய பணிவிடை, சுமக்கவேண்டிய பாரம், செய்ய வேண்டிய கடமைகள் ஆகியன ஆராயப்பெற்றுள்ளன.

சல்மாவின் 'பச்சை தேவதை'யும் பெண்ணியமும்

க. தமிழ்மாறன்

தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி

பெரம்பலூர்

சமூக வாழ்வின் உயிர் நாடியாக விளங்குபவள் பெண். பெண்ணினத்தின் ஏறுமுக வளர்ச்சி வரைபடத்தையும், வீழ்ச்சி நிலைகளையும், சமூக அநீதி மற்றும் அவலங்களையும் உலகம் கண்ணுற்றே வருகின்றது. மனித உரிமைகள் மாண்புற்று வரும் இன்றைய உலகச் சூழலில் பெண்ணுரிமை, பெண்ணியம் போன்றவை உரக்கப் பேசப்பட்டு வருகின்றன. உடல்ரீதியாகவும், உள்ள ரீதியாகவும் பெண்ணிற்கு இழைக்கப்படும் கொடுமைகளை விளக்கிப் பெண்ணினத்தைத் தலைநிமிரச் செய்யும் முயற்சி உலகில் முழுமூச்சோடு துவங்கியுள்ளது. பாலியல் தொடர்புடைய பெண்ணியக் கருத்தாக்கம் மிகவும் அலசி ஆராயப்பட்டு வருகிறது. தற்போது வெளிவந்திருக்கும் கவிதைத் தொகுப்பு நூலாகிய சல்மா என்கிற பெண் கவிஞரின் 'பச்சை தேவதை' பெண்ணியக் கருத்துக்களையும் சிந்தனைகளையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. இந்நூலில் சல்மா அவர்கள் பெண்ணியக் கருத்தாக்கங்களையும், பெண்ணியச் சிக்கல்களையும் தடைகளைத் தாண்டி மிகத் துணிச்சலுடன் மண்வாசனைத் தன்மை மாறாமல் புலப்படுத்துகின்றார். சாதாரண பெண் கவிஞர்கள் சொல்லக்கூசும், அஞ்சும் பெண்ணியக் கருத்துக் களை மிகத் துணிச்சலோடு சல்மா அவர்கள் உலகிற்கு வெளிப்படுத்தி யுள்ளார்கள். பெண்கள் பிரச்சனைகளை அலசுவதாகவும், பெண்ணின் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும், பெண்ணினத்தின் வளர்ச்சிப் பாதைகளைச் சுட்டுவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

சல்மா கவிதைகளில் பெண்ணிய இழை

சல்மாவின் கவிதைகள் பெண்ணியக் கோட்பாட்டாளர்களின் பல்வேறு பரிமாணங்களாகிய தாராளவாதப் பெண்ணியம் (Liberal Feminism), சோசலிசவாதப் பெண்ணியம் (Socialist Feminism), தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism) என்ற கருத்தாக்கங் களை உள்ளடக்கியதாக விளங்குகின்றன. பெண்ணியலாளர்கள் குறிப்பிடும் எல்லைகளைக் கடந்து பெண்ணின் உடல் ரீதியான,

உள்ள ரீதியானப் பிரச்சனைகளையும், சிரமங்களையும் தன் கவிதைகளில் பாடுபொருளாகக் கொண்டிருக்கிறார். மொத்தமுள்ள எண்பது கவிதைகளில் முப்பத்தொன்பது கவிதைகள் கணவன் பொருளீட்ட வெகுதொலைவிற்குச் செல்ல, பிரிந்து வாழும் பெண்ணின் மன சோக உணர்வு இழைகளால் பின்னப்பட்டுள்ளன.

பொருள் பிரிவு - கடமை, சோகம்

சமூக வாழ்வில் பொருளாதாரம் இன்றியமையா இலக்காகிப் போனதால் பெண்ணின் சமூக நிலையையும் மறுவாசிப்பிற்கு உட்படுத்துகின்றது பெண்ணியம். பண்பாட்டுக் கட்டமைப்பில் பாலிய (Gender) உருவாக்கம் ஊடுருவியிருப்பதால் பெண்ணின் பண்பாட்டு மதிப்பீடு இன்றியமையாததாகிறது. குறிப்பாகப் பொருள் சேர்க்க வேண்டி ஆண் வெளிநாடுகளுக்குச் செல்ல, அதிலும் குறிப்பாக இஸ்லாமிய சமூக ஆண்கள் செல்ல, தொடர்புடைய பெண்ணின் மன உணர்வுகளும், சமூகச் சூழலும், பணிகளும் பல புகைச்சலுக்கும், ஆறுதலுக்கும், சோகங்களுக்கும், கடமைகளுக்கும் உள்ளாகின்றன. ''வினையே ஆடவர்க்கு உயிரே'' என்ற குறுந்தொகையின் வரையறைப் பின்னணியில் இருக்கும் பெண்ணின் மெல்லிய மன உணர்வுகளைச் சல்மா தன் கவிதைகளில் அதிகமாகவே பதிவு செய்துள்ளார். சமூக உயர்விடத்தைக் கவனிக்கும் சமூகம், அதன் வேர்ப் பகுதியாகிய பெண்ணின் உடல், மன உணர்வுகளைக் கவனிக்கத் தவறிவிடுகின்றன என மிகவும் வருந்துகிறார். முல்லை நில ''இருத்தல்'' மனநிலை பெண்ணியத்தின் இமாலயப் பிரச்சனையென உணர்த்துகின்றார்.

கற்புநிலை - நன்மை, தீமை

''கற்பு'' என்ற பாதுகாப்பு வளையத்துக்குள் பெண் தனது சுதந்திரத்தைச் சுருக்கிக்கொண்டாள் என்பதனை இவர் கவிதைகள் உணத்தினாலும், மனக்கட்டுப்பாடுகளும், ஒழுக்க நியதிகளும் மீறப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். பெண்ணின் மன உறுதியினை இவர் கவிதைகள் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன. கற்புநிலை சார்ந்த பெண்ணியக் கருத்துக்கள் பெண்ணுரிமை குறித்துப் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றன. ''உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படிப் பெண்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப் பட்டு வருகின்றனவோ அது போலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும் எளியோரையும் பாமர மக்களையும் ஏமாற்றி மற்றவர்கள் வாழப் பயன்படுத்தி வரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ சத்தோ ஒன்றுமே கிடையாது''

என்பார் பெரியார். கண்களை மூடிக்கொண்டு கணவன் என்ற பிம்பத்தைத் தொழுது வாழ்வதற்கே என்ற இலட்சியத்துடன் வாழ வேண்டும் என்றே சமுதாயம் வற்புறுத்தி வருகின்றது. ''பெண்ணினுடைய அறிவு, ஆற்றல், ஆளுமை யாவும் ''கற்பு'' என்ற ஒழுக்க வரையறையில் முடங்கி, அவளுக்கு எல்லாம் ஆண்மூலமே நிறைவேற்றப்பட்டு வருகின்றன'' என்பார் அரங்க. மல்லிகா. ''ஓர் உறவுக்கு உண்மையாயிருத்தல்தான் கற்பு, எல்லா உறவுகளும் உராய்வின்றி இனிமையாய்த் தொடர, உண்மை அடிப்படை'' என்பார் சேதுமணி மணியன். ஒரு பெண் ஓர் ஆணின் பாதுகாப்பில்தான் இருக்கலாம் இல்லாவிட்டால் அவளால் தன் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது, என்று ஒவ்வொரு பெண்ணுக்கும் வழிவழியாகத் தாயின் இரத்தத்தில் ஊறும் நாட்களிலேயே போதிக்கப்படுவதால் பெண்ணும் அவ்வாறு வாழக் கற்றுக்கொள்கிறாள். இந்தக் கற்பு நிலையினையும், தனிமைத் துயரினையும் தன் கவிதைகளில் ஆழமாக வெளிப்படுத்துகின்றார் சல்மா.

வேறெந்தப் பொழுதுகளையும் விடச்
சுமக்கவே இயலாதபடிக்கு
எப்படி இவ்வளவு கனத்துவிடுகிறது
இந்த மாலை
மாதவிடாய் ஈரம் நிரம்பிக்
கனக்கிற பஞ்சைப்போல

எனக் கற்பு நிலையால் ஏற்பட்ட தனிமையின் வெம்மையை வெளிப்படுத்துகின்றார் சல்மா.

பெண் - அநீதி, அவலம்

பெண்களுக்கெதிரான அநீதிகளையும், அவலத்தையும் தன் கவிதைகளில் வீரியத்தோடு வெளிப்படுத்துகின்றார் சல்மா.

யாருடைய ஆட்காட்டி விரலையோ
பற்றியபடிதான்
திசைகளை வகுக்கிறோம்
திசைபழகிய பிறகு
தன் கைநழுவுமாவென்கிற
தாளவியலாத எளிய பதட்டத்தில் சீர்குலைகின்றன
எல்லா உறவுகளும்

எனச் சமூக அநீதிகளையும், அவலத்தையும், அச்சுறுத்தல்களையும் பதிவு செய்திருக்கின்றார்.

ஆணாதிக்கம்

ஆணாதிக்கச் சமூகத்தின் யதார்த்த நிலையில் பெண்ணினத்தை மட்டம் தட்டும் நிகழ்வுகள் அதிகம். பெண்ணியலாளர்கள் அதிகம் அக்கறை கொள்ளும் இப்பகுதியினைச் சல்மா,

என் நண்பனொருவனின் அடையாளம் சொல்லி
இவன் உங்கள் தகப்பனெனவும்
தன் குழந்தைகளைக் கொன்ற தாய்க்கு
என் சாயல்கள் அதிகமெனவும்
நம் குழந்தைகளுக்கு நீ சொல்கையில்
பிடிபடுகிறது
உன் ஆதிக்க வெளியின் எல்லை
என்னோடு மட்டும் முடிவதில்லை
என

என்று வெளிப்படுத்துகின்றார் சல்மா.

பாலியல் வன்முறை

ஆணாதிக்கப் பண்பாட்டில் பெண்ணின் மீதான பாலியல் வன்முறை நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இதற்காகப் பெண்ணின் விலகல் வற்புறுத்தப்பட்டு வருகின்றன. ''குடும்பத்திலும் சமூகத்திலும் பெண் பாலியல் உறவில் பெரிதும் ஒடுக்கப்படுகின்றார். இதை உணர்ந்து பல்வேறு பெண்ணியத் திறனாய்வாளர்கள் இதனை விமரிசிக்கத் தலைப்படுகின்றார். குறிப்பாக, ரெய்ச், பாலியல் உந்துதல்கள் ஆண், பெண்ணிடையே சுதந்திரமாக வெளிப்படும்போதுதான் ஒரு புதிய சமுதாயம் மலரும் என்று கூறுகிறார். பெண்ணிற்கான சிந்தனையின்போது, பாலியல் விடுதலை பற்றிய சிந்தனையும் உடன் எழுகிறது'' என்பார் அரங்க. மல்லிகா.

வஞ்சம் படர்ந்த
நகரத்தின் தெருக்களில்
வெப்பம் மிதந்தலையும்
பேருந்தில்
வியர்த்து வழியும் உடல்களினூடே
எங்கோ துளிர்த்துப் பெருகிய வன்மமென
என்மீது நீளும்
ஓர் ஆண்குறி

எனப் பாலியல் வன்முறையைக் குறிப்பிடுகின்றார் சல்மா.

பெண்ணுரிமைச் சிந்தனை

''பெண் என்னும் மனிதமும் தனது நிறை வளர்ச்சிக்கான வாய்ப்பும் சுதந்திரமும் பெற்றுத் தன்னுள் முடங்கிக் கிடக்கும்

மானுட ஆற்றல்களால் தானும் நிறைவெய்தி, சமூகத்தையும் உய்வுறச் செய்வதுதான் பெண்ணுரிமை'' என்பார் சேதுமணி மணியன். தன் உரிமைச் சிந்தனைகளையும், வேட்கைகளையும் ஒரு சாதாரண, எளிய, நடுத்தரக் குடும்பப் பெண்ணின் பார்வையில் வெளிப்படுத்துகின்றார் சல்மா. ''பெண்கள் தத்துவங்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், இலக்கியங்களால் மௌனமாக்கப்பட்ட வர்கள், ஊடகங்களால் பண்டமாக்கப்பட்டவர்கள், அவர்களுக்கு என்று கனவுகள் இல்லை. அவர்களுக்கான உணர்வோ, உலகமோ இல்லை. அவர்களுக்கெனத் தனித்த வாழ்க்கை இல்லை. அவர்களிட மிருந்து இந்த உலகம் எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு விட்டது. ஆனாலும், அவர்கள் தங்கள் தடங்களை வலுவாகப் பதிக்கிறார்கள்'' என்பார் விமர்சகர் வீ.ந.சோமசுந்தரம். இதனை வலியுறுத்தியே சல்மாவும்,

என் இசைத் தட்டுகள்
ஓயும் ஒவ்வொரு வேளையிலும்
வந்து சேர்கிறது என்னிடமே
அது எப்போதும்
இந்த நெருப்பைக் கடந்து கொண்டிருக்கிறது
ஒரு பூச்சியின் ஆவேசத்துடன்

என உரிமைக்கான கருத்தினை வெளிப்படுத்துகின்றார் சல்மா.

நிறைவுரை

பெண்ணுரிமை என்பது ஆண்களை எதிர்ப்பது மட்டுமல்ல என்பதனை உணர்ந்து, ''ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்'' என்ற பாரதியாரின் வாக்கிற்கேற்பப் பெண்ணியக் கருத்துக்களைத் தன் கவிதைகளில் சல்மா மிகச் சரியாக வெளிப்படுத்துகின்றார். சல்மாவின் கவிதைகள் பெண்ணுரிமை பரிணாம வளர்ச்சியையும், பெண்ணியக் கருத்துக்களையும், பெண் மன உணர்வுகளையும், எதிர்பார்ப்புகளையும், ஏக்கங்களையும், மெல்லிய உணர்வுகளையும் சமூகம் உயர்வதற்கான வழிமுறைகளுடன் கற்பு நிலை வட்டத் திற்குள் நின்று ஒழுக்க நெறிமுறைகளை மீறாது ஆழமான சிந்தனை யுடன் வெளிப்படுத்துகின்றன.

நறிய பொன்மலர் மென்சிறு வாயினால்
நங்கைகூறும் நவீனங்கள் கேட்டிரோ!

என்று பாரதியார் குறிப்பிடும் நங்கையாகத் திகழும் சல்மா அவர்கள் பாராட்டுக்குரியவர், அவரின் கவிதை வீரியம் வியப்பிற்குரியது, அவரின் பெண்ணியக் கருத்துக்கள் போற்றுதற்குரியன.

பெண் கவிஞர்களின் படைப்புகளில் உடல் கூற்றியல்

தமிழரசி

கற்பகம் கலை அறிவியல் கல்லூரி
ஈச்சநாரி (அஞ்சல்), கோவை - 21

ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலமைப்பில் உள்ள வேறுபாடே, அவர்களுடைய படைப்பின் வேறுபாடுகளுக்கும் அடிப்படை என்பதை விளக்குகிறது. பெண் படைப்பாளிகளின் படைப்புகளில் காணப்படும் தனித்தன்மைகள், படிமங்கள், பெண் உடலமைப்பின் தனித்தன்மையுடன் தொடர்புடையவை. உடலின் செயற்பாடுகள் பற்றிய புனைவுகள், உவமைகள், உருவகங்களில் உடல் உறுப்புகள் பெறும் இடம் என உடலின் அனுபவத்தை மொழி வாயிலாக வெளிப்படுத்துவது முதன்மைப் படுத்தப்படுகிறது. ஆணிலிருந்து வேறுபட்ட பெண் உடலின் தனித்தன்மைகளான மார்பு, பெண்குறி, கருவைச் சுமக்கும் வயிறு போன்றவையும் அவற்றின் மூலமாக நிகழும் பூப்பு, மாதவிலக்கு, சூல், குழந்தைப்பேறு, தாய் - சேய் உறவு போன்ற உள்ளார்ந்த தனித்த அனுபவ உணர்வுகளைப் பெண் மொழியால் பதிவு செய்வதே பெண்நிலைப் படைப்பாகும். அதாவது பெண் உடலை அல்லது பாலியலைப் பதிவு செய்து விட்டால் பெண் விடுதலை சாத்தியமாகிவிடுமா என்ற கேள்வி இன்று அதிகளவில் எல்லோராலும் எழுப்பப்படுகிறது. ஆம் என்பதே அதன் பதிலாகப் பெண்ணியலாளர்கள் சொல்லுகின்றனர். ஏனெனில் பெண் உடலின் விடுதலையே பெண் விடுதலை என்ற சிந்தனைத் தளத்திற்கான அடிப்படைப் பின்புலம். மேலோட்டமான பெண் உரிமைச் சிந்தனைகள் முழுமையான பெண் விடுதலைக்கு ஒரு போதும் வித்திடா. தொடக்க காலம் முதல் புனையப்பட்டுள்ள இந்தக் கருத்தியல், சொல்லாடல், தொன்மம், குறியீடு, படிமம், மொழி, வரலாறு, இலக்கியம், வரலாற்றுக் குறிப்புகள் யாவும் ஆணின் பார்வையில் ஆணின் அணுகுமுறையில் ஆணாதிக்கச் சூழலை நீண்ட நெடுங்காலத்திற்குத் தக்க வைத்துக்கொள்ளப் புனையப்பட்டவை. அவை ஆண்களுக்கானவை. பெண்களுக்கு எதிரானவை. பெண் ஆணிலிருந்து வேறுபட்டு அறியப்படுவது அவளின் உடலால்தான். அவளின் உடலின் உள்ளார்ந்த உணர்வுகளே

புனைவுகளற்றவை. நுண் அரசியல் சாராதவை. இக்கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய கவிதைகள் தமிழில் குறைவாக உள்ளன.

பெண் என்றால் சில குறிப்பிட்ட வரையறைகளுக்குள் காலம் காலமாக இருத்தி வைக்கப்படுகிறாள். அவளுக்கு என்று தனிப்பட்ட ஆசைகளோ, விருப்பு, வெறுப்புகளோ இல்லை என்பதனை கவிதையில் சொல்ல வரும்போது,

எனக்கு முகம் இல்லை
இதயம் இல்லை ஆத்துமாவும் இல்லை
ஆண்களின் பார்வையில் இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல் சிறிய இடை பருத்த தொடை
....
கதைக்கு அவர்கள் எப்போதும் எனது உடலையே
நோக்குவர் கணவன் தொடக்கம் கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்

என்ற அவர்கள் பார்வையில் எனும் சங்கரியின் கவிதையில் ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை ஒரு நுகர்வுப் பொருளாகப் பயன்படுத்திய நிலை சுட்டிக் காட்டப்படுகிறது.

பெண்களின் உடல் ரீதியான ஒரு நிகழ்வே மாதவிலக்கு, பெண் தாய்மை என்ற நிலையை அடையத் தயாராகி விட்டதை உணர்த்தும் இயற்கை நிகழ்வினால் பெண்களுக்கு ஏற்படும் அனுபவத்தை,

பெண்ணே உனக்கென்று
தனியிடம் உருவானது இங்கே
நீ புதிதாய் வயதிற்கு வந்ததற்கு
அல்லது
குழந்தை பெற்றதற்கு
....
விளம்பரத்திற்காய் Stayfree யுடன்
நடக்கும் சிரிக்கும்
இளம் பெண்

என்ற இக்கவிதை பெண்களுக்குரிய தனிப்பட்ட அனுபவங்களைப் பேசுகிறது. மாதவிலக்கு என்பது பெண்ணைப் பெண்ணாகக் காட்டும் ஒரு இயற்கை நிகழ்வே ஆகும். ஒரு பெண் ஒரு குழந்தையைச் சுமக்கத் தயாராகி விட்டதை வெளிப்படுத்திக் காட்டும் இயற்கை நிகழ்வே அது. அந்த சமயங்களில் உடல் அசதியைப் போக்குவதற்காக முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட ஓய்வு என்ற பதம் இன்று தீட்டாகி மாறிப் பெண்ணை அசிங்கப் படுத்தும் நிகழ்வாக மாறி விட்டதை,

ஈரப்பிசுப்போடு ஒரு நிமிடம்
உட்கார்ந்து இருப்பீர்களா
ரத்தப் பெருக்கோடும்
உறங்க வேண்டியிருக்கு
....
தொடாதே தள்ளிநில்
என்கிறாள் அம்மாவும்
எறும்புக்கும் நாய்க்கும்
எப்படியோ இந்த அவஸ்தை

என்ற மேற்காணும் கவிதை வரிகள் நிச்சயமாக பெண் ஒருவரால் மட்டுமே பெண்ணின் அவஸ்தையை, அதன் வலி, வேதனையை உணர்ந்து எழுத முடியும் என்பதைவிட அதன் குரூரத்தை முகத்தில் அறைவது போலச் சொல்ல முடியும் என்பதை உணர்த்தி நிற்கிறது. இயற்கையான இந்த நிகழ்வு ஆண்மையச் சமுதாயத்தில் ஆண் களால் எப்படிப் புனையப்பட்டுள்ளது என்பதையும் மேற்கூறிய வெண்ணிலாவின் கவிதை வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

கரு உயிர்த்தல் என்பது பெண்ணின் வாழ்வோடு தொடர்புடையவை. ஆனால் பெண் வளமான நிலமாக மட்டுமே ஆண்களால் பார்க்கப்பட்டு வந்திருக்கிறாள். பெண்ணைப் பற்றிய பிம்பங்கள் பெண்ணின் மனத்தை எடுத்து வைக்கவில்லை. பிள்ளைப் பெறுதலும், வளர்த்தலும் மட்டுமே அவளின் கடனாகக் கடமையாக இருந்து வந்திருக்கிறது என்பதைத் தகர்த்து எறிகிறார் கவிஞர் குட்டி ரேவதி.

முலைகள்
சதுப்புநிலக் குமிழிகள்
பருவத்தின் வரப்புகளில்
மெல்ல அவை பொங்கி மலர்வதை
அதிசயித்துக் காத்தேன்
....
ஆலிங்கனப் பிழிதலில் அன்பையும்
சிசு கண்ட அதிர்வில்
குருதியின் பாலையும்
சாறெடுக்கின்றன

என்ற கவிதையில் பல காலம் கட்டிக்காத்து வந்த பெண்ணின் மன உணர்வுகள் வெளிக்காட்டப்படுவதை நம்மால் உணர முடியும்.

ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை ஒரு நுகர்வுப் பொருளாக மட்டுமே பயன்படுத்தி வந்துள்ளமையைச் சுட்டிக்காட்டும் பெண் கவிஞர்கள், ஆண்களின் வாழ்க்கை இன்பமாக அமையப் படைக்கப்

பட்டவர்களே பெண்கள் என்ற கருத்தியலை வெறுக்கின்றனர். பெண்கள் தங்கள் உடலை ஆண்களுக்காகப் பேணிக்காக்க வேண்டும் என்ற கருத்தாக்கங்களை உடைத்தெறிகிறார்கள். உடல் என்பது ஒரு மாயை என்ற ஆணின் தத்துவப் புரிதல்கள் பெண்ணுக்கும் உரியவை என்ற உண்மையை உணர்த்துகின்றார். பெண்ணும் ஆணைப்போல எல்லா உரிமைகளுடன் வாழ உரிமையுள்ளவள் என்கின்றனர். பிரசவம் என்ற பெயரில் பெண்களின் உடலைக் காயப்படுத்தும் இயற்கைகூட ஆண்களுக்கு ஆதரவாக அமைந்து விட்டதை எண்ணி,

உன்னைக் காட்டிலும்
மோசமான துரோகத்தினைப் புரிந்திருக்கிறது
இயற்கை எனக்கு

என்று சல்மா மற்றொரு கவிதையில் வேதனைப்படுகிறார். பெண் அழகு படுத்துவதற்கும், அலங்கரிப்பதற்கும் உட்பட்டவள் அல்ல என்று பெண்ணியவாதிகள் குறிப்பிடுகின்றனர். ஆனால் ஆணாதிக்கச் சமூகம் பெண்ணை அழகுப் பதுமைகளாகக் காணவே பேராவல் கொள்கிறது. அதனால்தான் இன்று தெருவெங்கும் அழகிப் போட்டிகள் நடக்கின்றன. அந்த அலங்காரமும் பெண்ணுக்காக அல்ல அவளின் மேல் உரிமையுள்ள ஆண் கண்டு மகிழவே. மேலும் பெண்ணின் இயற்கை அழகைப் புறந்தள்ளிவிட்ட இந்தச் சமூகம் உருவாக்கி யுள்ள, பெண்ணைக் கனவு உலகத்தில் வாழச் செய்யும் அழகுக் கோட்பாடே காலப்போக்கில் அவளுக்கு எதிராகவும் மாறிவிடுகிறது. குழந்தைப் பேற்றுக்குப்பின் இந்த அழகு என்ற கருத்தியல் எப்படி யெல்லாம் அவளைச் சித்தரவதை செய்கிறது என்பதைச் சல்மாவின் கவிதைகள் மிகச் சரியாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. குழந்தை களைப் பெற்றதற்குப் பிந்தய இரவுகளில் அவளிடம் பழைய அழகுகளைத் தேடி அதிருப்தி அடையும் ஆணை அடையாளம் காட்டும் கவிதை ஒன்று. பெருத்த உடலும் பிரசவக் கோடுகள் நிரம்பிய வயிறும் ரொம்பவும்தான் அருவருப்பூட்டுவதாகச் சொல்லும் ஆணைப் பார்த்து,

நான் என்ன செய்ய
என் நசிவைப் போலத்தான்
இந்தப் பிரசவக் கோடுகளும்
எளிதில் செப்பனிட முடிவதில்லை
வெட்டி ஒட்டிவிட இவ்வுடல் காகிதமில்லை

என்று அமைதியான தன்னிலை விளக்கம் தரும் சல்மாவைப் பார்த்துப் பெண் பேணிக்காத்த உடல் மறு உயிர்ப்பு என்ற வளமையின் முன் காணாமல் போவதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

தந்தை போன்ற அதிகாரக் குறியீடுகள் தனக்குக் கீழ்ப்பட்டவர்களை எப்பொழுதுமே வாய்பொத்தியே நிற்கச் செய்கின்றன. அப்படியே இருக்கும்படி நிர்பந்திக்கின்றன. இந்தத் தந்திரத்தைப் புரிந்து கொண்ட பெண்ணினம் தங்களுடைய தாங்கள் எழுதி வரும் எழுத்துக்களில் தங்களுடைய உடம்பில் ஊறி வரும் எல்லாவித உணர்ச்சிகளையும் கொட்டி எழுத ஆரம்பித்து விட்டன. பாரதியாரும் இதைத்தான் வெடிப்புறப் பேசு என்கின்றார் போலும். இங்கே கவிஞர் இரா. மீனாட்சியும் தன்னுடைய கவிதைகளில் எந்தத் தடங்கலும் இல்லாமல் தன் அனுபவங்களை அழகான பெண்ணிய உடல் மொழியில் பேசுகின்றார்.

அந்தத் தொடுதலில்
மெள்ள எட்டிப் பிடித்தலில்
தொட்டு விடுகையில்
குன்று மணலாய் என் தாப ஏரிகள்
காதல் காவிரிகள்
பல்கிப் பெருகி
வளைந்து நெளிந்து
விரிந்து பரந்து
மெலிந்து பணிந்து
ஒடுங்கும்
சுடுதுறை ஞாபகங்கள்

இப்படி உன்னதமான ஒரு தளத்தில் காதல் அனுபவங்களைக் கவிதையாக்கும் பெண்கள்தான், பெண்களுக்கான மொழியை உற்பத்தி செய்ய முடியும். அதன் மூலம் ஆண்களின் கதையாடலின் போதாமையைப் புலப்படுத்தி, மானுடத்தை இன்னொருபடி மேலெடுத்துச் செல்ல முடியும்.

காலங்காலமாகப் பெண்ணை மதிப்பிடுவதில் உடல் தோற்றமான அழகே முக்கிய அழகாகக் கருதப்பட்டு வருகின்றது இது தவறான பார்வையாகும். பெண்ணின் அழகுக்கு வரலாற்று ரீதியாகக் கொடுக்கப்பட்டுள்ள அழுத்தம் அவளை ஒரு சிந்தனையாளராக, செயல் வீரரராக, தலைவராக, சிருஷ்டி கருத்தாவாகச் சுருங்கச் சொன்னால் பிம்பமாக அல்ல, மனுஷியாகப் பார்க்கத் தடையாகவே இருந்துள்ளது. பெண்ணின் பிறப்போடு தொடர்புடைய உடலியல், உடல் சார்ந்த அழகு, பெண்ணை அடிமையாக வைத்திருக்கிறது. பெண் கவிஞர்களால் சொல்ல முடிந்த அவளின் உணர்வுகளைப் பல காலமாக எழுதி வரும் ஆண்களால் சொல்ல முடியாததன் காரணம் அவளின் மொழியை ஆண் எடுத்துக்கொண்டதே என்பது மேற் குறிப்பிட்ட கவிதைகளைப் படிக்கும்போது எளிதாக உணர முடியும்.

'இன்றைய கண்ணகி' கட்டமைப்பு

இராம. தனசேகரன்

ஜெய்ராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சேலம் - 636 008

அறிமுகம்

'இன்றைய கண்ணகி' சிறுகதையானது பெண்ணுரிமைச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் நோக்கில் படைப்பாளர் ஜுலியட் ராஜ் அவர்களால் படைக்கப் பெற்றதாகும். இன்றைய பெண்ணினம் பட்டுடுத்தி, பூச்சூடி, அழுகின்ற - தொலைக்காட்சித் தொடரின் பெண்ணாகவே மாறி வருகின்ற நிலையில், அவர்களைக் கல்வி யறிவும் தன்னம்பிக்கையுமே புதுமைப் பெண்ணாக மாற்றியமைக்கும் என்ற முற்போக்கு விழிப்புணர்வுப் பெண்ணியச் சிந்தனைகளை முன்வைப்பதே இச்சிறுகதையின் நோக்கம் ஆகும். இன்றைய கண்ணகி கதையின் கட்டமைப்புச் சிறக்க அதன் கதைக்கரு, கதைப் பின்னல், கதை மாந்தர் மற்றும் உத்தி போன்ற கதைக் கூறுகளைப் படைப்பாளர் பயன்கொண்டுள்ள திறன் மற்றும் கதையின் சிறப்பியல்புகளை மதிப்பிடும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

இன்றைய கண்ணகி

பூரணி சிறு வயதில் தந்தையை இழந்து, வறுமை நிலையில் தாயால் வளர்க்கப் பெற்று, நிரந்தர வருமானம் உள்ள ஒருவனையே மணந்து, இரு குழந்தைகளுக்குத் தாயாகி, கணவனின் பரத்தமை ஒழுக்கத்தால் அவனை விட்டுப் பிரிந்து, தன் குழந்தைகளுடன் தனித்தே வாழ்ந்து, மனந்திருந்தி மீண்டு வந்த கணவனுடன் இணைந்து வாழ விரும்பாத புதுமைச் சிந்தனைகள் கொண்ட இன்றைய கண்ணகியாய்த் திகழ்தல்.

கதைக் கட்டமைப்பு

சிறுகதையின் கட்டமைப்புச் சிறக்கக் கதைக்கரு, கதைப் பின்னல், கதைமாந்தர் மற்றும் உத்திகள் முதலான கூறுகள் ஒருங்கிணைந்து பெரிதும் உதவுவனவாகும். ஒரு சிறுகதையானது சிறப்பதற்கும், வாசகனைக் கவர்ந்து இழுப்பதற்கும் அதன் கூறுகள் (கரு, பின்னல், மாந்தர், உத்தி) முறையே சிறந்த முறையில் அமைதல் வேண்டும். அவ்வகையில் இன்றைய கண்ணகி

சிறுகதையின் கட்டமைப்புச் சிறப்பினை அறிவதற்கு அதன் கூறுகளின் தன்மைகளை அறிதல் அவசியமாகும்.

கதைக்கரு

கரு - Theme. எந்த ஒரு நிகழ்ச்சியின் மேல் அல்லது கருத்து விளிம்பின் மேல் சிறுகதை பின்னப்பட்டுள்ளதோ அந்நிகழ்ச்சி அல்லது கருத்தே கதைக்கரு ஆகும். கருவின் செறிவான விரிவே கதை ஆகும். கதையின் உருவம் மற்றும் நடை ஆகியவற்றினைத் தீர்மானிப்பது கதைக் கருவே. இத்தகு கதைக் கருவானது ஊசி குத்துவது போல் சுருக்கென்று தைக்கக் கூடியதாய் அமைதல் வேண்டும். தேர்ந்த பொறுக்கு விதை போன்ற கதைக் கருவானது உயிர்த் துடிப்புள்ள நிகழ்வு - ஆற்றல்மிகு காட்சி - வாழ்வின் ஒரு பண்புக்கூறு - அனுபவத் துணுக்கு - பண்பின் வளர்ச்சி - ஒழுக்கம்சார் சிக்கல் போன்றவற்றுள் யாதேனும் ஒன்று அமைதல் சிறப்பாகும். (க. பிரபாகரி, படைப்பிலக்கியம், ப.6)

இன்றைய கண்ணகி கதையின் கருவாக, கணவனை எதிர்த்து ஒரு சொல் கூட பேசாது கணவனுக்காகவே வாழ்ந்து சிறந்த காப்பியக் கண்ணகியிலிருந்து மாறுபட்டு - எதிர்ப்புணர்வும், பேச்சுரிமையும், விடுதலை வேட்கையும், போராட்டக் குணமும் கொண்ட இன்றைய புதிய கண்ணகியாய்ப் பூரணி திகழ்தல் அமைந்துள்ளது.

கதை மாந்தர்

கதை மாந்தர் - சிறுகதையின் அடிப்படையாகவும் கதைகரு முழுவளர்ச்சி பெறவும், கதை சிறக்கவும் காரணியாய் அமையும் திறன் மிக்கவர் ஆவர். அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் அத்துனை மாந்தர்களுமே கதாப்பாத்திராகும் தகுதி பெற்றவர் ஆவர். ஒரு சிறுகதை சிறக்க குறைந்த அளவு பாத்திரங்கள் இடம் பெறுவதே நல்லது.

இன்றைய கண்ணகி சிறுகதையானது பூரணி, பூரணியின் தாய், பூரணியின் கணவன் மற்றும் ஜேம்ஸ் ஆகிய நான்கு பாத்திரங்களைக் கொண்டு கட்டமைக்கப் பெற்றுள்ளது. பூரணி - தலைமை மாந்தராகவும், ஏனையோர் துணை மாந்தர்களாகவும் அமைந்துள்ளனர்.

- பூரணி - தாயால் வளர்க்கப் பெற்று, கணவனின் விருப்பப் படியே வாழ்ந்து, இரு குழந்தைகளுக்குத் தாய் ஆனவள். கணவனின் பரத்தமை ஒழுக்கத்தால் அவனைப் பிரிந்து, குழந்தைகளோடு தனித்தே வாழ்ந்து வெற்றியும் பெற்றவள். பொறுமைப் பண்பும் குடும்பப் பொறுப்பைத் தானே ஏற்று நடத்தும் தன்னம்பிக்கையும் மிக்கவள். மேலும் காப்பியக்

கண்ணகி போலவே கணவனை எதிர்த்துப் பேசாது பொறுமை காத்து வந்த பூரணி, குற்றம் புரிந்து மனம் திருந்தி வந்த கணவனுடன் மீண்டும் இணைந்து வாழ விரும்பாத சுயமரியாதைப் பண்பும் நிறைந்தவள் ஆவாள்.

- கணவன் - பூரணியின் கணவன் பிற பெண்களை நாடும் பரத்தமை ஒழுக்கம் உடையவனாக, ஆணாதிக்கத் திமிர் பிடித்தவனாக, வேலை இழந்த நிலையில் தன் தவறை உணர்பவனாக, பூரணியின் உதவியை நாடி வருபவனாக - மொத்தத்தில் ஒரு சராசரி மனிதனாகவே காணப்படுகின்றான். மேலும் பூரணியின் கணவன் காப்பிய மாந்தரான கோவலனையே நினைவூட்டும் வண்ணம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.
- தாய் - பூரணியின் தாய் இளமையிலேயே கணவனை இழந்த அவலமும், வறுமைநிலையிலும் பூரணியை வளர்த்து ஆளாக்கியச் சிறப்பும், பூரணியின் எதிர்கால நலன் கருதி நிரந்தர வருமானம் உள்ளவனுக்கே அவளை மணம் முடித்த பிடிவாத குணமும், பூரணியின் குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்புணர்வும், பூரணியோடு தனித்தே ஓடிவந்த தாய்ப்பாசமும், பூரணி மீண்டும் கணவனோடு இணைந்து வாழ வேண்டும் என ஏங்கும் தாயுள்ளமும் ஒருங்கே கொண்டு திகழ்ந்த பெருமைக் குரியவள் ஆவாள்.
- ஜேம்ஸ் - பள்ளி ஆசிரியரான ஜேம்ஸ் பூரணிக்குப் பெரிதும் உதவும் கருணை உள்ளமும், பூரணியின் மனதில் தன்னம்பிக்கையை ஊட்டியவரும், பூரணி வாழ்வில் பெரிய மாற்றங்களையும் மேன்மையினையும் ஏற்படுத்திய சிறப்பிற்கும் உரியவர் ஆவார்.

கதை உத்தி

உத்தி - கதை கூறுவதில் படைப்பாளர் மேற்கொள்ளும் முயற்சி. படைப்பாளர் கதை கூறுவதில் ஆசிரியரே கதை கூறல் - முதன்மை பாத்திரம் கதை கூறல் - பாத்திரங்கள் மாறி மாறிக் கதை கூறல் - கடிதம் அல்லது நாட்குறிப்பு மூலம் கதை கூறல் - மனப் பேச்சாக வெளிப்படுதல் - தனக்குள்ளாவே எண்ணுதல் - பின்னோக்கிப் பார்த்தல் - நனவோட்டம் - முதலான உத்திகளைக் கையாளுவர்.

இன்றைய கண்ணகி சிறுகதையில் பூரணி என்ற முதன்மைப் பாத்திரம் தானே தன் நிலையினைக் கூறுவதாகக் கதை அமைந் துள்ளது. பிற மாந்தர்களின் குறுக்கீடுகளின்றி முழுக்க முழுக்க தலைமை மாந்தரின் (பூரணி) பேச்சு நடையிலேயே கதை செல்லு கின்றது. பாத்திர உரையாடல் மிகச் சிக்கனமாக அமைந்து, கதையின் ஆழத்தைப் புரிந்து கொள்ள உதவியுள்ளமை குறிப்பிடத்தக்க

தாகும். மேலும் பாத்திர நேரடிப் பேச்சு முறையானது கதையின் செய்திகளை வாசிப்பவர்கள் நேருக்கு நேராகக் கேட்பது போன்ற உணர்வினை ஏற்படுத்துவதும் சிறப்புமிக்க ஒன்றாகும்.

கதைச் சிறப்பு

இன்றைய கண்ணகி சிறுகதையானது கதைத் துவக்கம், சிறந்த நடை அமைப்பு, தலைப்புப் பொருத்தம், உத்தியமைப்பு மற்றும் சமூக யதார்த்தம் முதலான சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது.

- கதைத் துவக்கம் - கதையின் தொடக்கம் கவித்துவமாய் அமைந்து, கதையைப் படிக்கத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளது. ''சிம்னி விளக்கொளியைப் போல் சன்னமாய் இருந்தது நிலவொளி. வளர்பிறை நிலவு. இன்னும் இரண்டொரு நாளில் பூரணமாகும்''. (இன்றைய கண்ணகி, ப. 60) பூரணியின் வாழ்க்கை நிலவொளியைப்போல வளர்ந்தும் தேய்ந்தும் அமைந்தாலும் அவளது வாழ்வில் ஒளியேற்படும் என்ற நம்பிக்கை ஊட்டலை மறைமுகமாய்ச் சுட்டுவது போல கதையின் துவக்கம் அமைந்து வாசகனைப் படிக்கத் தூண்டும் சிறப்பு குறிப்பிடத் தக்கதாகும்.
- சிறந்த நடை அமைப்பு - கதையின் நடையமைப்பு சிறு சிறு உரையாடல்களாக, பேச்சு மொழியில் அமைந்து விறுவிறுப் பூட்டும் வண்ணம் அமைந்துள்ளது. ''பூரணி தந்தையை இழந்த சிறுவயது முதலே அவளோடு இணைந்து உணவு, உடை, படிப்பு என எல்லாமுமாய் அமைந்து அவளோடு கூடவே ஓடிவந்தவள் தாய் தான்'' (இன்றைய கண்ணகி, ப. 63) என்ற சொற்சித்திரம் படைப்பாளரின் நடைச் சிறப்பினைப் புலப்படுத்து வதாகும்.
- தலைப்புப் பொருத்தம் - கதைத் தலைவி பூரணி, காப்பியக் கண்ணகியின் படிமமாய் அமைந்து பல புதிய கருத்துருவாக் கங்களைத் தருதல் கதையின் சிறப்பிற்குரிய ஒன்றாகும். பூரணி, கணவனுக்காகவே வாழ்ந்து சிறந்த கண்ணகியிலிருந்து மாறுபட்டு விடுதலை வேட்கையும் புதுமைச் சிந்தனைகளும், எதிர்ப்புணர்வும், போராட்டக் குணமும் உடையவளாய்த் திகழ்ந்து புதுமைப் போக்கில் முடிவெடுக்கும் திறன் பெற்றிருத்தல் - இன்றைய கண்ணகி என்ற பெயருக்குப் பொருத்தமாய் அமைந்துள்ளது.
- உத்தியமைப்பு - கதையமைப்பு தலைமைப் பாத்திர நேரடிப் பேச்சு முறையில் அமைந்து கதையின் செய்திகளை வாசகன்

நேருக்கு நேர் கேட்பது போன்ற உணர்வினை ஏற்படுத்துதல் - கதை உத்தியமைப்பில் சிறந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

- சமூக யதார்த்தம் - இன்றைய கண்ணகி சிறுகதையானது பல்வேறு சமூக யதார்த்தங்களைத் தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது. கணவன், குழந்தைகள், குடும்பம் என்றே வாழ்ந்து வந்த பூரணி தன் கணவனுக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு இருப்பது தெரிந்து அவனை விட்டுப் பிரிதல் - பூரணியின் வாழ்க்கைச் சீரழிவதற்கு ஒரு பெண்ணே (சரசு) காரணமாய் அமைதல். அதாவது பெண்ணே பெண்ணுக்கு எதிரியாய் அமைதல் - பூரணி தன் குழந்தைகளுடன் தனித்து வாழுகின்ற வாழ்க்கைப் போராட்டம் - பூரணியின் கணவன் திருந்தி மீண்டு வரல் - பூரணி சுயமரியாதையும் தன்னம்பிக்கையும் உள்ள இன்றைய புதுமைப் பெண்ணின் சிந்தனைப் போக்குடன் திகழ்தல். அதாவது தன் கணவனுடன் மீண்டும் இணைந்து வாழ விரும்பாது தீர்க்கமாக முடிவெடுத்தல். போன்றவை நிகழ்கால சமூக யதார்த்தமாகக் கதையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது சிறப்பம்சமாகும்.

நிறைவு

இன்றைய கண்ணகி கதைக் கட்டமைப்புச் சிறக்க அதன் கரு, கதைப்பின்னல், கதைமாந்தர் மற்றும் உத்தி போன்ற கதைக் கூறுகள் பெரிதும் ஒருங்கிணைந்து துணைபுரிந்துள்ள திறனை இக்கட்டுரை வழி அறியலாம்.

- கதைக்கரு - பூரணி கணவனின் பரத்தமை ஒழுக்கத்தால் அவனைப் பிரிந்து, தனித்து வாழ்ந்து இன்றைய கண்ணகியாய்த் திகழ்தல்
- கதைப்பின்னல் - பூரணியின் திருமணம் தொடங்கி, கணவனைப் பிரிதல், மீண்டும் கணவனுடன் இணைந்து வாழ விரும்பாமை வரையிலான கதை நிகழ்வுகள் கோர்வைபட அமைதல்
- கதைமாந்தர் - பூரணி தலைமை மாந்தராகவும் அவளது தாய், கணவன் மற்றும் ஜேம்ஸ் ஆகியோர் துணை மாந்தராகவும் அமைந்துள்ளமை
- உத்தி - பூரணியே கதை முழுவதும் நேரடியாகப் பேசுவதான நடை அமைப்பு
- கதையின் சிறப்பியல்புகளாக கவித்துவமான கதைத் துவக்கம், சிறந்த நடையமைப்பு, சரியான தலைப்புப் பொருத்தம், உத்தி யமைப்பு மற்றும் சமூக யதார்த்த போக்கு போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

மித்ராவின் "காற்றின் சிறகுகள்" சித்தரிக்கும் பெண்ணியச் சிந்தனைகள்

சி. ஆனந்தி

தனலட்சுமி சீனிவாசன் கலை, அறிவியல் மகளிர் கல்லூரி
பெரம்பலூர் - 621 212

பெண் என்பவள் ஆணின் பாலுறவுத் தேவைக்கும், வாரிசு களைப் பெற்றுத் தருவதற்கும், குடும்ப அமைப்பை நிர்வகிப்பதற்கும் மட்டுமே உரியவள் என்ற நிலை பழங்காலச் சமுதாயத்தில் நிலவி வந்தது. இந்நிலை மாற, பெண்களைப் பற்றிய விடுதலைச் சிந்தனை களும், விழிப்புணர்ச்சி உணர்வுகளும் உலகெங்கிலும் தோன்றியது. அடிப்படை உரிமைகளைக் கூட இழந்துவிட்ட நிலையில் இருக்கும் பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர்களிடையே இவ்விடுதலை உணர்வை வளர்ப்பதும் அவசியமாகக் கருதப்பட்டது. பெண்களும் தங்களைப் பற்றிய சுய தேடலில் இறங்கிவிட்டனர். இத்தகைய தேடலின் முயற்சியே பெண்ணிய இயக்கமாகச் செயல்பட்டு வருகின்றது. அவ்வகையில், மித்ராவின் ''காற்றின் சிறகுகள்'' நூல் கூறும் பெண்ணியச் சிந்தனைகளை இக்கட்டுரை விளக்குகிறது.

சமூகத்தில் ஆண்களுக்கு நிகராகச் செயலாற்றும் திறம் கொண்டு பெண்கள் திகழ்ந்தாலும் பெண் குழந்தைகளை வெறுக்கும் நிலையும் காணப்படுகிறது. குடும்பத்தில் பெண் குழந்தை பிறந்தால் வேண்டாத சுமையாகக் கருதுகின்றனர். பெண் குழந்தை பெற்ற தாயையும், அவர் புகுந்தகம் வரவேற்க மறுக்கிறது. இதனால் குழந்தை பெறப்போகும் ஒவ்வொரு பெண்ணும் பெண் குழந்தை பிறந்து விடுமோ என்று நித்தம் அஞ்சி வாழும் ஓர் அவலம் உருவாகி விட்டது. அவ்வாறு பெண் குழந்தை பிறந்து விட்டால் குடும்ப உறவினர்களால் அல்லது பெற்ற தாயால் கொல்லப்படுகின்ற கொடுமையும் அதிகரித்துள்ளது. இதனை,

> ''அன்னையும் பெண் மகவு என்றால் அஞ்சுகின்ற
> காலமிது; கண்விழித்துப் பார்க்கும் முன்பே
> கல்லறையில் இடும் கருணையிலா நீள் உலகு!'' (ப. 48)

என்ற கவிதை வரிகளால் அறியலாம்.

தீமைகள் நிறைந்த சமுதாயத்தில் பெண் பிள்ளைகளை வளர்ப்பதைக் கடினமாக நினைத்தனர். இதனால் பெண்ணின் பாதுகாப்புக் கருதி அவள் பருவம் அடைவதற்கு முன்பே வேறொரு ஆடவனின் கையில் ஒப்படைக்கப்பட்டாள். இவ்வாறு உருவாக்கப் பட்டதே குழந்தை மணம். நாளடைவில் இது பொருந்தா மணமாகவும் மாறிவிட்டது. பெண்பிள்ளைக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் அவள் பொருத்தமில்லாத ஆடவனுக்கு உரியவளாக மாற்றப்பட்டாள். செல்வ புத்திரனாக இருந்தால் போதும் என்று கருதிய பெற்றோர் பெண்ணைக் காட்டிலும் மிக அதிக வயதுள்ள ஆணை தேர்ந் தெடுத்துத் திருமணம் செய்து கொடுத்தனர். இந்நிலை சங்க காலம் முதல் பிற்காலச் சமுதாயம் வரையில் மிகுதியாகக் காணப்பட்டது. இத்தகைய குழந்தை மணத்தையும், பொருந்தா மணத்தையும் வன்மையாகக் கண்டித்துப் புரட்சி முழக்கமிட்டவர் பாரதிதாசன்.

''மண்ணாய்ப் போக! மண்ணாய்ப்போக!
மனம் பொருந் தாமணம் மண்ணாய்ப் போக!''
(பாரதிதாசன் கவிதைகள், பெண்ணுலகு, ப. 95)

என்று கூறி மூடத்திருமணத்தை எதிர்த்தவர். ஆனால் இன்றும் இச்சமுதாயத்தில் இத்தகைய மூடத்திருமணம் இலைமறை காயாய் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது என்பதை,

''சிறகு முளைக்காத சிட்டுக்குப் பொட்டிட்டுப்
பூமுடித்து, காய்ந்த சருகோடு மொட்டினைக்
கட்டுதல் போல், கிழச் சீமானோடு இன்னவளை
மணம் முடித்தார்; கயவரெல்லாம்! இந்தப்
பால்ய விவாகம் பாருக்கு ஒவ்வாதென
மாந்தோப்பில் பிணம் என்னும் மாகவிதையில்
சொன்னவரே! இன்னும் மண்ணில் இலை மறை காயாய்!
இருப்பதை நீ அறிவாயா?'' (ப. 58)

என்ற கவிதை மூலம் எடுத்துரைக்கின்றார் ஆசிரியர்.

இவ்வாறாகப் பெண் குழந்தை பிறப்பதற்கு முன்பே உருவாகி விட்ட பெண்ணடிமை நிலை பெண்ணின் ஒவ்வொரு பருவத்திலும் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. அடிமைச் சூழலிலேயே வளர்ந்து வந்த பெண்கள், அறியாமையை உலகாகக் கொண்டு வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

பெண்கள் தங்களுக்குரிய உரிமைகள் எது என்பதைக்கூட அறிய முடியாத நிலையில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அச்சம், மடம், நாணம் என்ற சமுதாயக் கற்பிதங்களுக்கு உட்பட்டு இரண்டாந்தர குடிமகளாக அடிமைகளாக இருக்கின்ற பெண்களின் நிலையை மித்ரா,

''அச்சம், மடம், நாணம் எனும் அறியாமைக் காரிருளில்
அனுதினமும் ஆழ்ந்து அஞ்சியும் கெஞ்சியும்
ஆமைபோல் பதுங்கியும் அலைக்கழிக்கும் பெண்மை''
(ப. 48)

எனும் கவிதை மூலம் எடுத்துரைக்கின்றார்.

ஒருபுறம் ஆணுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்துவரும் பெண்கள். மற்றொரு புறம் பெண் என்றாலே ஆண் ஆளக்கூடிய அடிமைப்பொருள் என்ற அர்த்தமற்ற போக்கு. இவ்வாறு இரண்டுவிதமாகச் சமுதாயத்தில் பெண்களின் நிலை காணப்படுகிறது. கடின உழைப்பும், அயராத ஆற்றலும், உலகச் சாதனை படைக்கும் திறமையும் உடைய பெண்ணினத்தில் ஒரு பாதி அடிமையாக வாழ்வதை விரும்பாத கவிஞர்,

''ஆமைபோல் அடங்கிக் கிடப்பதும் முடங்கி
முணகுவதும் பெண்மை ஆகாத தீக்குணங்கள்!'' (ப. 54)

என்று பெண்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டுகின்றார்.

விடுதலை உணர்வை ஏற்றுக்கொண்ட பெண்கள் தங்கள் உரிமைகளைப் பெறத் தாங்களே முன்வரும்போதும் சமுதாயம் அதனை ஏற்க மறுக்கிறது. பெண்மைக்குரிய குணங்களை இழந்து வீதிக்கு வந்துவிட்டதாகக் கூறி ஒதுக்குகிறது. இந்நிலையில் விடுதலைக்காகப் போராடியும், விடுதலையை அடைய முடியாமல் பெண்கள் அல்லலுறுவதை ஆசிரியர்,

''அன்றாடம் நீதிக்குப் போராடி! நெருப்பாற்றில்
நிதம் குளித்து வீதிக்கு வந்தாலும் நீதி கிடைக்காத
அன்னங்கள்; ஆத்தாக்கள்; அவனியில் ஏராளம்!'' (ப. 54)

என்ற கவிதை மூலம் அறிய வைக்கின்றார்.

இருப்பினும் பெண்களின் சாதனை உலகில் வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது. விஞ்ஞானத் தொழில் நுட்பம், பொறியியல், மருத்துவம் என்று எல்லாத் துறைகளிலும் சாதனைகள் செய்து சாதித்து வருகின்றனர் பெண்கள். இத்தகைய பெண்ணாற்றலுக்கு ஈடுகொடுக்க முடியாத ஆண்கள் பெண்களை அடக்கி ஆள எண்ணுகின்றனர். ஆண்களின் இவ்வடக்குமுயற்சியே பெரும் பெண்ணடிமைத்தனத்திற்கு வழிவகுக்கிறது என்பதை,

''ஆயக் கலைகளின் அழகு நயம் கண்டவர்!
விண் ஏறிச் சந்திரனில் வெற்றிக்கொடி நாட்டுகின்றனர்;
இராணுவத்தில் உயர் பதவி இன்னும் காவல் துறையில்

கணக்கற்ற உயர் பதவி என உலகில்
சாதனைகள் பல நிகழ்த்திச் சாதிக்கும் பெண்கள் கூட்டம்
இதைக்கண்டு சகிக்காத இதயத்தில் தாழ்ந்துபோன
ஆண்கள் கூட்டம்; அவதூறு மிகப் பரப்பி
ஆணவத்தில் மிக மிதந்து ஆர்ப்பரிக்கும் எந்நாளும்!'' (ப. 61)

என்ற கவிதை மூலம் அறிய முடிகிறது.

ஆண்களின் அடிமை எண்ணங்களை உடைத்துவிட்ட பெண்கள் அவர்களின் ஆர்ப்பரிக்கும் பேச்சை வெறுங்கூச்சல் என்று ஒதுக்கி விட்டனர். தங்கள் உரிமைகளை உணர்ந்து விட்டதால் வீரப் புரட்சி யுடன் வெற்றி நடை போட விரைந்து செல்கின்றனர். இனிப் பெண்ணினம் ஆணுக்கு நிகராகவும், அவர்களை மிஞ்சியும் சாதனைகள் செய்து சரித்திரம் படைக்கும் என்பதில் ஐயமில்லை என்பதை,

''சட்டம் பேசவும்! சரித்திரம் படைக்கவும்!
பட்டங்கள் ஆளவும்! பதவிகள் வகிக்கவும்!
விதியினை நொந்து! விவேகம் நினைந்து
விரையும் பெண்ணினம்!
....
அடிமை விலங் கொடித்து, விடுதலைக்கு
விழிகளை உயர்த்தி விரையுது பெண்ணினம்!'' (ப. 132)

என்ற கவிதை வரிகளின் மூலம் உணரவைத்துள்ளார் மித்ரா.

''பட்டங்கள் ஆள்வதுஞ்சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்
இளைப்பிள்ளை காணென்று கும்மியடி''
(பாரதியார் கவிதைகள், பெண்கள் விடுதலைக்கும்மி, ப. 463)

என்ற பாரதியாரின் பெண் விடுதலைச் சிந்தனை மேற்கூறிய மித்ராவின் கவிதையில் மிளிர்வதைக் காணமுடிகிறது.

இவ்வாறாகப் பாரதி, பாரதிதாசனின் பெண் விடுதலைச் சிந்தனை களை அடியொற்றியே மித்ராவும், கவிபுனைந்துள்ளார் என்பதைக் ''காற்றின் சிறகுகள்'' வெளிப்படுத்தும் கவிதைகளில் காணமுடிகிறது. எனவே அடிமை நிலையில் உள்ள பெண்கள் அந்நிலையிலிருந்து மீண்டு விடுதலை பெறவேண்டும் என்ற புரட்சி எண்ணமே கவிஞரின் பெண்ணியச் சிந்தனைகளாகவும் இருக்கின்றது என்பதை அறியலாம்.

துணைநூல்கள்

1. மித்ரா, காற்றின் சிறகுகள், அன்பு நிலா பதிப்பகம், வந்தவாசி, 2000.
2. பாரதியார் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.
3. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.

தாட்சாயிணி சிறுகதைகளில் பெண்ணியப் பார்வை

இரா. ரெங்கம்மாள்

அ.ப.ம. கலைக்கல்லூரி
பழனி - 624 615

இந்நூற்றாண்டின் தமிழ்ப் பெண் எழுத்தாளர் வரிசையில் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றவர் பேராசிரியை இந்திரபவாநி. மனதில் பட்டதைத் துணிந்து சொல்லும் துணிச்சல்மிக்கவர். சமூக அக்கறை கொண்டவர். இந்தப் பண்புகள் தாட்சாயிணி சிறுகதைத் தொகுப்பிலுள்ள கதைகளில் பதிவாகி உள்ளன.

தாட்சாயிணி சிறுகதைகளின் உருவமும் உள்ளடக்கமும்

தாட்சாயிணி என்ற இச்சிறுகதை தொகுப்பில் நியாயம், நாய்கள், மனிதர்கள், தனியாவா? நாலுபேர், விடிஞ்சாச்சு, செகண்ட் ஹேண்ட், போர்க்கொடிகள், தாட்சாயிணி, பட்டாம்பூச்சி என்ற பத்து கதைகள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் பல கதைகள் ஆண்களால் பேசவே முடியாத பெண்களின் பிரச்சனைகள் குறித்துத் தெளிவான குரலில் பேசப்படுகின்றன.

பிரச்சனைகளைச் சந்தித்து அவற்றை நீக்குவதற்காகப் போராடும் பாத்திரங்களே அவருடைய கதைகளில் இடம்பெற்றுள்ளன. நடப்பியல் சித்தரிப்புக்களாகவே உள்ளன. வாழ்க்கையில் நாம் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகளின் சித்திரங்களே அக்கதைகள். இக்கதை களில் இடம்பெறும் பெண்களும் சாதாரண மாணவர்களே. ஆனால் அவர்களின் வாழ்வை முன்னெடுத்துச் செல்லும் வீரியமிக்க முன்னோடிகளும் அக்கதைகளில் இடம்பெற்றுள்ளனர். அக்கதைகள் பல மனதால் படிக்கப்பட வேண்டியவை.

ஆசிரியரின் பெண்ணியப் பார்வை

பேராசிரியை இந்திரபவாநியின் பார்வை பாரதியின் பெண்ணியப் பார்வையாக உள்ளது. ஆணும் பெண்ணும் நிகரெனக்கொள்ளும் பார்வை. குடும்ப வாழ்க்கையே சமூகத்தின் அடித்தளம் எனும் பார்வை. அந்தக் குடும்ப வாழ்வை மேலும் மேலும் சமத்துவப் படுத்த வேண்டும், மனித நேயப்படுத்த வேண்டும் என்கிற பார்வை. ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுத்து, வாஞ்சையுடன் ஒருவரை ஒருவர்

மதித்து, ஒருவரை ஒருவர் நம்பி வாழ்வை அழகு படுத்த வேண்டும் என்னும் பார்வை கதைகள் முழுவதிலும் விரவிக் கிடக்கின்றது.

ஆசிரியர் மென்மை, உறுதி என்னும் இரட்டையின் கூட்டாகப் பெண்மை அமைய வேண்டும் என்கிறார். வன்முறையையும், வக்கிரத்தையும் கடுமையாக வெறுக்கிறார். இவைகளை எதிர்த்து நிற்கிற போர்க் குணத்தை மதித்துப் போற்றுகிறார். உள் அழுகலையும், போலித்தனத்தையும் காறித்துப்புகிறார். முதுமையை மனித குலத்தைப் பெற்று ஆளாக்கி முதிர்ந்த தாய்மையை, மனிதகுலம் மதிக்க வேண்டும் என்கிறார். மதிக்காத மக்களை இகழ்கிறார்.

ஆண்களின் ஆபாச மன அலுங்கலைச் சாடுதல்

'நாய்கள்' என்ற கதையில் பஸ்பயணி ஆபாசப்புத்தகத்தை வாங்குகிறான். ஆரஞ்சுப்பழமும் வாங்குகிறான். ஆரஞ்சுப் பழத்தில் புழு இருப்பதாகக் கூறி பழம் விற்ற பையனை செருப்பால் அடிக்கிறான்.

> ''அடிக்க எழுந்தவன் மடியிலிருந்து புத்தகங்கள் சரிந்து விழுந்தன. விரிந்த பக்கங்களில் கொழுக்கு மொழுக்குனு ஆணும் பெண்ணுமான நிர்வாணங்கள் உரிச்ச கோழிகள், பன்னிகளைப் போல...'' (இந்திரபவாநி, நாய்கள் கதை, ப.12)

என்று சாடுகிறார் ஆசிரியர். ''ஆணின் வெறுப்பு, பெண்ணின் மீதான பலாத்காரம், பெண்ணின் நிர்வாணப் படங்களைக் கண்டு மகிழ்தல் ஆகியன பாலியல் ரீதியான வன்முறைகளின் வெளிப்பாடு களாகும்'' (தேவதத்தா, மேலது ப.22) என்று தீவிரவாதப் பெண்ணியம் கூறுவதையே நாய்கள் கதையில் காட்டியுள்ளார் ஆசிரியர்.

விதவையர் மறுவாழ்வு

'மனிதர்கள்' கதையில் கணவனை இழந்த விதவைப் பெண்ணுக்கு வாழ்வுதர ஆண்கள் முன்வரவேண்டும். திருமணம் செய்து கொண்ட பின் விதவையை குற்றவுணர்வோடு கணவன் பார்க்கக்கூடாது. மாமியாரும் மகளைப்போல விதவை மருமகளை நேசிக்க வேண்டும் என்ற பெண்ணியச் சிந்தனைகளை முன் வைத்துள்ளார் ஆசிரியர்.

> ''நாம சிலதைத் தெளிவுப்படுத்திக்கணும். இந்த ஆல்பம் கண்ணுல படாம வைக்கப்பட வேண்டிய பொருளே இல்லை. உன்னோடயே இருக்கலாம். அது ஒன்னும் தப்பில்லே. கல்யாணமாகி வந்த பொண்ணு அப்பா, அம்மாவை மறந்திட முடியுமா? அதே போலத்தான் இதுவும், மறைஞ்சுபோன உன் கணவர் பற்றிய நினைவுகளை எப்படி துடைச்சுப் போடமுடியும்? உன் மனசிலிருந்து'' (இந்திரபவாநி, மனிதர்காதை, ப.20).

என்று விதவையை மறுமணம் செய்த கணவனே பேசுவதைப் பார்க்கலாம். விதவைப் பெண்களின் மறுமணத்தை இந்தச் சமுதாயம் மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டும் என்பதையே ஆசிரியர் சுட்டியுள்ளார்.

துரியோதனப் பார்வைகளை மாற்றுக

தனியாவா?... கதைபயணம் செய்யும் பெண்களிடம் அன்றாடம் நிகழும் ஒரு சம்பவத்தையே சொல்கிறது. பெங்களூர்க்குப் பயணமாகும் பார்வதிக்கு அருகில் வந்து அமர்ந்திருந்த பெண்,

> *'நாய்ப்பய நாசமாப் போவ, பாம்பு கொத்த' (தனியாவா? கதை, ப.27)*

என முணுமுணுத்துவிட்டு, தனியாவா பெங்களூர்க்கு ராத்திரியிலே போறீங்க என்று கேட்டுவிட்டு நாமக்கல்லில் தன் தந்தையுடன் இறங்கிய சிறிது நேரத்தில்

> *''பார்வதிக்கு வலது இடுப்பில் என்னவோ ஊர்ந்தது போலிருந்தது தட்டிவிட்டாள்... பின்னர் 'கொளுத்த விரல்கள்' என்பதை அறிந்து கொண்டை ஊசியை உருவி, நறுக்கென்று குத்திய பின்... மீண்டும் ஒரு தொல்லை அவளுக்குக் காத்திருந்தது... இருக்கையின் இடுக்கில் அவன் கால்விரல்களை இரு கால் களையும் முன் ஸீட்டில் வைத்து ஈனமாக முண்டுவதில் ஒரு சந்தோஷமா!... நீசப்பிறவி'' (இந்திரபவாநி, மேலது, ப. 29)*

என்று சாபடையடித் தருகிறார் ஆசிரியர்.

> *''ஆண்களின் துரியோதனப் பார்வைகள் நீங்க வேண்டும் அவர்களுக்குப் புதிய மனங்களுடன் புதிய பார்வைகளும் வேண்டும். பாலின வக்ர எண்ணங்கள் தனிமனித மனத்தில் முதலில் நீங்க வேண்டும்'' (மீனாட்சி முருகரத்தினம், பெண்ணியச் சிந்தனைகள், ப. 140)*

என்று பெண்ணியச் சிந்தனைகள் நூலில் கூறப்பட்டவைகளையே தனியாவா... கதையில் ஆசிரியர் சித்தரித்துள்ளார்.

பணிபுரியும் பெண்களின் சமகாலப் பிரச்சனைகள்

போர்க்கொடிகள், தாட்சாயிணி இரண்டு கதைகளுமே கல்லூரி பெண் பேராசிரியர்களின் பிரச்சனைகள் பற்றியவை. 'போர்க் கொடிகள்' பல முகம் கொண்ட கதை. அதிகாரத்துக்கும் உழைப்புக்கும் உள்ள முரண்பாட்டில் முளைத்து நிற்கும் இராதா, இராதாவின் தோழனாய்ப் பக்குவப்பட்டு நிற்கும் அவள் கணவன் மேலும் இப்போர்க்கொடிகள் கதை தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபடும் மனைவியை உற்சாகப் படுத்துகின்ற கணவனை நமக்கு அறிமுகப் படுத்துகிறது.

அதிகாரவர்க்கப் போக்கினை கூண்டோடு எதிர்த்தல்

தாட்சாயிணிக்கதை கல்லூரியில் பேராசிரியைகளை ஒடுக்கி வாழும் கல்லூரி முதல்வரின் அதிகாரவெறியை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இலதா என்ற பேராசிரியை தான் பெற்ற பிள்ளைக்குப் பால் தருவதற்குக் கூட அனுமதிக்காத கல்லூரி முதல்வரின் செயலால், மார்பு தாங்காமல் பாலைக் கீழே பீய்ச்சிவிடும் கொடுமை நிகழ்கிறது. இச்செயல் அனைத்துப் பேராசிரியைகளையும், அலுவலர்களையும் சங்கத்தில் சேர்ந்து போராட வைக்கும் அதிசயத்தை நிகழ்த்தி விடுகிறது.

''மக்கள் ரத்தம் எங்கள் ரத்தம்

....

எங்கள் யுத்தம்மக்கள் யுத்தம்'' (தாட்சாயிணி கதை, ப. 93)

என்று பெண்கள் இடிமுழக்கமிட்டு ஊர்வலம் சென்றதாகவும் தாட்சாயிணி 'அவ்வூர்வலத்தை மாடியில் இருந்து பார்த்து வியப்ப தாகவும் கதை முடிகிறது. இக்கதையில் வரும் கல்லூரி முதல்வரும் துறைத்தலைவரும் ஆண்களாகவே நமக்குக் காட்சித் தருகிறார்கள்.

சிறுமை கண்டு பொங்கி சீற்றம் கொள்ளும் புதுமைப் பெண்

'விடிஞ்சாச்சு'கதை கச்சிதமாக அமைந்து உள்ளது. அக் கதையின் தலைவி பிச்சம்மா வாயிலாக,

''காதல்னு நீ இப்படி அலையுறது சரியில்லே, சரவணா, படிப்பு முக்கியம், வேலே கிடைக்குதோ, இல்லையோ படிப்பைக் கைவசம் வச்சுக்கிட்டாத்தான் எதிர்கால வாழ்க்கை நமக்கு உத்தரவாதம்'' (விடிஞ்சாச்சு கதை, ப. 59)

என்று பெண் முன்னேற்றச் சிந்தனைக்கதை ஆசிரியரே விதைத்துள்ளார்.

''வாழ்க்கைங்கறது அடகுவைக்கிற பொருளா? இல்ல வென்றெடுக்க வேண்டிய உயிர்ச்சாரமல்லொ?'' (மேலது, ப.57)

என்று பிச்சம்மா வாயிலாகப் பேசுவதுடன்,

'சிறுபுத்தி, ஆக்கங்கெட்ட ஆம்பிளைக்கே உரிய சின்ன புத்தி' (மேலது, ப.56)

என்றும் பிச்சம்மா மூலமாகத் தன் மனைவியைச் சந்தேகிக்கும் ஆணினத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் இந்திரபவாநி.

பூவொன்று புயலாகிறது

பிச்சம்மா வேலை செய்யும் அச்சகத்தில் மெஷின்மேனாகப் பணிபுரியும் இராமுடன் முடிச்சுப் போட்டு, தனக்கு வேலைக் கிடைக்காத விரக்தியில் பேசத் தொடங்கிய கணவன் சரவணனை,

> ''பெருக்குமாரைத் தண்ணீரில் நனைத்து நச்சென்று முகம் முதுகு பாராமல் ஆறேழு அடி செமையாக வைத்தாள்... ஆக்கங் கெட்ட கூகை படிக்க வேண்டிய காலத்திலேயும் படிக்கல... இப்படி வாழவேண்டிய நேரத்தையும் பாழாக்கிறயே'' *(மேலது, ப.60)*

என்று வீறுணர்ச்சி கொண்டு விழித்தெழுகின்றாள்.

> ''எவனோடயும் ஓடுற அவசியம் எனக்கில்லே. இப்ப கை யிலே வேலையிருக்கு. மூணுநேரமும் அரைவயித்து கஞ்சியிலே மானத்தோடு வாழ முடியும்'' *(மேலது, ப. 60)*

என்று பிச்சம்மா மேலும் கத்தினாள்.

> ''திருமணம் அல்லது வேலை என்றில்லாமல் வேலை பார்த்துக் கொண்டே குடும்பத்திலும் இருக்கலாம்......பெண்ணுக்கென ஆணைச்சாராத ஒரு பின்புலம் இருக்க முடியும்'' *(தேவதத்தாவின் கட்டுரை, மேலது, ப. 9)*

என்று பெண்ணியத்தின் தாய் எனப் பாராட்டப்படும் பெட்டி ஃபிரைடன் (Betty Friedon) கூறியவைகளையே இக்கதை பேசுகிறது.

நிறைவுரை

பொதுவாக இத்தொகுப்பில் உள்ள பல கதைகள் பெண்ணை ஆண் இன்றுவரை புரிந்துகொள்ளவில்லை. பெண்ணை ஆண் புரிந்து செயல்படுதல் அவசியம். பகிர்ந்து கொள்ளப்படாத அவளது சோகமும் தனிமையும், படிக்கப்படும் போது ஒருவிதமான அழுத்தத்தையும், அவநம்பிக்கையையும், விரக்தி உணர்வையும் உண்டாக்குகின்றன. 'பெண்' நம்பிக்கை கொள்ள இச்சமூகத்தில் என்ன இருக்கிறது என்ற கேள்விதான் நெஞ்சில் நிற்கின்றது.

அரவணைக்கும் பாதுகாப்புச் சுவர்களாகக் கருதப்படும் ஆண்களே பெரிதும் தடைச்சுவர்களாகவே இருப்பது தான் கடந்த மற்றும் நிகழ்காலச் சமூகத்தில் காணத்தக்கவை.

> ''ஆணும் பெண்ணும் சமம் என்பது இருவரும் ஒத்த மதிப்பினர் என்பதையே சுட்டவேண்டும். ஒத்த இயல்பினர் என்பதை யல்ல வேறு சொற்களில் கூறினால், ஆணின் உடலமைப்பும், வலிமையும், இயல்புகளும், சமூகக் கடமைகளும் உயர் வானவை என்றும், பெண்ணின் உடலமைப்பும், மென்மையும், பண்புகளும் சமூகப் பொறுப்புக்களும் தாழ்வானவை என்றும் கருதுவதையே பெண்ணியம் எதிர்க்கிறது'' *(மீனாட்சி முருகரத்தினம், மு.கூ. நூல், ப. 8)*

என்ற திருமதி மீனாட்சி முருகரத்தினத்தின் கூற்றினைச் சமுதாயத் திலுள்ள ஒவ்வொரு ஆணும் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட்டால் பெண்மை போற்றப்படும் நிலை உருவாகும்.

சிற்பியின் 'மௌன மயக்கங்களில்' பெண்ணியம்

சு. அழகிய நம்பி

அய்யநாடார் சானகியம்மாள் கல்லூரி
சிவகாசி

தமிழ்ப் பேராசிரியருலகம் தந்த படைப்பாளிகளுள் ஒருவரான சிற்பி பாலசுப்பிரமணியன் கவிஞராக மட்டுமின்றி, மொழி பெயர்ப்புப்பணி, உரைநடைப்பணி, தொகுப்பாசிரியப்பணி, கவிதை நாடகப்பணி போன்ற பல துறைகளிலும் தன் முத்திரையைப் பதித்தவராக விளங்குகின்றார். அவருடைய கதைக்கவிதையான மௌன மயக்கங்களில் காணப்படும் பெண்ணியச் சிந்தனைகளை ஆய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

மௌன மயக்கங்களின் கதைப்பொருள்

இக்கதைக் கவிதையில் இடம் பெறும் கதைத்தலைவியான அவள் குடும்பத்தேவைக்காக விலைமகளாகின்றாள். அவளுடைய அன்பிலும் அழகிலும் தன்னைப் பறிகொடுத்த ஓர் இளைஞன் அவளை மீட்டுத் திருமணம் செய்துகொள்கிறான். இந்தச் சமுதாயம் விடுதிக்காரர்களும் மீண்டும் அவளைத் துரத்தியதால் அவள் அவனைப் பிரிந்து தன்தாயிடம் அடைக்கலமாகின்றாள். குடும்பத் தேவைக்காகத் தாயே மீண்டும் அந்தப் புதைகுழிக்குள் தள்ள நினைத்ததால், அவள் தன்னைத்தானே மாய்த்துக் கொள்கின்றாள். சிற்பியின் அவன் சமுதாய விடுதலை இயக்கத்தில் சேர்ந்து விடுகின்றான்.

பெண்ணியம்

இந்தியப் பெண்ணியம் சமூக அமைப்புடன் மட்டுமல்லாது சாதி மத அடிப்படையிலும் அமைந்துள்ளது எனலாம். இதனை ''இந்தியப் பெண்ணியம் சாதி மதத்தையும் பார்க்கவேண்டியிருக் கின்றது. அதனால் பெண் சிக்கல்கள் எப்பொழுதும் சமூகச் சிக்கல் களாகவே மாறுகின்றன'' என்பர்.

தொல்காப்பியர் காலத்தில் ஆண் பெண் சமத்துவம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதை,

''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப''

என்ற நூற்பாவின் வழி அறிய முடிகின்றது.

அசோகவனத்தில் சிறையிருந்த பொழுது சீதையிடமிருந்த போர்க்குணமும் ஆண்மையைப் போற்றிய பெருமித உணர்வும் அவளை மீட்டுத் தீக்குளிக்கும்படி இராமன் கூறிய பொழுது மறைந்து போனதை அறிய முடிகின்றது.

நாட்டு விடுதலையையும் சமுதாய விடுதலையையும் பாடிய பாரதியார் பெண்மையை இழிவுபடுத்துவோரை,

''மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்''

என்று பாடிப் புதிய பண்பாட்டுக் குரலைச் சமுதாயத்தின் முன்வைத்தார்.

மௌன மயக்கங்களின் கதை படிக்கப்பட்ட பலராலும், தொட்டுக் காட்டப்பட்ட பழைய கதையாக இருப்பினும் சிற்பி இந்தக் கதையில் நின்று கொண்டு தன் கவிதைக் கரத்தால் எவரும் தொடமுடியாத சிகரத்தைத் தொட்டிருக்கின்றார். இந்தச் சிகரத்தைத் தொடுவதற்குச் சிற்பி எடுத்துக் கொண்ட ஆயுதம் 'உணர்ச்சி வயப்பட்ட காதல்' எனலாம். இதனைச் சிற்பி,

''உன்னை நான்
ஒரு சந்தையில்
கண்டெடுத்தேன்
ஆசையும் மோகமும்
வெறியும் வேதனையும்
பட்டப் பகலிலும் அலைமோதும்
அந்தப் பட்டினத்தின்
இரவுச் சந்தையில்''

என்று குறிப்பிடுவதன் வழி அறிய முடிகின்றது. இதன் வழி அவனுடைய அவள் அறிமுகப்படுத்தப் பெறுகின்றாள்.

இளமைப் பருவத்து உணர்ச்சி

இறைவனால் தொடக்கத்தில் ஒருருவமாகப் படைக்கப்பட்ட உருவம் பிரிக்கப்பட்ட பொழுது அவை ஒன்று சேர வேண்டும் என்ற அவாவின் காரணமாக ஏற்பட்டதே காதலுணர்ச்சி என்பதை,

''இறைவன் ஆணையும் பெண்ணையும் ஒரு காலத்தில் ஒருருவமாகவே படைத்தான். ஆயின் இவ்வுருவத்தின் போற்றல் கண்டு பொச்சாப்புக் கொண்ட தேவர்கள் ஆணையும்

பெண்ணையும் பிரித்து விட்டனர். இதனால் பிரிந்த பிம்பங்கள் ஒன்று கூடும் ஆசை ஏற்படுகின்றது. அதுவே காதலுணர்ச்சி''

என்று கூறுவதன்வழி அறிய முடிகின்றது.

கட்டுப்படுத்தப்பட்ட பாலுறவு விருப்பால் விளைவதே காதல். ஆனால் பாலுறவுக்கு அப்பாற்பட்ட காதலும் உண்டு என்பதைச் சிற்பி தன் மௌன மயக்கங்களில் படைத்துக் காட்டி யுள்ளார். இளமைத்துடிப்பின் காரணமாக ஓர் ஆணுக்கும் விலை மகளுக்கும் ஏற்பட்ட காதலால் சிற்பியின் அவன், அவளைத்தன் மௌன மயக்க மதுமலர்த் தொகுப்பு என்று கூறுவதை அவர்,

''பரஹம்சர்களுக்குப்
பெண்ணின் உடல்
ஆன்மாவின் ஆலயம்!
காளிதாசர்களுக்குக்
கடவுளின் தரிசனம்!
வக்கிரகங்களுக்கு
கழுகலகுத் தசை!
பெண்ணே! எனக்கு நீ
மௌன மயக்க
மதுமலர்த் தொகுப்பு!''

என்று கூறுவதன் வழி அறிய முடிகின்றது.

விலைமகளைக் குலமகளாக்கியமை

விலைமகளைத் தனியொரு முத்திரையுடன் ஒதுக்கிவைக்கும் சமுதாயம் அந்தச் சூழ்நிலைக்கு அவள் ஆளாக்கப்பட்டதை ஆராய்வது இல்லை. ஆனால் அதற்கான காரணத்தையும் தீர்வையும் நோக்கிப் பயணப்பட்டுப் புதியதொரு கருத்தையும் வைத்துள்ளமையை,

''நான்
தற்காலிகமாக
விலைகொடுத்து வாங்கியது
ஒரு பெண்ணின்
உடலை அல்ல
அழுக்கின் ஒரு துளி தூசும்
படியாத
ஓர் ஆத்மா''

என்று கூறுவதன் வழி அறிய முடிகின்றது.

தொழிற் சங்கத்தலைவன் அவனிடம் பரத்தையான அவள் இரக்கத்திற்கு உரியவளே தவிரக் குடும்பத்திற்கு உரியவளா என்று வினவிய பொழுது அவன் கூறும்,

''எனக்கு அவளிடம்
நம்பிக்கை இருக்கிறது
நாளைக்குக் கிழக்கில்
சூரியன் வரும் என்று
எவ்வளவு நம்புகிறேனோ
அவ்வளவுக்கு''

என்ற வரிகள் அவள் மீது அவன் கொண்ட ஆழமான அன்பைப் புலப்படுத்துகின்றது எனலாம்.

வாழ்க்கையை எதிர்நோக்க முடியாத நிலை

நல்ல குடும்பம் ஒன்று நலிந்ததால் நடுத்தெருவிற்கு வந்தது. அதனால் தீமையை எதிர்த்துப் போராட முடியாததால் தீமைக்கு அடிபணிய நேரிட்டது. அதன் நிலையைச் சிற்பி,

''அப்பா ரயில் விபத்தில்
இறந்த போது
அம்மா நகைகளை விற்றாள்
அப்புறம் காய்கறி விற்றாள்
தலையில் சுமந்து விறகு விற்றாள்
பிறகு?
கற்பை விற்றாள்
எங்களுக்குக்
கால் வயிறு நிரம்பியது''

என்று கூறுவதன் வழி அறிய முடிகின்றது.

கற்பு கற்பிக்கப்பட்ட நிலை

கற்பு என்ற ஒழுக்கம் பேசப்படும் பொழுது அதைக் காலங் காலமாகச் சமுதாயம் பெண்களுக்குரியதாக மட்டுமே வலியுறுத்தி வருவதைக் காண முடிகின்றது. அவ்வொழுக்கத்தை இருபாலருக்கும் பாரதி பொதுவாக்கிக்

''கற்பு நிலையென்று சொல்வந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்''

என்று பாடிப் புரட்சித் தீயை மூட்டினார் எனலாம்.

மௌன மயக்கங்களில் வரும் அவன் குற்றம் இல்லாத குணக்குன்று அல்லன். வாலிப முறுக்கில் வாடகைக்குப் பெண் தேடிப் போனவன் எனினும் அவளைத் தன் இல்லறத்திற்கு ஏற்ற ஒளி விளக்காக ஆக்கியவன். இல்லற வாழ்க்கைக்கு அவள் வந்த பிறகும் அவளைச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைச் சிற்பி,

''எவளோ ஒருத்தி
வீட்டுக்காரி ஆகிவிட்டாள்
என
உலகம் நினைக்கிறதோ''

எனப் பாடுகின்றார்.

தீர்வை நோக்கிய பயணம்

இக்காவியத்தில் வரும் அவன் விலைமகளிர் விடுதியிலிருந்து மல்லிகாவை மீட்டுத் திருமணம் செய்து கொள்கிறான். எனினும் மல்லிகாவின் அவ்வாழ்க்கையை அவளுடைய தாயே ஏற்றுக் கொள்ளாமல் அவளை மீண்டும் பரத்தமைப் புதைக்குழிக்குள் தள்ள நினைத்து,

''என்னடி புள்ளே
மரியாதையா தொழிலுக்கு வந்துரு,
இல்லே - அவன் - உன் புருஷன்
தெருவிலேயோ சாக்கடையிலேயோ
செருகின கத்தியியோட கழுத்தைத்
திருகிக் கிட்டுக் கிடப்பான்''

என்று மிரட்டுகின்றாள், இந்தச் சிக்கலிலிருந்து விடுபட ஒரே வழி சாவுதான் என்று முடிவு செய்த அவள் தன்னைத் தானே மாய்த்துக் கொள்கின்றாள். அறத்துப்பால் வழிவாழ நினைத்து, பொருட்பாலால் புறக்கணிக்கப்பட்டதால், காமத்துப்பாலின் பட்டியலில் இருந்த அவள் கல்லறையில் தான் காசு வாங்காமல் உறங்கமுடியும்' என்ற உணர்வுதான் சிற்பியைப் பரத்தமையை நீக்கிப் பெண்மையை மீட்க மௌன மயக்கங்களைப் பாடத் தூண்டியது எனலாம்.

தொகுப்புரை

சிற்பி படைப்புலகில் புதிய சிந்தனையைப் படைக்க விரும்பி அதை நிறைவேற்றி உள்ளார். எனினும் அதே சிந்தனையுடன் கதைக்கவிதையை அவரால் முடிக்க இயலவில்லை எனலாம். அதற்குக் காரணம் ஒரு பெரிய கவிஞனால் கூடச் சமுதாய மதிப்பு களை மீறி நடக்கமுடியாத நிலையே என்று எண்ணத் தோன்றுகிறது. விலைமகளைக் குலமகளாகப் படைத்தது மௌன மயக்கங்களின் சிறப்பாகும். இக்காவியத்தில் தீர்வை நோக்கி அவர் பயணப் பட்டிருந்தாலும் அதற்கான தீர்வை முழுவதுமாகக் கூற முடியாத நிலையிலேயே அவர் உள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

பெண் விடுதலையும் மாதர் மறுமணமும்

வீ. கோபால்

யாதவர் கல்லூரி
மதுரை - 14

இந்திய இதழியல் துறையின் தந்தை என்று போற்றப்படும் இராசாராம் மோகன்ராய் என்பவரே பெண் விடுதலைக்கு முதலில் குரல் கொடுத்தவர். அவர் இதழ்களுக்குச் சுதந்திரம் வேண்டிப் போராடியது போலவே, அக்காலத்தில் (19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்) பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த கொடூரமான கட்டுப்பாடுகளை எதிர்த்துப் போராடியவர். 20-ஆம் நூற்றாண்டின் முப்பதுகளில் நீலாவதி சுப்பிரமணியன் 'பெண்களும் தொழிலும் பெண்களும் தொழிலாளிகளே' என்ற கட்டுரையும் (புரட்சி 29.04.34) முத்துலெட்சுமி ரெட்டி கொண்டு வந்த தேவதாசி ஒழிப்பு மசோதாவும் (Anti Nautchi Bill) அதை ஆதரித்து குடி அரசு இதழ் எழுதியதும் பெண்கள் விடுதலை கிளைவிட்டு மரமாக வளரத் தொடங்கிய நிலையில், 1936-ஆம் ஆண்டு மு. மரகதவல்லி அம்மாள் 'மாதர் மறுமணம்' என்ற மாத இதழைத் தொடங்கிக் காரைக்குடியிலிருந்து நடத்தி வந்தார். இந்தப் பின்புலத்தில் பெண் விடுதலையும் மாதர் மறுமணமும் என்ற இக்கட்டுரை சில வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்வதாக அமைகிறது.

மகளிர் இதழ் தோற்றம்

திருச்சியிலிருந்து 1860-ஆம் ஆண்டில் 'அமிழ்தவசனி' என்ற வார இதழ் திருமதி அமிர்தபாபு என்ற பெண்மணியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்ததாகச் சோமலெ குறிப்பிடுகிறார். (தமிழ் இதழ்கள், ப.lxxiv.......) ஆனால் 1892-இல் அமெரிக்காவிலிருந்து 'லோக்' என்ற பெயரில் பெண்களுக்காகத் தோன்றிய முதல் இதழ் வெளிவந்ததாகத் தினமணி கதிர் கூறுகிறது. (2.5.99, ப. 27). சமூகத்தின் சரிபாதி யாகவுள்ள பெண்களுக்குக் கல்வி போதிக்கும் முயற்சி 19-ஆம் நூற்றாண்டில் கிறித்தவர்கள் தொடங்கினர். அடுத்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் அம்முயற்சி தொடர்ந்தது. இதன் விளைவாக இந்தியத்தாய் (1921), சிந்தாமணி (1924), தமிழ்மாது (1928) போன்ற மகளிர் இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. இவ்விதழ்களைத் தொடர்ந்து

மாதர்மறுமணம் (1936), கிரஹலஷ்மி (1937) என்ற மகளிர் இதழ்களும் தமிழகத்தில் வெளிவந்து, சமூக மாற்றத்திற்கு வழிவகுத்திருக்கின்றன.

மாதர் மறுமணம்

அக்காலப் பெண்களின் நிலைமை மாதர் மறுமணம் இதழ் கொண்டு உணரலாம். அவ்விதழில், 'தென்னிந்தியப் பெண்கள்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள செய்திகளைக் காண்போம்.

சென்னைக் கிறித்துவப் பெண்கள் கல்லூரித் தலைமை ஆசிரியர் மிஸ்.ஈ. மாக்டகல் கொழும்பில் பேசியபோது தென்னிந்தியப் பெண்கள் கல்வியபிவிருத்தி குறித்துப் பேசியுள்ளார். ''சமூகக் கட்டுப்பாடும் பால்ய விவாகமும் பொது ஜனங்களின் வறுமையுமே தென்னிந்தியாவில் பெண் கல்விக்குத் தடையாக இருக்கின்றன வென்று ஸ்பஷ்டமாகக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். உயர்ந்தவர்களென்று கருதப்படும் சமூகத்தில் பால்ய விவாகம் தலைவிரித்தாடுகிறது. தாழ்ந்தவர்களென்று நினைத்திருப்பவர் படிப்பதைத் தங்கட்கு புறன்பானதென்று கருதுகின்றனர். அவர்கள் சமூகமானது பெண் படிப்பதனால் கெட்டுப்போகுமென்று கருதி யிருக்கின்றனர். செல்வமுடையவர் படிப்பை அலட்சியப்படுத்து கின்றனர். படிப்பை விரும்புபவரிடம் உணவுக்குக்கூடப் பொருளில்லை. அப்படிப்பட்ட ஏழைகள் தங்கள் குழந்தைகளை யெப்படிப் பள்ளிக்கனுப்ப முடியும்? மாடு மேய்க்கவும் பிள்ளை களை வைத்துக் கொள்ளவும் எங்காவது மாதம் ஒன்றிரண்டு சம்பளத்துக்கு அமரவும் வழிப்பார்க்கவேண்டிய நிலைமையேற் படுகிறது. இவைகட்கு வழியேற்பட வேண்டியதவசியமாக இருக்கிறது''. (மாதர்மறுமணம் (1937), மலர் - 2, இதழ் - 2, பாத்திராதிபர் குறிப்புகள் ப. 41) என்று அன்றைய நிலைமைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

நம் நாட்டு மங்கையர் நிலைமையும் மறுமண உரிமையும்

சோம. சட்டநாதன் கொழும்பிலிருந்து எழுதிய கட்டுரையில், ''....மற்ற நாடு விஞ்ஞான சாஸ்திர வெற்றிகளால் நூதனமான அதிசயங்களைக் கண்டுபிடித்து இயற்கையை வெற்றி பெறுவோம் என்று திமிர் கொள்கையில், நாம் மட்டும், மூடப்பழக்க வழக்கங் களிலே மூழ்கி அறிவுச் சுடரை அகற்றி வாழ்வதை ஆண்மை என நினைப்பது அறிவின்மையாகும்.

இம்மூடப்பழக்க வழக்கங்களில் தலைசிறந்து விளங்குவது நாம் மாதர்க்கிழைக்கும் கொடுமைகளேயாகும். பெண்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுதலையடையாதவரையில், நாம் சுதந்திரம் பெறமுடியாது. பெற்றோர்களும் அதை நிலைநாட்ட முடியாது

உலக சிருஷ்டியில் ஓர்பெரும் பங்கு கொண்டவரும், உலக சிரேஷ்டர்களின் நற்குண நல்நடத்தைப் பயிற்சிக்கு ஆதாரம், அன்பு, பொறை, கருணை, ஈகை, இரக்கம் முதலிய அருங்குணங் களுக்கு உறைவிடமாகிய நம் தாய்மார்களை அடிமைகளாக நடத்துவது எவ்வளவு இழிவு என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாதர்கள் நம் சமுதாயத்தில் மிகவும் வெறுக்கத் தக்கதோர் நிலைமையிலிருக்கிறார்கள் என்பது யாவருமறிந்த விஷயம்.

''மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்''

என்ற நம் பாரதியின் வீரமுழக்கம் நம் இளைஞர்கள் மனதில் எழவேண்டும்.

ஓர் ஆங்கிலேயர் ''இந்தியர்கட்கு காதலின் பொருள் தெரியாது'' என்று கூறினார். இக்கூற்றை ஆறாத்துயரத்துடன் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாகவேயிருக்கிறோம். அறியாப் பருவத்தில் நம்பாலர்கட்கும், சிறுமிகளுக்கும் மணம் செய்துவைப்பதினும் கொடியதொன்று உலகில் இல்லை என்று ஈண்டு வலியுறுத்து கின்றேன். இதற்கு மாறாக எத்தகைய காரணங்களும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையல்ல. விளையாடும் பிராயத்திலும், கல்வி கற்கும் வயதிலும் அவர்களுக்கு விவாகம் செய்வித்துப் பிள்ளைபெறு என்று கூறும் நம் நாட்டாரின் புத்தியை என்னென்று கூறுவது? இதன் விளைவால் தம்பதிகள் பிராயமடைந்ததும், ஒருவரை ஒருவர் காதலிக்காமல், மணம் ஒருதலைக் காதலாக முடிகிறது. வாலிபர்கள் கூத்தியார்கள் வீட்டையடைகிறார்கள். நங்கையர்கள் நெஞ்சுருகி, கண்ணீரை ஆறாகப் பெருக்கி நோகிறார்கள். ஆதலின் நாம் முன்னேற்றமடைவதற்கு முதன்முதலாக வேண்டப்படுவது பெண்கள் விடுதலை... காதல் மணம் அவர்களின் உரிமைப் பொருளாகும். அதில் பிறர் தலையிடுவது வீண்வம்புத்தனமாகும். வேண்டுமானால் பெற்றோர்கள் இவ்விசயத்தில் ஆலோசனைகள் கூறலாம்.

....மங்கையர் மறுமணம் புரிதல் தகாதெனின் இக்கட்டுப்பாடு ஆண் உலகிற்கும் பொருந்த வேண்டியது அவசியமன்றோ? நம் நாட்டில் ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியாகயிருந்து வருகிறது. இதைத் தகர்த்தெறிந்து இருவருக்கும் ஒரே நீதியாகவும் பெண்களை அடிமைக்குழியிலிருந்து விடுவித்து அவர்களுக்கு நம்மைப்போல் சம உரிமை கொடுத்து அவர்களை ஆதரித்தால் தான் நாம் சுயராஜ்யமடைய முடியுமென்பது எனது அபிப்பிராயம்'' என்று எழுதியுள்ளார். (மாதர் மறுமணம், மலர் - 2, இதழ் - 2, பக். 17-20)

இக்கட்டுரையிலிருந்து அக்காலத்தில் பெண்களுக்கு இழைக்கப் பட்ட தீங்குகளும் அவற்றை நீக்கினால்தான் சுயராஜ்ஜியத்தையே அடையமுடியும் என்ற தன்னுடைய எண்ணத்தையும் வெளிப் படுத்தியுள்ளார்.

மேலும்,

''வீரப்பெண் மக்கள் விடுதலை முழக்கம்''

(மாதர் மறுமணம், மலர்-2, இதழ்-2, ப. 21)

சுத்தமல்லி, அ. சிதம்பரநாத பாவலர்

''பாரதியும் பெண் விடுதலையும்'' (மேலது, ப. 33-36)

என்ற தலைப்பிலான கட்டுரைகளும் மாதர்மறுமணம் இதழில் இடம் பெற்றுள்ளன.

துணையிழந்தாரை... மணப்பது புண்ணியம் என்ற வாசகம் இதழில் பல இடங்களில் காணப்பெறுகின்றது.

மாதர் மறுமணத்திற்கு மடாதிபதிகள் ஆதரவு

சீனந்தல் திருமூலாரண்யம் விஸ்வப்ராம்ஹண மடாதிபதி குருஸ்வாமிகள், செஞ்சி தாலூக்கா ஆலம்பூண்டிக்கு (21.7.27) பிபவ-ஸுஆடி. மீ 6மீஉ-யில் விஜயம் செய்த சமயம் அடியிற் கண்டவாறு கையொப்பமளித்திருக்கிறார்கள்.

விஷயம்

சீனந்தல் திருமூலாரண்யம் விஸ்வப்ராம்ஹண மடாதிபதி ஸ்ரீஜகத்குரு சிவலிங்காச்சார்ய குருஸ்வாமியர் ஆதினம், சிவ சங்கராச்சார்ய குருஸ்வாமியார் இந்த ரஜஸலாந்தர் விதவா விவாஹ விசயத்தில் எனக்கு மிக்க திருப்தியே. மேலும் இதற்கு விருத்த பாராஸர்யத்தில் ஆதாரமிருக்கின்றது. வேண்டும்போது அனுப்ப சித்தமாயிருக்கின்றோம்.

இங்ஙனம்

(கையொப்பம் நாகாபாஷையில்)
சிவசங்கராச்சாரிய குருஸ்வாமிகள்
21. 7. 27

ஆலம்பூண்டி
விஜயம்
பிரபவ ஸு ஆடி மீ 6உ

(மாதர் மறுமணம், ப. 12)

மாதர் மறுமணத்திற்கு மடாதிபதிகளின் ஆதரவும் இருந்ததை அறிய முடிகிறது.

பெண்ணின் பரிதாபம்!

> "....ஓர் இல்லத்தில் தந்தையும் தாயும் தம்மை மறந்து இன்ப வாழ்க்கையிலீடுபட்டிருக்க ஓர் மூலையில் மயங்கி நின்று இக்காட்சியைக் கண்ணெதிரே காணும் மங்கையின் மனம் மாறுபட்டுக் கூடாவொழுக்கங் கொள்ளக் கருதுவது இயற்கைக்கு புறம்பல்ல, கூடாவொழுக்கமடைந்து கட்டழிந்து சமூகத்தின் நன்னிலைக்குப் பங்கங் காணுவதைவிட அவர்கள் புதுமணம் புரிந்து புனித வாழ்க்கை நடத்துவது மேலன்றோ?"

என்று சீர்திருத்தக்காரர் எழுதியிருக்கிறார்.

> "பெண் மக்களுக்கு சொத்துரிமை அளித்தால் நிச்சயமாகவும் விதவை மணத்திற்கு ரொம்ப அனுகூலமாயிருக்கும். ஏராளமான சொத்து பெண்களுக்கிருக்குமானால் அந்த பெண்கள் விதவைகளானாலும் வலுவிலேயே மறுகல்யாணம் செய்ய முன் வருவார்கள்".

இம்மணத்தைப் பொது ஜனங்கள் மிகவும் பாராட்டி வருகிறார்கள்.

(நிகழ்ச்சிகள் என்ற தலைப்பில் செய்தி வெளியாகியுள்ளது. பக்க எண் இல்லை) இன்று அதிகமாகச் சொத்து கொடுத்தாலும் அந்தச் சொத்தைப் பங்கிடப்பலர் வருகின்றனர். அந்தச் சொத்துக்குரிய பெண்ணுக்குப் பொறுப்பேற்க யாரும் முன் வருவதில்லை.

முடிவாக, இன்றைய சமூகநிலையை மனத்தில் கொண்டு இக்கட்டுரையே வேண்டுவதில்லை என்று கூட எண்ணலாம். ஆனால், இக்காலத்திலும் பல இடங்களில் பெண்களுக்கு அத்தகைய கொடுமை நிகழ்வதை உணர்ந்த கட்டுரையாளர் இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

1936-ஆம் ஆண்டு வெளிவந்த "மாதர் மறுமணம்" மாத இதழ் பெண்களுக்கு விடுதலை மட்டும் வேண்டாது, கணவனை இழந்த பெண்களுக்கு மறுமணம் வேண்டும் என்பதை வலியுறுத்தவே, இவ்விதழை மு. மரகதவல்லி நடத்தியிருப்பதாகத் தெரிகிறது.

Ezekiel and the Feminine Figure : A Reading of his Poetic Erotica

V. Kavitha Elzie
Sarah Tucker College
Palayamkottai - 627 007

This longing is for nakedness:
Soul naked, body naked. Why
Is every contour strange, unknown?
("Nakedness I" of Sixty Poems - 1-3)

The authentic and articulate Indian-English poet in Ezekiel has been widely scrutinized by most critics in terms of his endless search for identity, harmony and commitment in life and poetry; but there does exist in this "poet-rascal-clown" a keen interest and quest for the female anatomy, which has not gained much critical attention so far. So this paper seeks to highlight how this "boy of meager bone" grew up to be a passionate admirer of female nudity.

Literature across the globe has projected the image of woman in terms of mother, wife, mistress or object of sex. Ezekiel's poetry too dwells on all these roles of women in general. But it particularizes those parts of the female body which fire up both his loins and lively imagination. His male-orientated tradition makes him view woman as a "beast of sex," as he characterizes her in "Love Poem" of *The Exact Name*. The religious Jew lurking in him takes "the tragic view" that redemption is possible only "When the female animal no longer/ Haunts the bed in flesh or dream" ("Something to Pursue" of *A Time to Change* - 123-124). K.R.S. Iyengar rightly observes that Ezekiel is painfully and poignantly aware of the flesh, its insistent urges, its stark ecstasies, its disturbing filiations with the mind" (657).

One could find in Ezekiel's second, fifth and last two collections many poems where he explicity, or rather exultantly,

expatiates on the delights derived from the feminine figure. The jouissance that he experiences at the sight of lusciously lovely women leads him to claim the Sanskrit Poets of ancient India to be his "poetic ancestors." He gleefully visualizes their utter lack of inhibitions :

How freely they mention
breasts and buttocks.
They are my poetic ancestors
Why am I so inhibited?

("Passion Poems III" of Hymns in Darkness)

Had he gone through the ancient Tamil Poems of the Sangam age, he would have accepted their authors too as his "poetic ancestors." One could speculate on how Ezekiel read and rejoiced at the text authored by Vatsyayana. *The Kama Sutra* defines *Kama* as "the enjoyment of appropriate objects by the five senses of hearing, feeling, seeing, tasting and smelling, assisted by the mind together with the soul" (64). Ezekiel strikingly portrays how one experiences *Kama* and establishes one's sensuous contacts as one "see the female image/On the lonely pillow in the single room"; or relishes "the smell of flesh," or is able to "Hear the throb of loins in love"; or "her breasts in adoration" and leads "her there/rom nakedness to nudity" or as one learns "to kiss" ("The Female Image" of *Sixty Poems* 15-16; "At the Hotel" of *The Third* 8; "Lines" of Sixty 4; "Nudes 1978 VI" and "Nudes 1978 III" of *Latter-Day Psalms* 11-14;1).

In "Conclusion" of *The Third* Ezekiel quips, "The true business of living in seeing, touching, kissing/The epic of walking in the street and loving on the bed" (20-21). "The sensual form" of woman, Ezekiel feels, "may serve to calm/The senses and keep the darkness pure." He goes on to say "Certain vases and women, however expensive,/Fill the animal heart with wonder and warmth". He is so susceptible to feminine charms that "No moral law can fill the void/Deaf and blind to all is appetite" ("Declaration" of *TheThird* - 9-20).

Ezekiel has been acclaimed as the liberator of Indian English poetry from its romantic past and its puritanical trappings. His attempt to call a spade a spade and his struggle

to discover his self in the midst of his cultural disorientation and guide his fellow-poets have placed him in a modernist context; but his Dionysian instinct to seek the delights of the flesh with utter abandon makes him something of a postmodernist.

When the Apollonian modernist suppresses his real self, he finds woman to be a temptress; but when the ecstatic aesthete in him surfaces, he views woman as the Florentine painters or the Greek sculptors of old or the Indians of Vatsyayana's days did.

How Ezekiel views the nude female figure with elan and maps it with panache could be seen again in poems like "Motives" which begins thus:

It's easy to remember
your body in its nakedness.
I dwell on it
as on a landscape
or a beloved painting.
Not the total form only
but the details interest me.
My motives are sexual,
aesthetic and friendly
.in that order, adding up
to bed with you. *(The Exact Name 1-11)*

He details the features that captivate him,

The eyes are large,
so are the breasts
(..........)
Your thighs are full and round,
thin and flat I'd love them too. *(15-20)*

As the widely quoted critic Bijay Kumar Das points out, "he presents sex and sensuality in a daring manner in his "Passion Poems" and "Nudes 1978' disregarding puritan criticism" (128-129). In the poems Das has referred to, one could find the naked human body in its varying erotic moods. Ezekiel shows in them the agile partnership of both man and woman in their humour of *Kama*. The man in "Monsoon" says:

You arrived
with sari clinging

to your breasts and hips.
I put a kiss upon your lips.
No part of you
could hide
as you dried. (*"Passion Poems II"*)

"On Giving Reasons" runs thus :

She gave me
six good reasons
for saying No,
and then
for no reason at all
dropped all her reasons
with her clothes. (*"Passion Poems IV"*)

Ezekiel responds with artistic ardour to the sight of female nudity in "Nudes 1978". In the first poem he writes, "I am given up to nakedness, a pleasure in itself, doubled/now by the nakedness of the other" (8-10). He is in the seventh heaven when their limbs lie "intertwined" but ironically enough, they do not lose their identities, for he says, "She and I,/limbs intertwined, retain our names" (13-14). In "Nudes IX" he transcends the barrier of form and finds the essential soul of woman "always human" in her "naked/unposed poses, resisting form" (12-14). It is this dual instinct to be at once a modernist with a postmodernist impulse which prompted William Walsh to write :

> *One is aware of a double impulse in the poet, which on the one hand keeps him at a distance from his environment as he clutches his private history and aspiration and which on the other, by the painful act of will, reconciles him to his environment. (qtd. in Das 123)*

Inder Nath Kher is of the view that there is "a suggestion concerning the possible relationship between the female form and poetic creation" (74). Poetic creativity is seen to be inspired by the female figure. "Nudes IV" could be quoted to round off this paper to prove how much more "fleshly" than the Pre-Raphaelites Ezekiel is :

Sensuality-
a word that stands by itself, or

rather, lies down and stretches out.
You touch it, smell it, give yourself
to every movement, every stressed
and unstressed syllable that sounds,
resounds in this nude-body-mood.
You listen to its melody-
sensuality.
Unsuspected paradoxes bubble
from the depths; you lose your balance,
grope, grab and groan, but where are you?
Identified obsessive in
this hunger-making paradise.

References

Primary Source

Ezekiel, Nissim, Collected Poems, 1952-1988. Delhi: Oxford University Press, 1994.

Secondary Sources

1. Das, Bijay Kumar. "A Modernist Poet or a Post-Modernist?: A Study of Nissim Ezekiel's Poetry". Mapping Cultural Spaces: Postcolonial Indian Literature in English - Essays in Honour of Nissim Ezekiel. Ed. Nilufer E. Bharucha and Vrinda Nabar. New Delhi: Vision Books Pvt. Ltd., 1998. 121-131.
2. Iyengar, K.R. Srinivasa. Indian Writing in English. New Delhi: Sterling Publishers Private Limited, 1985.
3. Kher, Inder Nath. "Beside the Final Void: Nissim Ezekiel's, Sixty Poems", The Toronto South Asian Review 4.2 (1985): 74-88.
4. Vatsyayana. The Kama Sutra of Vatsyayana. Trans. Richard F. Burton. New Delhi: Penguin Books, 1993.

Autonomy of Women Through Education : A Study of relationship between level of autonomy and level of education among women

T. Kamali

Mother Teresa Women's University
Chennai - 15

The Word, Autonomy includes the notion of self governing. Independent and free Autonomy and separatism are fundamentally different wheras autonomy comes from a position of strength separatism comes from a position of fear. When wer are turly autonomous we can deal with other kinds of people, a multiplicity of issues and with differences, because we have formed a solid base of strenght through education

It is also true that the illiterate women from rural areas practically have either low or no autonomy in decision making. They have to follow the instructions given by the elders in the family or breadwinner of the family unquestioningly. Such as state of life functioning may possibly lead to dissatisfaction among the women. High academic and professional qualification of women can raise their status in society and make them autonomous. Thus a positive correlation exists between level of education and level of autonomy among women.

In the present study the investigator has attempted to find out the level of autonomy among women in decision-making and its relationship with their level of education.

Objective of the Study

- To identify the areas in which autonomy is provided for women.
- To study the extent of women's autonomy in decision making.

- To study the level of education among women.
- To study the nature of relationship between women's autonomy in decision making and level of education.

Methodology

Sample of the Study

The sample consists of 40 families, which were drawn randomly from the houses of Annamalai Nagar. Out of these 40 families one woman from each family was randomly selected. Thus a total of 40 women constituted the sample of the present study.

Tooinstrument Used

The investigator used the following tool to collect data from the sample.

(a) Autonomy in decision - making questionnaire. This questionnaire which was used to measure the autonomy provided to women in decision making was developed by Ilyas Hussain and Seema Rani of Jamia Milia University, New Delhi. This questionnaire measures seven dimensions of decision making viz. academic matters, discipline of children financial matters, life matters, planning and facilities, Routine activities, family matters and important occasions.

Hypotheses

The following null Hypotheses will be tested.

- There is no significant differnce in decision making between highly educated and educated women.
- There is no significant relationship exists between autonomy in decision making and level of education among women.

Results and Discussion

The table I show that the mean value on Autonomy Questionnaire was found to be 84.67, which lie in-between 64 - 96. It clearly reveals that the sample of women has partial autonomy in making decisions in their life.

Table - 1. Mean and standard deviation of scores on autonomy in decision making and level of Education.

Group	N	Autonomy in decision making		Level of Education	
Women	40	M	S.D.	M.	S.D
		84.67	14.4	22.96	3.72

N = Number of women

S.D. = Standard deviation

M = Mean

Similarly for the mean value of level of education score is 22.96, which lies under the range of 80-90 percentiles representing a well-educated group. Thus the women of present sample are educated women.

From the table 2 it is clearly revealed that out of total population of 40 women from 40 families 19 women scored above 96 and thus these women were fund to have high autonomy. On the other hard 26 women out of 40-showed good performance on autonomy scale and they scored 64-96 and thus they have partial autonomy in decision-making. On the other hard 5 women showed average performance on the questionnaire and scored below 64. This revealed that these women have nominal autonomy in decision making.

Table - 2 Percentage of women at different level of autonomy

Autonomy in Decision Making	Percentage of Women
Highly	20%
Partially	68%
Nominal	12%

The Table - 3 reveals that out of 40 women sampled in the present study 68% are those who have post graduation and the level of education is high. Whole the level of education of 14 women was graduation. The mean score of 12 percent women indicate that they are in the level of school final or plus two while 6 percent of the sampled women are having primary level of education.

Table - 3 Percentage of women in different levels of Education

Level of Education	Percentage of women
P.G. Level	68%
Degree Level	14%
+2 or school final	12%
Primary level	6%
Illiterate	Nil

Table - 4 shows that on the autonomy of decision making the highly educated and literate women have almost equal mean scores, which indicates that both the groups of the sample have partial autonomy.

Table - 4 Performance of highly educated and educated women on autonomy in decision making.

Groups	N	M	S.D.	't' value	Remarks
Highly Educated Women	21	84.90	14.6	0.37	Not Significant
Educated Women	19	84.35	14.2		

Hypotheses is '1' There is no significant difference in autonomy in decision making between highly educated and educated women. Hence the null Hypothesis is accepted.

Table - 5 Relationship between autonomy in decision making of women and level of education.

Variables	N	M	S.D.	Co-efficient of correlation
Autonomy	40	84.76 0.67	14.4	0.2
Education	40	22.96	3.72	

The analysis of the data from the table 6 revealed that there is positive relation between level of education and autonomy in decision making among women.

Hypothesis 2 : Since there is positive relationship between autonomy in decision making and level of education among women. The null Hypothesis is rejected.

Conclusion

Women must have a positive role in decision-making. This is possible only if they have autonomy in life. Autonomy or power of decision-making is generally offered to educated population only in all walks of life through the ages. For securing autonomy and retaining it, exercising autonomy in life it is essential to get education. Education pay women not only autonomy but also give them a place of honors and status in the society. Once autonomy has been provided to women they will consider themselves as an important organ of the set up. This will eventually lead them to think and do for the betterment of society.

விடுதலைக்கு முன் தலித் புனைகதைகள்

க. சேகர்

மாநிலக் கல்லூரி
சென்னை – 5

காலம் காலமாக அமுக்கப்பட்டு, எல்லாமே பறிக்கப்பட்டு நிர்வாணிகளாய் ஆக்கப்பட்டவர்கள் தலித்துகள். இவர்களின் வாழ்க்கையைச் சொல்லி, விடுதலை வேட்கையை ஏற்படுத்துவது தலித் இலக்கியம். தலித் இலக்கியம் குறித்த சொல்லாடல்கள் கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழ் மொழியில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றன. அண்மைக் காலங்களில் தலித் இலக்கியம் பற்றிய பேச்சுக்கள் விவாதத்திற்குள்ளானாலும், தொடக்க காலத்தில், அதாவது விடுதலைக்கு முந்தைய காலத்திலிருந்தே தலித்துகள் பற்றிய படைப்புகள், தமிழ் மொழியில் உள்ளன. விடுதலைக்கு முன் தமிழ் மொழியில் தோன்றிய தலித் புனைகதைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

தொடக்ககாலத் தலித் புனைகதைப் படைப்பாளர்கள்

தற்காலத்தில் தலித்துகள் தலித் இலக்கியத்தைப் படைப்பது போல் விடுதலைக்கு முன் தலித்துகள், தங்களைப் பற்றிய படைப்புகளைப் படைக்கவில்லை. சமூகத்தின் விளிம்பிற்கு வெளியே தள்ளப்பட்ட இவர்களுக்குக் கல்விஅறிவு மறுக்கப்பட்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில் பிற சாதியினர் இவர்களுடைய வாழ்க்கையைத் தம் படைப்புகளில் படைத்துக் காட்டினர். பாரதி, மாதவையா, கு.ப.ரா., புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, இராஜாஜி போன்றோர் தலித் மக்களின் வாழ்க்கையைப் படைப்புகளாக்கினர்.

தலித் சித்தரிப்பு

விடுதலைக்கு முன் தோன்றிய படைப்புகளில் தலித் மக்களின் வாழ்க்கை காட்டப்பட்டு இருந்தாலும், அந்தப் படைப்புகளில் இவர் களின் வாழ்க்கை, கீழ்க்கண்ட மூன்று நிலைகளில்தான் அமைகின்றன.

1. அனுதாபத்தோடு பதிவு செய்தல்
2. தலித்துகளின் யதார்த்த வாழ்வைச் சித்திரித்தல்
3. மேட்டிமைப் பார்வை

அனுதாபத்தோடு பதிவு செய்தல்

1930–களில், தமிழ் மறுமலர்ச்சியின் உச்சத்தில், கலைஞர் களின் அனுதாபம் நிறைந்த கவனிப்பைத் தலித் வாழ்வு முதன் முதலாகப் பெறத் தொடங்கியது. பாரதியின் 'ஆறில் ஒரு பங்கு', 'பஞ்ச கோணக் கோட்டை', மாதவையாவின் 'குசிகர் குட்டிக் கதைகள்' தலித் மக்களின் வாழ்வை அனுதாபத்தோடு பதிவு செய்தன.

'ஆறில் ஒரு பங்கு' கதையின் முன்னுரையில்,

> ''இந்த நூலை, பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்த தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்''[1]

என்கிறார் பாரதி.

பள்ளர்களின் மேன்மைக்குப் பாடுபடும், பாரத நாட்டின் மீது பற்றுக்கொண்ட வங்க நாட்டு அசுவினி குமாரதத்தரைக் கோவிந்தராஜன் (பாரதி) பார்க்கப்போகிறார். அசுவினிதத்தர் வீட்டில் இல்லை. வீட்டு வாயிலில் வங்காளி பாபு நின்று கொண்டிருந்தார். அவரிடம் பேசிய கோவிந்தராஜன்,

> ''பாரும் பாபு, நம்மில் ஆறில் ஒரு பங்கு ஜனங்களை நாம் தீண்டாத ஜாதியாக வைத்திருப்போமானால், நமக்கு ஈசன் நல்ல கதி கொடுப்பாரா?''[2]

என்கிறார். 'ஆறில் ஒரு பங்கு' கதையை, இந்தியச் சமுதாயத்தில் ஆறில் ஒரு பகுதியினராக இருக்கும் பஞ்சமர்க்கு அர்ப்பணித்து அவர்களின் மீது அனுதாபம் கொள்கிறார் பாரதி.

'பஞ்சகோணக்கோட்டை' என்ற கதை, உருவக முறையில் அமைந்த கதை. இந்தக் கதையின் இறுதியில் பாரதி, அதன் உட்பொருளை விளக்குகிறார்.

> ''நண்பர்களே, இந்தக் கதையின் உட்பொருள் இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா? பாரத தேசத்தாராகிய நாம், அந்தப் பஞ்சகோணக் கோட்டையாவோம். கற்சுவர் நாலும் மேலான ஜாதிகள். மண் சுவரே பஞ்சமர் என்ற ஐந்தாம் சாதியாம். கோட்டையைச் சூழ்ந்திருக்கும் அகழ் சுதேசாபிமானம். பஞ்சமர்களை நாம் எவ்வளவு அநாதரவாகவும், கொடுமை யாகவும் நடத்தி வருகிறோம்?''[3]

இது பஞ்சமர்மேல் பாரதி கொண்ட இரக்கத்தைக் காட்டுகிறதெனலாம்.

'குதிரைக்காரக் குப்பன்' என்ற கதையில் மாதவையா, அக்கிரகார வீதி பற்றி,

> ''நாய்கள், கழுதைகள், பன்றிகள் தாராளமாகப் போய்வரும் பாலூர் அக்கிரகார வீதியில், பஞ்சமர் எவரும் எந்நாளும் காலெடுத்து வைத்ததில்லை''[4]

என்கிறார். பஞ்சமர்களை விலங்கினும் கீழாய் நடத்துவதைத் தம் கதைகளில் காட்டுகிறார். காலத்திற்கு ஒவ்வாத பழைய அனாச்சாரங் களையும், சடங்குகளையும், நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங் களையும் பார்ப்பனர்கள் கைவிடவேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

தலித்துகளின் யதார்த்த வாழ்வைச் சித்திரித்தல்

தலித் மக்கள் மண்மீதும், உழைப்பின்மீதும் நம்பிக்கை கொண்ட வர்கள். இந்த நம்பிக்கையைக் கு.ப.ரா.வின் 'பண்ணைச் செங்கான்' என்ற கதை காட்டுகிறது. சொக்கனூர் கிராமத்திலுள்ள வயது முதிர்ந்த கிழவன் செங்கான், பண்ணையார் நிலத்தை உழுது பயிரிடக் கூடியவன். இவன் உழுது பயிரிடக்கூடிய நிலத்தைப் பார்ப்பதற்காகச் சின்னப் பண்ணையார் வருகிறார். அவரிடம் செங்கான்,

> ''பொளச்சுக் கெடந்தா வரவருசம் கிணத்தைக் கட்டி தொலை வைக்கணும், ஐயா! எனக்கு ஒரு சோடி மாடு வாங்கிக் குடுங்க; இந்த நெலத்துலே பொன் வெளயச் செய்யறேன்''[5]

என்கிறான். தலித் மக்கள், மண்ணோடு தங்கள் வாழ்க்கையைக் கழிப்பவர்கள் என்பதை இந்தக் கதை புலப்படுத்துகிறது.

தம் கதைகளில் புதுமைப்பித்தனும், பள்ளர் பறையர் பற்றி, அக்காலத்து உயர்சாதியினர் கொண்டிருந்த மனநிலையை யதார்த்தப் பார்வையுடன் படைத்துள்ளார். தலித்துகள், மேல்சாதி மக்களை விட்டு விலகி இருக்க வேண்டும். அவர்களுக்கு, அடிமை வேலை செய்ய வேண்டும். இப்படியொரு வாழ்க்கை முறையைத் தலித்துகள் காலம் காலமாக வாழ்ந்து வருகிறார்கள். இந்த வாழ்க்கை முறையைப் புதுமைபித்தனின் கதை காட்டுகிறது.

> ''சேரிப்பறையர்கள் ஆண்டையின் அடிமைகள்; அத்துடன் அவர்களுக்குத் தெரியாத வெள்ளைத்துரைகளின் அடிமைகள்''[6]

என்று இரட்டை அடிமை முறைக்குள் சிக்கி மூச்சுத் திணறும் தலித் மக்களின் வாழ்க்கையைப் புதுமைப்பித்தன் படம் பிடித்துள்ளார்.

மேட்டிமைப் பார்வை

தலித்துகள் ஏமாற்றுபவர்கள், திருடர்கள், கூழைக்கும்பிடு போடுபவர்கள், நன்றி கெட்டவர்கள், தாழ்வு மனப்பான்மை உடையவர்கள், சாதி இழிவிலிருந்து விடுதலை பெற எண்ண மில்லாதவர்கள் என்ற மனப்பதிவுகள், அவர்களைச் சுரண்டுகிற மேல்சாதி மக்களால் ஏற்படுத்தப்பட்டவை. இந்த ஆதிக்க மேல்

சாதியாரின் எண்ணங்களைத் தம் கதைகளில் புதுமைப்பித்தனும் சித்திரிக்கின்றார்.

புதுமைப்பித்தனின் 'துன்பக் கேணி' எனும் கதையில் இடம்பெறும் வெள்ளையனால் கடன்வாங்கித் திரும்பக் கொடுக்க முடியாமல் போய்விடுகிறது. அந்தச் செயலை ஆசிரியர்,

> ''மருதியின் பண்ணைப் பிள்ளையிடம் கடன் வாங்கும்பொழுது நிச்சயமாகத் திரும்பிக் கொடுத்துவிடுவோம் என்ற நம்பிக்கை யிலிருந்துதான் வாங்கினான் என்று நினைக்க முடியாது. கொஞ்ச நாட்கள் மாட்டை உபயோகித்துக் கொண்டு அது நோஞ்சானாகும் சமயத்தில் பண்ணை எஜமானனின் காலைப் பிடித்துப் பணமாகக் கடனைக் கொடுக்காமலிருந்து விடலாம் என்ற யோசனையின் பேரில்தான் நடத்தியிருக்க வேண்டும்''[7]

தலித்துகள் ஏமாற்றும் பேர்வழிகள் என்ற மேட்டிமைப் பார்வையைப் புதுமைப்பித்தன் வெளிப்படுத்துவதை இம்மேற்கோளால் அறியலாம்.

புதுமைப்பித்தனின் 'தனி ஒருவனுக்கு' என்ற சிறுகதை, பிள்ளைமார்களால் ஒரு விதத்தில் கொலை செய்யப்பட்ட தலித் அம்மாசிச் சாம்பான் பற்றியது. சுப்புராயப் பிள்ளையிடம் பட்ட கடனுக்காக வேலைக்காரனானவன் அம்மாசி. ஒரு ரஸவாதியின் தூண்டுதலால் அம்மாசி, பண்ணையார் வீட்டுப் பித்தளை, செம்புப் பாத்திரங்களைத் தங்கமாக மாற்றுவதற்குத் திருடுகிறான். அவனுடைய எண்ணம், இந்தத் தங்கத்தை வைத்துப் பண்ணையார் கடனை அடைப்பது.

> ''பண்ணைப் பிள்ளையவர்களின் பாத்திரங்கள், ஊருக்குப் பக்கத்திலிருந்த பாழ்மண்டபத்திற்கு வந்துவிட்டன, ஸ்புடம் போட்டுத் தங்கமாக்கிவிட. இதற்குள் பிள்ளையவர்களுக்கு எப்படியோ தெரிந்துவிட, பயலை அப்படியே புடம் போட்டுவிடுகிறேன் பார் என்று இரைந்து கொண்டு பண்ணை ஆட்களைத் திரட்டி வந்தார்''[8]

என்று காட்டுவது, தலித்துகள் திருடர்கள் என்ற மேட்டிமைப் பார்வைக்குச் சான்றாக அமைகிறது.

இராஜாஜி, படித்த தலித் இளைஞனின் தாழ்வு மனப் பான்மையைப் பற்றியும், இப்பிறவியில் பஞ்சமர் படும்பாடுகளுக்குச் சென்ற பிறவிச் செயலைக் காரணம் காட்டியும் கதைகளை எழுதினார். 'முகுந்தன்', 'அன்னையும் பிதாவும்', 'ஜகதீச சாஸ்திரிகளின் கனவு' போன்ற அவரது கதைகள் மேட்டிமைப் பார்வையோடு படைக்கப் பட்டுள்ளன.

புதுமைப்பித்தன் படைத்த 'கடவுளின் பிரதிநிதி' என்ற கதையில், சாதிப் படிநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் மேலிருந்துதான் வருகிறது. தலித்துகளிடத்தில் அத்தகைய எண்ணம் எழுவதாகப் புதுமைப்பித்தன் காட்டவில்லை. இந்தக் கதையில் இடம்பெறும் மேல்சாதியைச் சார்ந்த சங்கர், ஆலயப் பிரவேசத்திற்குத் தூண்டுகோலாக இருக்கிறார்.

> ''திரு. சங்கர், சிற்றூரில் தமது தொண்டைப் பிரச்சாரம் செய்ய வந்தார். அவரும் ஜாதியில் பிராமணர். தியாகம், சிறை என்ற அக்கினிகளால் புனிதமாக்கப்பட்டவர்''[9]

என்று காட்டுவது, மேட்டிமைப் பார்வையோடு எழுதப்பட்டது இக்கதை என்பதற்குச் சான்றாக அமைகிறது. இங்குத் தொண்டு, பிராமணர், தியாகம், சிறை, அக்கினி, புனிதம் என்று பயன் படுத்தப் பட்டிருக்கும் சொற்கள், நம் கவனத்திற்குரியதாகும்.

புதுமைப்பித்தனின் 'புதிய நந்தன்' கதையில் இடம்பெறும் ராமநாதன், தலித் சாதியைச் சார்ந்த கருப்பன் மகளைத் திருமணம் செய்து கொள்கிறான்.

> ''ராமநாதன், அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக வாக்களித்தான். அதெப்படி முடியும் சாமி? என்று சிரித்தாள்''[10]

என்று சித்திரிப்பது, மேட்டிமைப் பார்வைக்குச் சிகரமான உதாரணம்.

முடிவுரை

விடுதலைக்கு முன் தோன்றிய தலித் புனைகதைகளில் நசுக்கப்படும் மக்களின் வாழ்வு, அனுதாபத்தோடும், யதார்த்தத் தோடும், மேட்டிமைப் பார்வையோடும்தான் படைக்கப்பட்டிருக்கிறது. தொடக்க காலத்தில் தலித் பற்றிய கதைகளை எழுதியவர்களின் பார்வை, புறநிலையாகவே அமைகிறது. இந்தக் கதைகள் அனைத்தும் தலித் நோக்கில் எழுதப்பட்டன என்று கூறுவதற்கில்லை. இவை, ஆதிக்கச் சாதிக் கருத்தியல் கொண்டு தலித்துகளை அணுகுபவை; தலித்துகள் மீது இரக்கம் கொண்டு படைக்கப்பட்டவை எனலாம்.

குறிப்புகள்

1. இராம. கண்ணப்பன் (தொ.ஆ.), பாரதி கதைக்களஞ்சியம், ப. 96
2. மேற்படி, ப. 116
3. ரா.அ. பத்மநாபன் (தொ.ஆ.), பாரதி புதையல் பெருந்திரட்டு, ப. 100–101
4. அ. மாதவையா, குசிகர் குட்டிக் கதைகள், ப. 2
5. கு.ப. ராஜகோபாலன், கனகாம்பரம், ப. 34
6. புதுமைப்பித்தன், புதுமைப்பித்தன் படைப்புகள், ப. 791
7. மேற்படி, ப. 791
8. மேற்படி, ப. 784
9. மேற்படி, ப. 845
10. மேற்படி, ப. 797

சிவகாமி நாவல்களில் தலித் பெண்களின் நிலை

நா. வஜ்ரவேலு

திருவேங்கடன் பல்கலைக்கழகம்

திருப்பதி - 2

சிவகாமி நாவல்களில் பெண் கதைமாந்தர்

சிவகாமி நாவல்களில் பெண் கதை மாந்தர் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளனர். சிலர் குடும்பப் பெண்களாகவும், சிலர் அலுவல் மகளிராகவும், சிலர் கூலித் தொழிலாளர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். 'பழையன கழிதலும்' நாவலில் ஏறக்குறையப் பத்துப் பெண் மாந்தர்களும், 'ஆனந்தாயி' நாவலில் பத்துப் பெண் மாந்தர்களும் படைக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நாவலிலும் ஆண் கதை மாந்தர்களுக்கு இணையாகப் பெண் மாந்தர்களைப் படைத்திருப்பது நாவலாசிரியரின் சமத்துவச் சிந்தனையை வெளிப்படுத்துகிறது. 'பழையன கழிதலும்' நாவலில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர் களுள் கனகவல்லி, நாகமணி, தங்கம், கௌரி, கமலம்மாள், வள்ளியம்மை, சாந்தா, லலிதா, புஷ்பா, சற்குணம் முதலானோர் இன்றியமையாத மாந்தர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். 'ஆனந்தாயி' நாவலில் கதைத் தலைவி ஆனந்தாயி, லட்சுமி, கலா, தனம், கிழவி, முத்தக்கா, வடக்கத்தியாள், பூங்காவனம், நீலவேணி முதலானோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் தங்கம், கனகவல்லி, நாகமணி, ஆனந்தாயி ஆகியோர் குடும்பப் பெண்களாயும் கல்வி அறிவில்லாத வர்களாகவும் காணப்படுகின்றனர். தங்கம், லட்சுமி, பூங்காவனம் ஆகியோர் பாலியல் கொடுமைக்கு உள்ளனவர்களாய்ப் படைக்கப் பட்டுள்ளனர். மேலும் லலிதா, கௌரி, பூங்காவனம் ஆகியோர் முற்போக்குச் சிந்தனையுடையவர்களாகவும் புரட்சிப் பெண்களாகவும் படைக்கப்பட்டுள்ளனனர். நாவலின் பொருளுக்கு ஏற்றவாறு கதைமாந்தர்களைத் தனக்கே உரிய பாணியில் நாவலாசிரியர் படைத்துக் காட்டியுள்ளார். இது ஆசிரியரின் சமூகப் பற்றையும் ஆழ்ந்த ஈடுபாட்டையும் காட்டுகிறது.

'பழையன கழிதலும்' நாவலில் வரும் கனகவல்லி, நாகமணி, தங்கம், ஆனந்தாயி நாவலில் வரும் ஆனந்தாயி ஆகியோரை மேற்கூறிய கருத்திற்குச் சான்றுகளாகக் கூறலாம். நாகமணியும்,

கனகவல்லியும் காத்தமுத்துவின் மனைவியர். இருவரும் வெவ்வேறு சூழ்நிலைகளில் இவருக்கு வாழ்க்கைத் துணையாகின்றனர். வெளி யுலகம் அறியாதவர்களாய்க் குடும்பக் கடமைகளை ஆற்றுவதோடும் கணவனின் பாராட்டைப் பெறுவதோடும் அவர்களின் வாழ்வு நிறைவு பெறுகிறது. காத்தமுத்து, தங்கம் என்னும் விதவைப் பெண்ணை அழைத்து வந்து, தன்னுடைய ஆதரவில் வைத்துக் கொள்ளும்போது, இருவரும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் அவளை ஏற்றுக்கொள்ளுகின்றனர்.[1] தங்கம் கணவனை இழந்த விதவை. பரஞ்சோதி உடையாருக்கு உடலின்பத்தைத் தருபவளாகவும் வாழ்ந்து வருகின்றாள். தலித் பெண்கள் உழைக்கும்போது உயர்சாதி ஆண் களுக்கும் குடும்பங்களில் கணவனுக்கும் அடிமையாக வாழும் நிலை இங்குக் காணப்படுவதை அறியமுடிகிறது. இவ்வாறு இருமுனை ஒடுக்குமுறைக்குத் தலித் பெண்கள் உள்ளாவதை நாவலாசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

கிராமங்களில் வாழும் தலித் பெண்களின் துன்பங்களையும் ஒடுக்குமுறைகளையும் 'ஆனந்தாயி' நாவலின் வழி ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். கிராமியப் பெண்கள் இன்றும் கணவனுக்கு அடங்கி ஒடுங்கி நடக்கின்றனர். பிள்ளைப் பெறுவது, இல்லறக் கடமைகளை ஆற்றுவது மட்டுமே அவர்களுடைய பணி என்ற நிலை கிராமங்களில் நிலவுவதை இப்பாத்திரம் விளக்குகிறது. 'ஆனந்தாயி' பெரியண்ணாவின் மனைவி, ஆறு குழந்தைகளைப் பராமரித்தல், பள்ளிக்கு அனுப்புதல், நலன் காத்தல், அவர்களுக்குத் திருமணம் செய்தல் போன்ற முழு பொறுப்பினையும் ஏற்று நடத்துபவளாகக் காணப்படுகிறாள். அதே நேரத்தில் பொறுப்பில்லாத, ஒழுக்கமில்லாத கணவனுக்கும் பணிவிடை செய்யும் பண்புள்ள பெண்ணாகவும் திகழ்கிறாள். ஆனால் பெரியண்ணன் அவளை ஒரு அடிமைப் பொருளாகவே நினைக்கிறான். தான் விரும்பும் போது பாலியல் இன்பத்துக்கு வற்புறுத்தல், பிற பெண்களை வீட்டிற்கு அழைத்துவந்து குடும்பம் நடத்துதல், எதிர்த்துக் கேட்கும் ஆனந்தாயியை தாக்குதல் போன்ற தீய நடத்தைகளை பெரியண்ணன் கடைபிடிக்கிறான்.[2] சுதந்திரமில்லாத பெண்ணாக ஆனந்தாயியை அவன் நடத்துகிறான். ஆனந்தாயி கணவனை எதிர்க்கத் துணி வில்லாமல் அடிபணிந்து நடக்கிறாள். கல்வியின்றி, உலக அறிவின்றி, பேதைகளாய் வாழும் தலித் பெண்களின் அடிமை வாழ்வினை நாவலாசிரியர் நன்கு சித்திரித்துக் காட்டியுள்ளார். பெண் விடுதலை, பெண்ணியம், சமத்துவம் என்று வாய்ச்சொல்லில் வீரர்களாய் விளங்கும் இச்சமுதாயத்தில் தலித் பெண்கள் விழிப்புணர்வில்லாத வர்களாய் அறியாமை இருளில் சிக்கித் தவிக்கின்றனர். பிற சமூகத்துப் பெண்களுக்கு இருக்கின்ற விழிப்புணர்வு தலித்

பெண்களுக்கு இல்லாமலிருப்பதற்குக் காரணம், அவர்களிடம் குடிகொண்டுள்ள தாழ்வு மனப்பான்மையும் அடிமை உணர்வுமே எனலாம்.

பெண்கல்வி மறுப்பு

பெண்கல்வியை சிலர் விரும்புவதில்லை. சிலர் வெளிப் படையாக மறுக்கிறார்கள். பெண்கள், கல்வி கற்பதனால் எவ்விதப் பலனுமில்லை என்ற காரணத்தால் பெண்கல்வியினை மறுக்கின்றனர்.[3] இக்கருத்தை சிலர் ஏற்றுக்கொள்ளவும் தங்கள் வாழ்க்கையில் கடைபிடிக்கவும் செய்கின்றனர். பெண்கல்விக்குப் பெண்களே தடையாகவும் அமைந்து விடுகின்றனர். சிவகாமி இத்தகையப் பாத்திரங்களைப் படைத்து பெண்கல்வியின் தேக்க நிலையினையும் அதன் இன்றியமையாமையையும் எடுத்துக்காட்டுகிறார். குறிப்பாகக் கிராமப்புறப் பெண்கள் முன்னேறாமல் அறியாமையில் வாழ்வதற்குக் காரணம் கல்வி அறிவுப் பெறாமையே என்பதும் அதற்கும் பெண்கள் காரணமாக விளங்குவதையும் ஆனந்தாயி நாவல் வழி அழகாக விளக்குகிறார். பெண்கள் கல்வி கற்பதில் ஒரு பயனுமில்லை என்பதை நாவலில் வரும் வடக்கத்தியாளின் கூற்றாக சுட்டிக் காட்டியுள்ளார். வடகத்தியாள் பள்ளிக்குச் செல்லும் தன் மகளைப் பார்த்துப் பின்வருமாறு கூறுகிறாள்.

> ''ஏண்டி பரீட்சைக்குப் போறியா, இல்லை, இன்னிக்கு நெல்லுச் சோத்துல பருப்பு கொழம்பு ஊத்துவான்னு போறியா! ஒங்கப்பனுக்குக் கொடங்கொடமா வகுத்துல போகுது, காலையிலிருந்து சுடுதண்ணீ வச்சிக்கொடுக்க முடியாத வேலை சிண்டு நிமிருது. உங்கண்ணன் ராத்திரி லோடுக்குப் போனவன் இன்னும் காணோம்! நீ எங்கேடி எவ்வேசமவள பள்ளிக்கூடம் போற''[4]

என்று குடும்பப் பிரச்சினையைச் சுட்டிக்காட்டித் தன்னுடைய மகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் போக்கை இங்குக் காணமுடிகிறது. பெண்கள், வீட்டு வேலைகள் மட்டும் செய்தால் போதும் என்றும் அவர்கள் படித்துப் பட்டங்கள் பெறத் தேவை யில்லை என்று பெற்றோர் நினைக்கின்றனர். அது மட்டுமின்றி பெண் பிள்ளைகள், குடும்பங்களில் உதவியாக இருக்கவே பெற்றோர் நினைக்கின்றனர். அதோடு படித்தப் பெண்களுக்கு ஏற்ற மாப்பிள்ளை அமைவது கடினம் என்றும் நினைக்கின்றனர். இத்தகையச் சூழலில் பெண்கள் கல்வியினைப் பாதியில் விடவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்று நாவலாசிரியர் கூறுகிறார். இந்த எண்ணத்தை வெளிப்படுத்தவே ஆனந்தாயி தன் மகள் கலாவைப் பள்ளிக்குச் செல்வதிலிருந்து நிறுத்தி விடுகிறாள்.[5]

பெண், கல்வி கற்றவளாக விளங்கினால் வீட்டிற்கு அடங்கி நடக்கமாட்டாள்; தன் விருப்பப்படி செயல்படுவாள்; குடும்ப கௌரவம் பாதிக்கும் என்றும் தாய் நினைக்கின்றாள். அதனால் தன் மகளை பள்ளிக்கு அனுப்பாமல் இல்லறப் பணிகளைச் செய்வதில் ஈடுபடுத்துகிறாள். பெற்றத்தாயே தன் மகளின் வளர்ச்சியைக் கண்டு மனங்குளிராமல் அதைத் தடுக்கும் போக்கு வடக்கத்தியாளின் கூற்றின் வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. "படிப்பாம் படிப்பு; படிச்சிட்டு சட்டிப்பானை கழுவத்தான் போவுணும்; தெருவுல அந்த வசந்தாக்குட்டி, அதான் குள்ளசனம் பேத்தி படிச்சா; என்னா பட்டப் படிப்பா, பத்து படிச்சிப்பிட்டு கண்ட பய, நின்ன பயக்கூட கண்ணடிச்சிக்கிட்டுத் திரிஞ்சா அவ, பார்வதி ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு தம்மவளப் படிக்கப் போட்டா ஆயா... வவுத்தல வந்திடுச்சாங்காட்டியும், எருக்கங்குச்சி எல சாப்டு செத்துப்போனா, எது படிச்சிப்பிட்டு வேலக்கிப் போயிருக்கு; அதது பாதியிலே நின்னுப்புடுது"[6] வடகத்தியாள் தன் மகளை கடிந்து கொள்ளுவதிலிருந்து அந்த கிராமத்துப் பெண்களின் கல்வி நிலையும் எவ்விதமான பலனு மில்லாதக் கல்வி கற்பதை அந்தப் பெண் விரும்பவில்லை என்னும் கருத்து இதன் மூலம் விளங்குகிறது. ஒரு சிலர் செய்யும் தவறுக்கு எல்லாப் பெண்களும் அத்தகையவரே என்று நினைப்பது தவறாகும். பெண்கள் கல்வியின் மூலம் ஒழுக்கம் பெறுகின்றனர். ஆனால் அத்தகைய ஒழுக்கம் சீர்கெடும் என்று பெற்றோர் நினைத்து கல்வி கற்கும் பெண்களைக் கடிந்து கொள்கின்றனர். தொடர்ந்து பள்ளிக்கு அனுப்புவதை விரும்புவதில்லை.

'பழையன கழிதலும்' நாவலில் வரும் பெண் கதைமாந்தர் களில் கௌரி மட்டுமே கல்வி கற்கும் பெண்ணாகப் படைக்கப்பட்டி ருக்கிறாள். அவளுடைய வளர்ச்சியிலும் பல தடைகள் வருகின்றன. தன்னுடைய தந்தையே அத்தகையத் தடைக்குக் காரணமாக அமைகிறார். ஆனாலும் கௌரி தனக்குரிய பிடிவாத குணம் வாழத்துடிக்கும் எண்ணத்துடன் அத்தடையை முறியடிக்கிறாள். கௌரி, மேல்நிலைக் கல்விப் பயிலும்போது பெண்கேட்டு சம்மந்தி வீட்டார் வருகின்றனர். அப்பொழுது காத்தமுத்து அவர்களிடம் கூறும் மொழிகள் பெண் கல்வியைத் தடைசெய்யும் நோக்கில் அமைந்துள்ளது. "களுத...பாஸ் பண்ணுனா காலேஜு, இல்லாட்டினா கல்யாணம்"[7] என்று சாயங்காலம் வழக்கமாக உட்காரும் திண்ணை வாசிகளிடமும் வருவோர் போவோரிடமும் சொல்லிக் கொண்டி ருக்கிறார் காத்தமுத்து" மேலும் இக்கூற்றைக் கேட்டதும் மாப்பிள்ளை மனதில் எழும் எண்ணங்களையும் நாவலாசிரியர் இங்கு வெளிப் படுத்திக் காட்டுகிறார். "கௌரி பெயிலாகிவிட்டால் பிள்ளையாருக்கு

நூற்றியெட்டுத் தேங்காய் உடைக்கிறேன் என்று வேண்டிக் கொண்டானாம்[8] என்பதாக அக்கூற்று அமைந்துள்ளது. பெண் கல்வியைக் குறித்த ஆண்களின் எண்ணம் இங்கு நன்கு வெளிப் படுகின்றது. தங்களின் சுயநலத்திற்காக அவர்களின் கல்வியைத் தடை செய்யும் போக்கினை ஆசிரியர் வெளிப்படுத்திக் காட்டுகின்றார். பெண்கள் பருவ வயதை அடைந்தபின் பள்ளிக்குச் செல்வதை பெரும்பாலான பெற்றோர் விரும்புவதில்லை. தலித் குடும்பங் களில் இத்தகைய நிலை காணப்படுகிறது. அவர்களின் எதிர்காலம் குறித்த பயமும் பாதுகாப்புமே இதற்குக் காரணங்களாக அமைகின்றன. பொதுவாகப் பெண்கள் கல்வி, அறிவியல் வளர்ச்சி, தொழில்நுட்பம், விஞ்ஞானம் முதலானவற்றில் ஆண்களுக்கு சமமாக முன்னேற்றமடைந்து வந்தாலும் தலித் பெண்கள் எதிர்பார்க்கும் வளர்ச்சியைப் பெறாமல் வாழ்ந்து வருகின்றனர். உயர்நிலைக் கல்வியைத் தொடருபவர்கள் மிகக் குறைவானவர் களே. ஆரம்பக் கல்வியோடு தொடங்கி, பத்தாம் வகுப்பு வரை அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து நின்று விடுகின்றனர். குடும்பச் சூழ்நிலை, திருமணம், குழந்தைகளைப் பராமரித்தல், வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் இவர்களின் கவனம் திசை திருப்பப்படுகிறது. மேலும் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடும் பெண்கள் கிராமங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். ஆனந்தாயி நாவலில் கலா, தனம், அருள் ஆகியோரும் பழையன கழிதலும் புஷ்பா, சற்குணம், வசந்தாள் ஆகியோர் இதற்கும் சான்றாக அமைந்துள்ளனர்.

பெண் விடுதலை

பெண் விடுதலை தீருமட்டும் இந்நாட்டில் மண்விடுதலை என்பது முயற்கொம்பே. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்றிருந்த நிலை மாறிப் பெண்கள் இந்நாட்டின் கண்கள் என்றும் குடும்ப விளக்கு என்றும் போற்றப்படுகின்றனர். பெண்களுக்கு விடுதலை வேண்டும்; பெண்ணுக்குச் சமத்துவம் வேண்டும்; அனைத்திலும் உரிமை வேண்டும் என்னும் குரல் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அரசும் தன்னுடையப் பங்கை ஆற்றி வருகிறது. ஆனால் தலித் பெண்களின் நிலையில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணவில்லை என்று கூறலாம். பெண்கள் அடிமைத்தளையை அறுத்தெரிய வேண்டும்; உயர்கல்வி கற்று சுயமாக பொருளீட்ட வேண்டும்; பிறரைச் சார்ந்து வாழ்தல் கூடாது; குடும்பங்களில் ஆண்களுக்குச் சமமாகச் சொத்துரிமை வழங்கப்பட வேண்டும். குடும்பங் காரியங்களில் பெண்களின் ஆலோசனையையும் ஏற்க வேண்டும். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புத் தருதல் வேண்டும்.

பாமாவின் "வன்மம்" நாவல் தரும் தலித்தியச் சிந்தனைகள்

சொ. பொன்னுசாமி

அருள்மிகு குமரகுருபர சுவாமிகள் கலைக் கல்லூரி
திருவைகுண்டம்

எழுத்தாளர் பாமா 'கருக்கு', 'சங்கதி' என்ற இரு நாவல் களையும், 'கிசும்புக்காரன்' என்ற சிறுகதைத் தொகுதியையும் படைத்துள்ளார். 'வன்மம்' அவருடைய மூன்றாவது நாவல். ''வாழ்க்கையின் சிக்கல்கள், துயரங்கள், மகிழ்ச்சிகள், சலனங்கள், எல்லாம் வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான ஒரு சூழலையும் தயாரிப்பையும் உருவாக்குகின்றன'' என்கிற சுந்தர ராமாசாமியின் (விரிவும் ஆழமும் தேடி) கூற்றிற்கேற்ப, பாமா தலித்தியம் பற்றிய பார்வைகளைத் தம்முடைய 'வன்மம்' நாவலில் நுட்பமாகப் பொதிந்து தந்திருக்கிறார். ''வன்மம் நாவலில் காணும் தலித்தியச் சிந்தனைகளைப்'' பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வன்மம் – கதைச் சுருக்கம்

மலை சூழ்ந்த கண்டம்பட்டிக் கிராமத்தின் மக்களின் வாழ்வியல் நிலையைச் சித்திரித்துக் காட்டுகிறது பாமாவின் ''வன்மம்''. பல சாதி மக்கள் வாழும் அக்கிராமத்தில் பறையர்களுக்கும், பள்ளர் களுக்குமிடையில் வன்மம் ஏற்பட்டு, வெட்டு, கொலை, பழிக்குப் பழி வாங்கும் செயல்கள் நிகழ்கின்றன. பறையர் இனத்து மரியராசு, லூர்துசாமி, வர்கீஸ், சவுரியப்பன் ஆகியோர் பள்ளர் இனத்தவரால் கொல்லப்படுகின்றனர். இதனால் ஆத்திரம் அடைந்த பறையர் இனத்துப் பன்னீர், செல்வம், சகாய ராசு, பவுல்ராசு ஆகியோர் மூன்று பள்ளர்களை வெட்டுகின்றனர். இதனால் பள்ளர் சேரி, பறையர் சேரிகளில் ஆண்கள் நுழைய முடியாத அவல நிலை... பறையர் இனத்து இளைஞர்கள் அம்பேத்கர் சிலை அமைக்க, பள்ளர் இனத்து இளைஞர்கள், அதைச் சுற்றிக் கொடி நட்டுக் கம்பி கட்ட, அதைப் பறையர் இனத்துச் சேசுரத்தினம் அறுக்க, அதனால் அவன் வெட்டப்படுகிறான். படித்த இளம் தலைமுறை யினரான சாமிநாதன், செயராசு, அந்தோணி ஆகியோரின் சமரச முயற்சியால் இரு சாதியினரும் இணைந்து வாழ்கிறார்கள். ''வன்மம்

மாறி மகிழ்ச்சி அவ்வூரில் ஏற்படுகிறது. இனிவரும் தலைமுறையாவது, வன்மமில்லாம, வன்முறையில்லாம, சண்டை, சச்சரவு இல்லாம, ஒன்னா மன்னா இருக்கனும்''னு (ப.159) நாவலை முடிக்கிறார் ஆசிரியர் பாமா. பள்ளர் தெரு காளையனைப் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் நிறுத்தி, இரண்டு சாதியினரும் சேர்ந்து அவரை வெற்றிபெறச் செய்கிறார்கள். ''இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்ல செயிச்சது போதாது, சட்டசபை, நாடாளுமன்றம் எல்லா எடத்துலயும் நம்ம தலித்துக் குரல் ஓங்கி ஒலிக்கணும்'' (ப.158) என்கிற காளிமுத்துவின் குரல் ஆசிரியரின் குரலாக ஒலிக்கிறது.

பறையர்களின் சமுதாயத் தொழில் நிலையில் மாற்றம்

'கரச்சு ஊத்துன கூழை, ஈரங்காயக் கடுச்சுக்கிட்டே குடுச்சுட்டு, அன்னன்னைக்குக் கூலிய வாங்கி, அரிசியும், கொழம்புச் சாமானும் வாங்கி'' (ப.9) அன்றாடங்காய்ச்சி வாழ்க்கை வாழ்ந்த பறையர்கள் நாய்க்கமாருடைய நிலத்தை ஒத்திக்கு எடுத்து ராப்பகலா ரண பாடுபட்டு வெளையாத மண்ணையும் வெளைய வச்சு முன்னுக்கு வந்தார்கள். ''வக்கீலுக, கொத்தனாருக, பிளம்பருக, டிரைவருக, கண்டக்டருக, டீச்சருக...போன்ற பிற தொழில்களும்'' (ப.14) செய்கிற அளவுக்குச் சமுதாயத் தொழில் நிலையில் மாற்றம் பெற்றார்கள்.

'ஒடையாரு' வைக்கும் பழக்கத்தை உடைத்தெறிந்தவர்கள்

கண்டம்பட்டி கிராமத்தில் நாய்க்கமாருக்குப் பள்ளர்களும், பறையர்களும் 'ஒடையாரு' வைப்பார்கள். ''பொங்கலுக்குப் பொங்கலு ஒரு சேவலு, ஒன்னோ ரெண்டோ பூசணிக்கா, நாலஞ்சு கரும்புத் தட்ட, பச்சரிசி ஒரு மரக்கா எடுத்துக்கிட்டு, ரொம்பப் பெரு களமா குடும்பம் குடும்பமாப் போயி சம்சாரிகளக் கண்டுக்கிட்டு வருவாக. இதுதான் 'ஒடையாரு' வைக்கிறது. சம்சாரிக தருகிற இத்தினி பொங்கலை எட்ட நின்னு வாங்கிட்டு வருவாக. இந்தப் பழக்கத்தைப் படித்த பறையர் இனத்து இளைஞர்கள் உடைத் தெறிந்து நிறுத்தி விட்டார்கள்.

சமுதாய அந்தஸ்து பெறாத தலித் இன மக்கள்

வயல்களுக்குச் சொந்தக்கார சம்சாரிகள் அவர்களுடைய வீடுகளில் மனைவி மக்களுடன் நிம்மதியாக இரவில் உறங்கு கிறார்கள். ஆனால் வயலுக்குத் ''தண்ணி பாய்ச்சுற பள்ளர், பறையர்கள் தான் பனியிலயுங் குளுருலயுங் கெடந்து விடிய விடிய தண்ணி பாச்சனும். நடுக்குடுச் சாமத்துலே பேயி, பிசாசு அடிச்சுப் போட்டாலும், வரப்புகள்ள கெடக்குற பாம்புக பிடுங்கிச் செத்தாலும் கேக்க நாதியில்லை. அப்பேர்ப்பட்ட ஒரு பொழப்பு'' (ப.15)

தண்ணீர்ப் பாய்ச்சுவதில் தகராறு

ரெங்க நாய்க்கருக்கும், பழனிவேலு நாய்க்கருக்கும், தண்ணீர்ப் பாய்ச்சுவதில் தகராறு இருக்க, அவர்கள் இருவரும் நிம்மதியாக இருக்க, பள்ளர் இனத்துக் கருப்பசாமியும் பறையர் இனத்து மரியரா என்கிற மர்ராசும் சண்டை போட்டுக் கொண்டதில் கருப்பசாமி, மரியராசுவை மம்பட்டிக் கணையால் அடித்துக் கொன்றுவிடும் அளவுக்கு நடந்து கொள்வது – இரு சாதியினரிடையே ஒற்றுமை இல்லாத நிலையை எடுத்துக் காட்டுகிறது.

தலித்திய பெண்களின் அவல நிலை :

குளிக்க, மலம் கழிக்கக் கூடச் சுதந்திரம் இல்லாத நிலை

சீனிவாசன் நாய்க்கரு கிணத்துல, சேரித்தெரு ஆளுகக் குளிக்கக் கூடாது என்று தடுக்கப்பட்டு, முள் வெட்டிப்போட்டு நுழைய விடாமல் செய்யப்பட்டதை அறிய முடிகிறது. அதுபோலவே பெண்கள் இரவு நேரங்களில் மலம் கழிக்கச் செல்வதைக்கூட அனுமதிக்க மறுக்கும் அவல நிலையையும் ஆசிரியர் பாமா சித்திரித்துக் காட்டியுள்ளார். முகிலை இராசபாண்டியனின் 'அலைகளின் காலம்' நாவலில் தலித் பெண்கள் மேலாடை அணிவதைக் கூடத் தடுத்திருக்கிற ஒரு சமுதாயச் சூழல் குமரி மாவட்டத்தில் நிலவியிருந்த கொடுமையைக் கொஞ்சம் நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது.

கல்வியறிவில்லா நிலை

தலித் பெண்கள் தாங்கள் கல்வியறிவு பெறாத நிலையை எண்ணி வேதனைப்படுகிறார்கள். மெக்கேலம்மா, தான் படிக்கா விட்டாலும், தன் மகன் சாமிநாதனைப் பெரிய படிப்பு படிக்க வைக்கிறாள். பெண்களுக்கு ஊர்க்கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடச் சுதந்திரம் இல்லாத நிலை இருந்ததை,

> ''பெரிய சீர்திருத்தவாதின்னு பீத்திக்கிரானுக. ஊர்க் கூட்டம்னு வந்துட்டா பொம்பளைகளப் போச்சொல்லிரானுக. இதென்ன நாயமாம்''

என்று (ப. 80) செல்வராணி பெண்ணுரிமைக்குரல் கொடுப்பது ஆசிரியர் பாமாவின் பெண்ணியச் சிந்தனையின் வெளிப்பாடாக அமைகிறது. பாமாவின் 'சங்கதி' நாவலிலும் தலித் பெண்கள் பஞ்சாயத்துக் கூட்டத்தில் அனுமதிக்கப்படாத செய்தியை, 'இவனு கட்ட என்னத்தப் பேச முடியுது...ஊர்க் கூட்டத்துல நம்மள ஒக்கார உடமாட்டானுக. ஓரமா இங்ன ஒதுங்கி நிக்கக்கூட உட மாட்டேங்கானுக'' என்கிற வரிகள் (சங்கதி நாவல், ப. 26) மூலம் ஆசிரியர் உணர்த்திக் காட்டியதை இங்கு ஒப்பிட்டு நோக்கலாம்.

காவல் துறையினரின் செயலை எதிர்க்கும் பெண்கள்

காவல் துறையினர் கிராமத்துக்குள் புகுந்து நடந்து கொள்ளும் கீழ்த்தரமான செயலைக் கண்டிக்கும் துணிவு கொண்ட பெண் களாகத் தலித் பெண்கள் காணப்பட்டனர்.

> ''இவனுக பார்வையே சரியில்ல. ஆம்பளைக யாரும் தெருவுக்குள்ள இல்லன்னு அலையறானுக.. அறுத்துப் பாத்திர மாட்டோம். நம்மள யாருன்னு நெனச்சிக்கிட்டு இருக்கானுக''(ப. 109)

என்று பேசுகிறாள் சவரியம்மா.

> ''கட்டுன புருசங்கிட்டகூட இந்த அடி வாங்கலியே இவுக எந்தக் காட்டு எடுவட்டப் பெயலுக... இப்படி ரத்தங்கண்ணிப் போக அடிக்கானுக'' (ப. 107)

என்று இருதய மேரி அலறினாள். தங்கள் கொடுமைகளுக்கு எதிராக எத்தனை பேசி இந்தப் பெண்கள் குமுறினாலும் இன்னும் பெண்கள் நுகர்வுப் பொருளாகவே கருதப்படுகிறாள் என்பதை அறிய முடிகிறது.

பள்ளரும் பறையரும் ஒருவரையொருவர் சாடும் நிலை

''ஏலைகா...நீங்க அவனுகள மாட்டுக்கறி திங்காம்னு மட்டம்ங்கீறிக. ஆனா அவனுக நம்மள பீதிங்கிற பன்னியறுத்துத் திங்கம்னு நம்மள மட்டமா நெனைக்கானுக'' என்று கருப்பசாமி பேசுவது அவ்விரு சாதியினரும் ஒருவரையொருவர் சாடுகின்ற தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

வாழ்வியல் நிலை

கண்டம்பட்டி கிராமத்தைச் சுற்றிலும் மலை இருப்பதால் விவசாய வேலை இல்லாத காலங்களில் இந்த மலங்காட்டுகள்ள தான் வெறகு பொறுக்கப் போறது பள்ளரும் பறையர்களும்தான்... இதுல பறையர்க மட்டும்தான் கிறிஸ்தவுக'' (ப. 11) என்னும் வரிகள் தலித்துகளின் வாழ்வியல் நிலையைக் காட்டுகிறது.

பள்ளர்களுக்கும் பறையர்களுக்கும் பகைக்கான காரணங்கள்

கள்ளுக்கடை நாடாருடன் நட்புக்கொண்டு ஓசில கள்ளுக் குடித்த மண்ணாங்கட்டியைப் பள்ளர் இனத்தவர்கள் வம்புக்கிழுத்து கொல்ல முயற்சிக்கையில், பள்ளர் இனத்தைச் சேர்ந்தவனின் குடலை உருவி மாலையாகப் போட்டுக் கொண்டு ஊருக்குள் வந்து விட்டான்.

''அதுல தொடங்குன பகைதான். அப்பவச்ச வன்மம்தான். இப்ப வரை தொடந்துகிட்டு இருக்குது''. பஞ்சாயத்துத் தலைவர் பதவியைத்

தக்க வைத்துக் கொள்ள பள்ளர், பகைவர் பகையினைத் தூண்டி விட்டனர் நாய்க்கர்கள். பள்ளர், பறையரைப் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு கிறித்தவ மதத்தை ஒரு காரணமாகச் சொன்னவர் நாய்க்கர்கள்.

தலித்துகளை முன்னேற்றத் துடிக்கும் நிலை

''தீண்டாமை என்றைக்குத் தோன்றியதோ அன்றே தலித் அரசியல் தோன்றிவிட்டது. தீண்டாமை கி.பி. நானூறு வாக்கில் தோன்றியது என்று அம்பேத்கர் கூறினார். 1860 தலித் இயக்கம் தீவிரமடைந்தது. 1892 அயோத்தி தாசப் பண்டிதர் சென்னை மாகாண சங்கம் வழியாகக் கல்வியுரிமை, நில ஒதுக்கீடு குறித்து ஒரு கோரிக்கை மனு தந்தார்''– தலித் முரசு, ஜூலை 2002 – செய்தி யானது இந்தியாவில் தலித் நிலையின் தோற்றத்தை விளக்குகிறது. ''வன்மம்'' நாவலில் வரும் தலித்துகள் முன்னேற வேண்டும் என்று அன்றைய தலித்து இனத் தலைவர்கள் ஆசைப்பட்டது போல ஆசைப்படுகிறார்கள்.

''நம்ம தெரு பெயலுகளும், பொம்பளைப் பிள்ளைகளும் நல்ல பதவிகளுக்கு வரணும். அப்பதான் துணிஞ்சு நிக்க முடியும்'' (ப. 23) என்று ஆசைப்படுகிறார் சாமிநாதன். ''கற்பி! போராடு! ஒன்றுபடு'' என்கிற அம்பேத்கரின் தாரக மந்திரத்தை எடுத்துக்கூறித் தலித் இன மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, தலித்து இன மக்களை முன்னேற்றத் துடிக்கிற தலித்து இன இளைய தலை முறையின் பிரதிநிதியாக அந்தோணி படைக்கப்பட்டிருக்கிறான்.

இத்தகைய தலித்தியச் சிந்தனைகளை ஆழமாக, நுட்பமாக அசைபோட்டு அலசி ஆராயும் நாவலாகப் பாமாவின் 'வன்மம்' நாவல் அமைந்திருப்பதை நாம் உணர முடிகிறது.

"சில தலித் கவிதைகளும்" - ஓர் சமூகவியல் பார்வை

கி. முத்துக்கூரி

திருவில்லிபுத்தூர்

'சில தலித் கவிதைகளும்' என்கிற கவிதைத் தொகுப்பில் காணப்படுகின்ற சமூகம் சார்ந்த சிக்கல்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

கவிஞர் அறிமுகம்

'சில தலித் கவிதைகளும்' என்கிற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் இராசமுருகபாண்டியன். கிராமத்துமேடு என்கிற ஊரைச் சார்ந்தவர். 1960-ஆம் ஆண்டில் பிறந்தவர். எண்பதுகளின் ஆரம்பத்தில் கவிதை எழுதத் தொடங்கியவர். இன்று இலக்கியத்தில் குறிப்பிட்ட இடத்தைத் தனதாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார். தற்சமயம் கல்லூரிப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

சமூகப் பார்வை

ஓர் இலக்கியத்தில் இடம்பெறும் எந்த ஒரு மாந்தரும் தனித்து இருப்பதில்லை. அம்மாந்தன் தான் வாழும் சமூகத்தின் ஒரு கூறாகவே அமைகிறான். சமூகத்தின் வளர்ச்சியிலும் மாற்றத்திலும் அவன் தன் பங்கினைச் செய்கிறான். சமூகம் அவனைப் பாதித்து அவன் வளர்ச்சியில் தன் பங்கினைச் செய்கிறது எனச் சமுதாயம் பற்றி விளக்குவார் இரா. தண்டாயுதம். இவருடைய கருத்தினடிப்படையில் கவிஞர் இராச முருகபாண்டியனின் கவிதைகள் அமைந்துள்ளமையைக் காணலாம்.

விளக்குதூக்கிகளின் நிலை

திருவிழாக் காலங்களிலும், கடவுளர்கள் பவனி வருகின்ற காலங்களிலும் முன்னால் வெளிச்சத்தைக் கொடுக்கிற வகையில் விளக்குகளைத் தலையில் ஏற்றிக்கொண்டு செல்கின்ற விளக்கு தூக்கிகளின் வாழ்வியல் நிலைமைகளைப் பற்றிக் கூறும்போது,

''நாங்கள்
விளக்கு தூக்கிகள்
தலைக்கு மேலே வெளிச்சம் பரவ
இருட்டில் நாங்கள்...'' (விளக்கு தூக்கிகள் - 25)

என்கிறார். இங்கு அவர்களின் வாழ்க்கைத் துயரங்களை மிகக் தெளிவாகப் புலப்படுத்துகிறார்.

''எப்போதாவது
வலம் வரும் திருவிழாநாளில்
எங்கள் அடுப்புகள் சூடேறும்
தேரில் கடவுள்
தெருவில் நாங்கள்''... *(விளக்கு தூக்கிகள் - 25)*

இங்குத் தேரில் வருகின்ற கடவுளருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கின்ற வர்களின் வாழ்க்கைத் தெருவில் கிடப்பதை நயமாகப் படம் பிடிக்கின்றார். காலனிகள் காலணிகளால் மாறி இருப்பதை,

''நாம்
அடிமையாய் வாழும்
விடுதலையின் குழந்தைகள்
அதனால்தான்
நமது குடியிருப்புகள்
'காலணி என்றே அழைக்கப்படுகிறது.''

இங்கு விடுதலை பெற்ற பிறகும் 'காலனிகள்' காலணிகளால் மாறியிருக்கும் விசித்திர சித்திரத்தைத் தீட்டிக் காட்டுகிறார்.

கள்ள வாக்குகள்

கள்ள வாக்குப் போடுவதை,

''பிணங்கள் வாக்குச் சாவடிக்கு வந்து
வாக்களித்துப் போகும்'' *(தேர்தல் வருகிறது - 35)*

என்று விவரித்து அங்கத் தொனி அமையப்பாடி,

''மனிதனை விடவும்
பிணங்களுக்கே மரியாதை
நமக்கும்
பிணங்களை அலங்கரிப்பதில்
பிரியம் அதிகம்'' *(தேர்தல் வருகிறது - 36)*

எனத் தொடரும் போது அது எதார்த்தமான சித்திரப்பாக உள்ளது.

சுயமரியாதை

இன்றைய இந்தியா தன்னுடைய சுயமரியாதையை இழந்து விட்டது. சகலவிசயங்களுக்கும் உலகச் சண்டியரான ஐ.எம்.எப் என்கிற நிறுவனத்தைச் சார்ந்து இருக்கவேண்டிய நிலை உள்ளது. இந்நிலையை

''உலகப்படத்தைப் பார்க்கிறான்
எனது தேசம்

யார் காலிலோ
விழுந்து கிடக்கிறது'' (வெட்க சுயமரியாதை - 41)

என்கிற வரிகளின் மூலம் சொல்லாமல் சொல்லிவிடுகிறார்.

கோபம் மனிதனுடைய தேசியக் குணம். மனிதன் அடிக்கடி கோபப்பட வேண்டும். கோபப்பட வேண்டிய நேரங்களில் கோபப் படாத மனிதன் மனிதனில்ல. களவாடப்படுகிற வாழ்க்கையை எண்ணியாவது மனிதன் கோவப்படவேண்டும் என்கிறார். இதை,

''ஒவ்வொரு வினாடியும்
களவாடப்படும்
உன் வாழ்க்கையை மீட்க
கீறு.....குதறு...'' (கோபம் - 51)

என்கிற வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

அம்பேத்கர் பெருமை

''அவன் ஞானியல்ல
குனிந்தே வாழ்ந்தவர்களுக்கு
முதுகெலும்பை ஞாபகப்படுத்திய
சமூக விஞ்ஞானி'' (டாக்டர் அம்பேத்கர் - 58)

என்று டாக்டர் அம்பேத்கரைப் போற்றுவதன் மூலம் மனிதனின் பரிணாம வளர்ச்சியினை அடையாதிருந்த 'தலித்'களுக்கு அந்த வளர்ச்சியை வழங்கியவர் அவர் என்பதை நயமாக வருணிக்கிறார்.

வரதட்சணைக் கொடுமை

திருமணங்கள் இரு மனங்களைப் பார்த்து நடப்பதில்லை. பணங்களைப் பார்த்தே நடக்கின்றன. இதை,

''கல்யாணம்
இந்தியப் பெண்ணுக்கு
ஒரு
கட்டாய உடன்கட்டை
வரதட்சணைத்தீ
அதில் மூட்டப்படுகிறது'' (ஒரு மௌனம் மொழியாகிறது - 44)

என்ற வரிகளால் படம்பிடித்துக் காட்டுகிறார். மேலும் திருமணங்கள் ரொக்கத்தில் நிச்சயிக்கப்பட்டு முடிவில் ''காஸ்ஸ்டவ்'' மூலம் சொர்க்கத்திற்கு ஒரு வழி காட்டுவதாய் அமைந்துவிடும் நடப்பு நிலையைச் சித்தரிக்கிறார்.

''முதலாளியம்மாவின்
பழம் புடவை
அம்மாவிற்குப் புதுப்புடவை'' (தலித் - 72)

என்று ஆரம்பித்து அது 'தம்பிக்குப் புதுக்கோவணம்' என முடிகிற போது அந்த நைந்துபோன பழம்புடவைபோல, நாளுக்கு நாளாய் தலித்களின் வாழ்க்கை நலிந்து வருவதைச் சொல்லாமல் சொல்லி விடுகிறார்.

சாதி

மதம் மாறுவதால் மதம்தான் மாறியதே தவிர அதன் உறுப்பான சாதி ஒழியவில்லை. ஒட்டிக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. சாதிகளே இல்லை என்கிற நிலைபாட்டை எடுக்கின்ற வரையில் ஒடுக்கும் சக்திகளை எதிர்த்து நிற்க மதமாற்றம் ஒரு தீர்வாக அமையாது என்கிறார் கவிஞர். இக்கருத்தை,

''எல்லாச் சடங்குகளிலும்
என்சட்டை தான் மாறியது
சாதியோ
இன்னும் பறையனாகவே
இருக்கிறது'' (தலித் - 2:75)

என்கிற வரிகளால் கோடிட்டுக் காட்டுகிறார்.

'நான் உண்டு என் வேலை உண்டு, வேறு எதிலும் தலையிட்டுக்க மாட்டேன் சார்' என்று கூறிக்கொண்டு தன்னைச் சுற்றிச் சுவர் எழுப்பிக்கொண்டு வாழ்பவர்களை நோக்கி,

''உன்சுவர் ஒன்றும்
சீனச்சுவர் அல்ல
பெர்லின் சுவர்தான்
உடைத்துத் தகர்த்து வெளியே வா!'' (சுவர்கள் - 77)

என்று சாடுகிறார் கவிஞர். அதே சமயம் சமகால வரலாற்றின் தடயத்தினைப் பதிக்கிறார்.

முடிவுரை

''சில தலித் கவிதைகளும்'' தொகுப்பின் மூலம் விளக்கு தூக்கிகளின் நிலை, காலனிகள் காலணிகளாய் மாறியிருக்கும் அவலங்கள், கள்ளவாக்குகள், கோபப்படுதலின் அவசியம் அம்பேத்கரின் மாண்பு, வரதட்சணைக் கொடுமை, தலித்களின் குடும்பச் சூழ்நிலை, சுயநலவாதிகளைச் சாடுதல், சாதிய ஒடுக்கு முறைகள் போன்ற சிந்தனைகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

துணைநூல்கள்

1. சில தலித் கவிதைகளும், இராசமுருக பாண்டியன்; அன்னம் வெளியீடு, சிவகங்கை.
2. தற்காலத் தமிழிலக்கியம்; இரா. தண்டாயுதம்; தமிழ்ப் புத்தகாலயம் வெளியீடு, சென்னை.

வாங்கல் புலப்படுத்தும் சமூகக்கட்டமைப்பு

சு. நயினார்

அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி)
சிவகாசி - 626 124

இன்று வளர்ந்து வரும் இலக்கிய - புதினப் படைப்பாளி களுள் ஸ்ரீதரகணேசன் குறிப்பிடத்தக்கவர். இவர் படைத்த மூன்று புதினங்களும் இலக்கியத் தரம் வாய்ந்தவை; எல்லோராலும் பேசப்படக் கூடியவை. இவரின் முதல் புதினமாகிய 'உப்புவயல்' தமிழ் வளர்ச்சித்துறை பரிசையும் பல பாராட்டுக்களையும் பெற்று பல்வேறு கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பாடநூலாக உள்ளது. இரண்டாவது 'சந்தி' இதுவும் பல பரிசுகளைப் பெற்றது. மூன்றாவது வாங்கல்; ஸ்ரீதரகணேசன் வாங்கல் புதினத்தை இரண்டு பாகமாக அமைத்துள்ளார்.

வாங்கல் கடலோரக் கிராமத்தின் மீன்பரதவர், பறையர், நாடார், தேவர் எனப் பலதரப்பட்ட மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. இவ்'வாங்கல்' (கடல் கொந்தளிப்பு) பெரியதாழை-முத்தம்மாள்புரத்தைக் கதைக் களமாகக் கொண்டு - படுக்கப்பத்து, உடன்குடி, மணப்பாடு, திருச்செந்தூர், செட்டிவிளை, திசையன்விளை, முதலூர், உவரி, குலசை, சாத்தான்குளம், தூத்துக்குடி, நாகர்கோவில், திருநெல்வேலி-மூன்று தலைமுறைகளைப் பற்றிய கதையைச் சொல்கிறது.


ஸ்ரீதரகணேசன் இப்புதினத்தைச் சிறு இடப்பிறழ்வு, காலமயக்க மின்றிக் கதையைத் தொய்வின்றித் தொடர்ச்சியாக, வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் அழகுற அமைத்திருக்கிறார். அடித்தள மக்கள் பேசுகின்ற மொழிநடையில் (பரதவர்) வட்டார வழக்குச் சொற்களைப் புகுத்தியிருக்கிறார். வாங்கல் புலப்படுத்தும் சமூகக் கட்டமைப்பினை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

வாங்கல் புதினத்தில் சாதி, சமய, வர்க்கம் ஆகியவற்றுள் வீட்டிற்குள்ளும் வெளியிலும் - காணலாகும் சமூகக் கட்டமைப் பினைப் படைப்பாளி மிக ஆழமாகப் பதிவு செய்திருக்கிறார். இப் புதினத்தில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு தன்மையில்

வார்த்தெடுக்கப் பட்டுள்ளன. தந்தை-பிள்ளை-கணவன்-மனைவி-தாத்தா-பேரன் என்ற உறவு நிலையிலும் தொழிலாளி-முதலாளி-ஏழை-பணக்காரன் என்னும் வர்க்க நிலையிலும் பரதவர்-பறையர், நாடார்-பறையர் என்ற சாதிய நிலையிலும் கிறித்துவம் - இந்து என்ற சமய நிலையிலும் பலவற்றையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது வாங்கல்.

வாங்கலில் சாதி, சமய, வர்க்க, சமூகக் கட்டமைப்பு நிலைகளில் முரண்பாடுகளும் மோதல்களும் காணப்படுகின்றன. இம்முரண்பாடுகளும் மோதல்களும் அவ்வப்போது கடல் வாங்கலைப் போல வீறு கொண்டு வேகமாக எழுவதையும் அமைதியாக அமுங்குவதையும் இதனுள் காணலாம்.

சமூகக் கட்டமைப்பு



கூம்பு 1

பொருளாதார, சாதி, சமய அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருக்கும் வலுவான பரதவர் சமூகக் கட்டமைப்பு.

கூம்பு 2

பொருளாதார, சாதி, சமய நிலையில் கட்டுப்பாட்டை மீறவும் முடியாமல், கட்டுப்பட்டு ஒன்றுடன் ஒன்று அதிக தொடர்பில்லாத பறையர் சமூகக் கட்டமைப்பு.

பரதவர் சமூக உறவு நிலைகளை வாங்கல் தெளிவாகப் புலப்படுத்துகிறது. கைத்தான்பிள்ளை - பிலோமி ஆத்தா, ரொசாரிபர்னாந்து, மெட்டில்டா, மோரீஸ் - மரிய நெக்கிளா, குருஸ் பர்னாந்து-லூடா, எலியாஸ்பர்னாந்து - திரேசம்மா, சேவியர்பர்னாந்து - எலிசிராணி, இராமநாதன் - ரோசம்மா போன்றோவர்களின் குடும்ப - சமூக உறவு நிலைகள் அனைத்திலும் சாதி, சமய, பொருளாதாரத்தில் மேல் நிற்கின்றன.

கூம்பு 1-இல் குடும்பத்தலைமை மனைவி மக்களுடன் கொடுக்கல் - வாங்கல் மூலம் சமூக மதிப்புடன் வாழ்வதுமான - முதலாளியாக வாழ்வதுமான - நிலை எனலாம். ஆனால் எண் 4,

மாறுபட்டுச் செல்கிறது. தொம்மைபர்னாந்து, சிங்கராயன், சூசை போன்றோர் இக்கட்டமைப்புகளுக்கு வெளியே எல்லாரும் சமமாக வாழ நினைக்கும் ஒரு மானுடவர்க்கப் போராளியாகக் காட்சி யளிக்கின்றனர்.

தொம்மைபர்னாந்தின் அண்ணன் - ரொசாரிபர்னாந்து, தம்பி - தாமஸ்பர்னாந்து இருவரும் 'ஒரே துட்டுத் துட்டென்று அலையக் கூடியவர்கள். பணத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயங்காதவர்கள். இதற்காக இந்த இரண்டு பேர்கள் மூஞ்சிலையும் முழிக்கிறதே கிடையாது' (ப. 16) எனக்கூறும் தொம்மைபர்னாந்து பணத்தாசையில்லாதவனாகத் தெரிகிறான்.

தொம்மைபர்னாந்து பெரியதாழையூருக்குப் பிழைக்க வந்த மோரீஸ் குடும்பத்தாருக்கு இடமளிப்பது, வங்கிக் கடன்பெற்றுக் கடைகள் வழங்குவது, தலித்துகளுக்குரிய அரசு வேலையை அவர் களுக்காகப் பெறுவது, முதலாளிமார்கள் மீன் வாங்குவதில் அடிக்கும் பகல் கொள்ளையைத் தடுப்பது, கூட்டுறவு சங்கத்திற்குச் சம்பாடி களை-உறுப்பினர்களைச் சேர்ப்பது, இறால்மீன் விலைப்பட்டியலைப் 'போர்டில், தெரியப்படுத்துவது போன்ற பொதுநலத் தொண்டில் ஈடுபட்டு அவன் ஒரு முற்போக்கு - மார்க்சீயச் சிந்தனையாளனாகச் செயல்படுகிறான்.

அழகுவேல் இறப்புகூடத் தொம்மைபர்னாந்தின்; மனதை உறுத்திற்று; துக்கம் தொண்டையைக் கட்டியது. உடல் குலுங்கிற்று; அவனால் அங்கு நிற்க முடியவில்லை என்கிறார் படைப்பாளி. ''கைத்தான்புள்ள மக்களுள் இவுருதான் தங்கமான ஆளு, மத்தவனுகலெல்லாம் திமிருப்பிடிச்சவனுக. ஒரு அவசரத்துக்கு அஞ்சு பத்து கேட்டாலும் தரமாட்டானுவே கூலிக்காரன் செத்துப் போன எவ்வனாவது வந்து எட்டிப் பாப்பானுவேள?'' (ப. 54) என்கின்றனர்.

பொட்டுப்பாட்டி இறப்பின்போது ''பாதர் கல்லறைத்தோட்டம் அடைச்சுக் கெடக்கு. பாடியை ரோட்டு மேல வச்சுருக்காங்க. சாவி வேணும்'' (270) எனக் கேட்கும் தொம்மைபர்னாந்து ஒரு மானுட வர்க்கப் போராளியாகவே மிளிர்கிறான். உடன்பிறந்த அண்ணன் மற்றும் உறவுக்கார முதலாளிமார்கள் அனைவரும் தொம்மைபர்னாந்தை அடிக்க ஓரணியில் சேர்கின்றனர். அவன் மனதில் சில ஆசை களுடன் வலம் வருகிறான்; ஊனமுற்ற பாத்திமாவின் காதலுக்காக ஏங்குகிறான்; அது ஊமைக் காதலாக முடிகிறது. (ப. 263)

பறையர் சமூகக் கட்டமைப்பின் உறவு நிலைகளைப் பார்த்தால் மின்னடிச்சாம்பான் - பொட்டுப்பாட்டி, அழகுவேல் - பேச்சியம்மை பிற பறையர் குடும்பங்களும் பொருளாதர, சாதி, சமய நிலையில் கீழ் நிலையில் (பரதவர் நிலைக்குத் தலைகீழாக) உள்ளனர். கூம்பு 2 குடும்பத்தலைமையும் மனைவி மக்களும் பொட்டி, தட்டி, புனைதல், முதலாளிமார்கள் பண்டாலையில் - பண்டகசாலையில் - மீன்சுமத்தல் - மீனைவெட்டி உப்புவைத்தல் போன்ற எடுபிடி வேலைகளைச் செய்கின்றனர். பிறரைச் சார்ந்து வாழும் நிலையில் உள்ளனர். இவர்கள் குடும்ப உறவுகள் கூட ஒட்டி உறவாடாமல் கடலோரத்தில் ஒதுங்கும் துரும்புகளாக - புழுக்களாக நெளிவதைக் காணலாம் கூம்பு 2-இல் எண் 4 பக்கிள், மகாலிங்கம் உள்ளிட்ட பலரும் சாதி, சமயக் கட்டமைப்பு முரண்களுக்கு வெளியே வரத் துடிக்கும் போது வீட்டுப் பொருளாதரம் முட்டுக்கட்டையிடுகிறது.

பிலோமி ஆத்தா வேலைக்காக வந்திருக்கும் பக்கிளிடம் ''லேய்.....நீ ஆரு?'' ''பச்சேரிலையா.....'' என்றதும் இந்த இழுப்பு எளக்காரம் எக்காளம் எல்லாம் எதற்கு? சேரியா என்று ஏன் அழுத்திக் கேட்கிறாள்? எச்சியை விழுங்க முடியாமல் தவித்தான்'' மேலும் பக்கிள் லிங்கத்துரை (உடன் பயின்ற நாடார் சமூக நண்பன்) வீட்டிற்குச் சென்றிருந்த போது, ''எப்பூ சேரிலநீ ஆரு மவன்? சாப்புடு....என்ற பாட்டியின் குரல் பக்கிளுக்குத் திக் கென்றிருந்தது அவன் லிங்கத்துரையிடம் சொல்லாமலே திரும்பி விடுகிறான். ''பட்டையில் சோறு கொடுத்தாலும் அங்கன உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு வருவார்கள். இது இன்னைக்கு உள்ள பையமார் களுக்கு சரி வருமா என்ன? எவ்வளவு காலம்தான் பட்டைச் சோறுக்குப் பலியாக முடியும்'' (ப. 12) என்ற பக்கிளின் மனக் குமுறல் தன் சாதி இழிவை நினைந்து நொந்து கொள்கிறான். அவன் பழைமையில் இருந்து மீண்டு ஒரு புதுக்கட்டமைப்பை - புதுமையைத் தேடி ஓடுகிறான்.

அஞ்சலக ஊழியரான தங்கையாபர்னாந்து முந்நூறு ரூபாய் மணியார்டரை முப்பது ரூபாய் என்று ஏமாற்றியது தெரிந்தவுடன் முத்தமாள்புரத்து ஆட்கள் அவரிடம் மீதி பணத்தை வாங்க முயற்சிக்கிறார்கள். அப்போது 'ஏலேய் என்னலே ரொம்பவும் முந்திரிங்க. அதான் இந்த நொட்டு நொட்டு றிங்கலேய்...அவுரு பணம் தரமாட்டாரு....செய்கிறதச் செய்ங்களா?'' (187) என்றவனைப் பயந்து யாருமே எதிர்க்கவில்லை ஆதிக்கவர்க்கமான பரதவர், நாடார் சாதியாரிடம் பறையர்கள் தொழில், பொருளாதார ரீதியாக நேர்மையைக் கூட எதிர்க்கத்திரணில்லாத நிலையை இப்புதினம் முன் வைக்கிறது.

பக்கிள் - லூர்து காதல் வெளிப்பாடு

லூர்து மேரி பக்கிளுக்குக் காப்பி கொடுக்கும் போது நம்ம ஆளுக்குப் பப்பாதியாகக் குடிப்போம்....வேணாம் நீங்க பாதியக் குடிச்சுட்டு கொடுங்க, நா பாதியக்குடிக்கேன்.....ம்'', அப்பம் நீங்க பாதியை குடிச்சுட்டு தாங்க'' (157) என்கிறாள். அஞ்சலக வேலை கிடைத்த பின் பக்கிளுக்கு லூர்துமேரி ''ஜூஸ்'' கொடுக்கிறாள். ''அவள் கையில் முத்தம் கொடுத்த பக்கிள்'' என்ன மன்னிச்சுகாங்க நீங்க என்ன தண்டனைக் கொடுத்தாலும் ஏற்றுக்கிடுறேன்'' (259) என்கிறான். தூய்மையான பக்கிள் - லூர்துமேரி காதல் சாதீயக் கட்டுப்பாட்டை மீறமுடியாமல் மலராத மொட்டாகவே - ஒரு தலைக்காதலாகவே உள்ளது. பக்கிளி ஆசை, கனவு, ஏக்கம், சுகம் எல்லாம் வேதனையில் வதங்குகின்றன.

மதப்போர்வைக்குள் மறைந்திருந்து மக்களை ஏமாற்றும் பங்குசாமி, ஏசுவின் பெயரைச் சொல்லி காந்தி ரூபாயைக் கொடுத்து கற்பை விலைக்கு வாங்கிறார். எலிசிராணி போன்று வறுமையில் வாழும் பெண்களின் கற்பை பங்குபோடும் இச்சமுதாயத்தில் வலம் வருவதை வாங்கல் தோலுரித்துக் காட்டுகிறது.

கல்லறைத் தோட்டத்தில் பரதவர்களுக்குக் கொஞ்சம் இடம்; பறையர்களுக்குக் கிடையாது.....என்பது மதத்தின் பெயரால் மக்களைக் கூறு போடுவதை இப்புதினம் தெளிவுறுத்துகிறது. வாங்கல் கசப்பான வாழ்க்கைச் சூழலுக்குட்பட்ட முரண்பாடுகளைக் காட்டுகிறது. பொட்டுப்பாட்டி இறப்பில் பறையர் சமூகம் அந்நியப்பட்டு நிற்கும் நடப்பியல் யதார்த்தங்களை - சமூக வரலாற்றுண்மைகளை வட்டாரத் தன்மையில் படம் பிடித்துக் காட்டுகிறது. பறையர் வாழ்வியல் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் ஓர் எழுச்சிக் குரல் - போராட்டத்தை முன்வைக்கிறது. ஸ்ரீதரகணேசன் தாம் கண்டு பழகிய சாதீய சமயத்தின் வர்க்க முரண்பாட்டையும் பறையர் சமூகம் மேல் நோக்கி நகர்ந்து மறுகட்டமைப்புச் செய்யவும் விரும்புகிறார்.

மானிடவியல் நோக்கில் கையுறை

அ. ஜோஸ்மின் புனிதா

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 5

சங்க இலக்கியத்தில் கையுறை

கையுறை என்பதற்குத் தமிழ் அகராதி காணிக்கைப் பொருள் என்றும், தலைவிக்கு அன்பு பாராட்டித் தலைவன் கொடுக்கும் தழை முதலிய நன்கொடை என்றும் எடுத்துரைக்கின்றது. சங்க இலக்கியமான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு முதலிய நூல்களிலும் தலைவன் தலைவிக்குக் கையுறை கொடுத்தல் நிகழ்வினைக் காணமுடிகிறது. தமிழர் மணமுறையில் மணப் பெண்ணுக்குப் பொருள் கொடுத்து மணக்கும் முறையும் இருந்துள்ளது என்பதை இலக்கியச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன.

''செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பிற் செங்கோட்டு யானைக்
கழற்தொடிச் சேஎய்க் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே'' (குறுந். 1)

இச்செய்யுளின் பொருளாவது தலைவன் தலைவிக்குப் பரிசாகக் கொண்டு வரும் சிவப்புநிறக் காந்தள் மலரைப் பார்த்த தோழி, தலைவனிடம் இம்மலரை என் தலைவி பார்த்தால் போர்க்களம் தான் அவள் நினைவுக்கு வரும். ஆகையால், இம்மலரை என் தலைவி ஏற்கமாட்டாள் என்று தலைவன் கொண்டு வருகின்ற காந்தள் மலரை வாங்கத் தோழி மறுக்கின்றாள்.

''கடவுட் கற்சுனை யிடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி பொன்பூ அருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொறப்பச் சூர்மகள்
அருவி யின்னியத் தாடு நாடன்'' (நற். 34)

இப்பாடலில் கடவுளுக்குரிய குருதிப்பூவை இவளுக்குத் தந்தவர் யார் என்று ஊரார் அலர் பேசுவர். ஆதலால் நீர் தலைவிக்குத் தரவேண்டாம் என்று மறுக்கின்றாள்.

''குருதி யொப்பின் மென்பூங் காந்தள்'' (நற்றிணை. 399)

முருகனுக்குரியது காந்தள் மலர் ஆகையால் செவ்வேளைச் சிறப்பித்து அக்கடவுள் குன்றத்தை அடையாளப் பூவால் புகழ்ந்து பாடியதனால் ஏற்க மறுக்கின்றாள்.

''வெறியாட்டயர்ந்த காந்தளும்'' *(தொல் - புறம். 5)*

வேலன் வெறியாட்டிற்கு அன்றி வேறு எச்செயலுக்காகவும் காந்தளைப் பறிக்க மறுப்பர். ஆகையால் கையுறையாகக் காந்தள் மலர் வேண்டாம் என்கிறாள்.

''கலந்தந்த பொற்பரிசம்
கழித் தோணியாற் கரைசேர்க்குந்து
மலைத்தாரமுங் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங்கள்ளின் பொலிந்தார்க் குட்டுவன்''. *(புறம். 343)*

இச்செய்யுளில் முசிறி நகரத்தை ஒத்த நலம் சான்று உயர்ந்த பொருள்களைக் கொண்டுவந்து உவகையுடன் கொடுத்தாலும் இவர் ஒப்பாதார் அல்லாதாரை மணந்து கொள்ளாள். தந்தையும் கொடுக்க மறுப்பார் என்று சொல்லி மறுக்கின்றாள். இக்கருத்துக் களைப் பார்க்கும்போது சங்க காலத்திலேயே மணப்பெண்ணுக்குப் பொன்னும், பொருளும் கொடுக்கின்ற வழக்கம் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

''..................அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்பூங் காந்தளர்
பெருந்தண் கண்ணிமிலைந்த சென்னியன்''. *(முருகு. 43-43)*

இச்செய்யுளில் தோழி காந்தள் மலர் தெய்வம் சூடுவது ஆகையால் வேண்டாம் என்று கையுறையை மறுக்கின்றாள்.

பரிசக் குறிப்பும், மகள் மறுப்பும்

பரிசங்கொடுத்து மணத்தலில் பரிசக்குறிப்பும் மகள் மறுப்பும் காணப்படுகிறது. சங்க இலக்கியப் பாடல்களில் பரிசங் கொடுக்கும் முறை, அதிக எதிர்பார்ப்பு ஆகியன பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன.

''இரும்பிடர் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கான் கோசர் நியமம் ஆயினும்
உறுமெனக் கொள்ளுநர் அல்லர்
நறுநுதல் அரிவை மாசிழை விலையே'' *(அகம். 96)*

இப்பாட்டில் அஞ்சாமைக் குணம்கொண்ட கோசரின் ஊரினைக் கொடுத்தாலும் எம் சுற்றத்தார் எம் பெருமாட்டிக்குப் புதிய

அணிகலன்களுக்கு விலையாக அமையும் என்று, மனத்தில் அமைதி கொள்ளுவர் என்று மகள் மறுக்கிறாள்.

''எக்கர் ஞாழன் மலரின் மகளி
ரொண்டழை அயருந் துறைவன்
தண்டழை விலையென நல்கின னாடே''. (ஐங். 146)

சுற்றத்தார் வேண்டியதைக் கொடுத்துத் தலைமகன் வரைவு மாட்சிமைப் படுத்தியதை அறிந்த தோழி உவந்த உள்ளத்தவளாய்த் தலைவியிடம் எடுத்துரைக்கின்ற வகையில் அமைந்துள்ளது.

காப்பியத்தில் கையுறை

சிலப்பதிகாரத்தில் கையுறை பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

''காந்தள் மெல்விரற் கைக்கிளை சேர்குரல்
தீந்தொடைச் செவ்வழிப் பாலையிசை யெழிஇப்
பாங்கினிற் பாடினோர் பண்ணுப் பெயர்ந்தாள்
மையறு சிறப்பிற் கையுறை யேந்தி''. (சிலப். 20-22)

இச்செய்யுளில் விலையுயர்ந்த முத்தையும் சந்தனத்தையும் முற்காலத்தில் திறைப் பொருளுக்குத்தான் பயன்படுத்துவர். பிற்காலத்தில் குங்குமத்தால் அலங்கரிக்கப்பட்ட முற்றமாகிய பரப்பிலே முத்தையும் சந்தனத்தையும் கையுறையாக ஏந்திக் கொணர்ந்தாள் என்று சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது. தாய் வீட்டிலிருந்து முத்தும் சந்தனமும் கையுறையாகக் கொண்டு சென்றுள்ளாள் என்பதனைக் காப்பிய இலக்கியம் கூறுகின்றது.

கையுறை பரிசம்

கையுறை என்பது தலைவன் தலைவியினைப் பாராட்டிக் கொடுக்கும் பரிசுப் பொருள் ஆகும். அக்காலத்தில் பெண்ணை மணமுடிக்கப் பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் பொன்னும் பொருளும் கொடுத்துப் பெண்ணை உரிமையாக்கிக் கொண்டுள்ளனர். பெரும்பான்மை இன்றும் சிலரிடையே இவ்வழக்கம் உள்ளது. இருப்பினும் இன்றையச் சமுதாயத்தில் மாற்றம் பெற்று ஆணுக்குப் பெண் வீட்டார் கொடுக்கும் வரதட்சனை முறை என்ற ஒரு வழக்கம் அனைத்துச் சமூகப் பிரிவினரிடமும் காணப்படுகிறது.

சங்ககாலத்தில் களவில் புணர்ச்சி மேற்கொண்ட தலைவன் தலைவியைப் பாராட்டி அவனது நாட்டில் கிடைக்கும் சிறப்பான பொருளைக் கையுறையாகக் கொடுக்கின்றான் கொடுப்பதன் மூலம் தலைவியைத் தனக்கு உரிமையுடையவளாக ஆக்கிக் கொள்கிறான். 'பரிசம்' என்பது தலைவன் தலைவியை மணமுடிக்கும் முன்பு ஊரார் முன்நிலையில் செய்து கொள்கின்ற ஒரு உடன்பாட்டு நிகழ்

வாகும். இதனை இன்று பரிசம் போடுதல், பூப்போடுதல், நிச்சய தார்த்தம் செய்தல் என்ற பெயர்களில் நடைபெறுகின்ற நிகழ்வாகும். தற்கால பரிசமுறைப் பற்றி கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

பக்தவச்சலப்பாரதி தம் நூலில் பரிச முறை பற்றிக் கூறுகையில்,

> "மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்குப் பணமோ பொருளோ கொடுப்பதும் அல்லது வேறு வகையான செல்வம் கொடுப்பதும் மணப்பெண் பணம் எனக் கூறப்படும்" (பண்பாட்டு மானிடவியல், ப. 411)

மணப்பெண் பணம் என்பது ஒருவகைச் சுழற்சிப் பாங்குடைய மூலதனமே (Circulating Capital) என்றும் கூறுவார்.

> "இப்பரிசம் கொடுக்கும் பழக்கம் இந்தியப் பழங்குடி மக்களிடம் இன்றும் காணப்படுகிறது. இது மகளின் பணியைப் பெற்றோர் அடைய முடியாததால் வாங்கப்படும் ஈட்டுத் தொகையாகக் கருதப்படுகிறது. இதன் தொடர்ச்சி இன்றும் மலையின மக்களிடம் காணப்படுகிறது என்று அழகம்மை தமது நூலில் குறிப்பிடுகிறார்". (சமூக நோக்கில் சங்க மகளிர், ப. 22)

இவ்வாறாகப் பரிச முறையினைப் பற்றி எடுத்துரைக்கிறார்கள்.

தற்காலத்தில் பரிச முறை

சங்க காலத்தில் பரிசுப் பொருளாகத் தலைவனது நாட்டில் கிடைக்கும் பொருளைத் தலைவிக்கு கொடுத்துச் சிறப்பித்துள்ளான். ஆனால், இன்றையச் சமுதாயத்தின் நாகரிகத்திற்கேற்பக் கையுறையாக வாங்கிக் கொடுக்கும் பொருள் இருக்கத்தான் செய்கிறது. இப்போது தலைவி வீட்டாரால் பணம், பொருள் என்று தலைவன் வீட்டாருக்குக் கொடுக்கும் வழக்கத்தை கீழ்வரும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

> "மணக்கொடை (வரதட்சணை) என்பது மணப்பெண் வீட்டார் மணமகன் வீட்டாருக்குப் பெருந்தொகையையோ, பொருள் களையோ கொடுப்பது ஆகும். இந்தியச் சமுதாயத்தில் எண்ணற்ற சமூகங்களில் திருமணத்தின்போது பணக்கொடை கொடுக்க வேண்டு மென்பது கட்டாயமாக உள்ளது. இந்தியச் சுழலில் மணக்கொடையின் அளவு மிகுதியே கல்வி, தொழில் நல்ல எதிர்காலம், ஆகியவற்றைக் கொண்ட மணமக்களைத் தேடும் போது மணக்கொடையின் அளவு பலமடங்கு மிகுதியாகிறது. இது மணக்கொடை கொடுப்போரின் குடும்பத்தில் ஒரு தனி மனிதனின் பல ஆண்டுகால உழைப்புக்கு ஈடாக அமைகிறது என்று கூறுகிறார்" (பண்பாட்டு மானிடவியல், ப. 413)

பெண் சிறப்பாக வாழ்க்கை நடத்த வேண்டுமேயானால் அப்பெண் புகுந்த வீட்டிற்குக் கொடுக்க வேண்டிய பணமோ, பொருளோ கொடுத்து முதலீடு செய்யவேண்டும். மருமகள் கொணர்ந்த மூலதனத்தின் மதிப்பு (அந்தஸ்து) அதிகரிக்கின்றது. மணமகனின் பெற்றோர் மணக்கொடையின் மூலம் ஈடுகட்டும் மூலதனம் அவர் அவருடைய மகனை உருவாக்குவதற்குச் செய்த செலவின் வட்டியும் முதலுமாக அமைகின்றது. எனவே இன்றைய சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினரிடமும் வரதட்சணை நிலை பெற்று விட்டது.

மணக்கொடை பெறுவதற்கான இரண்டு காரணங்களைச் சுட்டுவர் :

1. புகுந்த வீட்டின் சொத்துக்களிலும் உடைமைகளிலும் மணமகளும், அவளுடைய மக்களும் பங்கு பெறுவதால் அவளுடைய பங்கும் (சொத்தும்) சேரவேண்டும் என்றனர்.
2. குடும்பப் பொருளாதார உற்பத்தி முறையில் பெண்களின் தனிப்பட்ட பங்கு குறைத்து மதிப்பிடப்படுகிறது. அவர்களின் பங்கு பணம், பொருள் இவற்றைச் சாராததாக உள்ளது.

(எ.கா) சமையல் செய்தல்
விறகு சேகரித்தல்
துணி துவைத்தல்
குழந்தைகளைக் கவனித்தல் முதலியன.

தொகுப்புரை

சங்க காலத்தில் இருந்த கையுறை (பரிச முறை) இன்றைக்கும் அனைத்துப் பிரிவினரிடமும் நிலைத்து இருப்பதை அறிய முடிகிறது. ஆனால் சிறிது மாற்றத்துடன் நிகழ்கிறது, கையுறைப் பின்னர்ப் பரிச முறையாகவும், நாகரிக வளர்ச்சி, பொருளாதாரம், இவை காரணமாக ‘வரதட்சணை முறை’ என்ற பெயரிலும் மாற்றம் பெற்றுள்ளது. இன்று மணப்பெண் பணம் பரிச பணம் என்ற பெயரில் கையாளப்படுகிறது. பொருளுக்கு மதிப்புக் கொடுக்கும் இன்றைய நிலை அன்றைய நாளின் எச்சமே ஆகும்.

சங்ககால மரபுகளை இன்றும் தமிழர்கள் பின்பற்றி வருகின்றனர். எனவே, சங்க இலக்கியம் மக்களின் வாழ்க்கை முறையைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது எனலாம்.

மக்கள் இலக்கியம் சுட்டும் மானிட விடுதலை

ஆ. ஜான்துரை

துறையூர்

மனிதப் படைப்புகள் பற்றிப் பல்வேறு சமயங்கள் தம் நம்பிக்கை அடிப்படையில் விளக்குகின்றன. குரங்கின் பரிணாம வளர்ச்சியில் மனிதன் உருப்பெற்றான் என விஞ்ஞானம் விளம்புகிறது. எது வாயினும் படைக்கப்பட்ட மனிதன் பிற படைப்புகளிலிருந்து உயர்ந்து நிற்பது - ஆறறிவு கொண்டு சிறந்து நிற்பது கண்கூடு. ஆனால் மனித சமுதாயத்தில் வர்ணாசிரம தர்மத்தினடிப்படையில் மனிதன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் எனப் பிரிக்கப்படுகிறான். பொருளாதாரத்தினடிப்படையில் செல்வந்தன் - வறியவன் என்ற ஏற்ற தாழ்வில் மனிதன் மாற்றம் பெறுகிறான். அரசியல் அரங்கில் வாக்கு வங்கிகளால் மக்கள் ஆட்சியில் ஐந்தாண்டிற்கு ஒருமுறை பதவி பெறுபவர்களால் ஏழையர் பண்பாடு ஏளனப்படுத்தப் படுகிறது. வறுமைக்கோடு மனிதத்தைப் பிரித்தாள்கிறது. படைத்தவன் பார்வையில் மனிதன் படும் காயத்தை மக்கள் இலக்கியம் தத்ரூபமாய்ப் படம் பிடித்துக் காட்டுகிறது. மக்கள் என்பார் யார்? இலக்கியம் என்பது யாது? மக்கள் இலக்கியம் சுட்டும் மானிட விடுதலை எங்ஙனம் சாத்தியம்? இத்தகு கேள்விகட்கு இங்கு விடை தேடப்படுகின்றது.

மக்கள் என்பார் யார்?

மக்கள் என்ற சொல் ஆழ்ந்த பொருளை உள்ளடக்கியது. இறைவனின் படைப்பில் மனிதன் வேறுபாடற்றவன். ஏற்ற தாழ்வு அற்றவன். உயர்வு தாழ்வு என்ற பிரிவினையற்றவன். உளதாம் வாழ்வில் எத்தனையோ ஏற்றங்கள் - மாற்றங்கள். அது ஒரு சிறு கூட்டத்திற்கே! பெருவாரி மக்கள் கூட்டத்துக்கோ ஏமாற்றங்கள் தடுமாற்றங்கள். எண்ணிலடங்கா ஏக்கங்கள் - எதிர்நோக்குங்கள். கும்மிருட்டின் கர்ப்பப்பைக்குள் சுருண்டு கிடந்தது கிராமங்கள் பசியின் நண்டுக்கால்களில் சிக்கித் தவிக்கும் மனிதங்கள் என்ற அளவில் அவலநிலையும், வறுமைச் சூழலும் வலம் தரத் தவிக்கும்

மனித ஜீவிகள்! உறக்கமின்றி உழைக்கும் மக்கள், ஊதியம் மறுக்கப்படும் மக்கள். அய்யன் திருவள்ளுவர் மக்கள் யாரென இவ்வாறு சுட்டுகிறார்.

''மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல்''

கயவர்களோ மக்கள்? இல்லை, இல்லை. உழைத்து வாழ்வோர், ஒடுக்கப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், உழைப்பால் வாழ்வு பிழியப் பட்டோர், பிழைப்பைத் தேடிப் 'பிழையாய்' நிற்கும் கூட்டத்தார். இத்தகு நிலையினரே மக்கள் என விளிக்கிறார். சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டும் பொருளாதாரத்தால் ஒடுக்கப்பட்டும், பண்பாட்டால் பழிக்கப்பட்டும், அரசியலில் ஓட்டுவங்கியென ஓரங்கட்டப்பட்டும், சமயத்தால் சாஸ்திரங்களால் தீட்டுப்பட்டவர்களெனச் சீண்டப்படாத வர்கள் என்ற பெருங்கூட்டத்தார் மக்கள் என்ற மனிதத்தைக் சூடிக்கொள்ளவே மக்கள் இலக்கியம் வழக்காடுகிறது.

மக்கள் இலக்கியம் என்பது யாது?

இலக்கியம் என்பது விண்ணிலிருந்து விழுவதல்ல. மண்ணி லிருந்து, மக்களிடத்திலிருந்து தோன்றுவது. 'மக்களின் உள்ளுணர்ச்சி யிலிருந்து மொழிவடிவம் வெளிப்படுவது இலக்கியம்' என முனைவர் மா. இராசமாணிக்கம் சுட்டுகிறார். வாழ்க்கையைப் புலப்படுத்துவதே இலக்கியம் என்கிறார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. தமிழ் ஆய்வாளர்களும், 'மக்கள் வாய்மொழியிலிருந்து எழுத்தில் பதிந்தவை ஏட்டிலக்கியம், அவ்வாறு வெளிவராதவை நாட்டிலக்கியம்' என்கின்றனர்.

'உள்ளத்தில் ஒளி உண்டாயின், வாக்கினில் ஒளி உண்டாகும்' என்கிறார் பாரதியார் - ஆம்! உள்ளத்தின் அபிலாசைகள், விசும்பல்கள், கோபதாபங்கள், வேதனைகள் வார்த்தைகளாய் வெளிப்படுவது வாய்மொழி இலக்கியம் என்ற நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் இலக்கியங்களாம். மக்களின் பழக்க வழக்கங்கள், சிந்தனைப் போக்குகளை அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

பாரதியார், பாரதிதாசன், வ.ரா. புதுமைப்பித்தன், சு. சமுத்திரம் போன்றோரது பாதையிலேயே மக்கள் இலக்கியம் புலர்ந்து வளர்ந்து வருகிறது. இந்த மக்கள் இலக்கியத்தின் அடித்தளமாய் அமைந் திருப்பது பிற்போக்குத்தனங்களையும், சிறுமைத்தனங்களையும் சீண்டிச் சீர்படுத்துகிறது. மனித நேயத்துக்கு மாசு கற்பிக்கும் தூசு மனங்களை, மாசு எண்ணங்களை மாற்றம் பெற வழிகாட்டுகிறது. சாதிக் கொடுமைக்கும், சமுதாய ஏற்ற தாழ்வுக்கும் சவுக்கடி கொடுக்கிறது. சதி, விதி என்ற சாத்திரங்களையும், வரதட்சணை

பெண்மை அடிமைத்தனங்களையும் சிறைப்பிடித்துச் சீர்படுத்துகிறது. மத நல்லிணக்கத்துக்கும், மானிட மாற்றுருவாக்கத்துக்கும் அடித்தளம் அமைத்து முழு மனித விடுதலையை முன் மொழிகிறது மக்கள் இலக்கியம்.

மக்கள் இலக்கியமும், மனித நேயமும்

மானிட விடுதலையும், மனித நேயமும் மக்கள் இலக்கியத்தின் இரு கண்கள். மனிதம் முடக்கப்பட்டு, மாக்களாக ஒடுக்கப்பட்டு உழைப்பும் சுரண்டப்பட்டு, உண்மைகள் புரட்டப்பட்டு அடித்தள மக்களுக்கு அவலத்தைப் பூசினர் மேல்குடி மேதாவிகள். மேல்தட்டு மக்களின் மேதாவிலாசங்கள் புனிதமானவைகளாக முலாம் பூசப் பட்டு எல்லா மதிப்பீடுகளும் புனிதமாகக் கருதப்பட்டன. அக்காலத்தில் சித்தர் இலக்கியங்கள் சிலிர்த்தெழுந்தன. சீர் கெட்ட சமுதாயத்தை சீர்படுத்த முனைந்தன. சீரழிந்த மனுக்குலத்தை ஏற்றம் பெற எழுந்தன. அடித்தட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை உணர்த்திடுபவையாய் அமைந்தன. மக்கள் இலக்கியத்தின் கருவறையாய் அமைந்தன. அடக்கு முறையை ஆக்ரோஷத்துடன் எதிர்ப்பதும், உழைப்புச் சுரண்டலை உறுதியுடன் எதிர்க்கும் ஏவுகணைகள் மக்கள் இலக்கியங்களாய்ப் பரிணமிக்கின்றன.

மக்கள் இலக்கியம் என்பது வாழ்க்கையின் சிக்கல், மனப் போராட்டம், சீரழிவுகளை - மனத்தால் பேசும் மௌனப் புரட்சி களை அரங்கேற்றும் ஊடகமாகும். அது மக்களிடத்து வேரூன்றி, மக்கள் மனத்தில் விழுதுவிடும். நெஞ்சத்து அதிர்வுகள் அரிச்சுவடியாய் அச்சரம் உச்சரிக்கும். உள்ளத்து உணர்வுகள் உறக்கம் தெளிந்து உரக்கப் பேசும். அது நிழல்களின் நிஜங்களாய் நிதர்சனத்தை உணர்த்தும். அதாவது மக்கள் வாழ்வை மையப்படுத்தி, மக்களது வாழ்வை வளமுள்ளதாக்கி வரையப்படுவதாகும். சுருங்கக்கூறின் மக்களால், மக்களுடைய, மக்களுக்கான வாழ்வுப் பிரதிபலிப்பே இயக்கிய வரிகளாய் லயம் சேர்ப்பதாகும்.

தனிமனித வாழ்வையும் சமுதாய முன்னேற்றத்தையும் முன் மொழிவது மக்கள் இலக்கியம். மக்களது இன்ப, துன்ப எதிர்ப்புகள், எதிர்பார்ப்புகள் உரிமைகள், உடன்வறுமைகள், போராட்டங்கள் தொடரும் நம்பிக்கைகள் மனித நேயத்தில் வேர்விடும் இலக்கிய மலர்கள் இவை. கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், ஒப்பாரிகள், பழமொழிகள் போன்றவை இலக்கிய வரிகளில் இனம் காட்டும். அறியாமையை அகற்றி அறிவொளி ஏற்றும் விழிப்புணர்வு குவியல்கள், உணர்வுகளை உசுப்பும் பாடல் வரிகள், போராட்டத் துணிவை வழங்கும் தூண்டல்கள், நம்பிக்கைத் துளிர்விடும் இலக்கியப் படையலே; இவைகளே மக்கள் இலக்கியம்.

தனிநபர்களது உணர்வுப் பிரதிபலிப்புகளையும் உள்ளத் தவிப்புகளையும் ஒருசேர நுணுக்கமாய், நுட்பமாய் வர்ணிக்கும் வாழ்க்கை இலக்கியமாய் வளம் வருகிறது. சமூகப் பார்வை கொண்டு, மக்கள் வாழ்வை வகைப்படுத்தி அவர்தம் முன்னேற்றத்துக்கு முன்னுரை எழுதும் மனிதநேய சிந்தையே - முற்போக்கை உச்சரிக்கும் எச்சரிப்பே மக்கள் இலக்கியக் கூறுகளாம்.

மக்கள் நலனை முன்னிலைப்படுத்தி மானிடத்தின் காயத்தை ஆற்றும் அருமருந்தாய் வலம் வருகிறது. மக்கள் இலக்கியம் மக்கள் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் உரம் சேர்க்கும் பதிப்புகள் பல உலா வந்தவண்ண மிருக்கின்றன. அவற்றுள் குறிப்பாகக் கிறிஸ்தவ இலக்கிய சங்கம், இலக்கிய நண்பர்கள் கூட்டம் என்ற அமைப்பின் கீழ் பல் கருத்தரங்குகளை நடத்தி, அக்கட்டுரைகள் மக்கள் இலக்கியமாய்ப் பரிணமிப்பதைச் சிலவற்றை வரிசைப்படுத்தலாம்.

வளரும் தமிழ் இலக்கியம் *(1969)*

இன்றைய தமிழ் இலக்கியத்தில் மனிதன் *(1972)*

விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள் *(1973)*

தமிழ் நாவல்களில் மனித விமோசனம் *(1974)*

நூற்றாண்டு தமிழ் நாவல் தரும் செய்தி *(1978)*

தற்கால இலக்கியத்தில் முற்போக்குப் பார்வைகள் *(1980)*

படைப்பாளர் பார்வையில் மானுடத்தின் காயங்கள் *(1993)*

தற்காலப் படைப்பிலக்கியத்தில் மத நல்லிணக்கமும் மனித நேயமும் *(1994)*

இலக்கியச் சோலை

இலக்கியங்கள் மக்கள் வரலாற்றை வாசிப்பதுடன் வாழும் வழிதனைக் காட்டுவதாயமைய வேண்டும். அது மக்கள் இலக்கியத்தின் மூலம் சாத்தியமாகின்றது. மக்களுக்கான, மக்களை மையப்படுத்தி, வாழ்வை வளப்படுத்த அறைகூவல் விடுக்கும் அற்புத விளக்குகள். அக, புற இருளை அகற்றி மனுக்குலத்தில் அறிவொளி ஏற்றும் ஜீவஜோதிகள், அடித்தள மக்களை ஏற்றம் பெறச் செய்யும் ஏணிகள். கூனல் சமுதாயத்தினை நிமிர்த்திடும் நெம்புகோல்கள். மானிட விடுதலை மையப்படுத்தி மனித நேயத்தை மலரச் செய்திடும் இலக்கியப் பூமியே மக்கள் இலக்கியம்!

பட்டுக்கோட்டைப் பாடல்களில் மானுடம்

வாசு. அறிவழகன்

பாரதிதாசன் மகளிர் அரசுக் கல்லூரி
புதுச்சேரி - 605 003

மனித மனத்துள் எழும் உணர்வலைகளின் செயலாக்கங்களையும் மனவெழுச்சியினால் தோன்றும் அனைத்துப் பண்புகளின் ஒட்டு மொத்தமான நிலையினையும் மானுடம் என்பர். இக்கருத்தை ''வேறு உள குழுவையெல்லாம் மானுடம் வென்றது'' எனும் கம்பரின் வரியும் உறுதிபடுத்துகிறது. மனிதர்களுக்குள் ஏற்படுகின்ற உறவுகளும் முரண்பாடுகளும் செயலுருப் பெற்று அவை நன்மை களுக்கும் தீமைகளுக்கும் காரணமாவதை அறிவியல் கண்கொண்டு பார்க்கும் இயலை மானிடவியல் எனும் க. முருகேசனின் கருத்தும் குறிப்பிடத்தக்கது (1. ப. 1358).

இவ்வாறு அறிவியல் அடிப்படையில் அணுகி ஆய்ந்தளித்து வருகின்ற மானிடவியல் அறிஞர்களின் ஆய்வு முடிவுகளைத் தமிழ் இலக்கியங்களிலும் காண்கிறபொழுது உள்ளம் பெருமிதம் கொள்கிறது. அப்பெருமைக்குரிய இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டுத் திரையிசைக் கவிஞர் பட்டுக்கோட்டையின் பாடல்களில் மிளிர் கின்ற மானுடத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொதுவுடைமைக் கவிஞர் பட்டுக்கோட்டையின் திரையிசைப் பாடல்களில் பொதிந்துள்ள சமூகம் மற்றும் பண்பாட்டு மானிடவியல் (Social and cultural Anthropology) கருத்துகளை மட்டும் ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாய்வுப் பொருளுக்கு உட்படும் கருத்துகளை அகவாழ்வியல், புறவாழ்வியல் எனும் இருநிலைகளில் பிரித்துப் பார்க்கப்படுகிறது.

அகவாழ்வியல்

''அகத் தூய்மை வாய்மையால் காணப்படும்'' என்பது வள்ளுவரின் வாக்கு. அந்த வாய்மை வெல்லுவதற்கு அன்புடைமையே சிறந்த ஆயுதம் என்பதும் அவருடைய நம்பிக்கை. வள்ளுவர் வழியில் நடக்க வேண்டும் எனப் பல இடங்களில் வலியுறுத்திப் பேசும் பட்டுக்கோட்டையாரும் இக்கூற்றில் மிக ஆழமான நம்பிக்கை

கொள்கிறார். ''அன்புக்கு வணங்கு; அறிந்தபின் இணங்கு; பண்புடன் விளங்கு; பசித்தவர்க்கு இரங்கு (2.ப. 12) எனும் வரிகளிலும் ''குழந்தை வளர்வது அன்பாலே - நல்ல குணங்கள் அமைவது பண்பாலே'' (2.ப. 20) எனும் வரிகளிலும் இதனை வெளிப்படுத்தி யுள்ளார்.

இதே அன்பு தலைவன் தலைவியிடத்தில் வளர்கிறபொழுது அதற்கு ஏற்படுகின்ற வலிமை முன்னதைக் காட்டிலும் உறுதியானது என்பதை,

ஒன்பது சுவையும் ஒன்னாகக் கலந்து
உண்பதுதான் மெய்க்காதல் - இந்த
உலகத்தைத் தூக்கி உருட்டி விளையாடும்
உறவுக்குப் பேர்தான் காதல் (2.ப. 180)

எனும் பாடலில் எடுத்துக் காட்டியுள்ளார். உலகத்தை உருட்டி விளையாடக்கூடிய அந்த இன்பத்தைத் தரவல்ல காதல் நிலைத்திருக்க வேண்டுமானால் இருவரிடத்திலும் கற்பு நிலை குறையாமல் இருக்க வேண்டும் என்பதைப் பட்டுக்கோட்டையார் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். கற்புநிலை குறைகிறபொழுதுதான் அக வாழ்வியலில் மானுடத்திற்கே வீழ்ச்சி ஏற்படுகிறது என்பதை, ''அன்புமயில் ஆடலுக்கு மேடையமைத்தான், துன்பமெனும் நாடகத்தைக் கண்டு ரசித்தான்'' எனும் வரிகளிலும்'' ஆசையிலே பாத்திக்கட்டி அன்பு விதைத்தாள், அல்லும் பகலும் காத்திருந்து பயிர் வளர்த்தாள்'' (2.ப. 119) எனும் வரிகளிலும் பொதித்துள்ளார்.

''மதியுண்டு கற்புடைய மனைவியுண்டு வலிமையுண்டு வெற்றி தரும் வருந்தாதே'' (2.ப. 192) என்று கற்பால் விளையக் கூடிய வாழ்வியலின் உயர்வை எடுத்தியம்பும் பட்டுக்கோட்டையார், இந்த உயர்ந்த மானுடப் பண்பு சிதைந்து போகாமல் இருக்க அகந்தை நீக்கல், அடையாளம் அமைத்தல் ஆகிய இரு வழிகளையும் காட்டி யுள்ளார்.

அகந்தை நீக்கல் எனும் பண்பை இவர், ''அன்பு படர்ந்த கொம்பினிலே ஒரு அகந்தைக் குரங்கு தாவும், கொம்பு ஒடிந்து கொடியும் குலைந்து குரங்கு விழுந்து சாகும் (2.ப. 201) எனும் வரிகளிலும் ஆண் பெண் இருபாலருக்கும் வேண்டிய அடையாள அமைப்பினை, ''கழுத்திலே தாலி கெடந்தா காலிகூட மதிப்பான் - கொஞ்சம் கண்ணியமா நடப்பான் - இந்தக் கயிறு மட்டும் இல்லையின்னா கழுதை போல இடிப்பான்' எனும் வரிகளிலும் ''ஆம்புளைக்கும் தாலி கெடந்தா அடுத்த பொண்ணு மதிப்பா - கொஞ்சம் அடங்கி ஒடுங்கி நடப்பா - இந்த அடையாளம்

இல்லையின்னா அசட்டத்தனமா மொறைப்பா'' (2.ப. 167) எனும் வரிகளிலும் எளிய முறையில் எடுத்தியம்பியுள்ளார்.

உயர்ந்த மானிடப் பண்புகளான மேற்கூறிய அன்பும் கற்பும் தன் நிலை மாறுகிற பொழுதுதான் சமூகம் கடுமையான சீர்கேட்டைச் சந்திக்கிறது எனும் கருத்தை இவர், ''அன்பைக் கெடுத்து - நல் ஆசையைக் கொன்றவன், ஈடற்ற பத்தினியின் இன்பத்தைக் கொன்றவன், பாழும் பரத்தையினால் பண்புதனைக் கொன்றவன், தவறுக்கும் தவறான தவறைப் புரிந்துவிட்டுத் தனிப்பட்டு போனவன்'' (2.ப. 188) எனும் பாடல் வரிகளில் பட்டியல் போட்டுக் காட்டி யுள்ளார். இச்சமூகச் சீர்கேட்டுக்குரியவர்களை மறந்தும் மன்னிக்கக் கூடாது என்பதை இவர், ''மனைவியைக் குழந்தையை மறந்து திரிந்தவனை வாழ்த்துவதாகாதடி, என்தங்கம் மன்னிக்கக்கூடாதடி'' (2.ப. 189) எனும் வரிகளில் முடிவாகச் சொல்லியுள்ளார்.

புறவாழ்வியல்

அகவாழ்வில் மானுடன் வெற்றி பெற எவ்வாறு அன்பும் கற்பும் துணை நிற்கின்றனவோ அதுபோலப் புறவாழ்வில் நம்பிக்கையும் ஒற்றுமையும் இன்றியமையாத கருவிகளாகின்றன. மானுடத்தின் ஆணிவேராக இருக்கக்கூடிய நம்பிக்கை அசைகிற பொழுதுதான் சமூகம் சாய்ந்து போகிறது. இதற்குக் காரணங்களாக இருக்கின்ற அவநம்பிக்கை மூடநம்பிக்கை ஆகிய சமூகப் பிணி களைக் களையப் பட்டுக்கோட்டையார் பெரிதும் முயன்றுள்ளார்.

அவநம்பிக்கையினால் எழும் விளைவை இவர், ''மலை பிளந்தோம், கல்லை உடைத்தோம், மரம் பிளந்து வழிகள் அமைத்தோம், வாடிக்கையாய் உள்ளம் உடைந்தோம், வாழ்க்கை யெல்லாம் துன்பம் அடைந்தோம், எல்லோரும் சேர்ந்து ஏமாத்தும் போது, முன்னேறும் பாதை ஏது'' (2.ப. 48) எனும் வரிகளில் கோடிட்டுக் காட்டியுள்ளார். இதுபோன்ற மூடநம்பிக்கையினால் எழும் விளைவையும், ''வேப்பமர உச்சியில் நின்று பேயொன்று ஆடுதுன்னு விளையாடப் போகும்போது சொல்லிவைப்பாங்க - உன் வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளிவைப்பாங்க'' (2.ப.18) எனும் வரிகளிலும் ''தன் ரேகை தெரியாத பொய் ரேகைக்காரரிடம் கைரேகை பார்க்கவரும்'' (2 ப. 206) எனும் வரிகளிலும் எடுத்துக் காட்டியுள்ளார்.

நம்பிக்கையெனும் மானுடத்தின் ஆணிவேரை அழுகச்செய்யும் ''திண்ணைப் பேச்சு வீரர்களிடம் ஒரு கண்ணாய் இருக்கனும் அண்ணாச்சி'' என்று எச்சரிக்கை செய்கிற பட்டுக்கோட்டையார், ''வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை வேடிக்கை

யாகக்கூட நம்பிவிடாதே - நீ வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து வெம்பிவிடாதே'' (2.ப. 18) எனும் வரிகளில் பாடம் புகட்டியுள்ளார்.

இச்சமூகப் பிணிகள் பற்றிய எச்சரிக்கை இல்லாமல் போனால் முதலாளித்துவத்தின் எழுச்சியையும் அதனால் விளையும் மானுட வீழ்ச்சியையும் தவிர்க்க இயலாது என்பதை, ''அவன் தேடிய செல்வங்கள் சீமான் வீட்டினிலே சேர்ந்ததினால் வந்த தொல்லையடி'' (2.ப. 36) எனும் வரிகளிலும் ''நாளும் பிணத்தைப் புதைப்பதற்கு - நம்ம நாணய சர்க்கார் உதவுமடி'' (2. ப. 36) எனும் வரிகளிலும் நாசுக்காக நகையாடியுள்ளார்.

இச்சமூகப் பிணிகள் அழிந்து மானுடம் வெல்லுவதற்கு அவர் காணும் ஒரே வழி போராட்டம்தான் என்பதை, ''ஏமாத்தும் போர்வையிலே, ஏழைகளின் வேர்வையிலே எக்காளம் போடுகிற கூட்டம் - மக்கள் எதிர்த்துகிட்ட எடுக்கணும் ஓட்டம்'' (2.ப. 29) எனும் வரிகளில் சுட்டிக் காட்டியுள்ளார். சமூகப் பிணிகளை எதிர்த்து நடத்தப்படும் போராட்டங்களும் அமைப்பு வழியிலான ஒற்றுமை இருந்தால்தான் வெற்றி பெற முடியும் என்பதை, ''எங்கும் விவசாய சங்கம் அமைத்ததில் அங்கம் வகித்திடுவோம் - இந்தத் தங்க முயற்சிக்குப் பங்கம் விளைத்திடும் தன்மையை வெட்டி மிதித்திடுவோம்'' (2.ப. 77) எனும் வரிகளில் உறுதிபடுத்தியுள்ளார்.

நிறைவுரை

அகவாழ்வில் மானுட வெற்றியை அன்பினால் மட்டுமே காண இயலும். அதுபோல் புறவாழ்வின் மானுட வெற்றியை அமைப்பு வழியிலான ஒற்றுமையால் மட்டுமே எட்ட முடியும் எனும் பட்டுக்கோட்டையாரின் அழுத்தமான நம்பிக்கை சிந்தனைக்குரியது.

குறிப்புகள்

1. ஆய்வுக்கோவை, மூன்றாம் தொகுதி, இ.ப.த. மன்றம், தஞ்சாவூர், 2003.
2. ச. மெய்யப்பன் (பதிப்பாசிரியர்) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1999.

கணையாழி மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் காட்டும் சமுதாயம்

சு. பழனிக்குமார்

கே.எஸ். அரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி
திருச்செங்கோடு - 637 209

தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய இலக்கிய வடிவங்கள் வளர்ந்து கொண்டே வருகின்றன. சங்ககாலம், இடைக்காலம், தற்காலம் என்னும் வகையில் பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டு களில் நாவலின் மறுவடிவமாகச் சிறுகதைகள் தோன்றின. தமிழ் இலக்கியம் பெற்ற மாற்றங்களின் வடிவு நாவல். நாவலின் மறுபிரதிபலிப்பு சிறுகதை. கால மாறுபாடுகளின் விளைவு சிறுகதைத் தோற்றம். சிறுகதையின் வளர்ச்சி பிறமொழிகளின் சிறந்த சிறுகதை களின் மொழிபெயர்ப்பு. மாற்றம் மனித மனத்தை வளர்க்கிறது. மக்களின் மனமாற்றம் மனிதத் தன்மையின் வெளிப்பாட்டை விளக்கு கின்றது. கணையாழியின் 1997-ஆம் ஆண்டு வெளியான சனவரி, பிப்ரவரி, மார்ச்சு மாத மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் வெளிக்காட்டும் சமுதாய நிகழ்வுகளை விளக்குவது கட்டுரையின் நோக்கமாகும்.

சிறுவர்களின் சமுதாயம்

சீன மொழியில் யே. ஷெங்டவோ எழுதிய மூலக்கதையின் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தமிழில் எஸ். சங்கரநாராயணன் எழுதியிருக்கின்றார். இச்சிறுகதை சிறுவர்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு பருவத்திலும் இயற்கையின் காலநிலைக்கேற்ப விளையாட்டுக்கள் அமைகின்றன. 'ஒரு கிராமத்துச் சூழலில் சிறுவர்களின் விளையாட்டு வசந்தகாலம் வந்தால் பட்டாம்பூச்சி பிடிப்பார்கள். கோடையில் தவளைகளைக் கொக்கி போட்டுப் பிடிப்பார்கள். மழைக்காலத்தில் புற்கள் வளர்ந்ததும் வெட்டுக்கிளி களைப் பிடித்துச் சுட்டுத் தின்பார்கள். குளிர்காலத்தில் சின்னப் பிராணிகள் எதும் சிக்காவிட்டால் எருதைச் சுற்றி ஓடி, அதை ஆக்கிரப்படுத்திப் பின்னாலிருந்து அடித்து வேடிக்கை பார்ப்பார்கள்.

எருது கோபமாய்க் கண்களை உருட்டும். கொம்பை ஒரு பக்கமாகச் சாய்த்து மண்ணைக் கிளறும். வானத்தையும் பூமியையும் வெறித்து நோக்கிப் பயல்கள் மீது பாயத் தயாராயிருக்கும். எருதின் கண்களை நோக்குபவர்களுக்கு பயமாகத் தெரியும்.[1] சிறுவயதில் எருதின்

கண்களைக் கண்ட எழுத்தாளனின் மனதில் கடைசிவரை எருதின் கண்களை நோக்கும்பொழுது பயமாகக் காட்சி தருகின்றன. ஒருவனின் குழந்தைக் கால விளையாட்டு நினைவுகளும் மனதில் ஏற்படும் உணர்வு களும் மறக்க முடியாத நிகழ்வை ஏற்படுத்துவதை உணர்த்துகிறது.

கனவுச் சூழல் காட்டும் சமுதாயம்

மனிதர்கள் மனம் கனவில் லயிக்கும். எல்லா மனிதனிடமும் கனவின் தாக்கம் உண்டு. கனவினால் தன் நிஜவாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தை உணர முடியும். கனவுகள், நனவு வாழ்க்கையின் நம்பிக்கை ஊற்றுகளாக அமைகின்றன.

ஆங்கில மொழியில் இட்டாலோ கால்வினோ எழுதியதை முரளி அரூபன் தமிழுக்கு அறிமுகப்படுத்துகிறார். 'ஒரு குளிர்கால மாலைப் பொழுதில் சினிமா பார்க்கச் செல்கின்றான் கதைத் தலைவன் மார்க் கோவல்டோ. திரைப்படம் இந்தியாவின் சதுப்பு நிலக்காடுகளின் அமைப்பையும் கங்கைச் சமவெளியையும் பற்றியது. அவற்றின் பரந்த வனப்புகளைக் கண்டவன் மனதில் நிழல்போல் படிகின்றது. திரைப்படம் முடிந்தவுடன் வெளியே வருகின்றான். நகரம் பனிப்படலத்தால் மூடப்பட்டுள்ளது. அருகில் இருப்பவர்களை அறிய முடியாத மூடுபனி. தான் ஏறிச் செல்லும் ட்ராம் வண்டியின் பலகையை முட்டி அறிந்து கொண்டு வண்டி வந்தவுடன் ஏறுகின்றான்.

வண்டியில் வந்தவர்களுக்கு அன்னியப்பட்டு தான் பார்த்த திரைப்படத்தை தன் முன்னே திரையிட்டுக் கொண்டான். இத்தகைய கற்பனைகளோடு தான் இறங்கும் இடமான ''பான்கிராசியோ பான்கிராசைட்'' தவறவிட்டு வேறு இடம் சென்று அறிய முடியாமல் பல திசைகளில் நடந்து தொழிற்சாலை சுவரில் ஏறி பின் மெத்தென்ற புல்வெளியில் வீழ்ந்து எழுந்து கடைசியில் தரையில் விளக்குகள் இருக்கும் இடம் சேர்ந்தான். இறுதியாக ஒரு மனிதன் கையில் விளக்குடன் வேகமாகச் செல்லுங்கள். ஆயிரம் மீட்டருக்கு மேல் மூடுபனி இருக்காது. நீங்கள் பாதுகாப்பாகப் போகலாம் என்றான். எல்லோரும் ஏறிவிட்டார்கள். அவன் சொல்லிய வார்த்தை சந்தோஷம் தந்தது.

மறைந்துள்ள படிகளுடன் கறுப்பு வெள்ளை நிறத்தில் கைப் பிடிகளுடன் இருந்தது நுழைவாயில். தாழ்வான நுழைவாயிலில் இளம்பெண் வரவேற்றாள். மரியாதை நிமித்தமாக அவனும் தலைவணங்கினான். குளிரிலும் பனியிலும் உறைந்து போயிருந்தவனுக்கு இந்தப் புகலிடம் வியப்புத் தந்தது. தான் கண்களைக் கூச வைக்கும் விளக்கொளியுடன் கூட பஸ் என நினைத்தான். யூனிபார்ம் போட்டவர் இருக்கைகளின் வழியே

கடந்து போனார். மன்னிக்க வேண்டும் கண்டக்டர். "பான்கிரேசியோ பான்கிராசைட்" அருகே ஸ்டாப்பிங் இருக்கிறதா? உங்களுக்குத் தெரியுமா? எனக் கேட்டான் மார்க் கோவல்டோ.

என்ன சார் சொல்கிறீர்கள்? நாம் முதலில் இறங்குவது பம்பாய் நகரில். அடுத்து கல்கத்தா சென்று அங்கிருந்து அப்படியே சிங்கப்பூர் போகிறோம்" என்றார் அவர். சுற்றுமுற்றும் பார்த்தான். சில இந்தியர்கள், ஒப்பனைகளோடு பெண்கள் உட்கார்ந்திருந்தனர். உயர்ந்த வானத்தில் பறந்து கொண்டிருந்தது விமானம்.

மனிதனின் மனதில் ஏற்படும் அனுபவங்கள், கனவுகள் நினைவுகளாக நிஜங்களாக மாறும் என்பதை வெளிப்படுத்துகிறது கதை. சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பினும் தான் திரையில் கண்ட காட்சியை மனத்திரையில் திரையிட்டவன் இயற்கையாக நேரில் காண்பது என்ற வகையில் கதை அமைத்துக் கனவு காணுங்கள்! கனவு காணுங்கள் என்பதை வலியுறுத்துகின்றது. கனவு காணும் சமுதாயம் வெற்றியையும், கண்டுபிடிப்புகளையும் உலகிற்குத் தந்துள்ளது தரமுடியும் என்பதை விளக்குகின்றது.

பெண்ணடிமைச் சமுதாயம்

மலையாள மொழியில் ஸி.வி.ராமன் எழுதியதைத் தமிழில் ஸ்ரீபதி பத்மநாபா மொழிபெயர்த்துள்ளார். மனித மனத்தில் ஏற்படும் விகாரங்களையும் ஒரு பெண் நிர்க்கதியான நிலையில் தன் வாழ்வை அமைத்துக் கொள்வதையும் காண முடிகின்றது.

கேரளத்திலிருந்து குடிபெயர்ந்து தமிழ்நாட்டில் குடியேறிய மலையாள வைத்தியர் பழனிமலையின் அருகில் குடியேறுகின்றார். அவ்வூர் ஒட்டன்சத்திரம். அவர் பெயர் குஞ்ஞனம் பிள்ளை. அவருக்கு யாரோ ஒரு வியாபாரி நிலம் அளித்தார். அதில் நிறைய கீரைகள், செடிகள் வளர்ந்திருந்தன. அதற்கு நீர் பாய்ச்சுவதற்கு அவள் இருந்தாள். அவள் பெயர் வரலெட்சுமி. தன் கணவன் விட்டுப்போனதில், தாய், தந்தையற்ற நிலையில் அங்கு வந்தாள். குஞ்ஞனம் பிள்ளை வீட்டில் அனைத்து வேலைகளையும் செய்வாள்.

அவருடைய வீட்டிற்கு இன்னொரு வாலிபன் வந்து சேர்ந்தான். அவன் சிகரெட் பழக்கத்திலிருந்து விடுபடவும் பெயிலான பாடத்தை பாஸ்பண்ண வேண்டும் என்ற நோக்கத்தில் வந்து சேர்ந்தான். வரலெட்சுமிக்கும் அவனுக்கும் தொடர்பு ஏற்பட்டது.

பங்குனி உத்திரத்திற்கு ஏழுநாள் விரதமிருந்து எட்டாவது நாள் கொடுமுடி போகனும். தீர்த்தம் கொண்டுவந்து தீர்த்தக்காவடி எடுத்து மலையேறப் போவனும். ஏழு ஆறுகள் சந்திக்கிற இடம் கொடுமுடி. அந்தத் தீர்த்தம் எடுத்து வன்னிமர இலையை

மென்னி அதிலிட்டு நார் உரித்து காப்புக் கட்டுவார்கள் என கை உயர்த்திக் காண்பித்தார்.

'அவன் தனக்கு பழனியிலிருந்து என்ன கொண்டு வருவதாகக் கேட்டான். அவள் பஞ்சாமிர்தம் கொண்டுவந்து ஊட்டிவிடுவதாகக் கூறினாள். அவனை தொட்டுக் கூறினாள். ஏதோ இயந்திரத்தில் கைவிட்டதைப் போல் கையை பின்னுக்கு இழுத்து கடவுளே கோச்சுக்காதே ஆண்டவனே முருகா... நாந் தெரியாம தொட்டுட்டேன். அவ்வளவுதான் மன்னிப்பு மன்னிப்பு என இரண்டு உள்ளங்கை களையும் கன்னங்களில் மூன்றுமுறை அடித்துப் பிரார்த்தித்தாள்!

'பொழுது புலர்ந்தது. பழனிமலை ஏறும்பொழுது சோதனைக் காவடிக்காரன் ஒருவன் தெய்வம் ஏறப்பெற்று ஓட்டன் சத்திரத்தி லிருந்து வந்த பெண் ஒருத்தி விரதம் தவறியிருக்கின்றாள். ஓட்டன் சத்திரத்திலிருந்த தீர்த்தம் அசுத்தம். அசுத்தத் தீர்த்தத்தை இங்கே ஊற்றக்கூடாது. அன்றிரவு ஓட்டன்சத்திரத்தில் புழுதி கிளப்பிய அடிதடி நடந்தது. பொழுது புலர்ந்த பொழுது வரலெட்சுமியின் சித்தப்பனும் சித்தியும் தேடிப்போனார்கள். அவள் திரும்பவில்லை. எத்தனையோ வருடங்களாகியும் மலையடிவாரத்தில் அமர்ந்திருக்கும் அவனுக்கு உண்மை புரியவில்லை. ஆனால் மனம் தெளிவாயிற்று. என்றைக்கும் எங்கேயும் ஊற்ற முடியாத ஒரு தீர்த்தக் காவடியை நான் உள்ளில் சுமந்து நடந்து கொண்டிருக்கிறேன்'.

எத்தனையோ கால மாறுபாடுகள் வந்தாலும் மக்களின் பரம்பரைப் பழக்கங்கள். வழிபாடுகள், தெய்வம் ஏறப்பட்ட நிலை, திருமணமான பெண்ணுக்குக் கணவனால் பிரச்சனை, அவளின் மனமுறிவுகள் ஆகியவை வெளிப்படுத்தப்படுகின்றன.

முடிவுரை

இக்கட்டுரைக்கு மூன்று மொழிச் சிறுகதைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றின் வழி மொழிபெயர்ப்புக் கலையின் தன்மை மூலக்கதைக்கரு மாறாமல் தரப்பட்டுள்ளது. வாசகனின் தன்மைக்கேற்ப ரசனை குறையாமல் கதைத் தலைமை மாந்தர் களின் பெயர்கள் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிறுகதையிலும் மண்ணின் மணம் வெளிப்படும் வகையில் இயற்கை சூழலும் இடப்பெயர்களும், காலச் சூழலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. மொழிப்பெயர்ப்புச் சிறுகதைகள் என்றாலும் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் தரத்தை வெளிக்காட்டும் வண்ணம் அமைந்துள்ளன.

துணைநூல்கள்

1. தமிழில் சமூக நாவல்கள், தா.வே. வீராசாமி, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை - 4.
2. கணையாழி இலக்கிய இதழ் - சனவரி, பிப்ரவரி, மார்ச், 1997.

மக்களும் நாடும்

அரங்க. சம்பத்குமார்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம்
சென்னை - 8

மக்கள் மண்ணில் தோன்றிய காலம் முதல் கூட்டம் கூட்டமாக இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்து வந்த நிலைகளை

1. நாடோடி வாழ்க்கை
2. இனக்குழு வாழ்க்கை
3. கூட்டு வாழ்க்கை
4. அரசமைப்பு வாழ்க்கை

என வகைப்படுத்தி விளக்குகின்றனர். சங்க இலக்கியங்களில் காணலாகும் மனித வாழ்க்கை நிலைகள் சற்றொப்ப இவை அனைத்தையம் காட்டுவனவாகவே இருக்கின்றன. உணவு சேகரிக்கும் வாழ்க்கை நிலை, வேட்டையாடும் வாழ்க்கை நிலை, காடுகளை அழித்துப் பயிர் செய்யும் வாழ்க்கை நிலை, கால்நடை வளர்ப்பு வாழ்க்கை நிலை, பயிர்த்தொழில் செய்யும் வாழ்க்கை நிலை போன்றன சங்க இலக்கியத்தில் காணக்கிடக்கின்றன. (சுப்பிரமணியன், கா., சங்ககால சமுதாயம், ப.6)

'காடு கொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி' (பட்டினப்பாலை, 283,4)

என்பனபோல வரும் இலக்கியக் குறிப்புகள் மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் குறிப்பனவாக இருக்கின்றன.

காட்டினை அழித்து நாட்டாக்கியுள்ளனர். அதேபோல் குளம் வெட்டிப் பாசனத்திற்கு நீரைச் சேமித்து வைத்துள்ளனர். காடுகளை அழித்து நாடாக்குவதற்கும் குளம்வெட்டி வளத்தைப் பெருக்கு வதற்கும் தனி மனித முயற்சி மட்டும் போதாது. இதற்கு மக்கள் கூட்டம் முயன்றிருக்க வேண்டும்.

'இனக்குழு மக்கள் கூட்டு வாழ்க்கை நடத்தினர். கிடைத்ததைப் பகுத்துண்டனர். வேட்டை வாழ்க்கை புராதன விவசாயம் ஆகிய பொருளாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூட்டு

வாழ்க்கை அமைந்திருந்தது' என்பார் சுப்பிரமணியன் (சங்ககால சமுதாயம், ப.39)

குழு வாழ்க்கை இருந்ததைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. ஒரு குழு இருந்திருக்கிறது என்றால் அதற்கு ஒரு தலைவன் இருந்திருப்பான் என்று கொள்ளலாம். அவ்வகையில் குழு தலைவன் பற்றிய செய்தியும் சங்க இலக்கியத்தில் வருகிறது.

''சிற்றூர் மன்னராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பினாரே'' (புறம். 197)

இனக்குழு ஒவ்வொன்றும் தம் கூட்டத்திற்கு ஒரு தலைவனைப் பெற்றிருந்தன. தலைவன் என்பான் தம் கூட்டத்தாரோடு, மக்களோடு மக்களாகக் கலந்து வாழ்ந்து வந்தான். தலைவன் தன் குழுவிற்குக் காவலனாக அமைந்தான். தம் மக்கள் கூட்டத்திற்கு வழிகாட்டியாக இருந்துவந்தான். தலைவன் தம் மக்களோடு வாழ்ந்து வந்ததனால் அவன் தம் மக்களுடன் நல்ல உறவு கொண்டிருந்தான். மக்களும் அன்புடனும் பாசத்துடனும் தம் தலைவனை அணுகி வந்தனர்.

பண்டைய நாளிலிருந்த சமூக அமைப்பு முறைகளெல்லாம் பெரும்பாலும் உறவினால் ஏற்பட்டவை. உறவினால் பிணைக்கப் பட்ட கூட்டங்களே சமூகத்தின் அடிப்படைகளாகும். உறவு என்பது ஆண் பெண் உறவுகளில் தொடங்கி இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். ஆண் பெண் உறவுகள் மட்டுமே நெஞ்சில் நிலைத்து நிற்பவையாகவும் பலர் தொடர்பை ஏற்படுத்தக் கூடியன வாகவும் இருந்தன. இந்த உறவுகளே நாளடைவில் படிப்படியாக வளர்ந்து கூட்டுக்குழு உறுப்பினர் அடங்கிய சமூகம் உருவாகியது. பலரின் தனிப்பட்ட வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பொறுப்பையும் அந்தக் கூட்டுச் சமூகமே பெற்றிருந்தது.

அதனால் தான் மனிதனின் இருப்பை அவனது உணர்வுகள் தீர்மானிக்கவில்லை என்றும் அவனது சமூக இருப்பே அவனது உணர்வுகளைத் தீர்மானிக்கிறது என்றும் குறிப்பிடுவர். எவ்வாறா யினும் முதலில் தோன்றியன குழுக்கள். பின்னர் பல்வேறு குழுக்கள் ஒன்று சேர்ந்து நாடு உருவாகியது. அதனால்தான் தேசம் என்பதற்கு விளக்கம் தரும்போது அது ஒரு நிலையான மக்கள் சமுதாயம் என்று குறிப்பிடுவர். அந்தத் தேசத்தில் பொதுவான மொழி, ஆட்சிப்பகுதி, பொருளாதார வாழ்வு, மனவியல்பு ஆகியன வற்றை அடிப்படையாகக் கொண்டதும் வரலாற்று ரீதியாக அமைந்ததுமான நிலையான மக்கள் சமூகம் இருக்கும் என்று குறிப்பிடுவர் (ஸ்டாலின் மார்க்சியமும் தேசிய இனப்பிரச்சனையும், ப. 10)

அதனால் தான் காரல்மார்க்சு எங்குமே வகுப்புகளாகிய சிக்கலான சமூகப் பாகுபாடு சமூக மதிப்பின் பன்மடிப்பு நிலை இருக்கிறது என்று குறிப்பிடுகிறார். எவ்வாறாயினும் பல்வேறு பட்ட சமூகக் கூட்டங்கள் அவ்வப்போது உருவாகியுள்ளன. சமூகக் கூட்டங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளும் ஏற்பட்டுள்ளன. தொழில் அடிப்படையில் சமூகக் கூட்டங்கள் ஏற்பட்டுள்ளன என்று மானிடவியலார் குறிப்பிடுகின்றனர். உறவு அடிப்படையாக இருந்தாலும் தொழில் அடிப்படையாக இருந்தாலும் குழுஅமைப்பு மிகப் பழங்காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. இடவமைப்புத் தொடர்பாகவும் குழூக்கள் ஏற்பட்டுள்ளன.

குழூ வாழ்க்கையில் அரசமைப்பு வாழ்க்கை நிலை நன்கு வளர்ந்தது எனக் கொள்ளலாம். இது நாடோடி வாழ்க்கையில் தொடங்கி இனக்குழு, கூட்டு வாழ்க்கை ஆகிய படிநிலைகளைக் கடந்து வந்ததாகும். அரசமைப்பு முறைக்கு ஒரு கூட்டம் சென்றுள்ளது என்றால் அது அக்கூட்டத்தின் வளர்ச்சியையே குறிக்கும்.

சங்ககால சமுதாயத்தை நோக்க, அதற்கு முன்பே அரசு அமைத்து வாழ்ந்த கூட்டம் இருந்திருக்கிறது என்பது வெளிப்படை யாகிறது. சங்க காலத்தில் முடியரசு ஆட்சி நிலவியதை அறிகிறோம். உறவு, உறைவிடம், உடைமை, பாலினம், தொழில் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூகம் சங்ககாலத்திற்குப் பன்னூற்றாண்டு களுக்கு முன் இருந்திருக்கவேண்டும். அதனால் தான் சங்ககாலத் திற்கு முன்பே அரசு அமைத்து ஆண்ட முறையை நம்மால் காண முடிகிறது. ஆனால் சங்ககால அரசுமுறை நன்கு வளர்ந்த நிலையைக் காட்டுகிறது. மன்னனுக்குக் கீழ்ச் சிற்றரசர்களும் குறுநிலமன்னர் களும் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்கள் அரசியல் அரண்கொண்டு சமுதாயத்தைக் காத்து வந்தனர்.

'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியா
நின்றது மன்னவன் கோல்'

என்று சொல்லும் அளவிற்கு அன்றைய அரசுமுறை நன்கு வளர்ந்திருந்தது.

'அறம் புரிந்தன்ன செங்கோனாட்டத்து' (புறம்.35)

எனவரும் வெள்ளைக்குடி நாகனாரின் பாடல் நன்கு வளர்ந்த அரசமைப்பையே காட்டுகிறது. அரசன் எவ்வாறு இருக்க வேண்டும் என்று ஒரு வரையறையைத் தருகிறது குறள். அதாவது அரசு முறை நன்கு வளர்ந்ததனால் ஒவ்வொன்றிற்கும் இலக்கணம் தரும் அளவிற்குச் சென்றுள்ளதைக் காண்கிறோம்.

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். (குறள். 386)

அதேபோல் தொல்காப்பியமும்,

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்'

என்று குறிப்பிடுகிறது.

முறை செய்து மக்களைக் காப்பாற்றியதையும் (குறள். 388)

சொற்பொறுக்கும் பண்புடன் (குறள். 389)

மன்னன் இருந்தான் என்பதையும் அறிகிறோம்.

''முறைவேண்டுநர்க்கும் குறைவேண்டுநர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி''

என்று மன்னன் செயற்பாடுகளில் சிலவற்றைப் பெரும்பாணாற்றுப் படை குறிப்பதைக் காணலாம்.

மக்களைக் காப்பாற்றும் நோக்குடையவர்களாக மன்னர் இருந்தனர். நடுநிலைகாத்து முறைவேண்டுநர்க்கு நீதி சொல்லி வாழ்ந்தனர்.

'அம்பு துஞ்சுங் கடியரணால்
அறம் துஞ்சுஞ் செங்கோலையே' (புறம். 20)

சங்ககால அளவிலேயே சமுதாய ஒழுங்குக்குள் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதும் அரசமைப்பு இருந்தது என்பதும் மக்களுக்கு அவரவர்களுக்கு உட்பட்ட எல்லைகளை வகுத்தும், எல்லைக் குட்பட்ட நிலங்களைப் பகுத்தும் வாழ்ந்தனர் என்பதும் மக்கள் குழுவாகச் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கை முறையில் மணிமுடி களாக விளங்குகின்றன.

நாற்கவிராச நம்பியகப் பொருள் விளக்கத்தில் மக்கள்

இரா. பொன்னுத்தாய்

பாரதிதாசன் மகளிர் கல்லூரி
புதுச்சேரி - 3

தொல்காப்பியத்தைச் சார்ந்து எழுதப்பட்ட நூல் நாற்கவிராச நம்பி எழுதிய அகப்பொருள் விளக்கம். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குலசேகரப்பாண்டியன் வாழ்ந்த காலத்தில் உருவாக்கப் பட்டது. இந்நூலில்,

1. உயர்ந்தோர், தாழ்ந்தோர் நிலை
2. ஆணின் நிலை
3. பெண்ணின் நிலை

என்ற உட்தலைப்பின் கீழ் ஆராயப்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உயர்ந்தோர் தாழ்ந்தோர் நிலை

மக்கள் அனைவரும் ஒரே தன்மையுடையவராகத் தான் பிறக்கின்றார்கள். ஆனால் அவர்கள் பெறுகின்ற பொருளாதாரத்தின் அடிப்படையிலும், செய்கின்ற தொழில் அடிப்படையிலும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாட்டிற்கு உட்படுகின்றார்கள். வள்ளுவர் இவ்வேற்றத் தாழ்வைச் சொல்லும்போது,

''பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'' (குறள் எண். 972)

என்று கூறுகின்றார். அகப்பொருள் விளக்கத்தில் இக்கருத்தை ஆராயமுற்படும்பொழுது.

ஐந்நிலப் பாகுபாடு

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று பிரிக்கப் பட்டுள்ள ஐந்து நிலத்திலும் வாழும் மக்களில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற நிலை தொழில் செய்கின்ற முறையில் வருவாய் ஈட்டுகின்ற முறையில் பாகுபடுத்தப் படுகின்றார்கள் என்பதைக் குறிஞ்சி நில மக்களில் உயர்ந்தோராகப் பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி என்றும் தாழ்ந்தோராகக் குறவர்,

கானவர் குறத்தியர் என்றும் கூறப்படுகின்றார்கள். இவ்வாறே மற்ற நிலங்களிலும் பாகுபாடு செய்யப்படுகின்றனர் என்பதை உணரலாம்.

நான்குவகைத் தலைமக்கள்

மக்களை மறையோர், மன்னவர், வணிகர், சூத்திரர் என்று பாகுபாடு படுத்தினர். இதனை,

''மறையோர் மன்னவர் வணிகர் சூத்திரரெனும்
இறையோர் தத்தமக் கெய்துமற் றதுவே''

(நம்பி. அகப்பொருள் சூ. 30)

என்ற சூத்திரத்தால் உணரலாம்.

இந்நான்கு வகைப்பிரிவில் மறையோர், மன்னவர், வணிகர் ஆகியோர் உயர்ந்தவர் என்றும், சூத்திரர் தாழ்ந்தவர் என்றும் அழைக்கப்பட்டனர். சூத்திரர் வேதம் கற்கும்பொருட்டுப் பிரியார் என்பதன்மூலம் வேதக்கல்வியைச் சூத்திரர் கற்பதற்கு மறுக்கப் பட்ட செய்தி புலனாகின்றது.

''ஓதற் றொழிலுரித் துயர்ந்தோர் மூவர்க்கும்''

(நம்பி. அகப்பொருள் : 69)

என்ற நூற்பா உணர்த்துகின்றது.

தாழ்த்தப்பட்ட தலைமக்கள் இழிந்தோர் என்று அழைக்கப் பட்டனர். இவர்கள் ஓதலுக்கும், நாடு காவலுக்கும், தூது போதலுக்கும் உரிமை இல்லாதவர்கள் என்பதை,

''இழிந்தோர் தமக்கு இவற்றுண்மேப் பட்டவை
ஒழிந்தனவாமென மொழிந்தனர் புலவர்''

(நம்பி. அகப்பொருள் : 79)

என்ற நூற்பாவால் அறியலாம்.

ஏற்றதாழ்வுநிலை எல்லாக்காலத்திலும் இருந்திருக்கின்றது. ஆனால் தற்காலத்தில் ஓரளவு தணிந்திருக்கின்றது என்று உணரலாம்.

அடிமையாய் இருக்கும் மக்கள்

தலைவன், தலைவியர்க்கு அடிமைத்தொழில் செய்து வாழ்கின்றவர்களை நோக்கினால் பாணன், பாடினி, கூத்தர், இளையர், இருவகைப் பாங்கர், பாகன், பாங்கி, செவிலி, காமக்கிழத்தி போன்றவர்கள் இருந்திருப்பதைக் காணமுடிகிறது.

''கொளைவல் பாணன் பாடினி கூத்தர்
இளையர் கண்டோர் இருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி அறிவர்

காமக்கிழத்தி காதல் புதல்வன்
விருந்தாற் றாமை யென்றிவை ஊடல்
மருந்தாயத் தீர்க்கும் வாயில்கள் ஆகும்''
(நம்பி. அகப்பொருள்:68)

என்ற சூத்திரத்தால் உணரலாம்.

ஆணின் நிலை

எல்லா இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் ஆண்மகன் உயர்த்திப் பேசப்படுவதைக் காணமுடிகின்றது. இப்போக்கு நம்பியகப்பொருளிலும் அறிய முடிகின்றது.

''பொருவிறந் தோற்கும் பெருமையும் உரனும்''
(நம்பி. அகப்பொருள்:35)

என்ற ஆணின் ஒப்பற்ற தன்மையும், புகழையும் பழிபாவங் களுக்கு அஞ்சுகின்ற தன்மையும் கூறியிருப்பது உணரத்தக்கது. இக்கருத்தை,

''பெருமையு முரனு மாடூஉ மேன''
(தொல். பொருள். களவியல் சூ. 7)

என்ற தொல்காப்பியச் சூத்திரம் வலியுறுத்துவது நோக்கத்தக்கது.

பொருள்தேடச் செல்லும் ஆண்மகன்

ஆண்மகன் பொருள்தேடும் நோக்கம் உடையவனாக இருந்தான். பொருள் இருந்தால் தானே இல்லறத்தை இனிதே நடத்தமுடியும். பொருளே குறியாகத் தலைவன் இருந்தாலும் சில நேரங்களில் தலைவியின் பொருட்டும், தன்நெஞ்சைத் தேற்றும்பொருட்டும் சொல்லாமல் தங்குதலும் உண்டு. இதனைத்

''தலைவி தன்னையுந் தன்மனந் தன்னையும்
அலமர லொழித்தற் கழுங்குவ தல்லது
செல்வத் தோன்றல் செல்லா னல்லன்''
(நம்பி. அகப்பொருள் : 88)

என்ற சூத்திரத்தினால் உணரமுடிகின்றது.

ஆண் மகனின் துறவறம்

காதல் இன்பத்தை இனிது நுகர்ந்து வாழ்ந்த தலைமகன், மக்களை ஈன்று, மனையறம் காத்து வாழும்போது, காமவேட்கை கொஞ்சம் கொஞ்சமாக நீங்கிப் பின்பு முற்றும் நீங்குகிறது. இதனால் தலைவன் தன் தலைவியுடன் தன் ஊரைவிட்டு நீங்கி வனத்திற்குச் சென்று எல்லையில்லாத சுற்றத்தோடு துறவறத்தினை மேற் கொள்கிறான். இதனை,

''மக்களோடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப''
(நம்பி. அகப்பொருள் : சூ. 115)

என்ற அகப்பொருள் சூத்திரம் விளக்குகிறது.

இதனை அரண்செய்வது போல,

''இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை'' (குறள். 47)

என்ற குறளில் இல்வாழ்க்கையின் சிறப்பினையும், இல்லறத்திற்குப் பின் துறவறத்தின் சிறப்பினை,

''இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்
துன்பத்துள் துன்பங் கெடின்'' (குறள். 369)

என்ற குறளும் அமைந்திருப்பது எண்ணற்குரியன.

பெண்ணின் நிலை

பெண் என்பவள் புலவர்களால் புகழ்ந்து பாடப்பட்டவள். புகழைச் சுமந்த பெண் வாழ்க்கையில் பெறும் அவல நிலைகள் எத்தனை என்று அறுதியிட முடியாது. அன்றும் இன்றும் அவளுக்கு அடக்குமுறைச் சட்டங்கள் விலங்காய் விளங்குகின்றன. அச்சமும், நாணும், மடனும் அவள் பெறும் அணிகலன்கள். இதனை நம்பியகப் பொருளில்,

''நன்னுதற் கச்சமும் நாணும் மடனும்
மன்னிய குணங்க ளாதலின்'' (நம்பி. அகப்பொருள்: சூ. 35)

என்று கூறப்பட்டுள்ளது. இதே கருத்தைத் தொல்காப்பியரும்,

அச்சமு நாணு மடனுமுந் துறுத்த
.நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப
(தொல். பொருள். களவியல் சூ.8)

என்று கூறியிருக்கிறார். இதனால் பெண்ணடிமைக்குரிய குணங்கள் பழமைதொட்டு இருந்திருக்கின்ற தன்மை புலனாகின்றது.

பெண்ணின் பொறுமை

களவுக்காலத்தில் தலைவி, தலைவனின் இன்பத்தைத் தடையோடு நுகர்கின்றாள்; என்று தலைவன் திருமணம் செய்து கொள்வான் என்று தலைவி ஏங்குகின்றாள். ஆனால் அவள் திருமணம் நிகழ்ந்த பின்பு நிம்மதியாக வாழ்க்கை நடத்துகின்றாளா,

என்பது கேள்விக்குறியாகத்தான் விளங்குகின்றது. தலைவன் தலைவியோடு இன்பத்தை நுகர்வது மட்டுமல்லாமல் பரத்தைய ரோடும் இன்பம் பெறுகின்றான்.

''அயன்மனைப் பிரிவயற் சேரியின் அகற்சி
புறநகர்ப் போக்கிவை புரவலற் குரிய
பரத்தையிற் பிரியும் பருவத்தான''

(நம்பி. அகப்பொருள். சூ. 63)

என்று நம்பியகப் பொருள் கூறுகிறது.

தலைவன் தலைவியிடம் மட்டும் காமத்தை நுகர மாட்டான். பல மக்களிடம் நுகர்வான், அதற்குச் சமுதாயம் அனுமதித்துள்ளது எனத் தெரியவருகின்றது. இக்கருத்தைப் பரிபாடலில்,

''சேக்கை இனியார்பால் செல்வான் மனையாளால்
காக்கை கடிந்து ஒழுகல் கூடுமோ கூடா''

(பரிபாடல் வையை : 20: 86-87)

என்ற நல்லச்சுதனார் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது.

நிறைவுரை

மக்களின் மணமும் குணமும் ஒரே தன்மையாக இல்லாமல் வேறுபட்டு இருப்பது போல, நம்பியகப்பொருள் விளக்கத்தில் மக்களிடையே உயர்வு, தாழ்வு என்ற நிலை இருந்திருக்கின்றது. கல்வியும், பொருளாதார நிலையுமே இதற்குக் காரணம் என்று அறிய முடிகின்றது. இந்த வேற்றுமை நிலையே பிற்காலத்தில் பல்கிப் பெருகிப் பெரும் பிளவை உண்டுபண்ணியிருக்கின்றது என்பது உண்மை. இந்த ஏற்றத்தாழ்வு உள்ள சமுதாயத்தில் ஆணின் நிலை உயர்ந்திருந்தது என்றும், பெண்ணின் நிலை தாழ்ந்திருந்தது என்றும் அறிய முடிகின்றது. இன்றைய காலக்கட்டத்தில் பெண்ணின் நிலை உயர்ந்திருக்கின்றது என்றாலும், அகப்பொருள் விளக்கத்தில் காணலாகும் பெண்ணடிமைத்தனத்தின் சுவடு மறைந்துவிடவில்லை என்பது உண்மை. பொருளாதார மேம்பாட்டினாலும், கல்வி வளர்ச்சி யாலும் ஆணும் பெண்ணும் சமநிலை எய்தலாம். உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற நிலை வீழ்ந்து சமமான நிலை உருவாகலாம்.

இடப்பெயர்களில் இராமாயணக் கதைகள்

அ. ஜான்பீட்டர்
திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி
திருவாரூர் - 3

இடப்பெயர்களுக்கான காரணங்களை அறிய முற்படும் ஆர்வம் கல்வியறிவுடையவர்களுக்கு மட்டுமின்றிக் கல்வியறிவற்ற வர்களுக்கும் இருக்கிறது. இந்த ஆர்வத்தின் காரணமாகவே, விளக்கம் அறிய இயலாத இடப்பெயர்களுக்குச் சில நிகழ்வுகளில் சிலர் தாமே ஒரு விளக்கத்தை அளித்து அவற்றை நிலைபெற வைத்து விடுகின்றனர். இவ்விளக்கங்கள் யாவும் விளக்கமளிப்பவரின் விருப்பத்திற்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு அமைந்த புனை கதைகளாகவும் அவர் நம்புகின்ற கீடைப்பிடிக்கின்ற கடவுள் மதம் சார்ந்ததாகவும் அமைந்தன. இடப்பெயர்களும் இவ்வாறான மாற்றங் களுக்கு இடம் கொடுத்து நெகிழ்ந்து நின்றன.

இந்தியாவின் இதிகாசம் என்ற பெருமைக்குரிய இராமகதை, இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் தலைமுறைகள் பல கடந்து மனத்தின் ஆழ்படிவாக மக்கள் உள்ளங்களில் வாழ்கின்றது. இராமன் தொடர்புடைய கதைகளால் விளக்கம் தரப்படும் திருவாரூர் மாவட்ட இடப்பெயர்கள் பற்றி இவண் காணலாம்.

மாரிச மான் கதை

மாரிசன், மாயமான் தோற்றமளித்துச் சீதையின் உள்ளத்தைக் கவர, சீதையின் விருப்பத்தின்படி மாயமான் வேட்டையில் இராமன் ஈடுபடுவான். இத்தொன்மக்கதை பல்வேறு இடப்பெயர்களுக்குக் காரணமாக மக்கள் வழக்கில் கூறப்படுகிறது.

அதம்பார்

நன்னிலம் வட்டத்தைச் சார்ந்த இவ்வூர், கல்வெட்டுகளில் 'அதம்பர்' எனக் குறிக்கப்படுகிறது. இன்று இவ்வூர் வெள்ளை அதம்பார், அதம்பார், அதம்பார் உக்கடை என்று பல்வேறு சிற்றூர் களாகப் பிரிந்து வழங்குகிறது. இவ்வூரில் அமைந்துள்ள பழமையான கோதண்டராமசுவாமி கோயிலின் தகவல் பலகை ஒன்றில் இவ்வூருக்கான பெயர்க்காரணம் எழுதப்பட்டுள்ளது. மாயமான்

வேட்டையாய் ஸ்ரீ ராமன் வில்லில் நாணை ஏற்றி 'தம் ஹந்தும்: கிருத நிச்சய ஹதம்-பார்:' எனக்கூறி மான் மீது அம்பு விட்டு வீழ்த்த முற்பட்ட காரணத்தால் அதம்பார் என இவ்வூர் வழங்கப் படுவதாகப் படத்துடன் அங்கு எழுதப்பட்டுள்ளது. மக்களும் மிகச் சாதாரணமாக, 'மாயமானை அதம் செய்த இடம் ஆதலால் அதம்பாவூர், அதம்பார் என இவ்வூர் அழைக்கப்படுகிறது' என்கின்றனர். இவ்வூரைச் சார்ந்த 'மான்கண்ட மூலை' என்ற குக்கிராமத்தின் பெயருக்கு, 'இராமன் மானைக்கண்ட இடம்' என்றும் அவர்கள் காரணம் கூறுகின்றனர்.

இவ்வாறே, மாரிச மான் அழகு மிகுந்த தோற்றத்துடன் காட்சி அளித்த இடம் நல்லமாங்குடி என்றும் அம்மான், இராமனால் வீழ்த்தப் பட்ட இடமே கொல்லுமாங்குடி எனவும் சிலர் விளக்கம் தருகின்றனர். இவ்வூர்களும் நன்னிலம் வட்டத்திலேயே அமைந்துள்ளன.

சலிப்பேரி

மாரிசமானை வேட்டையாடத் துரத்திய இராமர், தம் சலிப்பு ஆற்றிக் கொள்ள ஓய்வெடுத்த இடம் 'சலிப்பு ஆறி' என்று பெயர் பெற்று, சலிப்பேரி என்று மருவியதாகக் கூறுவர். நன்னிலம் வட்டத்தைச் சார்ந்த இத்தலம் பற்றிக் கூறப்படும் இப்புராணப் புனைவு இவ்வூரின் கோதண்டராமர் கோயில் விழா அழைப்பிதழிலும் இடம் பெற்றிருக்கிறது. ஆயினும், ஏரி ஒன்றின் காரணமாக இப்பெயர் இவ்வூருக்கு ஏற்பட்டிருக்கும் வாய்ப்புகள் உண்டு.

வலங்கைமான்

சீதையின் வேண்டுகோளுக்கு இணங்க இராமன் மாரிச மாய மானை விரட்டிச் சென்றபோது, இத்தலத்தில் மான் வலப்புறம் ஓடி மறைந்ததால் வலங்கைமான் என்ற பெயர் உருவாயிற்று என்பது இவ்வூருக்குப் புராணம் கூறும் காரணமாகும்.

இவ்வூர் சிவன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், வலக்கையில் மான் ஏந்தியிருந்த காரணத்தால் வலங்கைமான் எனப் பெயர் பெற்றது என்பர் சிலர். ஆயின் அத்தகைய வலக்கையில் மான் ஏந்திய சிவன் படிமம் தற்பொழுது அக்கோயிலில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இராமன் தேடிய சீதை

இராவணன் சீதையைக் கடத்தி அசோக வனத்தில் சிறை வைத்ததும் அவளைத் தேடி இராமனும் அனுமனும் சென்றதும் ஆகிய புராண நிகழ்வு அடிப்படையில் சில இடங்களுக்குப் பெயர்க்காரணம் கூறப்படுகின்றன.

பாடகச்சேரி

சீதையை இராவணன் தூக்கிச் சென்றபோது, இராமன் அடையாளம் கண்டு கொள்ளும் பொருட்டுச் சீதை, தமது ஒவ்வொரு அணிகலனையும் கழற்றிக்கீழே போட்டுச் சென்றாள் என்றும், அவ்வாறு பாடகம் என்ற அணிகலனைக் கழற்றிப்போட்ட இடமே பாடகச்சேரி எனப்படுகிறது என்றும் கூறுவர். ஆயின், 'பாடகம்' என்பது, கதைகளை அபிநயித்துப் பாடும் கலையைக் குறிக்கும் சொல் என்பதால் பாடகம் பாடுவோர் குடியிருந்த அடிப்படையில் பாடகச்சேரி என இவ்வூர் அழைக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

உதயமார்த்தாண்டபுரம்

சீதையைத் தேடி இராமன் வரும் காலத்தில், இராமன் இங்குத் தங்கியிருந்து சூரிய உதயத்திற்குப் பின்னர்ப் புறப்பட்டுச் சென்றதால் உதயமார்த்தாண்டபுரம் என இவ்வூர் வழங்கப்படுகிறது என்பர். ஆட்பெயர்க்கூறு புராணத்தோடு தொடர்புப்படுத்தப்படுவதை இவண் நோக்கலாம். ஸ்ரீ மார்த்தாண்டபுரிசுவரர் என்ற பெயரில் ஒரு சிவன் கோயில் ஒன்று இவ்வூரில் அமைந்துள்ளமை எண்ணத் தக்கது.

ஆதிராமேஸ்வரம்

சீதையைத்தேடி இராமன் இலங்கை செல்லும் வழியில் இராமேஸ்வரம் செல்லும் முன்பே புதூர் எனும் தலத்தில் சிவனை வணங்கி ஆறுதல் பெற்றுத் துயர் நீங்கப் பெற்றதால் இத்தலத்திற்கு ஆதிராமேஸ்வரம் எனப் பெயர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். ஆனால், இப்பெயர் கோயில் அழைப்பிதழில் இடம் பெறுவதன்றி நடைமுறை வழக்கில் யாராலும் பயன்படுத்தப் படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருஇராமேஸ்வரம்

இராவணனைக் கொன்ற பாவம் நீங்க, இராமன் வழிபட்ட தலம் என்பதால் இவ்வூர், திருஇராமேஸ்வரம் என அழைக்கப் படுகிறது. மூலவர் இராமநாதர் என்றழைக்கப்படுவதும் குறிப்பிடத் தக்கது. சோழர்காலக் கற்றளியாக இக்கோயில் விளங்குகிறது.

இராமன் ஆற்றிய நீத்தார் கடன்

தசரதச் சக்கரவர்த்திகள் இறந்த செய்தி அறிந்து, தம் வனவாசத்தின் போதே அவருக்கு இராமன் பிள்ளைக்கடன்களை மேற்கொண்டான் என்ற இதிகாச நிகழ்வு பல இடப்பெயர் களுக்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது.

ராமகயா

இராமனின் 14 ஆண்டு கால வனவாசத்தின்போது இராமன் திருவாரூர் வட்டத்து ராமகயா இவ்வூருக்கு வந்த நாளில், அவரது தந்தை தசரதருக்குத் திதி நாள் அமைந்ததால் காசிக்குச் சென்று முன்னோர்களுக்குச் செய்யும் சடங்குகளைச் செய்ய இயலவில்லை எனவும், அதனால் இவ்வூருக்கே காசியைக் கொணர்ந்து வந்து பிதுர்க் கடன்களைக் கழித்ததாகவும், அதனாலேயே இவ்வூர் ராமகயா என்றழைக்கப்படுகிறது என்றும் கூறுகின்றனர். மேலும் இத்தலத்தில் பிதுர்க்கடன் செய்த பொழுது தான் தசரதர் மோட்ச நிலை அடைந்தார் என்றும் மக்கள் நம்பி வருவதால், பிதுர்க் கடன் செய்யப் புகழ்பெற்ற ஊராகவும் இவ்வூர் விளங்குகிறது. ராமகயா, ராமகே என்று திரிபடைந்தும் வழங்கப்படுகிறது. கேக்கரை, குருவி இராமேஸ்வரம் என்பன இவ்வூர்க்கு வழங்கும் மற்ற பெயர்கள்.

செதலப்பதி

திலதர்ப்பணபுரி என்னும் இடப்பெயரே, மருவித் ''திலதைப்பதி'' என்று வழங்கப்பட்டது என்பர். இராமனும் இலக்குவனும் தங்களுடைய தந்தை தசரதச் சக்கரவர்த்திக்கும் ஜடாயுவுக்கும் எள்ளும் தண்ணீரும் இறைத்துத் தர்ப்பணம் செய்து வழி பட்டமையால் இப்பெயர் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது. இதனைக் குறிக்கும் தல ஐதீகச் சிற்பமும் கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் காணப்படுகிறது.

திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் இவ்வூரைத் ''திலதைப்பதி'' என்றும், கோயிலின் பெயரை மதிமுத்தம் என்றும் குறிப்பிடுகிறார். இறந்தோர்க்கான கடன்களான தர்ப்பணம், சிரார்த்தரம் ஆகியன இத்தலத்தின் 'சந்திரத் தீர்த்தம்' எனும் கோயில் குளத்திலும், அருகில் பாயும் அரசலாற்றிலும் இன்றும் பெருமளவில் மேற் கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

திலதை என்ற மரூஉப்பெயர் பதி என்று ஒட்டுப் பெற்று 'திலதைப்பதி' என்று சிறப்புடன் அழைக்கப்பட்டது. அப்பெயரே இன்று செதலப்பதி என்று மக்கள் வழக்காற்றில் மாற்றம் பெற்று நன்னிலம் வட்டத்தில் வழங்குகிறது. ஆனால், திலதை என்னும் மரூஉப் பெயரின் மூலப்பெயர் திலதர்ப்பணபுரிதானா என்பது ஆய்வுக்குரியது.

பிற இராமாயணக் கதைகள் மற்றும் பாத்திரங்கள்

இராமர் கதை நிகழ்வுகளோடு தொடர்புப்படுத்தி, கதை நிகழ்ந்த இடங்களாக, சில இடங்களுக்கு விளக்கம் அளிக்கப்

படுகிறது. இராமாயணப் பாத்திரங்கள் சிலவற்றின் பெயராலும் இடங்கள் வழங்கப்படுவது மற்றொரு நிலையாகும்.

கெழுவத்தூர்

இராவணன் இலங்கைக்குச் சீதையைத் தூக்கிச் சென்றபோது ஜடாயு அவனிடமிருந்து சீதையை மீட்கப் போரிடுகிறான். இராவணன், இப்போரில் ஜடாயுவை வீழ்த்திக் கீழே தள்ளி விடுகிறான். இவ்வாறு ஜடாயு என்னும் கழுகு கீழே விழுந்த இடமே கழுகத்தூர் என்று அழைக்கப்பட்டது என்பர்.

இராமன் வரும்வரை ஜடாயு உயிருடன் இருந்து சீதை கடத்தப்பட்டதை அவனுக்குக் கூறிய பின் உயிர் விடுகிறது. இறந்த ஜடாயுவுக்கு எண்ணெய் தடவி இறுதிச் சடங்குகளைச் செய்து தம் உள்ளங்கையில் வைத்து இராமன் தகனம் செய்கிறான். இவ்வாறு இராமன் ஜடாயுவுக்கு எண்ணெய் தேய்த்து இறுதிச் சடங்கு செய்த இடமே இவ்வூரில் அமைந்துள்ள எண்ணெய்க் குழிக்குளம் எனப்படுகிறது. இவ்வூர் ஈசன் ஜடாயுபுரீஸ்வரர் எனப்படுகிறார். ஜடாயு என்னும் கழுகு விழுந்து உயிர்விட்ட இடமாதலால் கழுகத்தூர் என்றழைக்கப்பட்ட இத்தலம் பின்னர், கெழுவத்தூர் (மன்னார்குடி வட்டம்) என மருவி வழங்குகிறது என்கின்றனர்.

முடிகொண்டான்

பரத்வாஜ மகரிஷிக்குப் பட்டாபிஷேக காலத்தில், இராமன் முடி தரித்துக் காட்சியளித்தமையால் இவ்வூருக்கு முடிகொண்டான் என்று பெயர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். ஆயினும், 'முடிகொண்ட சோழன்' என்ற விருதுப்பெயர் கொண்ட இராசேந்திர சோழனின் பெயரால் இவ்வூருக்கு முடிகொண்டான் எனப் பெயர் ஏற்பட்டது என்பதே பொருத்தமாக அமைகிறது. தஞ்சை நாயக்கரின் முடிகொண்டான் செப்பேடு இவ்வூரை முடிகொண்டான் புத்தூர் என்று குறிப்பிடுகிறது.

இவ்வாறாகப் பல்வேறு இடப்பெயர்களுக்குத் தரப்படும் இராமாயணக் கதை விளக்கத்தால் இவ்விதிகாசம் மக்கள் மனத்தில் தாக்கம் பெற்று வேரூன்றிய தன்மையைப் புரிந்துகொள்ள முடிகிறது. மக்களால் படைக்கப்பட்டதால் தாமே ஓர் இலக்கியமாய் விளங்கும் இடப்பெயர்கள் சில நேரங்களில் இத்தகைய புனை கதை இலக்கியப் படைப்புகளுக்கும் காரணமாக அமைகின்றன. இடப்பெயர்களின் காரணங்களை அறிய விரும்பும் ஓர் ஆர்வலருக்கு, அவர்களின் கற்பனைத் திறனுக்கு ஏற்றாற்போல் அவை இடங்கொடுத்துப் புராண, நாட்டுப்புறக் கதைகளை உருவாக்கி விடுகின்றன.

மக்கட் பெயர்கள்

மு. பாண்டி

அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 3

ஒரு மனிதனுக்குப் பெயரிடுவதன் நோக்கம் அவனைப் பிறரிடமிருந்து தனித்துச் சுட்டுவதற்காகும். பெயர்கள் சாதி, மதம், வட்டாரம், பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றை வெளிக்காட்டும் குறியீடுகளாகவும் உள்ளன. காலம் மற்றும் சூழ்நிலைகளால் அனைத்தும் மாற்றத்திற்குள்ளாகும் என்பதற்கேற்ப மக்களுக்குப் பெயரிடுவதிலும் தலைமுறையினரிடையே மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளதை அவ்வவ் காலப் பெயர்களை நோக்குவதன் மூலம் அறிய முடிகிறது. சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பழையூரில் வசிக்கும் தேவேந்திரர்கள் இனத்தில் கடந்த ஐந்து தலை முறையினரின் பெயர்களை ஒப்பு நோக்கி அவற்றில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கான காரணங்களைக் கண்டறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒருதலைமுறை என்பது சுமார் முப்பது ஆண்டு களாகும். ஐந்து தலைமுறைகள் என்பது கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்குள் அடங்கும்.

தமிழில் முதல் நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் மரபியலில் இளமைப் பெயர்கள், ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள் என மூவகைப் பெயர்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. இவை பொதுப் பெயர்களாகும். சங்க காலத்தில் ஐந்திணைகளில் உயர்ந்தோர்களாகக் பொருப்பன், வெற்பன், சிலம்பன், விடலை, காளை, குறும்பொறை நாடன், ஊரன், மகிழ்நன், சேர்ப்பன், புலம்பன், கொடிச்சி, மீளி, எயிற்றி, தோன்றல், கிழத்தி, பரத்தி, நுழைச்சி என்பவர்கள் இருந்துள்ளனர். தாழ்ந்த மக்களாகக் குறவர், கனவர், எயினர், இடையர், ஆயர், உழவர், மறவர், நுளையர், பரதர், குறத்தியர், மறத்தியர், இடைச்சியர், ஆய்ச்சியர், கடையர், கடைச்சியர், பரத்தியர், அளத்தியர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

சங்க காலத்திலிருந்து தற்காலம் வரை கிடைக்கும் இலக்கியங்கள், கல்வெட்டுகள் போன்ற ஆவணங்களில் காணலாகும் பெயர்களைக் கால அடிப்படையில் நோக்கினால் நிலம், ஊர், தொழில், சாதி,

தெய்வம், மதம், பிறப்பு, உறுப்புகள், இயக்கம், சினிமா போன்றவைகள் மக்களுக்குப் பெயர் சுட்டுவதற்கான காரணிகளாக அமைந்துள்ளன. தமிழகத்தில் சாதியம் வலுவாக வேரூன்றி கிளை பரப்பிட சமூக இயக்கங்களைத் தீர்மானிக்கும் சாரணியாக இருப்பது கண்கூடு. சாதி அடிப்படையில் பிரிந்து வாழும் ஒவ்வொரு இனமும் தங்களுக்குள் மேலும் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. திருப்புவனத்தில் வாழும் அட்டவணை இனத்தவர்களுள் ஒருவரான தேவேந்திர இன மக்கள் சாதியில் ஒரே பிரிவினர் என்றாலும் வழிபடும் குல தெய்வங்கள் அடிப்படையில் நான்கு பங்காளிகளாக வாழ்கின்றனர். குடியேறிய கால நிலை, வசிப்பிடம் போன்றவற்றால் பிரிந்துள்ளனர். அய்யனார், அழகர் மறறும் முருகன், சமையன் பிற தெய்வங்கள் என இவர்கள் குல தெய்வங்களைக் கொண்டுள்ளனர். அனைவருமே விவசாயத்தைக் குலத்தொழிலாக உடையவர்கள்.

முதல் பிரிவினர் : ஆண்கள் பெயர்கள்

இவ்வூரின் இவ்வினத்தில் பூர்வீகக் குடிகள் அய்யனார் தெய்வத்தைக் குலதெய்வமாகக் கொண்டவர்களாவர். இவர்களின் முதல் தலைமுறையினரில் ஆண்கள் பெயர் தனங் காத்தான், ராக்கன் எனவும், இரண்டாம் தலைமுறையினரின் பெயர்கள் கிழவன், பெரிய கருப்பன், மொங்காரி, முனியாண்டி, ஊர்காவலன், ரெங்கன் எனவும் மூன்றாம் தலைமுறையினரின் பெயர்கள் கொம்பையா, அய்யனார், சேகர், பாண்டி, கருப்பையா, முத்தையா, குமார், ஜோதி, கோபிராசன், செல்வம், அமுல்ராஜன், இரமேஷ், பிரபு எனவும், ஐந்தாம் தலைமுறையினரின் பெயர்கள் விஜயலாயன், சுரேஷ், சூர்யா, விக்னேஷ், அஜய்குமார், அபிசேகரன், விக்கி, பிரேம்குமார், பிரவீன், மணிகண்டன், அருண், சுந்தர் எனவும் வைக்கப் பெற்றுள்ளன.

பெண்கள் பெயர்கள்

இப்பிரிவினரின் பெண்கள் பெயர்களாக முதல் தலைமுறை யினருக்கு இருளாயி, ராக்கு, சின்னம்மாள் எனவும், இரண்டு மற்றும் மூன்றாம் தலைமுறையினருக்குப் பாண்டியம்மாள், இராக்கு, சின்னப்பொண்ணு, இருளாயி எனவும், நான்காம் தலைமுறை யினர் தனம், ஸ்ரீதேவி, பஞ்சவர்ணம், ஆனந்தவள்ளி, ராக்கு, சிவகாமி, கார்த்திகைவள்ளி, மீனாள், அனுசுயா எனவும், இன்றைய ஐந்தாம் தலைமுறையினருக்குக் கீர்த்திகா, அமர்த்தியா, வினோதினி, லோகேஸ்வரி, ராஜலெட்சுமி, சீமா, வெண்ணிலா, சௌந்தர்யா, சௌமியா, திவ்யபாரதி, பிரியங்கா, ரம்யா, பிரியா, சுகன்யா, பானுப்பிரியா எனவும் பெயரிட்டுள்ளனர்.

இரண்டாம் பிரிவினர்

அழகர் மற்றும் முருகனைக் குலதெய்வமாகக் கொண்ட இரண்டாம் பிரிவினரின் முதல் தலைமுறை ஆண்களுக்குச் சுப்பக்குடும்பன், வேலு, முருகன், கருமலை, கூலு, அரசன் எனப் பெயர் சூட்டியுள்ளனர். இரண்டாம் தலைமுறையினருக்கு மகாலிங்கம், கரையாண்டி, ஆதிமூலம், சண்முகம், பாரமலை, கிருஷ்ணன், இராமையா, கண்ணன், சோலைமலை, முருகாண்டி, பிச்சை எனப் பெயரிட்டுள்ளனர். மூன்றாம் தலைமுறையினருக்கு முருகேசன், நாராயணன், படித்துறை, குண்டுமலை, அழகுமலை, வேலுச்சாமி, மலைச்சாமி, வீரவேல், தங்கவேல், ரகுபதி, முருகன், இராதா, பொன்னுச்சாமி எனப் பெயர் வைத்துள்ளனர். நான்காம் தலைமுறையினர் பாலமுருகேசன், கிருஷ்ணமூர்த்தி, கண்ணன், பாண்டியராஜன், சிவா, செல்வம், முத்துராமலிங்கம், சக்திவேல், முருகன், லோகநாதன் என்று பெயர் பெற்றுள்ளனர். ஐந்தாம் தலைமுறையினருக்கு யோகேஸ்வரன், சூர்யா, ராஜுவ், தருண்குமார், வினோத் எனப் பெயர் வைத்துள்ளனர்.

இப்பிரிவினரின் முதல் தலைமுறையைச் சார்ந்த பெண்களுக்கு முருகி, இருளி எனவும் இரண்டாம் தலைமுறையினருக்குப் பூச்சம்மாள், பாக்கியம், சரஸ்வதி எனவும் மூன்றாம் தலைமுறையினரின் பெயர்கள் சண்முகவள்ளி, ரோகிணி, சௌந்தரம் எனவும், நான்காம் தலைமுறையினரின் பெயர்கள் இராஜேஸ்வரி, லலிதா, கலைச்செல்வி எனவும் ஐந்தாம் தலைமுறையினருக்குப் புனிதா, முருகேஸ்வரி, சுகன்யா, சத்யா, பிரவீணா, ரோஜா எனவும் பெயரிட்டுள்ளனர்.

மூன்றாம் பிரிவினர்

சமையன் என்ற சாமியைக் குலதெய்வமாகக் கொண்ட பிரிவினரில் முதல் தலைமுறை ஆண்களுக்குக் கொத்தன், கூலு, சமையன் எனவும், இரண்டாம் தலைமுறையினருக்கு ஆறுமுகம், மொக்கப்பழனி, பெரியாம்பிள்ளை, வைத்தியலிங்கம், சித்திரைவேலு, சமையன், இருளன் எனவும், மூன்றாம் மற்றும் நான்காம் தலைமுறையினருக்குக் கண்ணன், சமையன், நாகராசு, இராசு, மதியழகன், இராஜேந்திரன் எனவும் ஐந்தாம் தலைமுறையினருக்குச் சரத்குமார், சந்தோஷ்குமார், ராஜீவ், வினோத்குமார், பாஸ்கரன், சரண், அருண் எனவும் பெயரிட்டுள்ளனர்.

பெண்களுக்கு முதல் மூன்று தலைமுறையினருக்கு இருளாயி, கருப்பாயி, சமையன் என குலதெய்வங்களின் பெயர்களையே மாற்றி மாற்றிச் சூட்டியுள்ளனர். நான்காம், ஐந்தாம் தலைமுறை

யினரின் பெயர்கள் சங்கீதா, கௌசல்யா, சரிகா, நந்தினி, சரண்யா, சந்தியா, சங்கீதா ராணி என வைக்கப்பட்டுள்ளன.

நான்காம் பிரிவினர்

பிற தெய்வங்களைக் குலதெய்வமாகக் கொண்ட நான்காவது பிரிவினரில் முதல் தலைமுறை ஆண்களுக்கு மகாலிங்கம், சுந்தரராசு, மாலைக்கருப்பன், பெரியாம் பிள்ளை எனவும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையினருக்குப் பெரியாம்பிள்ளை, சுப்பையா, சமையன், சண்முகம், பாண்டி, வீரு, கருப்பையா எனவும், நான்காம் தலைமுறையினருக்கு இராஜேந்திரன், நாகராஜ், முருகன், திருக்குமரன் செழியன், ஆசைத்தம்பி, லோகநாதன், அய்யாவு எனவும் ஐந்தாம் தலைமுறையினருக்கு விக்ரம், சிவா, ஹரிஹரன், தாமோதரன், அருண், காமராஜ் எனவும் பெயர் வைத்துள்ளனர்.

இப்பிரிவினர் முதல் மற்றும் இரண்டாம் தலைமுறைப் பெண்களுக்கு முருகி, இருளாயி, சௌந்தரம் என பெயர் வைத்துள்ளனர். மூன்று மற்றும் நான்காம் தலைமுறையைச் சார்ந்த பெண்களுக்கு மகேஸ்வரி, கலைச்செல்வி, சித்ரா எனவும், ஐந்தாம் தலைமுறையைச் சார்ந்த பெண்களுக்கு மஞ்சு, அஞ்சலி, அபிநயா தேவி, சௌந்தர்யா, அனிதா என்றவாறும் பெயரிட்டுள்ளனர்.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட இனத்தின் நான்கு பிரிவு களும் ஐந்து தலைமுறையினரில் முதல் மற்றும் இரண்டாம் தலைமுறையினரின் ஆண்கள் பெயர்களில் குலதெய்வம், தொழில், தெய்வம், நிலம், வகித்த பதவி போன்றவை பின் அல்லது உள்ளொட்டுகளாக இணைந்து மரபு வழியான முறையில் வெளிப் படுகின்றன. இவர்களின் பெயர்களின் முன் குடும்பன் காலாடி, வாரியன் போன்ற சாதிப் பெயர்களும், இணைந்துள்ளன. பெண் களுக்கும் முதல் இரண்டு தலைமுறையினருக்குக் குல தெய்வங் களின் பெயர்களையே சூட்டியுள்ளனர். மூன்றாம் நான்காம் தலைமுறையினரின் பெயர்களில் மதம், அரசியல், இயக்கம், சினிமா போன்றவற்றின் தாக்கம் மிகுதியாக உள்ளன. பெண்கள் பெயர்களில் சாதி எந்நிலையிலும் சேரவில்லை.

ஐந்தாம் தலைமுறையினரிடம் கல்வி, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு, நகரங்களில் குடியேற்றம் போன்றவை காரணமாக வடமொழி, மதம், ஆங்கில மோகம், சினிமா போன்றவற்றின் தாக்கத்தாலும் நாகரிகம் என்ற கருத்திலும் வடமொழி அரசியல்வாதிகள், திரை நட்சத்திரங்களின் பெயர்களின் தாக்கம் உள்ளது. நாகரிகம் என்ற போர்வையில் உடை, உணவு, அணிகலன்கள், மனித நடவடிக்கைகள் மாற்றம் பெறுவதுபோல

காலந்தோறும் அவ்வவ்காலப் பாதிப்பில் பெயரிடும் முறையிலும் மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை இப்பெயர்கள் தெளிவுபடுத்துகின்றன. ஐந்தாம் தலைமுறையினரில் ஆண்களை விட பெண்களின் பெயர்களில் வடமொழி, சினிமா இரண்டின் தாக்கம் அதிகளவில் உள்ளன. இப்பெயர்கள் ஐந்து தலைமுறை யினரிடையே காலந்தோறும் ஏற்பட்டுவரும் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. ''ஒரு நாட்டின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் நம்பிக்கை கடவுட்கொள்கை, சமயச் சிந்தனை, அரசியல் மாற்றம், சமுதாய மாற்றம் ஆகியவற்றை மக்கட் பெயராய்வு மூலம் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது'' என்ற சு. சக்திவேல் அவர்களின் கருத்து இவண் நோக்கத்தக்கது.

இவ்வினத்தில் ஒருவருக்குப் பெயர் சூட்டும் பொழுது குலதெய்வக் கோயில், பூ கட்டிப் போட்டு எடுத்தல், கோயில் பூசாரி பெயர் வைத்தல் வயதில் பெரியவர்கள் சூட்டல் என்ற முறைகளில் பெயரிடுகின்றனர். அனைவருக்கும் குல தெய்வத்தின் பெயரைச் சூட்டுகின்றனர். அவ்வாறு சூட்டிய பெயர்களை முதல் மூன்று தலைமுறையினர் அப்படியே எந்த மாற்றமும் இல்லாது ஏற்றுக் கொண்டுள்ளனர். நான்கு மற்றும் ஐந்தாம் தலைமுறை யினருக்குக் குலதெய்வத்தின் பெயர் வைத்த போதிலும் இரண்டாவதாக ஒரு நவீன பெயரைச் சூட்டி அதனையே வழக்கில் வைத்துக் கொள்கின்றனர்.

முடிவுரை

ஆய்வுக்குரிய இனத்தின் பெயர்களிலிருந்து கீழ்க்கண்ட தன்மைகள் வெளிப்படுகின்றன. முதல் இரண்டு தலைமுறை யினரின் பெயர்களில் குலதெய்வம், சாதி, வட்டாரம், தொழில் ஆகியன முக்கிய அங்கம் வகிக்கின்றன. மூன்றாம் தலைமுறை யினரின் பெயர்களில் மதம், அரசியல் இயக்கங்கள், திரையுலகம் சார்ந்தவர்களின் பெயர்கள் தாக்கம் பெற்றுள்ளன. நான்கு, ஐந்தாம் தலைமுறையினர் பெயர்களில் கல்வி, அலுவலக வேலை வாய்ப்பு, இடப்பெயர்வு, வடமொழி மற்றும் நவீனங்களின் தாக்கத்தில் முற்றிலும் மாறுபட்ட பெயர்களைச் சுட்டும் முறை உள்ளது. இவ்விரு தலைமுறையினருக்கும் சாதிய உணர்வு இருந்த பொழுதும் பெயருக்குப்பின் சாதியைச் சேர்த்துக் கொள்ளும் விருப்பமில்லை. பெயர் வைப்பதில் நவீனத்தின் தாக்கம் பெண் களிடையே மிகுதியாக உள்ளது.

வாழ்தல் வேண்டி...

பா. சிங்காரவேலன்

நாடார் சரஸ்வதி கல்லூரி
தேனி

ஆதிமனிதன் பழுமரம் தேடும் பறவை போல உணவு தேடுதலில் தன் வாழ்நாளை நகர்த்தினான். பின் கால்நடை வளர்க்கக் கற்றுக் கொண்டபோது நீர்நிலைகளுக்கு அருகில் குடியேறினான். ''நீர் இன்றி அமையா உலகு'' என்பதற்கு ஏற்பப் பசுமைச் சூழலும் பருக நீரும் கிடைத்த இடத்தில் உணவுக்காக வேட்டையாடுதலும், எல்லையில்லாக் கடவுளின் பெயரால் பங்கிடுதலும் எந்திர கதியாய் இன உற்பத்தி செய்தும் வாழ்ந்தான்.

காலமாற்றம், கருவிகளின் கண்டுபிடிப்பு, மண்வளம் குறித்த அறிவும், பருவ கால உற்பத்தி முறையின் அறிவு வேளாண்மை சமூகத்திற்கு வித்திட்டது. இதனால் பதியெழு அறியா மக்களாய் வாழ்ந்தனர். காலம் மனிதனுக்குள் ஒழுக்க நெறிகளை வற்புறுத்தியது. மனிதன் மண்ணின் தன்மைக்கு ஏற்ப வாழ்தல் வேண்டிய நிர்பந்தத் திற்குத் தள்ளப்பட்டான். ஒவ்வொருவரும் தான் வாழ்ந்தற்கான எச்சத்தை விட்டுச் செல்வதையே வீடுபேறாகக் கருதினான். சம்பிரதாயங் களுக்காக வாழ்வதைவிடச் சமூக அங்கீகாரம் பெற்று வாழ்வதற்கு மக்கள் விரும்பினர். இவ்வெண்ணம் நழுவும்போது முகத்தைப் புதைத்து, வேறு புலம் நோக்கி சென்றனர். அவர்களை அம்மண் ஏற்றதா? ஏமாற்றியதா? ஏளனம் செய்ததா? எழுந்து நிற்க கை கொடுத்ததா? என்பதைக் கட்டுரையின் வழி காண்போம்.

வேதம்

நான்கு வேதங்களும் கடவுளுக்குரிய மொழி. இதில் அந்தணர்கள் இந்தியாவிற்குள் நுழைந்து ஒழுக்க நெறிக்கு உட்பட்ட வாழ்க்கையினைக் கண்டு, தாமும் வாழ நினைத்து நிலைத்த குடியானதை ரிக் வேதம் எடுத்துக் கூறுகிறது.

''ரிக் வேதத்தில் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கான மேய்ச்சல் நிலங்களைத் தேடிவந்து குடியேற்றக்காரர்களான ஆரியர்கள் செழுமையான தாவரங்கள் நிறைந்த சிந்து சமவெளியில் நுழைந்ததும் மகிழ்ச்சி அடையவும், வியப்புறவும் செய்ததைப் பல ஸ்லோகங்

களால் தெளிவாகின்றன. பெரிய நதிகளைக் கண்டிராத அவர்கள், சிந்து நதிக்கரையை அடைந்தபோது எத்தகைய ஆச்சரியமடைந்தனர், என்பதை அப்பாகத்தில் விவரிக்கப்பட்டுள்ள துதிப்பாடல்களின் வாயிலாக அறியலாம்'' என்கிறார் சனல் இடமருகு.

சங்க இலக்கியம்

தமிழரின் அக, புற வாழ்க்கையைப் படம்பிடிக்கும் நூலே சங்க இலக்கியம் ஆகும். இதில் தமிழரின் வணிகமும், பிற நாட்டார் தொடர்பினையும் பாடல் வாயிலாக அறிய முடிகிறது.

''கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்து இருந்து உறையும் இலங்கு நீர் வரைப்பும்''

இவர்கள் துறைமுக நகரில் தம் இல்லங்களை அமைத்தும், மன்னர்களின் மாடி வீடுகளில் காவல் இருந்ததையும் காண முடிகின்றது.

அற இலக்கியம்

ஒழுக்க நெறிகளை வற்புறுத்தும் அற இலக்கியத்தில் தமிழன் தன் கல்வியறிவினைப் பயன்படுத்தி வேறு நாடுகளுக்குச் சென்று வாழ்க்கை நடத்தினர். இதனை

''ஆற்றவும் கற்றார் அறிவுடையார், அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு
வேற்று நாடாக தமவேயாம்''

மேலும் எதிர்கால அபரிமிதமான பலன்களை எதிர்நோக்கியும் நல்ல வாழ்க்கை நிலைக்காகவும் முன்னேற்றம் அடையாத நாடுகளிலிருந்து முன்னேறிய நாடுகளுக்குச் செல்கின்றனர். இவ்வகை இடமாறுதல் உலகளவில் அதிக செல்வாக்குப் பெற்றுள்ளது. மக்கள் தொகை அதிகரிக்கும் பட்சத்தில் இடம் பெயர்வோரும் அதிகரிக்கின்றனர். இந்தியாவில் உள்ள கணிப்பொறியாளர்கள் மற்றும் பொறியியல் அறிஞர்களும் வாழ்க்கை வளங்களைப் பெருக்க ஆற்றல் புறக்கழிவாக அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்கின்றனர்.

காப்பிய இலக்கியம்

மாமுது பார்ப்பான் மறைவழிக் காட்டிடத் தீவலம் செய்து கண்ணகியைக் கைப்பிடித்தான் கோவலன். பின் ஆடல்கணிகை மாதவியிடம் கண்ணகியை மறந்து விடுதல் அறியா விருப்பினன் ஆயினன். சில காலங்களுக்குப் பின் கோவலன் ''குலம்தரு வான் பொருள் குன்றம் தொலைத்த இலம்பாடு நாணுத்தரும்'' என்று கூறிக் கண்ணகியிடம் வருகின்றான். சிலம்பை முதலாக வைத்து

தொலைந்த செல்வத்தை மீண்டும் ஈட்டுவேன் என்று கூறி கண்ணகியை அழைத்துக் கொண்டு புகார் நகரை விட்டு மதுரைக்கு வருகின்றான்.

நாட்டுப்புற இலக்கியம்

வாய்மொழி இலக்கியமாக அண்ணன்மார் சுவாமி கதையில் கோளாத்தாக கவுண்டர் திருமணத்திற்குப் பின் தம்பிமார்கள் சதி, சூது செய்வதை அறிந்து வேறு தேசம் செல்ல நினைத்து இடம் பெயர்கிறார்கள்.

''சூது நினைத்ததை அண்ணன் சூதகமாய்த் தானறிந்து
நாமிங்கே இருந்தோமானால் எவ்விதமும் சூது செய்வார்
வேறுதேசம் போவோமென்று புறப்பட்டாரிருவர்களும்''

என்ற செய்தியைக் கதைப்பாடல் மூலம் அறிய முடிகிறது. மேலும் தமிழகத்தில் வசிக்கும் தெலுங்கர், கன்னடர், சௌராட்டிரர் போன்றோர் இடம் பெயர்ந்த அவலத்தைக் கதையாக கூறுகின்றனர்.

அரசியல் காரணம்

மனிதர்கள் அரசியல் காரணங்களாலும் இடம்பெயர்கின்றனர். ''1846 முதல் 1932 வரை பிரிட்டிஷ் இந்திய மக்கள் மற்றும் சீன நாட்டு மக்கள் காலணி ஆதிக்கத்தை விரும்பாமல் ஆப்பிரிக்க நாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர். மேலும் ஒரு நாட்டு மன்னனின் கொள்கைகள், கொடுங்கோல் ஆட்சி இவற்றின் காரணமாக வேறு நாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர்''. மேலும் ''பரம்பரையாக வாழ்ந்த இடத்தை விட்டு, வேறு நகரங்களுக்கு மக்கள் செல்கிறார்கள். அங்கு அவர்கள் புதிய மக்கள் இயற்கைச் சூழல் பொருளாதார வசதி போன்ற தடைகளைச் சந்திக்க வேண்டியிருக்கின்றது. இதனால் பிறப்பு விகிதம் குறைவதற்கு மாற்று காரணியாக அமைகிறது என்கிறார்'' எவர்ட் - எஸ்.லீ.

பூர்வீக இடத்தைவிட்டு வேறு இடத்திற்குச் சென்று வாழ முற்படும் மனிதனுக்குள் தேங்கிய சோகம் திருமாவளவன் கவிதையில் வெளிப்படுகிறது.

''முகவரி தேடும் முகங்களைச்
செய்தித்தாள்களில்
காணும் போதிலெலாம்
கருங்கல்லில்
காகம்
எச்சமிட்ட இலட்சணத்தில்
அருவருப்பில் துடிக்கிறேன்''

முடிவுரை

வாழ்வதற்கான சூழலை விரும்பிய மனிதன் பூமிபந்தின் ஒவ்வொரு பகுதியிலும் குடியேற்றம் நடத்தினான். அந்தணர்களும், யவனர்களும் வாழ வந்தவர்கள். இவர்களை இம்மண் ஏற்றது. மதுரை வந்த கோவலனின் மீது குற்றம் சாட்டிச் சிரைச் சேதம் செய்து எதிர்கால எண்ணத்தை ஏமாற்றியது. கல்வியாளர்களுக்கு நேசக்கரம் நீட்டியதால் மேலை நாடுகளில் வாழச் சென்றனர். மண்ணுக்காகப் போராடிய ஈழத் தமிழர்கள் மொழி தெரியாத தேசத்தில் வாழ்கின்றனர். அவர்களிடையே மண்ணை பிரிந்த சோகம் ஒரு புறம். தம்மைப்போல் துயர்கொண்ட மற்றவர்களைக் காணும்போது எழும் ஏக்கம் மறுபுறம். இப்படி மனிதன் வாழ்தல் வேண்டி வண்ணக் கனவுகளுடன் நடை பயில்வதை வாய்மொழி இலக்கியம் மற்றும் எழுதப்பட்ட இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது.

"ஈரோடு மாவட்டக் கொங்கு வேளாளர்களின் நேர்த்திக் கடன்கள்"

ம. சுந்தரமூர்த்தி

கோபி கலை அறிவியல் கல்லூரி

கோபிசெட்டிபாளையம் - 638 453

உலகத்தில் பல்வேறு வகையான சமூக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவரவர் தம் இனமக்கள், தன் குடும்பம், தன் வீடு என்று தனது இனம் சார்ந்த மக்களிடம் மிகுந்த உறவு வைத்துக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு வகையான சமூக இன மக்களுக்கும் தனித்த வரலாற்றுச் செய்திகள் உண்டு. அது மட்டுமல்லாமல் அவர்களின் தொழில் வகைகளிலும், வழிபாடுகள் நடத்தப்படு வதிலும், சடங்குகள் செய்யப்படுவதிலும், நேர்த்திக் கடன்கள் நிகழ்த்தப்படுவதிலும் பற்பல மாற்றங்கள் காணப்படுகின்றன. அதிலும் ஈரோடு மாவட்டக் கொங்கு வேளாளர்களின் நேர்த்திக் கடன்கள் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. அவற்றை வெளிக் காட்டும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

ஈரோடு மாவட்டக் கொங்கு வேளாளர்கள் தங்களுக்கும், இறைவனுக்கும் உள்ள தொடர்பை நேர்த்திக்கடன்கள் மூலமாக வெளிப்படுத்துகின்றனர். ஒரு காரியம் நிறைவேற வேண்டும் என்பதற்காக ஒரு காரியத்தைச் செய்தல் என்னும் அடிப்படையில் நேர்த்திக்கடன் நடைபெற்று வருகிறது. கொங்கு வேளாளர்களின் எண்ணத்திற்குத் தகுந்தபடி நேர்த்திக்கடன் இடம்பெறுகிறது. மக்கள் நேர்த்திக்கடன் செலுத்துதலை 'வேண்டுதல்' என்று கூறுவர். நேர்த்திக் கடனானது சிறுதெய்வம், பெருந்தெய்வம், குலதெய்வம் என்று அனைத்து வகையான தெய்வத்திற்கும் செலுத்தப்படுகின்றன. மொட்டையடித்தல், குண்டம் இறங்குதல், அபிசேகப் பூசை நடத்தி அன்னதானம் வழங்குதல் என்று பலவகையான முறைகளில் நேர்த்திக்கடன் இடம்பெறுகின்றன.

பெருந்தெய்வம்

பெருந்தெய்வத்திற்கு நடைபெறும் நேர்த்திக்கடனானது சிறு தெய்வ நேர்த்திக்கடனிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகிறது. பெருந்தெய்வ நேர்த்திக் கடனில் பலியிடுதல் நடைபெறுவதில்லை.

தங்களின் கோரிக்கை நிறைவேறினால் இத்தகைய செயல்களைத் தெய்வத்திற்காகச் செய்கின்றேன். அல்லது தங்களின் கோரிக்கை நல்ல முறையிலே நிறைவேறியதன் பொருட்டுத் தெய்வத்திற்காக இத்தகைய செயல்களைச் செய்கிறேன் என்று கொங்கு வேளாள மக்கள் இறைவனிடம் வேண்டியதன் தொடர்பாக சிவன், முருகன், திருமால் ஆகிய தெய்வங்களுக்குச் சில நேர்த்திக் கடன்களைச் செய்கின்றனர்.

தேங்காய், பழம் ஆகியன வைத்து அபிசேகம் செய்து பூசை நடத்துதல் என்ற முறை முக்கிய இடம் பெறுகின்றது. சிவன், முருகன், திருமால் என்று பெருந்தெய்வங்கள் அனைத்திற்கும் வருடம் ஒரு முறை பங்குனி மாதத்தில் (பங்குனி உத்திரம்) பழனி, சிவன்மலை போன்ற முருக ஆலயங்களுக்கு நடைப்பயணமாக நடந்து சென்று முருகனை வழிபடுகின்றனர். சிலர் காவடி எடுத்துக் கொண்டு நடைப்பயணமாக முருகனாலயம் சென்றும் வழிபட்டு வருகின்றனர்.

முருகனுக்கு வேண்டுதல் காரணமாக மொட்டை அடித்தலும் நடைபெறுகிறது. சிவன் கோயில்களில் நடைபெறும் சிவராத்திரி வழிபாடுகளில் இப்பகுதி மக்கள் விரதமிருந்து சிவனை வழி படுகின்றனர். சிவபெருமானுக்கு (பால் அபிசேகம்) அபிசேக ஆராதனைகளைச் செய்கின்றனர். சிவன், திருமால், முருகன் ஆகிய பெருந்தெய்வங்களுக்குக் கொங்கு வேளாள மக்கள் பல்வேறு விதமாகத் தங்களது நேர்த்திக் கடன்களைச் செய்து வருகின்றனர்.

சிறுதெய்வ வழிபாடு

பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகச் சிறுதெய்வ வழிபாடு இடம் பெறுகிறது. சிறுதெய்வ வழிபாட்டில் சில தெய்வங்களுக்குப் பலியிடுதலும் சில தெய்வங்களுக்கு அபிஷேக ஆராதனைகளும் நடைபெறுகின்றன. நேர்த்திக்கடனானது தெய்வத் திற்குத் தெய்வம் மாறுபடுகிறது.

மாரியம்மன்

கொங்கு வேளாளர் சமூகத்தில் மாரியம்மனுக்கு அக்னிச்சட்டி எடுத்தல், சேத்துவேடம் போடுதல், தீர்த்தக்குடம் எடுத்தல், மொட்டை யடித்தல், காது குத்துதல், அலகு குத்தல், பெயர் வைத்தல், பழம் சூறையிடுதல், பால் அபிசேகம் செய்தல் போன்றவற்றை நேர்த்திக் கடன்களாகச் செய்கின்றனர்.

அக்னிச்சட்டி எடுத்தல்

அக்னிச்சட்டி எடுத்தலைப் பூவோடு எடுத்தல் என்றும் சொல்லு வார்கள். வேண்டுதல்காரர்கள் மாரியம்மன் திருவிழாவில் திருவிழா

நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் இருந்தே விரதமிருந்து இந்த வேண்டுதலைச் செய்கின்றனர். ஒரு சட்டியில் அக்னியை வளர்த்து அதனைக் கையில் ஏந்திக் கோயிலை வலம் வருதல் இவ்வேண்டுதலாகும். இதனைச் செய்தால் தாங்கள் வேண்டிய காரியம் நிறைவேறும் என்ற எண்ணத்தில் இது நடைபெறுகின்றது. தீ என்றவுடனே நமக்குச் சுடுவது போல் உள்ளது. அக்னிச் சட்டியினைக் கையால் ஏந்தி வலம் வருதல் என்பது தெய்வத்தின் அருளாலே நடைபெறுகின்றது என்று அக்னிச்சட்டி எடுக்கும்போது சாமி வந்து ஆடுதலும் உண்டு. மனிதர் மேல் சாமி வந்து அருள்வாக்கு சொல்வதும் சிறப்பாக இடம் பெறுகிறது.

ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் அமைந்த மாரியம்மன் கோவிலில் வெண்கலத்தால் ஆன அக்னிச் சட்டியினைச் சிலர் எடுக்கும் வழக்கமும் இன்றுவரை இருந்து வருகிறது.

அலகு குத்துதல்

மாரியம்மன் திருவிழாவில் திருவிழா நாளன்று இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதனைச் செய்யும் பக்தர்கள் இரண்டு நாட்கள் விரதம் இருந்து இதனைச் செய்கின்றனர். ஊசிபோன்ற சிறிய வேலினைத் தங்களது உடலில் குத்திக்கொண்டு கோயிலை வலம் வந்து தெய்வத்தை வணங்குதல் இந்நிகழ்ச்சியாகும். அரைஅடி, இரண்டடி, நான்கடி என்று இதன் நீளம் அமைந்திருக்கும். பெரும் பான்மையான கொங்கு மக்கள் இத்தகைய நேர்த்திக் கடன்களைத் தங்களது வேண்டுதலுக்காகச் செய்து வருகின்றனர். அலகு குத்தி வருபவர் சாமி ஆடிப் பக்தர்களுக்கு அருள்வாக்கு சொல்வதும் உண்டு. அருள்வாக்கு சொன்னால் சொன்னபடி நடக்கும் என்று மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

தீர்த்தக்குடம்

மாரியம்மன் திருவிழாவில் நடைபெறும் நேர்த்திக்கடனில் இதுவும் ஒன்றாகும் தங்களது வேண்டுதலுக்காகக் கொங்கு வேளாள மக்கள் மாரியம்மன் திருவிழாக் காலங்களில் இதனைச் செய் கின்றனர். மாரியம்மன் திருவிழாவில் விழாவிற்கு முந்தையநாள் அருகாமையில் உள்ள ஆற்றுக்குச் சென்று தீர்த்தம் எடுத்து வருவதுண்டு. அதில் விரதமிருந்த பக்தர்கள் ஆற்றில் குளித்துவிட்டு மேளதாளம் முழங்கப் செப்புக்குடங்களில் நீரினை எடுத்து நடந்து வந்து கோயிலில் வைப்பதுண்டு. தீர்த்தக்குடம் எடுத்து வரும் பகுதி ஏழு எட்டு கிலோமீட்டர் தொலைவு அல்லது அதற்கு அதிகமாகவும் கூட இருப்பதுண்டு. வரும் வழியில் சாமி ஆட்டமும் நடைபெறும். சாமி ஆடி அருள்வாக்கு சொல்வதும் உண்டு.

பழம் சூறையிடுதல்

மாரியம்மன் திருவிழாவில் விழாக்காலங்களில் இரவு கம்பத்தைச் சுற்றி ஆட்டம் நடைபெறும்போது வேண்டுதல்காரர்கள் பழத்தினை ஆட்டம் ஆடுபவர்களுக்கு இடையே வீசுவர். ஆட்டம் ஆடுபவர் அப்பழத்தினை எடுத்து உண்பது வழக்கம். திருவிழாக் காலங் களில் விழா தொடக்கம் முதல், விழா முடிவு காலம் வரை இந்நிகழ்ச்சி நடைபெறுவதுண்டு.

மொட்டையடித்துக் காது குத்துதல்

அவரவர் விருப்பப்பட்ட கோயில்களில் வேண்டிக்கொண்ட வேண்டுதலுக்கு ஏற்ப (மாரியம்மன் திருவிழா, காளியம்மன் திருவிழா போன்ற விழாக்களில்) மொட்டையடித்துக் கொள்கின்றனர். மொட்டையடித்தலுக்காக ஊர் நாவிதர் ஏற்பாடு செய்யப்பட்டு, சிறப்பு அபிசேகம் நடத்தி இதனைச் செய்கின்றனர். சிறுதெய்வம், பெருந்தெய்வம், குலதெய்வம் என்று அனைத்து வகையான தெய்வங்களுக்கும் இத்தகைய நேர்த்திக்கடன் நடைபெறுகிறது. மொட்டையடித்தல் போலவே காது குத்தலும் அவரவர் விருப்பப் பட்ட கோயில்களில் உரிய காலங்களில் நடைபெறுகிறது.

குண்டம் இறங்குதல்

காளியம்மன் வழிபாட்டில் குண்டம் இறங்குதல் என்ற நிகழ்ச்சி சிறப்பிடம் பெறுகின்றது. ஈரோடு மாவட்டக் கொங்கு வேளாள மக்கள் குண்டம் இறங்கி நேர்த்திக் கடனைச் செலுத்து வதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். குண்டம் திருவிழாவன்று முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்ட பூக்குழியில் மக்கள் விரதமிருந்து இறங்கித் தங்களது நேர்த்திக் கடன்களைச் செய்து வருகின்றனர்.

உயிர்ப்பலி கொடுத்தல்

கருப்பணசாமி கோயிலில் ஆட்டுக்கிடாய் பலியிடுதல் அதிகம் நடைபெறுகிறது. திருவிழாக் காலங்களில் ஆடு பலியிடப் பட்டு விருந்தினர்களுக்கு விருந்து படைப்பதன் மூலமும் தங்களது நேர்த்திக் கடன்களைச் செலுத்துகின்றனர். வேளாண்மைத் தொழில், உடல் நலம் என்று பல்வேறு நோக்கங்களுக்காகவும் வேண்டுதல் களைச் செய்து அதற்கான நேர்த்திக்கடனைச் செய்கின்றனர். மாரியம்மன் திருவிழாவிலும் ஆடு பலியிடுதல் நடைபெற்று வந்தது. இன்று மாரியம்மன் விழாவில் உயிர்ப்பலி குறைந்து விட்டது. வாழ்க்கையில் நன்மை நடக்கும் என்ற எண்ணத்தில் ஆட்டுக்கிடாய் பலியிடுதல், சேவல் பலியிடுதல் ஆகியன நடைபெறுகின்றன.

உப்பு வாங்கி இறைத்தல்

காளியம்மன் கோயில்களில் குண்டத்திற்கு உப்பினை வாங்கி இறைத்தல் வாழ்வில் நன்மை ஏற்படும் என்ற நம்பிக்கையில் இப்பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் குண்டத்திற்கு உப்பினை வாங்கி இறைக்கின்றனர். கோயில் தேரை இழுத்தால் நல்லது என்ற எண்ணத்தில் தேரோட்டத்தின் போது மக்கள் தேர் இழுக்கும் நிகழ்ச்சியில் பங்கு பெறுகின்றனர். அன்னதானம் வழங்குதல், கோடைக்காலத்தில் தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், அபிசேகப் பூசை நடத்துதல் என்று கொங்கு வேளாள மக்கள் பல வகைகளிலும் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றி வருகின்றனர்.

சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு ஆகிய மூன்றிற்கும் நடத்தப்படும் வேண்டுதல்கள் வெவ்வேறு விதமாக அமைகின்றன. கார்த்திகை மாதத்தில் சபரி மலைக்குக் குறிப்பிட்ட நாட்களுக்கு மாலை அணிந்து கொண்டு கோயிலுக்குச் சென்று வருவது வழக்கம். கொங்கு வேளாளர் சமூகத்தில் குலதெய்வ வழிபாடே முதன்மையானதாக இடம் பெறுகிறது. தங்களின் வேண்டுதல்கள் முதலில் குலதெய்வங்களுக்கே நடைபெறுகின்றன. குலதெய்வத்தை அடுத்துச் சிறுதெய்வ வழிபாடு களின் போது நேர்த்திக் கடன்கள் பின்னிப் பிணைந்தவையாய் அதிக முக்கியத்துவத்துடன் சிறுதெய்வ நேர்த்திக் கடன்கள் நடைபெறுகின்றன. பெருந்தெய்வத்திற்குச் செய்யப்படும் நேர்த்திக் கடன்கள் ஓரளவே முக்கியத்துவம் பெற்றுள்ளன.

கம்பளத்து நாயக்கர்களின் திருமணச் சடங்குகள்

வே. தனுஜா
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி
சிவகாசி

ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்குக் குடிவந்த நாயக்கர்களுள் ஒரு பிரிவினரே கம்பளத்து நாயக்கர். இவர்களின் திருமணச் சடங்குகளைக் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

கம்பளத்தார் - பெயர்க்காரணம்

கம்பளத்தார் பெயர் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் காணப் பெறுகின்றன. ''ஆதியில் கம்பளம் என்னும் நாட்டில் இருந்தமை யாலும் காட்டில் பசுநிரை புரந்து வருங்கால் எப்பொழுதும் ஒரு கம்பளம் போர்த்தியிருந்தமையாலும் கம்பளத்தார் என அழைக்கப் பட்டனர்''.[1] இவர்களுள் ''தோக்கலவார், பாலவார், மேகலவார், பெல்லவார், சில்லவார், குருசில்லவார், எறசில்லவார், கொல்லவார், மல்லவார்''[2] எனும் ஒன்பது உட்பிரிவுகள் உண்டு. அவற்றுள் பாலவார் இனத்தாரின் திருமணச் சடங்குகளே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

பாலவார்

கம்பளத்து நாயக்கரில் ஒருவராகிய பாலவார் அதிகமாக ஆடுமாடுகள் வைத்திருந்தனர். ''எந்தச் செயல் செய்தாலும் அதிகமாகப் பாலைப் பயன்படுத்திய காரணத்தால் பாலவார் எனப் பெயர் பெற்றதாகக் கூறுகின்றனர்''.[3]

பாலவாரின் திருமணச் சடங்குகள்

பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் வாழ்க்கை சடங்கு களால் கட்டுண்டு கிடக்கிறது. ''சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தையின் வடிவம் ஆகும்''.[4] அச்சடங்குகளுள் திருமணம் முக்கியம் இடம் பெறுகிறது.

''திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படும் வாழ்க்கை ஒப்பந்தம் என்று கூறலாம். ஆண் பெண் இருபாலரிடையே நிகழும் ஓர் உறவு முறையாகும்''[5] எனப்

பெர்ட்ரண்டு ரஸ்ஸல் சுட்டுகிறார். கம்பளத்து நாயக்கரின் திருமணச் சடங்குகள் பல்வேறுபட்ட சடங்கு முறைகளைக் கொண்டு விளங்குகிறது.

திருமண முறைகள்

பாலவார் இனத்தார் தமது உறவினரிடையேயும் உறவினர் அல்லாதோரிடையேயும் திருமணம் செய்து கொள்கின்றனர். ''இவர்கள் முற்காலத்தே ஒரு வருடம் திருமணச் சடங்குகள் செய்ததாகக் கூறுகின்றனர். அது ஒரு மாதமாகக் குறைந்து இன்று காலச் சுருக்கத்தின் காரணமாக இரண்டு நாட்கள் மட்டுமே செய்கின்றனர்''.[6]

பெண்பார்த்து உறுதி செய்தல்

மணமகன் வீட்டார் பெண்ணைப் பார்த்துப் பிடித்த பின்னர், ''வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து இந்தப் பெண் இவனுக்கு என உறுதி செய்கின்றனர். பின் திருமணத்திற்கு வெற்றிலை, பாக்கு வைத்து உறவினரை அழைக்கின்றனர். பாலவார் இனத்தார் திருமணத் திற்கு முதல் நாளும் திருமணத்தன்றும் சடங்குகள் செய்கின்றனர்''.[7]

திருமணத்திற்கு முதல் நாள் செய்யும் சடங்குகள்

திருமணத்திற்கு முதல் நாள்

1. மஞ்சள் இடித்தல்
2. கம்பு இடித்தல்
3. குடிசை போடுதல்
4. வெற்றிலை வைத்தல்
5. பருப்புச் சோறு உண்ணல்
6. மாப்பிள்ளைக்கு முகச்சவரம் செய்து குளிப்பாட்டல்
7. குயவரிடம் பானை வாங்குதல்
8. மெட்டி அணிவித்தல்
9. நெற்றிமாலை வாங்குதல்
10. பால்தொட்டு ஆசீர்வதித்தல்

எனப் பத்து விதமான சடங்குகளைச் செய்கின்றனர்.

திருமணத்திற்குத் தேவைப்படும் மஞ்சளை மூன்று, ஐந்து அல்லது ஏழு உரல்களில் போட்டு இடிப்பர்,

அதன்பின் கம்பு இடிக்கின்றனர். இதனைக்,

''கைநிறைய வளவியொடு அக்காமாரே
உடம்பு முழுக்க மஞ்சள் பூசி
தானியங்களை இடிக்க வேணும் அக்காமாரே''[8]

என்று அவர்கள் பாடும் பாடல் வரிகளால் அறியலாம்.

பாலவார் திருமணத்திற்கு ஒரே பந்தல் போடுவது கிடையாது. ஆல், இச்சி இவற்றின் இலை தழைகளைக் கொண்டு வேல மரத்தால் ஆன கம்புகளை நட்டு ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித் தனி குடிசைகள் ஊர் மந்தையில் அமைக்கின்றனர். இங்குதான் திருமணம் நடைபெறும்.

''பின் ஊர் மந்தையில் கூடியிருப்பவர்க்கு வெற்றிலை தந்து அழைக்கின்றனர். அதன்பின் அனைவரும் சென்று பருப்புச்சோறு உண்கின்றனர். இதனைப் 'பொப்பு கூடுசாலி' என்பர்''.[9] மாப்பிள்ளைக்கு முகச்சவரம் செய்த பின் மதினிமார்கள் தண்ணீர் எடுத்து வந்து குளிப்பாட்டுகின்றனர். பின் திருமணத்திற்குத் தேவைப் படும் பானைகளைக் குயவரிடமிருந்து வாங்குகின்றனர். மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் மணமகனது தாய் வெள்ளி யாலான மெட்டியை அணிவிக்கிறாள். அதன்பின் பச்சைப் பனை மட்டையால் ஆன பூக்களால் அலங்கரிக்கப்பட்ட நெற்றி மாலையை (மணமகனுக்கு நெற்றியில் அணிவிக்கும் மாலை) உருமிக்காரரிட மிருந்து வாங்குவர். பின் மணமகனுக்கும், மணமகளுக்கும் ஊர்ப் பெரியவர்கள் கையில் பவளப்பாசி நெளிவு கொண்டு பால் தொட்டுப் புஜம், நெற்றியில் வைத்து ஆசி வழங்குவர். இவ்வாறு திருமணத்திற்கு முதல் நாள் பாலவார் சடங்குகளைச் செய்கின்றனர்.

திருமணத்தன்று நடைபெறும் சடங்குகள்

திருமணத்தன்று அதிகாலை நான்கு மணி முதல் சடங்குகள் செய்யத் தொடங்குகின்றனர். 1. குடிசைக்குப் போதல், 2. சேலை கொடுத்தல், 3. தாலி கட்டுதல், 4. குதிரையை வணங்குதல், 5. மாப்பிள்ளை, பெண் குடிசைக்குப் போதல், 6. தோசம் நீங்குதல், 7. பால் தொட்டு வணங்குதல், 8. வேட்டைக்குச் செல்லல், 9. பரிசுப் பொருள் கொண்டு வருதல், 10. குழந்தை தரல், 11. வீட்டிற்கு வரல், 12. பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு உரிமையாக்குதல், 13. கோமாளி வேசமிடுதல், 14. குழந்தை பார்த்தல், 15. விருந்தளித்தல், 16. மறுவீடு அழைப்பு எனத் திருமணத்தன்று இவ்விதமாகச் சடங்குகளைச் செய்கின்றனர்.

குடிசைக்குப் போதலும் சேலை வாங்குதலும்

மணமகனும், மணமகளும் ஊர்மந்தையில் போடப்பட்ட அவரவர்க்குரிய குடிசையில் சென்று அமர்கின்றனர். பின் பெண்ணுக்குரிய திருமணச் சேலையை மாப்பிள்ளை குடிசை யிலிருந்து பெண் குடிசைக்குக் கொண்டு சென்று பெண்ணிற்கு அணியச் செய்வர்.

தாலி கட்டுதல்

''நல்ல நேரத்தில் தாலியை மாப்பிள்ளை குடிசையிலிருந்து பெண்குடிசைக்குக் கொண்டு செல்வர். அங்கு ஊர்ப்பெரியவர் களுள் பெண்ணிற்கு மாமன் முறை வருபவர்கள் அத்தாலியைப் பெண்ணிற்கு அணிவிப்பர். மாலை மாற்றும் வழக்கம் கிடையாது''.[10]

குதிரையை வணங்குதல்

தாலி கட்டியவுடன் மாப்பிள்ளை பெண் இருவரும் சேர்ந்து குதிரையை வணங்குவர். பின் பெரியோரிடம் ஆசி வாங்குவர்.

மாப்பிள்ளை பெண் குடிசைக்குப் போதலும் தோசம் நீக்குதலும்

குதிரையை வணங்கிய பின் மாப்பிள்ளை, பெண் இருவரும் பெண் குடிசைக்கு வருகின்றனர். அங்குப் பெரியவர்கள் அவர்கள் இருவரின் கையைச் சேர்த்து விடுவர். பின் இருவரின் மீதுள்ள தோசங்கள் நீங்க நான்கு மூலைகளில் சிறுமண் கலயங்கள் வைத்து அதனைச் சுற்றி நூல் கட்டுவர். அதற்குள் மணமக்களை அமரச் செய்து இரண்டு கலயங்களில் உள்ள நீரை மணமகளின் பின்புறமும், மீதமுள்ள இரண்டு கலயநீரை மணமகளின் பின்புறமும் ஊற்றி தோசம் நீக்குவர். கண்கோளாறு நீங்க இச்சடங்கு செய்யப்படு கிறது. அதனையடுத்து மணமக்கள் பால் தொட்டு வணங்கி மாப்பிள்ளை குடிசைக்குச் செல்வர்.

வேட்டைக்குச் செல்லல்

பால் தொட்டு வணங்கிய பின் மாப்பிள்ளை மட்டும் வேட்டைக்குச் செல்வார். வேட்டையாடுதல் இவர்களது தொழிலில் ஒன்று, வேட்டை முடித்துத் திரும்பும்போது பெண்கள் ஆரத்தி எடுத்து அழைத்து வருவர். மணப்பெண் மாப்பிள்ளை கொண்டு வந்து பொருட்களைக் குடிசையில் வாங்கி வைப்பர். பின் மாப்பிள்ளைக்குத் தாகம் நீங்க மோர் தருவர். அதன்பின் மணமக்களுக்கு உறவினர்கள் பரிசுப்பொருள்கள் தருவர்.

குழந்தையுடன் சீர்கொண்ட மணமகன் இல்லத்திற்குச் செல்லல்

''முன்பு இந்த இனத்தவர் ஒருவருட காலம் திருமணச் சடங்குகள் நிகழ்த்தியதால் குழந்தை பிறந்ததாகவும் அதன்பின் மாப்பிள்ளை இல்லத்திற்குச் சென்றனர்''[11] எனவும் கூறுகின்றனர். அவ்வழக்கப்படி இன்றும் மணமகன் கையில் குழந்தையுடனும், மணமகள் கையில் மண்கலயத்தில் பணியாரமும், தயிர் கடையும் மத்தும் கொண்டு வருவர். அங்கு வீட்டு வாசலில் குவித்து வைத்த நெல்லைத் தாண்டிச் சென்று மணமகள் தீபம் ஏற்றுவாள். அதன்பின் மணப்பெண்ணைக் கூடையில் பசுஞ்சாணத்தை எடுக்கச் செய்து

குப்பையில் கொட்டச் செய்வர். இது பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு உரியவளாக்கும் சடங்காகக் கருதுவர்.

கோமாளி வேடமிட்டு மந்தைக்குச் செல்லல்

மணமகனுக்கு அண்ணன் தம்பி முறையுள்ளவர் கோமாளி போல் வேடமிட்டுக் கொண்டு மணமக்களை ஊர்மந்தைக் கிணற்றுக்கு அழைத்துச் செல்வர். அங்கு ''மணமக்கள் பாத்தி கட்டி விதை விதைப்பர். அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து உழைப்போம் என்ற கருத்தை விளக்குவதாக இச்சடங்கு அமைகின்றது''.[12]

பின் மணமகளின் கையில் வெற்றிலை, பாக்கு, கம்பு வைத்து கிணற்றில் நீர் ஊற்றுவர். ''வெற்றிலை கவிழ்ந்து விழுந்தால் ஆண் குழந்தை பிறக்கும் என்றும் நேராக விழுந்தால் பெண்குழந்தை பிறக்கும் என்றும் கூறுவர்''.[13] பின் மாப்பிள்ளை இல்லத்திற்கு அழைத்துச் செல்வர்.

விருந்தும் மறுவீடும்

திருமணத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் விருந்தளிப்பர். முதலிரவு மணமகன் இல்லத்திலேயே நடைபெறும். திருமணம் முடிந்த மூன்று ஐந்தாவது நாளில் பெண்வீட்டார் மணமக்களை மறுவீடு (பெண்வீட்டிற்கு) அழைத்துச் செல்வர்.

கம்பளத்து நாயக்கர் இனமக்களிடம் திருமண முறைகள் தொன்று தொட்டு மரபு வழியாக நடைபெற்று வருவதோடு, சிற்சில மாற்றங்களுடனும் தற்போது நடைபெற்று வருவதைக் காணலாம். இவர்களது திருமண முறைகள் குறிக்கத் தகுந்த பழக்க வழக்கங்களைக் கொண்டு திகழ்வதையும் காணலாம்.

குறிப்புகள்

1. ஜெகவீர பாண்டியனார், பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம், ப. 18.
2. மேலது, ப. 17.
3. தகவல், ச. பூசாரிசக்கய்ய நாயக்கர், 20.2.2002.
4. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 154.
5. பெர்ட்ரண்டு ரஸ்ஸல், திருமண முறைகள், ப. 143.
6. தகவல், கி. வெள்ளையம்மாள்.
7. தகவல், சி. பெரிய சக்கம்மாள்.
8. தகவல், சி. எத்துலம்மாள்
9. தகவல், க.ச. கிருஷ்ணசாமி.
10. தகவல், ச. நிறைமதி நாயக்கர்.
11. தகவல், நி. சுப்பையா.
12. தகவல், மு. முத்தைய நாயக்கர்
13. தகவல், நி. பெரிய கோடங்கி நாயக்கர்.

புதுக்கவிதைகளில் தொன்மங்கள்

ஜெ. சியாமளா

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி

விழுப்புரம்

காலங்களும் கோலங்களும் மாறினாலும் மனிதனின் மனதில் பகுத்தறிய முடியாத பழமைச் சின்னங்கள் படிந்து கிடக்கின்றன. சரியான சூழல் வாய்க்கும்போது மனிதன் அவற்றைத் தொன்மங் களாக, படிமங்களாக, குறியீடுகளாக வெளியிடுகிறான். தொன்மம் என்பது இறந்த காலத்தோடு நின்றுவிடுவதல்ல. நடப்பியலோடும், எதிர்காலத்தோடும் ஒன்றிணைந்த ஒன்றாக அது வெளிப்பட்டு வருகிறது. அறிவியல் யுகத்தில் தொன்மங்கள் மறைந்தொழியும் என்று கருதப்பட்டாலும் அவ்வாறு நடைபெறவில்லை. முற்போக்கு இலக்கியவாதிகளும்கூட அவற்றைக் கையாளுவதிலிருந்து மீள முடியவில்லை.

தொன்மம் விளக்கம்

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த திறனாய்வாளரான நார்த்ராப்ஃபிரை தொன்மம் பற்றி அதிகளவில் ஆய்வு மேற் கொண்டுள்ளார். 'மித் (Myth) என்ற சொல் பண்டைக் காலத்தில் செய்தி, மொழி, உபதேசம், நிகழ்ச்சி, வரலாறு என்ற பொருள்களைத் தந்தது. தொன்மம் கடவுளர்களையோ, கடவுளையொத்த மனிதர் களையோ, பாத்திரங்களாகக் கொண்ட கதையென்றும் அது வரலாற்றுக் காலத்திற்கு அப்பாற்பட்டதென்றும், இயற்கையிகந்த நிகழ்ச்சிகளைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும் என்பார். இத்தகைய தொன்மங்களைப் படைப்பாளி தன் படைப்பின் அடிக்கருத்தியலுக்கேற்பக் கையாள்கிறான் (மேலை நோக்கில் தமிழ்க்கவிதை, ப. மருதநாயகம்)

இந்தியப் பண்பாட்டியலில் ஏராளமான புராணக் கதைகள் இறைந்து கிடக்கக் காணலாம். இப்புராணத் தொன்மங்களின் தாக்கம் சங்கக் கவிதைகள் தொடங்கித் தற்காலத்திய, புதுக்கவிதை வரை இடம் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. சமயத்தைக் கடந்த பாடுபொருளை உள்ளடக்கிய படைப்புகளிலும் கூடத் தொன்மம் பயிலக் காணலாம். புதுக் கவிதையாளர்கள் தொன்மத்தைக் கையாண்டு பாடுபொருளைக் கூர்மைப்படுத்தக் காணலாம்.

''ஓகோ சிவனாரே
சாம்பல் பீழை படிந்து
தூர்ந்து போகட்டும்
உமது நெற்றிக்கண்
எங்களுக்கு மனுக்குலம் தழைக்க
மன்மதனும் வேண்டும்
எதேச்சதிகாரத்தின் முகத்தில்
காறியுமிழ
நக்கீரனும் வேண்டும்'' (சர்ப்பயாகம், சிற்பி)

இக்கவிதை அதிகார வர்க்கத்திற்கு எதிராகக் கலகக் குரல் எழுப்புகிறது. மன்மதன் எரிப்பு, நக்கீரன் எரிப்பு ஆகிய தொன்மங்கள், தொன்றுதொட்டு ஆதிக்கச் சக்தியினர் எழுப்பி வரும் சுவர்களை அசைத்துப் பார்க்கின்றன.

பாரதக் கலாச்சாரத்தில் கற்பென்னும் புனிதத் தன்மையூடே சீதையெனும் பிம்பம் தவிர்க்க இயலாதவொன்றாகிறது.

''அக்னிப் பிரவேசம்
என் சத்தியத்தை
நிரூபிக்க வல்ல
நீ தொட்ட
கறைகளைக் கழுவ'' (கருவறை வாசனை, கனிமொழி)

இக்கவிதையில் கவிதை சொல்லியின் விரல்கள் எதிராளியை நோக்கி நீண்டு அக்னிப் பிரவேசம் என்ற தொன்மத்தைக் கையாண்டு தீ தொடுவது நீ தொடுவதைவிடச் சுகமானது என்ற அதிர்வை வாசகருக்குக் கொடுக்கிறது. தீ தொடுவது நீ தொட்ட கறைகளைப் பரிசுத்தமாக்கும் என்ற பொருளைக் கொடுக்கிறது.

''திருடப்பட்ட உங்கள் அப்பங்களைப்
பறித்து
உங்களுக்குக் கொடுக்கவே வந்தேன்
திராட்சைத் தோட்டத்தை ஊழியக்காரருக்கு
உடைமையாக்கவே வந்தேன்''

(பால்வீதி, அப்துல் ரகுமான்)

இந்துமதப் பெருங்கதையாடல்களைத் தவிர விவிலியம்சார் தொன்மமும் தமிழ்க் கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரகுமானின் மேற்காணும் கவிதை அதிகார வர்க்கத்திற்கும் பாட்டாளி மக்களுக்குமான ஓயாத போராட்டத்தைச் சித்திரிக்கிறது. ஒடுக்கும் இனம் x ஒடுக்கப்படும் இனம் என்ற முரண்களைத் தகர்த்தெறிய இத்தொன்மம் குரல் எழுப்புகிறது.

சிலுவை என்னும் விவிலியத் தொன்மம் பொதுவாக இரு வேறு எதிர்முக நிலைகளில் கையாளப்பட்டு வருகிறது. ஒன்று தியாகம், பிறிதொன்று அடக்குமுறை. முன்னது மதவாதிகளாலும், பின்னது பிற்பட்ட சிந்தனையாளர்களாலும் கையாளப்படுகிறது.

''சட்டாம் பிள்ளையாய்
அம்மா
சிறைக் காவலராய்
அப்பா
அறிவுச் சலவைக்குப்
படிப்பு
கைக்கொட்டிச் சிரித்து அடக்கிவைக்கச்
சுற்றம்
சிலுவையின் ஆணி தகர்த்து இறங்கி வந்தால்
கணவன்
கையில் தாலிக் கையிற்றோடு''

(கருவறை வாசனை, கனிமொழி)

பெண்ணின் வாழ்வியல் அனுபவங்களைச் சிலுவைத் தொன்மம் அடையாளப்படுத்துகிறது. திருமணமே சிலுவையாய், குடும்பம் என்ற அதிகார அமைப்பினுள் பெண் எவ்வாறு தந்திரமாகச் சிக்க வைக்கப்பட்டுள்ளாள்; எத்தகைய தளைகளால் பிணிக்கப் பட்டுள்ளாள் என்பதைச் சிலுவைத் தொன்மம் இனங்காட்டுகிறது.

பெருந்தேவியின் கவிதையொன்றில் விவிலியம், சைவப் புராணிகம் இரண்டும் நேர்க்கோட்டில் இணைக்கப்படுகின்றன. இக்கவிதை ஈடன் தோட்டத்துக் கனியைத் தின்றதால் மனுக் குலத்திற்கு ஏவாள் பாவத்தைத் தேடித் தந்ததாகக் கூறப்படும் கதையும், இடது பாதம் தூக்கிய சிவனார் முன் காளி தோற்றதும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. தோல்வி பெண்ணாலே அல்லது பெண்ணுக்குத்தான் என்ற சமூக விழுமியம் சார்ந்த கற்பிதங்கள் எடுத்துக் காட்டப்பட்டுப் பெண்கள் அதை உடைத்துக் கொண்டு வரவேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. 'தொன்மங்களில் வெளிப்படலாகும் பெண் தெய்வங்களுக்கும் ஆண் தெய்வங் களுக்கும் இடையேயான போராட்டங்களும் பூசல்களும் அத்தெய்வங் களுக்கே உரிய போராட்டங்கள் அல்ல; பூசல்களும் அல்ல. உலகெங்கும் நிகழ்ந்தேறிய ஆண்வழித் தலைமைச் சமூக எழுச்சியின் பதிவுகளாகவே அவற்றைக் கொள்ளுதல் வேண்டும் என்ற சிலம்பு நா. செல்வராசு அவர்களின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. (கட்டுரை: தாய் உரிமை, ஆட்சியும் வீழ்ச்சியும்)

கிரேக்கத் தொன்மங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்ட காரல் மார்க்ஸ் பின்னால் தோன்றிய இலக்கியங்களுக்குத் தொன்மங்கள் பயன்பட்ட விதத்தை இவ்வாறு எழுதுகிறார் ''செவ்வியல் காலக் கலைக்கான விதைகளாகவும், ஆயுதக் கிடங்குகளாகவும் இத் தொன்மங்கள் விளங்கின'' (இலக்கியத்தின் இருப்பியலும் திறனாய்வின் இயங்கியலும், க. பஞ்சாங்கம்) இக்கருத்தின் அடிப்படையில் நோக்கையில் புதிய படைப்புகளும் கூடப் பழைய தொன்மங்கள் மீது கட்டமைக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளதை உணர இயல்கிறது. இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்ட புதுக்கவிகைளும் கூட இதை வலியுறுத்துகின்றன.

கவிதை சொல்லி தன் படைப்பின் கருவைக் கனப்படுத்த, கவனப்படுத்தத் தொன்மத்தின் துணையை நாடும் போக்கைக் காணமுடிகிறது. இது ஓர் இலக்கிய உத்தியாகவும் படைப்பாளியை இயக்கிக் கொண்டிருக்கிறது எனலாம். இப்படிப் புதுக்கவிதை யாளர்கள் கையாளும் தொன்மங்கள், படிமங்கள் குறித்த புரிதலுணர்வு சராசரி வாசகனுக்கு இல்லாத காரணத்தால் புதுக்கவிதைகள் வாசகனை இருண்மை நிலைக்கு இட்டுச் செல்கிறது என்ற குற்றச்சாட்டும் ஒருபுறம் எழத்தான் செய்கிறது. அதற்குப் படைப்பாளி மட்டும் பொறுப்பாக மாட்டான். இலக்கியம் கடைநிலை வாசகனையும் சென்றடைய வேண்டும் என்ற கோட்பாடு இன்று சிதறத் தொடங்கிவிட்டது. இக்கோட்பாடு குறித்துப் படைப்பாளிகள் கவலை கொள்ளுவதுமில்லை. இது வாசகனைப் புறந்தள்ளுவதல்ல. தீவிர வாசிப்புத் தளத்தில் இயங்கினால் கிட்டும் பயிற்சியினால், 'புரிதல்' அனைவருக்கும் வசப்படக் கூடிய ஒன்றே.

குழந்தைப் பாடல்களில் தமிழியக் கருத்துகள்

சி. அங்கயற்கண்ணி

சிக்கய்ய நாயக்கர் கல்லூரி

ஈரோடு - 4

குழந்தை இலக்கியம் இருபதாம் நூற்றாண்டில் சிறப்பாக வளரத் தொடங்கியது. குழந்தை இலக்கியம் என்பது தமிழ் இலக்கியத்திற்குப் புது வரவு என்றால் அது மிகையாகாது. குழந்தை இலக்கியத்தில் பாடல்கள், கதைகள், கதைப் பாடல்கள் என்று பல்வேறு கூறுகள் இருந்தாலும் பாடல்கள் என்பது குழந்தைகளை ஈர்க்கும் ஊடகமாகச் செயல்படுகிறது. அத்தகைய பாடல்களில் நுவலும் பொருள்கள் எளிய நடையில் பழகு தமிழில் எடுத்துக் கூறப்படுமேயானால் அது சிறப்பாகும்.

தமிழ்நாடு

மாந்தர் ஒவ்வொருவருக்கும் மொழியும், நாடும் இரு கண் களென்பர் கவிஞர். நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் இல்லாதவர் நடைபிணமென்பர். எனவே குழந்தைகள் தங்கள் இளம்பருவம் தொட்டே பிறந்த நாட்டின் மீது பற்றும் அன்பும் கொண்டவர் களாக விளங்குதல் வேண்டும். மேலும் சமுதாயச் சிற்பிகளான கவிஞர்கள் இளம் நெஞ்சில் மொழிப்பற்றினை, நாட்டின் மீது மதிப்பினை ஏற்படுத்தத் தனிக் கவனம் செலுத்துதல் அவசியம்.

''நீர் வளமும் நில் வளமும் நிலவிய நன்னாடு
ஏர் வளத்தின் பேர் வளத்தால் ஏற்றமுள்ள நாடு''

''வாழை பலா மா மரங்கள் வளமிகுந்த நாடு
தாழை பனை தென்னை இவை தழைத்துயர்ந்த நாடு''

இயற்கை வளமும், செல்வமும் மிக்க தமிழ்நாடு, தனக்கெனத் தனித்துவம் நிறைந்தது.

''ஆற்றுவளம் பெற்றிருக்கும்
ஆ ரணங்கே
சோற்று வளம் பெற்றிருக்கும்
திருவே''

ஆற்று வளத்தாலே
ஆழி வளத்தாலே - செல்வம்
ஆர்ந்த தமிழ்நாடு - பண்பு
தேர்ந்த தமிழ்நாடு.

நமது நாடு குறித்த இந்தப் பாடலின் பொருள்களை நன்குணர்ந்த குழந்தைகள் தான் பிறந்த நாட்டின் வளம் மற்றும் பெருமைகள் ஆகியவற்றை அறிந்து தங்கள் நலம் பேணும் ஆக்கச் சிந்தனைகள் பெற்றவர்களாக வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

''கிழக்கே பெரிய கடல்
நீலம் நிறைந்த கடல்
மேற்கே பெரிய மலை
நீண்ட தொடர்ச்சிமலை''

தாய்நாட்டின் எல்லையை இசை கலந்து பாடல் வரிகளின் மூலம் குழந்தைகளுக்கு வழங்குவது ஏற்றதாகும். இத்தகைய பற்றுமிகுந்த பாடல்களின் மூலம் நாட்டைத் தாயாய்ப் போற்றும் இயல்பு தங்கள் நெஞ்சங்களில் உருவாக்கி மகிழ்வர் குழந்தைகள்.

தமிழ்மொழி

நமது தமிழ்மொழிக்கென்று இரண்டாயிரம் நூற்றாண்டு வரலாறு உண்டு. பல்வேறு வளமான இலக்கணங்களையும், இலக்கியங் களையும் பெற்றுத் திகழ்வது.

உலகச் செம்மொழிகளில் ஒன்றாக மதித்துப் போற்றப்படும் பெருமை உடையது. தாய்மொழி மீது பற்றுக்கொண்ட கவிஞர்கள் அத்தகைய உணர்வினைக் குழந்தைகளும் பெறவேண்டும் என்று விருப்பம் கொண்டு எண்ணற்றப் பாடல்களை இயற்றியுள்ளனர். மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய பண்பைப் பெற்றுள்ளது. எனவே தான் கவிஞர்கள் தமது பாடல்களில் அதன் சீரையும் சிறப்பையும் போற்றியுள்ளனர்.

''சேர சோழ பாண்டியரெல்லாம்
ஆர வளர்த்த ஆயே வாழ்க!''

''எண்ணும் கம்பன் காவியம்
இசைத்த தெங்கள் தமிழ்மொழி
வண்ணச் சிலம்பின் கதையினை
வகுத்துச் சொல்லும் திருமொழி''

சேர சோழ பாண்டிய மன்னர்களால் மிகப் பெருமையுடன் போற்றப்பட்ட மொழி என்றும் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கு

இடையே உறவை விளக்குவதாகவும், புலப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

ஒரு மொழியை எந்தளவுக்கு எளிதாகக் கற்றுக் கொள்ள, எளிதில் எழுத முடிகிறதோ அந்த மொழி தான் வளர்ச்சி அடையும்.

''அன்னை சொல்லித் தந்தமொழி
அன்பொழுகப் பேசும் மொழி
அன்னை தந்தை அத்தை மாமி
அருமைக் கதைகள் சொன்ன மொழி''

இளம் நெஞ்சில் வீரத்தையும், கதைகளின் மூலம் அன்பையும் ஊட்டிய மொழி, குழந்தைகள் பெறவேண்டிய கல்விகளுள் தலைமையானது தாய்மொழிக் கல்வியாகும்.

அது நமது வழி வழிச் சொத்து. இயற்கையாக நமக்கு வாய்த்த சொத்தாகும்.

''நூலைப்படி - சங்கத் தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி
காலையிற்படி கடும் பகல்படி
மாலை இரவு பொருள் படும்படி''

நூல்களை எப்படிப் படிக்க வேண்டும். படிக்க வேண்டிய நூல்கள் எவையெவை என்பதையும் இந்தப் பாடலில் பாவேந்தர் எடுத்துரைக்கிறார்.

அழகாகச் சொல்வது கவிதைக்கு அழகு என்பர். இது இன்றியமையாத பண்பும் ஆகும். பாடல்களைக் கற்றுக் கொடுக்கும் போது நல்ல தமிழ்ச் சொற்களைக் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறிச் சில அருஞ்சொற்களை அறிந்து கொள்ள உதவவேண்டும். இத்தகைய பண்பு அரிய இலக்கியச் சொற்களை அறிமுகப் படுத்த உதவும்.

பாவேந்தர் தமிழ் மீதும் தமிழர் மீதும் நாட்டின் மீதும் எல்லை இல்லா அன்பு கொண்டதனால் உண்டு மகிழ்வர் தமிழர் என்று நினைத்து முக்கனிகளாய்ப் பாடல்கள் புனைந்துள்ளார்.

தமிழ் பேசு; தமிழிலே பாடு - நீ
தமிழினில் பாடியே ஆடு - என்று

குழந்தைகளுக்கு அறிவுறுத்துகிறார்.

குழந்தை இலக்கியம் என்பது எவ்வகையிலும் எதார்த்த நிலையில் இருந்துவிடக் கூடாது என்பார் ருசிய அறிஞர் பாடல்

களாகவும், செய்யுள்களாகவும் மனப்பாடம் செய்ய ஏற்ற வகையில் இயற்றப்பட்ட குழந்தை இலக்கியம் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் தான் உரைநடை வடிவம் பெற்றது. ஆனால் நாளடைவில் பல்வேறு கூறுகளாக வளர்ந்து மிகப் பெரும் இலக்கிய வகையாக உருவாகி விட்டது.

குழந்தைப் பாடல்கள் என்பது அவர்களின் மனதை ஈர்த்து, அறிவைப் புகட்டி மொழி, இன உணர்வினை ஊட்டுவதாக இருந்தால் நல்லது.

துணைநூல்கள்

1. புலவர் இல. மா. தமிழ் நாவன், பாவேந்தரும் பூந்தளிர்களும்.
2. தே.ப. பெருமாள், சிறுவர் அமுது.
3. பூவண்ணன், பாட்டுத் தோட்டம்.
4. பாவேந்தர், இளைஞர் இலக்கியம்.
5. அழ. வள்ளியப்பா, மலரும் உள்ளம்.

பழமொழி கூறும் கல்விக் கொள்கை

பா. திருஞானசம்பந்தம்

தொலைதூரக் கல்வி இயக்ககம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஒருவன் பெற்றுள்ள செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் அழியாத செல்வம் கல்வி, கல்வியைக் கற்பது தொடக்கத்தில் கடினமாக இருந்தாலும் நாளடைவில் அது கற்கும் போதே இனிமையைத் தரும்.

கல்வியை இளமையிலேயே கற்க வேண்டும். ஒருவன் தன் ஆயுட் காலம் முழுவதும் கல்வியைக் கற்கலாம் என்பன போன்ற கருத்துக்களை நாட்டில் உலவும் பழமொழிகள் புலப்படுத்துகின்றன.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து'

'கல்வியே கருந்தனம்'

'வேம்பு விரும்பக் கரும்பு'

என்ற உலகியல் பழமொழிகள் உணர்த்துகின்றன.

கல்விச் சிந்தனை

அறியாமை என்னும் இருளில் முழ்கி வாழும் மக்கள் சமுதாயத்தில் அறிவு என்னும் ஒளி விளக்கை ஏற்று ஆண்டாண்டு காலமாகப் பற்பல அறிஞர் பெருமக்கள் தொண்டாற்றி வருகின்றனர். தமிழகம் போன்றே மேனாட்டு அறிஞர்களும் மக்களுக்குக் கல்வி அறிவூட்டும் பணியிலேயே முனைந்து செயல்பட்டனர். அவர்களது தொடக்க முயற்சியினால்தான் இன்றைய கல்வி நீரோடை நாடெங்கும் பாய்ந்தது என்பது மறுக்க முடியாத வரலாற்றுண்மை.

கல்வி ஒன்றினால் மட்டுமே ஒரு சமுதாயத்தைச் செப்பம் செய்ய இயலும் என்பது ஆன்றோர் கொள்கை. இதன் காரணமாகவே கல்வியின் இன்றியமையாமையை நம் முன்னோர்கள் பெரிதும் வலியுறுத்தி வந்தனர். கல்வியின் தேவையைப் பெரிதும் உணர்ந்த நீதிநெறிக் காலச் சமுதாயத்தில் கல்வி பொதுமைக் கருத்தாகப் போற்றப்பட்டுள்ளது.

கல்வி கற்கும் காலம்

இளமையில் கல்வியைக் கற்கவேண்டும் என்று திருக்குறள் வற்புறுத்தவில்லை. சாந்துணையும் கற்றலைத்தான் வலியுறுத்துகிறது.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பது உலகியல் பழமொழி, கல்விக் கற்கவேண்டிய காலமாக இளமைப் பருவத்தையே வலியுறுத்துகின்றது பழமொழி நானூறு. இக்கால கட்டமே எவ்வித புறத்தாக்கத்திற்கும் உட்படாத பருவம் இக்காலம் கல்வி கற்காமல் கடந்துஃ போகுமானால் வாழ்க்கையில் எவ்விதப் பயனையும் ஒருவன் அடைய முடியாது.

இக்கருத்தை இரண்டு பழமொழிகளை அடியாகக் கொண்டு விளக்குகின்றார் முன்றுறையரையனார். படகில் பயணம் செய்பவர்கள் படகின் கூலியை அக்கரை அடைவதன் முன்னே கொடுத்து விடவேண்டும் அக்கரையில் போய் இறங்கிவிட்டால் படகுக்காரனுக்குக் கூலிப்பணம் கிடைப்பது அரிது.

'ஓடத்தை விட்டு இறக்கினால்
ஓடக் காரனுக்கு ஒரு சொட்டு'

என்பது உலகப் பழமொழி மற்றும் சுங்க வாயில்களைக் காப்பவர்கள் அச்சுங்கம் வழியாகச் செல்லும் ஊர்திகளுக்கு, உரிய கட்டணத்தைச் சுங்க வாயிலைக் கடப்பதன் முன்பே வசூலித்துவிட வேண்டும், சுங்க வாயிலைக் கடக்க விட்டு விட்டால் கட்டணம் கிடைக்காது.

'சுங்கம் மாறினால் சுண்ணாம்பும் கிடைக்காது'

என்பது நாட்டுப் பழமொழி, இவ்விரு பழமொழிகளையும் சான்றாகத் தந்து இளமையில் கல்வி கற்க வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப் படுகிறது.

''ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ - ஆற்றுச்
சுரம் போக்கி உல்கு கொண்டார் இல்லையேயில்லை
மரம் போக்கி கூலி கொண்டார். (பழ. நா.)

என்ற பாடலில் இதைக் காணலாம்.

இளவயதில் கல்வியைக் கற்பது வாழ்க்கைப் பயணத்தைக் கடப்பதற்கு ஏதுவாகும்.

கல்வி கற்கும் முறை

கல்வி கரையற்றது கற்பவர்களின் வாழ்நாள் குறைவு. ஆராயு மிடத்து வாழ்க்கையைப் பாதித்து வருத்தும் பிணிகள் அளவற்றவை. எனவே, கல்வி கற்பதற்கான நாட்கள் மிகக் குறைவு. எனவே, நீரையும் பாலையும் வேறு பிரித்து உண்ணும் அன்னப் பறவையைப் போல, கற்க வேண்டிய நூல்களை ஆராய்ந்து எடுத்துக் கற்க வேண்டும் என்பதை,

'கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைப்பின் பிணிபல - தெள்ளதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீர்ஒழியப்
பால்உண் குருகின் தெரிந்து' (நாலடியார்)

என்ற பாடல் விளக்குகின்றது. கல்வி கற்பதற்கு ஆயத்தமாகும் ஒருவன் மனம், மொழி, அனைத்தையும் தான் மேற்கொண்ட கருமமாகிய கல்வி கற்றலின் வழியே விடுவது சிறப்பு. கற்றொறும் கற்றொறும் பல அரிய கருத்துக்களை அறிவதை உணர்ந்து சிந்தித்து மேன்மேலும் கற்க வேண்டும் என்று பழமொழி நானூறு எடுத்துரைக்கின்றது. இதனை,

''உற்றொன்று சிந்தித்து உழன்று ஒன்று அறியுமேல்
கற்றொறும் தான் கல்லாதவாறு'' (பழ. நா.)

என்ற பாடலில் காணலாம்.

இப்பழமொழிப் பாடல், கல்விக் கற்று அறிஞரானவர்கள் எக்காலத்திலும் மனம் தளர்தல் இன்றித் தாம் இதற்கு முன் அறியாத உண்மைகள் பல உள்ளன என்பதை உணர்ந்து மேன்மேலும் கற்றலும், இதற்கு முன்பு மேலும் கற்காமல் இருந்து விட்டோமே என்பதை நினைத்து வருந்தியும் நாளுக்கு நாள் தோன்றும் புதிய உண்மைகளை அறிந்து கொள்ள அவாவுதலும் நிரம்பக் கற்று விட்டோம் என்ற மமதை மீக் கூர்ந்தால் அதனை உடையார் தேய்வான நிலையை அடைவர் என்பதை உணர்ந்தும் செயல்பட வேண்டும் என்பதை விளக்கி நிற்கிறது.

கற்றவரின் மதிப்பு

கல்வி கற்றவர்கள் எங்கும் மதிக்கப் பெற்றனர். கல்வி கேள்விகளில் தேர்ந்த அறிஞர்களிடம் அணிகலனாகத் திகழ்வது அவர்களிடம் காணப்படும் உயர் பண்பேயாகும். அவ்வுயரிய பண்பே அவர்களின் சிறப்பியல்பாக அமைந்து நாட்டில் ஒரு நல்ல மதிப்பை அவர்களுக்குத் தேடித் தந்தது.

கற்றவர்களைக் கற்றவர்கள் போற்றினர். புலமைக் காய்ச்சல் என்பது அந்நாளில் இல்லை. திறமை உடையவரைத் திறமை உடையார் போற்றியே வந்தனர். இது சங்ககாலச் சால்புகளில் ஒன்று. செந்தண்மை பூண்ட அந்தணப் புலவரான கபிலரை,

'புலனழுக்கற்ற அந்தணாளன்' (புறம்)

'பொய்யா நாவிற் கபிலன்' (புறம்)

என மாறோக்கத்து நப்பசலையாரும்,

''மறம்புரி கொள்கை வயங்கு செந்நாவின்
உவலை கூராக் கவலையால் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன் '' (பதிற்றுப்பத்து)

எனப் பெருங்குன்றூர்க் கிழாரும் புகழ்ந்து பாடியிருப்பது கருதத்தக்கது. கற்றவரின் இச்சால்பினைப் பழமொழி நானூறு,

'நல்லார் நலத்தை உணரின் அவரினும்
நல்லார் உணர்ப பிறர் உணரார்'' (பழ. நா.)

''புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம் - நலமிக்க
பூம்புனல் ஊர பொதுமக்கட்கு ஆகாதே
பாம் பறியும் பாம்பின்கால்'' (பழ. நா.)

எனவும் எடுத்துரைக்கின்றது.

எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே

கல்வியுடையார் பொது மக்களிடையே பெருமதிப்புப் பெற்றிருந்தனர். ஒரு ஊருக்கு முன்பின் அறியாத கற்றவர் சென்றால் அவ்வூரார் அவரைத் தெரியாதவர் என்று கருதுவதில்லை. கற்றவர் என்பதற்காக வரவேற்று உண்டி அளித்து உபசரித்து வந்தனர்.

சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளலான அதியமான் நெடுமானஞ்சி ஔவையாருக்குப் பரிசில் கொடாது நீட்டித்தபோது அவர் 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' (புறம்) என்று கூறியது இக்கருத்தைப் புலப்படுத்தும்.

இவ்வாறு கற்றறிந்தார் பெற்றிருந்த மதிப்பையும், பல நாடுகளிலும் அவர்கள் உபசரிக்கப் பட்டதையும்,

'ஆற்றவும் கற்றார் அறிவுடையார்; அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு
வேற்றுநாடாகா; தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவதில்' (பழ. நா.)

என்ற பழமொழிப் பாடல் எடுத்துரைக்கின்றது.

கற்றார் நெறி

கற்றவர்கள் மற்றவர்களைவிட அடக்கத்திலும் ஒழுக்கத்திலும் அதிக கவனம் செலுத்திக் குற்றமின்றி நடந்து கொள்ளவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. வெள்ளை நிறமான ஒரு பசுவின் மேல் கறைபட்டால் அது பலர்க்கும் வெளிப்பட்டுத் தோன்றும். கறுப்பு நிறப் பசுவில் கறைப்பட்டால் அவ்வாறு தோன்றுவதில்லை. அதுபோலக் கீழ் மக்கள் செய்யும் தவறு

அத்துணைப் பொருட்படுத்தப் படுவதில்லை கற்றறிந்த அறிஞர்கள் செய்யும் தவறு வெண்ணிறமான திங்கள் மீதுள்ள களங்கம் போல் பலராலும் உணரப்படும். எனவே, கற்றறிந்தவர்கள் தவறு செய்யாமல் நெறியுடன் நடக்க வேண்டும் என்ற கருத்தைப் பழமொழிப் பாடல் வலியுறுத்துக்கின்றது.

''விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை யில்லார்
கதிப்பவர் நூலினைக் கையிகந் தாராகிப்
பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்துப் பட்ட மறு'' (பழ. நா.)

என்பது அக்கருத்தமைந்த பாடல் ''கல்வி கற்றதன் பயன் உயரிய தன்மைகளைப் பெற்றுச் சிறந்த வாழ்வை அமைத்துக் கொள்ளுதலே ஆகும். கல்வியின் பயன்பாடு அறிவு வளர்ப்பது மட்டும் நோக்க மன்று. மேம்பட்ட மனிதப் பண்புகளைப் பெற்றுத் திகழச் செய்வதும் அதன் நோக்கமாகும்'' என்று கே. எம். கே. கோமதிசங்கர் கூறுகிறார்.

முடிவுரை

அறிஞர் பெருமக்களின் கடுமையான முயற்சியினால்தான் இன்று கல்வி நீரோடை நாடெங்கும் பாய்கிறது. கல்வி ஒன்றினால் தான் சமுதாயத்தைச் சீர்திருத்த முடியும். எனவே, நீதிநெறிக் காலத்தில் கல்வி பொதுமைக் கருத்தாகப் போற்றப்பட்டு வந்துள்ளது.

கல்வி கற்க வேண்டிய காலம் இளமை பருவம்தான். இளமைப் பருவத்தில் கல்வி கற்கவேண்டிய அவசியத்தைப் பழமொழி நானூற்றுப் பாடல் கூறுகிறது. கல்வி கற்கும் முறையைப் பற்றிக் கூறும்போது கற்கவேண்டிய நூல்களைக் கற்கவேண்டும். கற்றறிந்த அறிஞர்களுடைய நூல்களை மேன்மேலும் கற்க வேண்டும். இப்படி நிறையக் கற்கும்போது மமதை இருக்கக்கூடாது என்றும் கூறுகிறது.

கற்றவர்கள் எங்கும் மதிக்கப்படுகிறார்கள் சங்ககாலப் புலவர்கள் இதனால் சிறப்படைகின்றனர் என்றும், கற்றறிந்தார் பெற்றிருந்த மதிப்பையும் பல நாடுகளிலும் அவர்கள் உபசரிக்கப்பட்டதையும் கூறுகிறது.

கற்றறிந்தவர்கள் தவறு செய்யாமல் நெறியுடன் வாழ வேண்டும் என்பதை மதிப்புறுத்துப்பட்ட மறு என்ற பழமொழி நெறிப்படுத்துகிறது.

நாட்டுப்புறப் பாடல்களில் உளவியல்

த. சண்முகவடிவு

அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி

நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புற மக்களின் உணர்வில் பிறப்பவை. அவை எந்தவிதமான ஆடம்பர அலங்காரப் புனைவு களும் இன்றி மண்ணின் மணத்தோடு திகழ்பவை. அவை அவர் களுடைய இன்ப உணர்வுகளையும், துன்ப உணர்வுகளையும் சித்திரிப்பவை. அவற்றுள் உளவியல் நோக்கில் நாட்டுப்புறப் பாடல் களை ஆய்வதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

தேவைகள்

உலகில் கூட்டம் கூட்டமாகக் கூடி வாழும் ஒரு சமுதாய விலங்கு மனித இனம் ஆகும். மனிதன் தன் தேவைக் காரணமாகவும், பிற தேவைகளுக்காகவும் பிற மனிதர்களுடன் ஒவ்வொரு நிலை யிலும் தொடர்பு கொள்கிறான். இத்தேவைகளே மனிதனைச் செயற்பட வைக்கின்றன எனலாம்.

''தேவை என்பது ஓர் இலக்கை நோக்கமாகக் கொண்டு செலுத்தும் எந்த ஒரு பயனுள்ள செயலையும் குறிக்கும்'' என்பர். மனித வளர்ச்சியில் தேவைகளின் பங்கு மிகவும் இன்றியமையாதது. மனிதர்கள் சமுதாயத்தின் அங்கமாக விளங்குபவர்கள். அவர்கள் ஒருவருடன் ஒருவர் பின்னிப் பிணைந்து சமுதாயத்துடன் இணைந்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் எனலாம்.

தேவைகளின் வகைகள்

தேவைகள் பெரும்பான்மையும் உலகெங்கணும் உள்ள மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானதாக அமைகின்றன . எனலாம். என்றி அலெக்சாந்தர் மர்ரே என்பவர் மனிதர்களைச் சோதித்து இருபத்தெட்டுத் தேவைகள் கொண்ட பட்டியலை வெளியிட்டார். ஆக்கிரமிப்புத் தேவை, தன்னுரிமைத் தேவை, ஆதிக்கத் தேவை ஆகியவை சிறந்தவையாகும்.

அவை தவிர

''(I) சுதந்திரத் தேவை (n Autonomy)

(II) அரவணைப்புத் தேவை (n Nuturance)

(III) பணிவுத் தேவை (n Abasement)

(IV) பால் உறவுத் தேவை (n Sex)

(V) கைவிடல் தேவை (n Rejection)

(VI) தீங்கு தவிர்த்தல் தேவை (n Avoidance)

(VII) ஒழுங்குத் தேவை (n Order)

(VIII) தெரிந்து கொளல் தேவை (n Understanding)

(IX) கவனத் தேவை (n Exhibition)

(X) விளையாட்டுத் தேவை (n Play)

(XI) புலன் மகிழ்ச்சித் தேவை (n Sentience)

(XII) புதுமைத் தேவை (n Novelty)

(XIII) தளராத முயற்சித் தேவை (n Perseverence)

(XIV) உளப் பகுப்புத் தேவை (n Intraception)

(XV) இணைப்புத் தேவை (n Affiliation)

(XVI) தலைமை ஏற்புத் தேவை (n Deference)

(XVII) எதிர் பாலின உறவுத் தேவை''
(n Hetero Sexual Relation)

ஆகிய தேவைகள் இருக்கின்றன என்று மர்ரே குறிப்பிட்டுள்ளார். தேவைகள் அதிகரிக்கும்போதும் தடை செய்யப்படும் பொழுதும் மனம் தடுமாறுவது இயல்பாகும்.

சுதந்திரத் தேவை (n Autonomy)

தமக்கு விருப்பமான பொருட்கள் பற்றிக் கட்டுப்பாடின்றிக் தம் கருத்துக்களை வெளியிடுவதே சுதந்திரத் தேவையின் நோக்க மாகும். தனக்கு விருப்பமான காதலியைச் சந்தையில் அவன் கண்டு கொண்டான். வேலை முடிந்ததும் அவள் ஊருக்குப் புறப்பட்டாள்; அவனும் பின் தொடர்ந்தான்; வழியில் யாரும் இல்லை. அவன், அவள் மீது கொண்டுள்ள அன்பைச் சுதந்திரமாகப் புலப்படுத்தி,

''சொன்னாலும் ஆகாது
சொல்லவும் கூடாது
கண்டாலே போதுமடி - சின்னத் தங்கம் என்
கருமமெல்லாம் தொலைஞ்சி போகும்
கட்டாணி முத்தோ - நீ?
கற்கண்டோ சர்க்கரையோ?
தொட்டாலே போதுமடி - சின்னத் தங்கம் என்
தொந்திரவு நீங்குமடி.'' (த. நா. பா. 142)

என்று பாடுகின்றான்.

கவன ஈர்ப்புத் தேவை (n Exhibition)

எதிர்பாலினரின் கவனத்தை ஈர்த்தலும், வாழ்க்கையில் இன்றியமையாதவர்கள் என்று கருதுபவர்களை உளக்கிளர்ச்சியுறச் செய்தலும் தம் தோற்றத்தினாலும் நடத்தையினாலும் மற்றவர்களின் கவனத்தை ஈர்த்தலும் கவன ஈர்ப்புத் தேவையின் உட்பொருள்களாகும் எனலாம்.

செல்லமாக வளரும் ஒரு பெண்ணிற்குச் சமையலைக் கற்றுக் கொடுத்து, கோபமாக இருக்கும் கணவரின் கவனத்தை ஈர்ப்பது இத்தேவையின் உட்பொருளாகும். இதனை வெளிப்படுத்தும் முகமாக,

''அரளிச் சுருள் ஓலையைத் தான்
அழகான கட்டிலிலே
நடு விருந்து வாசிப்பார்
நம்ம தம்பி முத்தையா
குனிஞ்சி தான் சோறிடுவாள்
கற்பு மவள் நம்ம தங்கை
வாரி மனங் கொள்வார்
வரிசையுள்ள நம்ம தம்பி
எடுங்கடி பெண்டுகளே
எல்லோரும் தான் குலவை'' (த. நா. பா. 302)

என்ற பாடல் அடிகள் அமைவதை அறிய முடிகின்றது.

இணைப்புத் தேவை (n Affiliation)

பலருடன் இணைந்து செயலாற்ற நினைப்பதும் மன நிறைவு கொள்ளச் செய்வதும் இணைப்புத் தேவையின் உட்பொருளாகும். நல்ல நாட்கள் விசேடங்களின் பொழுது ஒருவருக்கொருவர் அன்புடன் தம் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்ள நினைப்பது, மனிதர்கள் அனைவருக்கும் உள்ள ஓர் இனிய அனுபவமாகும். ஆனால் சமுதாயத்தில் மலடி தொட்ட காரியம் விளங்காது என்பது நம்பிக்கை. மங்கள காரியங்களுக்கு அவளை அழைப்பதில்லை. பிள்ளை பெற்ற மகராசிகளுக்குத்தான் மங்கள காரியங்கள் செய்வதில் வாய்ப்பு உண்டு. சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட ஒரு மலடி, தன்னையே நொந்து கொள்கிறாள். தான் தொட்டது விளங்காது என்று அவளே கூறுகின்றாள். இத்தகைய சூழலில் சமுதாயத்தின் இணைப்புத் தேவை மலடிக்குக் கிடைக்காமல் போகின்றது. இதனை,

''ஆடு போகும் வழி தனிலே அரகரா
மகனே மார்க்கண்டா - நான்
ஆறுகுளம் வெட்டி வச்சேன் சிவனே
மலடியோட பேரைச் சொல்ல அரகரா

மகனே மார்க்கண்டா
மந்தை ஆடு அருந்தலையே சிவனே அரகரா''

(த. நா. பா. ப. 323)

என்ற பாலடிகள் வெளிப்படுத்துகின்றன எனலாம்.

தீங்கு தவிர்த்தல் தேவை (n Avoidance)

பழைமை பாதையிலேயே வாழ்தலும் எதிர்பாராத விளைவுகளுக்கு அஞ்சிப் புதுமையைத் தவிர்த்தலும் தீங்கு தவிர்த்தல் தேவையின் உட்பொருள்களாகும். இளம் விதவையாக இருப்பவள் பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் அமங்கலி. அவளால் காமச் சுவையை நுகர இயலாது. அதைப் பெறக் குறுக்கு வழியில் செல்ல விடாமலும் அவளது குடும்பச் சூழ்நிலை அவளுக்குத் தடை போடுகிறது. அந்நிலையில் ''மரமாகவாவது, பூவாவகவாவது பிறந்திருந்தால் மனிதர்கள் போற்றுவார்களே'' என்று அவள் ஏங்குகிறாள். விதவைத் திருமணத்தைப் பாரதிதாசன் போன்ற சமூக விடுதலைக்காரர்கள் ஆதரித்திருந்த போதிலும் சமூக பழக்க வழக்கங்களும் பழமைப்பித்தும் அதனை இன்றும் மறுத்தே வருகின்றன. பழமைக்கு அஞ்சிப் புதுமையை அவள் தவிர்க்கிறாள். இதுவே தீங்கு தவிர்ப்புத் தேவையின் உட்பொருளாகும். இதனை,

''கும்பியிலே பூத்த நானு
கொம்பிலே பூத்திருந்தா
கூட்டத்தார் எல்லோரும்
கொம்புன்னு வெட்டுவாங்க
கோயிலும் கட்டுவாங்க இப்போ
கூட்டத்தார் எல்லோரும்
கொம்புன்னு வெட்டல்லை
கோயிலும் கட்டல்லை
என்னுடைய வெங்கொடுமை
எப்பத்தான் ஆறப்போகும்''

(தமிழர் நாட்டுப் பாடல்கள் - 344)

பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

அரவணைப்புத் தேவை (n Nuturance)

துன்புறும் நேரத்தில் இரக்கம் காட்டுபவர்களை வேண்டுவது அரவணைப்புத் தேவையாகும். இன்பமாக வாழுங்காலத்தைவிடத் துன்பத்தின் போதே ஆறுதலான வார்த்தைகளுக்காக மனம் ஏங்கும். ஆனால் கணவனை இழந்த கைம்பெண்களுக்கு ஆறுதல் வார்த்தைகளை விட அவர்களுடைய மனதைப் புண்படுத்தும் சுடு சொற்களே கிடைக்கின்றன.

''உளுத்தம் பயிரறியேன்
உச்சிப் பயிர் நானறியேன்
ஊரார் சொல் வார்த்தைக்கு
உயிர் வச்சு நானறியேன்'' (த.நா.பா 471)

என்று ஒரு பெண் உயிரையே வெறுக்கக்கூடிய அளவிற்கு ஊராரின் பேச்சுக்கள் காணப்படுவதாகச் சுட்டுகிறாள்.

பால் உறவுத் தேவை (n Sex)

பசி, தாகம் ஆகிய உணர்வுகளைப் போன்றே பாலுணர்வுத் தேவையும் இயற்கையான தேவையே ஆகும்.

ஆயினும் கணவனை இழந்த பெண்கள் தங்கள் உணர்வுகளைத் தாங்களே சிறையிட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் நேர்கிறது.

''சாதத்தில் கொஞ்சம் வைப்பேன்
சமைச்ச கறி ரொம்ப வைப்பேன்
ஜலம் வாங்கிக் கையலம்பி
சாப்பிட்டுத் திண்ணையிலே
மெத்தை தலைகாணியிலே - இனி
கூடிப் படுப்பதெப்போ?'' (த. நா. பா. ப. 580)

என்று ஒரு பெண் தன் உணர்வுகளை வெளிப்படையாகவே வெளியிடுவதனைக் காணமுடிகிறது.

முடிவுரை

மனிதனை உருவாக்குபவை அவனது தேவைகளே எனலாம். தேவைகளுக்கு ஏற்றபடியே அவர்களது வாழ்க்கை முறைகளும், மன உணர்வுகளும் அமைகின்றன. நாட்டுப்புற மக்கள் தங்களுடைய தேவைகளை எளிய முறையில் பாடல்களால் வெளிப்படுத்தி யுள்ளனர். அவை அவர்களது மன உணர்வுகளை வெளிப்படுத்து கின்றன. உளவியல் கூறும் கருத்துகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் வகையிலும் அவை அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

குறிப்புகள்

1. சந்தானம், எஸ் - கல்வியின் உளவியல் அடிப்படைகள், ப. 2
2. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி - 10, தமிழ்ப் பல்கலைக் கழகம், ப. 504
3. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி - 2, ப. 589
4. வானமாமலை, நா. - தமிழர் நாட்டுப் பாடல்கள். ப. 85
5. பாரதிதாசன் - பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப. 120

உளவியல் நோக்கில் - தாய்க்கூற்று

ப. ரேணுகாதேவி

அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி

மனிதனின் நடத்தையைப் பற்றியும் மறைந்திருக்கும் நடத்தைக்கான காரணத்தைப் பற்றியும் ஆராய்வதே உளவியல் ஆகும். தற்காலத்தில் உளவியல் அணுகுமுறையினைக் கொண்டு கவிதைகள், புதினங்கள் ஆகியவை ஆராயப்பட்டு வருகின்றன. அவ்வகையில் சங்க இலக்கியங்களுள் நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் காணப்படும் தாய்க் கூற்றுப் பாடல்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தாய்க் கூற்றுப் பாடல்கள்

மனிதன் உணர்ச்சிகளின் கலவையாகப் படைக்கப்பட்டுள்ளான். இன்பத்தில் மகிழ்வதும், துன்பத்தில் கலங்குவதும் அவனது இயற்கைப் பண்புகளாகும். இன்பத்தைவிடத் துன்பத்தின் போதே மனதளவில் பெரிதும் பாதிக்கப்படுகிறான். ஆண்களைவிடப் பெண்களே எளிதில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவர். பெண்கள் துன்ப உணர்வுகளை வெளியிடக் கையற்றுப் புலம்புவதை வடிகாலாகப் பயன்படுத்து கின்றனர். ஏனெனில் பெண் என்பவள் உடல் அளவில் மட்டுமல்லாமல் மன அளவிலும் மிகவும் மெல்லியளாகச் சங்க இலக்கியத்தில் இருந்தே சித்திரிக்கப் பட்டுள்ளாள். தலைவி உடன்போக்குச் செல்லும் நிலையில் அவள் பிரிவால் மிகவும் பாதிக்கப்படுபவளாகக் காட்டப்படுபவள் தாயே ஆவாள். தந்தை பிரிவுத்துயரை வெளிப்படுத்துவதாக அகப்பாடல்களில் ஒரு பாடல்கூடக் காணப்படவில்லை. நற்றிணைப் பாடல்களும், குறுந்தொகைப் பாடல்களும் மகளைப் பிரிந்து தாயின் உணர்வு களை வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

மேலை நாட்டவர்களின் உளவியல் கோட்பாடுகளைத் தமிழ் இலக்கியத்தில் பொருத்திப் பார்க்கும் போது மிகவும் கவனமாகக் கையாள வேண்டியுள்ளது. எல்லாக் கோட்பாடுகளும் பொருந்தி வருகின்றன என்று கூறிவிட இயலாது. எனினும் சில கோட்பாடுகள் பொருந்தி வருகின்றன. அவை வருமாறு:

தன்னேமாற்றம்

தலைவி தலைவனோடு உடன்போக்கில் சென்ற பின் அவளது பிரிவைக் கண்டு தாயானவள் பலவாறு புலம்புகிறாள். அவ்வாறு புலம்புவதனால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்றாலும் தன்னுடைய மனச்சுமை குறைவதாக எண்ணுகிறாள்.

''ஒரு தனிமனிதன் கவலையிலிருந்தும், அச்சத்திலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் பல தற்காப்பு முறைகளைக் கையாளுகின்றான். பெரும்பாலும் இத்தற்காப்புக் கருவிகள் நனவில் உள்ளத்தினால் இயக்கப்படுகின்றன என உளப்பகுப்பு வல்லுரான சிக்மெண்ட பிராய்டு கருதினார். இத்தற்காப்புக் கருவிகள் எவ்வகையிலும் மனிதனைத் தாக்கவிருக்கும் இன்னலின் உண்மையான நிலையை மாற்றியமைப்பதில்லை. ஆனால் அவை அந்த இன்னலைப் பற்றி மனிதன் கொண்டுள்ள நோக்கை மாற்றியமைக்கின்றன. இவ்வாறு மனிதன் தன்னுடைய நோக்கை மாற்றியமைக்கும்போது ஓரளவிற்குத் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள நேரிடும். அதற்குத் தன்னேமாற்றம் (Self Deception) என்று பெயர்''

''காலே பரிதப்பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே'' (குறுந். 44)

''இனியே, தாங்குநின் அவலம் என்றீர் அதுமற்று
யாங்ஙனம் ஒல்லுமோ அறிவுடையீரே'' (நற். 184)

இப்பாடல்களில் செவிலியும் நற்றாயும் புலம்புகின்றனர். அவர்களின் புலம்பல் தலைவனுடன் உடன் போக்குச் சென்ற தலைவிக்குக் கேட்காது என்று தெரிந்திருந்தும், தங்கள் உணர்வுகளைப் புலம்பல் மூலம் வெளிக்காட்டுகின்றனர். இவ்வுணர்வு தன்னேமாற்றத்தால் விளைந்ததுவே யாகும்.

மனஅழுத்தம் (Depression)

மனஅழுத்தம் என்பது மனிதன் தனது எண்ணங்களை, நினைவுகளைத் தன் மனத்திற்குள்ளேயே அடக்க முயலுவதைக் குறிக்கிறது எனலாம். இவ்வாறு அமுக்கப்பட்ட உணர்வுகள் சில குறிப்பிட்ட சூழல்களில் தம்மையும் அறியாமல் வெளியாகின்றன. ''சில அறிகுறிகள் (symptoms) கனவுகள், வாய்தவறி வெளிப்படும் வார்த்தைகள் போன்றவற்றின் வாயிலாக அமுக்கப்பட்ட இரகசிய வேட்கைகள் மீண்டும் திரும்பும்'' என்று பிராய்டு குறிப்பிடுவார்.

''பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென னென்றனள்
இனியறிந் தேனது...........'' (குறுந். 84)

சிறுவயது முதல் தாயுடன் இணைந்து துயில் கொண்ட தலைவி, தலைவனுடன் உறவு கொண்ட பிறகு தாயுடன் உறங்குவதை விரும்பவில்லை. அதனை அவள் செயலால் காட்டியபோது புரிந்து கொள்ளாத தாய் அவள் உடன்போக்கில் ஈடுபட்டவுடன் ஒருவேளை தன் மகள் தன்னுடன் துயில் விரும்பாத காரணம் தலைவனுடன் கொண்ட உறவினால் தானோ என்று மனதில் பதிந்திருந்த அந்நிகழ்வை எடுத்துக் கூறுகிறாள்.

புறத்தெறிதல் (Projection)

மனதில் தோன்றுகின்ற ஒரு வகையான உணர்வை மற்றோர் உணர்வாக அடுத்தவர் மேல் காட்டுவதே புறத்தெறிதல் ஆகும். ''புறத்தெறிதல் ஒரு வகையான தற்காப்புச் செயல் முறையாகும். இதில் ஒருவருடைய மனமுரண்பாடு அடங்கியுள்ளது. ஒருவர் தமக்கு ஏக்கத்தைத் தூண்டுகிற ஊக்கிகளை மற்றொருவரின் மீது ஏற்றி கூறித் தம்முடைய முரண்பாட்டை ஈடு செய்து கொள்ளுகிறார். புறத்தெறிதல் என்பதற்கு மற்றொரு பொருளாக, மற்றவர்களைக் குறைகூறல் என்பதும் கூறப்படுகிறது. உள்ளார்ந்த மனமுரண்பாட்டி லிருந்து எழுகின்ற கவலை அல்லது ஏக்கத்தைப் புறத்தெறிதல் மூலம் குறைத்துக் கொள்ள முடியும்'' என்று உளவியலார் குறிப்பிடுகின்றனர்.

''....இன்றே
மைஅணற் காளை பொய்புகலாக
அருஞ்சுரம் இறந்தனள்...'' (நற். 179)

''செல்பெருங் காளைபொய்ம் மருண்டு
...என்மகள் ஓரன்ன
செய்ய போழ் வெட்டிய பொய்தல் ஆயம்''
மாலைவிரி நிலவில் பெயர்பு புறங்காண்டற்கு,
மாஇருந் தாழி கவிப்ப
தாஇன்று கழிக, எற்கொள்ளாக் கூற்றே'' (நற். 271)

''...எம்போல்
பெருவிதும்புறு கமாதோ எம்மில்
பொம்பல் ஓதியைத் தன்மொழிக் கொள்இ
கொண்டு உடன்போக வலித்த
வன்கண் காளையை ஈன்ற தாயே'' (நற். 293)

தாய், தலைவி தன்னைப் பிரிந்த ஏக்கத்தை, துன்பத்தை, தலைவன் மற்றும் அவன் தாய் மீது குற்றம் கூறுவதன் மூலம் குறைத்துக் கொள்கிறாள்.

எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

எதிர்பார்ப்பு என்பது மனிதர்கள் அனைவரிடமுமே உள்ளதாகும். அவ்வெதிர்பார்ப்பு நிறைவேறாத நிலையில் ஏமாற்றம் ஏற்படுகிறது. ''உளவியல் கொள்கைப்படி மிகவும் பிடித்தமானவர்களிடம்கூட வெறுப்பான சொற்களைக் கூறித் திட்டும் போக்கு ஏற்படும். ஏனெனில் மிகவும் எதிர்பார்ப்பு கொண்டுள்ள நபரிடம் அத்தகைய எதிர்பார்ப்புக்கு மாறான எதிர்விளைவு காணப்பட்டால், அதனால் ஏமாற்றமும் விரக்தியும் ஏற்படும். அவ்விரக்தியின் விளைவே அன்பு கொண்டவர்களை மோசமான சொற்களால் திட்டவும் காரணமாக அமைகிறது'' என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

''நிழலான்ற விந்த நீரிலா ரிடைக்
கழலோன் காப்பக் கடுகிபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுடி வெந்த
வெவ்வெங் கலுழி தவ்வெனக் கிடிக்கிய'' (குறுந். 356)

தாயானவள் தன் மகள் பொரியோடு கலந்த பாலை மிக்கன என்று கூறி உண்ணாத தன்மையையும், கூந்தலிற் சூடிய மாலை சிக்குண்டாலும், வளையல்கள் நெகிழ்ந்தாலும் கண்கலங்கும் நிலையினையும் கண்டு தன் மகள் பேதைமைத் தன்மை உடையவள் என்று எண்ணியிருந்தாள். ஆனால் அவள் தாயின் எண்ணத்தைப் பொய்யாக்கும் வகையில் தலைவனுடன் சென்று விட்டாள். ஆகையால்தான் ஏமாற்றத்திற்கு உள்ளான தன்மையைத் தாய் வெளிப்படுத்துவதனைக் காணமுடிகிறது.

அடிப்படை மனவெழுச்சி

மனிதனின் ஒவ்வொரு செயல்களுக்கும் அவனது மனமே அடிப்படையாக அமைகிறது. குழந்தைப் பருவத்திலிருந்தே ஒருவரிடம் காணப்படும் மனவெழுச்சிகள் அடிப்படை மனவெழுச்சிகள் எனப்படும். மனவெழுச்சியைப் பற்றிப் பல உளவியலாளர்கள் ஆய்வுகள் செய்துள்ளனர். வாட்சன் (Watson) என்பவர் சினம். அச்சம், அன்பு ஆகிய மூன்று மெய்ப்பாடுகளை அடிப்படை மனவெழுச்சிகள் என்று குறிப்பிடுகிறார்.

1. அச்சம்

ஒரு குறிப்பிட்ட சூழல் உண்மையிலேயே அச்சத்தை உண்டாக்குவதாக இல்லாவிட்டாலும், அஃது ஆபத்தானது என்று தனிமனிதன் எண்ணினால் அவனிடம் அச்சம் தோன்றும் என்று உளவியலார் கூறுவர்.

''நின்று வேனில் உலர்ந்த காந்தள்
அழலவிர் நீள்இடை நிழலிடம் பெறாஅது

ஈன்றுகான் மடிந்த பிணவுப்பசி கடர்ந்தென
மான்ற மாலை, வழங்குநர்ச் செலீஇய,
புலிபார்த்து உறையும் புல்லதர்ச் சிறுநெறி
யாங்கு வல்லுநர் கொல் தானே - யான், தன்'' (நற். 29)

தலைவி தலைவனுடன் கொடிய பாலை நிலத்தின்கண் உடன்போக்குச் சென்றனள். 'பாலை நில, வழியில் தலைவி நலமாகப் போய்ச் சேர வேண்டும்?' என்ற தாயின் அச்சவுணர்வு இப்பாடலில் வெளிப்படுவதைக் காணலாம்.

2. அன்பு

அச்சம் போலன்றி அன்பு என்னும் மனவெழுச்சி ஆக்கம் தருகிற மனவெழுச்சியாகும். ஒருவர் மற்றொருவர் மீது கொண்டுள்ள அன்பு அவர்கள் பிரிந்திருக்கும் நிலையிலேயே வெளிப்படும்.

''தண்மழை தலையின்றாக நந்நீத்துச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடவா வரிவை போகிய சுரனே'' (குறுந். 378)

தலைவி தன்னைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல் தலைவனுடன் சென்றாலும், தலைவியின் மீது கொண்ட அன்பால் அவள் உடன்போக்குச் சென்ற பாலை நிலத்தில் மழை பெய்து குளிர வேண்டும் எனத் தெய்வத்திடம் வேண்டுவதன் மூலம் தலைவி மீது தாய் கொண்ட அன்புணர்வு வெளியாகிறது.

தொகுப்புரை

சங்க இலக்கியம் சுட்டும் தாயர் உணர்வு நிலையில் சிந்திப்பவராகக் காட்டப்படுகின்றனர். தலைவியின் மீது அன்புக் கொண்டவராகவும், தலைவியின் எதிர்காலத்தின்மீது அக்கறை கொண்டவராகவும் காணப்படுகின்றனர். உளவியலார் மனித உணர்வுகள் குறித்து கூறும் கருத்துகள் சங்க இலக்கியத் தாயரின் இயல்புக்குப் பொருந்தி வருவதை அறிய முடிகிறது.

குறிப்புகள்

1. பகவதி, கு. (ப. ஆ) - திறனாய்வு அணுகுமுறைகள், ப. 102
2. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி - 10, ப. 81
3. அரங்க. நலங்கிள்ளி - ஃபிராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு, ப. 18
4. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி - 12, ப. 802

காமத்துப்பால் ஓர் உளவியல் பார்வை

கோ. நிர்மலாதேவி

கற்பகம் கலை அறிவியல் கல்லூரி

ஈச்சனாரி, கோவை - 21.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்

என்ற ஒப்பற்ற பெருமையை உடையது திருக்குறள். வாழ்க்கையில் பல்வேறு பகுதிகளையும் நுணுகிப் பார்த்தவர் வள்ளுவர். உலக வாழ்க்கையில் தாம் கண்டு தெளிந்த உண்மைகளைச் சிக்கலின்றித் தெள்ளத் தெளிவாக மக்கள் மனத்தில் பசுமரத்து ஆணி போலப் பதியும் வண்ணம் திருக்குறளை இவர் இயற்றியுள்ளார். அதில் இல்லாத கருத்துக்கள் எதுவுமே இல்லை என்னும் அளவிற்குக் கருத்துப் பெட்டகமாய் விளங்கும் சிறப்பை உடையது திருக்குறள். மாந்தரின் உளஇயல்பைக் கூறுவதால்தான் அது உலகப் பொது மறையாக இன்றும் நின்று நிலவுகிறது. அவ்வகையில் திருக்குறளில் காமத்துப்பாலில் அமைந்த ஒரு சில குறள்களை உள்வியல் பார்வையில் காண்பதாக அந்த ஆய்வு அமைகிறது.

திருக்குறளில் காமத்துப்பால்

திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் காமம் என்ற தமிழ்ச் சொல் விரிந்த பொருள் கொண்டு அன்பு ஒத்த காதலர் இருவரிடையே தோன்றும் இன்ப உணர்வினையே காட்டி நின்றது. காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்ட இன்ப வாழ்வினைதான் திருவள்ளுவர் காமத்துப்பாலில் கூறுகிறார். திருவள்ளுவர் கூறும் காதல், இம்மை மாறி மறுமையாயினும் தொடர்ந்து செல்லும் தெய்வக் காதலாகும். இது உடம்பினைப் பற்றிய காமம் மட்டும் அன்று, இவர் கூறுவது உயிருடன் கலந்த அன்பினைப் பற்றிய காதல் ஆகும். இதனைத் திருவள்ளுவர் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள உறவினைப் போன்றது, தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே தோன்றிய காதல் உறவு என்று கூறுகிறார்.

உடம்போடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையோடு எம்மிடை நட்பு

என்பது குறள்.

உளவியல் - விளக்கம்

உளவியல் மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக அறிகின்ற அறிவியல். உளவியல் பல துறைகளை உடைய அறிவியலாகும். எல்லாத் துறைகளிலுமே அதனுடைய முக்கிய நோக்கம் மனிதர்களின் நடத்தையை முழுமையாக ஆய்வதாகும் என்று மு. இராசமாணிக்கம் அவர்கள் கூறுகிறார். மனித உள்ளத்தின் உணர்ச்சிகள், விருப்புகள், வெறுப்புகள் முதலியனவற்றை அறிந்து கொள்ள உதவுவது உளவியல் ஆகும். இந்த உளவியல் உடலியல் மற்றும் உயிரியல் ஆகியவற்றுடன் பிணைந்து காணப்படுகிறது.

உளவியல் அறிஞர் மாஸ்லோ அவர்கள் மனித நலக் கொள்கை அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் தன் இயல்பான தேவை களின் அடிப்படையில் முன்னேறுகிறான் என்று கூறுகிறார். அந்தத் தேவைகள் ஆறு படிநிலைகளைக் கொண்டது என்றும், அவை கீழிருந்து மேலாக கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி மேனிலை யாக்கம் பெறும் உச்சக்கட்டத்தை அடைகிறான் என்று கூறுகிறார்.

1. உடல்சார் தேவைகள்

மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறையுள், உறக்கம் போன்றன. பசி, தாகம் பால் உந்து சக்தி, கறைப்பு, உடல்நோய் போன்றன நீங்குவதற்கு உரிய வசதிகளே அடிப்படைத் தேவைகள். அவை நிறைவேறிய பின் மனம் அடுத்த நிலைத் தேவைகள் பற்றிச் சிந்திக்கிறது.

2. காப்புத் தேவைகள்

உடலுக்கு ஊறு ஏற்படா வண்ணம் பாதுகாப்பும், அஞ்சத்தக்க சூழல்களில் இருந்து பாதுகாப்புத் தேடுதல், காப்புணர்வு, சமநிலை நலம் அமைதி போன்ற நிலைகளை மனம் நாடுகிறது. இவை நிறை வேறிய பின் அடுத்த நிலைத் தேவைகளில் கவனம் செலுத்துகிறது.

3. அன்புத் தேவைகள்

முழுமையான பாதுகாப்பும் அடிப்படைத் தேவைகளும் பூர்த்தியாகும் நிலையில் அன்புத் தேவைகள் உருவாகின்றன. தன்னிடம் பிறர் அன்பு செலுத்துவதையும் தன் அன்பை பிறர் ஏற்பதையும் தன் மனைவி, தன் மகன், மகள், தன் குடும்பம், தன் சொத்து என உரிமை கோரும் மனநிலையும் நிறைகாண விழைகிறது. மற்றவரால் விரும்பப்படாமை, தனக்கென ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொள்ள இயலாமை போன்றன இருப்பின், அதனால் தாழ்வு மனப்பான்மையும் அதை மீற விரும்பும் உயர்வு மனப்பான்மையும் ஏற்படும்.

4. தன் மதிப்புத் தேவைகள்

உடல்சார் தேவைகள், காப்புத் தேவைகள், அன்புத் தேவைகள் ஆகிய மூன்று நிலைகளில் முழுமையும் நிறைவும் பெற்ற மனம், அதன் பிறகு தன்மதிப்புத் தேவைகளைத் தேடத் துவங்குகிறது. தான் திறமையற்றவன் என்னும் உணர்வு, தாழ்வு மனப்பான்மை போன்றவற்றில் இருந்து நீங்கி நம்பிக்கை, செயல் திறமை, தன் மதிப்புப் பெறல் போன்றவற்றில் மனம் நாடுகிறது.

5. நன்மதிப்புத் தேவைகள்

மேற்கூறப்பட்ட நான்கு நிலைகளில் நிறைவு பெற்ற மனம் மேலும் முன்னோக்கிச் செல்லத் துவங்குகிறது. படைப்பாற்றல், நிறை அனுபவம், நடத்தை மதிப்புகள், சமுதாயக் கண்ணோட்டத்தில் உயர்ந்தவன், நல்லவன், பெரியவன் என்று கருதப்படும் நிலையை அடைதல், உள்ளார்ந்த திறமைகளைப் பயன்படுத்திச் சமுதாயத்தில் பயனுடையவனாக முன்னேறுதல் போன்ற எண்ணங்களை உடையவனாகிறான்.

6. மேனிலையாக்கத் தேவைகள்

தம் திறமைகள் அனைத்தையும் இணைத்து மேன்மை பெற்று எத்துறையாயினும் அதில் முதன்மை பெற முனைவதும், தன்னால் எந்த அளவிற்கு முன்னேற முடியுமோ அந்த அளவிற்கு முன்னேறுவதும் என்ற ஆசை கொள்வதும்தான் ஆசைகளின் உச்சக்கட்டம். இதைச் சென்றடையும் பொழுதுதான் மனிதன் தன் முனைப்பைத் திருப்தி செய்தவனாகிறான்.

காமத்துப்பாலில் உளவியல் கருத்துக்கள்

அன்பு என்பது விலை மதிக்க முடியாத ஓர் அணிகலனாகும். இது மிக உயர்ந்த ஒரு பண்பு. இந்த அன்புதான் உலகின் அச்சாணி போன்றது. இந்த அன்பின் பிடியில் அகப்படாதார் யாரும் இருக்க முடியாது. இறைவனே அன்புக்குக் கட்டுப்பட்டவன் ஆவான். எனவேதான் வள்ளலார் அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே என்று இறைவனைப் போற்றுகிறார். காமத்துப்பாலில் இந்த அன்பானது உளவியல் அறிஞர் மாஸ்லோ குறிப்பிடும் அன்புத் தேவை (*love belongness*) என்பதன் அடிப்படையில் அமைகிறது.

திருவள்ளுவரின் காமத்துப்பால் அன்பின் இறுதிப்படியாகிய காதலை அறிவுறுத்துகிறது. அதனால்தான் இதற்கு இன்பத்துப் பால் என்ற பெயரும் வழங்கப் பெறுகின்றது.

ஒத்த உருவும், திருவும், பருவமும் பண்பும் கொண்ட ஒருவனும் ஒருத்தியும் தம்முள் கண்டு மயங்குகின்றனர். அந்த மயங்கிய

உள்ளத்தின் நிலையைத் தலைவன் புலப்படுத்துகிறான். முதலில் அணங்கோ, மயிலோ, மங்கையோ என்று அவன் மனம் மயங்கு கின்றது. தலைவனின் மனத்தை தலைவியின் அழகு மட்டும் கவரவில்லை. முதலில் தலைவன் தலைவியின் உடல் வனப்பைக் கண்டு மயங்கினான் என்றாலும், பிறகு அவளது உண்மையான உள்ளத்து அன்பையே எதிர்பார்த்து நிற்கின்றான்.

மேலும், தலைவன் தலைவியின் பார்வையில் கொடுமையை மட்டும் கண்டு நிற்கவில்லை. அவளது பார்வையின் அழகையும் கண்டு ரசித்து நிற்கிறான். அதனோடு மட்டும் அல்லாமல் பெண் தன்மையை எடுத்துக் காட்டும் நாணம் என்னும் பண்பையும் காண்கிறான். கண்ணழகும், நாணழகும் உள்ளபோது வேறு அணிகலன்களை அணிவது ஏனென்று வியக்கிறான் என்பதை,

> பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
> அணிஎவனோ ஏதில தந்து (1089)

என்ற குறளின் மூலம் அறியலாம்.

இவ்வாறு தலைவன் காணும் கண்களில் வெறும் புற அழகை மட்டும் கண்டு நிற்காமல் உள்ளப் பண்பையும் (அன்பையும்) கண்டு நிற்கும் இந்த திறம் போற்றத் தக்கதாகும்.

> இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
> நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து (1091)

தலைவியிடம் இருநோக்கு உள்ளது. ஒரு நோக்கு தலைவனுக்குத் துன்பத்தைத் தருவதாகவும், மற்றது அதற்கு மருந்தாகவும் விளங்கு கின்றது. தலைவன் காணாதபோது அவனைக் கண்டு களவு கொள்கின்ற சிறு நோக்கம் தலைவியிடம் உள்ளது. இதுதான் அவர்களிடையே அன்பையே வளர்க்கும் நீராகின்றது. யான் காணாதபோது கண்டு ஏதோ கருத்தை மனத்தின் உட்கொண்டு நாணி இறைஞ்சுகின்றாள் என்பதைத் தலைவன் தலைவியின் மேல் வைத்திருக்கக்கூடிய அன்பின் காரணமாக அவளது உள்ளக் குறிப்பைக் கண் வாயிலாகத் தலைவன் அளந்தறிகின்றான். இவ்வுளவியல் கூறு காமத்துப்பாலில் காணப்படுகிறது.

தலைவனைப் பிரிந்ததால் தலைவியினது கண்களும், தோள் களும், நெற்றியும் பசலை படர்ந்து அழகழிந்து விட்டதாகத் தலைவி கூறுகிறாள்.

அகத்தைப் புறம் பிரதிபலிக்கும் என்பது கருத்து. ஒருவரது மனத்தில் துன்பம் மிகுந்து இருந்தால் அவரது உடல் மெலிந்து,

அழகழிந்து விடும் என்பது வாழ்வியல் மற்றும் உளவியல் உண்மை. இதனையே,

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள் *(1234)*

என்ற குறள் கூறுகிறது எனலாம்.

ஒருவர் தன் ஆழ்மனத்தில் எண்ணிக் கொண்டேயிருக்கும் ஒரு உணர்வே கனவாகத் தோன்றும் என்பது உரு உளவியல் கருத்து. ஆழ்மன உணர்வுகள் உறக்கத்தின்போது கனவுகளின் மூலமாக வெளிப்படுகின்றன. இதனையே தலைவி கூறுவதாக வள்ளுவர் கனவு நிலை உரைத்தல் என்னும் அதிகாரத்தில் நனவில் வந்து அன்பு செய்யாத காதலரை தேடி அழைத்துக் கொண்டு வருவதற்காக கனவில் அவரைப் பற்றிய நிகழ்ச்சிகள் உண்டாவதாகக் கூறும் தலைவி,

நனவுஎன ஒன்றுஇல்லை ஆயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன் *(1216)*

என்கிறாள்.

தலைவனுக்கு தலைவியின் மேல் வைத்திருக்கும் அன்பின் காரணமாக தான் பார்க்கும் பொருள்களில் எல்லாம் தலைவியே தெரிவதாக ஆசிரியர் கூறுகிறார். மனத்துள் கொண்ட எண்ணமே புறக்காட்சியாய் விரிவது என்பது உளவியல் நடைமுறை. இதைக் கூறுவதாக நலம் புனைந்துரைத்தல் என்னும் அதிகாரம் அமைந்துள்ளது. தலைவன் அனிச்சப்பூ, மூங்கில், முத்து, வேள், குவளை, மலர்கள், நிலவு, அன்னப்பறவைகள் ஆகியவற்றைக் காணும்போது தலைவியுடன் தொடர்புபடுத்தியே காண்கிறான்.

முடிவுரை

சான்றுக்கு இவை சில. காமத்துப்பால் முழுவதுமே ஓர் உளவியல் கருத்துப் பூங்கா. ஒவ்வோர் அதிகாரமும் அதனுள் உள்ள குறள்களும் இளமை துள்ளும் ஆண் பெண் மனநிலை களைத் துல்லியமாகக் காட்டும் கண்ணாடிப் பெட்டகம் என்பதில் ஐயமில்லை. உடம்பு, உள்ளம், உயிர் என்ற அன்புப் படிநிலை வளர்ச்சியை உணர இளவயதினர்க்கு வழிகாட்டும் காமத்துப்பாலை அவர்கள் ஆழ்ந்து உணர்ந்து கற்றால் வாழ்வு செம்மையுறும் என்பதில் ஐயமில்லை.

உளவியல் பார்வையில் கண்ணகி கனவு

கவிதா சார்லெட்

எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை - 8

கனவு - விளக்கம்

ஆன்மா, பிறர் தூண்டுதலின்றிச் செயல்படுவதே கனவு, நிறை வேறாத விழைவுகளும், எண்ணங்களும் கனவுகளாக வெளிப் படுகின்றன.

சிறு வயதிலிருந்தே பார்த்து, கேட்டு, தெரிந்து கொண்டவை மூளையில் மொத்தமாக அங்கங்கே பதிவு செய்யப்பட்டு விடுகின்றன. வளர்ந்து வயதாகும்போது, மூளை அவற்றைக் கனவுகள் மூலமாக வெளியிடுகிறது. தேவையானவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு, புதிதாகக் கற்றுக் கொண்டவற்றுடன் இணைத்து, வேண்டாத செய்திகளை அழித்து விடுகிறது. இதுதான் கனவுகளின் நோக்கம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

யங் (Jung) என்ற ஆராய்ச்சியாளர் இன்னும் ஒருபடி மேலே போகிறார். 'கனவுகள்', உலக துன்பங்களிலிருந்து தப்பிக்க உதவும் கருவி மட்டும் அல்ல; அது வழிகாட்டியாகவும் இருக்கும். மனிதன் தூக்கத்தில் இருக்கும்போது, அவனுடைய அன்றைய நடவடிக்கைகளை நல்லதா, கெட்டதா என விவாதம் செய்து, தீர்மானிக்கக் கனவுகள்தான் வழிகாட்டுகின்றன. கனவில் தரப்படுகிற அறிவுரைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் மனிதன் முழுமை பெறுவான்'' என்கிறார் இவர்.

கனவுகள் நம் வாழ்வோடு தொடர்புடையன. மனிதனது உணர்வுகளை விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் என மூன்று நிலைகளாகப் பிரிப்பர். விழிப்பில் உடலும், உள்ளமும் செயல் படும். ஆழ்ந்த உறக்கத்தில் இரண்டும் செயல்படுவதில்லை. அதனால்தான் ''உறங்குவது போலும் சாக்காடு'' என்று வள்ளுவர் கூறினார் போலும்.

கனவு தோன்றக் காரணங்கள்

ஆழ்ந்த உறக்கம் இல்லாதபோதே கனவுகள் தோன்றுகின்றன. கனவில் உடல் துயிலவும், உள்ள விழிப்பும் அமையும். உடம்பின் இயக்கம் இன்மையும், உயிர் இயக்கம் உள்ளமையும் கனவில் அமையும் என மணிமேகலை உரைக்கிறது.

''உடம்பீண்டு ஒழிய உயிர்பல காவதம்
கடந்து சேண்சேறல் கனவிலும் காண்குவை''

மூதாதையர் கனவு இறைத்தன்மையுடையதென்று நம்பினர். ஹோமர், கடவுளின் தூதே கனவு என்று கூறினார். சாக்ரடீஸ் போன்றோர், கனவுகளை, இறை நமக்குத் தருகின்ற புத்திமதி யென்றும், அதற்கு நாம் பணிதல் வேண்டும் என்றும் நினைத்தனர். பெரியபுராணத்தில் பல கனவுகள் இவ்வாறு அமைந்துள்ளன.

கனவு - கோட்பாடுகள்

உள்மனம், புறமனதிற்கு எச்சரிக்கை செய்வதற்காகப் பயன்படு கின்ற ஒன்றே கனவு.

- நிறைவேறாத ஆசைகள் கனவாக மாற்றப்படுகின்றன.
- நனவில் நடைபெறாத நிகழ்ச்சிகளும் கனவில் தோன்றலாம்.
- கனவுகள் வியப்பிற்குரியனவாக அமைகின்றன.
- கனவுகள் நிலையாமைப் பண்புடையவை.
- கனவில் பொய்மையும், மருட்சியும் காணப்படுகின்றன.
- கனவுகள் எதிர்பாராமல் தோன்றுவன.
- கனவுகளில் புறமனம், ஆழ்மனம் முதலியவற்றின் எண்ணங்கள் மட்டுமல்லாது, நினைவுள்ளத்தில் (Conscious) உள்ள எண்ணங் களும் அமையலாம்.
- கனவுகள் உடலின் ஏற்படும் ஒரு மாறுதல் அல்ல. அவை அர்த்தமற்றவையும் அல்ல, அவை மனதில் ஏற்படும் ஒரு முழுமையான அர்த்தம் உள்ள மன இயக்கமாகும்.
- கனவுகளில் எண்ணங்கள் காட்சி மாயையாக மாற்றப்படுகின்றன.
- கனவுகள் சில நேரங்களில் சிறு சிறு பகுதிகளாக கோர்வை யின்றி அமையும்.
- கனவுகள் வரும் சில பொருள்கள், உண்மை வாழ்க்கையில் மற்றொரு பொருளைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கும்.
- நனவில் கவனிக்கத் தவறியதும், முக்கியத்துவம் கொடுக்கப் படாததும் கனவில் மேலெழுந்து நிற்கின்றன.

- கனவுகள் துயில் நிலையின் பாதுகாவலர்கள், இருப்பினும் கனவுகளில் உணர்வுகள் அளவுக்கு மீறி இருந்தால் துயில் கலையும்.
- கனவுகள் சில நேரங்களில் சுவை பயப்பதும் உண்டு.

கனவு - வகைகள்

1919-ஆம் ஆண்டு சிக்மண்ட் ப்ராய்டு (Sigmund Freud) என்ற உளவியல் அறிஞர், The Interpretation of Dreams என்ற நூலில், பலவகைக் கனவுகளைத் தொகுத்து அளித்தார்.

தண்டனைக் கனவுகள், ஆசைக்குப் புறம்பான கனவுகள், பதட்டக் கனவுகள், அதிர்ச்சியின் பின் ஏற்படும் கனவுகள், விந்தைக் கனவுகள், முன் உணர்த்தும் கனவுகள், நற்கனவுகள் போன்றவை அவற்றுள் சில. இதில் சிலம்பு காப்பியத்தின் கண்ணகி கனவு, பின் நிகழ்வை முன் உணர்த்தும் கனவாக அமைகிறது.

கண்ணகி கனவு

கனாத்திறம் உரைத்த காதையில் கண்ணகி, தன் தோழியாகிய தேவந்தியிடம் தன் கனவினைப் பற்றிக் கூறுகிறாள். தேவந்தி, கண்ணகியின் நெருங்கிய தோழியாக இருந்தாள். கோவலன் பிரிவால் துன்புற்ற கண்ணகியை நினைந்து வருந்த, அத்துன்பம் தீர்தற் பொருட்டுச் சாத்தன் கோயிலை அடைந்து, அருகம் புல்லையும் சிறு பூளைப் பூவையும் நெல்லொடு விரவித் தூவி வழிபட்டாள். தெய்வமே, என் தோழியின் துயர் துடைத்து அருள்வாயாக என வேண்டினாள். பின்னர்க் கண்ணகியிடம் வந்து, ''நீ நின்னைப் பிரிந்த கணவனோடு கூடி வாழ்வு பெறுவாயாக!'' என்று வாழ்த்தினாள்.

அதைக் கேட்ட கண்ணகி, தேவந்தியை நோக்கி, ''செறிந்த வளையலை உடையோய்! நீ வாழ்த்தியாங்கு நான் என் கணவனைப் பெறுவேன். ஆயினும் நேற்று இரவு யான் கண்ட ஒரு கனவினால், என்னுடைய நெஞ்சம் ஐயுறுகின்றது. அக்கனவு யாதெனின், என் கணவர் என்னை விரும்பி வந்து அன்புடன் என் கையைப் பற்றினார். பின்னர் நாங்கள் இருவரும் ஒரு பெரிய நகரத்தில் புகுந்தோம். அங்கே ஊரார் எங்களுக்குப் பொருந்தாததொரு படிற்றுரையை இருதேள் இடுவது போல் இட்டனர். அப்படிறு காரணமாகக் கோவலனுக்கு ஒரு தீங்குற்றது என்று சிலர் கூறக்கேட்டு, யான் அந்நகரத்து அரசன் முன்னர்ச் சென்று வழக்குரைத்தேன். அதனால் அவ்வரசனுக்கும், அவ்வூருக்கும் உற்ற தீங்கும் ஒன்று உண்டு. அவ்வூருக்கு உற்ற தீங்கு யான் செய்த கொடிய குற்றத்தின் பயன்போல் தோன்றுகின்றது. அதனால்

அதனை யான் கூற மாட்டேன். இவ்வாறு கொடிய குற்றம் எய்திய என்னோடு என் கணவர் பெற்ற நன்மைகளின் இயல்பை நீ கேட்பாயானால், அது உனக்கு நகைப்பையே உண்டாக்கும்'' என்று கூறினாள்.

காப்பியத்தில் கண்ணகி முதலாவதாகப் பேசுவதே கனவாக அமைந்துள்ளது. இது பின்னிகழ்வை முன்னுணர்த்தும் விதமாக அமைந்துள்ளது. *(The simplest kind of dream is that which gives more or less a literal forecast of the coming events)*

பாண்டியனிடம் கண்ணகி, 'யாமுடைச்சிலம்பு மணியுடை அரியே' என வழக்குரைக்க அடிப்படைக் காரணம் அவள் கண்ட கனவே என்பர். மண்மகள் அறியாச் சீறடியை உடைய கண்ணகி, காவலன் முன் கட்டுரைக்கச் செயல்படத் தூண்டியது இக்கனவே என்று சொல்லலாம். அவள் வழக்குரைக்கச் செல்லுமுன், ''இடறுற்ற தீக்கனா நின்றாள் நினைந்தாள்'' எனச் சுட்டிக் செல்கிறார் ஆசிரியர்.

கண்ணகி கண்ட கனவானது கரிய நெடிய கண்களை உடைய மாதவி வசந்தமாலைக்கு, காலை காண்குவம் என்று கூறிய சொல்லைப் பயனிலாச் சொல்லாகச் செய்துவிடக் கோவலனுடைய பழைய வினை அவன் நெஞ்சை ஒருப்படுத்துதலானே, ஞாயிறு இருளைப் போக்குவதற்கு முன்பே, அவன் அவ்வினையினது ஏவலை மேற்கொண்டான்.

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவி தன்சொல்லை வறிதாக்க - மூதை
வினை கடைக்கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சியா முன்.

பின்வரும் நிகழ்ச்சிகளைக் காட்டவும், விதியின் வலிமையை உணர்த்தவும் அடிகள் இக்கனவைத் தோற்றுவித்துள்ளார்.

தொகுப்புரை

- நனவு நிலை, அறிவு நிலைக்குக் கட்டுப்பட்டது. கனவு, அதனையும் மீறி நிகழ்வது.
- அலுத்துப்போன அன்றாட வாழ்க்கையிலிருந்து, நம்மை விடுவிக்க இன்பக் கனவுகள் பயன்படுகின்றன.
- கனவினை நனவின் மாற்றுப் பொருளாகவும் கொள்ளலாம்.
- துயிலில் ஏற்படும் தன்னுணர்வே கனவு
- கனவுகள் பித்தவாத நோய்கள் காரணமாகவும் தோன்றலாம் என ஆயுள்வேத நூல்கள் கூறுகின்றன.

- கனவுகளுக்குப் பலவகையான குணங்களும், செயல்களும் உள்ளதாகக் கூறப்படுகிறது.
- தன்மைகளுக்கேற்பக் கனவுகள் பலவகைகளாகப் பிரிக்கப் படுகின்றன.
- கண்ணகியின் கனவு பின்வரும் நிகழ்ச்சிகளை முன்னுணர்த்து கிறது.
- செயல்படத் தூண்டுகிறது.
- விதியின் வலிமையை உணர்த்துகிறது.
- ப்ராய்டு கனவுகளை, மற்றொரு வகையான நினைவுபடுத்துதல் என்கிறார். இந்த நினைவுபடுத்தல் தூக்கத்தில் ஏற்படுவது; கனவு விதிகளுக்கு உட்பட்ட நினைவுபடுத்தல் என்று கூறுகிறார்.

துணைநூல்கள்

1. சுப்பிரமணியன், ச. வே., இலக்கியக் கனவுகள்.
2. Sigmund Freud, "The Interpretation of Dreams'.

மனநலக் கோட்பாட்டில் வள்ளலார், வேதாத்திரி

இரா. காந்தாமணி

ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயக் கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர் - 641 020

இந்த உலகில் பிறந்துள்ள உயிர்கள் அனைத்திலும் மனிதன் உயர்ந்த பிறப்பாவான். சிந்தனை அறிவின் சிறப்பே மனிதன். இன்ப துன்பங்கட்கு வித்தாக அமைந்திருப்பது மனித உள்ளமாகும். மனத்தை உடைய மனிதன் இன்பமாக வாழ இந்து மதத்தில் பகவத்கீதை, இராமாயணம் என்ற இதிகாச நூல்கள் வாழும் நெறிகளைக் கூறுகின்றன. மற்ற நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் தான் ஆன்மீகம் அன்று முதல் இன்று வரை தழைத்தோங்கி வருகின்றது எனப் பாராட்டப்பட்ட நாட்டில் நாம் வாழ்கின்றோம். உடலையும் உள்ளத்தையும் கொண்டு அறநெறி வாழ்க்கை வாழப் பகவான் ரமண மகரிஷி, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், தயானந்த சரஸ்வதி, காந்தியடிகள் போன்ற பிரம்ம ஞானிகள் பல வழிகளைச் சொல்லி இருக்கின்றனர். மனத்தை நலமுடன் வைக்கும் மனிதனால் தான் சிறந்து வாழ முடியும் என்பதற்கு 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலாரும் 20, 21-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்துவரும் வேதாத்திரி மகரிஷியும் கூறும் வழிமுறைகளைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

மனம்

புலன்களுக்கு எட்டாத மனத்தை அறிவெனச் சொல்லலாம். உடல், உயிரை இணைக்கும் ஜீவகாந்த அலையான மனத்திற்குப் பல பெயர்கள் உள்ளன. அவை :

''சித்தம், அகங்காரம், உன்னம், உள்ளம், அகம், இதயம், தெளிவு, புந்தி, மனக்களஞ்சியம், மனக்கோட்டம்''

(மனோதத்துவ ஆராய்ச்சி, ப.46)

வள்ளலார்,

''அறிவே வடிவாய் அறிவே பொறியாய் அறிவே மனமாய்
அறிவே அழகாய் அறிவே உருவாய் அறிவே உணர்வாய்
அறிவே அறிவாய் அறிவே அனுபவமாய் விளங்கும்''

(திருஅருட்பா 6-ஆம் திருமுறை, ப.45)

என்று மனதை அறிவு என்றும், அனுபவம் என்றும் கூறுவதை மகரிஷி,

''கருமூலம் எண்ணிறந்த பிறப்பால் வந்த
கருத்தாற்றல் அடிப்படையாய் அமையப் பெற்றது
உருவெடுத்தபின் உடலால் அறிவால் துய்த்த
உணர்ச்சி, பழக்கம், ஒழுக்கம், விளக்கம் மற்றும்
வரும் தேவை, இருப்பு, சூழ்நிலை, தொழில்செய்
வாய்ப்பு, உடல்நலம், அறிவின் வளர்ச்சி கூடி
ஒருவருக்கு அறிவியக்கம் அவ்வப்போது
உருவாகும் தொகுப்புச் சொல் மனமாம் காணீர்''
(ஞானக்களஞ்சியம், பா. 1206)

என்று மனத்தை உணர்ச்சி, பழக்கம், ஒழுக்கம் என்ற அனைத்துக் குணங்களும் இணைந்த ஒன்று என்று கூறுகின்றார் வள்ளலார். அனுபவம் எனக் கூறியதை மகரிஷி பழக்கம், சூழ்நிலை, அறிவின் வளர்ச்சி என்கின்றார். இரு ஞானிகளும் மனதை அறிவு, உணர்வு என்பதில் ஒன்றுபடுகின்றனர்.

வள்ளலார் மனத்தைப் பற்றி 13 பதிகங்களில் பாடியுள்ளார். (இரண்டாம் திருமுறை (99 பதிகம்), (17, 20, 21, 22, 25, 26, 29, 30, 37, 42, 50, 62, 65 பதிக எண்களாகும்). மகரிஷி ஞானக்களஞ்சியத்தில் (1795) 85 பாடல்களில் மனம் என்ற சொல்லைக் கையாளுகின்றது நோக்கற்பாலது.

மனவளம்

காடு அழித்து, மரம்வெட்டி, கல்லெடுத்து, நல்ல மண்ணிட்டு, உரம்போட்டு நிலத்தைக் கழனியாக்குகிறோம். உடலை உடற் பயிற்சியால், உணவால், உழைப்பால் வளமாக்குகின்றோம். மனத்தை உயர்த்தும் அளவிற்கு மனிதன் வாழ்க்கையும் உயரும்.

''மனநலத்தின் ஆகும் மறுமை மற்றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து'' (திருக்குறள் - 459)

எனத் திருவள்ளுவர் மனத்தின் மூலமாகத்தான் இயற்கை அறிவு, செயலில் தூய்மை, புகழ் மற்றும் மறுமை இன்பத்தையும் பெறலாம் என்கிறார்.

உள்ளத்தில் கறுத்தவர்கள்; கறைபடிந்தவர்கள்; குற்றங்கள் நிறைந்தவர்கள், வெளியில் மட்டும் வெள்ளை சள்ளையாகக் காட்சி அளிக்கும் வேடதாரிகள். இத்தகைய போலிகள் அனைவரையும் இவ்வுலகத்தில் திருத்திச் சன்மார்க்க சங்கத்தில் சேர்ப்பிப்பேன். மறு உலகம், அதாவது பரலோகத்தில் உள்ளதென்று உரைக்கப்படும்

நன்மைகளை எல்லாம் அவர்கள் இவ்வுலகிலேயே பெற்று மகிழ்வார்கள். இதற்காகவே தாம் இறைவனால் அனுப்பப்பட்டவர் என்று,

''இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்
திடுதற்கு என்றே, எனை, இந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன்; அருளைப் பெற்றேனே!''

(திருஅருட்பா, பா. 5485-6-128)

என்று தமது பிறப்பின் காரணத்தை வள்ளலார் விளக்குகிறார்.

''மவுனத்தில் எனை அமர்த்தி மனத்தை உள்ளுள் ஈர்த்து
மாபெரிய பேரண்ட ரகசியங்கள் தம்மை
மவுனமாக உணர்த்தி விட்டாய் 'மா' அறிவாய் நின்று
மற்றும் நான் எனது வாழ்வில் கடமை தேர்ந்து ஆற்ற
மவுனத்தில் எனக்களித்த அறிவுரைபோல் சிறிதும்
மலைக்காது பிறழாது உலகத்தொண்டு செய்வேன்;
மவுனமதாய் அறிவினது பூரணமாய் மாந்தர்
மனத்துக்கு உட்பொருளாய் விளங்கிடும் பேரறிவே''

(ஞானக்களஞ்சியம், பா. 1574)

என்று மகரிஷி தாம் செய்யவேண்டிய கடமையை இறைவன் தமக்கு உணர்த்தி விட்டமையால் முறை பிறழாது உலகத்தோர்க்குத் தொண்டாற்றி வருவதாகக் கூறுகின்றார்.

குழப்ப மனம்

மனத்தினுள் ஏற்படும் முரண்பாடுகள் குழப்பத்தை உண்டாக்கும். சாதாரண மனிதர் போல் வள்ளலாரும் மன அல்லல் பட்டார்.

''அல்லல் என்னைவிட்டு அகன்றிட'' (திருஅருட்பா, பா. 1083)

வேண்டும் என்கின்றார். மகரிஷியும், நீந்தத் தெரியாதவன் கிணற்றில் தவறி விழுந்துவிட்டால் மிதக்கும் கட்டையினால் கரையேறலாம்.

''தன்னை அறிய ஆர்வமுள்ளோர் மனம் குழம்பி
தத்தளிக்கும் நிலை தெளிய வழி தவம்''

(திருஅருட்பா, பா. 1535)

இரு ஞானிகளும் இன்பமும் துன்பமும் மனத்தில்தான் இருக்கின்றன என்பதில் ஒன்றுபடுகின்றனர்.

மனம் இருளில் மூழ்கும் போதுதான் மயக்கம் உண்டாகும். தம்மை வாட்டிய மாயைகளைப் பற்றி வள்ளலார் ஒன்பது பாடல்களில் விவரிக்கின்றார்.

''கானலிடை நீரும்ஒரு கட்டையில்''

(திருஅருட்பா, பா. 14-1-1)

கற்பனையால் செய்த கடவுள் சிலை, காலத்திற்கேற்ப மாற்றம் செய்துகொண்ட மதச் சடங்குகளில் மனிதன் தன் ஆற்றலை வீணாக்கி மயங்குவதாக மகரிஷி,

''சடங்குகளும் கற்பனையால் சமைத்த தெய்வம் கொண்டு''

(ஞானக்களஞ்சியம், பா. 1725)

என்பது வள்ளலாரின் கூற்றினை ஏற்றுக்கொள்வதாகப் புலனாகின்றது. சிந்தித்து, செயல்படும்போது வாழ்க்கையும் வளமாகும்.

குறைபாடும், மனத்தைச் சாடுதலும்

மகான்கள், அறிஞர்கள் என்றும் பிறர் குறைகளையும் தமது குறைகளாகக் கொள்ளும் பாங்கினர்.

''கற்றமே லவரொடும் கூடி நில்லேன்''

(திருஅருட்பா, பா. 24-1)

''மனமான ஒரு சிறுவன் மதியான குருவையும் மதித்திடான்''

(திருஅருட்பா, பா. 22-1-1)

வள்ளலாரும் பிறர் துன்பம் கண்டு கதறித் துடிக்கின்றார். மகரிஷியும் மக்களின் மனம் நொந்து போவதைக் கூறுகின்றார்.

''பொருள், புகழ், செல்வாக்கு, புலன் இன்பம் நான்கிலே
புகுந்து அழுந்தி மனிதமனம் புண்ணாய் வருந்தும்''

(ஞானக்களஞ்சியம், பா. 1642)

இரு ஞானிகளின் கருத்துகளைக் கற்கும்தோறும் உள்ளம் நமக்கும் நொந்து போகின்றது. கருணை உள்ளம் தான் கரைந்து போகும். பிறத் துன்பத்தைத் தமது துன்பமாக ஏற்கும் மனநிலை அனைவரிடமும் இருக்காது.

மனதிற்குப் பயிற்சியும், மன உயர்வும்

பொன்னைச் சுடச்சுட மிளிரும், மனமும் உணர்ந்து, வேதனைப்பட்டுத் திருந்தும்;

''நல்லார்க்கு எல்லாம் நல்லவன் நீ'' (திருஅருட்பா, பா. 571)

என்று இறைவனுக்கு நன்றி சொல்கிறார் வள்ளலார்.

மகரிஷி உடலுக்குப் பயிற்சி, உள்ளத்திற்குப் பயிற்சி, மனம் தூய்மை பெற்றுத் தவத்தில் மனம் ஒன்றினால் மனம் உயரும் என்கிறார்.

''மனம் அலையா விழிப்பில் நிற்க''

(ஞானக்களஞ்சியம், பா. 1558)

''மனநிலையை மெய்ஞ்ஞானத் தவம் உயர்த்தட்டும்''

(ஞானக்களஞ்சியம், பா. 1554)

மனநிறைவு

மனம் அமைதி கொண்டு தைரியமாக கஷ்டங்களை எதிர்கொண்டு மனவாட்டத்திற்கு இடம் கொடாமல் இருத்தலாகும். மனம் பேராற்றல் மிகுந்த கருவியாகும். இன்பம், துன்பம் இரண்டையும் ஒன்று போல் எண்ணவேண்டும்.

''பொன்னார் புயனார் புகழும் புகழார்''

(திருஅருட்பா, பா. 520-1-49)

''எத்திக்கும் என் உளம் தித்திக்கும் இன்பமே''

(மேலது, பா. 30-1-1)

இதயக்கமலத்தில் இறைவன் இருப்பதால் எமக்கு இனி இறப்பும் இல்லை, பிறப்பும் இல்லை எனக் கம்பீரமாகப் பாடுகின்றார் வள்ளலார்.

வாழ்வின் குறிக்கோளை அடைய இன்ப துன்பம்; அனுபவம்-கற்பனை இவற்றை புரிந்து கொள்ளல் வேண்டும் என்கிறார் மகரிஷி.

''அறிவின் முழுமை - மனத்தின் நிறைவு''

(ஞானக்களஞ்சியம், பா. 1779)

மனநிறைவோடு, அமைதியாக வாழப் பழகிக் கொள்ளவேண்டும்.

நிறைவுரை

மனநலம் என்பது பெருமைக்குரியது. மன அலைச்சூழல் வேகத்தைக் குறைத்து, பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்றவாறு மனதில் அமைதி காத்து அறநெறியில் வாழும்போது வாழுங் காலமும் நீட்டிக்கும். வள்ளலார், வேதாத்திரி மகரிஷி இவர் களின் கோட்பாடுகளைப் பின்பற்றி வாழ்ந்தால் வளமாக வாழலாம் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. இவ்விரு மகான்களின் பாடல்கள் படித்து இன்பம் பெறத்தக்கன. மனநலனுக்கு, சிந்திக்கும் உணர்வைத் தூண்டும் வகையில் ஏற்புடையதாக அமையும். வள்ளலார் வழியில் மகரிஷி வாழ்ந்து வருவது போல் வருங்காலத்தில் மகரிஷியின் வழியில் இளைய சமுதாயம் வாழும் என்பதில் ஐயமில்லை.

உளவியல் நோக்கில் 'மாய நதிகள்'

மா. கிருபாகரன்

பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி
கோவை - 14

ஒரு மனிதனது வாழ்விற்கும் தாழ்விற்கும் அவனது செயல்கள் காரணமாகின்றன. அச்செயல்களுக்கு அடிப்படையாக அமைவது அவனது மனமாகும். இதனால்தான் 'மனம் போல் வாழ்வு' என்று குறிப்பிடுகின்றனர் போலும். தனி மனிதனின் மனப்போக்கிற்கும் போராட்டத்திற்கும் அதன் வழி அவனது செயல்பாட்டிற்கும் அவனைச் சுற்றியுள்ள உறவுகளும் சமூகமும் காரணமாகின்றன. இந்நிலையில் தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளின் பாதிப்பு ஒருவனது நடத்தைக்குக் காரணமாகிறது. ஒரு தனிமனிதனின் செயல்பாடுகள் இத்தாக்கங்களால் இயல்பிலிருந்து மாறுபடும்போது அவன் மனநோய்க்கு ஆளாகிறான். புதினங்கள் வாழ்க்கையிலிருந்து பிறப்பவை; வாழ்வைப் பிரதிபலிப்பன. எனவே இது போன்ற மனப்பாதிப்பிற்கு ஆட்பட்டவர்களும் புதினங்களில் பாத்திரங்களாக அமைவர். அவர்களைப் புதினங்கள் வழி இனங்காணும் போது குறைகளை மட்டும் காணாமல் அதற்கான காரணங்களையும் அவற்றின் வழி காண இயலும். அப்போது நோய்க்கு ஆட்பட்ட மனிதன் மீது கோபப்படுவதற்குப் பதிலாகப் பொறுமையோடு அவனை அரவணைக்க ஒரு சிலரேனும் முயல்வர். இதற்கு நல்ல புதினம் (இலக்கியம்) துணை நிற்கும். இது போன்ற மனநிலையின் தொடக்கத்திலிருக்கும் மனிதனும் தன்னை உணர்ந்து மீள்வதற்கும் இத்தகு புதினம் உதவக்கூடும். இத்தகு பயன்பாட்டு நோக்கிற்குப் புதினத்தை உளவியல் நோக்கில் ஆய்வது துணைநிற்கும். இக்கண்ணோட்டத்தில் ஸ்டெல்லா புரூசின் 'மாயநதிகள்' புதினம் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது. ஆய்வின் செம்மை, வரையறை கருதி அப்புதினத்தின் முக்கியப் பாத்திரமான 'உலகநாதன்' படைப்பு மட்டும் இங்கு ஆய்வுக்குரியதாகிறது.

இயல்பிற்கு மாறுபட்ட மனிதர்கள்

இயற்கைக்கு மாறான மனிதர்கள் மனநலம் பாதிப்புக் குள்ளாவார்கள் இத்தகையோர்,

''மிகக் குறைந்த அளவு அறிவோடு, உணர்ச்சி நிறைந்து, பாதுகாப்பாற்ற தன்மையுடன் குணநலக் குறைபாடுடையவர்கள். அத்துடன் இழிவான கீழ்த்தரமான வாழ்க்கை வாழ்பவர்கள்.''

என ஜே.டி. பேட்ஜ் எனும் அறிஞர் குறிப்பிடுகிறார் (*J.D. Page, Abnormal Psychology, P.13*).

''தனிநபர் அல்லது குழுவுக்குப் பாதகம் ஏற்படுத்தும் தவறான நடத்தை உள்ளவர்'' இயல்பிறழ் நடத்தையுடையவர் என 'கோல்மேன்' என்பார் கூறுகிறார் (*Colemen, C., Abnormal Psychology, P.10*)

இவ்விளக்கங்கள் வழிச் சகிப்புத் தன்மையற்று, பிறரைப் பற்றிக் கவலையின்றிப் பிறரைத் துன்புறுத்தி ஒழுங்கற்று வாழ்பவன் அதாவது இயல்புக்கு மாறுபட்டு மனநோய்க்கு உள்ளானவன் என்பது பெறப்படுகிறது.

'மாயநதிகள்' கதைச் சுருக்கமும் நாடகத் தன்மை வாய்ந்த ஆளுமைக் கோளாறும்

'செந்துறை' என்ற கிராமத்தில் வசிக்கும் ஐம்பத்து ஐந்து வயது முதியவர் உலகநாதன். மனைவியை இழந்தவர். தம் வீட்டிற்கு அருகில் வசிக்கும் இளம் விதவை 'சிவமதி'யுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறார். சிவமதியும் இவரை விரும்பு கிறாள். ஆனால் பின்னர்த் தன் சித்தியின் அறிவுரைக்கேற்ப இருபத்தேழு வயதான 'பரமேஸ்வரி' என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறார். அவர் தம் இளம் மனைவியுடன் குற்றாலம் செல்கிறார். அங்கு இளைஞர்கள் 'பரமேஸ்வரியின்' அழகில் மயங்கி அவளைப் பின் தொடர்வதோடு உலகநாதனைக் கிண்டலும் கேலியும் செய்கின்றனர். இந்நிகழ்வு அவருக்குள்ளே பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும் பரமேஸ்வரியின் இளமையும் அழகும் உலகநாதனுக்குத் தாழ்வு மனப்பான்மையையும் ஏற்படுத்து கின்றன. அத்துடன் இளைஞர்கள் மீது ஒரு வெறுப்புக்கலந்த அச்சத்தையும் அவருக்குத் தோற்றுவிக்க இந்நிகழ்வு காரணமாகிறது. அது அவருக்குள்ளே 'சந்தேகம்' என்ற மனப்பான்மைக்கு வித்திட்டு நாளடைவில் ஒரு நோயாளியாகவே அவர் மாறிவிட்டாரோ என்று அஞ்சுமளவுக்கு அவரது நடத்தை வெளிப்படுகிறது. தன் பக்கத்து வீட்டில் வசிக்கும் இளைஞன் 'அச்சுதன்' என்பவனையும் தம் மனைவியையும் தொடர்புபடுத்திச் சந்தேகத்தை வளர்த்துக் கொள்கிறார். அவனை அச்சுறுத்துவதாகக் கருதி அவன் 'மோட்டார் சைக்கிளை' தாமே யாரும் அறியாது எரித்துவிட்டு ஒன்றுமறியாதவர் போல் நாடகமாடுகிறார். பிறகு இது ஊருக்குத் தெரியுமோ? என்று மனத்தளவில் அச்சம் கொள்கிறார். அவரது செயல்பாடுகளும்

இதற்கேற்ப இயல்புக்கு மாறுபடுகின்றன. அவர் மெல்ல மெல்ல ஒரு மனநோயாளியாகத் தென்படுகிறார். இத்தகு செயல் நிறைந்த மனிதர்களை 'நாடகத் தன்மையுள்ள ஆளுமைக் கோளாறு' உடையவர்கள் என மனவியலார் குறிப்பர்.

ஆளுமை என்பது ஒருவரது பண்பு சார்ந்து பரவலாகக் குறிக்கப்படுவதாகும். ஒருவரது ஆளுமை எப்போது தனக்கும் பிறருக்கும் சிக்கல்களையும், பிரச்சினைகளையும் ஏற்படுத்துகிறதோ அப்போதுதான் ஆளுமைக்கோளாறுகள் தோன்றுகின்றன. இதனை,

1. வித்தியாசமாகத் தென்படும் ஆளுமைக் கோளாறுகள்
2. விபரீதமாகத் தென்படும் ஆளுமைக் கோளாறுகள்
3. விநோதமாகவும் அச்சம் தரக்கூடியதாகவும் அமைந்த ஆளுமைக் கோளாறுகள் என அமெரிக்க மனவியற் கழகம் *(American Psychiatric Association, DSM - IV)* வகைப் படுத்தும். இவற்றுள் விபரீதமாகத் தென்படும் ஆளுமைக் கோளாறுகள் என்பதில் ஒன்றுதான், ''நாடகத் தன்மை யுள்ள ஆளுமைக்கோளாறு' *(Dramatic emotional and erratic personality Disorder)* என்பதாகும்.

இத்தன்மை சார்ந்தவர் களின் சொல்லிலும் செயலிலும் மிகையான நடிப்பும், மற்றவர் களை ஈர்த்துத் தன் மதிப்பை உயர்த்த வேண்டும் என்ற போக்கும் காணப்படும். இதற்கேற்ப அவர்கள் தம் பேச்சு செயல் யாவற்றிலும் மாறுபடுவர்.

'உலகநாதனின்' நாடகத் தன்மையும் ஆளுமைக் கோளாறும்

உலகநாதனின் பக்கத்து வீட்டிற்குக் குடிவருகிறான் 'அச்சுதன்' என்ற இளைஞன். அச்சுதனின் அழகு, இளமை, உடல் அமைப்பு ஆகியன உலகநாதனின் மனத்தில் சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றன. அது அவரது மனத்தில் ஆழமாக வேரூன்றிச் சஞ்சலத்தை ஏற்படுத்து கிறது. அதுவே, பின்னர் அவரது சந்தேக மனப்பான்மைக்கும் அதன் விளைவாகக் கோபத்திற்கும் காரணமாகிறது. அது அவரது செயல் களிலும் பிரதிபலிக்கிறது.

உலகநாதனின் மனைவி சமைத்துவிட்டுச் சாப்பிட அழைக்கிறாள். அதற்கு அவர்,

''பெரிய விருந்து சாப்பாடு சமைச்சி வச்சிருக்கே கூப்பிட வந்துட்டே போ.... .....'' என்றும்,

''இவ்வளவு எண்ணெ விடக்கூடாதுன்னு எத்தனையோ வாட்டி சொல்லியாச்சு... ....'' எனவும்,

''வாய்க்கு ருசியா நீ உசிலி செய்யத் தெரிஞ்சிக்கிறதுக்கு முந்தி நான் போயே சேந்திருவேன் போல இருக்கு... ....''

(மாயநதிகள், ப. 155-156)

என்றும் வெறுப்பை உமிழ்கிறார். இதனால் சந்தேகத்தின் காரணமாக உலகநாதன் உள்ளத்தில் ஏற்பட்ட வெறுப்பு கோபமாகி வெளிப்படுவது தெரிய வருகிறது. பாலியல் தொடர்பான சிக்கல் அதாவது வயது முதிர்வுக்குப் பிறகு இளம் பெண்ணைத் திருமணம் செய்தது தவறோ என்ற குற்ற உணர்வும் இதற்கு அடிப்படையாகிறது. இதனைத் தடுமாற்றம் நிறைந்த ஆளுமைக் கோளாறு என்பர். தம் உள்ளத்தைக் கரந்து வெளிப்படுத்துவதால் நாடகத் தன்மை ஆளுமைக் கோளாறாகவும் தென்படுகிறது. உலகநாதன் உள்ளத்தில் தொடர்ந்து சந்தேக உணர்வு ஆட்கொண்டு அவர் தவறாகச் செயல்படும் அளவிற்கு மனநிலை மாற்றமுற்று ஒரு நோயாளி போல நடந்து கொள்வதை 'அச்சுதனின்' மோட்டார் சைக்கிளை எரிப்பதன் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம். அப்படி மோட்டார் சைக்கிளை எரித்த பின் ஊர்ப் பஞ்சாயத்து முன் ஒன்றுமறியாதவர் போல நாடகமாடுகிறார்.

''பேசவே தடுமாறுது எனக்கு! ஏன்னா என் வீட்டுக்கு வந்திருக்கிற பையனுக்கு இப்படி ஓர் அநியாயம் நடந்திருக்கு. இதுக்கும் மேலே வேற ஒரு கொடுமை நடந்து போயிடுச்சின்னா எனக்குத் தான் அசிங்கம். தர்மராசனுக்கு நாந்தான் பதில் சொல்லியாகனும் அதான் சொல்றேன் தம்பி மனதுக்குப் பட்டதுன்னா போகவிட்டிருவோம்'' (மாயநதிகள், ப. 252) என்று ஒன்றும் அறியாதவர் போல் பேசுவதோடு அச்சுதனை அவ்வூரைவிட்டு அனுப்புவதிலேயே குறியாக இருப்பதைக் காணலாம். இங்கு உலகநாதனின் நாடகத் தன்மை வாய்ந்த ஆளுமைக் கோளாறு தெற்றெனப் புலப்படும், இது போன்றவர்களைத் தான்,

''உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்''

என்று வள்ளலார் குறிப்பிடுகிறார் போலும்.

அச்சுதன் வேறொரு மோட்டார் சைக்கிளைப் புதிதாகக் கொண்டு வந்து நிறுத்துகிறான். அப்போது உலகநாதன் கோபம் கொண்டு,

''எரியுது எரியமாப் போவுது அதைப் பத்தி எனக்கு ஒண்ணுமில்லே. அநியாயத்துக்கு ஊரோட நிம்மதி போவுது. உன் நிம்மதி, என் நிம்மதி எல்லாம் போவுது. எனக்கு ஏறின ரத்தக் கொதிப்பு இன்னும் இறங்கலே அதுக்குள்ளே புதுசு வாங்கிட்டு வந்து நிக்கறே, இது ஒன்றும் நல்லாப்படலே'' (மாயநதிகள், ப. 268)

என்று வெறுப்பைக் கொட்டுகிறார்.

அவரது இந்நாடகத் தன்மை வாய்ந்த ஆளுமைக் கோளாறுக்குச் சந்தேகம், இயலாமை, குற்ற உணர்வு, அது வெளிப்பட்டு விடுமோ என்ற அச்சம் ஆகிய மனநிலைகள் காரணமாகின்றன. அவரது சந்தேகத்திற்கு வித்தாக அமைவது வயது இடைவெளியுடைய பெண்ணை மணம் செய்து கொண்டதாகும். இதனால்தான் இத்தகு மணத்தைத் தொல்காப்பியர், பொருந்தாக் காமம் (பெருந்திணை) என்று ஒதுக்கினார் போலும்.

பொருந்தா மணம் பாலியல் சார்ந்த இயலாமை உடையதாகிறது. எனவே, கணவன், மனைவி மீதும், அவள் வயதொத்த இளைஞர்கள் மீதும் சந்தேகம் கொள்கிறான். அதனை வெளிப்படுத்த இயலாது தவிக்கிறான். அதுவே அவனை மெல்ல மெல்ல இயல் பிறழ் நிலைக்குத் தள்ளுகிறது. இந்நிலையில் அவன் தகுதியற்ற செயல் களையும் செய்யத் தயங்குவதில்லை, இது 'மாயநதிகள்' புதினத்தில் 'உலகநாதன்' பாத்திரம் உணர்த்தும் உண்மையாகும்.

முடிவுரை

பொருந்தா மணமும், இயலாமையும் குடும்ப வாழ்வில் சந்தேகம் என்ற சிக்கலுக்குக் காரணமாகின்றன. தனிமனிதனால் நேரடியாக வெளிப்படுத்த இயலாமல் சந்தேகம் வளரும்போது சமுதாயத்தையும் பாதிக்கும் அளவிற்கு அவனது செயல்கள் தீங்கு விளைவிப்பனவாக மாறுகின்றன. அதாவது அத்தகு மனிதன் மெல்ல மெல்ல மனநோயாளியாகின்றான். பொருந்தா மணம் புரிதலைத் தவிர்த்தல் வேண்டும் என்பது இங்கு உய்த்துணரற் பாலது. மேலும் தேவையற்ற கோபம் அடிக்கடி கொள்பவரை வெறுத்து ஒதுக்குதல் தேவையில்லை. மாறாக, அவர் ஏதோ ஒரு வித மனப்பாதிப்புக்கு ஆளாகி உள்ளார் என்பதை உணர்ந்து அனுதாபத்தோடு கவனித்து அரவணைக்கப்பட வேண்டியவர். அதுவே மனித சமுதாயத்தை நலப்பாதைக்கு இட்டுச் செல்லும். எந்த ஒரு நோய்க்கும் நேயம் சார்ந்த அன்பு அருமருந்தாகிக் குணம் கொடுக்கும். 'மாயநதிகள்' புதினத்தின் வழி இக்கருத்துக்களைக் கொள்ளலாம்.

உளப் பகுப்பாய்வு நோக்கில் "இக்கரையில்"... -விது

இரா. காஞ்சனா

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 21

அமெரிக்கா வாழ் தமிழ்ப் படைப்பாளி காஞ்சனா தாமோதரனின் முதல் புதினம் ''இக்கரையில்''... அந்நிய நாட்டில் வாழும் இந்தியப் பெண்களின் மன உணர்புகளை, சிக்கல்களை உணர்த்தும் இப்புதினத்தில் இடம்பெறும் முக்கியப் பெண் பாத்திரங்கள் ரஞ்சி, ராஜி, விது. இவர்களுள் விது பற்றிய உளப் பகுப்பாய்வு இக்கட்டுரை.

குழந்தை முதலே தாய், தந்தையிடம் இருந்து சூழலால் அந்நியப்பட்டுப் போனவள் விது. சின்ன வயதில் பதிந்த மனச் சுவடுகள், திருமணம் ஆகிக் கணவனுடன் அமெரிக்கா சென்ற பின்னும், இரு குழந்தைகளுடனான பதினாறு ஆண்டுகால மண வாழ்க்கைக்குப் பின்னும் தொடர்ந்தன. வேலையில் சலிப்பு, ஈடுபாடின்மை, சுய பச்சாத்தாபம், அதனால் ஏற்பட்ட மன வெறுமை, கணவனிடமும் குழந்தைகள் மீதும் பாய்ந்து அவர்களை நசுக்கின. விது விவாகரத்து செய்ய முடிவெடுத்து, அம்முடிவைத் தன் தாய்க்குத் தெரியப்படுத்துகிறாள். தாயின் ஆலோசனையால் இந்தியா வந்து மனம் திறந்த பேச்சால் அவளது உண்மையான தாயன்பை உண்கிறாள். ''இளவயதிலேயே என் அம்மாவுடன் இப்படிப் பேச முடிந்திருந்தால் எத்தனையோ இழப்புகளைத் தவிர்த்திருக்கலாமே... அன்பில்லை என்ற ஏக்கத்தினாலேயே என்னைச் சுற்றியுள்ள அன்பைப் பார்க்க மறந்து விட்டேனே நான். என் காதில் சலசலத்துக் கொண்டிருந்த என் சொந்தக் குழப்பங்கள் விலக, விலக, மற்றோர் குரலைத் தெளிவாகக் கேட்க முடிகிறது என்ற அவளது கூற்றே அவளது மன உணர்வுகளை / குழப்பங்களை, அவை நீங்கித் தெளிவு பெற்ற நிலையை உணர்த்துகின்றது.

உளப்பகுப்பாய்வு முறையில் விதுவின் பாத்திரப்படைப்பு

இளம் வயதில் தாயின் அன்பு தனக்கு முழுமையாகக் கிடைக்க வில்லை, தாய் தன்னை ஒதுக்குகிறாள் என்ற மனப்பதிவு, குழந்தைப்

பருவத்து ஆழமான காயம் அவளைப் பிறரிடம் இருந்து அந்நியப்பட்டுப் போக வைத்தன. பின்னால் வந்த உறவுகள் கோணலாவதற்கான முதற் சுழியாக அது அமைந்தது.

விதுவின் தந்தை மற்றொரு பெண்ணுடன் உறவு வைத்திருந்ததை அறிந்து மனம் புழுங்கித் தன் உணர்வுகளுக்குள், வேதனைக்குள் அமிழ்ந்து அந்த வேதனையை மறக்க, மறைக்க ஓவியத்திற்குள்ளும், எழுத்துக்குள்ளும் தன் முகத்தை மறைத்துக் கொண்ட தாய் விதுவுக்கு வேறாகிப் போனாள். வீட்டின் நிலை குழந்தைக்குப் புரியக்கூடாது, அவள் வளர்ச்சியைப் பாதித்துவிடக் கூடாது என எண்ணியதால் அவளை போர்டிங் ஸ்கூலில் சேர்த்தாள். ஆனால் விதுவுக்கு வீட்டின் நினைவும் அம்மாவின் அன்புக்கு ஏங்கும் ஏக்கமும் சேரச் சேர, மதிப்பெண் குறைந்தது. மறுபடி வீடு; ஆனால் வீடு முன்மாதிரி இல்லை. பேச்சும் சிரிப்பும் இல்லாத வீடு. மௌனவீடு. ஒருநாள் - அம்மாவிடம் அப்பா, 'விதுவை நினைச்சாவது நீ..'' எனக் கெஞ்சும் குரலில் கேட்க, அம்மா, ''விதுவுக்காக... விதுவுக்காக... எப்பப் பார்த்தாலும் விதுவுக்காக'' எனக் கோபத்தின் உச்சியில் கத்துவதைக் கேட்க நேர்ந்தது. அப்பேச்சின் பின்புலம் அறியாத விது, அம்மாவுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை, அதனால் தான் போர்டிங்ஸ்கூலில் சேர்த்தாள் என்ற முடிவுக்கு வருகிறாள். இம்முடிவு, அவளது பிற்கால ஆளுமை வளர்ச்சியைப் பாதித்தது. பிறரிடம் நம்பிக்கையின்மை, குற்ற உணர்வு அந்நியமாதல் போன்ற ஆளுமைக் குணங்களை அவளிடம் உருவாக்கியது..

நம்பிக்கையின்மை

16 ஆண்டு கால இல்லற வாழ்விற்குப் பின்னும் கணவனிடம் முழுமையாக அன்பு செலுத்த இயலாது, தன்னில் தானே ஆழ்ந்து போகும் விது தன்னையும் வருத்திக் கொண்டு கணவனையும், குழந்தைகளையும் வாட்டுகிறாள். தீபாவளிக் கொண்டாட்டத்துக்காக வீட்டை அலங்கரித்து வைத்திருந்த மின்விளக்கு வரிசையைச் சுற்றி எடுக்கும்போது இனி இவை அடுத்த ஆண்டு தானே தேவைப் படும் என எண்ணுகிறாள். உடனே அடுத்த தீபாவளி அவளுக்கு ரமேஷுடன் இருக்குமா என்ற அவநம்பிக்கை வெளிப்படுகிறது. தன் விவாகரத்து பற்றித் தன் தோழி ரஞ்சியிடம் பேசும் போது, ''அந்த மனுஷரைச் சுத்தி எவ்வளவு பெ.ர்..ரீ.ய.. சுவர் தெரியுமா? ரஞ்சி? எம்பி எம்பிக் குதிச்சாலும் எட்டிக் கூடப் பார்க்க முடியாத உயரச் சுவர்'' என்ற அவளது பேச்சே அவளுக்குத் தன் கணவனிடம் இருந்த நம்பிக்கையின்மையையும் அவனிடம் இருந்து மனத்தளவில் விலகிய நிலையையும் புலப்படுத்துகிறது.

அந்நியமாதல்

தன் இடம் எது எனத் தெரியாது மலைக்கும் பொழுதும், இயந்திர கதியிலான இவ்வாழ்வில் சலிப்பு ஏற்படும் போதும், உலகும், சொந்தங்களும் தன்னை அலட்சியப்படுத்துவதாக உணரும் பொழுதும் மனிதன், உலகிலிருந்து, சமுதாயத்திலிருந்து, குடும்பத் திலிருந்து, ஏன் தன்னிலிருந்து தானே அந்நியமாகிறான் என்பர் இருத்தலியலார். தன் தாயின் மனதில் தனக்கு இடம் இல்லை, தாய் தன்னை ஒதுக்குவதால்தான், போர்டிங்ஸ்கூல், யு.எஸ். வாழ்க்கை எனக் கருதுவதால் விது முதலில் தன் தாயிடம் இருந்தும், பிறகு தன் பணி, குடும்பம், கணவன் என்ற உறவுகளில் இருந்தும் அந்நியமாகிறாள். கணவனும், குழந்தைகளும் வீடு திரும்ப நிறைய நேரம் இருக்கும் பொழுது அவள், ''வாழ்க்கையில் எப்போதுமே தீராத நேரம் இருப்பதாக'' உணர்கிறாள். அவளுக்குச் சிரிப்பு நின்று நாளாயிற்று, இப்போதெல்லாம் அலுப்பும் கோபமும் தான் சுலபமாய் வருகிறது'' (ப. 33. இக்கரையில்) ''வீட்டின் மௌனம் அழுத்த, மூச்சு முட்டி உடனே அங்கிருந்து வெளியேற வேண்டும் என்ற உணர்வு உந்த எங்கே போகிறோம் என்பதே தெரியாமல் ஓடுகிறாள். இது அவளிடம் இருந்தே அவள் தப்பிக்க வழி தேடுவதாகத் தோன்றுகிறது.

தாழ்வு மனப்பான்மை

அம்மா பற்றிய எண்ணம் எழும்போதெல்லாம் விது தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகிறாள். அம்மா என்னைவிட அழகு, புத்திசாலி, திறமைசாலி, நான் அவளுக்குப் பொருத்தமில்லாது வந்து பிறந்த மகள் என எண்ணுகிறாள். எழுத்தாற்றல், ஓவியத்திறன், செயல்களில் எல்லாம் ஓர் ஒழுங்கமைப்பு, மேன்மையான இரசனை, இது இது இப்படித்தான் இருக்க வேண்டும் எனச் சொல்லாமல் சொல்லும் கண்டிப்பு. நுணுக்கமாக ஒரு குறையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற அம்மாவின் எண்ணமே தன்னை எதையும் செய்ய லாயக்கற்றவள் என்ற மனப்பான்மையை ஏற்படுத்திவிட்டது. தான் வேலையில் நிலைக்க முடியாமல் போனதற்கும் தாய் குழந்தைப் பருவத்திலிருந்து தன் மீது செலுத்திய மன ஆதிக்கமே காரணம் என எண்ணுகிறாள் விது.

''எடுத்தகாரியம் எல்லாவற்றையும் (ப.62) வெற்றிகரமாகச் செய்து முடிக்கும் அம்மாவுக்குப்போய் இந்தத் தோல்விக் களஞ்சியம் பிறந்தது எப்படி எனத் தன்னைப் பற்றிய தாழ்வு எண்ணங்களால் அவதிப்படுகிறாள்'' (ப.63).

இடப்பெயர்ச்சி

தொலைபேசி மௌனத்தாலேயே தன்னை மூச்சு முட்டச் செய்யும் அம்மா பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து அவள் செலுத்தும் ஆதிக்கத்தைத் தன் கணவன் மீது சீறும், குற்றம் காணும் போக்காக மடைமாற்றம் செய்கிறாள் விது. பாய்வதற்கு வசதியாக ரமேஷ் பக்கத்திலேயே இருக்கிறான். இவ்வாறு ஒருவர் மீது செலுத்த இயலாத கோபத்தை, வெறுப்பை, ஆற்றாமையை, வேறு ஒருவர் மீது - தன் உணர்வுகளுக்குப் பலியாகக் கூடிய எளிய ஒருவர் மீது செலுத்துவதை இடப்பெயர்ச்சி என்றும், புறத்தெறிப்பு என்றும் உளவியலார் விளக்குவார்.

குற்ற உணர்வு

விது தன் சுயநலத்துக்காகத் தன் பெண்களான மிட்டு, அனுவின் குழந்தைப் பருவங்களை வாடவிட்டவள். மிட்டுவின் வயதுக்கு மீறிய முதிர்ச்சிக்கும் மௌனப் பார்வைக்கும், தன்னுடனான இடைவெளிக்கும் காரணம் தான்தான் என்ற குற்ற உணர்வும் விதுவுக்கு உண்டு (ப. 68-69). குழந்தைகளின் மகிழ்ச்சியையே பிடுங்கிக் கொண்ட அவளை ஒரு கொலைகாரியாகவே அவள் மனம் சாடியது (ப.70) பழைய தன் சரித்திரமே மிட்டு மூலம் புது உருவம் பெறுவதைக் காண்கிறாள். மனமொத்த மண விலக்குக்கு விதுவும் ரமேஷும் தயாரான செய்தியைக் குழந்தைகளிடம் ரமேஷ் மெதுவே கூறியபோது, ''அனு இது நல்லதுக்குத்தான்'' என்று மிட்டு கூற ரமேஷ் அதிர்கிறான்.

''குழந்தைகள் எதையும் தாங்கிக் கொள்ளத் தயாராக இருப்பவர்கள். சிறிய உருவில் உள்ள பெரியவர்கள் என்பதாய் இந்தச் சமூகச் சூழல் (அமெரிக்க) வெளித்தோற்றம் கொடுக்கிறது. ஆனால் உள்ளிருப்பது இளம்பிஞ்சுதான். அது வெம்பிப் போகுமோ என்று வேதனையாக இருக்கிறது அம்மா'' என்று தன் தாய்க்குக் கடிதம் அனுப்புகிறாள் விது (ப. 105-106). பின்னர் நிகழ்ந்த அம்மாவுடனான முழுமையான எண்ணப் பரிமாற்றம் அவளுடைய வெறுமையை மாற்றுகிறது. நம்பிக்கை தளிர்விடுகிறது.

லக்கானின் உளப்பாய்வு அடிப்படையில்

குழந்தை - தாய் தொடர்பு நிலையில் உருவாகும் தன்னைப் பற்றிய கருத்தாக்கங்கள் பற்றி லக்கான் தனி மனித நனவிலியும் மொழியைப் போன்றே கட்டமைக்கப்படுகிறது; பிறரால் கட்டமைக்கப் படுவது; நமக்கும் பிறருக்கும் உள்ள தொடர்பினால் உருவாவது என்பார். பெண்ணிய உளப்பகுப்பாய்வாளர் மெலனிகிளெயின் சுட்டிய பொருள் - உறவுக் கோட்பாடு அடிப்படையில் (Objectrelation

theory) தாய் - குழந்தை உறவை விளக்கும் லக்கான் ஒரு பொருளின் கூறு ஒன்றை / உறுப்பை அப்பொருளின் / மனிதனின் குண நலத்துடன் இணைத்துக் காணும் குழந்தை அந்த உறுப்பை (Part - Object) ஒரே சமயத்தில் மிகுந்த இன்பம் அளிக்கும் பொருளாகவும் அச்சமூட்டும் பொருளாகவும் காண்கிறது. அம்மனிதனிடம் ஒரே சமயத்தில் அன்பும் செலுத்துகிறது - வெறுக்கவும் செய்கிறது. இப்போக்கு குழந்தையின் வாழ்நாள் முழுவதும் தொடரக் கூடிய மனப்பான்மைக்கு அடிப்படை ஆகிறது. உலகைச் சுயவிருப்பு - வெறுப்புகளுக்கு ஏற்ற படிமங்களுடன் காணும் போக்கை உருவாக்குகிறது என விளக்குகிறார் லக்கான்.

இவ்வடிப்படையிலும் விதுவின் நடத்தைகளை, மனப் போக்குகளை ஆராயமுடியும். அவள் அம்மாவை ஒரே சமயத்தில் தேவதையாகவும் சூனியக்காரியாகவும் உணர்கிறாள்.

''அம்மா அழகி, திறமைசாலி, யாரையும் ஈர்க்கக் கூடியவள். விதுவின் சிநேகிதிகள், ஆசிரியைகள் மதிப்பைப் பெற்றவள்; அவள் போல் தான் இல்லையே என்று விதுவை ஏங்கச் செய்தவள் - தேவதை''

''அப்பாவின் நடத்தையால் ஏமாந்த அம்மா தனக்குள் சுருண்டு போனவள், எழுத்துக்குள் ஓவியத்துக்குள் ஆறுதல் தேடி ஒதுங்கியவள். எல்லாவற்றையும் ஈடுகட்ட விதுவின் மீது அதீத எதிர்பார்ப்புகளை வைத்து அழுத்தி, அவளைச் சிறு புழுவாக உணரச் செய்தவள். சூனியக்காரி'' - தேவதையிடம் நெருங்க ஆசை சூனியக்காரியை விட்டு விலகி ஓட ஆசை - விதுவின் இந்த மன ஓட்டங்கள் லக்கானின் விளக்கங்களுடன் அப்படியே ஒத்துப் போவதைக் காணலாம்.

எல்லோரிடம் இருந்தும் விலகி, அந்நியமாகி, நட்சத்திர விளிம்பின் ஒரு நட்சத்திரக் குழந்தையாகத் தன்னை உணர்ந்த விது, தாயிடம் மனம் விட்டுப் பேசியபிறகு - விதுவின் கண்களுக்கு இப்போது அம்மா பீடத்து தேவதையாகவோ பயங்கர சூனியக் காரியாகவோ இல்லை. உணர்வுகள் உள்ள மனிதப் பெண்ணாகப் புலப்பட மனம் லேசாகிறது விதுவுக்கு.

உளவியல் நோக்கில் கார்த்திகைப் போக்குச் சடங்கு

கு. கதிரேசன்

ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர் - 628 216

தென்மாவட்டக் கிராமக் கோயில்களில் நிகழ்த்தப்பட்ட கள ஆய்வின் அடிப்படையில் கார்த்திகைப் போக்குச் சடங்கினை உளவியல் அடிப்படையில் ஆய்வு செய்யும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

மக்கள் வழக்காற்றில் கார்த்திகை

தமிழ் மாதங்கள் பன்னிரண்டனுள் ஒன்று கார்த்திகை. இம்மாதம் புனிதமாதமாகக் கருதப்படுகிறது. நாட்டுப்புற மக்கள் இம்மாதத்தில் விரதம் மேற்கொண்டு வழிபடு தெய்வத்தை வழிபடுகின்றனர். இம்மாதத்தில் முப்பது நாட்களும் சூரியன் விருச்சிக ராசியில் சஞ்சரிக்கிறார். இம்மாதத்தில் பூரண சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடும் நாள் மிகப் புனித நாளாகக் கொள்ளப்பட்டு, அன்று வழிபடு தெய்வங்களுக்குப் படையல்கள் வைத்து வழிபடும் மரபு காணப்படுகிறது.

கார்த்திகைப் போக்குச் சடங்கு

தென்மாவட்டப் பகுதிகளில் கார்த்திகை மாதத்தின் இறுதியில் வழிபடு தெய்வக் கோயில்களில் நிகழ்த்தப்படும் ஒருவகை சிறப்புப் பூசை வழிபாட்டையே கார்த்திகைப் போக்கு என அழைக்கின்றனர். இச்சடங்கு பெரும்பாலும் கிராமக் கோயில்களிலேயே நிகழ்த்தப் படுகிறது. அந்தந்த கிராமத்து மக்கள் ஒன்று சேர்ந்து பணம் திரட்டி ஒரு நாள் இரவு முழுவதும் விழித்திருந்து இச்சடங்கினை நிகழ்த்து கின்றனர். இதற்காக அன்று முழுவதும் பல்வேறு வகையான கேளிக்கைகள் குறிப்பாக, வில்லிசை, கணியான் கூத்து முதலிய கலை நிகழ்ச்சிகளை நடத்துவதுண்டு. தற்காலத்தில் ஆடலுடன் பாடல், இசைக் கச்சேரி முதலிய நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

கிராமத்தில் அமைந்துள்ள அம்மன் கோயிலில் இவ்வழிபாட்டுச் சடங்கு இன்றும் சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. தவிர சிறுமரபுத் தெய்வங்களான சுடலைமாடன், இசக்கி, பேச்சியம்மன், பத்திரகாளி, உச்சினிமாகாளி முதலிய தெய்வக் கோயில்களிலும் வீட்டுத்

தெய்வங்களான சக்திக் கோயில், கன்னி கோயில் முதலியவற்றிலும் இவ்வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. மேலும் தென்மாவட்டப் பகுதிகளில் பரவலாக வளர்ந்துள்ள அய்யா வைகுண்டர் வழிபாட்டுக் கோயிலிலும் இவ்வழிபாடு நிகழ்த்தப்படுவதைக் காண முடிகிறது. பொதுவாக அம்மன் கோயில்களில் கார்த்திகை மாதத்தின் இறுதியில் வரும் செவ்வாய் கிழமையும் சுடலைமாடன், இசக்கி, காளி கோயில்களில் இறுதி வெள்ளிக்கிழமையும் அய்யா வழிபாட்டுக் கோயிலில் இறுதி ஞாயிற்றுக் கிழமையும் நிகழ்த்தப்படுகிறது. இந்நாட்களே அந்தந்த தெய்வங்களுக்குரிய புனித நாட்களாகக் கருதப்படும் நம்பிக்கையே இதற்குக் காரணமாக அமைகிறது.

கார்த்திகைப் போக்குச் சடங்கு நாள் அன்று, பகலில் கிராமத் தெருக்களைச் சுற்றிலும் வேப்பிலைத் தழைகளால் தோரணம் கட்டித் தொங்க விடுவது, 'படக்கஞ்சி' எனப்படும் பச்சரிசிப் பொங்கலைச் செய்து பனை ஓலைப் பட்டைகளில் வைத்து ஆலயங்களைச் சுற்றி படைத்துப் பகிர்ந்து உண்பது, மஞ்சள் பானை வைத்துக் குரவை யிட்டு ஆர்ப்பரிப்பது முதலிய சடங்குகளை நிகழ்த்துகின்றார். இரவு ஆலயத்தை வண்ண விளக்குகளால் அலங்கரித்து வழிபடு கடவுள் உருவங்களையும் படிமங்களையும் அழகிய பல வண்ண வாச மலர்களால் அலங்கரித்துத் தேங்காய்ப்பழம், படையலிட்டுச் சர்க்கரைப் பொங்கல், சுண்டல் முதலியவற்றைத் தயாரித்துப் படைத்து வழிபடுவர். மேலும் ஐந்து வகைப் பழங்களைக் கொண்டு 'பஞ்சாமிர்தம்' என்னும் ஒருவகை இனிய பழக்குழைவைத் தயாரித்து அதை வழிபடு தெய்வத்திற்குப் படைத்து வழிபடுவர். இரவு முழுவதும் ஆலயத்தில் விழித்திருந்து கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து நடு இரவு நடைபெறும் சிறப்புப் பூசையில் அனைவரும் கலந்து கொண்டு அதிகாலையில், தயாரித்து வழிபட்ட பதார்த்தங்களை அனைவரும் பகிர்ந்து உண்டு மகிழ்ச்சியடைவர். ஆண்டுதோறும் தவறாமல் நிகழ்த்தப்படும் இக்கார்த்திகைப் போக்குச் சடங்கு, கிராமப் புறங்களில் 'திருமால் பூசை' என்றும் 'பெருமாள் பூசை' என்றும் வழங்கப்பட்டு வருகிறது. 'கார்த்திகைக்குப் போக்கு விடுதல்' எனவும் குறிப்பிடப்படுகிறது. அம்மன் கோயில்களில் திருமால் பூசை அல்லது பெருமாள் பூசை என்றும் சுடலைமாடன், இசக்கி, காளி கோயில்களில் கார்த்திகைப் போக்கு என்றும் அய்யா வழி நாராயணர் சுவாமி கோயில்களில் 'போக்கு விடுதல்' என்றும் அழைக்கப்பட்டு வரும் வழக்கினைக் காண முடிகிறது.

கார்த்திகைப் போக்கு வழிபாட்டுச் சடங்கில் வழிபடும் மக்களின் மனத்துடன் தொடர்புடைய பல கூறுகளையும் உணர்வு களையும் ஆராய்ந்து அறிய முடிகிறது. எனவே இச்சடங்கில் மக்களின் உளவியல் கூறுகள் பல வெளிப்படுவதை இனம் காண முடிகிறது.

அவற்றை அறிவது அவர்கள் வாழ்வியல் பண்பாட்டைப் பற்றிய தெளிவினை ஏற்படுத்தும்.

கார்த்திகைப் போக்கு - உளவியல் கூறுகள்

தென்மாவட்ட நாட்டுப்புற மக்கள் நிகழ்த்தும் கார்த்திகைப் போக்குச் சடங்கு அம்மக்களின் முழுமையான உளவியல் பண்பாட்டுப் பிரதிபலிப்புச் சின்னமாக விளங்குகிறது. பாமர மக்களின் அடி மனத்தில் பதிந்திருக்கும் இறப்பு அச்சத்தினால் எழுந்த வழிபாட்டுச் சடங்கே கார்த்திகைப் போக்கு ஆகும். இறப்பு வராமல் தடுத்துக் காத்தமைக்காக நன்றி தெரிவித்தும் இறப்புத் துன்பம் ஏற்படாமல் இருப்பதற்காக அடைக்கலம் வேண்டியும் வழிபடு தெய்வங்களிடம் அவைகளுக்குரிய பொருட்களை உரிய நாளில் படைத்து வேண்டும் வழிபாட்டுச் சடங்கே கார்த்திகை போக்கு ஆகும். இச்சடங்கினைக் கார்த்திகை மாதத்தில் தேர்ந்தெடுத்து நிகழ்த்துவதற்கு அடிப்படையான காரணம் உண்டு. பொதுவாகக் கார்த்திகை மாதத்தில் விரதம் இருப்பதும் திருக்கார்த்திகை தீபத் திருநாள் கொண்டாடுவதும் கார்த்திகைப் போக்கு நிகழ்த்துவதும் இறைவழிபாட்டை அடியொற்றியே நிகழ்த்தப்பட்டு வருகிறது. இது முழுமையான அச்சத்தினால் எழுந்த வழக்காறு ஆகும்.

கார்த்திகை மாதம் என்றாலே பாமர மக்கள் மறைமுகமாக அடி மனத்தில் அச்சம் தலை தூக்குகிறது. காரணம் இக்காலத்தில் இறப்பு நிகழ்வு அதிகமாக ஏற்படுவதே ஆகும். இம்மாதம் பனி காலமாகும். புரட்டாசி, ஐப்பசி மாதங்கள் மழைக்காலம் தொடர்ந்து பனியும், குளிரும் மிக அதிகமாக இருப்பதால் இக்காலத்தில் நோய்க் கிருமிகள் அதிகமாகப் பரவும் வாய்ப்பு உண்டு. அக்காலத்தில் அம்மை நோய் கிருமிகளும் காலரா போன்ற கொள்ளை நோய்களும் மிக அதிகமாகப் பரவின. இன்றும் கொசுக்களும் வைரஸ்களும் அதிகமாக உற்பத்தியாகிப் பல கொடிய நோய்களை உருவாக்குகின்றன. இதனால் அதிகமான இறப்பு ஏற்படுவதுண்டு. மேலும் அதிகமான பனியாலும் குளிராலும் பாதிக்கப்பட்ட வயதான முதியவர்கள் அதிகமாக இறந்துவிடும் சூழல் ஏற்படுகிறது. இவ்வாறு கார்த்திகை மாதத்தில் ஏற்படும் உயிரிழப்புகள் மிக அதிகமாக நிகழ்கின்றன. இதனைக் கண்டு மனிதன் அச்சமுற்றான். இவ்வாறு நோய் வராமல் - இறப்பு வராமல் தன்னைக் காக்க வேண்டியே இக்காலத்தில் மனிதன் விரதமிருக்கத் தொடங்கினான். இவ்விரத முறை நோயை விரட்டும் தன்மை உடையதாகும். உணவுக்கட்டுப்பாடு, புலனடக்கம், மன ஒருமுகப்படுத்தல், தான தருமம் செய்தல் முதலிய வழக்காறுகள் இவ்விரத காலத்தில் பின்பற்றப்படுவதால் மக்கள் உடலும் உயிரும் பேணப்படுகின்றன.

மேலும் பெரியம்மை, காலரா உள்ளிட்ட கொள்ளை நோய்கள் அம்மனுக்கு ஏற்பட்ட கோபத்தினாலேயே ஏற்படுவதாகவும் ஒரு அம்மன் மற்றொரு அம்மனின் ஊர் எல்லைக்குள் வந்து அம்மை நோய்க்குரிய விதைகளை விதைத்துச் செல்வதாகவும் அதனை இங்குள்ள அம்மன் தடுத்துக் காத்து, அம்மை நோயிலிருந்து விடுவிப்பதாகவும் விதையிட வரும் அம்மனிடம் பரிந்து பேசி தடுப்பதாகவும் மக்கள் நம்புகின்றனர். இந்நம்பிக்கையினால்தான் ஊர்த்தெய்வமான அம்மனுக்குப் படையல் செய்து விரதமிருந்து, விழித்திருந்து வழிபடுகின்றனர். இந்நாளில் கிராமத்தின் எல்லை களில் வேப்பிலைத் தழை தோரணம் அமைப்பதால் ''கோபத்தினால் விதை தூவ வரும் அம்மன் மனம் சாந்தியடைந்து குறைவாகத் தூவிச் செல்வாள்'' என்னும் நம்பிக்கையும் நிலவுகிறது. மேலும் கார்த்திகை மாதத்தில் இறந்தவர்களின் ஆவிகள் அதிகமாக வந்து உயிர் குடிக்கும் பேய் பற்றிய நம்பிக்கையும் அதிகமாக இருக்கிறது. இப்பேய்கள் வேப்பிலைத் தோரணங்களைத் தாண்டி ஊருக்குள் நுழைந்து மக்களைத் துன்புறுத்தாது என்று எண்ணுகின்றனர். எனவே சினம் கொண்டு விதையிட வரும் வேறு கிராமத்து அம்மனின் கோபத்தைத் தணிக்கவும் பேய்ப்பிசாசுகள் கிராமத்திற்குள் நுழைந்து இன்னல் ஏற்படுத்துவதைத் தடுக்கவுமே இத்தகைய வழக்காறுகள் பின்பற்றப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது. ஆயினும் வேப்பிலைத் தோரணத்தில் ஓர் அடிப்படை அறிவியல் உண்மை உண்டு. வேப்பிலைகள் ஓர் இயற்கையான ஆற்றால் வாய்ந்த கிருமி நாசினி. இதனை வீதிகளில் தொங்க விடுவதாலும் ஒவ்வொரு வீடுகளின் முகப்பில் கட்டி வைப்பதாலும் கொடிய நோயை உருவாக்கும் கிருமிகள் அழிந்துவிடும்; நோய் வராமல் தடுக்கப்படும். இத்தகைய உண்மையைப் பாமர மக்கள் அறியும் பக்குவம் இன்மையால் அதனைத் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபடுத்தி நம்பிக்கையாக ஆக்கி வைத்தனர். அறிவியல் உண்மை வெளிப்பட்டிருக்கும் இக்காலத்திலும் இவ்வழக்காறு பழைய நம்பிக்கையுடனேயே பின்பற்றப்பட்டு நவீன பயன்பாடு உருவாகி வருவது அறியத்தக்கது.

அதோடு கார்த்திகை மாதக் குளிர் தாளாமல் பலர் இறந்து விடுவதால் தெய்வக்குற்றத்தினாலேயே இறப்பு நிகழ்வுகள் அதிகமாக ஏற்படுகின்றன என நம்புகின்றனர். அதனால் மக்கள் இறப்பைக் கண்டு அஞ்சி, தங்கள் வழிபடு தெய்வக் கோயில்களில் கார்த்திகை மாதத்தின் கொடுமையைப் போக்கும் பொருட்டு மன்றாடு கின்றனர். அது மட்டுமல்லாமல் கார்த்திகை மாதத்தில் தங்கள் உயிரைப் பாதுகாத்தமைக்காகவும் நோய் நொடியிலிருந்து மீட்டமைக்காகவும் குடும்பத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியமைக்காகவும் கார்த்திகை

மாதம் கடந்த மகிழ்ச்சியில் ஒரு கண்டத்தைக் கடந்தது போன்ற உணர்வுடன் வழிபடு தெய்வங் களுக்கு நன்றி தெரிவித்து நிகழ்த்தும் சடங்காகவே கார்த்திகைப் போக்குச் சடங்கு நிகழ்த்தப்பட்டு வருகிறது.

கார்த்திகைக்குப் போக்கு விடுதல் என்பது 'போக்கு விடுதலில்' உள்ள அச்ச உணர்வு எண்ணிப்பார்க்கத்தக்கது. ஒருவர் இறந்துவிட்டால் அவரது ஆவி நன்மைகளையே தரவேண்டும்; தீமைகளைத் தந்து விடக்கூடாது என்று எண்ணுவதும் அதற்குரிய படையல்களைச் செய்து வழிபாட்டுச் சடங்கு நிகழ்த்தினால் ஆவியின் பாதிப்பு இருக்காது என்று நம்புவதும் நாட்டுப்புற மக்களிடம் இன்றும் நிகழ்த்தப்படுகிறது. இச்சடங்கு தென்மாவட்டங்களில் 'காலனுக்குப் போக்கு விடுதல்' என அழைக்கப்படுகிறது. அதாவது உயிரைப் பிடிக்கும் எமதர்மனுக்குக் கோபத்தைத் தணித்து மகிழ்ச்சியை ஊட்டுவதான நம்பிக்கை அடிப்படை வழிபாட்டுச் சடங்கு ஆகும். இந்தப் பின்னணியிலேயே கார்த்திகைப் போக்கினை எண்ணிப் பார்க்கலாம். காலனுக்குப் போக்கு என்பதைப் போன்றே நொடி களைத் தந்து துன்புறுத்தி உயிர் குடிக்கும் கார்த்திகை மாதத்திற்கும் போக்கு விடுதல் அமைகிறது. இம்மாதம் தரும் துன்பத்திலிருந்து மீள்வதற்காகவே கோயில்களில் சிறப்பு பூஜை வழிபாடுகள் நடத்தி வழிபடு தெய்வங்களை மகிழ்விக்கின்றனர். இச்சடங்கினைத் திருமால் - பெருமாள், காப்பாற்றும் தெய்வமாகையால் கார்த்திகை மாதத் துன்பத்துடன் தொடர்புபடுத்தித் திருமாலுக்குப் பூசை செய்து வழிபட்டால் அக்கடவுள் தம்மையும் குடும்பத்தையும் கிராமத்தையும் நோயிலிருந்தும் இறப்பிலிருந்தும் காப்பாற்றுவதாக நம்புகின்றனர். இத்தகைய பல்வேறு பண்பாட்டு வழக்காறுகளை நுணுகி ஆராயும் பொழுது கார்த்திகைப் போக்குச் சடங்கு இறப்பைக் கண்டு அஞ்சும் மக்களின் உயிர்காக்கும் அச்சம் தழுவிய உளவியல் உணர்வு வெளிப்பாடாகவே அமைவதைக் காணலாம்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகள் கார்த்திகைப் போக்குச் சடங்கு எனக் கிராமப்புறங்களில் நிகழ்த்தப்படும் பாமர மக்களின் வழிபாட்டுச் சடங்கு, முழுமையான வாழ்க்கைப் பண்பாட்டையும் உளவியல் உணர்வுகளையும் இறப்பு அச்சத்தையும் நோய்களைக் கண்டு அஞ்சும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் வெளிப்படுத்தும் முழுமையான உளவியல் பண்பாட்டுப் பிரதிபலிப்பு எனும் கருத்தை உறுதி செய்கின்றன.

மறதி நோய் - ஓர் உளவியல் பார்வை

ஆ. இசக்கியம்மாள்

ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி

குற்றாலம்

தத்துவ அறிஞர்கள் வேதகாலம் முதல் இக்காலம் வரை உள்ளத்தைப் பற்றிச் சிந்தித்து உள்ளார்கள். வேதகாலத்தில் உள்ளத்தை 'மனஸ்' என்று குறிப்பிடுகின்றார்கள். பண்டைய கிரேக்க அறிஞர்கள் உள்ளத்தை 'ஆன்மா' அல்லது 'ஆத்மன்' (Atman) என்று குறிப்பிடு கின்றார்கள் (ஜி.டி. போவாஸ், 1972, ப.8). பழங்காலத்தில் மனிதனின் பல்வேறு செயல்களான நினைவு, சிந்தனை, அறிவாய்வு போன்றவை ஆன்மாவில் இருப்பதாகக் கிரேக்கர்களால் நம்பப்பட்டு வந்தது. பின்னர் அறிவியல் அடிப்படையில் ஆன்மா என்பது உள்ளம் என்று குறிப்பாக உணர்த்தத் தொடங்கியது. இந்திய அறிஞர்கள் 'உள்ளம் உடலைச் சார்ந்து இருக்கும் ஒரு பொருள்' என்றனர் (தா.ஏ. சண்முகம், 1960, ப. 30). இத்தகு உள்ளத்தினைப் பற்றிய அறிவியலே உளவியல் ஆகும். இது

> 'ஓர் உயிரிக்கும் சூழ்நிலைக்கும் உள்ள தொடர்பு காரணமாக (Interaction) ஏற்படும் நடத்தையை ஆராயும் விஞ்ஞான இயல்'

(மேலது - ப.31) ஆகும்.

உளவியல் தனிமனித உளப்போராட்டங்களையும், உளநோய் களையும் அறிந்து கொள்வதற்கும் குணப்படுத்துவதற்கும் பயன்படு கிறது. இவ்வகையில் மனிதனுக்கு ஏற்படும் 'மறதிநோய்' ஆராயப் படுகின்றது.

மனித வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாவல்களே 'மறதிநோயை' ஆராயப்பயன்படும் ஆவணங்களாகின்றன. 'மறதிநோய்' பெண்ணுக்கும் ஏற்படலாம், ஆணுக்கும் ஏற்படலாம். இக்கட்டுரை 'மறதிநோய்' வயப்பட்ட பெண்களின் வாழ்வியற் சிக்கலை ஆராய்கின்றது.

மறதிநோய் (Amnesia)

தன்னைப் பற்றிய நினைவினை இழத்தலையே 'மறதிநோய்' என்பர். இது ஒருவித நினைவுக் கோளாறு (Memory Disorder) ஆகும். மறதிநோய் உடல்சார்புடையது (Organic), உளச்சார்புடையது (Psychogenic) என இருவகைப்படும்.

''மூளை உண்மையாகப் பழுதடைவதால் நினைவுகளை இழத்தல் உடல்சார் மறதி நோயாகும். மூளைப் புறணி எவ்வகையிலும் அழிவுபடாமல் இருக்கும் நிலையில் மன எழுச்சி அதிர்ச்சி களால் (Emotional Trauma) நினைவு அழிக்கப்படலை உளம்சார் மறதி நோய்''

என்பர் உளவியலார் (ஜேம்ஸ் டி. பேஜ் (தமிழ்) அ. பெசன்ட் கிரிப்பர்ராஜ், *1965*, ப. *86*).

இத்தகு மறதி நோய்கள் அதிர்ச்சி, விபத்து ஆகிய இரு நிலை களில் ஏற்படுகின்றன. அதிர்ச்சியில் ஏற்பட்ட உளம்சார் மறதி நோயினை அனுராதாரமணனின் 'நெருப்பாக நீ' என்ற நாவலும், விபத்தால் ஏற்பட்ட உடல்சார் மறதிநோயினை இந்துமதியின் 'நினைவெல்லாம் நித்யா' என்ற நாவலும் சித்திரிக்கின்றன.

'நெருப்பாக நீ' என்ற நாவலில் வரும் இன்பா நான்கு வயது குழந்தைப் பருவத்தில் ஒரு கொலையைக் கண்டு அஞ்சி வீட்டை விட்டு ஓடி வந்து விடுகின்றாள். அவள் குழந்தை இல்லாத தம்பதியரால் செல்லமாக வளர்க்கப்படுகின்றாள். ஓவியப்பள்ளி மாணவியான அவள் உள்ளத்தில் பிளேடைக் கண்டாலே அச்ச உணர்வு தோன்றுகிறது. அவளிடம்,

''விரலை வெட்டிப்பேனோ என்று பயம்மா இருக்கு'' (ப. *12*)

''ரத்தக் காயத்தைப் பார்த்தா தலை சுத்தி மயக்கம் வந்துடும்'' (ப. *13*)

''பிளேடால் விரலை வெட்டிக்கிட்டா... என்னவோ கழுத்து அறுபட்ட தலையப் பார்க்கிற மாதிரி தோணும் எனக்கு'' (ப. *7*)

என்ற எண்ணம் அடிக்கடி தோன்றுகிறது. தனது ஓவியப்பள்ளி நண்பர் நத்தகுமாரைக் காணும்போது,

''ஒரு சினேகிதனைப் பல வருடங்களுக்குப் பிறகு பார்த்த பரவசம்'' (ப. *11*)

ஏற்படுகிறது. இவளது இந்த நிலையை,

''முதிர்ந்த வயதில் நம்மிடம் காணப்படும் குணங்களுக்கெல்லாம் காரணம் நமது இளமைப்பருவத்துச் சூழ்நிலை நிகழ்ச்சிகளே''

என்ற உளவியல் அறிஞர் கருத்து அரண் செய்கிறது (ஸ்ரீ நிவாசன் இராமலிங்கம், *1960*, ப. *37*)

நந்தகுமாரின் இல்லத்திற்கு வந்த பிறகு சிறுவயது முதல் அவளுக்குள்ளேயே இருந்த அடிமனத்துச் சிக்கலுக்கான காரணங்கள் சிறிது சிறிதாக வெளிப்படுகின்றன. நந்தகுமாரின் வீட்டின் தூண் களைக் கண்டு அஞ்சுகிறாள்.

''இந்தத் தூண்களைப் பார்த்தால் எனக்கென்னவோ மனுஷங் களை முழுங்கிட நிற்கிற ராட்சஸன் மாதிரி இருக்கு'' (ப. 86)

என்று கூறுவது, நந்துவின் தந்தையையும் அண்ணனையும் கண்டவுடன் அதிர்ச்சி அடைவது, நந்தகுமாரிடம்,

''நான் இங்க உங்க வீட்டோட பழகறது, உங்க குடும்பத்தைப் பத்தி நல்லாப் புரிஞ்சிக்கணுங்கறதுக்காக இல்லே; ஏன்னா - ஏற்கெனவே இந்தக் குடும்பத்தோட நான் கொஞ்ச நாள் பழகியிருக்கேன்'' (ப. 86)

என்று கூறுவது, அவளுக்கு இந்த வீட்டோட ஒவ்வொரு பகுதியும் முன்னமே பழக்கமான இடமாகத் தோன்றுவது, இதுவரை பார்த்தறியாத நந்தகுமாரின் பெரியம்மாவைப் பற்றி யாராவது பேசும்பொழுது அவளுக்கு அழுகை வருவது, பெரியம்மா பாடிய பாடலை முன்னர்க் கேட்டிராத நிலையில் அவள் பாடுவது ஆகியவை இன்பாவிற்கும் மற்றவர்களுக்கும் குழப்பத்தையும் வியப்பையும் தருகின்றன. இறந்து போன பெரியம்மாவிற்குப் படையல் எடுக்கும் போது அவளது உருவப்படத்தை நேரில் பார்த்தது போல இன்பா வரையும்பொழுது, பிறரது குழப்பம் உச்ச நிலையை அடைகிறது. மறதி நோயிலிருந்து மீண்ட இன்பா ஜமீன்தாரைப் பார்த்து,

''நீங்க ஏற்கெனவே செஞ்ச பெரியம்மாவின் கொலையைப் பார்த்திட்டிருந்தவள், இந்த ரெண்டு கண்ணாலே'' (ப. 183)

என்று கூறி அதிர்ச்சி அடைய வைக்கிறாள். ஆனால் இன்பா, தான் இந்த கொலைக்கு உடந்தையாயிருந்த மேஸ்திரி நல்லசிவத்தின் மகள் என்ற உண்மை தெரிய வந்தபோது மயக்கமடைகின்றாள். அதன் பின் மறதிநோயும், மறதி நோயால் பாதிக்கப்பட்டிருந்த மனச்சிக்கலும் விடுபடுகிறது.

எனவே உளம்சார் மறதிநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிர்ச்சி ஏற்பட்ட சூழலை மீண்டும் சந்திக்கும்போது அந்த அதிர்ச்சி விலகிப் பழைய நினைவு அடைவர் என்பது புலனாகிறது.

உடல்சார் மறதி நோய் (Organic Amnesia)

உடலின் முக்கிய உறுப்பான மூளை பாதிக்கப்படும் பொழுது மனிதன் உடல்சார் மறதிநோய்க்கு ஆளாகின்றான். உளவியலார்,

''மூளைக்காயங்கள், நச்சுப் பொருட்கள் சேர்க்கையால் புறணி சிதைவுறுதல், மூப்பின் காரணமாக மூளை சீர்கேடான மாற்றங்களை அடைதல்'' (ஜேம்ஸ் டி. பேஸ் (தமிழ்) அ. பெசன்ட் கிரிப்பர்ராஜ், மு. நூ., ப. 86)

ஆகியவை உடல்சார் மறதி நோய்க்குக் காரணங்கள் என்று குறிப்பிடுகின்றார். விபத்தால் மூளைக் காயமடைந்து மறதி நோய்க்கு

ஆளான பெண்ணின் நிலையை இந்துமதியின் 'நினைவெல்லாம் நித்யா' என்ற நாவல் சித்திரிக்கின்றது.

'நினைவெல்லாம் நித்யா' என்ற நாவலில் பேருந்து விபத்தில் நித்யாவிற்குத் தலையில் அடிபட்டுக் காயமடைகின்றாள். காயம் குணமடைந்த பின் அவளுக்குப் பெயர் மட்டும் நினைவிற்கு வருகிறது. வேறு எதுவும் நினைவுக்கு வரவில்லை. ஆனால் அவள் தான் சிகிச்சை பெறும் மருத்துவரிடம் மருத்துவம், நோய்கள்பற்றி ஒரு மருத்துவரைப் போல் உரையாடுவது; அம்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பெண்ணொருத்திக்குப் பிரசவம் பார்ப்பது, ஒரு நோயாளியின் எக்ஸ்ரே பற்றி விவாதிப்பது ஆகியவற்றால் இவள் ஒரு மருத்துவர் என்பது தெரியவருகிறது. ஆனால் நித்யாவிற்கு திருமண வாழ்வு பற்றிய நினைவும், பெற்றோர் பற்றிய நினைவும் இல்லை. நித்யாவை அவளது பெற்றோர் அடையாளம் கண்டு கொண்டதில் அவள் திருமணமாகாதவள் என்பதும், மகப்பேறு மருத்துவராகப் பணியாற்றியவள் என்பதும் உறுதி செய்யப்படுகிறது. நித்யாவை அவளுக்குச் சிகிச்சை அளித்த மருத்துவரே (Doctor) மணந்து கொள்கிறார்.

> உடல்சார் மறதிநோயால் பாதிக்கப்பட்ட நித்யா,
>
> ''எனக்கு எதுவுமே புரியவில்லை. புதுசா பிறவி எடுத்த மாதிரி இருக்கு'' (ப. 133)

என்ற உணர்வுடையவளாய்க் காணப்படுகின்றாள்.

உடல்சார் மறதிநோயினால் பாதிக்கப்பட்டவர்களது நினைவானது எக்காரணம் கொண்டும் திரும்புவதில்லை. பழக்கப்பட்ட மனிதர் களையோ, பழக்கப்பட்ட சூழல்களையோ நினைவு கூரமுடிவதில்லை என்பது புலனாகிறது.

முடிவுகள்

'மறதிநோய்' என்பது ஒருவகை 'நினைவுக் கோளாறு' இது இயல்பாக ஏற்படும் மறதிநோயினின்றும் வேறுபட்டது.

மறதிநோய் அதிர்ச்சியாலும் விபத்தாலும் ஏற்படுகிறது. அதிர்ச்சியால் ஏற்படும் நோய் 'உளம்சார் மறதிநோய்' என்றும், விபத்தால் ஏற்படும் நோய் 'உடல்சார் மறதிநோய்' என்றும் பிரிக்கப் படுகிறது.

அதிர்ச்சியால் ஏற்படும் 'உளம்சார் மறதிநோய்' தொடர்பான நிகழ்ச்சிகள், பொருட்கள், மனிதர்களைக் காணும்போது மறந்து போனவை நினைவிற்கு வர மறதிநோய் நீங்கி விடுகிறது.

உடல்சார் மறதிநோயில் மூளையில் ஏற்படும் காயத்தினால் காயம் ஆறிய பிறகு கூடத் தன்னைப் பற்றிய எதுவும் நினைவுக்கு வராதவர்களாய், புதியவர்களாய் வாழுகின்றனர்.

அறிவு என்னும் கருவி

மீனாகுமாரி கனகராஜ்

ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம் - 627 802

வள்ளுவப் பெருந்தகை மனித குல மேம்பாட்டிற்குத் துணை செய்யக்கூடிய அறிவு என்னும் களைக் கொல்லியைக் கீழ்க் கண்டவாறு ஐந்து நிலைகளில் வலியுறுத்தியுள்ளமையை அறியலாம்:

1. காணும் அறிவு, 2. பேணும் அறிவு, 3. ஆக்கும் அறிவு, 4. காக்கும் அறிவு, 5. உயர்த்தும் அறிவு ஆகியவையாகும்.

காணும் அறிவு

தான் காணக்கூடிய சக மனிதர்களின் பழக்க வழக்கங்கள், கேட்டறியும் கருத்துக்கள், பயன்படுத்தும் பொருட்கள் தான் கற்றுத் தெளிய விரும்பும் நூல்கள் முதலான பலவற்றைச் சந்திக்கின்ற மனிதன், தனக்குத் தேவையான நல்லதைப் பெறவும் அல்லதைத் தவிர்க்கவும், அறிவின் துணையை நாடி அறிய வேண்டியவனா யிருக்கிறான்.

''எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்''

''எப்பொருள் எத்தன்மைத்தாயினும்''

அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், அவற்றின் உண்மைப் பொருளைக் கண்டு தெளிய சிந்தனைக் கூர்மை துணை நிற்க வேண்டும்.

இவ்வாறு உண்மையைக் கண்டு தெளிந்து, உலகியல் புரிந்து, சிறுமைப் பண்பகற்றி, சிறியார் தொடர்பு நீங்கி, பண்பட்ட பகுத்தறிவின் நுட்பம் தெரிந்து வாழ்பவனையே ''அறிவாளன்'', ''பேரறிவாளன்'', ''அறிவுடையார்'', ''மதிநலம் உடையார்'' என்று அடையாளம் காட்டுகிறார் வள்ளுவர்.

பேணும் அறிவு

உண்மை கண்டு தெளிந்த அறிவினால், அறிந்த உண்மைப் பொருளை ஏற்று, பின்பற்றிப் போற்றி வாழ்வானேயானால், அது அவனையும் அவனது உறவுச் சூழலையும், வாழும் சமுதாயத்தையும் துயரின்றிக் காக்கும் என்பது வள்ளுவர் தரும் உறுதிமொழியாகக் கொள்ளலாம்.

''இடுக்கண் வந்த போதும் நடுக்கின்றி வாழ்வதும்'', ''உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை'' அதாவது அறிவு என்பது உள்ளத்தில் ஊக்கம் குன்றாதிருத்தல் என்பதை உணர்த்தும், ''மதி நுட்பமிக்க நூலறிவை'' தொடர்ந்து பெறுவதும் ''நிலையற்றவற்றை நிலைத்தது என்று எண்ணி ஏமாறுகின்ற புல்லறிவான்மை''யைப் போக்குவதும், ''நுணங்கிய கேள்வியறிவே வணங்கிய வாயினர்'' ஆக்கும் என்ற உண்மை தெரிந்தும், தன்னை அறிவின் துணை கொண்டு பேணிக் காத்து பெருமைக்குரியவனாக தன்னை உருவாக்கிக் கொள்வது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கிடைக்கும் வாழ்வின் அருமைப்பாடென்பதை வள்ளுவர் உணர்த்தக் காணலாம்.

ஆக்கும் அறிவு

வாழ்வின் செம்பொருள் உணர்ந்து அவற்றைப் பேணிக் காக்கும் அக்கறை மிக்க அறிவாளனின் அறிவு, பொது வாழ்விற்கும் பயன்படும் பொழுது அது ஆக்கும் அறிவாகச் செயல்படக் காணலாம்.

அறிவில் மேலோங்கியவனின் எண்ணம், சொல், செயல் யாவும் ஆக்கத்தைத் தரும் பயன்மிக்க செயலாக அமையவேண்டும். உதாரணமாக, ''ஊரார் பசித்துயரம் போக்கும் ஒரு பழு மரம்'' போலவும், ''மனநோய் போக்கும் ஒரு மருந்து மரமாகவும்'' விளங்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, அறிவாளன் உயிர்க்குலம் காக்கும் பொருட்டு ''தன் செல்வத்தையே அள்ளித் தரும் வள்ளலா''கவும் விளங்கி ஆக்கம் புரிவான் என்று அறிவாளனை அடையாளம் காட்டுகிறார் வள்ளுவர்.

''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு''

அதாவது அறிவாளனின் அறிவைப் போல அவனது செல்வமும், சமூக ஆக்கத்திற்குப் பயன்பட வேண்டுமென்பது பொய்யாமொழிப் புலவனின் கருத்தாகின்றது. ஏனெனில் அறிவின் உச்சம் அணுகுண்டு களை ஆக்கி, கோடிக்கணக்கான உயிர்களைக் கொன்று குவிக்க உதவுமானால் அது விலங்கறிவு என்பது வள்ளுவனின் தீர்ப்பு. அதனால் ஆக்கும் அறிவே ஒரு அறிவாளனின் செயலுக்கு அடையாளமாக வேண்டுமென்பதே வள்ளுவரின் எண்ணமாகக் கொள்ளலாம்.

காக்கும் அறிவு

ஒரு மனிதனின் அறிவு மெய்பொருள் அறிவாக விளங்க வேண்டுமானால் நற்பண்பையும், நற்செயல்களையும் பேணும் அறிவாய் வளர்ந்து வாழ்க்கைப் போக்கில் தன்னையும், தான் சார்ந்த சமுதாயத்தையும் ஆக்கம் பெறச் செய்கின்றன. செயல்

அறிவாக மலர்ந்து, தீமையும் தீவினையும் நெருங்காமல் காக்கும் எச்சரிக்கை அறிவாகவும் செயல்பட வேண்டுமென்பதை குறட்பாக்கள் உணர்த்துகின்றன.

மனிதனின் அறிவு அவனை அவனிடமிருந்தே முதலில் காத்துக் கொள்ளும் திறப்பாட்டுடன் விளங்கவேண்டும். குறிப்பாக மனிதன் தன் மனக் கோட்டங்கள், மயக்கங்கள், செருக்குகளி லிருந்து தன்னைக் காத்துக் கொள்வது மிக இன்றியமையாதது. ஏனெனில் ''வருமுன் காவாதார் வாழ்வு வைத்தூறு போலக் கெடும்'' என்பது வள்ளுவர் தரும் எச்சரிக்கை மொழியாகும். அடுத்து புறவாழ்வின் கேடுகளிலிருந்து மனிதன் தன்னையும் தன்னைச் சூழ்ந்த மனித சமூகமும் தோல்விகளுக்கும், கேடுகளுக்கும், தீராத துயரங்களுக்கு ஆளாகாதபடி காத்துக் கொள்வதில் கவனம் கொள்ள வேண்டுவது அறிவாளனின் கடமை என்று வள்ளுவம் வற்புறுத்தக் காணலாம்.

ஒவ்வொரு மனிதனினும் குற்றமான நிச்சயமற்ற வழிகளில் ஆதாயம் தேட ஒருபோதும் முயலாமல் ''ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினையை'' ஒருபோதும் ஊக்கப்படுத்தாமல், ''எண்ணித் துணியும் செயலாக்கம்'' உடையவனாய் விளங்குபவனே அறிவாளனாவான் என்பது வள்ளுவரின் கருத்து. இத்தகைய அறிவாளனைத் தேடி செல்வம் தானே வந்து சேருமென்று சொல்லுகின்ற முறையில், ''அதனறிந்து வெஃகா அறிவுடையாச் சேரும் திறனறிந்து ஆங்கே திரு'' என்பர்.

மேலும் சிற்றின்பத் தேடலால் ஒழுக்கக் கேடுகளுக்கு உள்ளாகி உயிர்வதைப்படும் வாழ்க்கையிலிருந்து மனித சமூகம் காக்கப்பட வேண்டுமானால் அறிவின் துணை இன்றியமையாததென்பதையும் வள்ளுவம் அறுதியிட்டுக் கூறுகின்றது. வாழ்வு என்னும் பயிரை அழிக்குமாறு நிலம் தேடி மேய்ச்சலுக்கு வருகின்ற கால்நடை களின் காவலற்ற செயல்போல் ஒழுக்கக் கேடுகள் மனித வாழ்வு என்னும் பயிரை அழித்துவிடும். நினைத்தபடி மேய்ந்து திரியும் விலங்குகளைப் போல் மனிதனின், கட்டுப்பாடற்ற மனத்தால், வாழ்வுப் பயிர் அழிந்துவிடாதபடி காக்க முடிந்த காவல்திறம் அறிவு ஒன்றுக்கே உண்டு என்பதை,

''சென்ற விடத்தால் செலவிடாது ஓரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு''

என்று வள்ளுவர் கூறுகின்றார்.

இந்த அறிவு என்னும் ஆயுதத்தை காவல் பொருளாக காலத்தில் பயன்படுத்தி வாழ மறந்த காரணத்தால்தான் மனித உலகம்

எண்ணற்ற தீமைகளில் உழன்று தவிக்க நேரிடுகின்றதெனலாம். சிந்திக்கும் திறமிக்க அறிவாளனின் அறிவு என்னும் மருந்து தக்க காலத்தில் விழிப்புடன் செயல்பட்டால்,

''எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்''

என்றும் தெளிவுபடுத்துகிறார் வள்ளுவர்.

உயர்த்தும் அறிவு

மேற்கண்டவாறு மெய்ப்பொருளைக் கண்டு பேணி, ஆக்க முடையதாக்கி, காக்கின்ற வலிமை மிக்க அறிவு, உலக மக்களை ஒன்றுபடுத்தி ஓர் உலகமாக்கும் திறப்பாடு உடையதாக விளங்கு மென்பதையும் வள்ளுவரின் குறட்பாக்கள் மெய்ப்பிக்கும் இடங் களும் உண்டு. உயர்த்தும் அறிவு என்பது, அன்பையும், ஒற்றுமையையும் வளர்த்து, மனித சமூகத்தை சிதைவுகளிலிருந்து காத்து உன்னதமான வாழ்விற்கு உயர்த்தும் ஆற்றலுடையதாக செயல்படும் பாங்கினைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

அறிவின் கூர்மை ஆக்கத்திற்குப் பயன்பட்ட காலம் மாறி லட்சம், கோடி என்ற இலக்குகளில் மனித உயிரை அழிக்கும் அசுர வலிமைமிக்க கருவிகளை உருவாக்கி உலகை சுடுகாடாக்கி வரும் அவலம் உலகெங்கும் தொடர் நிகழ்ச்சியாக நிகழ்ந்து வரக் காணலாம்.

ஒருவனுடைய அறிவுத்திறம் என்பது தன்னையொத்த இன்னொரு மனிதனின் துன்பம் உணர்ந்து அக்கறையுடன் அத்துயர் களைய முன் வரும் அன்பு கனிந்த மனமே பண்பட்ட அறிவின் திறப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகும் என்று வள்ளுவர் கருதுகின்றார். இத்தகைய மனித நேயம் மிக்க அருளுணர்வு இல்லையெனில் அந்த அறிவாளனின் வாழ்வு என்பது

''அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்''

என்று கூறுமளவிற்கு வெற்றறிவு ஆகும் என்று இகழுகின்றார்.

மேலும் தனக்கொரு துன்பம் என்றால் துடிக்கும் மனிதன் அதேவிதமான துன்பச் சூழலில் மற்றொரு மனிதனும் அகப்பட்டுக் கொள்ளும் பொழுது தன்னைப் போலவே அவனும் வருந்துவானே என்று எண்ணம் மேலோங்காதிருக்கும் நிலையைக் கண்டு,

''தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் வெங்கோலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்?''

என்று வேதனை கலந்த வியப்பை வினாவாக்குகின்றார் வள்ளுவர். இதனையே மற்றொரு உயிரின் இன்ப துன்பச் சூழல்களில் தன்னை நிறுத்திப் பார்த்து முடிவு செய்யும் அறிவுத் திறம் மிக்க அன்பு நெறியே உயிர்களை மதித்துப் போற்றுதல் (Reverence for life) ஆகும் என்று அறிஞர் ஆல்பர்ட் சுவைட்சரும் கூறக் காணலாம்''.

மேலும் வினாத் தொடுத்த வள்ளுவரே, மீண்டும் ஒரு வினாவைத் தொடுத்து ஒரு தீர்ப்பையும் வழங்குகின்றார். அதாவது,

''அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தம்நோய் போல் போற்றாக் கடை''

தன்னையொத்த மற்றொரு உயிரின்-மனிதனின் வேதனையை உணர்ந்து அவன் அத்துயர் போக்க உதவ முன்வரவில்லையெனில் ஒருவன் பெற்ற அறிவினால் என்ற பயன் ஏற்பட முடியும்? என்கிறார் வள்ளுவர்.

மனித சமூகம், காலங்காலமாய் சாதி, மத, இன, மொழி பிரிவினைகள் பேசி, ஒன்றையொன்று அடுதலும், தொலைதலும், வாழ்க்கையைப் போர்க்களமாக்கி வந்துள்ளது. ஆனால் இதில் அறிவாளனின் பங்கும், பணியும் என்ன என்று சிந்திக்கும் வள்ளுவர்,

''அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்''

என்ற குறள் வழி ஒருவன் பெற்ற அறிவின் திறப்பாட்டிற்கு அடையாளம் யாதெனில் தன்னைத் துன்பபடுத்திய பகைவர்க்கும் தீமை ஏதும் செய்யாதிருப்பதே ஆகும். அதாவது ''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்து'' ''பகைவனுக்கு அருளும் நன்னெஞ்சம் கொண்டிருப்பதே'' அறிவாளனின் தலைமை சான்ற பண்பு நலத்திற்கு மணிமகுடமாய் அமையும் என்பது வள்ளுவன் கண்டுரைத்த உண்மையாகும்.

முடிவுரை

சட்ட சவுக்களாய் சாதிக்க முடியாமலும், நீதி போதனைகளால் மாற்ற முடியாமலும் சான்றோர் தம் பிரச்சார மொழிகளால் தேற்ற முடியாமலும், குற்றக் களைகளால் வாழ்வுப் பயிர் அழியும் சூழல் உலகெங்கும் மிகுந்து வருகின்றது. ''அறிவுடையார் ஆவது அறிவார்'' என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கிணங்க அறிவு நலம் சான்ற பேரளாளர்களின் நற்சிந்தனை என்னும் களைக் கொல்லியால் மட்டுமே துன்பம் தரும் களைகளை நீக்கி பயன் மிக்க வாழ்வுப் பயிர்களைக் காப்பாற்ற முடியும்.

அறிவியல் பாடமாக்கம் : இயற்பியல் பாடமாக்க உத்திமுறைகள்

நா. ஜானகிராமன்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சி - 24

அறிவியல் பாடமாக்கத்தில் பல்வேறு உத்திமுறைகள் (Techniques) பின்பற்றப்படுகின்றன. மாணாக்கர்களுக்கு எளிமையான முறையில் கருத்துக்களை விளக்க இந்த உத்திமுறைகள் தகும் முறைகளில் பின்பற்றப் பெறும். ஒரு இயற்பியல் கருத்தினை விளக்கும் முகத்தான் இடையீடு இன்றியும், ஒழுங்குமுறை ஒட்டமாகவும், தெளிவாகவும், செறிவாகவும் கருத்துக்கள் முன் வைக்கப் பெறுகின்றன. அவ்வாறு பாடங்களை விளக்க முற்படுகையில் சிற்சில குறைகளும் நிகழ வாய்ப்புள்ளது. அவற்றைக் கவனமுடன் அறிந்து கையாளும் வகையிலான பாடமாக்க உத்திமுறையினை இங்கே ஆராயலாம்.

உத்திமுறைகள் (Techniques)

எழுத்து, சொல், தொடர் என மூன்று நிலையில் கணிதப் பண்பாடு, செயல்முறை விளக்கம், சமன்பாடு விளக்கம், பண்பு மற்றும் விதிவிளக்கம் எனப் பல வகைகளாக வகுத்துக் காட்டலாம். மாணவர்களைச் சென்று சேருவதை மனத்தில் இருத்திப் பாடமாக்க முயற்சியில் ஈடுபட்டாலும், ஆங்காங்கே இவை பிறழ்ந்து விடுகின்றன. அவ்வாறு பிறழும் முறை சிற்சில இடங்களிலாயினும் அதுவே பாடமாக்கத்தின் நெறிமுறைகளை மாணாக்கர்களுக்குக் குலைப்பதாய் ஆகிவிடும். சாரியை, துணைவினைப் பயன்பாடு, வடசொல் பயிலல், நீண்ட சொல்லாட்சி எனப் பல்வேறு கூறுகள் பாடமாக்கத்தில் இடம் பெறுவனவாகும். உத்திமுறைகள் பல இடங்களில் நிறை வுடையனவாகவும், சிற்சில இடங்களில் குறையுடனும் காணப் படுகின்றன. இவற்றைக் கண்டறிந்து களைதல் வேண்டும்.

இரு கோணங்களில் ஓர் செய்தி (One Concept in Di-angle)

இயற்பியல் கருத்துக்கள் பல்வேறு முறையில் விளக்கம் பெறுகின்றன. ஒன்று நேரடி முறை (Direct), மற்றொன்று மறைமுக முறை (Indirect) இதனினும் மேலோங்கி ஒரே செய்தியினை இரு

கோணங்களிலும், ஒரே செய்தியினை அடியொற்றிய தொடர் விளக்கம், சமன்பாடு, குறியீடு விளக்கம் என மூன்று நிலைகளிலும், அவை மேலும் செய்முறை விளக்கத்துடனும் இடம் பெறுமாறு அமைக்கப்பட்டுள்ளன. இங்கு ஒரு செய்தியின் இருகோண விளக்கம் தரப்படுகிறது.

> ''ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவை ஒரு கொள்கலத்தில் அடைத்துப் பருமன் மாறா நிலையில் வெப்பநிலை உயர்த்தப் படுமாயின் அதன் அழுத்தம் அதிகரிக்கும். எனவே, ''மாறாப் பரும நிலையில் ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள வாயுவின் அழுத்தம் அதன் சார்பிலா வெப்பநிலைக்கு நேர்விகிதத்தி லிருக்கிறது என்பதை அறியலாம்'' (உயிரி இயற்பியல், ப. 6)

ஒன்றன் செயல் இன்னொன்றின் கருத்து விளக்கமாக அமைகிறது. 'எனவே' என்ற சொல்லாட்சிக்குப் பின்னர் வரும் கருத்துக்கள் விதி வரையறையினைப் போன்றுள்ளது. வாயுவை கொள்கலனில் அடைத்து பருமன் மாறாத நிலையில் வெப்பநிலை உயர்த்தப்படும் என்பது ஒரு செய்தி விளக்கம். அதன் பிறகு செறிவான நிலையில் முற்சொன்னதன் அடிப்படையில் வரையறை செய்யப்பட்டுள்ளது. இரண்டின் கருத்தும் ஒன்றே ஆகும். சார்பிலா வெப்பநிலை - மாறாப் பருமநிலை - குறிப்பிட்ட நிறை - வாயு அழுத்தம் - நேர்விகிதம் போன்றன வரையறைக்குள் நிற்கின்ற செறிவுச் சொற்களாகும். இதனை, தொடரில் கருத்து விளக்க உத்தியாகக் கொள்ளலாம்.

தடித்த எழுத்துப் பயன்பாடு (To uses in Bold letter)

தடித்த எழுத்தில் எழுதப்படும் எழுத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கொள்ளப்படும் கருத்துக்களாகும். அவை, குறியீடாக, குறியீட்டு விளக்கமாக, அடிக்குறிப்பாக என எவை யாகிலும் இருக்கலாம். ஒன்றன் இன்றியமையாமையைக் கருதி தடித்த எழுத்து பயன்படுத்தப் படுகின்றது. ஒரு பத்தியின் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும், அப்பத்தியின் செய்திக் கருவிற்கு அவ்விடம் வலிமை சேர்க்கும் வண்ணமாகவும் இருப்பின் அவை தடித்த எழுத்தில் அமையப்பெறும். சில இடங்களில் விதிகள், வரையறைகள், கோட் பாடுகள்கூட தடித்த எழுத்தில் பொறிக்கப்படுகின்றன. நியூட்டனின் இரண்டாவது விதி இவ்வாறு தடித்த எழுத்தில் காணப்படுகின்றது.

> (எ.டு) ''ஒரு பொருளின் உந்த மாறுபாடு வீதமானது, அதன் மீது செயல்படும் விசைக்கு நேர்விகித சமமாய் அமைவதோடு அவ்விசை செயற்படும் திசையிலேயே உந்த மாறுபாடும் ஏற்படும்'' (ப. 297)

தடித்த எழுத்தில் நியூட்டன் இரண்டாம் விதி இவ்வாறு தரப்பட்டுள்ளது.

கொடுக்கப்பட்ட ஒரு நேரத்தில், துகளொன்றின் உந்த மாற்றம் அதனை விளைவிக்கும் விசையின் தாக்களவைக்குச் சமனாய் அதே திசையிலிருக்கும். (பொறியியல்கார் நிலை இயக்க விசையியல், ப. 297)

தாக்களவையின் பரிமாணங்களை விளக்குமிடத்து இந்த நியூட்டனின் இரண்டாம் விதியானது மேற்கண்டவாறு தடித்த எழுத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாணாக்கர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் தொடரோட்டமாக வரும் செய்தி விளக்கத்தில் அடையாளப்படுத்தியும், அவற்றிலிருந்து சற்றே வேறுபடுத்தியும் காட்டும் வண்ணம் இந்த விதி விளக்கங்கள் அமைந்துள்ளன. இடம் பெற்றுள்ள இரண்டாவது வகை விளக்கத்துடன் விளக்க வந்த ஒரு கருத்து முடிவடைந்து விடுகின்றது. இவ்வாறு தடித்த எழுத்துப் பயன்பாட்டு முறை பாடமாக்கத்தில் நிகழ்கின்றன.

குறிப்பு தரும் முறை (Keep the Footnote)

இயற்பியல் கருத்துக்கள் பல கணிதச் சமன்பாடுகள் கொண்டு தீர்க்கப்படுகின்றன. அவ்வாறு தீர்க்கப்படும் சூழலில் ஏதேனும் ஒன்றினை எடுத்துக் கொண்டு (அ) ஒன்றினை விலக்கி கணக்கியலில் சேர்க்கும் முறை உண்டு. விதிகளை நிறுவதற்கும் இந்த கணிதச் சமன்பாடுகளே உறுதுணை புரிகின்றன. அவ்வாறு சமன்பாட்டு கணக்கீட்டுப் பதிலீடுகளில் ஏதேனும் ஒன்று நீக்கப்படும். (அ) விலக்கப்படும். அந்த செய்தியினைத் தெரிவித்தாக வேண்டும் என்பதனால் இடையிலோ, இறுதியிலோ அல்லது முதலிலோ குறிப்புத் தரப்படுகின்றன. அவ்வாறு தரும் குறிப்புகள் நமக்குத் தெளிவைத் தருவனவாய் இருக்கும். விளங்கிக் கொள்ள ஏதுவாய் அமையும்.

கோளியக்கம் பற்றிய (Planetary motion) கெப்ளரின் மூன்றாவது விதி விளக்க இறுதியில் ஒரு குறிப்பு தரப்பட்டுள்ளது.

> (எ.டு.) குறிப்பு : இங்கு ஞாயிற்றின் முடுக்கம் புறக்கணிக்கப்பட்டு அது ஓய்விலுள்ளதாகக் கொண்டு கணிப்புகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன) (பொறியியல்சார் நில இயக்கவிசையியல், ப. 400)

கணக்கீட்டுப் படிநிலைகளில் ஞாயிற்றின் முடுக்க நிலை என்ன வாயிற்று என்ற ஐயப்பாடு எழும். அந்த ஐயப்பாட்டு மயக்க நிலையினைத் தெரிவித்தற் பொருட்டே இந்த குறிப்பு அடைப்புக் குறியிட்டு தரப்பட்டுள்ளது. நீண்ட கணிதச் சமன்பாடு மற்றும் கணக்குத் தீர்வுகளில் ஆங்காங்கே சில அடைப்புக் குறியிட்ட கருத்துக்களும் காணப்படுகின்றன. பெரும்பாலும் குறிப்பு தொடக்கத்தில் தரப்படுவதில்லை என்பது நோக்கற்பாலதாகும்.

வேற்றுமை உருபும்; சாரியையும் (Case marker)

இலக்கியக் கருத்துக்களாயினும் அறிவியல் கருத்துக்களாயினும் அவற்றினைத் தெளிவுபடுத்துவதே வேற்றுமை உருபும், சாரியையும் என்றால் மிகையாகாது. தேவையற்ற இடத்தில் இவைகள் வரலும், குறிப்பிட்ட இடங்களில் இவை வராமையும் கருத்து மற்றும் பொருண்மை மயக்கத்தை (Semantic Ambiquity) ஏற்படுத்தும்.

> *(உ.ம்) சில நீர்மங்கள் படிகத்திற்குச் செலுத்தப்படும் உயர் மின்னழுத்தத்தில் மின் காப்பு (insulation) இழந்துவிடக் கூடும். (மீயொலி, ஓர் அறிமுகம், ப. 41)*

இத்தொடர் விளக்கத்தில் சில மாறுதல் தேவைப்படுகின்றது. உயர் மின்னழுத்தத்தினால் - மின்காப்பினை - (அ) மின்காப்பை இழந்துவிடக் கூடும் என்றால் பொருள் தெளிவுடையதாய் இருக்கும். 'மின்னழுத்தத்தில் மின் காப்பு' என பொருள் தாக்கியுள்ளதுபோல் தோன்றுகின்றது. இவ்விடத்துத் தெளிவு தேவைப்படுகின்றது. உயர்மின் அழுத்தத்தினால் எனும்போது காரணத்தை விளக்கி விடுகின்றோம். 'மின்காப்பினை' என் கையில் வினையோடு கூடிய பெயரினையும் விளக்கி நிற்கின்றது.

மேலும்,

> *எஃகுத் தகடுமீது படிகங்கள் ஒட்டப்படுகின்றன (ப. 43)*

இதில், 'எஃகுத் தகட்டின் மீது' என இன்சாரியை இணைத்து எழுதினால் சொல்லழுத்தமும், பொருளழுத்தமும் தெரிகின்றது. இத்தகைய அழுத்தத்திற்கும், தெளிவிற்கும், வேற்றுமை உருபுகள், சாரியைகள் பயன்படுத்தப் பெறுகின்றன. அறிவியல் கருத்துக்களில் செறிவை விடத் தெளிவே முக்கியம். தெளிவினால் மட்டுமே கருத்துப் பரவல் எளிதில் அடைய முடியும். கருத்துணர்த்தலுக்கும் அதுவே சிறந்த வழியாகும்.

மீண்டும் வரும் சொற்கள் (Repeat words)

இயற்பியல் கருத்து விளக்கம் மட்டுமன்றி, எவற்றிலும் ஒரே சொல் மீண்டும், மீண்டும் வரவைத் தவிர்க்க வேண்டும். அவ்வாறு வந்தால் அங்கே பொருள் குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு. சிறு பத்தியிலும், பெரிய அளவிலான பத்தியிலும் இத்தகையக் குறைபாடுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. பின்னர், அதன்படி அவ்வாறே, அதனால், இவ்வாறு, எனவே, என, இவை போன்ற பல சொற்கள் திரும்பத் திரும்ப வந்து தொடரில் அமர்கின்றன. இதனைத் தவிர்த்தல் சிறப்பாகும்.

(உ-ம்) முதுபழங்கொள்கைப்படி கண்ட முடிவின்படி எந்தவொரு திண்மத்திற்கு அதன் பருமன் மாறா வெப்ப எண் வெப்ப நிலையைச் சாராதிருக்க வேண்டும். (அடிப்படைத் திண்ம நிலை இயற்பியல், ப. 95)

இதில் கொள்கைப்படி, முடிவின்படி என இரண்டு சொற்களில் படி என்ற சொல்லினைத் தவிர்த்தல் வேண்டும்.

முடிவுரை

1. இயற்பியல் பாடமாக்கத்தில் உத்திமுறைகள் சிறப்பிடம் வகிக்கின்றன.
2. இரண்டு கோணத்தில் ஒரு செய்தியும், தடித்த எழுத்துப் பயன்பாடும், குறிப்புத் தருகின்ற முறையும் விளக்கப்பட்டன.
3. வேற்றுமை உருபும், சாரியையின் பயன்பாடும் பாடமாக்கத்தில், தொடரில் பயன்படுத்தும் முக்கிய சொற்களாகும்.
4. 'கூறியது கூறல்' என்ற குற்றத்தின் அடிப்படையில் மீண்டும் வரும் சொற்களைக் (Repeat words) களைய வேண்டும்.
5. இயற்பியல் பாடமாக்கத்தில் மேலும் பல உத்திமுறைகள் கையாளப்படுகின்றன என்பது குறிப்பிடற்பாலது.

அப்போதிருந்த இடைவெளியில் - வேளாண்மை

பெ. வெள்ளைச்சாமி

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
மதுரை - 625 104

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புதுக்கவிதையின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். புதுக்கவிதைகள் புதிய புதிய சிந்தனைகளோடும் சமூகச் சிக்கல்களை யதார்த்த நெறியோடும் முன்னிறுத்தி வெளிவருகின்றன. ஏனைய இலக்கிய வகைகளைப் போலவே புதுக்கவிதைகளும் சமூகத்தில் நடப்பியல் நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கிப் பதிவு செய்கின்றன. அந்த வகையில் வேளாண்மை பற்றியும் அதிலுள்ள இடர்ப்பாடுகள் பற்றியும் விளக்கும் கரிகாலனின் 'நாற்றுக்களின் மரணம்' மற்றும் 'உழுதவன் கணக்கு' என்னும் கவிதைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேளாண்மை

நமது நாட்டின் முதன்மை வாய்ந்த தொழில்ாக இருப்பது வேளாண்மை. பண்டைத் தமிழ் மக்கள் வேளாண்மைத் தொழிலை உயிர்த்தொழிலாகவும் உயரிய தொழிலாகவும் போற்றி வந்தனர். அவர்கள் பயிர்த்தொழிலைச் செய்த முறை, பயிர் வகைகள், அவர்களது காலத்திலிருந்த தொழில் நுணுக்கங்கள், அதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றைச் சங்க இலக்கியங்களிலும் அதனைத் தொடர்ந்து வந்த இலக்கியங்களிலும் காண முடியும். ஆனால் தொல்காப்பியர்,

''வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி''

(தொல். பொருள்-மரபு-81)

என்று குறிப்பிடுகின்றார். அதாவது உழுது உண்ணக்கூடிய தொழிலைச் செய்பவர்கள் வேளாண் மாந்தர் என்று கூறுகின்றார். வள்ளுவர்,

''தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு'' (குறள்-212)

என்கின்றார். இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள வேளாண்மை என்ற சொல் உதவி என்னும் பொருளில் கையாளப்படுகிறது.

இருப்பினும் வள்ளுவர் வேளாண்மைத் தொழிலை முன்னிலைப் படுத்தி 'உழவு' என்ற ஓர் அதிகாரத்தை அமைத்து, அதில் உழவு, உழவியல் நுட்பம், உழும் முறைகள், பயிர்ப்பாதுகாப்பு என்று பயிர்த்தொழிலுக்கு வேண்டிய அனைத்துச் செயல்களையும் குறிப்பிடுகிறார்.

உழவர் சமுதாயமும் வாழ்க்கை நிலையும்

பொதுவாக உழவர்களின் வாழ்க்கை நிலை நடப்புச் சமூகத்தில் மிகவும் பரிதாபத்திற்குரியதாகவே காணப்படுகிறது. தொல்காப்பியமாகட்டும் அல்லது அதனைத் தொடர்ந்து வந்த இலக்கியங்களாகட்டும் உழவுத்தொழில் ஓர் உயரிய தொழிலாக இருந்ததைக் காட்டத் தவறவில்லை. ஆனால் யதார்த்த வாழ்க்கையில் உழவர்களின் வாழ்க்கை நிலை பல்வேறு இடர்ப்பாடுகளைக் கொண்டதாகவே காணப்படுகிறது. அதனை, பாரதிதாசன்,

''ஏலாது படுக்கும் எண்சாண் உடம்பை
நாலுசாண் அகன்ற ஓலைக் குடிசையில்
முழங்கால் முட்டு முகம் வரச் சுருட்டி
வழங்கு தமிழரசி வளைந்த வில்லெனக்
கிடப்பவன் பகலெல்லாம் கடுக்க உழைப்பவன்
குடியானவன்'' (பாரதிதாசன்)

என்று உழவனின் இல்லற வாழ்க்கையையும்

''தூசின்றி நெல்மணியைத் தூற்றித்தரும் தோழர்கட்குக்
காசில்லை கட்டத்துணியில்லை - ஆண்டையர்க்கு
வேசு கிட்டப்பா புகையிலை'' (பாரதிதாசன்)

என்று உழவனின் பொருளாதார வாழ்க்கையையும் படம்பிடித்துக் காட்டுகின்றார். இதைப் போலவே இன்று வெளிவருகின்ற புதுக்கவிதைகளின் உள்ளடக்கங்களும் உழவர்களின் அன்றாட நிகழ்வுகளைத் தெளிவாகக் காட்டுகின்றன. அந்த வகையில் 'நாற்றுக் களின் மரணம்' என்ற கவிதை நவரைப்பட்டத்தில் நிலத்தடி நீரை நம்பி பயிர்த்தொழில் செய்வதைக் குறிப்பிடுகிறது. நிலத்தடி நீரை எடுப்பதற்கு மின்சாரம் மிகவும் இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. இதனை,

''பொட பொடன்னு சத்தம் கேட்டது
எரிஞ்சி போச்சி
செல்லியம்மன் கோவில் டிரான்சுபாரம்
பொட்டையன் சொன்னான்
குபுக்குன்னு நெருப்பு நெஞ்சுக்குள்ள பத்திக்கிச்சு''
(நாற்றுக்களின் மரணம்)

என்று குறிப்பிடுகிறார். டிரான்சுபாரத்தில் நெருப்பு எரிந்தவுடன் விவசாயியின் நெஞ்சுக்குள்ளும் தீப்பற்றிக் கொண்டதாகக் காட்டுகிறார். எரிந்துபோன டிரான்சுபாரம் உடனே சரிசெய்யப் பட்டதா? இல்லை..

''ஆச்சு அஞ்சி நாளு
இருபது நாளாவது ஆவுமே இன்னும்''

(நாற்றுக்களின் மரணம்)

என்று ஐந்து நாட்களாகியும் சரிசெய்யப்படாமல் இருப்பதை நினைவுகூர்கிறார். அடுத்ததாக, டிரான்சுபாரம், சரிசெய்வதற்கு மோட்டார் வைத்திருக்கும் ஒவ்வொருவரிடத்திலும் ரூபாய் வசூல் செய்து டிரான்சுபாரம் சரிசெய்ய வருபவர்களுக்குக் கொடுக்கும் அவலத்தையும் காட்டுகிறார்.

''ஆர்சு பவருக்கு இவ்ளோன்னு
வசூல் பண்ணனும்
ஒவ்வொரு மோட்ருகாரங்கிட்டயும்
பந்திவைக்கனும்
கட்டயில போற கரண்டு காரணுவளுக்கு''

(நாற்றுக்களின் மரணம்)

என்கின்றார். இருபது நாட்களுக்குப் பிறகும் டிரான்சுபாரம் சரி செய்யப்படாததால் நீரின்றி வறண்டு பயிர் சாகின்றது. இதனை,

''நஷ்டத்தவிட கொடும
பச்ச புள்ளயாட்டம் வளர்த்த
பயிர் சாவும் வேதன'' (நாற்றுக்களின் மரணம்)

என்று கூறுகிறார். ஆக, விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தைவிடக் கொடுமை யாதெனில் செழித்து வளர்ந்த பயிர் சாவும் வேதனை என்று காட்டுகிறார்.

பட்டம் அல்லது பருவம்

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பது பழமொழி. இந்தப் பழமொழி ஆடிமாதத்தில் நெல் விதைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. பொதுவாக, தமிழகத்தில் கார், சம்பா, குறுவை, பிசானம், நவரை, கோடை எனும் பட்டங்கள் உள்ளன. இந்தப் பட்டங்கள் அல்லது பருவங்கள் எல்லாமே நெற்பயிரை அடிப்படை யாகக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளன. தட்பவெப்ப நிலையைக் கருத்தில் கொண்டு வேளாண்மை விஞ்ஞானிகள் தமிழகத்தை ஏழு பகுதிகளாக பிரித்துள்ளனர். அவை 1. அதிக மழைப்பகுதி, 2. மலைப்பகுதி, 3. காவிரிப் பாசனப்பகுதி, 4. மேற்குப் பகுதி, 5.

வடமேற்குப் பகுதி, 6. வடகிழக்குப் பகுதி, 7. தெற்குப் பகுதி என்பனவாகும். இவற்றில் முதல் பருவம் (சம்பா) இரண்டாம் பருவம் (குறுவை) இரண்டும் தமிழகம் முழுமைக்கும் உள்ள பொதுவான பருவங்களாகும். இவையன்றி ஒவ்வொரு பகுதிக்கும் சிறப்பான பட்டங்களும் உள்ளன. காட்டாக, 'தாளடி' என்பது காவிரிப் பாசனப்பகுதிக்குரிய பட்டமாகும். அதேபோலப் 'பிசானம்' என்பது திருநெல்வேலி பகுதிக்கு மட்டுமே உரிய பட்டமாகும். ஆனால் நவரை என்பது வடகிழக்குப் பகுதியான விருத்தாசலம், வேலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், தென்ஆற்காடு போன்ற பகுதிகளில் காணலாகும் பட்டமாகும். நவரைப் பட்டம் என்பது முழுக்க முழுக்க நிலத்தடி நீரையே நம்பியுள்ள பருவமாகும். இதனை, கவிஞர் தன்னுடைய கவிதையில் பதிவு செய்கிறார்.

''பாளம் பாளமா வெடிச்சுக் கெடக்கு
நவரப்பட்டத்து நடவு'' (நாற்றுக்களின் மரணம்)

என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து நவரை என்பது பருவ மழை இல்லாத நேரத்தில் தொடங்கும் பட்டம் என்பது தெரிய வருகிறது. அதேபோல முதல் பருவத்திலும் பயிர்த்தொழில் செய்திருக்கிறார்கள் என்பதையும் அது இயற்கையாக வரும் பருவ மழையை நம்பி நடவு செய்யப்பட்டது என்பதையும் அடுத்தடுத்த வரிகளில் பதிவு செய்துள்ளார்.

''அப்பப்ப மழையாவது பேயும்
சம்பாவாயிருந்தாலும்'' (நாற்றுக்களின் மரணம்)

என்று குறிப்பிடுகிறார். ஆக, கவிஞன் தனது கவிதைக்குப் பாடு பொருள் தேர்ந்தெடுக்க்ப்பட்ட பகுதியில் இருபோகம் (சம்பா, நவரை) பயிர்ச்சாகுப்படி முறை இருந்தது என்பது தெளிவாகிறது.

இயற்கை வேளாண்மை

இன்றைய வேளாண்மை விஞ்ஞானிகளும் விவசாயிகளும் அதிகமாக இயற்கைவழி வேளாண்மையை நாடுகின்றனர். இதில் வேதிப் பொருட்களின் உபயோகமின்றி முழுவதுமாக இயற்கையில் கிடைக்கக்கூடிய இலை தழைகளையே பயிருக்கு உரமாகப் பயன்படுத்திச் சாகுபடி செய்ய விழைகின்றனர். இயற்கை வேளாண்மையில் கிடைக்கப்பெறும் மகசூல் செய்கைவழி வேளாண்மையில் கிடைக்கக்கூடிய மகசூலோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைவாகவே உள்ளது. இருந்தபோதும் இயற்கைவழி வேளாண்மையில் பெறப்படும் பொருட்களால் உயிரினங்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் எவ்விதக் கேடும் ஏற்படுத்து

வதில்லை. ஆனால், அதிகமான வேதிப்பொருட்களைப் பயன்படுத்தி செயற்கைவழி வேளாண்மையில் நிறைய மகசூலைப் பெற்றாலும் அவ்வேதிப் பொருட்களின் தாக்கம் உணவுப் பொருட்களின் வழி மனிதர்களையும் பாதிக்கின்றன. ஆகவே, காலத்தின் நிலை உணர்ந்த கவிஞன் இயற்கை வேளாண்மையின் நன்மைகளைக் குறிப்பிடுகின்றார்.

''வேம்பு, வாக, நொணா
தழ போட்டு அழுத்தி
கிட்டத்திலே நின்னு கீரிபோட்டு
நெருக்கி நட்ட நடவு
குடுத்திருந்த தீனியாலே பொத கட்டுச்சி
திமிர்க்கிட்டு தூர் வெடிச்சு'' (நாற்றுக்களின் மரணம்)

என்று இயற்கை வழி வேளாண்மையை வலியுறுத்துகிறார். இதே கவிஞர் 'உழுதவன் கணக்கு' என்ற கவிதையில் செயற்கை வேளாண்மையால் உழவன் படும் பொருளாதாரக் கஷ்டங்களைப் பட்டியலிடுகிறார்.

''ஏரு ஓட்டுன டிரக்குக்கு
அள்ளிக் கொடுத்தேன் ஆடுவித்து அய்நூறு
அடி ஓரத்துக்கு அறநூறுன்னா
அம்மாடி எங்க போவேன்'' (உழுதவன் கணக்கு)

என்று, நவீன வேளாண்மைக் கருவிகளாலும் செயற்கை உரங்களாலும் அதிகப்படியான செலவினங்கள் வருவதாகக் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

உழவுத்தொழில் தற்பொழுது நலிந்து போய்க் கொண்டிருப்பதைக் கவிஞர் தன்னுடைய கவிதைகளில் குறிப்பிடுகிறார். நவீன வேளாண்மையில் ஏற்படும் பொருளாதார கஷ்டங்களையும் இயற்கை வேளாண்மையில் உள்ள நன்மைகளையும் யதார்த்த போக்கில் வலியுறுத்துகிறார். தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்த 'நம்பிக்கைகள்' வழிவழியாக இன்றும் பின்பற்றப் படுவதையும் பண்டைக் காலத்தில் உயரிய தொழிலாகப் போற்றப் பட்டு வந்த உழவுத் தொழில் இன்று அது பரிதாபத்திற்குரிய தொழிலாக விளங்குவதையும் காட்டுகிறார்.

திருக்குறளும் தகவல் தொழில் நுட்பமும்

வே. சசிகலா

ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

தகவல் தொடர்பு இன்றைய உலகில் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. இன்றைய நவீன தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் உலகமே சுருங்கி ஒரு கிராமமாகி விட்டது என்கின்றனர் தகவலியல் அறிஞர்கள். தகவல்கள் பலவற்றை அறிந்து கொண்டு அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றலையும் பெற்றுவிட்டால் அவனே, அவன் வாழும் சூழலில் மன்னன். ஆக தகவலறிந்திருத்தலும் அதைத் திறம்பட வெளிப்படுத்தும் ஆற்றலும் மனிதனின் இன்றைய கட்டாயத் தேவைகளாகி விட்டன.

திருக்குறளும், தகவல் தொடர்பும்

தகவலியலார் தகவல் தொடர்பு நிகழ வேண்டிய முறையினைப் பலவாறு விளக்குகின்றனர். தகவல் தொடர்பில் கருத்துப் பரிமாற்றம் என்பது உயிர் நாடியானது. தகவல் தொடர்பில் வெற்றியே கருத்துப் பரிமாற்றம்தான். கருத்துப் பரிமாற்றத்தில் ஊடகம் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. கருத்தைக் கூறுவோன் ஒரு புறமும், கருத்தைப் பெறுவோன் மறுபுறமும் இருக்க இடையே ஓர் ஊடகம் தகவலை நகர்த்துகின்றது. அந்த ஊடகத்தின் ஆற்றலைப் பொறுத்தே கருத்துப் பரிமாற்றம் வெற்றிகரமாக நிகழ முடியும்.

தகவல் தொடர்பியலார் குறிப்பிடும் இக்கருத்துக்களை வள்ளுவத்துடன் ஒப்பு நோக்கிப் பார்க்க முடிகிறது. திருவள்ளுவர் 'சொல்வன்மை' என்னும் அதிகாரத்தைப் பொருட்பாலின் அமைச்சியலில் படைத்துள்ளார். அதில் ஒருவரின் சொல்லாற்றல் எங்ஙனம் இருக்க வேண்டும், எங்ஙனமிருந்தால் சிறக்கும் என்பதை எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர். 'சொல்வன்மை' என்னும் அதிகாரத்தில் குறிப்பிடும் 'சொல்' என்பதை மொழி என்று கொள்ளலாம்.

மனிதன் சிந்திக்கும் திறன் பெற்றவன். மனித சிந்தனை மொழி இன்றியும் நிகழும். ஆனால் மனித இனத்தின் குறிப்பிடத்தக்க

வளர்ச்சி மொழியறிவாகும். எடுத்தியம்புவது மனிதத் தொடர்புக்கு இன்றியமையாதது. சிந்தனைகளில் பல எண்ணங்கள் தோன்றினாலும் எடுத்தியம்பப்படாத வரை அவை தோன்றாதவைகளாகவே கருதப் படும். மனிதன் மொழியின் வாயிலாகக் கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்கிறான். எனவே மனிதச் சிந்தனை என்ற மூலத்திலிருந்து மொழி என்னும் ஊடகம் வழி கருத்துப் பரிமாற்றம் நிகழ்கிறது. மொழி வாயிலாக நிகழும் மனிதத் தொடர்புகள் அறிவு பூர்வமாக முனைப்புடன் நிகழ்த்தப்பட வேண்டும். அங்ஙனம் நிகழ்த்தப்படும் கருத்துப் பரிமாற்றத்தில் மொழியின் பங்கு எங்ஙனம் அமைய வேண்டும் என்பதை வள்ளுவப் பெருந்தகை சொல்வன்மை என்னும் அதிகாரத்தில் தெளிவுபடுத்தி உள்ளார்.

தகவல் தொடர்பியலார் அனுப்புநர் பெறுநர் ஆகியோரை இருமுனைகளில் நிறுத்தி இடையில் ஊடகம் வாயிலாகத் தகவல் அனுப்பப்படுகிறது என்று கருத்துப் பரிமாற்ற நிகழ்வினை விளக்கு கின்றனர். இதனுடன் இணைத்து நோக்கினால் வள்ளுவர் குறளிலும் பேசுவோர், கேட்போர், மொழி, கருத்து ஆகிய நான்கு கூறுகளும் காணக் கிடக்கின்றன. இதனைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம்.

அனுப்புநர் - பேசுவோர்
பெறுநர் - கேட்போர்
ஊடகம் - மொழி (சொல்)
தகவல் - கருத்து

'சொல்வன்மை' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் 'சொலலவ்வலன்' (647), 'சொல்லுதல் வல்லார்' (648), 'உரை விரித்துரையாதார்' (650), 'பலசொல்லக் காமுறுவர்' (649), 'சில சொல்லல் தேற்றாதவர்', (649), என்ற தொடர்களில் பேசுவோரைக் குறிப்பிடுகின்றார். 'சொல்லுக' (644, 645) என்று ஏவல் தொனி யிலும் பேசுவோரை விளித்துக் கருத்துரைக்கின்றார். எனவே 'அனுப்புநர்' என்று தகவலியலார் குறிப்பிடுவதைத் திருவள்ளுவர் பேசுவோர் என்ற சுட்டுவதாகக் கொள்ளலாம். இதையொத்தே 'கேட்டார்' (643). 'கேளார்' (643) போன்ற தொடர்களில் கேட்போர் குறிக்கப்படுகின்றனர். இதனைத் தகவலியலார் குறிப்பிடும் பெறுநருடன் ஒப்பிடலாம். 'சொல்' (642, 643, 644, 645, 646) 'மொழி' (643) போன்ற தொடர்களில் ஊடகமாகிய மொழி குறிப்பிடப் படுகிறது. ஆக, சொல்வன்மை என்னும் அதிகாரத்தில் பேசுவோர், கேட்போருக்கிடையே மொழியை ஊடகமாக்கி, அதனைத் திறம் படப் பயன்படுத்தும் முறையினை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார் என்பது தெளிவு.

ஊடகம் - தடம்

தகவல் தொடர்பியலார் 'ஊடகம்'-என்பதை விளக்குகையில் அதில் 'தடம்' என்பதையும் குறிப்பிடுகின்றனர். பேருந்தும், புகை வண்டியும். நிலத்தில்தான் செல்கின்றன. எனினும் அவற்றின் தடங்கள் முறையே தார்ச்சாலையும், தண்டவாளமும். அதைப் போலவே கருத்துப் பரிமாற்றத்திற்கான ஊடகமாக மொழி இருந்தாலும் அதில் பல தடங்கள் இருப்பதையும் வள்ளுவத்தின் வழி சுட்டிக் காட்ட முடிகிறது. தடங்கள் தெளிவாக, இடரின்றி இருத்தல் வேண்டும். தடங்களில் இடரிருந்தால் கருத்துப் பரிமாற்றம் சரிவர நிகழ வாய்ப்பிருக்காது. 'மொழி' என்னும் ஊடகத்தில் 'பேசும் முறை' என்பது தடமாக அமைகிறது. 'கேட்டார்ப்பிணிக்கும் தகைமை' (643), 'சொல் காத்தல்' (642) 'திறனறிந்து சொல்லுதல்' (644), 'வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து சொல்லுதல்' (645), 'நிரந்தினிது சொல்லுதல்' (648), 'சில சொல்லுதல்' (649) போன்றவை வள்ளுவம் சுட்டும் இடரற்ற தடங்களாகும். மேற்குறிப்பிட்ட இத்தடங்களில் சொல் பயணித்தால் இடரின்றிக் கருத்துக்கள் கேட்போருக்குப் போய்ச் சேரும்.

இடரற்ற தடங்களைச் சுட்டிக் காட்டும் வள்ளுவர் தடங்களில் காணும் இடர்களையும் குறிப்பிடத் தவறவில்லை. 'பல சொல்லுதல்' (649), 'பயனிலாச் சொல் சொல்லுதல்' போன்ற தட இடர்கள் திருக்குறளில் சுட்டிக் காட்டப்படுகின்றன. பேசுவோர் பயன்படுத்தும் பேச்சு முறையில் இத்தனை இடர்கள் இருக்குமாயின் எதிர்பார்த்த விளைவு இருக்காது.

இடரற்ற தடங்கள்

மொழியாகிய ஊடகத்தில் இடரற்ற-தடங்கள் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டும் திருவள்ளுவர் அவை அமைய வேண்டிய முறையினையும் வலியுறுத்தத் தவறவில்லை. தெளிவு, கோர்வை, சுருக்கம் ஆகிய கூறுகள் இடரற்ற தடங்களில் இருக்க வேண்டும் என்பது திருக்குறள் கருத்து.

தெளிவு

சொற்கள், கையாளப்படுகின்ற முறையில், பல பொருள் பயக்கும் தன்மையன, ஒரு சொல்லின் அகப்பொருள் வேறாகவும், புறப்பொருள் வேறாகவும் அமையலாம். அது பேசுவோர் பயன் படுத்தும் முறையைப் பொறுத்து அமையும், எனவே சொல் பயன்பாட்டில் தெளிவு தேவை. சரியான கருத்துத் தொடர்பிற்குச் சொல் தெளிவு மிக அவசியம். இதனைக்

''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்'' (643)

என்ற குறட்பாவில் வள்ளுவர் விளக்கியுள்ளார். சொல் தொடர்பில் தெளிவை வலியுறுத்தும் வள்ளுவர் இக்குறட்பாவினால் அதற்கு இலக்கணமே வகுத்துவிட்டார் எனலாம். சொல் தொடர்பில் தெளிவு முக்கியம். இரு பொருள்படப் பேசுதல். மறைமுகமாகப் பேசுதல் போன்றவை இருந்தால் சொல்ல வருவது தெளிவாகப் புரியாது. எனவே இக்குறைகளைத் தவிர்க்கக் கூறும் வள்ளுவர் கேட்டாரையும் பிணிக்க வேண்டும்; நேரில் கேளாதாரும் அதைக் கேள்விப்பட்ட மாத்திரத்தில் கேட்பதற்கு அவாவுற வேண்டும் என்கிறார்.

கோர்வை

சொல்லில் கோர்வை தேவை என்கிறார் வள்ளுவர். பேசுவோன், சொல்லையும், பொருளையும் சூழ்நிலைய்யயும் கருத்தில் கொண்டு முறைப்படி இணைத்துப் பேச வேண்டும். அதாவது மனமும் மொழியும் இணைந்து பேசும் பேச்சுக்களாலேயே சரியான கருத்துப் பரிமாற்றம் ஏற்படும். இந்த மனம் மொழி இணைவை வள்ளுவர் 'நிரந்தினிது' என்று குறிப்பிடுகின்றார். கோர்வையாகவும், இனிமை யாகவும் பேசும் வல்லவனின் காலடியில் உலகமே ஏவல் கேட்கும் என்பது வள்ளுவர் வாக்கு : இதைவிடப் பெரிய தகவல் தொழில்நுட்ப கருத்து வேறெதும் உண்டோ.

சுருக்கம்

சொற்சுருக்கமும் திருக்குறளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சில சொற்களால் புரிய வைக்கக்கூடிய ஆற்றல் அற்றவனே பல சொற்களை நாடுவான் என்கிறார் வள்ளுவர். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் தனிக்கலை. இக்கலைக்கு கருத்துப் பரிமாற்றத்தில் தனிப் பங்குண்டு. அதனையும் வள்ளுவர் குறிப்பிடத் தவறவில்லை.

மனிதருடன் மனிதர் கொள்ளும் உறவில் பேச்சில் பயன் பாட்டினையொட்டி வள்ளுவர் வகுத்திருக்கும் கொள்கைகள் வியப்பூட்டுகின்றன. தகவல் தொடர்பியலில் பெருந்திரளான மக்கட் பரப்பிற்குச் செய்தி தெரிவிக்கப்படுகிறது. வள்ளுவம் சுட்டும் கருத்துத் தொடர்போ மனித உறவைப் பேணி வளர்ப்பதை நோக்க மாகக் கொள்கிறது. சிறந்த மனித உறவு பேணப்பட வேண்டுமானால் இடரற்ற தடங்களில் பேச்சு பயணிக்க வேண்டும் என்பதே வள்ளுவம் காட்டும் கருத்து.

சேதாரம்

எல்லாவிதச் செயல் விளைவுகளிலும் வினைக்கும் விளைவிற்கும் உள்ள சமன்பாட்டில் ஒரு பகுதி பயனற்ற விளைவாகி விடலாம். இந்தப் பயனற்ற விளைவை கிரேக்க மொழியில் என்ட்ரோபி என்று

குறிப்பிடுவர். என்ட்ரோபி என்பது சேதாரம். கருத்துப் பரிமாற்றத்திலும் இது நிகழ்கிறது. எல்லா வினைகளைப் போலவே கருத்துத் தொடர்பிலும் இது ஏற்படுகிறது. இதனையும் வள்ளுவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. மலரின் இயல்பு மணத்துடன் இருப்பது, மலரின் பயனும் அது பயக்கும் மணமே. அந்த மலரில் மணமில்லையெனில் மணமின்மை அங்குச் சேதாரமாகிறது. அதுபோலவே மொழி தெரிந்து கற்றிருந்தும் அதனைச் சொல்ல முடியாதவரின் நிலையும் ஆகி விடுகிறது. அதாவது சொற்களால் புலப்படுத்த முடியாமை என்பது சேதாரமாகிறது. மலர் என்பதை வினை எனவும், மணம் என்பதை விளைவு என்று கொண்டால், மணமின்மை சேதாரமாகும். கல்வி அறிவு என்பதை வினை என்றும் மொழி தலை வினையாகவும் கொண்டால் 'உணர விரித்துரையாமை' சேதாரமாகிறது. அறிவியலில் வினை-விளைவில் ஏற்படும் சேதாரம் சிறிதளவே. ஆயின் சொல்லாற்றல் இன்மையால் நேரிடும் சேதாரம் கருத்துப் பரிமாற்றத்தையே குலைக்கும். இதனை வள்ளுவர்,

''இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்'', (650)

என்ற குறட்பாவில் தெளிவுபடுத்துகிறார்.

முடிவுரை

தொடர்பு கொள்வது என்பது மக்களின் அடிப்படைச் செயலாகும். மனிதனின் முதல் தொடர்பு ஊடகம் மொழி. கனடா நாட்டைச் சேர்ந்த இலக்கியவாதியும், தொடர்பியல் அறிஞருமான ஹெர்பெர்ட் மார்ஷல் மெக்லூகன் என்பவர் ஊடகமே உட்செய்தி என்றும் குறிப்பிடுகிறார். மொழியாகிய ஊடகத்திற்கு அது மிகவும் பொருத்தமானது. மேலும் அவர் 'பேச்சு' என்பதே முதல் தொழில் நுட்பம் என்றும் குறிப்பிடுகிறார். அந்தப் பேச்சாகிய தொழில் நுட்பம் ஆற்றலுடையதாக விளங்க வேண்டிய அவசியத்தைத் திருக்குறளின் 'சொல்வன்மை' அதிகாரம் வலியுறுத்துகிறது. இனிய இரண்டாயிரத்தில் உலகு காலடி எடுத்து வைத்திருக்கும் வேளையில் தகவல் தொடர்பும், தொழில் நுட்பமும் உலகையே குலுக்கிக் கொண்டிருக்கிறது. இன்றைய தகவல் தொழில் நுட்பவியலார் கல்வி, இணையம் இவற்றின் மூலம் உலகை இணைக்க வழி வகுக்கின்றனர். வள்ளுவரோ இணையற்ற சொல்லாற்றலால் மனித மனங்களை இணைக்க, மனித உறவைப் பேண, மனித நேயத்தை வளர்க்க அன்றே வழிகாட்டி நிற்கிறார்.

பதிற்றுப்பத்தில் பல்துறைத் தொழில்நுட்பம்

ஆ. மணவழகன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 113

ஒரு நாட்டின் வளமைக்கும் வளர்ச்சிக்கும் அந்நாடு தொழில் நுட்ப அறிவினைத் தம்முள் கொண்டிருப்பதும், பல்துறைகளிலும் தொழில்நுட்ப உத்திகளைக் கையாள்வதும் அடிப்படையாக அமைகிறது. தொழில்நுட்பக் கூறுகளைப் பயன்படுத்தாத எந்த ஒரு நிறுவனமோ, துறையோ அல்லது நாடோ தன்னிறைவு பெறுதலும் வளர்ச்சி காண்பதும் அரிதாகிறது. இன்றைய நிலையில் வளர்ந்த நாடுகள் வரிசையில் உள்ள அனைத்து நாடுகளுமே, தங்கள் வளர்ச்சிக்குத் தொழில் நுட்பத்தினையே மூலதனமாக்கி யுள்ளன என்பது கண்கூடு. வளர்ந்து வரும் நாடுகளும் அவ்வழியைப் பின்பற்றியே தங்களை வளர்த்துக் கொள்வதைக் காண முடிகிறது.

நாட்டில் பல்வேறு மூலப்பொருள்கள் மண்டிக்கிடப்பதாலேயே அந்நாடு தன்னிறைவு பெற்றதாகவோ, வளர்ச்சியடைந்ததாகவோ கொள்ள முடியாது. மூலப்பொருட்களை அதிகம் பெற்றிராத, அதே வேளையில் தொழில்நுட்ப வல்லமை கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடுகள் இன்று வல்லரசுகளில் முதன்மையானதாக விளங்கு வதில் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை நன்குணரலாம். இவ்வகையில், வல்லரசுகளின் பட்டியலில் இடம்பிடிக்க நம் நாடு முனைந்து வரும் இவ்வேளையில், சங்க இலக்கியங்களின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்தின் வழி, நம் முன்னோர்கள் தன்னிறைவு பெற்ற சமுதாயத்திற்கு வித்திடும் தொழில்நுட்ப வல்லமை பெற்றிருந்தனர் என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

வேளாண் தொழில்நுட்பம்

'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை' (குறள் - 1031)

என்றார் வள்ளுவர். ஒரு நாடு பல்வேறு தொழில்களில் வளமை பெற்று, சிறந்தோங்கினாலும், அவ்வெல்லாவற்றிற்கும் அடிப்

படையாக அமைவது வேளாண் துறையே. வேளாண் துறையைச் சார்ந்தே நாட்டின் அத்துணை செயல்பாடுகளும் அமைகின்றன. பசியில்லா உலகையும், நோயில்லா வாழ்வையும் அளித்தல் அரசின் கடமையாகிறது. இந்நோக்கில் வேளாண் துறையை மேம்படுத்த, வேளாண் உற்பத்தியைப் பெருக்க அத்துறையில் பழந்தமிழர் பயன்படுத்திய நுட்பங்களைப் பதிற்றுப்பத்து காட்டுகிறது. 'அகல உழுதலைவிட ஆழ உழுதல் நன்று' என்பது தமிழர்களின் வாக்கு. இந்த உண்மையைப் பதிற்றுப்பத்தும் காட்டுகிறது. நிலத்தில் மணிகள் தோன்றும் அளவிற்கு ஆழ உழுகின்ற காட்சியை,

'புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்
சீருடைப் பல்பக டொலிப்பப் பூட்டி
நாஞ்சி லாடிய கொழுவழி மருங்கின்
அலங்குகதிர்த் திருமணி பெறூஉம்' (பதி. 58:15-18)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. சிறந்த பல கடாக்களை அவற்றின் கழுத்தில் கட்டப்பட்ட மணிகள் ஒலிக்கும்படி பூட்டி உழுவர். அங்ஙனம் உழுத கலப்பையின் கொழுச் சென்ற படைச்சாலின் பக்கத்தில் ஒளிக்கதிரையுடைய அழகிய மணிகளைப் பெறுவர் என்கிறது இவ்வடிகள்.

அதேபோலப் பன்றிகள் தம் கூரிய முகத்தால் நிலத்தை ஆழ உழுது மண்ணைப் புரட்டிப் போட்டதால், அந்நிலம் கலப்பை கொண்டு உழ வேண்டா நிலையை எய்தின என்பதை,

'ஏறுபொருதசெறு வுழாதுவித்துநவும்' (பதி. 13:2)

என்ற அடியும்,

'களிறா டியபுல நாஞ்சி லாடா' (பதி. 26:2)

என்ற அடியும் காட்டுகின்றன.

மேலும், வேளாண் தொழிலில் பலவிதமான விதைகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கினர் என்பதை,

'பல்விதை யுழவிற் சில்லே ராளர்' (பதி. 76:11)

என்ற அடி குறிப்பிடுகின்றது.

நிலத்தை ஆழ உழுதலும், பல்வேறு வித வித்துக்களைப் பயன்படுத்துதலும் சிறந்த தொழில்நுட்பமாக அமைவதைப் போலவே, வேளாண்மைக்குத் தேவையான நீரினைப் பெறும் வழிமுறைகள் குறித்து ஆலோசிப்பதும் அவசியமாகிறது. காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கடலில் கலப்பதால் நன்மை இல்லை. அந்நீரைத் தடுத்து அணைகள் பல கட்டி, நீரினை முறையாக சேமித்துப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதென்பது சிறந்த தொழில் நுட்ப அறிவின் வெளிப்பாடாக அமைகிறது. அவ்வகையில்,

ஆற்றுநீரைத் தடுத்து அணைகள் பல கட்டப்பட்ட செய்தியினைப் பதிற்றுப்பத்துக் காட்டுகிறது. பெருக்கெடுத்து வரும் புனலை அடைக்கும் உழவர்களின் ஓசை கேட்கும் என்பதை,

'போர்த்தெறிந்த பறையாற் புலன்செறுக் குநரும்' (பதி. 22-28)

என்ற அடியும். கட்டப்பட்ட அணைகளில் நீர் நிரம்பி வழிந்து ஓடும் காட்சியை,

'பொய்கை வாயிற் புனர்பொரு புதவின்' (பதி. 27:9)

என்ற அடியும் சுட்டுவதைக் காணலாம். இதைப் போலவே, பெருக்கெடுத்து வரும் வெள்ளத்தை வைக்கோற் புரிகொண்டும் மணற்கொண்டும் தேக்கினர் என்பதை,

'சிறைகொள் பூசலிற் புகன்ற வாயம்' (பதி. 30:19)

என்ற பதிற்றுப்பத்தின் அடியும் உணர்த்துவதைக் காணலாம்.

நிலத்தைப் பண்படுத்துதல், பல்வித வித்துக்களைப் பயன்படுத்துதல், நீரினைத் தேக்கி வைத்தல் போன்ற நுட்பமான செயல்களில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கியதோடு, விளைபொருளில் இருந்து வேற்றுப்பொருளைப் பிரித்தெடுக்க இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட நுட்பத்தையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

'கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்' (ஐங்கு. 55)

என்கிறது ஐங்குறுநூறு. இவ்வெந்திரத்தினைப் பற்றிப் பதிற்றுப்பத்தும் சுட்டுகிறது. இதனை,

'தீம்பிழி யெந்திரம் பத்தல் வருந்த' (பதி. 19:23)

என்பதில் காணலாம்.

நெசவுத்தொழிலில் நுட்பம்

பழந்தமிழர் வேளாண்மைக்கு அடுத்த நிலையில் போற்றிய தொழில் நெசவுத்தொழிலாகும். பழந்தமிழர் பல வண்ண ஆடைகளையும், ஆடைகளில் பல வேலைப்பாடுகளையும் செய்தனர். அத்தோடு மிக மெல்லிய துணிவகைகளை வேற்று நாட்டிற்கு ஏற்றுமதியும் செய்தனர் என்பன போன்ற உண்மைகளைச் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம் போன்றவற்றிலும் காணமுடிகிறது. கையில் நூற்கப்படாத துணியைப் பற்றிப் பதிற்றுப்பத்து,

'நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ' (பதி. 12:21)

என்று மொழிகிறது. நூலாக் கலிங்கத்திற்கு, நூற்கப்படாத பட்டால் ஆன ஆடை என்று பொருள் கொள்வர். கந்தலான ஆடையை நீக்கி இது போன்ற உயர்ந்த ஆடையினை வழங்கினர். இதன்வழி நெசவுத் தொழிலில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் புலனாகிறது. மேலும், மிக நுண்ணிய நூலினை நெய்தனர் என்பதை,

'நுண்ணூற் சிரந்தை' (பதி. க. வா)

என்ற தொடர் வலியுறுத்துகிறது.

பிற துறைத் தொழில் நுட்பங்கள்

'சிமெண்ட்' உற்பத்தி

சிறந்த நகர அமைப்பையும், நகரத்தில் ஆறு கிடந்ததைப் போன்ற சிறந்த வீதி ஒழுங்கையும் கொண்டிருந்த பழந்தமிழர் நாகரிகத்தை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை போன்ற சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களும் காட்டுகின்றன. சிலம்பில் கோட்டையின் அமைப்பு முறை நன்கு விளக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. இவை போன்ற சிறந்த நகர அமைப்பினை உருவாக்க, சிறந்த கட்டிடங்கள் கட்ட, சிறந்த தொழில்நுட்பம் அவசியமாகிறது. இடிபாடுகளுக்கு இடந்தராத வகையில், உறுதியாகக் கட்டிடங்களை உருவாக்க மண்ணைச் சில கலவைகளோடு சேர்த்து அரைத்து, இன்றைய சிமெண்ட் போன்று பயன்படுத்திய தொழில்நுட்பக் குறிப்பினை,

'அரைமண் இஞ்சி நாட்கொடி நுடங்கும்' (புறம். 341:5)

என்கிறது புறநானூறு. (ப. 341)

இதைப் போல, மண்ணைக் கொண்டு கட்டப்பட்ட கோட்டையை,

'மண்புனை இஞ்சி மதில் கடந்தல்லது' (பதி. 58:6)

என்கிறது பதிற்றுப்பத்து.

கப்பல் கட்டுமானம்

முந்நீர் வழக்கம் பெண்களோடு இல்லை என்கிறது தொல்காப்பியம். சங்க இலக்கியங்களின் பெரும்பாலானவை தமிழரின் கடல் வாணிகத்தினைப் போற்றுகின்றன. இத்தகைய கடல் வணிகத்திற்குத் தேவையான கப்பல்கள், கலன்கள் போன்றவற்றை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்த தமிழர்களின் தொழில்நுட்ப வளத்தைப் பதிற்றுப்பத்துக் காட்டுகிறது. கப்பல் கட்டுமானப் பணிகளோடு, பழுதுபட்ட கப்பல்களைச் செப்பனிடும் பணியும் நடைபெற்றது என்பதும் கீழ்க்கண்ட அடிகளில் தெளிவாகிறது.

'பெருங்கட னீந்திய மரம்வலி யுறுக்கும்
பண்ணிய விலைஞர் போல' (பதி. 4-5)

இதற்கு, பெருங்கடலைக் கடந்து சென்று மீளுதலால் பழுதுற்ற மரக்கலத்தின் பழுது போக்கிப் பண்டுபோல வலியுடைத்தாக்கும் கடல் வணிகர் போல என்று பொருள் கொள்வர் உரையாசிரியர்.

மருத்துவத் தொழில்நுட்பம்

மருத்துவத்தில் அறுவை சிகிச்சை என்ற தொழில்நுட்பம் ஆங்கில மருத்துவ முறைக்கே உரியது என்பது பொதுவான கருத்து.

இருந்தும், மருத்துவத்தில் அறுவை சிகிச்சை முறையை அக்காலத்திலேயே தமிழர்கள் பயன்படுத்திய உண்மையைப் பதிற்றுப்பத்துக் காட்டுகிறது. சிரற்பறவை குளிர்ந்த குளத்துட் பாய்ந்து மூழ்கி மேலே யெழுகின்ற காலத்து அதன் வாயலகையொப்ப, மார்பிற் புண்களைத் தைக்குங் காலத்து அப்புண்ணின் குருதியிலே மூழ்கி மறைந்தெழுகின்ற நெடிய வெண்மையான ஊசியினாலாகிய நீண்ட தழும்பை உடைய வீரர்கள் என மொழிகிறது கீழ்க்கண்ட அடிகள்,

'மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்' (பதி. 42:2-4)

முடிவு

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளை, பழக்க வழக்கங்களை, நாகரிக நடைமுறைகளைப் பிறிதொரு காலத்திற்கு எடுத்துச் செல்பவை இலக்கியங்களே. இவ்வகையான இலக்கியங்களே வரலாற்று ஆதாரங்களாகத் திகழ்கின்றன. ஒரு நாட்டின் மொழி வளர்ச்சியும், இலக்கிய வளர்ச்சியும் அந்நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியோடு இரண்டறக் கலந்தே வந்துள்ளன.

தமிழக வரலாறும் பண்பாட்டு வளர்ச்சியும் குறித்து ஆய்வோர்க்கு முதன்மை ஆதாரமாகத் திகழ்பவை சங்க இலக்கியங்களே. அவையே பழந்தமிழரின் பண்பாட்டு பான்மை, பழக்க வழக்க மேன்மை, நாகரிக வளமை ஆகியவற்றை உலகிற்கு வெளிக்காட்டி நிற்கின்றன. அவ்வகையில், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் பழந்தமிழர் சிறந்தோங்கிய பாங்கினை மேற்கண்ட ஆதாரங்கள் உணர்த்துகின்றன.

துணைநூல்கள்

1. பதிற்றுப்பத்து, ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, கழக வெளியீடு, மார்ச் 1995
2. பதிற்றுப்பத்து மூலமும் உரையும், அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், 1999.
3. ஐங்குறுநூறு, மூலமும் உரையும், அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17, 1999
4. சிலப்பதிகாரம், மூலமும் உரையும், ஜெ. ஸ்ரீசந்திரன், வர்த்தமானன் பதிப்பகம், 2001
5. திருக்குறள், பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை - 108, 2001
6. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986
7. பத்துப்பாட்டு, மூலமும் உரையும், அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17, 2000
8. புறநானூறு, மூலமும் உரையும், அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17, 2001

பழந்தமிழர் அறிவியல் ஆய்வுகள்

க. வெங்கடேசன்

மஹேந்ரா கலை அறிவியற் கல்லூரி

காளிப்பட்டி

இன்றைய உலகம் அறிவியல் முன்னேற்றத்தால் மிகவும் விரைவாகச் சென்று கொண்டிருக்கிறது. நாளும் புதிய, புதிய ஆய்வுகள் மலர்கின்றன. விரல் நுனியில் விண்ணையும் மண்ணை மற்றும் கடலையும் ஆய்கிறான். அவனுடைய வியக்கத்தக்க ஆய்வுக்கு காரணமாக இருப்பவர்கள் பழந்தமிழர்கள் எனலாம். பழந்தமிழர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், சிந்தனைகள் காலவோட்டத்தினையும் கடந்து மரபினச் செல்களின் மூலம் ஊடுருவியதே காரணம் என்று கூறலாம். அவர்களின் எச்சங்களே இன்று அறிவியல் துறையில் இயற்பியல், (Physics) எந்திரவியல் (Mechanical) உயிர் நுட்பவியல் (Micro biology) போல்வன தோன்றி யுள்ளன என்பதை இவ்வியல் ஆய்கிறது.

அறிவியல் ஆதாரம்

அறிவியலானது புறத்தில் சூழ்ந்துள்ள உலகைக் காணும்போது தம் பங்கை அடங்கிய பொருள்களை நாமறியும் பொருளாக மாறுகிறது[1] பழந்தமிழர் நுட்பத்தினை, (Technic) கி.மு. 3 (நூ) இல் தொல்காப்பியனார் புல்லும் மரனும் ஓர் அறிவினவே[2] என்று கூறுவதிலிருந்து அறிவியல் நுட்பங்கள் வழக்கில் இருந்தமையைக் காட்டுகிறார். தொல்காப்பியரின் மரபியல் செய்திகள் அனைத்தும் பழந்தமிழரின் அறிவியல் நுட்பத்தினை அறிய உதவும் சான்றுகளாகும்.

அறிவியல் ஆய்வு என்பது மாறாத தன்மை உடையது பரிசோதனைக்கு உட்படுவது[3] ஆய்வுகூடங்களில் நிரூபிக்கும் திறனுடையது. இத்தகைய முயற்சிக்கு அடிப்படை ஆய்வுத்திறன் தேவை. இது பழந்தமிழர்களிடம் அதிகமாகவே காணப்படுகிறது. அந்த அடிப்படை ஆய்வுகள் அவர்களிடம் இருப்பதை உற்று நோக்க வேண்டும்.

சிக்கிமுக்கிக் கற்கள்

மனப்போக்கில் ஓடினான் திரிந்தான் மிருகங்களை வேட்டையாடி அதன் மாமிசத்தை உண்டு வாழ்ந்தான். மிருகங்கள் இவனைக்

கண்டு அஞ்சி ஓடின. தன்கைக்கு அகப்படவில்லையே என கோபம் கொண்டு கைக்குக் கிடைத்த கல்லை எடுத்து வீசினான். அக்கல் குறி தவறி வேறொரு கல் மீது விழுந்தது கல்லும் கல்லும் மோதியதில் தீப்பொறிகள் உருவாகி நெருப்பு பற்றி எரியத் தொடங்கியது. ''விளையாட்டுப் போக்கில் கற்களை ஒன்றோடு ஒன்று உராய்த்திருக்கலாம்''[4] இக்கூற்றும் ஏற்புடையதாகும். நெருப்பு பற்றி எரிவதற்கு விடை தெரியாமல் ஓடிச் சென்று மறைந்து விட்டான்.[5] அத்தீப்பொறி அங்கு இருந்த இடத்தை எரித்தது அந்த நெருப்பில் பல உயிர்கள் எரிந்து கிடந்தன. அந்த மாமிசத்தை எடுத்து கடித்து தின்றான். இதுவரையில் பச்சையாகத் தின்றவனுக்கு எரிந்த மாமிசம் சுவையாக இருந்தது. தீயில் எரிந்த மாமிசம் சுவையாக இருந்ததை நினைத்து மகிழ்ச்சி அடைந்தான். நெருப்பு உருவாக்கச் சிந்தித்தான். இரண்டு சிக்கி முக்கி கற்களை எடுத்து உராசினான். அப்போது பழையபடி நெருப்பு உருவாகியது. இதுவே நாளடைவில் நெருப்பாக வந்து நிலைத்துவிட்டது. இன்று சிக்கிமுக்கி கற்களுக்கு பதில் கந்தகத்தை பயன்படுத்தி வருகிறோம். பழந்தமிழர்களுக்கு நெருப்பை பற்றி ஆராய்ச்சி செய்யும் பழக்கம் கொண்டவனானான் என்பது தெரிகிறது. பழந்தமிழர்களுக்கும் விஞ்ஞான ஆராய்ச்சி உண்டு என்பது புகழப்படுகிறது.

இயந்திரவியல்

இன்று இயந்திரவியல் mechanical என்னும் துறை மிக விரைவாக முன்னேறி வருகிறது. இயந்திரம் என்னும் சொல்லுக்கு ஆலை, தேர், மதிலுருப்பு, சக்கரம் பாண்டவகை வலை[5] என் தமிழ் அகரமுதலி பொருள் தருகின்றன.

பழந்தமிழர்களுக்கு இயந்திரவியல் துறை பற்றி அறிந்து இருப்பார்களா என்று ஆய்வோம்.

மலைகளில் வாழ்ந்து வந்த மனிதன் உணவுக்காக அலைந்து திரிந்து வந்தான். மலையின் உச்சியிலிருந்து பெரிய கற்கள் இயற்கையாக கீழே நோக்கி விழுந்தன. கரடு முரடான கற்கள் சிறிது தொலைவே நகர்ந்து நின்று விட்டன. உருண்டையான கற்கள் மட்டும் உருண்டுக் கொண்டே பூமியை அடைந்தன. எந்த ஒரு பொருளும் உருண்டையா இருந்தால் உருளும் தன்மை கொண்டதாக6 இருக்கும் என்று ஆய்ந்தான். இதன் விளைவாக சக்கரம் கண்டுபிடித்தான் அதுவே இன்று வாகனங்களுக்குப் பயன்பட்டு வருகின்றன.

உழவர்கள் மலையில் இலைகள் தழைகள் விறகு போன்ற வற்றை சுமையாக உருண்டையாகக் கட்டி மலை உச்சியின் மீதிலிருந்து தள்ளிவிடுவர். அது பூமியை வந்தடையும் அதை

நன்கு சரிசெய்து எடுத்துச் செல்வதை இன்றும் பார்க்க முடிகிறது. பழந்தமிழர்களின் அறிவுத்திறத்தால் சக்கரத்தை கண்டுபிடித்ததின் விளைவாக இப்பொழுது அதன் பரிணாம வளர்ச்சி மிக நுணுக்கமடைந்தது.

அதியமான் சக்கரம்

பழந்தமிழர்களின் அறிவுக்கூர்மை அறிவதற்கு அவர்கள் கண்டுபிடித்த சக்கரமே தக்க ஆதாரம் நமக்கு கிடைத்துள்ளது.

இடிதாங்கி கண்டுபிடித்தல்

வைகாசி மாதம் தமிழர்களுக்குச் சிறப்பான மாதமாகும். ஆறுமாதம் மழைப்பொழியாது வெயிலில் காய்ந்து கிடக்கும். இம்மாதத்தில் இடியுடன் மழை பொழியும்.

அர்ச்சுனன் தன் குதிரையை ஓட்டும்போது அக்குதிரை 'தட, தட' வென்று ஓடும் போது இடிமுழக்கமாக நம்புகின்றனர்.

இரவு நேரங்களில் பெரிய இடியுடன் மழை பொழியும் அந்த ஓசை மனம் இளகியவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றோர் நடுங்குவர்.

இடியின், வகைகள். நீர் இடி இந்த இடியானது இரண்டு வகைப்படும் அவை ஒன்று நீர் இடி, மற்றொன்று நெருப்பு இடியாகும். பச்சை மரங்களைப் பார்த்து நீர் இடி இறங்கிவிடும். இடிவிழுந்த மரம் காய்ந்து இறந்துவிடும். உயிர்சேதம் ஏற்படாது.

நெருப்பு இடி

இந்த நெருப்பு இடி பெரிய ஆபத்து ஏற்படுத்தும் தன்மை உடையது இடி விழுந்த மரம் கருகிவிடும். அதிக உயிர் சேதம் பொருட் சேதம் ஏற்படும்.

இத்தகைய இடிகளைப் பழந்தமிழர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கன்னக்கோல்

இடியைப் பயன்படுத்தும் நுட்பம் (Technic) பழந் தமிழரிடம் இருந்தது. மிகப் பெரிய செம்பு பாத்திரத்தில் மாட்டுச் சாணியைக் கரைத்து வைப்பர். இதை யாரும் இல்லாத இடத்தில் வைத்து விடுவர். பெரிய இடியுடன் மழைப்பொழியும் போது தாமிரத்தை நோக்கிப் பாயும். இந்த தத்துவத்தைதான் பெஞ்சமின் பிராங்லின் கண்டுபிடித்தார் என்பது புலனாகிறது.

மறுநாள் காலையில் இடிபாய்ந்த இடத்தைச் சுற்றித் தோண்டுவர். சுமார் இருபது அடி ஆழத்திற்குள் கன்னக்கோல் கிடைத்துவிடும்.

கன்னக்கோலின் பயன்கள்

கன்னக்கோல் சுவற்றைக் குடைப்பதற்குப் பயன்படுகிறது. இதை திருடர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இது குற்றவியல் தொடர்பு என்பதால் இப்பொழுது யாரும் எடுப்பதில்லை.

கோபுரத்தில் இடிதாங்கி

சாதாரண தாமிரக் கம்பியைப் பார்த்ததும் இடி இறங்கிவிடுகிறது. ஆனால் பெரிய கோபுரங்களில் கலசங்கள் தாமிரத்தால் இருந்தும் இடி இறங்காது ஏன் என்பது வினாவாகும். இதற்குப் பழந்தமிழரின் விஞ்ஞான உத்தி பயன்படுகிறது. கோபுரங்களில் இடி இறங்காதிருக்க நவதானியங்கள் குவித்து கோபுரத்தைக் கட்டுகின்றனர். எனவே இடியைத் தடுக்கும் சக்தி நவதானியங்களுக்கு உண்டு என்பதைப் பழந்தமிழர் கண்டுபிடித்துள்ளனர். இடியை வரவழைப்பதற்கும். இடியைத் தடுப்பதற்கும் பழந்தமிழர் அறிந்திருந்தனர் என்பதை நாம் அறிய முடிகிறது.

மருத்துவ ஆய்வு

மண்ணில் பிறந்த மனிதனுக்கு அம்மண்ணிலே அவனுக்குத் தேவையான உணவு முதல் நோய்த் தீர்க்கும் மருந்துவரை மறைத்து வைத்தான் இறைவன் அது வேர் இலை, தண்டு, பட்டை, காய், கனி, மலர் வடிவத்தில் இருப்பதை அறியாது இருந்தான் இந்த நுட்பத் தினைச் சித்தர்கள் தம்முடைய சித்துவேளையால் கண்டுபிடித்துள்ளனர். அவர்கள் கூறும் துறை அன்று ஆயுள் வேதமாக மாறி இன்று ஆயுர் வேதமாக மலர்ந்துள்ளது. பதினெட்டு சித்தர்களும் நாட்டுப்புற மருத்துவம் பற்றிய செய்திகளை ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்துள்ளனர்.

கதை தரும் ஆதாரம்

பழந்தமிழர்களின் மருத்துவத்தை "ஏழு அண்ணன் தம்பிகள் கதை ஆதாரம் காட்டுகிறது. மான் வேட்டைக்குச் சென்றவர்கள் இறைச்சியை இலையில் எடுத்துவரவும் அது ஒன்றோடு ஒன்று ஒட்டி இருப்பதை அறிந்தனர். மறுநாள் ஆட்டிற்கு கால் உடைந்த போது அந்த இலையைக் கட்டினர், நாளடைவில் குணமடைந்தது. இந்த மருத்துவம் இன்றும் வழக்கில் உள்ளது"[6] நாட்டுப்புற மக்களுக்கு இம்முறையில் சிகிச்சை அளிக்க "புத்தூர் கட்டு" மிகவும் சிறந்ததாகக் காணப்படுகிறது. நாட்டுப்புற மருத்துவத்தின் மகத்துவத்தை அறிந்தவர்கள் அறிவியல் நுட்பத்தால் இலை, தழை சாரம் எடுத்து மாத்திரை வில்லைகளாக உருவாக்குவர்.

நுண்ணுயிரியல் (Microbiology)

இத்துறை இன்று மிக விரைவாகக் கல்வியில் இடம்பிடித்த துறையாகும். "கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிகள் பாக்டிரியா"

என்று பொருள் தருகிறது இத்துறையின் ஒரு பிரிவு நொதித்தல் முறையினை ஆய்கிறது. இதனை ஆங்கிலத்தில் Fermentation என்று குறிக்கிறது. இதற்குப் புளித்தல், அல்லது பொங்குதல்7 என்று சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் - தமிழ் அகராதி பொருள் தருகிறது. இந்த உயர் நுப்பத்திறனைப் பழந்தமிழர்கள் பயன் படுத்தி உள்ளனர்.

நீண்ட நாட்களாகப் பழுத்தப்பழங்களில் மிக நுண்ணுயிர்கள் இருக்கின்றன. இவற்றைச் சாப்பிட்ட மனிதனுக்கு ஒருவித மயக்கத்தை அளித்தது; கூடவே இன்பமும், மயக்கமும் கிடைத்தது. இவ்வகை இன்பம் மேலும் வேண்டுமென விரும்பினான். பல்வேறு பழங்களை நாட்பட அழுக வைத்தான். இதன் வழியாக வரும் பானத்தைக் குடித்தான் இதிலிருந்து வருபவனற்றைத் தேறல், கள்ளு, பானம் என்று தமிழ் இலக்கியங்கள் பறைச் சாற்றுகின்றன. இது நொதித்தல் (Fermentation) முறையில் உருமாறியவை.

பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல் அறியா துண்ட கடுவன் அயலது[8] மரத்தில் ஏறாமல் முல்லை மலர்கள் மீது உருண்டதைக் கபிலர் காட்டுகிறார் பழந்தமிழர்கள் நுண்ணுயிர்களின் பயன்பாட்டை அறிந்துள்ளான்.

முடிவுரை

பழந்தமிழர்களின் அறிவியல் பார்வைகள் கால ஓட்டத்தையும் தாண்டி ஒவ்வொரு சந்ததியினரையும் தொடர்புக் கொண்டே வருவதை அறியமுடிகிறது.

குறிப்புகள்

1. அறிவியல் கலைக்களஞ்சியம், தொகுதி, 2 ப. 621
2. தொல்காப்பியனார், தொல்காப்பியம், செய். ப. 592
3. அறிவியல் ஆயிரம், ப. 318
4. ப. காளிமுத்து, பேட்டி நாள் 29.12.03
5. இயற்பியல், தமிழ்நாடு பாடநூல் எட்டாம் வகுப்பு, ப. 18
6. வெங்கடேசன், க., திராவிட நாட்டுப்புறக் கதைகள், ப. 35
7. சென்னைப் பல்கலைக்கழக தமிழ் ஆங்கிலம் அகராதி, ப. 117
8. அகநானூறு, ப. 328

இணையம் காணும் இனிய தமிழ்

ச. இராமலட்சுமி

காவேரி மகளிர் கல்லூரி

திருச்சி - 18

தொன்மையான மொழி

உலகின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்றாகத் தமிழ் மொழி மொழியியல் அறிஞர்களால் சுட்டப்படுகின்றது. கிரேக்கம், ரோமானியம், ஹீப்ரு போன்ற மொழிகளே தமிழுடன் ஒப்பிடும் அளவு தொன்மை மிக்கவையாய் உள்ளன. மனிதன் குரங்காக இருந்து பரிணாம வளர்ச்சியடைந்த காலத்தில் பேசிய மொழிகளில் ஒன்றாகத் தமிழ் இருந்தது என ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

மிகப் பரந்த இலக்கிய வளமும் பாரம்பரியமும் கொண்ட மொழி தமிழ். உலகின் பிற மொழிகளில் உள்ள இலக்கண நூல்கள் அனைத்தும் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் கூறியுள்ளன. ஆனால் இரண்டாயிரம் ஆண்டிற்கு முற்பட்ட தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியமோ எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமல்லாமல் வாழ்க்கைப் பொருளுக்கும் இலக்கணம் வகுத்த ஒப்பிலா நூலாகத் திகழ்கிறது. பைபிளுக்கு அடுத்தபடி உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் என்ற சிறப்பைப் பெற்று, உலகப் பொது மறையாகத் திகழும் திருக்குறளும் ஓர் ஒப்பற்ற உயரிய நூலே ஆகும்.

இத்தகைய இலக்கியச் செழுமை கொண்ட தமிழ்மொழி இன்றும் வழக்கிலுள்ள மொழியாக உள்ளதோடு, நவீன மாற்றங் களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கணினிக்கு ஏற்ற வரிவடிவம் கொண்டதாகவும் இருப்பது இதன் தனிச்சிறப்பு.

தகவல் தொழில் நுட்பயுகம்

அனைத்துத் துறைகளிலும் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு மிக மிக அதிகரித்துள்ள நிலையில் தற்போதைய கால கட்டத்தைத் 'தகவல் தொழில்நுட்பயுகம்' என்றே கூறலாம்.

21-ஆம் நூற்றாண்டின் தொடக்கமான இக்காலக்கட்டத்தில் 'வளம்' என்பது கச்சாப் பொருளையோ மனித உழைப்பையோ குறிக்கும் சொல்லாக இல்லாமல் அறிவையும் தகவலையும் குறிப்பதாக

மாற்றம் பெற்றுள்ளது. இந்நிலையில் தகவல் தொழில் நுட்பத்தினைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் எந்தத் துறையும் தனது முன்னேற்றத் தினை உறுதி செய்து கொள்கிறது. மாறாக இத்தகைய மாற்றத்தினை வரவேற்கத் தயங்கும் எந்தத் தனிமனிதனும் அல்லது துறையும் காலத்தின் நீட்சியில் பின் தங்கிப் போகும் அபாயம் நிச்சயம் உள்ளது.

தமிழ் இலக்கியத் துறையிலும் தகவல் தொழில் நுட்பத்தின் தாக்கம் வலுவாகவே உள்ளது. மாறிவரும் அறிவியல் சூழலில் தமிழ் மொழியும் இணையத்தின் வழியாக உலகின் பல பகுதி மக்களையும் சென்றடையத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் இலக்கியத் துறையில், தகவல் தொழில் நுட்பத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள மாற்றங்களாகப் பின்வருவனவற்றைச் சுட்டலாம்.

1. மின்னணு இதழ்கள் அல்லது செய்தித்தாள்கள்
2. விமரிசனங்கள் கூர்மை பெறுதல்
3. தரமான ஆய்வுகள்
4. அயல்நாடுவாழ் தமிழர்களுக்கு மொழிக்கல்வி
5. கலாச்சாரப் பரிவர்த்தனை

மின்னணு இதழ்கள்

மின்னணு ஊடகங்களின் தாக்கம் வலுவாக உள்ள நிலையில், அச்செழுத்துக்கள் தங்கள் அந்திமக் காலத்தில் உள்ளன என்றே நாம் மதிப்பிடலாம். இணையத்தின் ஆட்சி நடந்து கொண்டுள்ள இக்காலத்தில் மின்னணு ஊடகங்கள் வலுப்பெறுவது காலத்தின் கட்டாயமாகும்.

மொழியைப் பரப்புவதிலும் தொடர்ந்து பயன்படுத்தச் செய்வதிலும் பத்திரிக்கைகளின் பங்கு முக்கியமானது. பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் போன்றவை இணையத்தின் வழியாக உலகெங்கும் உள்ள தமிழர்களை உடனடியாகச் சென்றடையும் நிலையில் தமிழ் மொழியின் பயன்பாட்டு எல்லையும் கணிசமாக விரிவடைகின்றது.

தமிழகத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து வரும் பத்திரிக்கைகள் இங்குள்ளவர்களுக்கும் காணக் கிடைக்கின்றன.

விமரிசனங்கள் கூர்மை பெறுதல்

இலக்கிய வளர்ச்சியில் விமரிசனங்களுக்குச் சிறப்பான இடம் உண்டு. தரமான விமரிசனங்களே செழுமையான இலக்கிய உருவாக்கத்திற்கு ஆதாரமாகவும் அமைய நேரிடுகிறது. இலக்கிய

ஆர்வலர்கள் தங்கள் கருத்தினைச் சுதந்திரமாகப் பதிவு செய்வது என்பது பத்திரிக்கை உலகில் இயலாத காரியம். பத்திரிக்கைகளின் வர்க்க நலன், அதன் கோட்பாடுகள், அதன் வணிகத் தன்மை இவற்றைப் பொருத்தே வாசகர்களின் விமரிசனக் கருத்துக்கள் வெளியிடப்படும் அல்லது நிராகரிக்கப்படும். ஆனால் இணையத்தில் உலவும் இதழ்களைப் பற்றி மட்டுமல்ல, பொதுவாக தமிழ் இலக்கிய உலகின் தற்போதைய போக்குகள் பற்றியும், சாதனைகள் அல்லது சறுக்கல்கள் பற்றியும் எவர் வேண்டுமானாலும் தங்கள் கருத்தினை, விமரிசனங்களை இணையத்தின் வழிப் பதிவு செய்ய இயலுகிறது. இதன் வாயிலாக நேர்மையான சுதந்திரமான விமர்சனக் கருத்துக்கள் பதிவு செய்யப்படுகின்றன.

தரமான ஆய்வுகள்

நவீனச் சூழலில் ஒரு மொழியை வளப்படுத்தும் முக்கியக் கூறாக அம்மொழியில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளைச் சுட்டலாம். தகவல் தொழில் நுட்பயுகத்தில் விரல் நுனியின் தொடுகையில் தகவல்கள் அருவியாகக் கொட்டும் நிலையில் மொழியியல் ஆய்வுகளும், இலக்கிய ஆய்வுகளும் தரமானதாக அமைவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

அயல்நாடுவாழ் தமிழர்களுக்கு மொழிக்கல்வி

அயல்நாடுகளில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிப்பதற்கான பள்ளிகள் அரிதாகவே உள்ள நிலையில் மொழிக் கல்வி அளிக்கும் முக்கியப் பணியினை இணையம் செவ்வனே செய்கிறது. தனிநபர்கள் தங்கள் மொழியுணர்வின் காரணமாக இப்பணியில் ஈடுபட்டிருந்த சூழலில் தமிழக அரசு 'தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தினைச்' சென்னையில் நிறுவி அயல்நாட்டுத் தமிழர் களின் தமிழ் கல்விக்கான பாடப்பொருட்களை இணையத்தின் வழி வழங்குகிறது. இதன் காரணமாக வளரும் தலைமுறை யினரிடையே தமிழ்மொழி அறிவு கணிசமாக உயர்கிறது என்பது மறுக்கவியலாத உண்மை.

கலாச்சாரப் பரிவர்த்தனை

ஒரு இனத்தினுடைய கலாச்சாரத்தின் முக்கியக் கூறுகளில் ஒன்றாக மட்டும் மொழி விளங்குவதில்லை. மாறாக, அக் கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் காவலனாகவும் விளங்குகின்றது. மொழியறிவும், மொழி உணர்வும் கொண்டவர்களாலேயே அவ்வினத்தின் கலாச்சாரம் பாதுகாக்கப்படுகிறது. எனவே, தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் தமிழ் மொழியை உலகளவில்

கொண்டு செல்லும் போது தமிழ்மொழி மட்டுமல்லாது, தமிழ்க் கலாச்சாரமும் சேர்ந்தே பரவுகிறது.

இவ்வாறு, தகவல் தொழில் நுட்பம் தமிழ் மொழியின் பரவலுக்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரிகின்றது. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் தமிழ் மொழி அமைந்திருப்பதும் இதற்கு முக்கிய காரணம், உதாரணமாக, பேச்சுக்கிரகிப்பினைச் சுட்டலாம். அதாவது நாம் பேசும்போது கணினி அதை எழுத வேண்டும். ஆங்கில மொழியை விடத் தமிழ் மொழியினைக் கணினி சிறப்பாக வடிவமைக்கிறது எனக் குறிப்பிடு கின்றனர் இத்துறை வல்லுநர்கள். ஆங்கிலத்தை விடத் தமிழ் ஒலி நயம் கொண்ட மொழியாக இருப்பதே இதற்குக் காரணம். தொல்காப்பியப் புணர்ச்சி விதிகள் கூட விஞ்ஞான ரீதியாக அமைந்தவையே சான்றாக, மண்ணோடு பாண்டத்தைச் சேர்ந்தால் 'மட்பாண்டம்' என்றே கணினி ஒழுங்கமைக்கிறது என வியக்கின்றனர் கணினி வல்லுநர்கள்.

எனவே, உலகின் தொன்மைமிக்க மொழிகளில் ஒன்றான தமிழ் நவீன தகவல் தொழில் நுட்ப யுகத்தின் தேவைக்கேற்ற மாறுதல்களுடன் ஒரு புதிய பாய்ச்சலுக்குத் தயாராகின்றது என்பதே உண்மை.

தமிழ்க் கல்விக்கு இணைய நூலகம்

இரெ. இராசபாண்டியன்

தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
சென்னை - 113

கல்விக்கு இன்றியமையாதவை என்னும் பட்டியலில் இடம் பெறுவனவற்றில் நூலகமும் ஒன்று. நூலகங்களைப் பள்ளி நூலகம், கல்லூரி நூலகம், பொது நூலகம், ஆய்வு நூலகம் என்று பல வகைகளில் பகுக்கலாம். இந்த நூலகங்கள் அனைத்தையும் சிறுவர் நூலகம், அனைவர்க்கும் பொது நூலகம் என்று பயன்பாட்டு நோக்கிலும் பிரிக்கலாம். பன்னிரண்டு வயது வரை உள்ளவர்கள் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட நூலகத்தைச் சிறுவர் நூலகம் எனலாம். இத்தகைய நூலகங்கள் பெரும்பாலும் பள்ளி நூலகங்களைச் சார்ந்தே அமைக்கப்படும். பதின்மூன்று வயது முதலான இளைஞர்கள், பெரியவர்கள் என்று அனைவரும் பயன் படுத்தும் நூலகங்கள் அனைவர்க்கும் பொது நூலகங்கள் ஆகும்.

மேலே குறிக்கப்பட்ட நூலகங்கள் அனைத்திலும் துறைவாரியாகப் பிரிக்கப்பட்ட அச்சிட்ட புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும். மேலும் ஒலி நாடாக்களும் ஒலி - ஒளி நாடாக்களும் கிடைக்கும். இந்தப் பொதுத்தன்மைக்கு ஏற்பச் சில வேறுபாட்டுடன் சிறுவர் நூலகமும் அனைவர்க்கும் பொதுவான நூலகமும் அமைக்கப்படும்.

சிறுவர் இணைய நூலகம்

இரண்டரை வயதுமுதல் பன்னிரண்டு வயதுவரை உள்ள குழந்தைகளும் சிறுவர்களும் பயன்படுத்தும் வகையில் அமைந்த நூலகம் சிறுவர் நூலகம். இதில் பல வண்ணங்களில் அச்சிடப் பட்ட படங்கள், அவற்றின் தொகுப்பு நூல்கள், மழலைப் பாடல் நூல்கள், மழலைப் பாடல் ஒலி நாடாக்கள், கதைப் பாடல் நூல்கள், கதைப் பாடல் ஒலிநாடாக்கள், சிறுவர் கதை நூல்கள் முதலானவையும் கார்ட்டூன் முதலான ஒலி - ஒளிநாடாக்களும் இருக்கும்.

சிறுவர் நூலகத்தில் கிடைக்கும் வசதிகளுடன் பன்மடங்கு வசதிகளைக் கொண்டது சிறுவர் இணைய நூலகம். சிறுவர் நூலகத்தில் கிடைக்கும் அச்சிட்ட பல வண்ணப் படங்கள். சிறுவர் இணைய நூலகத்தில் அசைவூட்டு படங்களாக இருக்கும்.

அசைவூட்டு படங்கள் (Animated pictures)

பல வண்ணத்தில் இருக்கும் ஒரு சிங்கத்தின் படத்தை அச்சிட்ட வடிவமாகப் பார்த்த குழந்தையால் இணைய நூலகத்தில் அதை அசைவூட்டு படமாகப் பார்க்க இயலும். அச்சிட்ட வண்ணப் படத்தில் அசைவுகள் இருக்காது; ஒரு குறிப்பிட்ட தோற்றம் மட்டுமே இருக்கும். ஆனால் அசைவூட்டு படத்தில் சிங்கத்தின் இயல்பான அசைவுகள் பல தோற்றங்களாகக் காட்சிப்படுத்தப் பட்டிருக்கும்.

சிறுவர் நூலகத்தில் சிங்கத்தின் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தை அதன் கர்ச்சனையைக் கேட்க வேண்டும் என்றால் அருகில் அல்லது தொலைவில் இருக்கும் ஒலி நாடாவை இயக்கித் தான் கேட்கமுடியும். ஆனால் இணைய நூலகத்தின் அசைவூட்டு படத்தில் சிங்கத்தின் கர்ச்சனையை அசைவுகளின்போதே கேட்கவும் இயலும்.

சிறுவர் நூலகத்தில் ஒரு படக்கதையைப் புத்தகத்தினுள் கட்டத்திற்குள் அமைக்கப்பட்ட படங்களாக மட்டுமே பார்க்க முடியும். ஆனால் இணைய நூலகத்தில் அந்தப் படக்கதை முழுவதையும் தொடர்ச்சியான அசைவுகளுடனும் ஒலியுடனும் கதைக் கூற்றுகளுடனும் அசைவூட்டு படங்களின் வாயிலாகக் காண முடியும்.

மேலும் சிறுவர் நூலகத்தில் உள்ள புத்தகத்தில் ஒரு படக்கதையைப் பார்க்கும்போது குழந்தையால் அந்தக் கதை நிகழிடத்தை அசையாப் படமாக (Still) மட்டுமே பார்க்கமுடியும். ஆனால் இணைய நூலகத்தில் அந்தக் கதை நிகழிடத்தைச் சூழல்களுடனும் இயல்பான அசைவுகளுடனும் காணமுடியும். எடுத்துக் காட்டாக, சிங்கமும் எலியும் என்னும் கதைப்படத்தின் கதை நிகழிடம் காடு என்றால் அந்தக் காட்டில் உள்ள மரங்களின் அசைவையும் அந்த அசைவின்போது ஏற்படும் ஒலியையும் வலையில் அகப்பட்ட சிங்கத்தின் அசைவுகளையும் நேரடி நிகழ்வுபோல் காண இயலும்.

சிறுவர் நூலகத்தில் உள்ள மழலைப் பாடல் புத்தகத்தைப் படிக்கும் குழந்தை அந்தப் பாடலை இசையுடன் கேட்கவேண்டும் என்றால் ஒலிநாடாவின் துணைதேட வேண்டும். ஆனால் இணைய நூலகத்தில் உள்ள மழலைப்பாடல்கள் அடங்கிய நூலைப் படிக்கும் போது அந்தப் பாடலைக் கேட்க விரும்பினால் அருகில் இருக்கும் ஒலிப்பெருக்கிப் பொத்தானைச் சுட்டியால் அமுக்கினால் போதும். உடனே அந்தப் பாடல் இசையுடன் ஒலிக்கிறது. அந்தப் பாடல் முடிந்த பிறகு மீண்டும் அதே பாடலைக் கேட்க வேண்டும் என்றால் மீண்டும் ஒருமுறை அதே பொத்தானில் அமுக்கினால் கேட்கமுடியும். ஒலிநாடாவைப் பின்நோக்கிச் சுழல விட்ட பிறகே

கேட்க முடியும் என்ற நிலை கிடையாது. அது போன்றே அந்தப் பாடலைக் காட்சியாகப் பார்க்க வேண்டும் என்றால் வீடியோப் படக் கருவிப் பொத்தானில் அமுக்கினால் அந்தப் பாடலும் காட்சியும் திரையில் தோன்றும்.

சிறுவர் நூலகத்தில் சிறுவர் நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுவனுக்கோ சிறுமிக்கோ அதில் இடம்பெறும் அருஞ்சொல் ஒன்றின் ஒலிப்பு எப்படி என்று தெரியவில்லை என்றால் அவர்கள் அங்கே இருக்கும் நூலகரை அல்லது ஆசிரியரைத் தேடிப் போகவேண்டும். ஆனால் இணைய நூலகத்தில் அருஞ் சொற்கள் சரியான ஒலிப்புடன் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அதன்மேல் சுட்டி செல்லும்போதே அதன் சரியான ஒலிப்பைக் கேட்க இயலும். இதனால் நூலகரிடம் அல்லது ஆசிரியரிடம் கேட்கச் செல்லும் நேரம் மிச்சம் ஆகிறது.

அனைவர்க்குமான இணைய நூலகம்

பதின்மூன்று வயதுமுதல் அனைவரும் பயன்படுத்தும் வகையில் அமைந்தது இந்தவகை நூலகம். இதில் இலக்கிய நூல்களும் பிற நூல்களும் துறை வாரியாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கும். இவற்றுடன் ஒலி நாடாக்களும் ஒலி-ஒளி நாடாக்களும் இருப்பதும் உண்டு.

அனைவர்க்கும் பொது இணைய நூலகத்திலும் நூல்கள் துறைவாரியாகப் பகுக்கப்பட்டிருக்கும். எந்த நூலைப் படிக்க வேண்டுமோ அந்த நூலில் சுட்டியை வைத்து அமுக்கினால் அந்த நூலின் முகப்புத் தோற்றம் திரையில் முழுமையாகத் தோன்றும். அதில் உள்ளே / பொருளடக்கம் என்று குறிப்பிடப் பட்டிருக்கும் பகுதியில் சுட்டியை வைத்து அமுக்கினால் பொருளடக்கம் தோன்றும்.

சாதாரண நூலகத்தில் உள்ள நூலின் பொருளடக்கத்தை எடுத்து, அதில் உள்ள எந்தத் தலைப்பைப் படிக்கவேண்டும் என்றாலும் அந்தத் தலைப்புக்கு அருகில் குறிக்கப்பட்டிருக்கும் பக்கத்தைப் புரட்டிக் கண்டுபிடித்துப் படிக்கவேண்டும். ஆனால் இணைய நூலகத்தில் உள்ள நூலின் பொருளடக்கத்தில் உள்ள எந்தத் தலைப்பைப் படிக்கவேண்டுமோ அந்தத் தலைப்பின்மேல் சுட்டியை வைத்து அமுக்கினால் அந்தத் தலைப்பில் உள்ள செய்திகள் திரையில் தோன்றும். அவற்றைத் தொடர்ந்து படிப்பதற்கு இழுப்பானைப் (*Scroll bar*) பயன்படுத்திப் படிக்கலாம்.

எடுத்துக் காட்டாக, திருப்புகழ் என்னும் நூலில் உள்ள பாடலைச் சாதாரண நூலகத்தில் படித்துக் கொண்டிருக்கும் ஒருவர் அந்தப் பாடலைச் சந்தத்துடன் கேட்க நினைத்தால் ஒலிநாடாவின் உதவியை அவர் நாடிப்போக வேண்டும். ஆனால் இணைய நூலகத்தில்

படிக்கின்ற ஒருவருக்கு அத்திருப்புகழ்ப் பாடலைச் சந்தத்துடன் கேட்க வேண்டும் என்று தோன்றினால் அருகில் இருக்கும் ஒலிப் பெருக்கிப் பொத்தானை அழுக்கினால் ஒலிக்கோப்பில் பதிவு செய்து வைக்கப்பட்டிருக்கும் பாடல் ஒலிக்கும். கணப்பொழுதில் எந்த விதத் துன்பமும் இல்லாமல் அந்தப் பாடலைக் கேட்டுவிட முடியும்.

தொகுத்துக் கற்றலுக்கு இணைய நூலகம்

சங்க இலக்கியப் பாடல்கள் ஒவ்வொன்றிலும் திணையும் துறையும் குறிக்கப்பட்டிருக்கும். சாதாரண நூலகங்களில் அவற்றைப் படிக்கும்போது ஒரு திணையைச் சேர்ந்த பாடல்கள் அனைத்தையும் வரிசையாகப் படிக்கவேண்டும் என்று நினைத்தால் அவ்வாறு படிக்க இயலாது. உ.வே. சாமிநாதர் பதிப்பித்தது போல் தரமாகப் பதிப்பிக்கப் பட்ட நூல்களிலும் குறிப்பிட்ட திணைக்குரிய அல்லது துறைக்குரிய பாடல்களின் எண்கள் மட்டுமே தொகுத்துக் கொடுக்கப் பட்டிருக்கும். அவற்றை நாம்தான் அந்தந்தப் பாடல்கள் இடம் பெறும் பக்கங்களைப் புரட்டிப் படிக்கமுடியும். ஆனால் இணைய நூலகத்தில் ஒரு குறிப்பிட்ட சங்க இலக்கியத்தில் குறிப்பிட்ட திணைக்குரிய பாடல்களை எல்லாம் தொகுத்துப் படிக்கவேண்டும் என்று நினைத்தால் அந்தத் திணை குறிப்பிடப்பட்டிருக்கும் இடத்தில் சுட்டியை வைத்து அழுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் குறிப்பிட்ட திணைக்குரிய பாடல்கள் அனைத்தும் வரிசையாக வந்துவிடும். இதைப் போன்றே குறிப்பிட்ட துறையில் உள்ள பாடல்கள் அனைத்தையும் தொகுத்துப் படிக்க இயலும்.

சங்க இலக்கியம் தமிழர்களின் கருத்துப் பெட்டகம். அதில் பழந்தமிழர்களின் எண்ணங்களும் இயற்கைப் பதிவுகளும் எண்ணி லடங்காத அளவுக்கு உள்ளன. அவற்றைத் தொகுத்துக் கற்பதற்கும் இணைய நூலகத்தில் எளிதில் இயலும். சங்க காலத்தில் (இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு) தமிழகத்தில் உலவிய விலங்குகளையும் பறந்த பறவைகளையும் வளர்ந்த மரம், செடி, கொடிகளையும் மலர்ந்த மலர்களையும் எளிதில் தொகுப்பாகக் கற்ற இயலும்.

எடுத்துக் காட்டாக, அகநானூறு என்னும் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் குருகு என்னும் பறவையினத்தைப் பற்றிய செய்தி களை ஒரே நேரத்தில் படிக்க விரும்பினால் அகநானூற்றில் குருகு என்று இருக்கும் இடத்தில் சுட்டியை வைத்து அமுக்க வேண்டும். அவ்வாறு அமுக்கினால் அகநானூற்றில் உள்ள நானூறு பாடல் களில் எந்தப் பாடல்களில் எல்லாம் குருகு இடம் பெற்றுள்ளதோ அவை அனைத்தையும் ஒரே இடத்தில் தொகுப்பாகப் பார்த்துப் படிக்க இயலும். இதைப்போன்றே ஒவ்வொன்றையும் தொகுத்துக் கற்க இயலும்.

தேடிக் கற்றலுக்கு இணைய நூலகம்

தமிழ் இலக்கியங்களை எண்ணிக்கையில் அடக்க இயலாது. நாள்தோறும் புதுப்புது இலக்கியங்கள் எழுந்துகொண்டே இருக்கின்றன. பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் மட்டுமே பதினெட்டு நூல்கள் உள்ளன. அவற்றில் எட்டுத் தொகையில் மட்டுமே ஏறத்தாழ 2350 பாடல்கள் உள்ளன. இவை தவிர சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கில் ஏறத்தாழ மூவாயிரத்து நூற்று ஐம்பது பாடல்கள் உள்ளன. இவை அனைத்தையும் மனத்தில் பதிப்பது எல்லோராலும் இயலாது.

திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களில் அகர என்று தொடங்கும் பாக்கள் அனைத்தையும் ஒருவர் படிக்க விரும்பினால் அவை அனைத்தையும் இணைய நூலகத்தின் உதவியால் சில நொடி களில் அவரால் பெறமுடியும். திருக்குறளில் தேடுதல் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் பொத்தானை அழுக்கினால் தமிழ் விசைப்பலகை ஒன்று தோன்றும். அதில் அகர என்னும் எழுத்து களைச் சுட்டியின் உதவியால் அழுக்கி அவற்றைத் தோன்றச் செய்தபின் எனத் தொடங்கும் பாடல் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் பொத்தானை அழுக்கினால் அகர என்ற சொல்லுடன் தொடங்கும் அனைத்துக் குறட்பாக்களும் சில நொடிகளில் திரைக்கு வந்துவிடும். இதைப் போன்று எந்தச் சொல்லில் தொடங்கும் குறட்பாவையும் தேடிக் கற்க முடியும்.

திருக்குறளில் உலகு என்று முடியும் குறட்பாக்களையும் வேறு சொல்லில் முடியும் குறட்பாக்களையும் இதைப் போன்று நொடியில் தேடிக் கண்டுபிடித்துவிட முடியும்.

திருக்குறளில் இடம்பெறும் ஒரே ஒரு சொல் மட்டும் நமது நினைவில் இருக்கிறது. அந்தச் சொல் இடம்பெறும் திருக்குறள் எது என்று நினைவில் இல்லை என்றாலும் கவலை வேண்டாம். இணைய நூலகத்தின் தேடுதலின் உதவியால் எளிதில் கண்டு பிடித்துவிட முடியும்.

இணைய நூலகத்தின் உதவியால் ஒருவர் தமிழ்க்கல்வியை எளிதில் பெறமுடியும். மேலும் சாதாரண நூலகத்தில் கற்பதை விடவும் எளிதில் கற்க இயலும்.

மின்னணு ஊடக இலக்கணக் கோட்பாடு

பெ. ராஜேந்திரன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

ஒரு சமூகத்தின் பல்வேறு வளர்ச்சிக்கும் ஒருங்கிணைப்புக்கும் தகவல் தொடர்பு ஊடகங்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். தகவல் தொடர்பு ஊடகங்களை அதன் தன்மைக்கு ஏற்ப அச்சு ஊடகங்கள், மின்னணு ஊடகங்கள், இணையம் எனப் பலவாறாகப் பிரிக்கலாம். இவற்றுள் மின் பிம்ப (film) ஊடகங்கள், நாட்டுப்புற ஊடகங்கள் ஆகியனவும் உள்ளடங்கியுள்ளன. இணையம் தனது பல் ஊடகத் தன்மையினால் (எழுதுதல், கேட்டல், பார்த்தல்) அது எல்லா தகவல் தொடர்பு ஊடகக் கூறுகளையும் உள்ளடக்கி யுள்ளது. பொதுவாக எல்லா தகவல் தொடர்பு ஊடகங்களும், அதற்கென்ற, சில தனிச் சிறப்புக்களைக் கொண்டு விளங்குகின்றன. இவற்றுள் இக்கட்டுரை மின்னணு ஊடகத்தின் இலக்கணக்கூறு என்ன என்பதை அறிய முற்படுகிறது.

ஒரு மொழியின் இலக்கணம் என்பது அம்மொழியின் ஒலி, எழுத்து, சொல், பொருள், வாக்கியம் ஆகியவற்றை உள்ளடக்கிய தாகும். அதுபோலவே ஊடக இலக்கணம் என்பது ஊடகத்தின் செயல்தன்மைப்பற்றி சொல்வதாகும். ஓர் ஊடகத்தின் அடிப்படைப் பண்பு என்பது தகவலை விரும்புவோருக்கு எடுத்துச் செல்வதாகும். இதனை அடிப்படையாக கொண்டே ஊடகத் தகவல் தொடர்பு மாதிரிகள் உருவாக்கப்பட்டன. மின்னணு ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் பண்பைப் புரிந்துகொள்வது என்பது அவற்றின் வடிவங்களை (formats) மதிப்பீடு செய்தலாகும். இந்த மதிப்பீட்டுப் பண்பைத்தான் ஊடக இலக்கணம் என்று கூறுகிறோம். இவ்விலக்கணமானது மின்னணு ஊடக உள்ளடக்கத்தில் தாக்கத்தை உண்டுபண்ணும் காரணிகள் பற்றியும் பேசுகிறது. இது மின்னணு ஊடகத்தின் ஆளுமைக் குணத்தைப் பொறுத்து அமைகிறது. முடிவாக சொல்லின் இவ்விலக்கணம் மின்னணு ஊடக வடிவ விளைவு களின் அனுமானங்களைப் பரிசீலித்து வெளிப்படுத்துகிறது. இவ்வூடக இலக்கணமானது நேரப்பயன்பாடு, உள்ளடக்கம் ஆகியவற்றுடன்

கூடியதாகும். இந்த அடிப்படையில் இது ஒரு தனிப்பட்ட வழி வகையாக (medium) உருவாகியுள்ளது. இது நேரம், நேயர்களின் தினசரி நடவடிக்கையின் படிநிலைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியது. இதில் உள்ளடக்கம், மின்னணு ஊடகத்தின் தினசரி செயல்பாடுகளின் கூறுகளை நிலைப்படுத்தி ஒருமுகப்படுத்துகிறது. இதில் மின்னணு பேச்சு விரிவாக்கம் என்பது நேரம், இலக்கண ஒருங்கிணைப்புக் காரணிகள் ஆகியவற்றைக் கொண்டதாகும். மேலும் மின்னணு ஊடக இலக்கண உணர்வு என்பது மனதில் நிற்கக்கூடியதும், மகிழ்வூட்டக் கூடியதுமாகும்.

மின்னணு ஊடக நிகழ்ச்சிகளில் வானொலி நிகழ்ச்சிகள், ஒதுக்கீட்டு நேரம், குரல்வளம் ஆகியவற்றை வைத்து தீர்மானிக்கப் படுகின்றன; தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நேரம் நாடகம், நகைச்சுவை, செய்தி, போன்றவைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. வானொலி நேயர்களின் உணர்வு என்பது அதனது உண்மை நேரத்தைப் (real time) பொறுத்து அமைகிறது. இதைத்தான் வளர்நேர்கோட்டு நேரம் என்று அழைக்கின்றனர். இது நேயர்களுக்கு நிகழ்ச்சியின் அடிப்படையில் அன்றைய நேரத்தை அறுதியிட உதவும். வானொலியில் அதற்குரிய நேரமும் குரல் அளவீடும் இசைக் குறியனவாகும். இவற்றின் ஒவ்வொரு இசைக்கூறும் தனக்குள் சில குறிப்பிட்ட நேர அளவை உள்ளடக்கியுள்ளது. மின்னணு ஊடக நிகழ்ச்சிகளின் நேர பிரிவுகள் ஒருவகைச் சமநிலைக் கூறுகளைக் கொண்டதாகும். இத்தகைய நிகழ்ச்சிகால பாகுபாட்டிற்கு கணினி தொழில்நுட்பத்தை இன்று பல மின்னணு ஊடக நிலையங்கள் பயன்படுத்தி வருகின்றன. இவற்றின் நேர விரிவாக்கத்திற்கு இசையும் மிகவும் உறுதுணை புரிகிறது. மின்னணு ஊடக நிகழ்ச்சிகள் பல வடிவமைப்புக்களைக் (formats) கொண்டு விளங்குகின்றன. இதற்குரிய நேரங்கள் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு, அவற்றின் சில பகுதிகள் அதனின் சிறப்பு நேயர்களுக்காக ஒதுக்கப்படுகின்றன. இதனின் நிகழ்ச்சிக் கூறுகள் பல பதிவுகளைக் (records) கொண்டது. இதன் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அதற்குரிய நிகழ்ச்சி தயாரிப்பாளரின் மேற்பார்வையில் உருவாக்கப்படுகின்றது. அந்நிகழ்ச்சி தயாரிப்பாளரே அந்நிகழ்ச்சியின் நேர அளவு, ஒலி பரப்பப்படும் நாள் ஆகிய வற்றைத் தீர்மானம் செய்கிறார்.

மின்னணு ஊடகம் ஒருவகை நெருக்கமான கலந்துரையாடல் குணத்தைக் கொண்டுள்ளது. எந்த ஒரு நிகழ்ச்சியும் அதற்குரிய நேயர்களைச் சென்றடைய வேண்டுமெனில் அதனை அந்நேயர் களின் பண்பாட்டுச் சூழலுக்குரிய மொழியில் அல்லது வழக்கில் சொல்லப்படவேண்டும். அம்மொழியானது பொதுவாக பேசப்படும்

மொழியின் தாளம் (rhythm). சுருதி (pitch), பேச்சுக் குணம் (jargon) ஆகியவற்றிலிருந்து மாறுபட்டு இருக்கும். இவ்வூடகங்கள் பேச்சுக் கூறுகள், இசை போன்றவற்றை நேயர் மொழியில் கொடுக்கின்றனர்; புரியாத, பரிச்சயமில்லாத மொழியைப் பயன்படுத்துவதில்லை.

மின்னணு ஊடகங்களில், தொலைக்காட்சிக்கு அதனது காட்சி மிகவும் அடிப்படையானது. அவற்றால் வழங்கப்படும் காட்சிகள் நேயர்களை ஈர்க்கக்கூடியதாக அமையப்பெறவேண்டும். ஆனால் வானொலிக்கு உச்சரிப்பு தெளிவாகவும், அதன் நடை பண் படுத்தப்பட்டதாகவும் இருக்கவேண்டும். சொல்கிற கருத்துக்கள் தெளிவுடனும், சரியாகவும், காதுக்கு இனிமையாகவும் வழங்கப் படவேண்டும்; தயங்கி தயங்கியோ, தாமதப்படுத்தியோ, விட்டு விட்டோ, அதிக இடைவெளி (pause) இருப்பதுபோலவோ வழங்குதல் கூடாது. இவற்றில் ஊடக ஆளுமை என்பது அவற்றின் சிறப்புப் பண்பாட்டைக் குறிக்கும். இது, அவற்றின் லட்சிய மாதரி தகவல் தொடர்பாக விளங்குகிறது. மின்னணு ஊடகங்களில் இருபொருள் சொற்கள் பயன்படுத்துவது தவிக்கப்படுகின்றன. ஒரு மின்னணு ஊடகத்தை எப்பொழுது போட்டுப் (Switchon) பார்த்தாலும் அதனை நேயர்கள் புரிந்துகொள்வதுபோல அது அமைக்கப்பட்டிருக்கும். இதில் பயன்படுத்தப்படும் இசைக் கூறுகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டது. இருப்பினும் இம்மின்னணு ஊடகங்களின் உள்ளடக்கத்தை சிறிது கேட்டவுடன் அதனைப் புரிந்துகொண்டு, தொடர்ந்து கேட்க அல்லது பார்க்க முடியும். குரல் தாளம் கூட உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள உதவும். காட்டாக இசையை மற்ற கூறுகளிலிருந்து வேறுபடுத்திக்கண்டு உணர முடியும்.

ஒரு வானொலியின் உள்ளடக்கத்தை அதனது குரல்வளம்தான் நிர்ணயம் செய்கிறது. எந்தவொரு ஊடக நிலையத்தையும் அதற்கே உரிய இசை, குறியீடு அல்லது சுருதி இவற்றைக்கொண்டு அடையாளம் கண்டுகொள்ள முடியும். மின்னணு உள்ளடக்க வடிவமைப்பில் அவற்றின் இலக்கணம் சாரா காரணிகளும் ஆதிக்கம் செலுத்து கின்றன. இவற்றின் உள்ளடக்கம் பெரும்பாலும் அதனின் கொள்கைகள், நீதி நெறிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப் படுகின்றன. இந்த அடிப்படையில்தான் அதன் பணி, சமூக நலனுக்கு உகந்தார்போல வரையறைச் செய்யப்படுகின்றது.

மின்னணு ஊடக நிகழ்ச்சிகள், அவற்றின் சிறப்பு நேயர்களின் வேண்டுதலுக்கு ஏற்றாற்போலவும் மாற்றியமைக்கப்படுகின்றன. இந்தத்தேவை பாடல்கள், இசை அல்லது எந்தவொரு பொழுது போக்கு நிகழ்ச்சிகளாகக்கூட இருக்கலாம். இருப்பினும் மின்னணு ஊடகத்தில் அதன் உள்ளடக்கத்தை ஒளிபரப்பிக் கொண்டிருக்கும்

போது உடனடியாக அதனைத் திரும்பி ஒளிபரப்ப வாய்ப்பு இல்லை. மின்னணு உள்ளடக்கத்தை, பொழுதுபோக்கு அம்சம் கொண்டவை, இல்லாதவை என்றுகூட வரையறைப்படுத்தலாம். இவற்றில் மின்னணு ஊடக ஆளுமை ஓர் உருவமாக சித்தரிக்கப் படுகிறது. இவற்றில் பயன்படுத்தப்படும் காற்று அல்லது கம்பி ஆளுமை ஒரு தனிப்பட்ட உறவை நேயர்களுடன் வளர்க்கப் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஊடக ஆளுமைகள் இரண்டு செயல் களை நிறைவேற்றப் பயன்படுத்தப்படுகின்றன. 1. தனிப்பட்ட நிலையில் நேயர்களுடன் பேசுதல் - அது நேர்யர்களுக்கு ஒரு மகிழ்ச்சியூட்டும் அல்லது கேளிக்கை சபை 2. நேயர்களை மகிழ் வடையச் செய்தல் - இதற்கேற்ப அதனின் ஒவ்வொரு வடிவமைப்பும் அமைக்கப்பட்டிருக்கும். இதில் வானொலி ஆளுமை என்பது பொதுவாக இன்பியல் நாடகத் தன்மை கொண்டது. இது நேயர் களின் மன இறுக்கத்தைக் குறைக்க பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய செயல்பாட்டைச் செய்ய எந்தவொரு வானொலி நிகழ்ச்சியும் நன்கு திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும். இது தொலைக்காட்சிக்கும் பொறுந்தும்.

நேயர்கள் தனது தினசரி வேலைப்பளு காரணமாக பலவிதமான மன அழுத்தத்திற்கு உள்ளாகுகிறார்கள். இந்நேரத்தில் இவ்வூடகங்கள் தம்மின் கேளிக்கை, புத்திசாலித்தனம் (withy) அல்லது நகைச்சுவை இவற்றின் மூலமாக அவர்களை மகிழ்ச்சியடையச் செய்கின்றன. இத்துடன் நேயர்களுக்குத் தேவையான நடைமுறைத் தகவல்கள், முக்கியமாக வானிலை, போக்குவரத்து, நேரம் - மேலும் கிண்டல், கேளிப் பேச்சுக்கள், பால் உணர்வு பற்றிய தவிர்க்க இயலாத குறிப்புக்கள் ஆகியவற்றையும் வழங்குகிறார்கள். இவற்றில் இசைப் பண்பாட்டுக்கூறின் மாதரி செயல்பாடு என்பது எழுத்து சாரா நடத்தை மற்றும் உடல் காட்சிக்கற்பனை ஆகியவற்றை உள்ளடக்கிய தாகும். மின்னணு ஊடக ஆளுமையைப் பண்பாட்டுக் கூறுகளுக்குள் உள்ளடக்கமுடியாது. இவை கலாச்சாரக் கூறுகளை மட்டும் பரிவர்த்தனைச் செய்து கொள்வது இல்லை; ஏனெனில் ஊடகப் பண்பாட்டுக்கு எனச் சில தனிப்பட்ட சிறப்பியல்புகள் உள்ளன. மின்னணு ஊடகங்கள் தகவலை எடுத்துச் செல்ல உதவும் ஒருவகை வழி (Medium) முறையாகும். இவற்றில் வானொலி கேட்பவர்கள் எந்தவொரு பணியையும் தொலைகாட்சி நேயர்கள்போலச் செய்யாது இருப்பதில்லை. தொலைக்காட்சி நேயர்களை ஈர்த்துக் கொள்வதால், அவர்கள் காட்சித்திரையில் காணும் எதையும் ஏற்றுக்கொள்கிறார்கள். இதற்கு வானொலி எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்பது பொருளல்ல, வானொலி நேயர்களுக்கு வழிகாட்டியாகவும்,

ஒழுங்குடைய உண்மையை நிலைநிறுத்தக் கூடியதாகவும் விளங்குகிறது.

மின்னணு ஊடகங்கள் நேரடி ஒலிபரப்பை ஊக்குவிக்கின்றன. இவை ஒரே பண்பாட்டுச் சூழலைக் கொண்ட உறுப்பினர்களிடையே தூண்டுதலையும், அவர்கள் அவற்றை மறக்காதிருக்கவும் உதவு கின்றன. மேலும் இவ்வூடகங்கள் ஒரு வரையறைக்குட்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இத்தூண்டல், அந்நிகழ்ச்சியின் செயல், வடிவம் ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது. இவை அன்பு, குடும்பம், பணி, அதில் உள்ள பிரச்சனைகள் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துரைக்கின்றன. மகிழ்வூட்டும் காட்சிப்பணி விளைவுகள் மின்னணு ஊடக வடிவநிலையில் வேறுபாடு கொண்டவையாகும். இவை அறிவை நுகர்கின்றன. மேலும் இவற்றின் ஆளுமை ஒரு முன் மாதிரி (role model) தாக்கத்தை உண்டு பண்ணக்கூடியது. பொதுவாகக் கூறின், மின்னணு ஊடகங்களுக்கென ஒரு தனிப் பண்பாடு இருந்தாலும், அவை ஒரு நிலைப்படுத்தப்பட்ட பல பண்பாட்டுக் கூறுக்கான சமூகப் பணியைச் செய்கின்றன.

'பேசும் பொம்மைகள்' நாவலில் அறிவியல் சிந்தனைகள்

பூ. இந்துமதி
எல். ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரி
திருப்பூர்

'பேசும் பொம்மைகள்' என்ற அறிவியல் நாவலின் ஆசிரியர் சுஜாதா ஆவார். மனிதனுக்குச் செயற்கை முறையில் மூளையைப் பொருத்துவது பற்றிய அறிய மாற்றம் மற்றும் பதிவு குறித்த ஆராய்ச்சி நாவலின் மையக் கருவாக அமைந்துள்ளது. இந்நாவலில் செயற்கை மூளையைப் மனிதனுக்குப் பொருத்துவது பற்றிய ஆய்வில் டாக்டர் சாரங்கபாணி, டாக்டர் நரேந்திரநாத் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஆண் முதன்மைப் பாத்திரங்களாக விளங்குகின்றனர். ஆய்விற்கு உட்படுத்தப்படும் பெண் முதன்மைப் பாத்திரமாக மாயா விளங்குகிறாள். இந்நாவலின் எதிர்நிலைப் பாத்திரம் சுனில் ஆவார். நிகழ்ச்சிப் பாத்திரங்கள் கணேஷ், வசந்த் மற்றும் கோமஸ், மேனகா மற்றும் பலர் இடம் பெற்றுள்ளனர். இந்நாவலில் இடம் பெறும் அறிவியல் சிந்தனைகளை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

'செயற்கை அறிவு' மற்றும் 'பதிவு' குறித்த ஆராய்ச்சி ஸி.எம்.ஆர். நிறுவனத்தில் டாக்டர் நரேந்திரநாத் மற்றும் டாக்டர் சாரங்கபாணியால் மேற்கொள்ளப்படுகிறது. எந்த ஒரு அறிவியல் கொள்கையும், பரிசோதனை நிலையில் மனிதன் அல்லாத பிற உயிரினங்களின் மேல் மேற்கொள்ளப்பட்டுப் பின்னரே மனிதன் மீது செயல் படுத்தப்படுவது வழக்கம். இதற்கு மாறாக சுஜாதாவின் 'பேசும் பொம்மைகள்' நாவலில் செயற்கை அறிவு மற்றும் பதிவு பற்றிய ஆராய்ச்சி நேரடியாக மனிதன் மேல் மேற்கொள்ளப்படுகிறது. மனிதன் மேல் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால் ஆராய்ச்சி நிலையில் ஏற்படும் விளைவுகள் பின்வருமாறு பகுக்கப்பட்டுள்ளது.

1. செயற்கை அறிவு மாற்றம் மற்றும் பதிவு விளக்கம்
2. ஆராய்ச்சி நிலையில் ஏற்படும் விளைவுகள்.
   மனிதன் உடல்நலன் பாதிக்கப்படுதல்.
   ஆ. மனநலன் பாதிக்கப்படுதல்.
   இ. மரணம் அடைதல்.

3. ஆய்வின் வெற்றியால் ஏற்படும் விளைவுகள்

அ. மரணத்தை வெல்லுதல்.

என்பனவாகும்.

1. செயற்கை அறிவு மாற்றம் மற்றும் பதிவு (Downloading) விளக்கம்

செயற்கை அறிவு மாற்றம் மற்றும் பதிவு என்பது மூளையிலுள்ள அனைத்துச் செய்திகளையும் பிரதியெடுத்தல் என்று குறிப்பிடலாம். இதனைப் பின்வரும் பகுதியால் அறியலாம்.

> ''மாயாங்கறது ஒரு மனபிம்பம். உன் ஞாபகங்கள், சின்ன வயசிலிருந்து சேர்த்து வைத்த வார்த்தைகள். அனுபவங்கள், பார்த்த கண்ணாடிகள் எல்லாமே உன் மூளைக்குள்ள மின் ரசாயன மாறுதல்களா, சின்ன மின் துணுக்குகளா இருக்குது...உன் உருவம், உள்ளடக்கம், எல்லாமே மூளைக்குள்ள இருக்கிற கெமிஸ்ட்ரிதான். அதை அப்படியே பிரதியெடுக்க ஆராய்ச்சிகள் பண்ணிக் கொண்டிருக்கிறோம்.
>
> பிரதியெடுத்து
>
> ஒரு கம்ப்யூட்டருக்கு அந்த பிம்பத்தை மாற்றிடவும் முயற்சிக்கிறோம்.
>
> மாற்றி
>
> உனக்கு அப்பாலும் ஒருத்தியை உருவாக்க முடியும். இப்ப உன் குரலை அலசி ஒரு கம்ப்யூட்டரைக் கொண்டு மறு உருவாக்க முடியும். அது போல உன் மனத்தையும்''[1]

என்ற டாக்டர் நரேந்திரநாத் மற்றும் மாயாவின் உரையாடல் வழி, மனித மூளையின் அனைத்து அம்சங்களையும், ஒரு கணிப்பொறியின் ஞாபகத்திற்கு மாற்றுவதை 'டவுன்லோடிங்' என்று குறிப்பிடலாம்.

2. ஆராய்ச்சி நிலையில் ஏற்படும் விளைவுகள்

மனிதன் உடல்நலன் பாதிக்கப்படுதல்

மனிதனுக்கு செயற்கை மூளையைப் பொருத்துவது பற்றிய ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படும் முன் தகுதி நிலையில் அவனின் முழு உடல் நலமும், மனநலமும் பரிசோதிக்கப்படுகிறது. இப் பரிசோதனையின் முடிவில் மனிதனின் உடலில் குறைபாடுகள் எதுவும் இல்லை என்ற நிலையில் செயற்கை அறிவு மாற்றம் மற்றும் பதிவு ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுகிறான்.

தொடக்க நிலையில், ஆராய்ச்சியின்போது ஏற்படும் எதிர்பாராத விளைவுகளை முன்னிட்டு, எச்சரிக்கையாக இவ்ஆராய்ச்சி ஒரு குழுவினரின் மேல் மேற்கொள்ளப்படுகிறது. பரிசோதனை நிலையில் இக்குழுவிற்குக் கொடுக்கப்பட்ட மருந்தின் அளவில் ஏற்பட்ட

சிறு தவறின் காரணமாக இரண்டு கைகளில் ஒன்று சிறியதாகும் தன்மையை அடைகிறது. மேலும், முழங்கைக்கு அருகில் சதைகள் இறுகிப் போகும் தன்மையைப் பெற்றுவிடுகிறது. அதனால் ஒரு கையைக் குறிப்பிட்ட அளவுக்கு மேல் தூக்கி மடக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இதனை மிருணாளினி மற்றும் மாயாவின் உரையாடல் வழி அறியலாம்.

> ''கையை ஒரு லெவலுக்கு மேலே மடக்க முடியலை. பிஸியோதெரப்பி எக்ஸஸைஸ் பண்ணிக்கிட்டு இருக்கேன். கையை தோள்வரை தான் மடக்கிக் காட்டினாள்''[2].

மேற்கண்ட பகுதியில் இருந்து, மருந்தின் அளவில் ஏற்பட்ட தவறு காரணமாக, ஆராய்ச்சியின் தொடக்கநிலையில் மனிதனின் உடல் நலன் பாதிப்புக்குள்ளாவது புலப்படுகிறது. இவற்றை ஆராய்ச்சி நிலையில் ஏற்படும் எதிர்விளைவுகளாகக் கருத இடம் ஏற்படுகிறது.

மனநலன் பாதிக்கப்படுதல்

செயற்கை அறிவு மாற்றம் மற்றும் பதிவு ஆராய்ச்சியில், ஆராய்ச்சி முயற்சி வெற்றி அடையும் நிலையில், ஒரு மனித மூளையின் நினைவுகள் அடங்கிய கணிப்பொறி 'சிப்' (கணிப் பொறியின் நினைவில் விவரங்களை சேகரித்து வைக்கும் பகுதி). மற்றொரு மனிதனுக்குப் பொருத்தப்படுகிறது. இதனால் பொருத்தப் பட்ட மூளையின் நினைவுகள், ஏற்கெனவே இயல்பாக உள்ள மூளையின் நினைவுகள் இரண்டும் கலந்து, ஒரு குழப்பமான, தெளிவற்ற மனநிலையை உண்டாக்குகிறது.

ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட நர்மதாவின் நினைவுகள் அடங்கிய 'சிப்' மாயாவின் மூளையுள் பொருத்தப்படுகிறது. எனவே நர்மதாவின் நினைவும், மாயாவின் நினைவும் இணைந்து ஒரு குழப்பமான, தெளிவற்ற மனநிலையை அடைகிறாள் மாயா. இதனால் அவளின் மனநலன் பாதிக்கப்படுவது புலப்படுகிறது. இதற்குப் பின்வரும் பகுதி சான்றாக அமைகிறது.

> ''ஒரு மூளை என் பெயர் நர்மதா என்றது. மற்றொரு மூளை நான் மாயா என்றது. ஒரு மூளையில் தெலுங்கு வாக்கியங்கள் ஒலித்தன''[3]

மேற்கண்ட பகுதியில் இருந்து மாயா, ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் மனக்குழப்பம் அடைகிறாள். மேலும் அடிப்படை மன நினைவுகள் கூடக் குழப்பம் அடைகின்றன என்பது வெளிப்படுகிறது.

மரணம் அடைதல்

ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட பெண்களில் மேனகா என்பவள் ஒருத்தி. அவளின் குரல்கள், சில நினைவுகள் அடங்கிய பாதி

மூளையின் நினைவுகளைக் கணிப்பொறிக்கு மாற்றிய நிலையில் ஆய்வு நிலையில் ஏற்பட்ட தவறு காரணமாக மேனகாவின் மூளை சேதமடைந்து விடுகிறது. இதனால் மேனகா பாதி உயிர் மட்டுமே இருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள். பாதி உயிர் உள்ள நிலையில் மீண்டும் மின் இணைப்புகளின் மூலம் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. இதனால் மூளையின் பகுதி முற்றிலும் சேதமடைந்து மேனகா இறந்துவிடுகிறாள். இதனைப் பின்வரும் பகுதியால் அறி முடிகிறது.

> ''எல்லாம் கம்ப்யூட்டர்தான். கம்ப்யூட்டர்ல அவளுடைய வாய்ஸ் இருக்கு. அவளுடைய பழைய ஞாபகங்களை டவுன்லோடு செய்து வெச்சிருக்கோம். எல்லாம் முடிஞ்சு, வெண்ணெய் திரண்டுவர்ற நேரத்தில் பொசுக்குன்னு மண்டையைப் போட்டுட்டடா.
>
> ......
>
> இப்பகூட என்ன உயிரோட தானே இருக்கறமாதிரி பாடியை மார்க்ல வெச்சிருக்கோம்! பேச்சுகூட பேசுது''[4]

மேற்கண்ட பகுதியில் இருந்து மூளை மாற்றம் மற்றும் பதிவு ஆராய்ச்சியில் மனித மூளையின் பகுதி சேதமடைந்து அதனால் மனிதன் இறக்கும் நிலையை அடைவது வெளிப்படுகிறது.

3. ஆய்வின் வெற்றியால் ஏற்படும் பின் விளைவுகள்

மனிதன் மரணத்தை வெல்லுதல்

டாக்டர் சாரங்கபாணி மற்றும் டாக்டர் நரேந்திரநாத் இவர் களின் செயற்கை அறிவு மாற்றம் மற்றும் பதிவு முயற்சி வெற்றி அடைகிறது. இவ் ஆராய்ச்சி வெற்றி அடைந்த நிலையில் டாக்டர் சாரங்கபாணி இறந்துவிடுகிறார். டாக்டர் சாரங்கபாணியின் ஆராய்ச்சி வெற்றி மற்றொரு சாரங்கபாணி உருவாகக் காரணம் ஆகிறது. எவ்வாறெனின் சாரங்கபாணியின் நினைவுகள் அடங்கிய கணிப் பொறி 'சிப்' மற்றொருவருக்குப் பொருத்தப்படுகிறது. இதனால் சாரங்கபாணி இறவா வரம் பெறுவதை அறிய முடிகிறது. இதனைப் பின்வரும் வரிகள் தெளிவுறுத்துகின்றன.

> ''நீங்கள் இறக்கும் போது உங்கள் நினைவுகள் அத்தனையும் இறந்து போகின்றன. நிங்கள் வாழ்நாள் முழுவதுமாகச் சேர்த்து வைத்த இத்தனை புத்தகங்கள், பாடங்கள், அறிவுப் பெட்டகங்கள், அனுபவங்கள் அத்தனையும் செத்துவிடுவதுதான் மனிதப் பிறவியின் மகத்தான சோகம்''[5]

மேற்கண்ட பகுதியில் இருந்து, மனித நினைவுகள் அனைத்தையும், ஒரு காந்தத் தட்டுக்கு மாற்றி மற்றோர் உடலுக்குப் புத்தம் புதிய

உடலுக்கு மாற்ற முடிந்தால் மனிதன் இறவா வரம் பெறுகிறான். தேவன் ஆகிறான் என்பதை அறிய முடிகிறது.

ஒரு துறையில் திறன் வாய்ந்தவர்களின் அறிவுமண்ணோடு மண்ணாக அழிந்து போகாமல் செயற்கை அறிவு மாற்றம் மற்றும் பதிவால் இறந்த பின்வரும் பயன்படுவதை அறிய முடிகிறது. ஒரு நிலையில் அறிவுச் செல்வம் பாதுகாக்கப்படுகிறது. என்றாலும் மற்றொரு நிலையில் சுயதேடலும், சுயசிந்தனையும் அற்ற சுயத் தன்மை இழந்த மனிதர்கள் உருவாவதற்கும் இடமளிக்கிறது. இதனால் ஒருவன் அறிவை மற்றொருவன் பெறுவது புலப்படுகிறது. சுய சிந்தனையும், சுயதேடலும் இல்லாமல் இருப்பதால், மனிதன் தனித்தன்மையை இழந்தவன் ஆகிறான் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

முடிவுரை

1. செயற்கை அறிவு மாற்றம் மற்றும் பதிவு ஆராய்ச்சி மனிதர்கள் மேல் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் ஆராய்ச்சிக்கு உட் படுத்தப்பட்ட மனிதர்களின் உடல்நலன் பாதிக்கப்படுகிறது. மூளை சேதத்தற்கு உள்ளாகிறது. அதன் விளைவால் மனிதன் மரணம் அடைகிறான். மனிதன் மனக்குழப்பம் அடைந்து மனநிலை பாதிக்கப்படுகிறான். இவ்இன்னல்கள் எல்லாம் மனிதன் மேல் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுவதால் ஏற்படு கின்றன என்பது தெளிவுறுகிறது.

2. இன்றைய அறிவியல் வளர்ச்சியில், மனிதனுக்கு உடல் உறுப்புக்களைச் செயற்கை முறையில் பொருத்துவது சாத்தியம் ஆகும். அவ்வகையில் இந்நாவலில் கூறப்பட்டுள்ள கருத்தின் வழி, எதிர்காலத்தில் செயற்கை மூளையை மனிதனுக்குப் பொருத்துவது சாத்தியமாகும் என்று கருத இடம் உண்டு.

3. செயற்கை அறிவு மாற்றத்தால் மனிதன் இறவா வரம் பெறுகிறான் என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக, சுய சிந்தனையும், சுயதேடலும், சுய அறிவும் அற்ற தனித்தன்மை இல்லாத மனித சமுதாய உருவாகும் நிலை தோன்றும் என்பது எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

குறிப்புகள்

1. சுஜாதா, 'பேசும் பொம்மைகள்', பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ப. 45-46.
2. மேலது, ப. 80
3. மேலது, ப. 136
4. மேலது, ப. 150
5. மேலது, ப. 286

ந. பிச்சமூர்த்தியின் அறிவியல் சிந்தனைகள்

இரா. மாலதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 113

மனிதனின் அறிவுத்திறனும், கற்பனைவளமும், செயல்திறனும் வளர்ந்து கொண்டே வருகிறது என்பதை இன்றைய அறிவியல் வளர்ச்சி யினைக் கொண்டு அறிய முடிகின்றது. இவ்வறிவியலின் அதீத வளர்ச்சியினையும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும், விளைவு களையும் எண்ணி ஆராய்ந்து, மக்களுக்கு அதை எடுத்துரைத்து அறிவுறுத்தும் வகையில் ந. பிச்சமூர்த்தியின் (1900-1976) 'விஞ்ஞானத்துக்குப் பலி' என்ற கதை அமைந்துள்ளது. மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொள்ளுதலே நல்லது என்ற எண்ணம் கொண்டவர் ந. பிச்சமூர்த்தி என்ற கருத்து அவரது விஞ்ஞானத்துக்குப் பலி, பழிக்குப்பழி, ஒரு பே(ா)ட்டி ஆகிய கதைகள் வாயிலாக உணரப்படுகிறது. இருப்பினும் அவரின் அறிவியல் பற்றிய சிந்தனைகளை 'விஞ்ஞானத்துக்குப் பலி' என்ற கதை வாயிலாக வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

சிறுகதைக்கு காலப் பின்னணி மிகத் தேவையானதல்ல. எனினும் சில கதைகளில் காலச் சூழல் வெளிப்பட்டும் வெளிப் படாமலும் அமைகின்றது. ந. பிச்சமூர்த்தியின் கதைகளில் காணப்படும் அவரது சிந்தனைகள், எண்ணங்கள், அவர் வாழ்ந்த காலத்தில் கேட்ட, பார்த்த, உணர்ந்த செய்திகள், இவைகளின் தாக்கத்தை புலப்படுத்துகின்றன. இதனை அவரே ஓரிடத்தில் ''1931-ஆம் ஆண்டென்று நினைக்கிறேன். தினசரி ஆங்கிலப் பத்திரிக்கை ஒன்றில் வெளியான செய்தி என் சிந்தனையில் சுருக்கென்று தைத்தது. யாரோ ஒரு ஜெர்மானிய விஞ்ஞானி தானாக இயங்கும் ராபாட் ஒன்றைப் புதுமையாகத் தயாரித்திருப்பதாக அந்தச் செய்தி கூறிற்று... அந்தச் செய்தியில் என் கற்பனையைப் பின்னி ஒரு கதையை எழுதி விட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.''

ந. பிச்சமூர்த்தியின் அறிவியல் சிந்தனைகள்

மனித உயிருக்கு கேடு விளைவிக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கண்டு வேதனை அடையும் அவரின் மனம் அவர் கதைகளின் வழி வெளிப்படுகிறது. அக்கதைகள் கற்பனை நிறைந்த அறிவியல் புனைக்கதைகளாக இருப்பினும் அவற்றில் அமைந்துள்ள உட்கருத்து விஞ்ஞானத்தின் வழியாகப் பெறப்படும் அழிவுகளைச் சுட்டிச் சமுதாயத்தை சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளமை காணப்படுகிறது.

இயற்கைக்கு எதிர்மறையான வளர்ச்சி

'விஞ்ஞானத்துக்குப்பலி' என்ற கதையில் விஞ்ஞானியான 'மே' என்பவரின் இயந்திரத்தால் ஆன 'செயற்கை மனிதக் கருவி' என்ற கண்டுபிடிப்பால் மக்கள் சமுதாயத்திற்கு ஏற்படும் சிக்கலும், அழிவிற்கு இழுத்துச்செல்லும் நிலைதான் அறிவியலின் அதீத வளர்ச்சி என்ற கருத்தும் வெளிப்படுத்தப் படுகின்றன.

உயிரை உருவாக்குபவர் கடவுள் என்ற நம்பிக்கை கொண்ட ஆசிரியர் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகள் கடவுளுக்குப் போட்டியாக அமைந்து விட்டதாக எண்ணுகிறார்.

''வெகு நாளாக ஸயன்ஸ் பேர்வழிகள் கடவுளைப்போல் சுயமாக சிருஷ்டி செய்யத் தலைகீழாக நின்று வருகிறார்களே தெரியுமா? சிலர் இரண்டொரு ரசாயன வஸ்துக்களைச் சேர்த்து உயிருண்டாக்க முயன்று வருகிறார்கள். சிலர் மனிதனைப் போன்று இரும்பு அல்லது இதர உலோகங்களில் யந்திரங்கள் செய்து மின்சார விசைகளை அதற்குள் வைத்துப் பார்த்தார்கள். இதுவரையில் அவர்கள் எண்ணம் முழுவதும் கைகூடியதாகச் சொல்லக்கூடாது. ஆனால் சமீபத்தில் கடவுளுக்கே ஆபத்து வந்துவிட்டதெனச் சொல்லலாம். எச்.மே என்பவர் ஓர் ஆளைத் தயார் செய்திருக்கிறார்''. (ப. 199 தொ.1) என்பதன் வழி மனிதனின் செயல்திறன், கடவுளாகப் போற்றப்படும் இயற்கைச் சக்திக்கு எதிர்மறையாகச் செயல்பட வேண்டிய அவசியம் இல்லை என்ற எண்ணம் கொண்டவர் ஆசிரியர் என்று அறியமுடிகிறது.

இயந்திரமனிதன் பற்றிய கருத்து

ஒரு புதிய கண்டுபிடிப்பு எத்தனையோ நன்மைகளை உலகிற்கு ஏற்படுத்தலாம். வசதிகளை உருவாக்கிக் கொடுக்கலாம். ஆனால் அது சில உயிர்களைப் பலிவாங்கிப் பல உயிர்களுக்கு உதவுகிறது என்ற வகையில் அக்கண்டுபிடிப்பு தேவைதானா என்பதை உலகம் விஞ்ஞான உலகத்திடம் கேள்வி எழுப்ப வேண்டிய கட்டாயத்தில் இன்றையநிலை அமைந்துள்ளது. இதையே ஆசிரியர் ஐம்பது ஆண்டு

களுக்கு முன்பே சிந்தித்துள்ளமை அவரது படைப்பின்வழித் தெரிய வருகின்றது.

சமுதாய வளர்ச்சிக்குத் துணையாக அறிவியல் வளர வேண்டுமே தவிர அழிவிற்குத் துணைபோகக் கூடாது என்ற கருத்தில் வலுவுடையவராக ஆசிரியர் விளங்குவதை அறியமுடிகிறது.

பகுத்தறிந்து செயல்படும் மனிதனே பல நேரங்களில் ஆராயாது தவறான முடிவுகளைக் கையாளும்போது அவன் கொடுக்கும் தரவுகள், தகவல்கள் அடிப்படையில் படைக்கப்பட்ட, மின்சாரத்தால் இயங்கும் இயந்திரத்திற்கு உணர்ச்சியின் விளைவுகளை அறியும் திறன் இருக்காது. ஆகவே அதைப் படைத்தவனுக்கும், மக்களுக்கும் அதுவே எமனாக அமைகின்றது.

''அந்தப் புது சிருஷ்டிக்கு ஆல்பாவென்று நாமகரணம் செய்யப் பட்டிருக்கிறது. உடம்பெல்லாம் இரும்புக்கூடு, கண், வாய், மூக்கு, செவி அவ்வளவும் உண்டு. மின்சாரத்தால் அவ்வளவு உறுப்பு களும் வேலை செய்கின்றன. ஆல்பா சாதாரண கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிக்கிறதாம். உலாவுமாம். பகுத்தறிவு இருப்பதாகத் தெரிய வில்லை. தானாகவும் ஒன்றும் செய்யாது. ஆகவே ஆல்பாவிடம் கொஞ்சம் உஷாராகப் பழக வேண்டுமாம். ஆல்பா ஒருவேளை இரைந்து கத்தினால் அவ்வூரில் இருக்கும் அவ்வளவு கண்ணாடி களும் நொறுங்கிப் போகின்றனவாம்'' (தொ. 1, ப.199) என்று ராயர் என்ற பாத்திரத்தின் உரையாடல் வாயிலாகச் செயற்கையாக உருவாக்கப்படும் இயந்திரக் கருவிகளினால் ஏற்படும் தீய விளைவுகள் வெளிப்படுத்தப்படுவதை அறியலாம்.

மேலும் எந்திர மனிதனை உருவாக்கிய விஞ்ஞானி 'மே' என்பவருக்கு தான் உருவாக்கிய செயற்கை மனிதனாலேயே ஆபத்து நேர்ந்த செய்தியை அறிந்த அறிவியல் டாக்டர் பட்டம் பெற்ற நிபுணரான ராயர் புதுக்கண்டுபிடிப்புகளைக் கண்டு அஞ்சுவதாக அமைந்துள்ளது.

''தென்னமரம் சாய்வதைப்போல ஆல்பாவின் வலதுகை முதலாளியின் முன் கையில் விழுந்து, எலும்புகளை ஒடித்து விட்டதென்றும் 'மே' ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும் படித்தேன். அடவியார் வாள், பயத்தின் காரணம் அப்போதுதான் தெரிந்தது. உயிருக்கு ஒரு சூஷ்ம உணர்ச்சி உண்டு, அதைத் தர்க்கத்தினாலாவது, புத்தியினாலாவது, சட்டங்களினாலாவது, ஆராய்ச்சியினாலாவது நிச்சயிக்க முடியாது''. (ப.200) என்று மிகுந்த அறிவுத்திறன் படைத்த விஞ்ஞானியாக இருந்தாலும் இயற்கை உயிரின் உணர்வுகளை எந்திரத்திற்குள் செலுத்த இயலாது என்ற கருத்து புலப்படும் வகையில் அமைந்துள்ளது.

கேடு உண்டாக்கும் புதுக்கண்டுபிடிப்புகளை நினைந்து வருந்துதல்

உலகிற்கு கேடுவிளைவிக்கக்கூடிய கண்டுபிடிப்புகளினால் பெருமிதம் கொள்ளும் அறிவியல் உலகத்தை கேள்விக்குட்படுத்தும் வகையில் ஆசிரியர் ராயர் என்பவரின் உரையாடல் வழி காட்டுகின்றார்.

"மேல்நாட்டு நிபுணர்கள், கொலைக் கருவிகள், விஷக்காற்றுகள், பொழுதுபோக்கு விமானங்கள், ஆல்பாக்கள் இவைகளைச் செய்வதன் தாத்பர்யத்தைப் பற்றி யோசித்தேன். எனக்கு அவைகளில் வெறுப்பு அதிகப்பட்டது. ஜனங்களுக்கு அவைகளினால் என்ன சௌகரியம்? கடவுளுடன் மேற்படி நிபுணர்கள் போட்டிபோடுகிறார்களாம். வென்றுவிடுவதாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்களாம்".(ப. 201, தொ.1) என்று அறிவியல் வளர்ச்சியில் தோன்றும் புதுப்புதுக் கருவிகள் மக்களுக்கு கெடுதல் ஏற்படுத்திவிடுமோ என்ற ஆதங்க உணர்வு ஆசிரியரிடம் வெளிப்படையாக அமைந்துள்ளது.

தனக்குத்தானே சிக்கலை ஏற்படுத்திக் கொள்ளும் நிலை

அறிவியல் உலகின் அதீத வளர்ச்சியே அறிவியலின் அழிவுக்கும் காரணமாக அமைந்துவிடுகிறது. விஞ்ஞானி படைத்த கருவியே அவ்விஞ்ஞானியை அழிக்க முற்படும் நிகழ்ச்சியின் மூலம் ஆசிரியர் அறிவியல் உலகை எச்சரிக்கும் வகையில்,

'மே' என்பவர் மேல் அடங்காத அனுதாபம். கடாவை வளர்ப்பானேன்? அது மார்பில் பாயும்படி விடுவானேன்? இதெல்லாம் சனியனை வலுவில் கல்யாணம் பண்ணிக் கொண்டதுபோல் தானே? (ப. 201, தொ.1) என்று வேதனையுடன் வினா எழுப்புகின்றார்.

விஞ்ஞானத்தால் மறைந்துவரும் அஹிம்சை,
எதிர்காலம் பற்றி வருந்துதல்

"மனிதனுடைய பேராசை சுற்றுச் சூழலை நஞ்சு நிறைந்ததாக மாற்றி வருகிறது. செல்வம் திரட்ட, உயர்பதவியை அடைய வசதிகள் நிறைந்த வாழ்க்கை வாழ, புகழ்பெற அவன் இன்று எந்த ஒரு பாவத்தையும் செய்யத் தயாராக இருக்கிறான்" என்று அன்றே மக்களை நினைத்து வருந்தியிருக்கின்றார் என்பது கதையின் தொடக்க உரையாடலிலேயே வெளிப்படுகிறது.

"உண்மையில் ராயர்வாள், யுத்தத்துக்காக கொலைக்காற்று, ஆகாய விமானம், விஷவாசனை, டார்பிடோ இவைகளை ஸயன்ஸ் பண்டிதர்கள் கண்டுபிடித்ததிலிருந்து எனக்குக் கோபம் வரவர ஹிம்சை செய்வதற்கும், கொல்வதற்கும், பொழுதுபோக்குக்கும் ஈசுவரன் கொடுத்த உயர்ந்த மூளையை மேல்நாட்டுப் பண்டிதர்கள்

செலவழிப்பதைப் பார்த்தால் அடுத்த யுத்தத்தில் மனிதன் பூண்டற்று போவான் என்றே தோன்றுகிறது. இந்த விஷம் புத்தி நமது இந்தியருக்குள்ளும் பரவி வருவது எனக்குச் சகிக்கவில்லை. எதற்காக ஜனங்கள் வெடிகுண்டும், துப்பாக்கியும் பழகிக் கொள்ள வேண்டும். இதெல்லாம் நமக்கு வேண்டாம்'' (ப. 198) என்பதன் வழி அறிவியல் கண்டுபிடிப்புகளினால் ஏற்படும் யுத்தக் கொடுமை களை எண்ணி மனம் பதைபதைக்கும் ஆசிரியரின் நிலை அறியப் படுகிறது. மேலும் உலக விஞ்ஞானிகள் மீதும், உலக மக்களின் எதிர்கால வாழ்வின் மீதும் ஆசிரியர் கொண்டுள்ள அதிருப்தியும், இந்திய மக்கள் ஹிம்சையை கைவிட்டு அஹிம்சையைக் கைகொள்ள வேண்டும் என்ற அவாவும் வெளிப்பட்டு நிற்பதை அறிய முடிகிறது.

தொகுப்புரை

ந. பிச்சமூர்த்தி பல்துறைப்பார்வை கொண்டவர். அறிவியல் துறையின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சியை மறுத்துக்கூறவில்லை. ஆக்க சக்திகளுக்குப் பயன்படவேண்டிய அறிவியலை அழிவு சக்திகளுக்குப் பயன்படுத்தும் போக்குகளைக் கண்டிக்கும் முறையில் அவரது சிந்தனைகள் அவர் கதையில் வெளிப்படுகின்றன.

''உயர்ந்த சிந்தனைகளுடன் எளிய வாழ்க்கை வாழ்ந்து வருவதை மக்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வரவேண்டும்; நாம் இயற்கையை அழித்தால் 'இயற்கை பட்டினிபோட்டே கொன்றுவிடப்போகிறது'' என்ற கருத்தில் உடன்பாடு உடையவராக அவரது சிந்தனைகள் காணப்படுகின்றன.

அறிவியல் துறை இயற்கைக்கு எதிர்மறையாகச் செயல்படும் போக்கைத் தவிர்க்க வேண்டும். சமுதாய வளர்ச்சிக்குத் துணையாக இருக்கவேண்டுமே அன்றிச் சோதனைகள், ஆய்வுகள் என்பதன் பெயரில் அழிவை உண்டாக்கக்கூடாது.

எவ்வளவுதான் மனிதன் அறிவியல் சாதனைகள் புரிந்தாலும் கடவுள் என்று கருதப்படும் இயற்கையின் படைப்போடு போட்டி யிட்டு வெல்லுதல் இயலாது. விஞ்ஞானிகள் தங்கள் எல்லையைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். ''உயிர் வளர்வதற்காகத்தான் விஞ்ஞானம் இருக்க வேண்டும். உயிரை அழிப்பதனால் விஞ்ஞானம் தானே அழிந்து போகும்'' (ப.271, தொகுதி - 2)

அறிவியலின் அதீத வளர்ச்சி மக்களிடையே அஹிம்சையை அழித்து ஹிம்சையைத் தான் தோற்றுவிக்கின்றது. பொதுமக்களுக்கு பிரச்சனையை உண்டு பண்ணும் அறிவியல் வளர்ச்சி தடுக்கப்பட வேண்டியதாகும்.

உயிர்ப் பாகுபாடு

சோ. கோதண்டராமன்
பி.ஜி.பி. கலை, அறிவியல் கல்லூரி
நாமக்கல்

சமூக வரலாற்றை அறிவியல் கோட்பாட்டின் வாயிலாக ஆய்வு செய்து வரலாறு, சமூகம், அரசு, சட்டம் ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய விதிகளை வகுக்கும் முறை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மிகுதியாகக் கையாளப் பெற்றது. சார்லஸ் டார்வின் (Charles Darwin) என்ற ஆங்கில இயற்கோட்பாளர் உயிரினங்களின் தோற்றம் (The Origin of Species) என்னும் நூலில் இயற்கைப் பொருட்களை ஆராய்ந்து பரிணாம வளர்ச்சிக் கோட்பாடுகளைக் கூறியுள்ளார்.

டார்வின் அந்நூலில் பரிணாமக் கோட்பாட்டில் உயிரினங்களின் தோற்றம், மனிதனின் தோற்றம் போன்றவற்றைக் குறிப்பிடுகின்றார். இவற்றில் உயிரினங்களின் தோற்றம் பற்றிய பாகுபாட்டைத் தமிழ் இலக்கண ஆசிரியர்களின் உயிர் பற்றிய பாகுபாட்டோடு ஒப்பிட்டு அறிவது இக்கட்டுரைகளின் நோக்கம் ஆகும்.

உயிர்களின் தோற்றம்

இன்று இவ்வுலகில் காணப்படும் உயிர்களின் தோற்றம் பற்றி மூன்று வகையான கருத்துக்கள் நிலவி வருகின்றன. அவை,

1. உயிரினங்கள் அனைத்தும் வரையறுத்துக் கூற இயலாத மிகத் தொன்மையான காலத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்டதோர் இறை மாற்றத்தால் ஒரே நேரத்தில் படைக்கப்பட்டன.
2. மற்ற கோள்களில் இருந்து வந்த மிகத் தொன்மையான காலத்தில் வேதியியல், இயற்பியல் விதிகளின்படி மாற்றங்கள் நிகழ்ந்து முதல் உயிரினம் புவியில் தோன்றியது.
3. ஒரு செல் உயிரிகளும், பல செல் உயிரிகளும் தோன்றி நாளடைவில் மலர்ச்சியடைந்து, உயர்நிலைத் தாவரங்களும் விலங்குகளும், மனித இனமும் தோன்றியுள்ளன.

இவற்றில் மூன்றாவதாகக் கூறப் பெற்ற கருத்து ஏற்புடையது என்று ஹால்டேன், ஓபேரின், மில்லர், யூரே போன்றோர் குறிப்

பிட்டுள்ளனர். தொல்காப்பியத்திலும் இக்கருத்துதான் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. தொல்காப்பியர் உயிர்களை ஓர் அறிவு தாவரங்கள் - இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து மற்ற உயிரினங்களும் விலங்கு களும், ஆறாவது அறிவு மனிதன் என்று பகுப்பதை அறியலாம்.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அரிஸ்டாட்டில், நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகியவற்றின் ஆன்மாக்கள் உயிரற்ற பொருள்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதால் உயிரினம் தோன்றிய தாகக் கருதினர். டார்வின் ஒரு செல் உயிரியான புரோட்டோசோவாவி லிருந்து மற்ற உயிர்கள் தோன்றின என்று குறிப்பிடுவர்.

உயிர்களின் பரிணாம வளர்ச்சிக் கருத்துக்கள்

ஓர் உயிர் படிப்படியாக வளர்ச்சி பெற்றுத் தன் உறுப்பில் ஏற்படும் மாறுதல்களினால் வேறோர் உயிரினத்தின் உறுப்புகளையும், உருவத்தையும் பெறுகின்றது. இவ்வாறு, பரிணாம முறையில் படிப்படியான வளர்ச்சி முறையில் ஓர் இன உயிரியிலிருந்து மற்ற இன உயிர்களெல்லாம் தோன்றியுள்ளன. மனிதனின் தோற்றமும் இவ்வாறு பரிணாம வளர்ச்சியின் மூலம் மற்ற உயிரினங்களில் இருந்து தோன்றின எனலாம்.

டார்வின் பரிணாம வளர்ச்சி பற்றிய கருத்துக்களை,

1. உலகில் பலவகை உயிரினங்கள் (variations) உள்ளன. இதனால், ஓரின உயிர் மற்றோரினமாகப் படிப்படியான வளர்ச்சி முறையில் மாறுவதற்கு வழிவிடுகின்றது.
2. ஒவ்வோர் உயிரியும் தன் மரபு வழிப்பண்பு காரணமாகத் தன் உயிர் உறுப்புகளின் வடிவத்தை அடுத்த தலைமுறைக்கு அளிக்கின்றது.
3. வாழுதற்கான போராட்டம் (Struggle of Existance) நடைபெறு கின்றது. அப்போது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எந்த இன உயிர் வாழும் தகுதி உடையதாகிறதோ, அந்த இன உயிர் பெருகுதலின் வழியாக மற்றோர் இன உயிராக வளர்கிறது.

டார்வின் கூறிய இத்தகைய வளர்ச்சி கருத்துக்கள் பிற்காலத்தில் பெறும் மாறுதல்களுக்கு உள்ளாகி இருப்பதனை அறியலாம்.


உயிர்ப் பாகுபாடு

இவ்வுலகில் காணப்படும் உயிர்களைத் தொல்காப்பியர் ஆறாகப் பகுத்துள்ளார். பொறிகளையும், மனத்தினையும் ஆதாரமாக வைத்து அப்பாகுபாட்டை நிகழ்த்தியுள்ளார்.

இதனை,

''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே''

என்று வகைபடுத்துவர். பொறியுணர்வையும், மனவுணர்வையும் அடிப்படையாக வைத்து இவர் பிரிந்துள்ள விதத்தினைக் கீழ்வரும் வரைபடம் தெளிவுபடுத்தும்.



உயிர்ப்பாகுபாடு - நன்னூல்

நன்னூலார், உயிர்களைப் பாகுபடுத்தும் போது மனவுணர்வை அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்தியுள்ளார்.

''மெய்நா மூக்கே நாட்டம் செவிகளின்
ஒன்று முதலாக் கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஓரறி வாதியா உயிரைந் தாகும்''

என்னும் நன்னூல் நூற்பாவால் அறியலாம்.

நன்னூலார் மனவுணர்வை ஓர் அறிவாகக் கொண்டு பாகு படுத்தியுள்ளார். மனத்தையும் ஒரு பொறியாக்கி அதனை உணரும் மக்களையும், விலங்கினுள் ஒரு சார்பினையுடையவற்றையும் ஆறறிவுயிர் என்றார் தொல்முனி.

மனமாகிய ஆறாவது அறிவு மனிதனுக்கு மட்டுமன்றி விலங்கிற்கும் உண்டு எனலாம். இஃது விலங்கிலிருந்து மனிதன் வந்தான் என்ற டார்வின் பரிணாம வளர்ச்சியை அடியொற்றி வந்துள்ளதை அறியலாம்.

எனவே, மனிதன் நீர்ப்பாசி, அமீபா வழியில் தோன்றிக் குரங்கின் நிலையில் இருந்து மாறி வந்துள்ளதால் மனம் என்பது அனைத்து உயிர்களிடத்தும் காணப்படுகிறது. எனவேதான் நன்னூலார்

பொதுப்பண்பாகிய இவ்வறிவினை விடுத்துப் பொறியுணர்வாகிய ஐந்தையும் ஐந்தறிவாகப் பாகுபடுத்தியுள்ளார் என்பதை அறியலாம்.

வ.எ.	அறிவு	அறிதல்	உயிர்கள்
1.	ஓரறிவு	உற்றறிதல்	புல், மரம்
2.	ஈரறிவு	சுவையறிதல்	நந்து, முரள்
3.	மூவறிவு	நுகர்தல்	சிதல், எறும்பு
4.	நாலறிவு	பார்த்தல்	நண்டு, தும்பி
5.	ஐந்தறிவு	கேட்டல்	மா, புள்
6.	ஆறறிவு	மனம்	மனிதன்

உயிர்ப்பாகுபாடு - வேதங்கள்

வேதங்கள் இவ்வுலக உயிரினங்களை நான்கு நிலைகளில் பாகுபடுத்திக் கூறுகின்றன. அவை,

1. மண்ணிலிருந்து பிறப்பவை
2. முட்டையிலிருந்து பிறப்பவை
3. கருவிலிருந்து பிறப்பவை
4. புழுக்கத்திலிருந்து பிறந்தவை

என்பதாகும்.

மண்ணிலிருந்து பிறக்கும் உயிர்கள் மரம், செடி, கொடி, புல் போன்ற ஓரறிவு உயிர்களாகும். ஊர்வன, பறப்பன, தவழ்வன போன்ற உயிரினங்கள் முட்டையிட்டு அவற்றிலிருந்து குஞ்சு பொறித்து வருவனவாகும். கருவுற்றுப் பின் பிறக்கும் உயிரினங் களை அறிவியல் அறிஞர்கள் பாலூட்டிகள் என்று அழைப்பர். புழுக்கத்திலிருந்து பிறப்பவைகள் புழு, தும்பி, வண்டு போன்ற உயிரினங்கள் ஆகும்.

வேதங்கள் உயிர்களைப் பிறப்பினை அடிப்படையாக வைத்துப் பாகுபடுத்தி உள்ளன. இப்பகுப்புத் தொல்காப்பியரின் பாகுபாட்டி லிருந்து சற்றே மாறுபடுவதைக் காணலாம்.

உயிர்ப்பாகுபாடு - சித்தாந்தங்கள்

சித்தர்கள் உயிர்களை மூன்று நிலைகளில் பாகுபடுத்தியுள்ளனர். அவை,

1. சகலர்
2. பிரளயகலர்
3. விஞ்ஞானகலர்

உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களோடு சேர்ந்திருப்பது. அம்மலங்களால் அவ்வுயிர்கள் உலகனுபவம் பெறுகின்றன. இந்நிலையினைச் சகலர் என அழைப்பர்.

பிரளய காலத்தில் இருப்பவர் பிரளயகலர். மாயையின்றும், அதன் காரிய தத்துவங்களினின்றும் ஒழிந்து நிற்பது. மறுபடைப்பு வருங்காலத்தில் ஆணவத்தோடு கன்மமும் தொடர்ந்து விளங்கு வதால் பிரளயகலர் சகலராக மாறுவர்.

விஞ்ஞானகலர் என்பது மாயையோடு கன்மமும் நீங்கி ஆணவம் ஒன்று மட்டும் விளங்கும் உயிர் ஆகும். அவ்வுயிர் சுத்த மாயையாலாகிய உலகத்தில் இருக்கும்.

முடிவு

இவ்வாறு கூறப்பட்ட உயிர்ப்பாகுபாடு பற்றி தொல்காப்பியர் கருத்து டார்வின் பரிணாமத்தோடு ஒன்றுபட்டுள்ளதை அறியலாம்.

வேதங்களும், சித்தாந்தங்களும் கூறும் பாகுபாடு அவற்றினின்றும் மாறுபட்டுச் செல்வதனையும் இங்கு அறியலாம். எனவே, ஓர் உயிரிலிருந்து மற்ற அறிவுடைய உயிர்கள் தோன்றின என்ற டார்வின் கூற்றுக்குத் தொல்காப்பியர், நன்னூலார் போன்ற தமிழிலக்கணப் புலவர்களின் கருத்து உடன்பட்டுச் சென்றுள்ளதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது.

ஆறாவது அறிவாகிய மனத்தை நன்னூலார் கூறாது விடுத்ததற்குக் காரணம், தாவரம், விலங்கு இவற்றிலிருந்து மனிதன் தோன்றியதால் உயிர்கள் அனைத்திற்கும் மனம் உண்டு என்பதால் அதைக் கூறாது விடுத்தார் என இக்கட்டுரை சுட்டிச் செல்கின்றது.

துணைநூல்கள்

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு - 1977 (இளம்பூரணர் உரை)
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1975, பேராசிரியர் உரை, சோ. இளவரசு (பதி)
3. நன்னூல் விருத்தியுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், பதிப்பு - 1990
4. இராமலிங்கம், சி., 'அறிவியல் சார்ந்த மெய்ப்பொருளின் தோற்றம்' தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை - 1, முதற்பதிப்பு - 1973
5. செகசிற்பியன், சிந்தனையாளர் டார்வின், பிரேமா பிரசுரம், சென்னை, 9-ஆம் பதிப்பு, 2000.

வெற்றிடக்குழாய் வெந்நீராக்கியின் செயல்திறன் - ஓர் ஆய்வு

ஆர்.வி. ஜெபா ராஜசேகர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை - 625 021

இயற்கையின் நன்கொடைகளில் ஒன்று சூரிய வெப்ப ஆற்றலாகும். இயற்கையாக, இலவசமாக, குறைவில்லாமல் கிடைக்கக் கூடிய மற்றும் சுற்றுச் சூழலுக்குகந்த இந்த ஆற்றல் வளத்தைப் பெருமளவில் பெறும் வகையில் உலகின் சூரிய வெப்ப மிகு பகுதியில் நம்நாடு அமைந்துள்ளது. ஆகவே, இந்த புதுப்பிக்கப் படும் ஆற்றலைப் பயன்படுத்தி நமது வெப்ப ஆற்றல் தேவை களைப் பூர்த்தி செய்து கொள்ளும் பெரும் வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது.

நம் நாட்டில் தற்போது புதிதாகப் பயன்படுத்தப்படுகிற வெற்றிடக்குழாய் வெந்நீராக்கியின் தத்துவம், அமைப்பு, செயல் படும் விதம் ஆகியவற்றையும் செயல்திறனைக் கணக்கிட நடத்தப் பட்ட சோதனைகளின் முடிவுகளையும் இக்கட்டுரையில் காணலாம்.

தத்துவம்

வெற்றிடக்குழாய் வெந்நீராக்கியில் வெற்றிடக்குழாய் அமைப்பே மிக முக்கியமான பாகமாகும். இந்த அமைப்பில் இரண்டு நீள் உருளை வடிவமுள்ள போரோசிலிக்கேட் கண்ணாடிக் குழாய்கள் ஒன்றுக்குள் ஒன்று பொருத்தப் பட்டுள்ளன. இந்தக் கண்ணாடிக் குழாய்களுக்கிடையில் வெற்றிடம் உள்ளது. உட்புறத்திலுள்ள கண்ணாடிக் குழாயில் கருப்பு வர்ணப் பூச்சு பூசப்பட்டுள்ளது.

சூரியக் கதிர்வீச்சானது மேற்புறக் கண்ணாடிக் குழாயையும் வெற்றிடத்தையும் ஊடுருவி உட்புறக் கண்ணாடிக் குழாயின் மேல்படுகிறது. இந்தக் கதிர்வீச்சைக் கருப்புப் பூச்சுப் பூசப்பட்டுள்ள உட்புறக் கண்ணாடிக் குழாய் உட்கவருவதால் வெப்பமடைகிறது. இந்த வெப்பமானது அதன் வழிச் செல்லும் நீருக்குக் கடத்தப் படுவதால் நீரானது வெந்நீராகிறது.

அமைப்பு

வெற்றிடக்குழாய் வெந்நீராக்கியில் 1. வெற்றிடக்குழாய், 2. குழாய்தாங்கி, 3. வெந்நீர் சேமிப்புக்கலன், 4. எதிரொளிப்பான் 5. நிலைநிறுத்தி ஆகிய ஐந்து முக்கியப் பாகங்கள் உள்ளன.

பொதுவாக வெற்றிடக்குழாய் வெந்நீராக்கியில் பத்து முதல் இருபது வரை வெற்றிடக் குழாய்கள் உள்ளன. இக்குழாய்களின் மேற்பகுதிகள் வெந்நீர் சேமிப்புக்கலனுடன் இணைக்கப் பட்டுள்ளன. குழாய்களின் கீழ்பகுதிகளைத் தாங்கி கொள்ளுமாறு அலுமினியத் தாலான தாங்கி உள்ளது. இத்தாங்கியில் அனைத்துக் குழாய்களும் பொருத்தப் பட்டுள்ளன.

வெற்றிடக் குழாய்களால் சூடாக்கப்பட்ட நீரானது அக்குழாய் களின் மேற்பகுதி வழியாக வெந்நீர் சேமிப்புக் கலனை அடைகிறது. இது பொதுவாக 100 முதல் 150 லிட்டர் கொள்ளளவு கொண்ட துருவிலா இரும்புக் கலனாகும். கலனின் உட்புறமானது வெப்பம் கடத்தாப் பொருளால் அடைக்கப்பட்டிருப்பதால் கலனிலிருந்து வெப்ப இழப்பு ஏற்படுவதில்லை. கலனின் ஒரு பக்கத்தின் வழியாகத் தண்ணீர் உள்ளே வருவதற்கும் மறுபக்கத்தின் வழியாக வெந்நீர் வெளியேறுவதற்கும் தகுந்த வகையில் குழாய்கள் பொருத்தப் பட்டுள்ளன.

வெற்றிடக்குழாயில் படாத சூரியக் கதிர் வீச்சை வெற்றிடக் குழாய்களின் கீழ்பகுதியிலுள்ள அலுமினியத்தாலான எதிரொளிப் பான்கள் எதிரொளிக்கின்றன. எதிரொளிக்கப்பட்ட சூரியக் கதிர் வீச்சானது வெற்றிடக்குழாயின் கீழ்ப்பகுதியில் படுவதால் வெற்றிடக் குழாய் மேலும் வெப்பமடைகிறது.

வெற்றிடக்குழாய், குழாய் தாங்கி, வெந்நீர் சேமிப்புக்கலன், எதிரொளிப்பான் ஆகிய அனைத்துப் பாகங்களும் நிலை நிறுத்தியில் பொருத்தப்பட்டுள்ளன. இந்நிலை நிறுத்தியில் பொறுத்தப்பட்டுள்ள வெற்றிடக்குழாய்கள் சூரியக் கதிர் வீச்சைப் பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

செயல்திறன் சோதனை

வெற்றிடக்குழாய் வெந்நீராக்கியின் செயல்திறனைக் காணும் சோதனைகளை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் ஆற்றல், சூழல், இயற்கை வளத்துறையில் நடத்தினோம். இச்சோதனை களின்போது வெற்றிடக்குழாய் வெந்நீராக்கியானது தெற்கு முகமாக இருக்குமாறு அமைக்கப்பட்டது. சூரியக்கதிர்வீச்சு 600 வாட்/ சதுர மீட்டர் மற்றும் காற்றின் திசைவேகம் 3 முதல் 6 மீட்டர் /

நொடி ஆகிய அளவுகளுக்கு மேல் உள்ள மூன்று நாட்களில் சோதனைகள் நடத்தப்பட்டு வெந்நீராக்கியின் செயல்திறன் கண்டறியப் பட்டது. சூரியக் கதிர்வீச்சானது சூரியமானி (Pyranometer)யாலும், வெப்பநிலையானது வெப்பநிலைமானியாலும், நீரின் பாய்ம வீதமானது பாய்ம அளவுமானி (Flow meter) யாலும் அளவிடப் பட்டது. இந்தச் சோதனைகளின் போது அளவிடப்பட்ட முக்கியக் காரணிகளின் சராசரி அளவுகளும் வெந்நீராக்கியின் செயல்திறனும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

சோதனை எண்	உள்வரும் நீரின் சராசரி வெப்ப நிலை (°செல்சியஸ்)	சராசரி சூரியக்கதிர் வீச்சு (வாட்/ சதுரமீட்டர்)	வளிமண்டலச் சராசரி வெப்பநிலை (°செல்சியஸ்)	வெளியேறும் நீரின் சராசரி வெப்பநிலை (°செல்சியஸ்)	செயல் திறன் (%)
1.	28.6	943	32.8	37.0	74
2.	30.1	934	33.7	38.1	72
3.	29.7	914	33.5	37.6	73

சோதனைகளின் அடிப்படையில் காணப்பட்ட வெந்நீராக்கியின் செயல்திறனின் அளவுகள் திருப்திகரமாக உள்ளன. ஆகவே, இந்த வகை சூரிய சாதனங்களை வீடு, விடுதி, உணவகம், தொழிற் சாலை மற்றும் கல்வி நிறுவனங்களின் வெந்நீர் தேவைகளுக்காகப் பயன்படுத்தலாம்.

முடிவுரை

சூரிய வெந்நீராக்கியின் செயல்திறனை அதிகரிக்க நம் நாட்டிலும், மேலை நாடுகளிலும் தொடர்ச்சியான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதால் இதன் செயல்திறன் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சூரிய வெப்ப ஆற்றல் நமக்கு அனுதினமும் கிடைக்கும் வரை நாம் நிகழ்கால மற்றும் எதிர்கால ஆற்றல் தேவைகளைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை.

துணைநூல்கள்

1. John, A., Duffie, William, A. Beckman, 1980, Solar Engineering of thermal Processes, A Wiley - Inter Science Publication, Singapore.
2. Rao, S., Perulekar, B.B., 1999, Khanna Publishers, Delhi, India.
3. Sukhatme, S.P., 1996, Solar Energy, Tata McGraw Hill Publishing Company Limited, New Delhi, India.

மருந்தும் மருத்துவமும்

கஸ்தூரி ராஜா
அண்ணா ஆதர்ச மகளிர் கல்லூரி
சென்னை

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பல்வேறு துறைகளிலும் ஆழ்ந்த அறிவுடையவர்களாகத் தமிழர்கள் விளங்கினர் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. 'இலக்கியச் சான்றுகள் கொண்டு, நோய் வரும் வழி, அந்நோயை அறியும் முறை, நோய் நீக்கும் வழி முறைகள் (மூச்சுப்பயிற்சி, மருந்து அறுவை முறை) நோய் உடலையும், உள்ளத்தையும் தாக்காதிருக்க நாம் செய்ய வேண்டியவை ஆகியவை களைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமெனலாம்.

நோய்

இவ்வுலகில் மனிதன் என்று தோன்றினானோ அன்றே அவனைப் பிணியானது வந்து பிணைத்துக் கொண்டது. இந்தப் பிணியினை இருவகைப்படுத்தலாம். ஒன்று முதுமையினால் இயற்கையாக வந்து சேரும் மூப்பு. வினையின் பயனால் இளமையில் வரும் பிணி. வேலை செய்யும் இடத்தினது தன்மை (புகையிலை, புகைநிறைந்த இடம் போன்றன) அவன் வாழும் இடத்தின் தூய்மையற்ற நிலை அவன் உண்ணும் உணவு போன்றவைகளால் வருவது. இந்தப் பிணிகளும் உடலைத் தாக்கக் கூடியவை எனலாம். உடலைத் தாக்கக்கூடிய நோய்களைப் போலவே உள்ளத்தைத் தாக்கக்கூடிய நோய்களும் உண்டு' எடுத்துக்காட்டாக

''காமம் வெகுளி மயக்கம், இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்''. *(360)*

என்ற குறட்பாவைச் சுட்டலாம். மிகுகாமம், கோபம், மயக்கம் அல்லது பேராசை ஆகியவைகள் உள்ளம் வருத்திப் பின் உடலையும் தாக்கும் என்பதனை உணர முடிகிறது.

எனவே உள்ளத்திற்கும் உடலுக்கும் உள்ள உறவினை அறிய முடிகிறது. இந்த உறவு இனிமையாக இருக்க வேண்டும். மாறுபட்டால் உடலுக்கு நோய் வரும் என்பதனை,

''உடம்பார் அழியின் உயிரார் அழிவார்''

என்ற வாக்கால் அறியலாம்.

''மருந்தும் மருத்துவமும் உலகில் பல இடங்களிலும் கி.மு. விலிருந்தே உள்ளன. ''மேலை நாடு அறிவியல் பாங்கில் முதன்முதலாக கி.மு. 400 அளவில் கிரேக்க அறிஞர் ''இப்போகிரேட்டெசு'' (Hippocrates) என்பார் கண்டறிந்தார். இவர் நோயியல் தந்தை எனப்படுவர். பல அரிய புதுமைக் கருத்துக்களை இவர் கண்டு பிடித்துக் கூறியுள்ளார்... பகுத்தறிவுக்கு ஒவ்வாத ''மந்திர... மாந்திரிகம் அக்கால நோயியலின் கூறுகளாகவும் இருந்தன. இப்போதும் உலகிலும் ... நாம் மண்ணிலும் இந்நடைமுறை உள்ளது. (Medicine Man) என்பதற்கு (நாகரிக மாந்தரின் மாய மந்திரவாதி) என்று ஆங்கில அகர முதலிகளில் பொருள் கூறப்பட்டுள்ளது. ''அறிவியல் திருவள்ளுவம்'' என்ற நூலில் (ப. 55-56) கோவை. இளஞ்சேரன் அவர்கள் கூறியிருப்பது இங்கு எண்ணத்தக்கது. ஆனால் நம் வள்ளுவர் பகுத்தறிவோடு கூடிய சிந்தனையுடையவர். எனவே தான் வயிற்றுப் பசியின் அளவை அறியாமல் அளவு கடந்து சாப்பிட்டால், நோயும் அளவில்லாமல் உண்டாகும் என்று வள்ளுவர் நோய் உண்டாகும் வழியைக் கூறுகிறார். (947)

நோய் வரும் வழியும் தீர்வும்

இதனை,

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (942)

அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு (943)

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு (945)

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும் (947)

என்ற குறட்பாக்கள் மூலம் உணவு செரிப்பதற்கு முன் உண்ணக் கூடாது, மேலும் உடலுக்கு ஒத்துக்கொள்ளும் உணவை உண்ண வேண்டும். அதனையும் அளவோடு உண்ண வேண்டும் என்று வாழும் வகையினையும் உணர்த்துவதை அறியலாம். மேலும் உணவின் மாறுபாட்டாலும் நோய் வரும் எனலாம்.

இந்த நோயினைத் தீர்க்க மருந்து ஒன்று வேண்டும். இந்த மருந்தினைப் பற்றி திருமூலர் கீழ்வருமாறு திருமந்திரத்தில் கூறுகிறார்.

''மறுப்பது உடல்நோய் மருந்தெனலாகும்
மறுப்பது உளநோய் மருந்தெனல் சாலும்
மறுப்பது இனிநோய் வாராதிருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே''

வளி, பித்தம், கோழை என வரையறுத்த மூன்றும் உடலில் கூடினாலும் குறைந்தாலும் பல்வேறு நோய்களை உண்டாக்கும் என்று வள்ளுவர் கூறியுள்ளார். இதனை,

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (941)

என்ற குறட்பாவால் அறியலாம். ''நமது உடம்பில் 72,000 நாடி நரம்புகள் உள்ளன என்றும், அவற்றில் பத்து நாடி நரம்புகள் முதன்மையானவை என்றும், அப்பத்து நரம்புகளுள்ளும் மூன்று மிகமிக முதன்மையானவை என்றும் தமிழ் மருத்துவ அறிஞர் கூறுவர்'' என்று 'தமிழ் இலக்கியத்தில் மருந்து' என்ற தலைப்பில் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் (மதுரைத் திருவள்ளுவர் கழக வெள்ளி விழா மலர்) குறிப்பிட்டுள்ளார்.

நோய் அறியும் முறை

''நாடியால் முன்னோர் சொன்ன நல்லொலி பரிசத்தாலும்
நீடிய விழியினாலும் நின்றநாக் குறிப்பினாலும்
வாடிய மேனியாலும் மலமொடு நீரினாலும்
சூடிய வியாதிதன்னைச் சுகமுடன் அறிந்துபாரே''

என்ற பாடலின் மூலம் நோய் அறியும் முறையை உணரமுடிகிறது.

மருத்துவரிடம் சென்ற உடனே மருத்துவர் நோயாளியின் கைகளைப் பிடித்துப் பார்த்து (நாடிப்பார்த்தல்) உடலில் சூட்டின் தன்மையை உணர்வர். பின்பு, பேசுகின்ற வேகத்தின் தன்மையை வைத்து நோயின் அளவினை உணர்வர். கடுமையான வலியால் துன்பப்படும் நோயாளி அதிர்ந்து பேச இயலாது மெல்லியக் குரலில், தான் தாக்கப்பட்ட பிணியின் துன்பத்தினை எடுத்துரைப்பான். மருத்துவர் கண்களைக் கூர்ந்து பார்ப்பார். நிறம் மாறி இருந்தால், மலம், நீர் இவைகளை ஆய்வு நடத்திய பின்பு நோயின் தன்மையையும் நோயாளியின் பாதிப்பினையும் அறிந்து அதற்கேற்ப மருந்தினை எழுதித் தருவார் அல்லது அவரே தருவார். இதையே மேற்கண்ட பாடல் விளக்குவதை உணரலாம். இதனை,

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் (949)

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (948)

என்ற குறட்பாக்களால் வள்ளுவர் உணர்த்துகின்றார்.

நோய் தீர்க்கும் வழிமுறைகள்

இன்றைய காலக் கட்டத்தில் மனிதன் தன் வாழ்க்கையைச் சீராக நடத்த இயலவில்லை. காரணம் அவன் வாழ்கின்ற உலகின் அமைப்பு முறையேயெனில் மிகையல்ல.

நூற்றுக்கு 95 சதவிகிதத்தினர் மனசாட்சிக்கு அஞ்சாது பிறரை வருத்தியே வாழ்கின்றனர். அவ்வாறு வாழ்கின்ற பலர் மறுமை பற்றிய எண்ணமே இல்லாது கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில் இருப்பதால், மறுமை அச்சம் கொண்ட மக்களை பைத்தியம் என்றும் பிழைக்கத் தெரியாதவர் என்றும் கேலி செய்து வருகின்ற நிலையை நாம் இன்றும் பரவலாகக் காணுகின்றோம்.

நேர்மையாக வாழுகின்ற சிலர் தங்களுக்குள் நாம் வாழ்வது சரியா? அல்லது தன்னைச் சுற்றியுள்ளவர் வாழ்கின்ற முறை சரியா? என்று எண்ணி மனச்சிக்கலுக்கு மன அழுத்தத்திற்கு உள்ளாகித் துன்புறுகின்றனர். இன்றும் சிலர் நல்லவன் துன்புறுவதும், பிறரைத் துன்புறுத்தி வாழ்பவன் இன்புறுவதும் கண்டு வாழும் முறை யறியாது மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். இந்நிலையில் நூற்றுக்கு எண்பது சதவிகிதத்தினர் நோய்க்கு ஆளாகித் துன்புறுகின்றனர். பல்துறை மருத்துவர்களை அணுகியும் விடை காணாது தவிக்கின்றனர்.

இறுதியில் சில மருத்துவர்கள் நோயாளிகளைத் தியான (யோகா) வகுப்பிற்குச் செல்லுமாறு வழி காட்டுகின்றனர். இன்னும் சில மருத்துவர்கள் உளநோய் மருத்துவர்களிடம் நோயாளிகளை அனுப்பி அவர்களுக்குச் சில பயிற்சி முறைகளைக் கற்றுத்தந்து அவர் களைப் பயிற்சியில் ஈடுபடுத்துகிறார்கள். அவற்றில் ஒன்று 'பிராணாயாமம்' என்னும் மூச்சுப் பயிற்சியாகும். *'Pranic Healing'* 'பிராணிக் முறை' என்று அழைக்கப்படும் ஒருவகையான மருத்துவ முறையும் தியான முறையோடு தொடர்பானதே.

வளியாகிய உயிர்க்காற்று (பிராண வாயு) மனிதனின் மூக்குத் துவாரங்களின் வழியாகச் சென்று உட்புகுந்து, மீண்டும் வெளியேறும். இந்த மூச்சுப் பயிற்சிகளைப் பிராணாயாமம் என்பர். இந்த மூச்சின் செயல் திறனைக் கீழ்வரும் அடிகள் உணர்த்துகின்றன.

''தூங்குகின்ற போதுவிடும் மூச்சு
சுழி மாறிப் போனாலும் போச்சு''

அதாவது மூச்சு நேராகச் செல்லாது மாறிச் செல்லும் போது உயிர் பிரிந்து நெஞ்சு தாக்கப்பட்டு இறந்து படுவர் (Heart attack) எனவே மூச்சுப் பயிற்சியின் மூலம், உடலை நீண்ட நாட்கள் வாழ வைக்க முடியும் என்று சான்றோர் கருதினர். இதனை,

''ஏற்றி இறக்கி இருகாலும் பூரித்துக்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்கும்
கூற்றை உதைக்கும் குறி அது வாமே''

என்ற திருமந்திரப் பாடலால் உணரலாம். காலையில் எழுந்து மூச்சுப் பயிற்சி செய்ய முழுமையான ஆயுளுடன் வாழ முடியும் என அறியலாம்.

இன்றைய மருந்துகள் பக்கவிளைவுகளை உண்டாக்கி, நோயின் கடுமையினை அதிகமாக்கி விடுவதைக் காணுகின்றோம். எதற்கெடுத் தாலும் மருந்துகளைப் பயன்படுத்தும் நிலையினாலும் உடலின் உறுப்புகள் இயங்கா நிலையினையும் அறிகிறோம். இன்று நூற்றுக்கு 60 சதவீதத்தினர் நீரிழிவு நோயினாலும் (Diabates) இரத்த அழுத்தத் தினாலும் (Preasure) துன்புறுகின்றனர். இந்நோய்களின் கடுமையின் காரணமாக உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. மனிதன் இயற்கை மருத்துவத்தை நாட உடலில் நோயும் குறையும். பக்க விளைவு களால் உண்டாகும் துன்பமும் அணுகா. 2500 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பியனார் வேம்பும் கடுவும் (நஞ்சும்) முதலில் கசந்தாலும் பின்னர் அவை உடலுக்கு நன்மையைத் தரும் என்கிறார். இதனை,

''வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி ... தற்றே''

என்ற நூற்பாவால் அறியலாம்.

உளவியல்

உள்ள உறுதியும், அறிவுத் தெளிவும் உடையவர் நோயின் அறிகுறிகள் வந்தவுடன் அதற்குரிய மருந்தினை உண்டு உடனே மருத்துவரிடம் செல்ல வேண்டும். எந்த நிலையிலும் உணர்விலும், செயலிலும் மனத்தை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

''சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது'' *(671)*

என்ற குறட்பாவழி நடக்க உள்ளம் நன்கு செயல்படும். நோய் தளர்ந்து தோற்கும். வள்ளுவர் வழி வாழ அவரை நோய் தாக்காது. இதனை,

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய் *(429)*

என்ற குறட்பாவல் அறியலாம்.

திருமந்திரம் சுட்டும் மருத்துவக் குறிப்புகள்

மா. அண்ணாதுரை

ஈரோடு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
ஈரோடு - 638 009

திருமூலர் பதினெண் சித்தர்களில் ஒருவர்; 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டவர் எனக் கருதப்படுபவர்; திருமூலர் எழுதிய 'திருமந்திரம்' திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக விளங்குகின்றது; இது 'மந்திரமாலை' எனவும் அழைக்கப் பெறுகின்றது; இந்நூல், மற்றைய பதினொரு திருமுறைகளுக்கும் பதினான்கு சித்தாந்தத் நெறி நூற்களுக்கும் நடுநாயகமாக இலங்குகின்றது; தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் கருதப்படுகின்றது; உலகியல் ஒழுக்கங்களை - வாழ்வியல் நெறிகளை விளக்கும் பெருநூலாகத் திகழ்கின்றது.

யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை, கொல்லாமை, பிறன்மனை நயவாமை, கல்வி கல்லாமை, கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல் போன்ற உயரிய வாழ்வியல் சிந்தனைகள் பல எடுத்துக்காட்டும் திருமந்திரத்தில், மானுடம் உய்யும் பொருட்டு, ஆக்கம், கரு உற்பத்தி, அமுரிதாரணை, ஆயுள் பரிட்சை, காயசித்தி உபாயம், தியானம், பரியங்க யோகம், விந்துற்பனம், போகசரவோட்டம், பிராணாயாமம் போன்ற அதிகாரப் பகுதிகளில் மருத்துவம் பற்றிய பல குறிப்புகள் காணக்கிடக்கின்றன. தமிழ்ச் சமுதாயம் மேன்மை பெறவேண்டும் என எண்ணிய திருமூலரின் மருத்துவ உளப்பாங்கினை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

உடல் - உயிர்

ஐம்பெரும் பூதத் தியற்கை போல, இவ்வுலகில் தோன்றிய உடலிலும், நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு ஆகிய பருப் பொருள்களுடன் உயிர் என்ற நுண்பொருள் சேர்ந்து இயங்கு கின்றது. ஐம்பெரும் பூதங்களில் மாற்றம் நிகழின், உலகத்தின் இயற்கையிலும் மாறுதல் நிகழ்கின்றது. அவ்வாறே ஐம்பெரும்

பூதங்களான உடலில் மாற்றம் ஏற்பட்டால் நுண்பொருளான உயிரும் கெடுகின்றது; உடலும் கெடுகின்றது.

''உரமடி மேதினி யுந்தியி லப்பாம்
விரவிய தன்முலை மேவிக்கீ ழங்கி
கருமுலை மீமிசை கைக்கீழிற் காலாம்
விரவிய கந்தர மேல்வெளி யாமே''

என்ற பாடலில், உடலானது ஐம்பெரும் பருப்பொருள்களாலான தன்மையை எடுத்துக்காட்டுகின்றார். மேலும், உடலானது எலும்பு களாகிய கழிகளைக் கொண்டும் நரம்புகளாகிய கயிறுகளைக் கொண்டும் சிவப்பு வண்ணமான தசைகளைக் கொண்டும் கட்டப் பெற்றுள்ள இயல்பினை,

''என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மினைசெய்து''

என்ற பாடலில் விளக்கும் திருமூலர், உண்ணும் உணவு, உடலை மூன்று வகைகளில் நலம் பேணுகின்றது என்பர். அவை பருவுடலை வளர்ப்பதற்கும் நுண்ணுடலாகிய மனத்தை வளர்ப்பதற்கும் உடலுக்குத் தேவையற்ற - சத்தற்ற கழிவுதனைக் கழிப்பதற்கும் பயன்படுகின்றது என்பர். 'ஒருவனின் உணவும் செயல்களும் மிகுமாயினும் குறைவு மாயினும், அளவறிந்து உண்ணாமல் இருந்தாலும், உடலுக்கு மாறுபாடில்லாத உண்டி மறுத்துண்ணாலும் யாக்கையானது நோயுறும்; கெடும்; உயிர் நலிவுறும் பன்னெடுங்காலம் இப்புவிதனில் வாழ்தல் அரிது' என்பர் திருவள்ளுவர்.

திருமூலரும், ஒருவன் நீணாள் வாழ்வதற்குரிய வழிமுறையைக் காட்டுகின்றார்.

''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே!''

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே!''

என்ற பாக்களின் மூலமாக, உடம்பைப் பேணுதல் வேண்டும் என்றும் அதனால் உயிர் உடலில் நீணாள் வாழும் என்றும் குறிப்பிடுகின்றார்.

கருவும் உருவும்

இனம் பெருக, மக்கள்பேறு பெற, இதன் வாயிலாக மனையறம் காக்க, ஆண், பெண் இருபாலரிடமும் அன்பு சிறந்து இருத்தல்

வேண்டும். மரம் முளைக்க விதை வேண்டுவது போல், பறவை பிறக்க முட்டை வேண்டுவது போல், மனிதன் தோன்ற வித்து வேண்டும். வித்துவால் உருவாகும் கருவில், 'ஓசை, உறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் நுண்மை ஐந்தும், அறிதற் கருவியாகிய ஐந்தும், செய்தற் கருவியாகிய வாய், கால், கை, எருவாய், கருவாய், கரணம், எண்ணம், மனம் ஆகப் பத்தினுடன் கூடிய மழையாகப் பொழியும் நீர் முதலாகச் சொல்லப்படும் பூதங்கள் ஐந்தும் தோன்றுகின்றன' என்பதை 440-ஆம் பாடலில் புலப்படுத்தி யுள்ளார் திருமூலர்.

பால் வேறுபாடு

பெண்ணின் கருவறையில் ஆணோ அல்லது பெண்ணோ உருவாவதற்கு ஆணின் உயிர்ச் சத்து எனப்படும் குரோமோசோம் களே ஏதுவாக இருப்பதாகத் தற்கால மருத்துவ அறிவியல் தெரிவிக்கின்றது. பெண்ணின் பண்பை உள்ளடக்கிய குரோமோ சோம் *X* என்றும் ஆணின் பண்பை உள்ளடக்கிய குரோமோசோம் *Y* என்றும் மருத்துவ அறிவியல் எடுத்துரைக்கின்றது. பெண் மகவுக்கு *XX* என்னும் குரோமோசோமும், ஆண் மகவுக்கு *XY* என்னும் குரோமோசோமும் என மருத்துவத் துறையில் இனங் காணப் பெற்றுள்ளது. இவைகளில் ஆணின் *X* குரோமாசோமும் பெண்ணின் *X* குரோமோசோமும் இணையப் பெற்றால் பெண் மகவாக உருவாகின்றது என்றும், ஆணின் *Y* குரோமோசோம் பெண்ணின் *X* குரோமோசோமும் இணையப்பெற்றால் ஆண்மகவாக உருவாகின்றது என்றும் மருத்துவ அறிவியல் எடுத்துரைக்கின்றது. மருத்துவத் துறையைச் சார்ந்த இந்தக் குறிப்புகளை முன்னாளிலேயே திருமூலர், திருமந்திரத்தில் சிந்தனையைத் தூண்டும் பாங்கில் பாடியுள்ளார்.

''ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரன் டொத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
பாணவ மிக்கிடின் பாய்ந்ததும் இல்லையே''

என்ற பாடலில், காதலர் இருவரும் மனங்கலந்து மருவிப் பொருந்துங்கால், ஆண் பண்புமிகுமாயின் சிசு ஆணாகவும், பெண் பண்பு மிகுமாயின் சிசு பெண்ணாகவும், ஆணின் பண்பும், பெண்ணின் பண்பும் சம அளவில் இருக்குமாயின் சிசு அலியாகவும் பிறக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

மேலும், இருவரும் மருவுங்காலத்து, வலது மூக்கின் மூலம் உயிர்ப்பு எனும் பிராணவாயு இயங்குமானால், பிறக்கும் சிசு ஆணாகவும், இடது மூக்கின் மூலம் இயங்குமானால் சிசு

பெண்ணாகவும், பிராணவாயுவை மலக் காற்றாகிய அபானன் (கரியமிலவாயு) எதிர்த்து வருமானால் பிறக்கும் சிசு இரட்டையாகவும், இரு மூக்கின் மூலம் உயிர்ப்பு - பிராணவாயு ஒத்த அளவில் இயங்குமானால் பிறக்கும் சிசு அலியாகவும் விளங்கும் எனத் திருமூலர்.

''குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகுங் கொண்டகால் ஒக்கிலே''

எனும் பாடலில் மருத்துவக் கண்ணோட்டத்தினைப் புலப்படுத்தியுள்ளார்.

ஆயுளும் ஊனமும்

மண்ணில் தோன்றிய மனிதன் மண்ணில் மறைவது திண்ணம். ஆனால், தோன்றிய மனிதன் மண்ணில் நெடுங்காலம் வாழ மருத்துவம் உறுதுணை செய்கின்றது. மரபணுக்களே ஒரு சிசுவின் பண்பு நலன்களையும் உருவத்தோற்றத்தினையும் ஆயுளையும் உறுதி செய்வதாக மருத்துவ அறிவியல் எடுத்துரைக்கின்றது. காதலர் இருவரும் அன்பு மிகுதியில் மருவுங்காலையில், ஆணின் ஐந்து மரபணுக்கள் கருவுடன் இணையும்போது சிசு உருவாகின்றது. அவ்வாறு தோன்றும் சிசுவின் ஆயுட் காலத்தை இன்று வரையில் மருத்துவ உலகம் கண்டறிந்து உறுதியாகச் சொல்லவில்லை. சித்தர்களில் ஒருவரான திருமூலர் பன்னெடுங் காலத்திற்கு முன்பே கருவில் தோன்றும் சிசுவின் ஆயுட்காலம் எவ்வாறு அமையும் என்பதைத் திருமந்திரப் பாடலில் குறித்துள்ளார்.

''பாய்ந்தபின் னஞ்சோடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் னாலோடியில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே''

இப்பாடலில், 'ஆணின் வித்து எனும் உயிர்ப்பிலுள்ள ஐந்து மரபணுக்கள் ஐம்பூதங்களிலும் பரந்து ஓடினால் பிறக்கும் சிசுவின் ஆயுள் நூறாண்டாகும் எனவும், நான்கு மரபணுக்கள் ஓடினால் ஆயுள் எண்பதாண்டாகும் எனவும், இருவரும் மருவுங் காலத்து, ஆணின் உயிர்க்காற்று அளவிற் குறைந்தால் சிசு குட்டை வடிவமாகவும், மூச்சு நெடுந்தொலைவு ஓடி இளைத்தவன் மூச்சுப் போல் இளைத்துப் போனால் சிசு முடமாகவும், அம்மூச்சு இடைநிலைப் பட்டிருந்தால் கூனாகவும் பிறக்கும்'' என்று திருமூலரின் மருத்துவப் பார்வைப் புலப்படுத்துகின்றது. மேலும், ''தாயார் வயிற்றில் மலம்

துப்புரவாகக் கழியாமல் தங்கி, மிகுதியாக இருக்குமெனில் சிசு மந்தமாகவும் சிறுநீர் மிகுந்து இருந்தால் சிசு ஊமையாகவும், இரண்டு ஒப்ப இருக்குமெனில் குருடாகவும் பிறக்கும்'' என்று நவில்கின்றார் திருமூலர்.

உயிர்க்கொல்லி நோய்

'உயிர்க்கொல்லி நோய்' பாலியல் தொடர்புடைய நோய். ஆண், பெண் ஆகிய இருவரின் தகாத ஒழுக்கக்கேட்டினால் வரும் நோயாகும். ஒருவன் ஒருத்தி என்ற பண்பாடு இல்லாததால் வரும் நோயாகும்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான்; ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்' (குறள். 131)

என்றார் திருவள்ளுவர். 'அறன் கடைப் படாஅ வாழ்க்கை' என்று அகநானூறும் (155:1) 'பிறன்கடை நின்று ஒழுகுவானும்' என்று திரிகடுகமும் (19) ஒழுக்கமற்ற செயல்களைச் சுட்டுகின்றன. ஒழுக்கம் ஒருவனை உயர்த்தும். ஒழுக்கமற்ற செயல் ஒருவனைத் தாழ்வடையச் செய்யும். உடலையும் மனத்தையும் கெடச் செய்யும். முறையற்ற - ஒழுக்கமற்ற பாலியல் உறவுகளால் 'உயிர்க்கொல்லி நோய்' (AIDS) தோன்றும் என்று மருத்துவ அறிவியல் வல்லுநர்கள் எடுத்துரைக்கின்றனர். முன்னாளில் தோன்றிய திருமூலர் சித்தர் பிறன்மனை நயவாமை, மகளிர் இழிவு போன்ற திருமந்திர அதிகாரங்களிலுள்ள,

''அத்த மனையாள் அகத்தில் இருக்கவே....''[17]

''திருத்தி வளர்த்ததோர்மோங் கனியை....''[18]

என்று தொடங்கும் பாடல்களிலும், 246, 247, 248 & 249 போன்ற பாடல்களிலும் பிற பெண்டிர்களை நாடுபவர்களையும் பொது மகளிரின்பால் நாட்டங்கொண்டவர்களையும் இடித்துரைத்துள்ளார்.

தோத்திர நூலாக மட்டும் அல்லாது, சாத்திர நூலாக மட்டும் அல்லாது, வாழ்க்கை நூலாகத் திகழ்கின்ற திருமூலரின் திரு மந்திரத்தில் வாழ்க்கைக்குத் தேவையான மருத்துவக் குறிப்புகள் பல விண்ணில் ஒளிவிடும் விண்மீன்களாகத் திகழ்கின்றன.

கள்ளிக்காட்டு இதிகாசத்தில் மருத்துவம்

சோ. மனோன்மணி

உருமு தனலெட்சுமி கல்லூரி
திருச்சி - 620 019

மருத்துவம் என்பது அளவிடற்கரியது. மனித இனம் இதுவரை அறியாத புதுப்புது நோய்களைச் சந்தித்துத் திக்கு முக்காடுகிறது. எத்தனை மருத்துவமுறைகள் வந்தபோதிலும் பெரும்பாலான கிராமங்களில் இயற்கை வைத்தியமே பின்பற்றப்படுகின்றன. அந்த நிலைக்கு வலுசேர்க்கும் வகையில் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் மருத்துவக் குறிப்புகள் நிரம்பக் காணப்படுகின்றன.

'மண்ணுதான் சாப்பாடு... மண்ணுதான் மருந்து நம்மளுக்கு' என்று பேயத்தேவர் கூறுவதை வைத்துக் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் மண் மருந்தாகப் பயன்படுகிறது என்பது புலனாகிறது. காலில் நகம் பிய்ந்து விடவே, உழவுமண் அள்ளிக் காயத்தில் அடித்தார். எனவே காயம் போக்கும் மருந்தாக மண்ணைக் குறிப்பிடுகிறார் வைரமுத்து.

''மானுடத்திற்கு மரியாதை பெற்றுக் கொடுத்தது மண்
மனித குலத்தை நிமிரவிடாமல் அதன் தோள்களின் மீதும்,
தலைகளின் மீதும், பல நூற்றாண்டுகளாய் ஆணி வைத்து
அடிக்கப்பட்ட துயரச்சுமைகளைத் தூக்கியெறிந்துவிட்டு
அதை நேராக நிமிர்த்து வைத்த மண்''

அத்தகையதோர் மண், கள்ளிக்காட்டு இதிகாசத்தில் மருந்தாகவும் குறிப்பிடப்படுகிறது. இதுமட்டுமன்றித் தோல் வியாதிக்கு மருந்து என்ன? என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

தோல் வியாதி

தேமல் உடலெங்கும் திட்டுத் திட்டாகப் படர்ந்து உடல் அழகை கெடுக்குமாகையால் தேமலைப் போக்குவது அவசியமாகிறது. எனவே தேமலைப் பற்றியும் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தேமல் என்பது கழுத்து, கை இடுக்கு, அக்குள் போன்ற இடங்களில் உயிரற்ற தோல் செதில்கள் இருப்பதாலும், அதில் வியர்வை தங்குவதாலும் ஏற்படும். முகத்திலும் கூடத் தேமல் வரலாம்.

நாயுருவி இலையைக் கொண்டு வந்து ஜாதிக்காய் ஒன்றை அதனுடன் சேர்த்து வைத்து அரைக்க வேண்டும். மைபோலத் திரண்டு வந்ததும் அதையெடுத்துத் தேமல் மீது தொடர்ந்து தடவி வந்தால் தேமல் தானாக மறைந்துவிடும்.

''முத்துக்கண்ணிக்குக் கழுத்துக்கு கீழே ஒரு தேமல் வந்து விடவே அண்ணன்மார்கள் என்ன செய்யலாம் என்று யோசிக்கவே கழுதப்பாலில் குளித்தால் தேமல் போகுமென்று ஒரு வயதானவர் வைத்தியம் சொன்னார். அண்ணன்மார்கள் அனைவரும் சேர்ந்து கொங்கக்கழுத, கருவாக்கழுத, வெள்ளக்கழுத, கறுப்புக்கழுத, சடைக்கழுத, சாம்பக்கழுத, வண்டிக்கழுத, வண்ணான் கழுத இப்படி எல்லாக் கழுதைகளையும் விரட்டி விரட்டிப் பால்பீச்சி முக்கால் குடம் நிரப்பி, தண்ணீர் தொட்டியில் தங்கையை ஊற வைத்துக் குளிப்பாட்டினார்கள். ''வேட்டை நாய் கண்ட முயல்'' மாதிரி தேமல் போன இடம் தெரியவில்லையாம்'' என்று கூறுவதன் மூலம் தேமலுக்கு ஏற்ற மருந்து கழுதைப்பால் என்பது தெளிவாகின்றது.

இருமலுக்கு மருந்து

குளிர்காலங்களில் சாதாரணமாகப் பலருக்கு இருமல் தோன்றலாம். நீர்கோப்பு ஏற்பட்டால் தீங்கற்ற இருமல் உண்டாகிறது. அன்றாடம் பலர் அனுபவிக்கும் இருமலைப் போக்கக் கள்ளிக் காட்டு இதிகாசத்திலும் மருத்துவமுறைகள் கூறப்பட்டுள்ளன.

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று பொருள்களும் திரிகடுகம் என்று வழங்கப்படும். இம்மூன்று பொருள்களால் இயன்ற மருந்து உடல்நோயைப் போக்கும் தன்மையைப் பெற்றிருக்கின்றது. இவை களுக்கும் கட்டுப்படாவிட்டால் நரித்தோலச்சுட்டு தேனில் குழைத்துக் கொடுத்தால் இருமல் சரியாகிவிடும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, தூதுவளைக்கசாயம், மிளகாய், வெல்லம், லேகியம், நாட்டுக்கோழி, நண்டுச்சாறு எதற்கும் கட்டுப்படவில்லை இருமல். சாப்பிட்டதெல்லாம் வெளியே வந்துவிடுவதால் உரம்போல் இருந்தவன் உலக்கையாய் இளைத்துவிட்டான். கள்ளிப்பட்டிக்குப் பருத்தி வாங்க வந்த நாடார், ஒரு நல்ல மருந்து சொன்னார். சரியான நரித்தோலை வாங்கி வந்து கருகியும் கருகாமலும் சுட்டு நரித் தோல் தூளை வெற்றிலையில் வைத்துத் தேனை ஊற்றிக் குழைத்துக் கொடுக்கப் போய்விட்டது இருமல் என்ற வரிகளின் வழியே இருமலுக்கான மருந்தைக் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் காணமுடிகிறது.

பிரசவம்

பிரசவம் என்பது ஒரு பெண்ணிற்கு மறுபிறவி. எனவே பேறுகால மருத்துவம் என்பது வாழ்வின் ஓர் அங்கம். அத்தகைய

பேறுகால மருத்துவம் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பேயத்தேவர் மகள் செல்லத்தாயிக்குப் பிரசவ வலி வந்து விட்டது. நிறைமாதக்காரி வயிறு தள்ளித்திரிவதால் எந்த நேரமும் இடுப்பு வலி வரலாம் என்று எதிர்ப்பாத்தாள் முருகாயி.

இது பொய் வலியா? நிஜவலியா என்பதை ஆள் துடிப்பதை மட்டும் வைத்து அடையாளங்காண முடியாது. பிள்ளை பிறக்கும் வழித்தடத்தில் நிதானமாய் - சூதானமாய் - விரல்விட்டுப் பார்த்தாள் முருகாயி. அளவு தெரியும் அவளுக்கு அது ஒரு விரல் சுற்றளவு இருந்தால் பதினெட்டு நாட்களாகும். ஆனால் செல்லதாயிக்கு ஐந்து விரல் சுற்றளவு இருந்தது. இது இன்றைக்கே இப்பவே என்கிற பிரசவ வலிதான் என்று கள்ளிக்காட்டு இதிகாசத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. பிரசவம் பார்க்கும்போது தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய பொருட்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. வெந்நீர், சோப்பு, வெள்ளைத்துணி, பிளேடு இந்த நான்கும் தான் ஆள் அம்பு சேனை முருகாயிக்கு. அடுக்களைக்குள் ஓடி அடுப்பில் இருந்த ரசத்தை இறக்கி வெந்நீர் வைத்தாள். ஓட்டம்போல் நடை நடந்து நடை வாசல் கதவடைத்தாள். ஒட்டுத்தாழ்வாரத்து ஓட்டில் ஒளித்து வைத்திருந்த புது சோப்பையும், புது பிளேடையும் எடுத்துக் கொண்டாள். சோப்பில் கை கழுவினாள். பேயத்தேவரின் வெளுக்கப்போட்ட வேட்டியைக் கிழித்து வெள்ளைத்துணியை ஏற்கனவே வைத்திருந்தாள். வெந்நீரை அலுமினிய வட்டிகையில் ஊற்றிக் கொண்டு நிதானமாய் உள்ளே போனாள். இங்ஙனம் பிரசவம் பார்க்கும் முன் தயார் நிலையில் இருக்கும் விதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

காய்ச்சலுக்கு மருந்து

காய்ச்சல் என்பது அனைத்து மனிதர்களுக்கும் வரக்கூடியது. உடல் சுத்தமின்மையும், அசுத்தமான சுற்றுப்புறச் சூழலும்கூடக் காய்ச்சலை அதிகப்படுத்துகிறது. காய்ச்சல் என்பது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் தொற்றக் கூடியது. எனவே காய்ச்சல் வராமல் பாதுகாப்பது அவசியம் என்பதை அறிந்து காய்ச்சலுக்குரிய மருத்துவமுறையும் கள்ளிக்காட்டில் கூறப்படுகிறது.

நெற்றியில் மஞ்சள்பத்துப் போட்டும் காய்ச்சல் குறைய வில்லை. தலை குளுந்திருக்க வேண்டும். பாதம் சூடாயிருக்கணும். அதுதான் நல்ல உடம்பு. பிறகு தைலம் வைச்சு பூசினால் சரியாகி விடும் என்று கூறுவதன் மூலம் காய்ச்சல் வந்தால் நெற்றியில் மஞ்சள்பத்து போடுவதும், தைலம் காய்ச்சிப் பூசுவதும், காய்ச்சல் போக்கும் வழிமுறைகள் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் காணமுடிகிறது.

தேங்காய் எண்ணெயில் சூடக்காச்சி ஒரு தைலம்.
வெள்ளைப்பூண்டு, மஞ்சள் இரண்டு தட்டிப்போட்டு
வேப்பெண்ணெயில் காச்சிய தைலம்-

என இரண்டு தைலம் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் கூறப்படுகிறது. இந்தத் தைலத்தை முறையாக எந்த இடத்தில் எந்த தைலத்தைத் தேய்க்க வேண்டும் என்று அறிந்திருக்க வேண்டும். இல்லையேல் வேறுவிதமான பாதிப்பை ஏற்படுத்தும் தலைக்குத் தேய்க்க வேண்டிய தைலத்தைப் பாதத்திற்கும், பாதத்திற்குத் தேய்க்க வேண்டிய தைலத்தைத் தலைக்கும் தேய்த்துவிட்டால் காய்ச்சல் மேலும் அதிகமாகிச் சன்னி வந்துவிடும். தைலம் காய்ச்சும் முறை மட்டு மல்லாது பயன்படுத்தும் முறையும் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் அழகுறக் கூறப்படுகிறது.

பாம்புகடிக்கு மருந்து

மாட்டிற்கு பாம்பு கடித்துவிட்டால் செய்ய வேண்டிய வைத்தியம் கூறப்பட்டுள்ளது. செவலக்காளையை பாம்பு கடித்துவிடவே அதற்குரிய வைத்திய முறைகளைப் பேயத்தேவர் செய்கின்றார். செவலையைக் கடித்தது கடும் விஷப்பாம்பென்பதை வாயில்லா சீவனின் வாயிலிருந்து தள்ளிய நுரை சொல்லியது. ஆமணக்கில் ஒன்றை ஒடித்து, குப்பைமேனித் தழையைப் பறித்துக் கொண்டு வேப்பம்பட்டையைத் தட்டி எல்லாவற்றையும் கூட்டிக் கமலைக் கல்லில் தண்ணீர் ஊற்றித் தட்டினார்.

நாட்டு வைத்தியம் சொன்னபடி அரைத்த மருந்தில் மாட்டுச் சிறுநீர் கலப்பது உத்தமம். அவசரத்தில் மாட்டுச் சிறுநீர் கிடைக்காததால் மனிதச் சிறுநீரில் கலந்து மாட்டின் வாயை அகலத் திறந்து புகட்டக் கொஞ்சம் கொஞ்சமாய் விஷம் இறங்கியது.

மனநோய்க்கு மருந்து

''பார்த்தல், கேட்டல், சுவைத்தல், மணத்தல், தொடல் எனும் ஐந்து உணர்வையும் உடையவனாக மனிதன் இருக்கிறான். அதைத் தான் மனம் என்றும், பகுத்தறிவு என்றும் கூறுகின்றார்கள். 'நோய்' என்பது உடலை மட்டுல்ல. அது மனத்தையும் பாதிக்கும். அவ்வாறு பாதிப்பு ஏற்படும்போது அந்த மனதிற்கும் மருந்து தேவைப்படுகிறது. மனம் விட்டு மற்றவரிடம் குறைகளைச் சொல்வதன் மூலம் அவர் களின் ஆறுதல் மொழிகள் மனநோய்க்கு மருந்தாகவும் அமைகின்றது.

வண்டி நாயக்கர் மரணப்படுக்கையில் இருக்கும்போது உடல்நலத்தைவிட மனநலமும் குன்றிப்போகிறார். அவருடைய மனதிற்கு மருந்தாகப் பேயத்தேவரின் ஆறுதல் மொழியும், அறிவுரையும் கிடைக்கப்பெறுகிறது.

பிறருக்கு உதவி செய்வதாலேதான் மனிதனின் மனநிறைவு இருக்கிறது என்றும் மனத்திற்கு மருந்து பிறருக்கு உதவுவதே என்ற கருத்தும் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் வலியுறுத்தப்படுகின்றது.

''தைரியம்தான் பாதி மருந்து மனிதனுக்கு'' என்று கூறுவதன் மூலம் தைரியமான மனமே மனிதனை நோயில்லாமல் வாழ வைக்கிறது என்று எடுத்துரைக்கப்படுகிறது.

நரம்பு சம்பந்தப்பட்ட வைத்திய முறை

'மார்க்க கல்யாணம்' என்னும் சடங்கு இஸ்லாம் மதத்தினரிடையே இருப்பது போல கள்ளிக்காட்டு மக்களிடமும் நடைபெற்று வந்திருக்கிறது. அந்தச் சடங்கு முறைக்கு பின் நடக்கும் நரம்பு சம்பந்தப்பட்ட வைத்திய முறையே இங்ஙனம் கூறப்படுகிறது.

இந்த வைத்தியம் பார்ப்பதிலேயும் சில நெறிமுறைகள் இருக்கு. சாஸ்திரப்படி மூணு விதமான நரம்பு இருக்கிறது.

மேல் நாடி நரம்பு - கீழ் நாடி நரம்பு - பக்க நரம்பு
மூணு நரம்பும் மேல படர்ந்து கீழ கூடுது. இதில்
மேல் நாடி நரம்பு வெட்டுப்பட்டால், கண்பார்வை கந்தலாயிடும்
கீழ்நாடி நரம்பு வெட்டுப்பட்டால் ரத்தப்போக்கை நிறுத்த
முடியல பக்க நரம்பு அறுந்து போனால் - உயிரே போய்விடும்.

முதலில் நரம்பை ஒதுக்கிட வேண்டும். சந்தனத்தையும், சல்பனா பவுடரையும் அதில் பூசி, சவ்வு ஒதுக்கி நரம்பை தேடிப் பிரித்து, பிறகு தோலை மட்டும் தனியாக இழுத்து நரம்பிலேயும் படாம, நுனித்துண்டிலும் ஒரசாமல் துண்டா இழுத்து மூங்கில் பட்டையில் கட்டிப்போட வேண்டும். இவ்வாறாக நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளையும் கூறி மருந்து தயாரிக்கும் முறையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தயாரித்து வைத்த பொடி ஒன்று இருக்கிறது. சாதிக்கா, கடுக்கா, மாசக்கா, சீனிக்காரம் கந்தகம் எல்லாவற்றையும் போட்டு இடித்த பொடி ஒன்றையும் வைத்து வெற்றிலையைத் தீயில் வாட்டி வெள்ளைத்துணியில் வெற்றிலையையும் தயாரித்த பொடியையும் வைத்து அந்த இடத்தில் கட்ட வேண்டும். இங்ஙனம் மருந்து தயாரித்து கட்டும் முறை கள்ளிக்காட்டு இதிகாசத்தில் வழி கூறப்பட்டுள்ளது.

மதுரை மாநகரில் காரீய மாசுபாடு

விஜய் பாஸ்கர், ஜெபா ராஜசேகர், முத்து சுப்ரமணியன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

மானிடச் சுற்றுச் சூழலின் மிகவும் முக்கியமான அங்கங்களில் காற்றுவெளியும் ஒன்றாகும். இயற்கை முறைகளாலும் மனிதச் செயல்களினாலும் பூமியின் போற்றத்தக்க இயற்கை வளமான இக்காற்று வெளியானது தொடர்ச்சியாக மாசுபடுத்தப்படுகிறது. நகரங்களில் தொழிற்சாலைகள், வாகனங்கள், திண்ம கழிவு எரிப்பு, வீடு மற்றும் வர்த்தகச் செயல்முறைகள் போன்றவற்றிலிருந்து காற்று மாசுக்கள் வெளிவருகின்றன. நம் நாட்டைப் பொறுத்தமட்டில் நகரக் காற்று மாசுபாட்டிற்கு வாகனங்களே முதல் மற்றும் முக்கிய காரணமாக உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. வாகனங்களி லிருந்து வெளிவரும் பல காற்று மாசுக்கள் மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றன. இவற்றில் பெட்ரோலை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் வாகனங்களிலிருந்து வெளிவரும் மாசுக்களில் காரீயமும் ஒன்றாகும். இக்காரீயத்துகள் கலந்த காற்றைச் சுவாசிப்பதால் மனவளர்ச்சி குன்றல், அறிவுத்திறன் குறைபாடு போன்றவற்றால் குழந்தைகளும் சிறுவர்களும் பாதிக்கப்படுகின்றனர். நரம்பு தளர்ச்சி, சிறுநீரகம் மற்றும் கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்கள், காசநோய், நுரையீரல், புற்றுநோய், மூளை செல் பாதிப்பு போன்ற பல்வேறு வகை நோய்களால் பெண்களும் பெரியவர்களும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே இக்காற்று மாசின் அளவுகளைக் கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். காற்று மாசுக்களைக் கட்டுப்படுத்துவதன் முதல் மற்றும் முக்கியபடி காற்று மாசுக்களை அளவீடு செய்வதாகும். எனவே தமிழகத்தின் மாநகரங்களில் ஒன்றான மதுரையின் பல பகுதிகளில் இக்காற்று மாசுக்களை அளவீடு செய்துள்ளோம்.

பொருளுரை

மதுரை மாநகரம் (*90.54' வடக்கு 78'.06'* கிழக்கு, கடல் மட்டத்திற்கு மேல் *100மீ* உயரம்) சென்னையின் தென்பகுதியி லிருந்து சுமார் *450* கி.மீ தொலையில் *52.8* சதுர கிமீ பரப்பளவில் அமைந்துள்ள தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரமாகும்.

தமிழ்நாட்டிலேயே அதிக மக்கள் நெருக்கம் கொண்ட நகரமும் இதுவே. இது தென் தமிழ்நாட்டின் மிக முக்கியமான வியாபார மற்றும் வர்த்த மையமாக விளங்குகிறது. மக்கள் தொகைப் பெருக்கம் 2001-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கின்படி சுமார் 12 இலட்சமாகும். இந்நகரின் காற்றை மாசுபடுத்தும் செயற்கை மூலங் களில் வாகனங்களே முதன்மையாக உள்ளதாகவும், இந்நகரின் காற்றானது தொடர்ச்சியாக மாசேற்றம் அடைந்து வருவதாகவும் முந்தைய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. காரீயமானது வாகனங்களிலிருந்து வெளிவருவதால் நகரின் முக்கியமான வாகன நிறுத்தங்களில் இக்காற்று மாசு அளவிடப்பட்டது.

காற்று மாசு அளவீடு

ஒவ்வொரு வாகன நிறுத்தத்திலும் காற்று மாசுபாடு அளக்கும் கருவியினைத் (High volume Air sampler) தலா 24 மணிநேரம் இயக்கிக் காற்றிலுள்ள மாசான மிதவைத்துகள்களின் (SPM) செறிவுகள் அளவீடு செய்யப்பட்டன. இதற்கு அமெரிக்க ஐக்கிய நாட்டின் சூழல் பாதுகாப்பு மையத்தின் (USEPA) மற்றும் மத்திய மாசுகட்டுப்பாடு வாரியத்தின் (CPCB) வழிமுறைகள் கையாளப்பட்டன. காற்று மாசுவின் செறிவு காற்றின் வேகம், காற்று வீசும் திசை, காற்றின் ஈரப்பதம், வளிமண்டல வெப்பநிலை போன்ற சூழல் காரணி களையும் சார்ந்திருக்கின்றன. ஆகவே, இக்காரணிகளும் இந்த ஆய்வின்போது அளவீடு செய்யப்பட்டன. சேகரித்த மிதவைத் துகள்களிலிருந்து காரீயத்துகள்களின் செறிவு அணு உட்கவர் நிற நிலைமானி (Atomic Absorption Spectrophotometer) என்ற கருவியின் மூலம் அளவிடப்பட்டது. அளவிடப்பட்ட காரீயத்தின் செறிவுகள் அட்டவணை எண் ஒன்றிலும், வளி மண்டல சூழல் காரணிகள் அட்டவணை எண் - இரண்டிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆய்வு முடிவுகள்

மதுரை மாநகரத்தில் காரீய மாசுவின் செறிவுகள் $0.29^{\circ}g/m3$ முதல் $1.06^{\circ}g/m3$ வரை வேறுபடுவதை இந்த ஆய்வின் மூலம் கண்டறிந்தோம். மேலும் பெரும்பாலான அளவீட்டு இடங்களில் வாகனங்களே காரீய மாசின் செறிவிற்கு முழுக்காரணமாக நேர் விகிதத் தொடர்பைப் பெற்றிருப்பதையும் கண்டறிந்தோம். இக்காற்று மாசுவின் செறிவுகளின் அளவுகளை நிர்ணயிப்பதில் சூழல் காரணி களான காற்றின் வேகம், காற்று வீசும் திசை, ஈரப்பதத்தின் அளவு, வெப்பநிலை போன்றவை முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. காற்றில் கலக்கும் காரீயம் நம் ஆயுளைக் குறைக்கும் என்பதை உணர்ந்து வாகனங்களை முறையாகப் பரா

மரிப்பதும், காரீயம் கலந்த பெட்ரோலைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதும் மிகவும் அவசியமாகும்.

காற்று மாசுபாடு குறித்த விழிப்புணர்வு கொள்வோம். காற்று மாசுபடுத்தாத பொறுப்புணர்வு கொள்வோம். இவை இக்கால கட்டத்தின் இன்றியமையாத் தேவைகளாகும். ஏனெனில் காற்றுக்கு மாற்று இல்லை.

அட்டவணை : 1

மதுரை மாநகரில் அளவிடப்பட்ட காரீயத்தின் செறிவுகள்

ஆய்வுப் பகுதி	அளவிடப்பட்ட காரீயத்தின் செறிவுகள் (மைக்ரோ கிராம்/ கன மீ.)
1. பெரியார் பேருந்து நிலையம்	1.06
2. கே.கே. நகர்	0.70
3. சிம்மக்கல்	0.69
4. விளக்குதூண்	0.62
5. திருமலை நாயக்கர் மகால்	0.89
6. யானைக்கால்	0.49
7. இரயில்வே நிலையம்	0.52
8. பழங்காநத்தம்	0.47
9. கோரிப்பாளையம்	0.89
10. புதூர்	0.29
11. கீழவாசல்	0.49
12. கோச்சடை	0.42
13. ஒ.எம்.சி.ஏ	0.44
14. காளவாசல்	0.32
15. மீனாட்சி கோவில்	0.41
16. செனாய் நகர்	0.31

அட்டவணை : 2

மதுரை மாநகரில் அளவிடப்பட்ட வளிமண்டல சூழல் காரணிகள்

ஆய்வுப் பகுதி	சூரியக் கதிர் வீச்சு வாட் / சதுர மீ	வெப்ப நிலை °செ	காற்றின் ஈரப்பதம் (%)	காற்றின் திசை வேகம் மீ./நொடி
1. பெரியார் பேருந்து நிலையம்	1009	27.4	59.2	2.9
2. கே.கே.நகர்	998	27.7	62.4	3.1
3. சிம்மக்கல்	1002	26.8	63.0	2.9
4. விளக்குதூண்	995	28.6	55.9	1.7
5. திருமலை நாயக்கர் மகால்	982	26.3	65.2	1.2
6. யானைக்கால்	961	27.8	65.8	1.6
7. இரயில்வே நிலையம்	987	26.4	64.8	1.5
8. பழங்காநத்தம்	992	28.0	63.5	0.9
9. கோரிப்பாளையம்	945	25.2	69.5	3.4
10. புதூர்	967	26.7	68.2	2.9
11. கீழவாசல்	956	25.4	68.3	3.9
12. கோச்சடை	942	25.3	66.3	3.4
13. ஒ.எம்.சி.ஏ	930	24.8	71.2	2.9
14. காளவாசல்	927	23.2	71.2	2.8
15. மீனாட்சி கோவில்	921	24.3	72.4	1.9
16. செனாய் நகர்	968	24.1	66.8	23

சூழல் நிர்வாகம் : கூட்டலும் கழித்தலும்

சிவ. மங்கையர்க்கரசி

தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி
மயிலாடுதுறை

சூழல் படும் பாடு

நிலம் (Lithosphere), நீர் (Hydrosphere), காற்று (Atmosphere) அதைச் சுற்றியுள்ள அங்கமான பல்லுயிர்ப் பெருக்கம் (Biodiversity) வாழ்வதற்கு உதவும் உயிர்க்கோளப் பகுதி (Biosphere) தான் ''சுற்றுப் புறச் சூழல்'' எனப்படும். சுருக்கமாகச் சொன்னால் மனிதனைச் சுற்றியுள்ள உயிரின உறைவிடமான அனைத்தும் சுற்றுச் சூழல் (Ecology) எனலாம். மொத்தத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பது உயிரினம் வாழும் பூமித் தாயைப் பாதுகாப்பதாகும்.

''மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்'' (742)

என்பது குறள்.

இயற்கை தந்த சீதனங்கள் உயிரினங்கள். இவை மானுடம் நிலைக்க அவசியமான உயிரின் மூலாதாரங்கள் (Biological resources), உயிரினங்களும் சுற்றுச் சூழலின் ஒருங்கிணைந்த பகுதியே. நுண்ணுயிர் களும், தாவரங்களும், விலங்கினங்களும் உயிரின பன்முகத்தின் (Biodiversity) ஒருங்கிணைந்த பகுதியாகும். மானுடத்தையே தாங்கி நிற்கும் ஆதார வளங்களையே அறுத்து நிற்கும் இன்றைய வளர்ச்சி உண்மையான வளர்ச்சி அல்ல.

பன்னெடுங்காலமாகச் சமன்பாட்டு நிலையில் இயங்கி வந்த சுற்றுச் சூழலின் இயக்கம் மாறி இன்று உயிரினப் பன்முகச் சிதைவு உருவாகியுள்ளது. உயிர்க்கோளம் மாறுபடுவதால் பருவ மழை தவறுகிறது. நில அரிப்பு (Landslide), வெள்ளம் (Flood), கடும் வறட்சி (Drought), புயல் காற்று (Tropical Cyclone), மணற் புயல், பனிப்புயல், நில நடுக்கம் (Earth Quake), மேலும் எரிமலைக் குமுறல்கள் (Volcanic Eruption) எல்லாம் ஏற்படுகின்றன. இயற்கையோடு இயைந்து மனிதன் வாழ்ந்தாலன்றி அவனது எதிர்காலம் கேள்விக்

குறியே. இயற்கைச் சூழலுக்கு மனிதனால் விளையும் இடையூறு களை அறிந்து கொள்ள வேண்டியது காலத்தின் ஆணையாகும்.

தமிழிலக்கியத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

ஒரு வர்த்தக மூட்டையாய்ச் சுருங்கிப் போய்விட்ட உலக உருண்டையில் என்றென்றும் நிலைத்து நிற்கும் மானிட மதிப்பு களை (Human values) உயர்த்திப் பிடிப்பதில் இலக்கியம் முன்னிற்கும். மனிதவள மேம்பாட்டிற்காக (Human resource development)ப் பயன்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு (Environmental Protection) இல்லையேல் வாழ்க்கைத் தரம் உயராது என்ற செய்தியைத் தமிழிலக்கியத்தின் வழி அறிதல் இயலும்.

உலகத்து உயிர்கள் எல்லாம் நீரை (மழையை) நம்பி வாழ் கின்றன என்று வள்ளுவர் கூறுகின்றார். 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்தில் ''நீர் இன்று அமையாது உலகு'' (குறள் - 20) என்றும், ''வான் நோக்கி வாழும் உலகு'' (குறள் - 542) என்றும் நீரின் சிறப்பைக் கூறுகின்றார். ''இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்'' என்ற குறட்பாவில் (737) ''வருபுனல்'' என்று மலைமேல் ஓடிவரும் நீரினையும் ''இருபுனல்'' என்று நிலத்தின் மேல் மற்றும் நிலத்தின் கீழ் உள்ள நீரினைப் பற்றியும் குறிப்பிடுகிறார் வள்ளுவர். நீர்வளங்கள் ஒரு நாட்டின் செழுமைக்கு உறுப்பு என்று வள்ளுவர் கூறியுள்ளார். வான் சிறப்பினைக் கூறிய வள்ளுவருக்குச் சென்னையில் குளத்தினை நிரப்பித்தான் ''வள்ளுவர் கோட்டம்'' அமைக்கப்பட்டது. ''குளம் தொட்டு வளம் பெருக்கி''னர் முன்னோர். குளங்களை அழித்தல், மழைநீர் சேகரிப்பினை இழத்தல் நீராதார இழப்புக்கு வழிவகுக்கும். மழைநீர் அறுவடை (Harvesting rain) என்பது கிடைக்கின்றபோது சேகரித்து, காத்து, பின்பு பயன்படுத்துதல் என்ற நிலையில் சிந்திக்கப்பட வேண்டும்.

இன்று குளங்கள் அனைத்தும் பேருந்து நிலையங்கள், கடைத் தொகுதிகள், குப்பைத் தொட்டிகள், கழிவுக் குட்டைகள், நீச்சல் குளங்கள் எனப் பிற பயன்பாட்டிற்காக நிரப்பப்பட்டுவிட்டன.

தனியார்மயமாகும் தண்ணீர்.....

''இயற்கை அன்னை தந்ததெல்லாம்
எல்லோர்க்கும் சொந்தமடா''

என்ற கவிதை வரிகள் கனவாகிப் போய்விட்டன.

தாராளமயமாக்கல் (Liberalisation), உலகமயமாக்கல் (Globalisation) கொள்கையின்படி தண்ணீரைத் தனியார் நிறுவனங்களுக்கு விற்றா யிற்று (Privatisatøion of Water Resources). பன்னாட்டு நிறுவனங்கள்

இந்திய நீர் வளங்களைப் பயன்படுத்தி இந்தியருக்கே தண்ணீரைக் குப்பியில் அடைத்து விற்கும் கொடுமை...

''விழியை விற்று
ஓவியம் வாங்கினர்
உலகமயம்'' - (இரா. இரவி, விழிகளில் ஹைக்கூ)

என்ற கூற்று உண்மையாயிற்று, விளைவு: தண்ணீரைப் பொறுத்த வரை எலும்புகளுக்கும், பற்களுக்கும் சேதம் விளைவிக்கும், நரம்புத் தளர்ச்சிக்கு வழிவகுக்கும், புற்று நோயை உருவாக்கும், இரைப்பையைப் பாதிக்கும், நரம்பு மண்டலத்தை தாக்கும் .... குளிர்பானங்களின் தீய தன்மைகளின் அணிவகுப்பு.... தமிழர்களே உயிருக்குக் குரல் கொடுங்கள். இந்தியாவில் பூச்சி மருந்துகளின் எச்சங்களைக் கொண்டுள்ள குளிர்பான நிறுவனங்கள் நீதிமன்றத்தையோ, சட்ட விதிகளையோ மதிப்பதில்லை. இது ஒரு புறமிருக்க, இந்த நிறுவனங்களின் மீது நுகர்வோர் வழக்கு போட்டு எந்த நீதிமன்றத்திற்கும் இழுக்க முடியாது. அவ்வளவு ஏன்? குறைந்தபட்ச வியாபார நியதிகளைக்கூட இந்நிறுவனங்கள் பின்பற்றுவதில்லை. ஏனெனில் 57 ஆண்டுகள் ஆகியும் சுதந்திர இந்தியாவில் குடிநீரை ஒழுங்குபடுத்த எந்த சட்டமோ, விதியோ இல்லை.

''சேவல் கூவி விடியாத பொழுது
குயில் கூவியா விடியப் போகிறது?''
(வைரமுத்து, தண்ணீர் தேசம்)

தண்ணீர் குறையக் குறைய உயிர்த்தாமரை உலரும் காலம் தொலைவில் இல்லை.

தூக்கி எறியப்பட்ட பலகோடி காலியான குப்பிகள் (*Plastic wate bottles*) திடக் கழிவுகளாக (*Solid waste*) சுற்றுச் சூழலை மாசுபடுத்துகின்றன. குறிப்பாகச் சுற்றுலாப் பயணிகள் காலிக் குப்பிகளை ஏரி போன்ற நீர்நிலைகளில் எறிவதால் நீர் மாசுற்றுச் சுற்றுலாத் தலம் பாதிக்கப்படுகின்றன. இக்கழிவுகளை மறுசுழற்சி செய்வது யார்? அதற்கு எவ்வளவு செலவாகும். செலவுகளை ஏற்பது யார்? போன்ற பிரச்சனைகள் எழுந்துள்ளன. இதனால் தனியார் நிறுவனங்களுக்குப் பலகோடி இலாபங்களை ஈட்டித் தரும் குப்பிகளில் அடைக்கப்பட்டு விற்கப்படும் நீர்த்தொழில் (*Packaged bottled water industry*) நுகர்வோரின் முன்னணிச் சிக்கலாகவும் சமூக, அரசியல் மற்றும் சுற்றுச் சூழல் சர்ச்சையாகவும் உருவெடுத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் பார்த்திராத நீர்த் தொழில் இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 40 சதவீத வளர்ச்சியைப் பெற்று, பிரபலமான தகவல் தொழில் நுட்பம் மற்றும் வங்கிப் பணிகளின் இடங்களை அமைதியாக

அபகரித்துக் கொண்டு முன்வரிசையில் அமர்ந்துள்ளது (Consumer voice, Vol. 4, No. 2, March - April 2003, p. 20).

மண்ணை வாழ்விக்கும் தன்மை படைத்த மழையிலும் மனிதனை மரண வாயிலுக்கு அழைத்துச் செல்லும் அமிலக் கூறுகள் (Acid rain) இடம் பெறத் தொடங்கிவிட்டன. வளிமண்டலம் அமிலத் தன்மை அடைந்து, அமில மழை பொழிவதற்குத் தொழிற்சாலைகளிலிருந்து வரும் வாயுக்களே காரணமாகின்றன. இதனால் நிலத்தடி நீர் மாசுபடுகிறது.

இயற்கை வேளாண்மை : பசுமை சார்ந்த வளர்ச்சி

''அருங்கேட்டால் ஆற்ற விளைவது'' என்ற குறளின் (732) தொடருக்குப் பரிமேலழகர் ''கேடின்மையோடு கூடி மிகவிளைவது'' என்று விளக்கம் கூறுகின்றார். இந்த அடிப்படையில் பார்க்கும் போது கேடின்றி விளைய வேண்டும் என்பதான 'நிலைத்த வேளாண்மை' (Sustainable Agriculture)யைக் குறள் வலியுறுத்துகின்றது. கேடின்றி விளைவு என்பதற்கு இருவகை பொருள் கொள்ளலாம். விளைச்சலுக்கு எந்தக் கேடும் இருக்கக் கூடாது என்பது ஒரு பொருள். அடுத்ததாக, விளைச்சலால் எந்தக் கேடும் இருக்கக் கூடாது எனவும் பொருள் கொள்ளலாம். பசுமைப் புரட்சி (Green Revolution)யின் கரிய விளைவுகளால் நிலம் சக்தியிழந்து கரம்பானது. தானியங்களில் ஊறிய நஞ்சின் எச்சத்தால் குடல் நோய்கள் ஏற்பட்டன. பூச்சி மருந்து, உரங்களால் மண்ணும் நீரும் நஞ்சாயின. பசுமைப் புரட்சியின் மறுபக்கத்தை சுட்டிக்காட்டினர் சூழலியலார். 'பசுமை சார்ந்த' வளர்ச்சி' (Green Growth) என்ற முழக்கம் வலுப்பெற்றது. இறால் பண்ணைகளால் விளைநிலம் வீணாகி விட்டது. குடிநீர் உப்பு நீராக மாறிவிட்டது. பல்வேறு பரம்பரை மீனவர்கள் தொழில் நசிந்து விட்டது. கிராமிய முகத்தை சிதைத்து விகாரமாக்கிவிடும் இறால் பண்ணைகள் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறைக்கு வேட்டு வைத்து விடும். மண்ணின் வளத்தை சிதைக்காமல் விளைச்சலைப் பெருக்கும் இயற்கை வேளாண்மை முறைகளை நோக்கி பார்வை திரும்பியிருக்கிறது. பொதுவுடைமை ஆதார வளங்களை (Common Property Resources)ச் சிதைக்காமல் காக்க 'உயிரியக் கிராமங்கள்' (Biovillages) திட்டம் தொடங்கப்பட்டது.

ஆருயிர் மருந்தான உணவுக்கு உத்தரவாதம்

இந்தியாவில் போதுமான உணவு உற்பத்தி செய்யப்பட்டாலும், சத்தான உணவுக்கு உத்தரவாதம் (Food Security) தரமுடியவில்லை சத்தில்லாத, ஊட்டமில்லாத உணவு (Malnutrition) பெருங்குறை. 'நாடு என்பது நாடா வளத்தன' என்றார் வள்ளுவர். வாழுகின்ற

குடிமக்கள் அனைவருக்கும் உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படைத் தேவை (Basic Needs)களுக்கு வழிகோல்வது அரசுக்கு தார்மீகப் பொறுப்பாகும். ''அறநெறி முதற்றே யரசின் கொற்றம்'' என்பது புறநானூற்றுப் பாடல் (55). உணவே மனிதனைப் ''பசிப் பிணி என்னும் பாவி''யிடமிருந்து காப்பாற்றுகிறது.

''மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே''

என மணிமேலை (பாத்திரம் பெற்ற காதை) போற்றுகின்றது. பசியைப் ''பிணி'' என்றும், உணவை ''ஆருயிர் மருந்து'' என்றும், ''மக்கள் யாக்கை உணவின் பிண்டம்'' என்றும் சாத்தனார் மணிமேகலையில் கூறுவது ஆழ்ந்து நோக்கத் தக்கது. மாந்தனுக்குச் சமுதாயத்தில் மரியாதை கிடைக்க வேண்டுமாயின் (Self-esteem need) உணவுப் பாதுகாப்பு அடிப்படைத் தேவையாகிறது. ''பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்'' என்ற பழமொழியின் கருத்தை மாசுலோ (Maslow) என்ற உள நூலறிஞரின் ''தேவைகள்'' (Needs) பற்றிய வாதம் சுமந்து கொண்டுள்ளது. உண்ணும் உணவுக்கும், குடிக்கும் நீருக்குமே அன்றாடம் திண்டாடும் ஏழை எப்படிப் பாதுகாப்பாக வாழமுடியும். உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கே உணவு பாதுகாப்பில்லை. இதன் அடிப்படையில் எழுந்ததுதான், "To ensure food security, the security of the food producing communities must be ensured" என்ற முக்கியத்துவம் வாய்ந்த முழக்கமாகும் (Strategic slogan).

''இது உங்கள் நகரம்
இதைச் சுத்தமாக வைக்க உதவுங்கள்
அறிவித்த சுவரெதிர் போலீஸ் குதிரை
சாணம் இட்டு நின்றிருந்தது''

'புதுயுகம்' இதழில் சுகுமாரன் சுற்றுச் சூழல் மாசுபடும் காட்சியை இவ்வாறு தோலுரித்துக் காட்டுகிறார்.

''சுற்றுச் சூழல் பாதுகாப்பு'' விழிப்புணர்ச்சிக்கு வித்திடும் வகையில் சூழலியல் சுற்றுலா (Eco-Tourism), சூழல் வரலாற்றியல் (Environmental History), சூழல் சட்டவியல் (Environmental Law) மற்றும் சூழல் பொருளியல் (Environmental Economics) போன்று சூழலியல் தமிழ் (Environmental Tamil / Eco-Tamil) தனித் துறையாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சூழலியல் வரலாற்றுப் பின்னணியோடு தமிழ் இலக்கியங்களைப் பற்றி புரிதல் வேண்டும்.

பண்டைய இலக்கியத்தில் சூழலியல் - தாவர வழிமுறை வளர்ச்சி

(Ecology - Plant Succession in Ancient Literature)

பு. பாலாஜி

தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்து கல்லூரி
சென்னை - 72

பயில்தொறும் பயில்தொறும் நூல் நயம் எனும் தொடருக்கு உயிர் கொடுப்பதாக இலக்கியங்கள் அமைகின்றன. இவை மனித வாழ்வில் அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஏற்பக் காலங்காலமாகப் பல பரிமாணங்களில் நோக்கப்படுகின்றன. குறிப்பாகப் பண்டைய இலக்கியம், அறிவியல் பார்வையில் நோக்குவதற்குரிய பல செய்தி களைக் காண முடிகிறது. இக்கட்டுரை சூழலியல் பார்வையில் தாவரங்களில் வழி முறை வளர்ச்சி பற்றிய செய்திகளை நோக்குகிறது.

ஒரு வாழிடத்தில் அதன் இயற்கை சூழலில் காணப்படும் தாவரக் கூட்டம் தாவரச் சமுதாயம் எனப்படுகிறது. தாவரச் சமுதாயம் நிலையான தொன்றல்ல. ஒவ்வொரு தாவர சமுதாயமும் உச்ச நிலையை அடைதவற்கு முன்பு அதாவது எளிய நிலை யிலிருந்து சிக்கலான நிலையை அடையும் வரை வரையறுக்கப் பட்ட சீரமைப்பில் மற்றும் வரையறுக்கப்பட்ட நிலையில் தோன்றும் பல வளர்நிலை சமுதாயங்களைக் காட்டுகிறது. இவ்வாறு படிப்படியாக ஒரு வகை சமுதாயம் மற்றொரு வகை சமுதாயத்தை இடம்பெறச் செய்து இறுதியில் உச்சநிலை சமுதாயம் தோன்று தலுக்குத் தாவர வழிமுறை வளர்ச்சி என்று பெயர் (பழனியப்பன், எஸ்., சூழ்நிலையியல், ப. 60)

அறிஞர்களின் வரையறையாகச் சில கூறப்படுகின்றன. 1. ஒரே இடத்தில் வெவ்வேறு தாவரச் சமுதாய தொகுதிகள் அடுத்தடுத்துக் கூட்டமைவு அடைதல் எனும் இயற்கை நிகழ்ச்சி என்கிறார் கிளமெண்டஸ். 2. ஒரு அலகு பரப்பில் தாவரச் சமுதாயங்கள் சீராக மாற்றமடையும் நிகழ்ச்சியே என்கிறார் ஓடம். 3. உச்ச நிலை அடையும் வரை தோன்றும் ஒவ்வொரு நிலையிலும் அதன் அமைப்பின் கூறுகள் வாழ்க்கைப் போட்டியின் காரணமாக

வாழிடத்தைத் தனக்கு உகந்ததாக ஆக்குவதைவிட அதனை அடுத்து வரும் இனக் கூறுகளுக்கு உகந்ததாக ஆக்குதலால் விளைவதே வழிமுறை வளர்ச்சி என்கிறார் சாலிஸ்பரி (பழனியப்பன், எஸ்., சூழ்நிலையியல், ப. 61).

தாவரக் கூட்டங்கள் இருந்து அவை நெருப்பால் அழிக்கப் பட்டு அல்லது வேறு சில இயற்கை அல்லது செயற்கைக் காரணங் களால் அழிக்கப்பட்டுத் தோன்றும் வெற்று நிலங்களில் வழிமுறை வளர்ச்சி தோன்றுகிறது. இத்தகைய வளர்ச்சி நிகழ்வு சங்க இலக்கியத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. பகைமை உணர்வால் போரில் பகை நாட்டாரின் மருத நிலங்களும் (புறம். 16:18-26) காடுகளும் (குறி. 226) தீயிட்டு எரிக்கப்பட்டன. இச்செயல் பொருட்பயன்பாட்டிற்கும், போக்குவரத்தில் பாதை வேண்டியும், தாவரங்கள் அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தாலும் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டன (பட்டி. 283). கனைய மரம் காவல் மரமும் (பதி. 2:6:8. புறம். 36:6-9, 57:10) வேம்பும், மேட்டு நிலத்தில் அகிலும் சந்தன மரமும் அழிக்கப்பட்டன (மது. 286). இவ்வாறு பெருங்கோடரியால் வெட்டுண்டு வீழ்ந்த பெருமரங்கள் பலவாயின (புறம். 270:12). இத்தகைய நிகழ்வுகளுக்குப் பின் இத்தாவர இடங்களில் மேற்குறித்த இரண்டாம் நிலை தாவர வழிமுறை வளர்ச்சி நிகழ்ந்திருக்கப் பல வாய்ப்புகளும் அமைந்திருக்கலாம்.

வழி முறை வளர்ச்சி

1. நீர் நிலையில், 2. வறண்ட சூழ்நிலையில், 3. வெற்று மணற் பரப்பில், 4. உவர் மணற்பரப்பில், 5. சிதைவுறும் மரப்பட்டையில் அல்லது மரத்துண்டங்களில் எனும் இவற்றுள் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம் (பழனியப்பன், எஸ். சூழ்நிலையியல், ப. 61-63).

நீர் நிலையில் தாவர வழிமுறை வளர்ச்சி

வழிமுறை வளர்ச்சியின் தொடக்கத்தில் நீரில் குறைந்த அளவு ஊட்டச் சத்துதான் இருக்கும். இதனால் மிகக் குறைந்த அளவு உயிரினங்கள்தான் வாழும். இதனைச் சங்க இலக்கியம் அழகுறப் பதிவு செய்துள்ளது. நீர்க்கீழ் நின்ற சிவந்த அரும்புகள் (முருகு. 30) கிணற்று நீரினுள் விளைந்த பாசி (மலை. 450-453) குளத்தில் நுண்ணிய நீரின்மையையுடைய பாசி (மலை. 220 - 221) நன்னீர் வாழ் கடற் பாசியின் செடி வகை (மலைபடு 450 - 455) என்பன அமைகின்றன. இவை நீர் மூழ்கு நிலையினவாகும்.

வேரூன்றிய நீர் மூழ்கு நிலை

தாவரங்கள் நீர்நிலையில் ஆழம் ஏறத்தாழப் பத்து அடியாக வுள்ள இடங்களில் வளர்கின்றன. பாசி போன்ற நீர் மூழ்கு தாவரங்கள்

ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாகும்போது அவற்றில் சில அழிந்து மட்காகின்றன. இதனுடன் மழை நீரினால் அடித்து வரப்படும் சிறு மணலும் தூசுகளும் சேர்வதால் நீர் நிலையின் அடியில் மிருதுவான களி தோன்றுகிறது. இந்நிலைத் தாவரம் வேரூன்ற வகை செய்கின்றது. (பழனியப்பன், எஸ். சூழ்நிலை யியல், ப. 63) இங்ஙனம் நீர்த்துறையில் பெரிய கொன்றையும் (புறம் 235:8) பொய்கையில் முகை மலர்தலும் (புறம். 328:4) குவளையும் (நற். 160:8) பல குளிர் பூக்கள் மலர்தலும் (அகம். 360:1) நிகழ்ந்தன. இவை வேரூன்றி நீர் மூழ்கு நிலையிலும் இருந்தன எனலாம்.

மிதக்கும் நிலை

நீர் நிலையின் ஆழம் 2 அல்லது 5 அடியாகக் குறையும்போது நீரில் மிதக்கும் தாவரங்கள் படிப்படியாகத் தோன்றத் தொடங்கு கின்றன. (பழனியப்பன், எஸ், சூழ்நிலையியல், ப. 63). செந்தாமரை, ஆம்பல் (பதி. 23:23-24) முதலான பூத்தாவரங்கள் பல நீர் துறையில் மிகுந்து இருந்தமை (கலி. 33:2) அறியத்தக்கன. இத்தாவரங்கட்கு அகன்ற இலைகள் இருப்பதால் நீரினுள் செல்லும் ஒளியை தடை செய்வதால் நீர் மூழ்கு தாவரங்கட்கு ஒளி கிடைப்பது குறைந்து அவை படிப்படியாக மடியத் தொடங்குகின்றன. இதனால் மட்கின் அளவு அதிகமாகி நீர்நிலையின் அடிப்பகுதி உயர்த்தப்படுகிறது. மழைநீரால் வரும் தூசுகளால் மணல் அப்படியே தங்குவதால் நீர் நிலை ஆழம் குறைகிறது. இதனால் அவ்விடத்தில் சதுப்பு நிலம் தோன்றுகிறது. இப்புதிய சூழ்நிலை மிதக்கும் தாவரங்கள் வாழத் தகுதியற்றதாக்குகிறது (பழனியப்பன், எஸ். சூழ்நிலையியல், ப. 63).

நீர்வாழ்த் தாவரங்கள்

நீர் அதிகம் கொண்ட நீர் நிலைகளில் அல்லது ஈரம் நிறைந்த நிலப்பகுதியில் வளரும் தாவரங்கள் நீர்வாழ்த் தாவரங்களாகும். உலகு பெரும்பங்கு நீர்ச் சூழ்ந்ததாக உள்ளது (பதி. 14:9). நீர்தான் அனைத்து உயிரையும் காக்கிறது (புறம். 1:11-12). அருவி, ஆறு, காட்டாறு ஊருண்கேணி, கடல், குளம், கிணறு என நீர் நிலைகள் இடம் பெறுகின்றன. (புறம். முன்னுரை உ.வே.சா. பக்கம் அசா தமிழ் எண்கள்). நீர் வாழ்த் தாவரங்களாகப் பல காட்டப்படு கின்றன. கழி சூழ்ந்து தோட்டமும் (பட். 32) விளை கழனியும் (புறம். 396:1-3) விளங்கின. பெரிய கழியில் வளமுடைய இதழ்கள் குவிந்த நீல மலரும் (கலி. 21:5) கருங்குவளையும் (குறு. 144:1) பிற மலர்களும் (கலி. 148:1) மடுவில் நீர் முள்ளியும் நிறைந்திருந்தன (அகம். 236:1-2). பொய்கையில் தீப்போன்ற பூக்கள் செந்நிறமாயக் காட்சியளித்தன (புறம். 249:3). முள்கொம்புடையதாக ஈங்கை இருந்தது (மது. 654-655). பொய்கையில் குளிர்ந்த பூக்களும் (அகம்.

360:1) நெய்தல் மலரும் (அகம். 27:13) திகழ்ந்தன. அழகிய நீர் நிலையில் பஞ்சாக் கோரையும் (குறு. 276:2) செண்பகக் கோரையும் இருந்தன (புறம். 334:1). அரலைச் குன்றின் (குற 59:2-3) சுனையில் குவளை வளர்ந்து செழித்திருந்தன (அகம் 30:11-12). புறம் 132:4-5, ஐங் 219:1-2). நீரிலாச் சுனையில் இலைகளோடு கூடிய மலர்கள் வாடிக் கிடந்தன (கலி. 3:8-9). கடற் துறையிடத்தில் அடப்பங் கொடிகளும் (குறு. 349:1-2) நீர் முள்ளியும் (ஐங். 177:1) தாழையும் (நற். 299:2-4). குறு. 303:2) வளர்ந்திருந்தன. ஞாழல் தனக்குத் தேவையான நீரைக் கடற்துறை இடத்தில் பெற்றது (பதி. 30:81) மிகுந்த வயலிடத்தில் தாமரையுடன் வயலைக் கொடியிருந்தது (அகம். 6:16-17). நீரில் தோன்றிய வெள்ளாம்பலும் (குறு. 293:5) ஆழ் நீரில் இலையுடன் கூடிய ஆம்பலும் திகழ்ந்தன (குறு. 352:1). யானையின் செவிபோன்ற இலையையுடைய அகன்ற தாமரை (புறம். 176:6) நீர்ச்சேற்றிலும் (புறம். 27:1) குளத்திலும் (புறம். 28:12) ஆழ் நீரிடத்தும் (குறு. 352:1) இருந்தது. நீர் பரப்பில் பாசி யினையுடைய சேம்பு துளை பொருந்திய தண்டினையும் கொடு மடலில் (அகம். 336:1-5) முறம் (சுளகு) போன்ற இலையினையும் உடையது (கலி. 41:2). இது நீல மணிநிறத்தினது (கலி. 178:4) இத்தகைய நீர்நிலைத் தாவரங்கள் நுட்பமாக இன்றைய சூழ்நிலை யியல் வல்லுநர் அளவிற்கு வெளிப்படுத்தாவிடினும் சில வல்லுநரின் கூற்றிற்கேற்ப பொருந்திப் பார்க்க வல்லதாயுள்ளன.

நீர் மூழ்கி நிலம் பதியா தாவரமும் நீர் மூழ்கி நிலம் பதியும் தாவரமும் தெளிவாக அறிய முடியவில்லை. நிலம் பதிந்து நீரில் மிதக்கும் தாவரத்தை ஓரளவு நோக்க முடிகிறது. வாழும் நீர் நிலைகளில் நில மட்டத் தண்டின் உதவியால் பதிந்து காணப்படும் இத்தாவரங்களில் இலைகளும் மலர்களும் மிக நீண்ட காம்பு களை பெற்றிருக்கிறது. இதனால் இவ்வுறுப்புகள் மட்டும் நீரின் பரப்பில் மிதந்து காணப்படுகின்றன. நீலம் அல்லி ஆகிய மலர்கள் (கலி. 91:1-2) இவ்வகையில் வைத்து எண்ணத்தக்கன. நீர் நிலையில் உயர்ந்து நிற்கும் தாமரை இலையின் அடியிலும் மலர்ந்திருக்கும் (கலி 84:10).

பருவச் சூழலில் தாவரங்கள்

பருவச் சூழலுக்கேற்பத் தாவரங்கள் வளர்ச்சியும் மாற்றமும் அடைகின்றன. திணைக்குரிய பொழுதுகளை முன்பனி (தொல். நூற்பா. 954) பின்பனி (தொல். நூற்பா. 956) எனத் தொல்காப்பியர் வகைப்படுத்துவர். இதனடிப்படையில் இலக்கியச் செய்திகள் இடம் பெறுகின்றன.

இமய மலையைத் தழுவுமளவு வானில் நிறைந்திருக்கும் பனி (அகம். 265:1-2) பாதி இரவில் மிகுதியாகப் செய்து (அகம். 125:11) வாடையை வெளிப்படுத்தியது (ஐங். 252:3-4) இத்தகைய பனியால் நனைந்த செருந்தியின் மொட்டு மலர்ந்தது (அகம். 150:8-12) முன்பனியில் தாமரை மலர் கருகாமலும் (அகம். 157:6-7) பயிற்றுச் செடியின் காய்கள் முற்றியும் (அகம். 339:4) விளங்கின. கழி முள்ளில் பூ பனிக் காற்றால் சிதறியது (குறு. 51:1-2) உழுந்தின் அகன்ற இலைகள் அனைத்தும் சிதறின (நற். 89:5-6).

விடியற் காலத்தில் குறிஞ்சி (நற். 301:1-2) பொன்னை (நற். 384:7) தாமரை (நற். 230:3-4) ஆகியன மலர்ந்தன. மாலையில் பிடவு மலர்ந்தது. (அகம். 183:10-11). நீலமலர் இதழ் குவிந்தது (அகம். 260:10) இருள் புலர் விடியலில் குளிர் பொருந்திய பனிக் கட்டி யுடன் பெருமழையை வானம் சொரிந்தது (அகம். 304:3-5). மழையால் இயற்கை வளம் பெருகின (அகம். 235:4-16) சூளொடு வாடிய நெல் நடு இரவில் மழை பெற்றது. (நற். 22:10) மழை பெய்தபின் புகைபோலப் பனித்துளிகள் பூக்களினுள் நிறைந்தன (அகம். 293:1-2). மழைக் காலத்தில் பிச்சிப்பூ (அகம். 295:16) நுணாப்பூ (அகம். 345:15-16) கொத்து மலர்கள் (கலி. 67:1-2) பூத்துப் பொலிவடைந்தன. இத்தகைய செய்திகள் தாவரச் சூழலியலை நுட்பமாகப் பருவ நோக்கிச் வெளிப்படுத்துகின்றன.

நிறைவுரை

பண்டைய இலக்கியத்தில் சூழலியல் தாவர வழிமுறை வளர்ச்சி பற்றிய செய்திகள் மிக சிறப்பாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளன. அவை 1. நீர் நிலையில் தாவர வழிமுறை வளர்ச்சி, 2. வேரூன்றிய நீர் மூழ்கு நிலை, 3. மிதக்கும் நிலை, 4. புதர் புல்வெளி நிலை, 5. மரக்கூட்ட நிலை, 6. உச்சிநிலைக் காடுகள், 7. நீர்வாழத் தாவரங்கள், 8. வறண்டநிலைத் தாவரங்கள், 9. தேவைக்கு மேல் ஒளி, 9. நீராழத்திலிருத்தல், 10. வளி மண்டலத்தில் குறைவான ஈரப்பசை, 11. வறண்ட நிலத் தாவரங்கள், 12. வறன்நிலை வழி முறை வளர்ச்சி எனும் தலைப்புகளில் விரிவாக செய்திகள் எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்தல் வேண்டும். தாவர வளர்ச்சியின் வழிமுறைகளில் நீர், வெப்பம், தாவரத்தின் வகை என்பன முக்கிய அங்கம் வகித்தன. இன்னும் நுட்பமாகவும் விரிவாகவும் மேலாய்வு செய்வதற்குரிய களனாகச் சங்க இலக்கியம் திகழ்கிறது.

குறியீட்டியல் (Symbolism)

ஓ. பாலகிருஷ்ணன்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ், கலை அறிவியல் கல்லூரி
பேரூர், கோயம்புத்தூர் - 10

குறியீடு என்பதனை விளக்கிக் கொள்ளும் முன்னர் அடையாளம் (Sign) என்பதனை ஓரளவேனும் விளங்கிக் கொள்ள வேண்டும். பழங்காலத்தில் ஆநிரை கவர்தல் என்ற வெட்சிக்கு அடையாளமாக வெட்சிப்பூ பயன்பட்டது; வெற்றி என்பதற்கு வாகைப்பூ அடையாளமாக நிற்கிறது. சமய உலகில் புத்த மதத்தில் தர்மம் என்பதற்கு உருளும் சக்கரம் அடையாளமாக நிற்கிறது. அரசியலில் போர்க்களத்தில் சமாதானத்திற்குப் புறாவும், வெள்ளைக் கொடியும் அடையாளங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு ஒரு செயலையோ, ஒரு கருத்தினையோ, ஒரு சிந்தனையையோ உணர்த்தப் பிறிது ஒன்றைப் பயன்படுத்தும்போது அப்பிறிதொன்று அடையாளம் எனப்படுகிறது. இவ்வாறு அடையாளமாக அமைகின்ற ஒன்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சமுதாயத்தில் தொடர்ந்து பயன்படுத்தப் படுமானால் அவ்வடையாளம் குறியீடு என்ற நிலையை அடைகிறது.

ஒரு பண்பாட்டு உணர்வினை - அறச்சிந்தனையை ஆன்மீக எண்ணங்களை ஆற்றல்பட உணர்த்த இயற்கையில் உள்ள ஒரு பொருளையோ, ஏதேனும் ஒரு பருப்பொருளையோ பயன்படுத்தும் போது இந்த இயற்கைப் பொருள் அல்லது பருப்பொருள் குறியீடு என்று குறிக்கப்படுகின்றது.

சான்றாக, சிங்கம் மேலை நாடுகளில் துணிவிற்குக் குறியீடாகவும், அடக்கத்திற்கு ஆடு குறியீடாகவும் அமைந்துள்ளது. சைவ சமய உலகில் திரிபுண்டரம் எனும் திருநீறு அணிதல் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றினைச் சாம்பலாக்குதல் என்பதற்குக் குறியீடாக உள்ளது. இவ்வாறு ஒவ்வொரு சமயத்திலும் சடங்குகளை (Rituals), ஒவ்வொரு சமயக் கருத்தினைக் குறியீடு என்பர். இந்தியாவில் பொறுமைக்குக் குறியீடாகப் பசு அமைகிறது.

சில குறியீடுகட்கும் அவை குறிக்கும் பொருளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதுண்டு. சான்றாக, பூமி பொறுமைக்கும்,

தண்ணிலவு அருளுக்கும் அமையும் பொழுது அவற்றுக்கிடையே உள்ள தொடர்பு ஓரளவு தெளிவாகவே விளங்குகிறது. ஆனால், சிலவற்றிற்கிடையில் இத்தகைய தொடர்பினைக் காண்பது அரிது. சான்றாக, வெற்றிக்கு அடையாளப் பூவாக அமைந்த வாகைக்கும், அந்த வெற்றிக்குமிடையே நேரடித் தொடர்பு ஒன்றினையும் காணமுடியாது. இங்கு அதனை ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு என்றே விளக்க வேண்டியுள்ளது. இவ்வாறு குறியீடு என்பது இயற்கையாய் அமைந்து கிடக்கின்ற தொடர்பால் அமைகின்ற வகையில் ஒரு பிரிவாகவும், மக்களால் ஏற்படுத்திக் கொள்கின்ற வகை வேறு வகையாகவும் குறியீடுகள் அமைந்துள்ளன.

குறியீடு இலக்கியங்களில் நூல் முழுமைக்கும் அமைவதுண்டு, அவ்வாறன்றி நூலில் பகுதிகளில் மட்டும் அமைவதுண்டு. சான்றாக, ஜான் பனியன் (John Bunyan) என்பாரின் புனித யாத்திரை (Pilgrims Progress) என்ற நூல் வாழ்க்கையின் வாயிலாக மனிதன் அடைகின்ற ஆன்ம முன்னேற்றத்திற்கு ஒரு குறியீடாக நூல் முழுமையும் அமைந்துள்ளது என்பர். ''போபீடிக்'' என்ற அமெரிக்க நாவலில் வருகின்ற திமிங்கலம் வாழ்க்கைப் போராட்டத்திலுள்ள இராட்சசத் தன்மைக்கு நூல் முழுமையும் குறியீடாக அமைகின்றது. அசோக மித்திரன் எழுதிய 'தண்ணீர்' என்ற நாவலில் நீர் என்பது நூல் முழுமைக்கும் குறியீடாக உள்ளது. நூல் முழுதும் அமையாது சில சில பகுதிக்கு மட்டும் குறியீடு அமைவதும் உண்டு.

தமிழில் சிறப்பாகச் சங்க கால அகப்பாடல்களில் தூய்மையான பெருங்கற்பு என்னும் பண்பிற்கு முல்லைப்பூ குறியீடாக அமைவதனையும் இங்குச் சுட்டுதல் வேண்டும். மருதத்திணைப் பாடல்களில் வரும் Allegory எனப்படும் உள்ளுறை உவமத்தில் இடம்பெற்றுள்ள எருமை, தாமரை, மீன் போன்றவை பகுதிக் குறியீடுகளாக அமைந்துள்ளதனைச் சுட்டுதல் வேண்டும். எனவே, பொதுவாக ஒன்றைப் பிறிதொன்றின் வாயிலாகக் குறிக்கும் பொழுது அதனைக் குறியீடு என்கிறோம் என விளக்கலாம். இவ்வாறு மிகப் பொதுவான விளக்கம் ஒன்று தர முடியுமே தவிர மிகத் தெளிவான வரையறுக்கப்பட்ட முடிவான ஒரு விளக்கம் கூறுதல் கடினமாகும்.

ஒன்றுக்குப் பிறிதொன்று என்பதனால் ஒப்புமையையும் குறியீடே எனக் கருதிவிடக் கூடாது. கயல்கண், மதிமுகம் போன்ற தொடர்களில் கயல், மதி ஆகியவை கண், முகம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப் பட்டிருப்பதால் அவைகளும் குறியீடே எனாதவாறு தவறான எண்ணத்திற்கு மேற்கூறிய பொது விளக்கம் இடம் தந்து விடுகிறது. எனவே, ஒப்புமை அல்லது உவமை என்பது குறியீடு

அன்று எனத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு பிரெஞ்சுப் புலவர் என்னுடைய பாடல்களில் அன்ன, போல போன்ற உவம உருபுகளை வெளியேற்றி விட்டேன் என்கிறார்.

இவ்வாறு உவம உருபுகளை நீக்கி உவமப் பொருளையும் குறிப்பிடாமல் உவமைகளையே பொருளாக்கும்பொழுது அது குறியீட்டு நிலையை அடைந்து விடுகிறது எனக் குறியீட்டாளர்கள் எண்ணுகின்றனர். எண்ணங்களையோ, உணர்ச்சிகளையோ நேரிடையாக விளக்காமல் அல்லது மதிமுகம் என்பன போன்ற வற்றில் அமைந்து விளங்கும் மதி போன்றவற்றை உவமையாக அமைத்துக் கூறாமல் எண்ணங்களும் உணர்ச்சிகளும் யாவை என்பதனைக் குறிப்பாக உணர்த்தும்போது படிப்போரின் மனத்தில் அந்த உணர்ச்சிகளும் எண்ணங்களும் தாமே எழுகின்ற வகையில் பொருள்களைப் பயன்படுத்தும் பொழுது ஏற்படுகின்ற ஒன்றே குறியீடு எனக் குறியீட்டாளர்கள் கருதுகின்றனர்.

குறியீட்டியல் வகைகள்

சில குறிப்பிட்ட எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் புலவர்கள் குறியீடு அமைக்கும் பொழுது அக்குறியீடுகள் *Human Symbolism* என்ற வகையைச் சார்ந்தவை எனக் கருதப்படுகிறது. மனிதக் குறியீட்டியல் (*Human Symbolism*) என்ற இவ்வகை ஒவ்வொரு தனிப்பட்ட புலவனுக்குரியது எனலாம். அக்கினிக் குஞ்சு என்பது பாரதியின் குறியீடு. மேகம் என்பது ஷெல்லியின் குறியீடு. மன்மத அச்சகத்தின் மலிவுப் பதிப்புக்கள் என்பது காமராசனின் பரத்தைக்கான குறியீடு. இவ்வாறு அந்தந்த உணர்ச்சிகட்கும் எண்ணங்கட்கும் ஏற்ப ஒவ்வொரு கவிஞனுக்கும் தோன்றுகின்ற குறியீடுகளையே 'மனிதவியல் குறியீடு' என்கிறோம். மாங்காய்ப் பாலுண்டு மலை மேல் இருப்பவர்க்கு, குறியீடு அச்சித்தர் பிறிதொரு பொருள் உணர்த்த தானே வகுத்துக் கொண்ட மனிதவியல் குறியீடாகும்.

அடுத்த கடந்த நிலைக் குறியீட்டியல் எனப்படும் *Transcendental Symbolism* என்பது காணப்படுகின்ற இவ்வுலகம் ஒரு மாபெரும் இலட்சியத்தின் அரைகுறை வெளிப்பாடுதான் என்பதனை அடிப்படையாகக் கொண்டு குறியீடு அமையும்போது அதனைக் கடந்த நிலைக் குறியீடு சவக்குழியையும் தாண்டிச் சென்று ஆன்ம இரகசியங்களை அறிந்து கொள்ளத் துணைபுரிகின்றதோ அதனையே கவிதை எனல் வேண்டும் என்ற இப்போக்கினைத் தான் கடந்த நிலைக்குறியீட்டியல் என்கிறோம்.

இந்நோக்கில் கவிஞன் ஒரு ஞானி, தீர்க்கதரிசி என்ற நிலைக்கு உயர்த்தப்படுகிறான். சிலர் இவர்களை *"The Post Sear"* கவி ஞானிகள்

என்பர். காணப்படுகின்ற பொருளுக்கு அப்பாலே சென்று அவற்றுக் கெல்லாம் பொதுமையாக அமைந்த முதன்மத்தை (essence) உணர்ந்து அதை உணர்த்துவதே கவிதை என்பது கடந்த நிலைக் குறியீட்டாளரின் கொள்கை ஆகும். நடப்புலகை மிக நுட்பமான முறையில் மாற்றி அமைத்து அந்நடப்பியல் உலகிற்கு அப்பால் பொதிந்துள்ள உண்மையைக் காண்பிப்பதே கவிதையின் நோக்கமாக இருக்கவேண்டும் என்பர்.

இதனை ஒரு சான்று மூலம் விளக்கலாம். பூ என்பதனை முல்லை, தாமரை, ரோசா எனத் தனித்தனிப் பூக்களைக் குறிப்பிட்டும் விளக்கலாம். இங்கு உண்மைப் பூவின்ன அப்படியே கூறுகின்றோம். அவ்வாறன்றி எந்த ஒரு குறிப்பிட்ட பூவிற்கும் உட்படாது அனைத்துப் பூக்களுக்கும் ஆதாரமான ஒன்றிற்கு உருவம் கொடுப்பதே கவிதை என விளக்குவர். இங்குப் பூ எனப்படுவது வெளிப் பூவன்று; உட்பூவாகும். உண்மைப் பூவினை Real Flower என்போமானால், உட்பூவினை essential flower எனல் வேண்டும். அதாவது பூவின் வடிவமல்ல இங்குக் குறிக்கப்படுவது. பூவிஸம் எனப்படும் essence of flower என்ற பூவிற்குரிய பொதுப் பண்புகளே குறிப்பிடப்படு கின்றன. நம்மைச் சூழ்ந்து இருக்கின்ற நடப்பியல் உலகின் பாதிப்புக்கள் எவையுமின்றி அந்த நடப்பியல் உலகின் தூய்மையான முதன்மங்களைக் காட்டுவதுதான் கவிதையின் முடிந்த நோக்க மாகும் எனக் கடந்த நிலைக் குறியீட்டியலாளர் குறிப்பர்.

கவிதையும் இசையும்

கவிதையைச் சொல்லோவியம், சொற்சித்திரம் என்பர். இங்குக் கவிதை ஓவியத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறது. மேலும், சிற்பத்தோடு கவிதை தொடர்புபடுத்தப் படுவதுண்டு. இவற்றுக்கு மாறாகக் குறியீட்டியலில் கவிதை இசைநிலையை அடைதல் வேண்டும் எனப் புதிய தொடர்பு காட்டப்படுகிறது. பிற கலைகள் அனைத்தையும்விட இசையில்தான் குறிப்புத் திறன் (Suggestivity) ஓர் இலட்சிய அளவில் அமைந்துள்ளது. குறியீட்டியலில் சொற் களின் வாயிலாகக் குறிப்புத் திறனை இலட்சிய அளவிற்குக் கொண்டு செல்லல் வேண்டுமென்ற வேட்கையால் உந்தப் பெற்றமைந்த துடிப்பைக் காணலாம்.

இவ்வாறு குறியீட்டியலாளர்கள் இசைநிலையை அடைய முயல்வதால் அவர்கள் மரபு யாப்புக்களோடு ஒத்துச் செல்வதனை மறுக்க வேண்டியுள்ளது. இதனால் தொடக்கக் காலம் முதற்கொண்டே யாப்பில் மரபு விதிகளை மீறத் தொடங்குவதனைக் காணலாம். தொடக்கக் காலத்தில் Fread verse என்பதிலிருந்து Free verse

என்பதற்குச் சென்றனர். இம்முயற்சியின் மற்றொரு கிளையாக உரைப்பாட்டு அல்லது வசன கவிதை என்ற வடிவம் ஏற்பட்டது.

பரு உலகை விடுத்துக் கருத்தியல் உலகை அடையச் செய்கின்ற ஒரு முயற்சியாகவே குறியீட்டியலைக் கருதவேண்டும். மனிதன் அளாவுகின்ற ஒரு முழுமைபெற்ற வானுலகைக் காண்பதே கவிஞனின் கடமை என்ற அடிப்படையும் குறியீட்டியலில் இடம் பெற்றுள்ளது. இதன் காரணமாக நடப்புலகின் மேற்போர்வைக் கப்பாலே செல்லப் படிமப் பின்னல்களை அமைத்தல் என்பது ஓர் உத்தியாகவே பயன்படுத்தப்படுகிறது. அதாவது கவிதையில் பொருளுக்கு இந்தப் படிமப் பின்னல்களினால் ஒரு மூன்றாவது பரிமானம் (Third dimension) ஏற்படுகிறது. இந்த மூன்றாவது பரிமான உணர்வுக்கு எழுத்துக்களை இசைந்த எழுத்துக்களாக அமைத்தல் வேண்டும்.

சான்றாக, வாலரீ (Valery) என்ற கவிஞர் ஓரிடத்தில் 'இந்த மெய்யொலி இசை ஒலிக்கும், பொருண்மைக்குமிடையே தவழ்கிறது' என்றும், 'கவிதையில் ஒரு நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்த மரபுவழிப்பட்ட யாப்பை விடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்பர். இவ்வாறு குறியீட்டியல் இயக்கத்தில் சிந்தனைக்கு ஒரு வெளி வடிவம் தரும் முயற்சி மேற்கூறியவாறு கவிதைக் கொள்கை களை உருவாக்கும் நிலையை ஏற்படுத்தியது. இவ்வியக்கம் ஐரோப்பாவில் பல நாடுகளில் காணப்பட்டாலும் அது நன்கு செழித்து வளர்ந்தது பிரான்சில்தான். கவிதை என்ற இலக்கிய வடிவில்தான் குறியீட்டியல் பேராற்றலோடு விளங்கியது. பிரான்சில் குறியீட்டியல் கவிஞர்களாகப் பாடிலேர் (Baudelaire), வெர்லைன் (Verlaine), ரிம்பர்டு (Rimbard), மேலர்மே (Mallarme), வாலரீ (ValerY) ஆகியோரைக் குறிப்பிடலாம்.

நவீனத்துவத்தின் தேக்கமும் மீட்பும்

ஜி. புனிதா
தெ.தி. இந்துக் கல்லூரி
நாகர்கோவில்

இலக்கியப் போக்கும் இலக்கிய மரபும்

இலக்கிய போக்கும் இலக்கிய மரபும் இறுகிய பிணைப்பினைக் கொண்டவை. இலக்கியப் போக்குகள் இலக்கிய மரபினை நிலைக் களனாகக் கொண்டே பிறப்பெடுக்கின்றன. இயக்கம் கொள்கின்றன. இலக்கிய மரபின் வளர்ச்சி இலக்கியப் போக்குகளின் தோற்றத் தினால்தான் நிகழ்வடிவமாகிறது. மரபில் ஒரே இலக்கியப் போக்கே தொடர்ந்து இயங்கக் கூடுமானால் மரபு வளர்ச்சியற்றதாக மாறக் கூடும். எனவே குறிப்பிட்ட இலக்கிய போக்கின் மறைவும் புதிய இலக்கியப் போக்கின் தோற்றமும் மரபின் வளர்ச்சியைக் கணிப்பதற்கு இன்றியமையாதன.

தற்கால தமிழ் இலக்கிய மரபின் முக்கியப் போக்குகள்

தற்கால தமிழ் இலக்கிய மரபின் முக்கியப் போக்குகள் அனைத்தும் ஆங்கில கலைச்சொற்களால் அல்லது அதன் தமிழ் மொழிபெயர்ப்பினால் குறிக்கப்படுகின்றன. இதனால் இவ்விலக்கியப் போக்குகள் அனைத்தும் வெளியில் இருந்து தமிழுக்கு இறக்குமதி செய்யப்பட்டன என தவறாகக் கருதிவிடக் கூடாது. உண்மையில் இவ்விலக்கியப் போக்குகள் உலக மொழிகள் அனைத்திலும் வெவ்வேறு கால அளவில் ஆனால் குறிப்பிட்ட வரிசையில் செல்வாக்குப் பெற்றுள்ளன. ஒரு மொழி தகுந்த காரணம் இன்றி எதையும் உள்வாங்கிக் கொள்ளாது, குறிப்பிட்ட காலச் சூழல் நிலவும்போது, குறிப்பிட்ட இலக்கியப் போக்கின் தோற்றம் தவிர்க்க இயலாததாகும்.

உணர்ச்சி இயல் *(Romantism)*, யதார்த்தம் *(Realism)*, நவீனத்துவம் *(Modernism)* ஆகியன தற்கால தமிழிலக்கியத்தின் மூன்று பெரும் இலக்கியப் போக்குகளாகக் குறிப்பிடப்படுகின்றன. இவற்றை சார்ந்த சிறு இலக்கியப் போக்குகளும் உண்டு. குறிப்பாக வட்டார இலக்கியப் போக்கு *(Regionalism)*, விமர்சன யதார்த்த போக்கு *(Critical Realism)*, சோஷியல் யதார்த்தம் *(Socialist Realism)* ஆகிய

வற்றை யதார்த்தம் என்ற பெரும் இலக்கியப் போக்கினைச் சார்ந்த சிறு இலக்கியப் போக்குகளாகக் குறிப்பிட வேண்டும்.

உணர்ச்சி இயல் போக்கு (Romantism) படைப்பாளியின் உணர்வுக்கு முதன்மை அளித்தது. படைப்பில் உணர்ச்சிக் கொந்தளிப்பை மொழிப்படுத்துவதில்தான் இது கவனம் செலுத்தியது. தற்காலத் தமிழில் முதல் இலக்கியப் போக்காக இதனைக் குறிப்பிட வேண்டும். பாரதி, பாரதிதாசன், கவிமணி பாடல்கள் இப்போக்கினைச் சார்ந்தவை. ஆரம்பகால தமிழ்ப் புனை கவிதை வடிவங்களும் இப்போக்கினைச் சார்ந்தவைதான். வ.வே.சு. ஐயரின் சிறுகதைகளையும் மாதவையா, இராஜம் ஐயரின் நாவல்களையும் இப்போக்கினைச் சார்ந்தனவாகவே இனம் காண வேண்டும். இலட்சிய போக்கும் (Idealism) உணர்ச்சி யியலும் மிக மிக நெருங்கிய உறவினைக் கொண்டவை.

முப்பதுகளின் முதற் பகுதியில் யதார்த்தம் தமிழில் தோற்றம் கொண்டது. யதார்த்தப் போக்கு படைப்பாளியின் உணர்வை ஒதுக்கியது, அவ்வுணர்வுக்குக் காரணமான சமூக இயக்கம் மீது கவனம் செலுத்தியது, இங்குப் படைப்பாளியைவிடச் சமூகம் முதன்மை பெறுகிறது. யதார்த்தம் பௌதீக வாதத்தில் இருந்து தோற்றம் கொண்டது. எனவே வாழ்வில் தக்கரீதியான ஒழுங்கமைவு யதார்த்தத்தில் முக்கியத்துவம் பெற்றது. எழுத்தில் புறவயமாகத் தோற்றம் கொள்ளும் சமூக உண்மையே யதார்த்தம் எனப்பட்டது. உணர்ச்சியியலின் முன்னுரிமை தரப்பட்ட படைப்பாளியின் உணர்ச்சி யதார்த்தத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டது. உணர்ச்சியில் பொருட் படுத்தாத சமூக உண்மை யதார்த்தத்தில் முன்னுரிமைப் பெற்றது. முப்பதுகளில் தோற்றம் கொண்ட யதார்த்தம் அறுபதுகளின் பிற்பகுதி வரை தன்னிகரற்ற இலக்கியப் போக்காகத் தமிழில் ஆதிக்கம் செலுத்தியது. யதார்த்தம் புதுமைப் பித்தனின் சிறுகதைகளினூடாகத் தமிழில் வந்தடைந்தது. மணிக்கொடி மரபின் சாதனையாளர்கள் யதார்த்தவாதிகளே. கு, அழகிரிசாமி, தொ.மு.சி. ரகுநாதன், தி. ஜானகிராமன் போன்றோரின் சிறுகதைகளும், ஜெயகாந்தன் சிறுகதைகளும் யதார்த்தப் படைப்புகளே.

அறுபதுகளின் இறுதியில் படைப்புக்கள் முன் வைத்த சமூக தோற்றத்திற்கும் சமூக உண்மைக்குமான இடைவெளி கணக்கில் கொள்ளப்பட்டது. எழுத்தில் தோற்றம் கொள்ளும் யதார்த்தம் வாழ்வின் யதார்த்தத்தை உணர்த்தவில்லை எனப் புரிந்து கொள்ளப் பட்டது. படைப்பாளியின் உணர்வின் ஊடாகப் பதிவு கொள்ளும் காலமே எழுத்தில் உணர்த்தப்படுவதாக வாதிக்கப்பட்டது. இங்கு நவீனத்துவம் தோற்றம் கொண்டது.

யதார்த்தம் புறக்கணித்த படைப்பாளி நவீனத்துவத்தில் மீண்டும் முன்னுரிமை பெற்றான் ஏனெனில் படைப்பில் பதிவு கொண்ட காலம் அவனுடைய உணர்வின் ஊடாகப் பதிவு கொண்ட காலமே. யதார்த்தம் சமூக உண்மைக்கு முக்கியத்துவம் தந்தபோது நவீனத்துவம் தனி மனித உணர்வுக்கு முக்கியத்துவம் தந்தது. பௌதீக வாதத்தில் இருந்து யதார்த்தம் தோற்றம் கொண்டது போல இருத்தலியத்தில் நவீனத்துவம் தோற்றம் கொண்டது. இருத்தலியம் இரு உலகப் போர்களுக்கு இடையில் தோற்றம் கொண்ட தத்துவம். போர்க்காலச் சூழலில் மனித மதிப்பீடுகள் அனைத்தும் விழுந்து நொறுங்கின. மனிதன் மனிதனாக வாழ வேண்டிய நெருக்குதல் தோற்றம் கொண்டது. மனிதனின் இருப்பே பிரச்சனைக் குள்ளாகியது. நம்பிக்கை இழப்பு இருத்தலியத்தின் ஊற்றுகண்.

விடுதலையை ஒட்டிய காலப்பகுதியில் காந்தியின் கோட்பாடுகள் புதிய வாழ்வினைத் தரக்கூடும் என்ற நம்பிக்கை இந்தியத் துணைக் கண்ட மனிதர்களுக்கு இருந்தது. ஆனால் நாட்டுப் பிரிவினையை ஒட்டிய மதக் கலவரங்களும் இந்தியக் குடியரசில் காந்தியப் பொருளாதாரக் கொள்கைகள் பின் ஒதுக்கப்பட்டு நேருவின் புது பொருளாதாரக் கொள்கைகள் புகுத்தப்பட்டதும், பின் அதன் வீழ்ச்சியும் நம்பிக்கை இழப்பினைத் தோற்றுவித்தன. அறுபதுகளின் பிற்பகுதியிலும் எழுபதுகளின் ஆரம்பத்திலும் இந்திய மொழிகள் அனைத்திலும் நவீனத்துவம் தோற்றம் கொண்டது.

நவீனத்துவமும் சிறுகதைகளின் ஊடாகவே தமிழை வந்தடைந்தது. புதுமைப்பித்தனின் சிறுகதைகளிலே நவீனத்துவத்தின் கூறுகள் உண்டு என வாதிப்பவர்கள் தமிழில் இருக்கின்றனர். ஆங்கில நவீனத்துவப் படைப்பாளியான ஜாய்சை, புதுமைப்பித்தன் அறிந்திருந்தான். ச. கந்தசாமி, ந. முத்துசாமி, அசோகமித்திரன் போன்றோர்களின் படைப்புகளை நவீனத்துவத்தின் முன்னோடிப் படைப்புகளாகக் குறிப்பிட வேண்டும். இவர்கள் அனைவரும் சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' இதழோடு தொடர்பு கொண்ட வர்களே. செல்லப்பா ஓர் யதார்த்தவாதி. பார்வையில் முரண்பாடு ஏற்பட்டபோது, நடை, கசடதபற எனப் புதுப்பாதை வகுத்துக் கொண்டனர்.

தமிழ் நவீனத்துவம் இரு கிளைகளைக் கொண்டது. முதற்கிளை இருத்தியலாளர்களைக் கொண்டது. ச. கந்தசாமி, ந. முத்துசாமி, அசோகமித்திரன் போன்றோர்களின் பார்வையில் இருத்தியலின் சாயல் இயல்பாகவே இருந்தது. ஐம்பதுகளில் உலகளாவிய மார்க்சீய போக்கில் அதிருப்தி கொண்ட இளைஞர்களால் ஆனது இரண்டாவது கிளை. தமிழில் சுந்தர ராமசாமியையும் நாகராசனையும் இக்கிளையைச்

சார்ந்தவர்களாகக் கொள்ள வேண்டும். முன்னோர்கள் வகுத்துத் தந்த பாதையில் இவர்கள் வேகமாக முன்னேறினர். அடுத்த முப்பது ஆண்டுகளில் தமிழ்ச் சிறுகதை மரபு நவீனத்துவ மரபாகவே நிலை கொண்டது.

நவீனத்துவத்தின் எல்லைகள்

நவீனத்துவம், இலக்கியம் சமூக மாற்றத்திற்காக அல்ல என்பதில் உறுதியாக நிலை கொண்டது. இலக்கியத்தின் தனித்த இருப்பை உறுதி செய்தது. சமூக மாற்றத்திற்காக அல்ல என்னும் போது, இலக்கியத்தின் நோக்கம் குறித்த கேள்வி இயல்பாகவே எழுந்தது. நவீனத்துவம் மொழியில் அடையும் துல்லியமே இலக்கியத்தின் நோக்கம் என்றது. துல்லியம் வடிவத்தில், மொழியில். செறிவான மொழியினைத் தமிழ் நவீனத்துவம் தோற்றுவித்தது. இச்செறிவு என்பது ஒரு குறிப்பிட்ட எல்லை வரையிலுமே நியாயப்படுத்தக் கூடியது. எல்லையைக் கடக்கும்போது மொழி செயற்கையானதாக மாறுகிறது. செயற்கையான மொழி படைப்பு இயக்கத்திற்கு எதிரானது. இங்கு நவீனத்துவமும் தேக்கம் அடைகிறது.

நவீனத்துவத்தில் இருகிளையினைச் சார்ந்தவர்களுக்கும் சில பொது பண்புகள் உண்டு. நாட்டார் வழக்காறுகள் இவர்களுக்கு அன்னியமானது. ச. கந்தசாமி, ந. முத்துசாமி என்ற இரு முன்னோடி களின் படைப்புக்களில் நாட்டார் வழக்காறுகளின் தொடர்பு இருக்கத்தான் செய்தது. ஆனால் நவீனத்துவ மரபைத் தீர்மானித்த அசோகமித்திரன், நாகராஜன், சுந்தர ராமசாமி படைப்புகளில் இது அறவே இல்லை. ஒரு வகையில் தமிழ் நவீனத்துவமே நாட்டார் வழக்காறு என்ற வேரினைக் கொண்டிராதது.

தமிழ் நவீனத்துவப் படைப்பாளிகள் இரண்டாயிரம் ஆண்டு தமிழ் இலக்கிய மரபின் வாரிசுகள் தாங்கள் என்பதை மறந்திருந்தனர். இதன் விளைவு ஐரோப்பிய நவீனத்துவத்தின் முக்கிய கிளையான புதுசெவ்வியல் போக்கு தமிழில் நிலை கொள்ளவில்லை. செவ்வியல் மரபோடு தொடர்பின்மை வேருக்கான மற்றொரு வாய்ப்பினை இல்லாததாக்கியது. மொத்தத்தில் தமிழ் நவீனத்துவம் தமிழ் வேரினைக் கொண்டிருக்கவில்லை. வேரினைக் கொண்டிராத எதுவும் நிலைப்பதில்லை.

ஒரு வகையில் நவீனத்துவம் படைப்பாளியை முதன்மைப் படுத்துகிறது. படைப்பு முழுமையுமே அவனைக் கட்டமைக்கிறது. மக்களாட்சியில் பொது பண்பிற்கு இது எதிரிடையானது. வாசகனின் குரலும் முக்கியம்தான். பின்நவீனத்துவமே இத்தாக்கத்தினைத் தணிக்கக் கூடும்.

என்றாலும் தொண்ணூறுகளில் பின்நவீனத்துவம் பேரலையாகத் தமிழை வந்தடையவில்லை. நவீனத்துவம் புறக்கணித்த நாட்டார் வழக்காற்றைப் பின்நவீனத்துவம் முதன்மைப்படுத்துகிறது. நவீனத் துவத்தின் இடைவெளிகளைப் பின்நவீனத்துவம் நிரப்புகிறது. எனவே பின்நவீனத்துவத்தின் வருகை எதிர்பார்க்கக் கூடியதே.

ஆனால் தமிழில் நிகழ்ந்தது இதுவல்ல. மாறாக நவீனத்துவ மரபில் தோற்றம் கொண்ட ஜெயமோகன் மற்றும் கோணங்கியின் படைப்புகள் முன்னோடிகளின் படைப்புகளில் இருந்து வேறான பண்பினை இனம் காட்டுகின்றன. இவர்கள் படைப்புகள் மொழிச் செறிவை மட்டுமே பண்பாகக் கொண்டிருக்கவில்லை, செறிவையும் நெகிழ்வையும் கொண்டது. இருவர் படைப்பு களிலும் நாட்டார் வழக்காறுகள் ஊடாடுகின்றன. ஒரு வகையில் இருவரும் நாட்டார் வழக்காறுகளின் ஊடாகத் தங்கள் வேரினைத் தேடிக் கொண்டனர். குறிப்பாக ஜெயமோகனின் யட்சிக் கதை களைக் குறிப்பிட வேண்டும். காலம் காலமாகச் சொல்லப்பட்டு வந்த யட்சிக் கதைகள் ஜெயமோகனின் படைப்புகளில் புது பரிணாமம் கொள்கின்றன. நாட்டார் நம்பிக்கைகள் குறித்த போதுமான அறிவின்றிக் கோணங்கியின் படைப்பிற்குள் செல்வது சாத்தியமில்லை.

நவீனத்துவம் கோணங்கி, ஜெயமோகன் கதைகளின் ஊடாக புதுமுகம் கொள்கிறது. இப்புதிய முகத்திற்குக் காலத்தினை எதிர்கொள்ளும் சக்தி இருக்கிறது. எனவே நவீனத்துவம் இன்னும் காலநீட்டிப்புக் கொள்கிறது.

முடிவுரை

தற்காலத் தமிழிலக்கியம் உணர்ச்சியியல், யதார்த்தம், நவீனத்துவம் என்னும் மூன்று பெரும் இலக்கியப் போக்கினை உட்கொண்டது. ஒன்றின் இடைவெளியில் இருந்து மற்றொன்று தோற்றம் கொண்டுள்ளது. புதிய இலக்கியப் போக்கின் தோற்றம் மரபில் முக்கியத்துவம் பெறுகிறது. முப்பதுகளின் முதற் பகுதியும், அறுபதுகளின் இறுதியும், தொண்ணூறுகளும் இவ்வகையில் முக்கியத்துவம் வாய்ந்த காலப் பகுதிகள். தொண்ணூறுகளில் விதிவிலக்காகப் புதிய இலக்கியப் போக்கின் வருகைக்கு மாறாக ஏற்கனவே இருந்து வந்த இலக்கியப் போக்கே புதிய முகம் கொண்டு கால நீட்டிப்புப் பெற்றுள்ளது.

இணைவரைக் கோட்பாட்டு நோக்கில் 'பஞ்சும் பசியும்', 'கண்ணாடி' நாவல்கள் - ஒப்பீட்டாய்வு

மு. சுப்புலெட்சுமி

ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி

குற்றாலம் - 627 802

வாழ்க்கையில் தோன்றி வாழ்க்கையைச் சித்திரித்து வாழ்க்கைக்கு வழிகாட்டும் படைப்பிலக்கியம் நாவலாகும். படைப்பிலக்கியங்களை இலக்கியங்களுடனோ பிற கலைகளுடனோ ஒப்பிடுவதில் இரு கோட்பாடுகளை ஒப்பியல் அறிஞர் உருவாக்கியுள்ளார். ஒன்று இணைவரைக் கோட்பாடு. மற்றொன்று தாக்கக் கோட்பாடு. ஒப்பியல் ஆய்வுகொண்டு இலக்கிய ஆராய்ச்சியை ஒரு விஞ்ஞான பரிசோதனை போல நடத்தவும் அதனைச் சரிப்பார்க்கவும் மேலும் மேலும் திருத்தமுறச் செய்யவும் முடியும் என்று ஒப்பியல் அறிஞர் குறிப்பிடுவர். இவ்வகையில் படைப்பிலக்கியத்தை அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்வதற்குப் பயன்படும் ஓர் கோட்பாடு இணைவரைக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டின் நோக்கில் தமிழ் நாவலாசிரியர் ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' என்ற நாவலும் மலையாள நாவலாசிரியரின் 'கண்ணாடி' என்ற நாவலும் இங்கு ஒப்பாய்வு செய்யப்படுகின்றது. இடத்தாலும், மொழியாலும், பண்பாட்டாலும் வேறுப்பட்ட இருவர்தம் நாவல்கள் ஒப்பாய்விற்குரிய தளத்தைக் கொண்டுள்ளன.

இணைவரைக் கோட்பாடு விளக்கம்

இணைவரைக் கோட்பாடு என்பது, 'மற்ற எந்த விதத்திலும் பரஸ்பர தொடர்பொன்றும் இல்லாத நூல்களுக்கிடையே' நடையிலோ, அமைப்பிலோ, கருத்திலோ காணப்படுகின்ற ஒற்றுமை என ஆல்ரிட்ஜ் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்' (ஒப்பிலக்கியக் கொள்கைகள், ப. 67) தொடர்பில்லாத இலக்கியங்களை, மொழியாலும், இடத்தாலும் பிரிக்கப்பட்ட இரு இலக்கியங்களை, அறிமுகமில்லாத படைப்பாளர்களின் படைப்புக்களை ஒப்பிட்டு இணை நிலையைக் காணுவதை இணைவரைக் கோட்பாடு என்று அறிஞர் கூறுவர். இக்கோட்பாட்டின் மூலம் இலக்கியப் படைப்பின்

நோக்கத்தையும் படைப்பாளர்களின் உணர்வுகளையும் பொதுப் பண்புகளையும் அறியலாம்.

நாவலாசிரியர் ரகுநாதன் தமிழ்ப் படைப்புலகில் கதைகள், கவிதைகள், நாவல்கள், விமர்சனங்கள் எழுதித் தனக்கென ஒரு தனித்துவத்தை உருவாக்கிக் கொண்டவர். இவர் தமிழ் நாவல் உலகில் சமூகத்தைச் சித்தரிப்பதில் ஓர் யதார்த்தவாதி. இவ்வகையில் தமிழகத்தில் கைத்தறித் தொழிலாளர்கள் பட்ட துயரத்தைப் 'பஞ்சும் பசியும்' நாவலில் யதார்த்தமாகச் சித்தரிக்கின்றார்.

மலையாள நாவல் உலகில் ஆற்றல் மிகுந்த சக்தியாக விளங்கியவர் கேசவ்தேவ் ஆவார். 75 நாவல்கள், 15 சிறுகதைத் தொகுப்புக்கள், 11 நாடகங்கள், 7 ஓரங்க நாடகத் தொகுப்புக்கள், 4 சுயவரலாற்று நூல்கள் மற்றும் வசன கவிதைகள் எழுதி மலையாளப் படைப்புலகில் தடம் பதித்தவர். பாமர மக்களின் இலக்கிய ஆசிரியராக விளங்கிய இவர் தொழிலாளர் யூனியன் தலைவர்களுள் ஒருவராகவும் விளங்கினார் (கண்ணாடி, முன்னுரை. ப. 8) மலையாள மொழியிலுள்ள இவரது கண்ணாடி நாவலை பி. பாலகிருஷ்ணமேனன் தமிழாக்கம் செய்துள்ளார். கேரளத்து மண்ணில் கயிற்றுத் தொழிற்சாலையில் துன்புற்ற தொழிலாளர்களின் வாழ்க்கையைக் கண்ணாடி நாவல் பிரதிபலிக்கின்றது.

'பஞ்சும் பசியும்' நாவலில் கைத்தறித் தொழிலாளர்களின் கதையை அம்பாசமுத்திரம், மதுரை ஆகிய ஊர்களில் கதை நிகழ்வதாகக் காட்டப்பட்டுள்ளது. 'கண்ணாடி' நாவலில் ஆலப்புழை கதை நிகழ்விடமாக அமைகின்றது.

படைப்பு நோக்கமும் வரலாற்றுப் பின்னணியும்

இந்தியாவில் துணி நெசவு ஒரு குடிசைத் தொழில். நூற்புத் தொழிலும் நெசவுத் தொழிலும் இந்தியாவின் தேசியத் தொழில் போல அமைந்திருந்தது, இத்தொழிலில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆதிக்கம் புகுந்தது. இந்தியத் துணிகளின் மீது காப்பு வரிகள் விதித்து உற்பத்திப் பெருக்கத்தைத் தடை செய்தனர். நெசவுத் தொழில் நலிந்தது.

கேரளத்திலும் ஐரோப்பியர்கள்தான் கயிற்றுத் தொழிற்சாலைகளையும் தொடங்கினார்கள். இதைத் தொடர்ந்து ஊரில் சில முதலாளிகள் பெரிய தொழிற்சாலைகளைத் தொடங்கினார்கள். ஆனால் ஐரோப்பிய வணிகர்களோடு போட்டி போட முடியவில்லை. இருப்பினும் இவர்கள் முதலாளிகளாகவும் ஜமீன்தாரர்களாகவும் மாறிக் குடிசையில் வாழும் ஏழைக் குடியானவர்களைத்

தொழிலாளிகளாக மாற்றித் தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாகப் பிணித்து விடுகிறார்கள். இதுதான் இந்திய வரலாற்றுப் பின்னணி. இவ்வரலாற்றுப் பின்னணியில்தான் ரகுநாதன், கேசவ்தேவ் இருவரும் நாவல்களைப் படைக்கின்றனர்.

1953-ல் உருவாகிய பஞ்சம், பசியும் நாவல் எழுதப்பட்ட நோக்கத்தை ரகுநாதனே குறிப்பிடுகிறார். இதனை ''அன்று எல்லோரையும் போலவே மவுண்ட்ரோட் ரவுண்டானாவாயினும் மங்கம்மாள் சாலையாயினும் எந்தத் திக்கிலும் பஞ்சராகித் திரிந்த நெசவாளர்களையும் ஆணும், பெண்ணும், குழந்தை குட்டிகளும் அல்லோலகல்லோலப்பட்டுச் சீரழிவதைப் பார்த்தேன். எனது உள்ளமும் உதடும் துடித்தன அவற்றைச் சொல்லு சொல்லு என்று என் மனக்குறளி இடித்தது'' என்று கல்கியில் வெளிவந்த 'நாவல் பிறக்கின்றது' என்ற தொடரில் (13.8.1961) வெளிப்படுத்துகிறார் (பஞ்சும் பசியும், ப. 326).

''ஒரு தெளிவான சமூகக் குறிக்கோள் உள்ள எழுத்தாளன் நான். இந்த சமூக உறவுதான் என்னை எழுத வைக்கின்றது'' (கண்ணாடி, முன்னுரை ப. 9) என்ற குறிக்கோளுடைய கேசவ்தேவ் 1938 - 39-களில் ஆலப்புழையில் நிகழ்ந்த படுகொலைக்கு வழிவகுத்த நிகழ்ச்சித் தொடர்களைக் கண்ணாடி நாவலில் சித்தரித்துள்ளார்.

சமூகப் பாதிப்பு இரு படைப்பாளர்களின் மனதை உலுக்கி யிருக்கின்றது. எனவே படைப்பு நோக்கத்தில் இருவரிடமும் ஒற்றுமை காணப்படுகின்றது.

முதலாளிகளின் ஆணவமும், அடக்குமுறையும்

'பஞ்சும் பசியும்' நாவலில் காரை விட்டு தாதுலிங்க முதலியார், மைனர் முதலியார் குடும்பம் இரண்டும் முதலாளித்துவ ஆணவத்தை வெளிப்படுத்துகின்றது. தொழிலாளிகளோ வயிற்றுப்பசி, வாழ்க்கையின் தேவை இவற்றால் கடன் வாங்கியும், அடகு வைத்தும் வயிற்றைக் கழுவினார்கள். வீட்டுப் பெண்களோ பத்துப்பாத்திரம் தேய்ப்பதற்கு வீடு வீடாகச் சென்றனர். கைத்தறி ஜவுளித் தேக்கம், விற்பனை மந்தம், நூல் விலை உயர்வு, அரசின் ஜவுளிக் கொள்கை என அடுக்கடுக்கான துன்பங்களால் தொழிலாளர்கள் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருந்தார்கள். இத்தகைய தொழிலாளர்களின் துன்பங்களை நாவல் முழுமையும் சித்திரிக்கின்றார்.

கண்ணாடி நாவலில் வரீது முதலாளி, குஞ்சு சங்கரன் முதலாளி போன்றோரின் கூலிக்குறைப்பு, வேலை நீக்கம், தொழிலாளர்களின் குரல் வளையைப் பிடிக்கின்றது. இரு நாவல்களிலும் காட்டப்படுகின்ற

முதலாளிகளின் குடும்பம் நம் நாட்டின் முதலாளித்துவத்தின் எதிரொலி, தொழிலாளர்களின் அவலத்தை இரு நாவல்களுமே விரிவாக விளக்குகின்றன.

போராட்டத்தின் தொடக்கமும் முடிவும்

இரு நாவல்களிலும் போராட்டத்தின் தொடக்கம் தொழிலாளர் களின் மரணத்தில் தொடங்குகின்றது. அவலத்தின் உச்சநிலை தொழிலாளர்களை மரணத்திற்கே அழைத்துச் செல்கின்றது. பஞ்சும் பசியும் நாவலில் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த கைலாச முதலியார் கடன் தொல்லையால் தானே தனது முடிவைத் தேடிக் கொள்கிறார். 'கண்ணாடி' நாவலில் தொழிலாளி வேலாயுதனின் மரணமும், மயான ஊர்வலமும் போராட்ட விதையினைத் தூவுகின்றன. 'பஞ்சும் பசியும்' நாவலில் சங்கரும் 'கண்ணாடி' நாவலில் 'காற்று' என்ற பாத்திரமும் போராட்ட உணர்வினைத் தூண்டுகிறார்கள். 'பஞ்சும் பசியும்' நாவலில்,

''வேலை அல்லது நிவாரணம்
நூல்கொடு அல்லது சோறுகொடு
மக்கள் வயிற்றில் அடிக்காதே'' (பஞ்சும் பசியும், ப. 315)

என்ற தொழிலாளர்களின் கோஷங்கள் பல சிற்றாறுகளைத் தன்பால் இழுத்துச் செல்லும் ஜீவநதியைப் போல் ஒலித்து தொழிலாளர் பிரச்சனைகளுக்கு விடிவினைத் தேடித் தந்தது. ''அகில உலக உழைப்பாளர்களே! ஒன்று படுவீர்'' (கண்ணாடி) என்று கண்ணாடி நாவலில் 'காற்று' என்ற பாத்திரம் ஒலித்த கோஷம் வீடுகள், பாக்டரிகள், தெருமுனைகள் போன்ற எல்லா இடங்களிலும் ஒலித்தது. ஒன்றுபட்ட போராட்டம் ஒன்றே தீர்வு என்பதை இரு நாவல்களுமே வலியுறுத்துகின்றன.

பஞ்சும் பசியும் நாவலோடு கண்ணாடி நாவலை ஒப்பிடுகையில் போராட்டத்தின் முடிவைச் சித்தரிப்பதில் கேசவ்தேவ் சற்று வேறு படுகிறார். முதலாளிகளை எதிர்ப்பதில் மிகுந்த தீவிரம் காட்டுகின்றார். தொழிலாளர்களின் நலனைக் கருதாத முதலாளிகளின் தொழிற் சாலைகளைத் தீயிட்டுக் கொளுத்துவதாகக் கதை நிகழ்ச்சியை அமைத்துள்ளார். ''எதிர்ப்பின் தலைவர் கேசவ்தேவ் எதிர்த்தல், என்ன ஆனாலும் எதிர்த்தல் என்பது அவரது கொள்கை'' மேலும் கேசவ்தேவ் தொழிலாளர் யூனியன் தலைவர்களுள் ஒருவராக இருந்ததாலும் சோஷலிஸ்டு இயக்கங்களைத் தோற்றுவித்ததாலும், இலக்கியமல்ல வாழ்க்கைதான் தனது பிரச்சனை என்று கருதிய தாலும் போராட்ட முடிவினையும் தொழிலாளர் உணர்வுகளையும் யதார்த்தமாகச் சித்தரிக்கின்றார்.

இணைவரைக் கோட்பாட்டு நோக்கில் இரு நாவல்களின் பாத்திரப் படைப்பு, தொழிற்சங்கத் தலைவர்களின் உணர்வுச் சித்தரிப்பு, குடும்ப அமைப்பு, வாழ்க்கை முறை இவற்றிலும் ஒற்றுமைக் கூறுகள் உள்ளன. இவை இன்னும் விரிவான ஆய்வுக்கு உரியன.

முடிவுகள்

1. வர்க்கப் புரட்சியை இரு நாவல்களும் விரிவாகச் சித்தரிப்பதில் ஒன்றுபடுகின்றன.
2. முதலாளித்துவத்தை அடக்குவதற்குத் தொழிற்சங்கமும் தொழிலாளர் போராட்டமும் ஒன்றே தீர்வாக அமையும்.
3. காரணங்களும் காரியங்களும் மாறாதிருக்கும் வரை முடிவு களும் மாறாதிருக்கும் என்ற அறிவியல் வயப்பட்ட ஆய்வு நோக்கு இரு நாவல்களிலும் பொறுந்தியிருக்கின்றது.
4. நாடு, இனம், மொழி, பண்பாடு இவை வேறுபட்டிருப்பினும் சமூகப் பிரச்சனைகள் சமூகப் பொறுப்புடைய படைப்பாளர் களுக்குப் படைப்புத் தளத்தை உருவாக்குகின்றன.

துணைநூல்கள்

1. ஒப்பிலக்கியக் கொள்கைகள், டாக்டர் திருமலை சீனிவாசன் கமலாலயம், மதுரை, 1991.
2. ஒப்பிலக்கிய அறிமுகம், டாக்டர் தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், 1984.

ஜே.கே.வின் உலகியல் சிந்தனைகள்

த. செல்வராசு

ஜமால் முகம்மது கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 20

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''[1] என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலக ஒற்றுமை குறித்துச் சிந்தித்தவன் தமிழன். ஆனால் அறிவியல் சிந்தனைகள் ஆதிக்கம் செய்யும் இன்றைய உலகில் மனிதனை மனிதன் நேசிக்கும் மனிதநேயம் மறக்கப்பட்டு வருகின்றது. மனிதநேயம் மறக்கப்பட்டதற்குக் காரணம் ஒவ்வொரு மனிதனையும் ஆட்கொண்ட பொதுநலம் மறந்த சுயநலமே. சுயநலத்தில் திளைத்துப் போன மனிதன் தான், தன் குடும்பம், தன் ஊர், தன் மாநிலம், தன் நாடு, தன் ஜாதி, தன் மதம் என்ற வட்டத்துக்குள் தன்னை வரித்துக் கொண்டான். இதனைக் கண்ட புரட்சிக் கவிஞன்,

''அறிவை விரிவு செய்! அகண்ட மாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்து கொள்! உன்னைச் சங்கமமாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு''[2]

என்று உலகினோரை நோக்கி அறைகூவல் விடுத்தான்.

அறிவை விரிவுசெய்த மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் சங்கமமாகாது சண்டையிட்டு வருகின்றனர். மாநிலத்திற்கு மாநிலம், நாட்டுக்கு நாடு என்று ஒவ்வொரு நாளும் பிரச்சனைகளைப் பெரிதாக்கி ஒருவரை ஒருவர் அழித்தும், அழிந்து கொண்டும் வருகின்றனர். இந்த மனிதகுல அழிவைத் தடுத்து நிறுத்திடச் சிந்தித்த சிந்தனையாளன் ஜே.கே. அவற்றை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

''அன்னிபெசன்ட் அம்மையாரால் வளர்க்கப்பட்ட ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி என்பவரே ஜே.கே. என அழைக்கப்படுகின்றார். சித்தூர் மாவட்டத்தில் உள்ள மதனப்பள்ளி என்ற ஊரில் ஆசார சீலர்களாக வாழ்ந்து வந்த வளநாடு தெலுங்கு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். பள்ளி இறுதித் தேர்வில் மூன்று முறைகள் தோல்வி கண்ட இவர் பிற்காலத்தில் 60-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி

யுள்ளார். அவைகள் 40-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. இவர் 'Rishi Valley Foundation' என்ற பெயரில் நமது நாட்டில் மட்டுமல்லாது அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் எட்டு பள்ளிகளை உருவாக்கி யுள்ளார். அவைகள் இன்றும் சிறப்பாக இயங்கி வருகின்றன''[3] என்கிறார் பி.எஸ்.ஆர். ராவ்.

ஜே.கே. அவர்கள் தற்கால உலகியலைச் சுட்டிக்காட்டுமிடத்து, நாம் வாழ்ந்து வரும் உலகம் அழிந்து விடும் நிலையில் இருப்ப தாகவும் அந்த அழிவைத் தடுத்து நிறுத்த மனிதன் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் தன் சொற்பொழிவுகள் மூலம் எடுத்துரைக்கின்றார். அதாவது மனிதன் இந்த உலகம் உருவான நாளிலிருந்து இதுநாள் வரை பல கொடுமை களையும், துன்பங்களையும், துயரங்களையும், அநியாயங்களையும், அவமானங்களையும் அனுபவித்து வந்திருக்கின்றான். அவை மாற வேண்டுமானால் இதுநாள் வரையில் நாம் பின்பற்றி வந்த வாழ்க்கை முறைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அன்பும், அமைதியும், சகோதரத்துவமும் இந்த உலகத்தில் உருவாகி நிலைத்து நிற்க உதவும்படியான புதிய வாழ்க்கை முறைகளைக் கண்டுபிடித்து அதன்படி நாம் வாழவேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார்.

அன்பும் அமைதியும் இந்த உலகத்தில் உருவாகி நிலைத்து நிற்க வேண்டுமானால் காலங்காலமாக நம்மிடையே இருந்து வரும் மதப்பற்று, தேசப்பற்று, அரசியல் கொள்கைகளில் சில மாற்றங்களை உருவாக்கி அதனை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்றும் எடுத்துரைக்கின்றார்.

மதப்பற்று

மதங்கள் மனித இனத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து வைத்திருக் கின்றன. மத குருமார்கள் 'அன்பு, சகோதரத்துவம், நட்பு' என்று மேடைகளில் மட்டும் முழங்கி வருகிறார்கள். ஆனால் உண்மையில், ''எங்கள் மதம்தான் மற்ற மதங்களைவிடச் சிறந்தது. எங்களுடைய மதநூல்கள் மற்ற மதநூல்களைவிடச் சிறந்தவைகள். எங்கள் மதத்தைச் சேர்ந்த கடவுள்தான் சிறந்த கடவுள். எங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் தான் மனிதப் பண்புகளுடன் நடந்து கொள்கிறார்கள்''[4] என்பதைப் போன்று நினைத்து அவர்கள் தங்கள் மதங்களின் முக்கியத்துவத்தை நிலைநாட்டிக் கொள்ளத் தீவிரமாகச் செயல் பட்டு வருகிறார்கள். இதனைத் தான் கவிக்கோ,

''நமக்கிருப்பது போல்
மிருகங்களிடம் மதம் இல்லை

ஆனால்
மிருகங்களின்
கள்ளம் கபடமில்லாத
குணம் நம்மிடமில்லை''[5]

என மனிதனின் கபட உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். இந்தக் கபட நாடகத் தன்மையினை நாம் முதலில் மாற்ற வேண்டும் என்கிறார் ஜே.கே.

ஆன்மீகத்தை உண்மையாகக் கடைபிடித்து வருபவன் எந்த ஒரு மதத்துடனும் தன்னை இணைத்துக் கொள்ள மாட்டான் என்றும், அவன் எந்த ஒரு மதத்தினுடைய மதக் கோட்பாடுகளையும் பின்பற்ற மாட்டான் என்றும் ஜே.கே. சுட்டிக் காட்டுகின்றார். அதாவது இந்துமனம், முஸ்லிம் மனம், கிருத்துவ மனம், பௌத்த மனம், சமண மனம் என்று குறுகிய நோக்கங்களுடன் செயல்பட்டு வருபவர்கள் மனிதர்களிடையே பிரிவினைகளை உருவாக்கிச் சண்டைகளை மூட்டிவிட்டு நம்மிடையே துன்பங்களையும், துயரங்களையும் அதிகப்படுத்தி விடுவார்கள். எனவே ''எவனொருவன் மனித இனத்திற்குச் சிறிதுகூடத் துன்பம் தராமல் நன்மைகளை மட்டும் செய்து வருகின்றானோ அவனே உண்மையான மதப்பற்றுள்ளவன் என்று நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.''[6] அவர்களாலேயே அமைதி நிறைந்த உலகை உருவாக்க முடியும் என்று ஜே.கே. உலகிற்கு அறிவுறுத்துகின்றார்.

தேசப்பற்று

மனிதர்கள் செயற்கையான எல்லைக்கோடுகளை உருவாக்கிக் கொண்டு இந்த உலகத்தைப் பல துண்டுகளாகப் பிரித்து வைத்துள்ளனர். இதனைத்தான் கவிக்கோ,

''நாம் அடைப்புக் குறிகளுக்குள்
அடைக்கப்பட்டவர்கள்''[7]

என்கிறார். அதனால்தான் உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் நான் ஒரு இந்தியன், நான் ஒரு அமெரிக்கன், நான் ஒரு ரஷ்யன், நான் ஒரு ஆங்கிலேயன் என்று கூறிக் கொள்கின்றார்கள். எவரும் நான் மனித இனத்தைச் சார்ந்தவன். நான் உலக பிரஜை என்று தங்களைச் சொல்லிக் கொள்வதில்லை. உலகிலேயே எங்கள் நாடு தான் சிறந்தது. நாங்கள் தான் பொருளாதார நிலையில் முதலாவதாக இருக்க வேண்டும் என்றும், மற்ற நாடுகள் அனைத்தும் நாங்கள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும் என்றும் ஒவ்வொரு நாட்டினரும் செயல்பட்டு வருகிறார்கள். இப்படியான மனநிலையை உருவாக்கும் தேசப்பற்று வெறியினை நாம் உடனடியாக மாற்றியாக வேண்டும் என ஜே.கே. உலகினோருக்கு அறிவுறுத்துகின்றார்.

அன்பு, நட்பு, பரஸ்பர உதவி, சகோதரத்துவம், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமை என்று ஒவ்வொரு நாடும் உலக அரங்கில் முழங்குவதனை உண்மையாகச் செயல்படுத்திட வேண்டும். அதோடு "ஒவ்வொரு நாட்டு தலைவரும் கோடிக்கணக்கான மக்களின் உயிர்கள் முக்கியமானதா? அல்லது செயற்கையாக நம்மால் உருவாக்கப்பட நாடுகளின் எல்லைக்கோடுகள் முக்கியமானவைகளா? மனிதர்கள் தன் மனைவி மக்களுடன் சந்தோஷமாக வாழ்ந்து வருவது முக்கியமானதா? அல்லது நிறைய மனிதர்களின் உயிர்களைப் பறிக்கக் காரணமாக இருக்கும் தேசங்களின் கொடிகள் முக்கிய மானதா?"[8] என்று தங்களுக்குள்ளாகவே எண்ணிப் பார்க்க வேண்டும் என ஜே.கே. எடுத்துரைக்கின்றார். இதனைக் கவிக்கோ,

"நமக்கிருப்பது போல்
பறவைகளுக்கு
நாடுகளும்
எல்லைகளும் இல்லை
ஆனால்
பறவைகளின் சுதந்திரம்
நம்மிடம் இல்லை"[9]

என்று வருத்தத்தோடு குறிப்பிடுகின்றார்.

அண்டை நாட்டு மக்களும் நம்மைப் போன்று சாதாரண மக்கள் தான். அவர்களும் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடன் சந்தோஷமாக வாழத்தான் விரும்புகிறார்கள். மற்றவர்களுடைய உயிர்களைப் பறிக்க அவர்களும் விரும்புவதில்லை என்று ஒவ்வொரு நாட்டு மனிதனும் எண்ணத் தொடங்கிவிட்டால் தேசப்பற்று என்பது போர்களை உருவாக்கி உயிர்சேதத்தையும், பொருட்சேதத்தையும் உருவாக்காது என்கிறார் ஜே.கே.

அரசியல் கொள்கைகள்

பல நாடுகள் கடைப்பிடித்து வரும் மாறுபட்ட அரசியல் கொள்கைகள் உலகத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து அவைகளுக் கிடையே போர்களையும், மோதல்களையும் உருவாக்கி வருகின்றன. மதப்பற்று, தேசப்பற்று போன்றே இந்த அரசியல் கட்சிகளுடைய கொள்கைகளின் மேல் நாம் கொண்டிருக்கும் பற்றும் அமைதியும், அன்பும் கொண்ட உலகத்தை உருவாக்கப் போவதில்லை என்று ஜே.கே. இன்றைய அரசியல் கட்சித் தலைவர்களின் தவறான போக்கினைச் சாடுகின்றார். இதனைத் தான் கவிஞர் க. நா.சு. அவர்கள்,

"ஊருக்கு உழைத்தவன்
ஆண்டியானான்

பாருக்காகப் பாடுபட்டவன்
போண்டியானான்
அவனை ஏவி வேலை வாங்கியவன்
மந்திரியானான்''[10]

என்று தலைவர்களின் போலித்தனத்தினைச் சுட்டிக் காட்டுகின்றார்.

உலகில் போர்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்து வரும் மதப்பற்று, தேசப்பற்று, அரசியல் கொள்கைகள் போன்றவைகளை நாம் அகற்றிவிட்டுப் புதியதொரு புரட்சியை உருவாக்க வேண்டும். புரட்சி என்றால் பிரெஞ்சுப் புரட்சியோ, ரஷ்யப் புரட்சியோ, அல்ல. இது உளவியல் சம்மந்தப்பட்ட புரட்சி. ஒவ்வொரு மனிதனும் தன் உள்ளத்திலேயே உருவாக்கிக் கொள்ள வேண்டிய புரட்சி யாகும். அதாவது ''நான் என் மனதிற்குள்ளிருக்கும் போட்டி, பொறாமை, ஒப்பிட்டுப் பார்க்கும் குணம், பதவி வெறி, புகழ் வெறி, பண வெறி, முரட்டுத்தனம், பயம், கோபம், சந்தேகம், வெறுப்பு, ஆசை, சுயநலம், மதப்பற்று, நாட்டுப்பற்று, கட்சிப்பற்று இவைகளை விரட்டியடித்து இவைகளை மீண்டும் என் மனதிற்குள் நுழைய அனுமதிக்க மாட்டேன் என்று உறுதிபூண்டு செயல்படல் வேண்டும்''[11] என்கிறார் ஜே.கே.

ஜே.கே. கூறியது போல் ஒவ்வொரு மனிதனும் செயல்பட்டால் நான், நீ என்ற தன்மை போய் நாம் என்கின்ற தன்மை உண்டாகும். அப்போது நானும் நீயும் தான் உலகம், நம் அனைவரின் உள்ளங் களிலும் இருக்கும் நிலைதான் உலகச் சூழ்நிலையாக உருவெடுக் கிறது. உலகம் வேறல்ல நாம்தான் உலகம் என்கிற எண்ணம் தோன்றும்போது உலகில் அமைதியும், அன்பும், சகோதரத்துவமும் நிலைகொள்ளும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

குறிப்புகள்

1. கணியன் பூங்குன்றனார், - புறநானூறு, பாடல்கள், 192.
2. பாரதிதாசன், - பாரதிதாசன் கவிதைகள், ப. 125.
3. பி.எஸ்.ஆர். ராவ், - புதியதோர் உலகம் செய்வோம், ப. 60.
4. பி.எஸ்.ஆர். ராவ், - புதியதோர் உலகம் செய்வோம், ப. 14.
5. கவிக்கோ அப்துல் ரகுமான், - ஆலாபனை, ப. 53.
6. பி.எஸ்.ஆர். ராவ், - புதியதோர் உலகம் செய்வோம், ப. 20.
7. கவிக்கோ அப்துல் ரகுமான், - ஆலாபனை, ப. 53.
8. பி.எஸ்.ஆர். ராவ், - ,புதியதோர் உலகம் செய்வோம், ப.28.
9. கவிக்கோ அப்துல் ரகுமான், - ஆலாபனை, ப. 53.
10. முனைவர். பெ. சுபாசுசந்திரபோசு, - எது புதுக்கவிதை, ப. 59.
11. பி.எஸ்.ஆர். ராவ், - புதியதோர் உலகம் செய்வோம், ப. 40.

மேக்ஸ் முல்லரின் கோட்பாடும், அதற்குச் சார்பான எதிரான கோட்பாடுகளும்

ச. இரவி

பூ.சா.கோ. கலை - அறிவியல் கல்லூரி
கோவை - 4

நாட்டுப்புறவியல் இன்று வளர்ந்து வரும் துறையாகும். நாட்டுப் புறவியலின் பல்வேறு கூறுகள் இன்று அலசி ஆராயப் படுகின்றன. கடந்த முப்பதாண்டுகளாக, நாட்டுப்புறவியல் ஆராய்ச்சி பெருகியும் பரவியும் வருகிறது. வளர்ந்து வரும் துறைக்கேற்பப் பல்வேறு கூறுகளை ஆராய, பல்வேறு கோட்பாடுகள் (Theories) உருவாவது இயற்கையாகும். அக்கோட்பாடுகள் பற்றிய சிந்தனையும், அவற்றைத் தம் ஆராய்ச்சிகளில் பொருத்திப் பார்க்கும் முனைப்பும் வளரத் தலைப்பட்டன. இந்த வகையில் மேக்ஸ்முல்லரின் கோட்பாடும் அதற்குச் சார்பான எதிரான கோட்பாடுகளையும் காண்பதுவே இவ்வாய்வின் நோக்கமாகும்.

மேக்ஸ் முல்லருக்கு முன்

நாட்டுப்புறவியலின் தாயகம் பின்லாந்து என்பர். இரஷ்யாவில் நான்கு நூற்றாண்டுகளாக இத்துறை வளர்ந்து வருகிறது. இதே போன்று ஜெர்மனியில் கிரிம் சகோதரர்கள் என அழைக்கப்படுகின்ற *1.Joacob Grimm, 2.Wilhelm Grimm* ஆகிய இருவர் நாட்டுப் புறவியல் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தனர். இவர்கள் இருவரும் நாட்டார் வழக்காற்றியலின் தந்தையர் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் சிறு, சிறு ஊர்களில் சிறுகதைகளைச் சேகரித்தனர். அதில் தேவதைக் கதைகளே அதிகமாகக் கிடைத்தன. இக்கதைகள் கிரிம்ஸின் தேவதைக் கதைகள் *(Grimm's Fairy Tales)* என அழைக்கப்படுகின்றன. அப்படிச் சேகரித்த ஆயிரக்கணக்கான கதைகளின் மொழிவழக்கைக் கண்டறிந்து ஒப்பிட்டுத் தொகுத்தனர். இவர்கள் ஆய்வு முறை Comparative philology எனப்படும்.

1. *Jacob Grimm* - அப்படியே பேச்சு வழக்கில் எழுத வேண்டும் என்றார்.
2. *Wilhelm Grimm* - எழுத்து நடையில் எழுத வேண்டும் என்றார்

இவர்களுடைய ''ஒப்பீட்டு முறை''யைப் பின்பற்றி மேக்ஸ்முல்லர் புராணங்களை ஒப்பிட்டுப் பார்த்தார்.

மேக்ஸ் முல்லரின் கோட்பாடு

மேக்ஸ்முல்லரின் பிறப்பு கி.பி. 1900. இவர் 72 வயது வரை வாழ்ந்தார். ஜெர்மன், ஆங்கிலம், வடமொழிகள் இவருக்குத் தெரியும். தமது கதை என்று கண்டுபிடிக்க ஜெர்மன் மொழியை வடமொழிக்கேற்பத் தமது கவிதையின் இறுதியில் எழுதுவார்.

3000 மொழிகளில் ஒன்று கிரேக்கம் கிரேக்கத்தில் வழங்கக்கூடிய புராணக் கதைகளும் வடமொழியில் உள்ள புராணக் கதைகளும் ஒன்றுபோல் இருப்பதை அறிந்தார். அந்தப் புராணக்கதைகளில் 'தயோசிஸ்' என்பதில் 'தயோ' என்ற பெயர் தான் வேறுபடுகிறது. 'சிஸ்' (Zeus) என்ற பெயர் எல்லாப் புராணக் கதைகளிலும் காணப்பட்டது.

பல ஆண்டுகள் ஆராய்ந்தபோது ஏதோ ஒன்று அவருக்குத் தோன்றுவது போல் தெரிந்தது. ஆனால் அவரால் வெளியிட முடிய வில்லை. புராணக் கதைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்தவை. புரியாததற்குக் காரணம் இன்றைய மொழியிலிருந்து அவை வேறுபட்டதே ஆகும்.

மேக்ஸ்முல்லர் இவற்றை நான்கு படிநிலைகளாகப் பிரிக்கின்றார்.

1. *Thematic Stage* - வேர்ச்சொல் போன்ற சிறு சிறு சொற்களைப் படைத்திருந்த நிலை
2. *Dialectic Stage* - வட்டார வழக்காக வளர்ந்த நிலை
3. *Mythological Stage* - கிளை மொழிகள் தோன்றிய நிலை
4. *Popular Stage* - எல்லோருக்கும் புரியக் கூடிய மொழியாக இறுதியில் வளர்ந்த நிலை

இவைகளை Stage என்று பிரிப்பதைக் காட்டிலும் Period என்று பிரிப்பதே நலம்.

மூன்றாவது கால கட்டத்தில் தோன்றிய மொழிகள் கிளை மொழிகள். இக்கால கட்டத்தில் மொழியின் தன்மை மாறுபட்டுக் கொண்டே போயிருக்க வேண்டும். இந்த நிலையில் தோன்றிய மொழி வேறு என்பதால் புரிந்து கொள்ளக் கடினமாக இருந்தது. எனவே ஆரம்பத்தில் மக்களிடையே வழங்கப்பட்ட புராணக் கதைகள், இந்தக் கிளை மொழிகள் தோன்றிய கால கட்டத்தில் மக்கள் புரியாமலேயே சொல்லியிருக்கிறார்கள் என்று தான் கூற வேண்டியிருக்கிறது. இதனை மேக்ஸ்முல்லர் ''மொழியில் வரும்

நோய்கள்'' ("The Melody of language" or "The disease of language") என்கிறார்.

'சொப்பலோவ்' என்ற இரஷ்ய அறிஞர் இதனை "Semantic" என்பார். அதாவது மொழியின் தன்மை வளர்ந்து வரும்போது மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆகையினால்தான் பல ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன புராணக் கதைகளுக்கு இவரால் விளக்கம் தரமுடிய வில்லை. இதை இவர் மொழியில் ஏற்படக்கூடிய "disease" என்கிறார். சொற்கள் மாறும் தன்மையில் புராணம் தோன்றியது எனலாம்.

மேக்ஸ் முல்லரின் கோட்பாடு ஓரிடப்பிறப்புமுறை (*Monogenesis*) ஆகும். புராணக் கதைகள் கிரேக்கத்தில்தான் தோன்றி இருக்க வேண்டும். அவர்கள் இடம் வேறுபட்டு வரும்போது அக்கதை களையும் கொண்டு வந்தார்கள் எனலாம். இக்கதைகள் ஓரிடத்தில் தோன்றி இன்னொரு இடத்திற்கு வந்திருக்க வேண்டும் என்று மேக்ஸ்முல்லர் சொன்ன கருத்தை எல்லோருமே வியந்து கேட்டனர்.

மேக்ஸ்முல்லருக்குச் சார்பான கோட்பாடு

மேக்ஸ்முல்லருக்குச் சார்பாக ''பென்ஃபே கோட்பாட்டைச்'' சொல்லுவர்.

Theodor Benfey கி.பி. 1809-இல் பிறந்தார். இவர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர். வடமொழியில் தேர்ச்சி பெற்றவர், பஞ்சதந்திரக் கதைகளில் ஆய்வு செய்தவர் ஆவார்.

இவர் ''கடன் வாங்கல்'' என்ற கோட்பாட்டைக் கொண்டு வந்தார். மொழிகள் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குக் கடன் வாங்கல் போல இடம் பெயர்தல் (*Migration*) Benfey-யின் *theory* ஆகும்.

மக்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்ந்து தான் இருக்க வேண்டும். இதேபோல் புராணக்கதை களும் ஓரிடத்தில் இருந்து (இடம் பெயரும்) மக்கள் மூலம் மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்ந்து வந்திருக்க வேண்டும்.

மேக்ஸ்முல்லரைப் பின்பற்றியே பென்ஃபே

1. பரவுதல் - *Diffusion*
2. இடம்பெயர்தல் - *Migration*

என்ற இந்த இரண்டு கோட்பாடுகளையும் கொண்டு வந்தார்.

மேக்ஸ்முல்லருக்கு எதிரான கோட்பாடு

மேக்ஸ்முல்லரின் ''ஓரிடப்பிறப்புமுறை'' (*Monogenesis*)யை மறுக்கு முகமாக மானிடவியல் வல்லுநர்கள் (*Poly genesis*) ''பல இடத்தோற்றம்'' என்ற கோட்பாட்டைக் கொண்டு வந்தனர்.

மானிடவியல் வல்லுநர்களில் குறிப்பிடத்தக்க இருவர்

1. *E.B. Tylor*
2. *Andrew lang* ஆகியோர் ஆவார்கள்.

மானிடவியல் கருத்திற்கு அடிப்படையான கோட்பாடு எந்த இனமும் இப்போது இருக்கின்ற இரண்டு நிலை இருந்திருக்க வேண்டும் என்பதுவே ஆகும்.

இவர்கள் மனித வளர்ச்சியை மூன்று படிநிலைகளில் விளக்குகின்றனர்.

1. *Peasantry* - உயர்ந்த நிலை அல்லது நாகரீகமான நிலை
2. *Barbarison* - முரட்டுத்தனநிலை அல்லது பழைய நிலை
3. *Savagery* - காட்டுமிராண்டித்தனம் அல்லது நாகரீகம் தெரியாத நிலை

நாகரீகம் அடைந்த இந்த 21-ஆம் நூற்றாண்டிலும் ஆரம்பத்தில் காட்டு மிராண்டித்தனமாக இருந்த மக்களிடம் இருந்ததைப் போன்றதொரு கொடூரமான நிலை இருப்பதைக் காணலாம். ஆக மனிதனிடம் இன்றும் கொடூரமான நிலை மனத்தில் இடம் பெற்றிருக்கின்றது எனலாம். இன்று, ஆதி மனிதனிடம் இருந்தது போன்று இப்போது நாகரீக வளர்ச்சியடைந்த மனிதனிடம் இல்லை என்று சொல்ல முடியாது. சில உணர்வுகள், சில எண்ணங்கள் பொதுவானவை. பசி, தூய்மை, காதல், கருணை போன்ற உணர்வுகள் எல்லா இனத்து மனிதர்களிடமும் உண்டு. எனவே புராணக்கதைகள் ஓரிடத்தில் தோன்றிதான் பல இடங்களில் பரவி இருக்க வேண்டும் என்பதில்லை. உணர்வுகள் பொதுவானவை, அதுபோலவே கற்பனைகளும் பொதுவானவை. நெருங்கவே முடியாத ஆஸ்திரேலியா ஆதிவாசிகளிடம் கூட நமது புராணக் கதைகளின் சில இயல்புகள் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் காணப் படுகின்றன. எனவே புராணக்கதைகள் ஓரிடத்தில் இருந்துதான் தோன்றியிருக்க வேண்டும் என்பதில்லை. பல இடங்களிலும் தோன்றியிருக்கலாம் என்ற ''பல இடத்தோற்றம்'' கோட்பாட்டை மானிடவியல் வல்லுநர்கள் நிறுவினர்.

தொகுப்புரை

மேக்ஸ்முல்லர், புராணக்கதைகள் ஓரிடத்தில் தோன்றிப் பல இடங்களுக்கும் பரவியிருக்க வேண்டும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஓரிடப்பிறப்பு முறையைக் கொண்டு வந்தார்.

இக்கருத்தை ஆதரிக்கும் முகமாக பெண்ஃபே *Diffusion* ''பரவுதல்'', *Migration* ''இடம் பெயர்தல்'' ஆகிய கோட்பாடுகளைக் கொண்டு வந்தார். மேக்ஸ்முல்லருக்கு எதிராக மானிடவியல் வல்லுனர்கள் பல இடத்தோற்றம் *(Polygenesis)* என்ற கோட்பாட்டைக் கொண்டு வந்தார்கள்

துணைநூல்கள்

1. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, 1997.
2. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 18, 1997.
3. சரசுவதி வேணுகோபால், நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள், தாமரை வெளியீடு, மதுரை - 14 1991.

திராவிட இயக்கப் பின்னணியில் 20-ஆம் நூற்றாண்டு இலக்கியக் கோட்பாட்டின் தோற்றமும் எதிர் - பின் விளைவுகளும்

சு. அரங்கராசு (கனல்மைந்தன்)

அரசு கலைக் கல்லூரி
கோவை - 18

இலக்கிய வரலாற்றுக்கு ஆதாரமாக அமைவது சமூக வரலாறு. வாழும் சமூகத்தில் தமது ஆதிக்கங்களை அரசியல், பொருளியல் தளங்களில் தக்கவைக்கும் ஆதிக்க வர்க்கங்களும் வருணங்களும் அதற்கேற்ற கருத்தியலை இழையோடச் செய்யும் இலக்கியப் படைப்புகளை விளைவித்துக் கொள்வது இயல்பாகும். பொருளியல் கட்டுமானத்திற்கு ஏற்ற மனப்பாங்குகளையும் மதிப்பீடுகளையும் குடும்ப உறவுகளிலும் சமூக உறவுகளிலும் வேரூன்றச் செய்யும் பணியே கலை இலக்கியம் முதலான பண்பாட்டுப் படைப்பு களின் தலையாய பணியாகும்.

இப்படி முதற்பொருள் கருப்பொருள் வழியே உருவாகும் உரிப்பொருளைத் தான் இலக்கியக் கோட்பாடாக அமைத்துக் கொள்கிறோம். தொல்காப்பியர் சங்க இலக்கியக் கோட்பாடாக அகத்தையும் புறத்தையும் விவரிக்கிறார். நீதி இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படைகளாக அன்பும் அறமும் அமைகின்றன. பக்தி இலக்கியக் கோட்பாடுகளாக இகமும் பரமும் அமைகின்றன. அவை இம்மை மறுமையின் வெளிப்பாடுகளாகும். வீடும் நாடும் மனித வாழ்வில் அன்பையும் அறத்தையும் நிலைநாட்ட முடியாத நிலையில் 'அன்பே சிவம் அன்பே வைணவம்' என்று மக்கள் சமயத் தத்துவங்களைச் சரணாகதி அடைகின்றனர். ஆளும் வர்க்கங்களுக்கும் வருணங்களுக்கும் சரணாகதி அடையும் மக்கள் வரலாற்றின் அனாதைகளாகக் கையறு நிலையில் கண்ணீர் வடிக்கும் நிலை ஏற்படுகிறது.

எனவே, வீட்டை முதற்பொருளாகக் கொண்டு வாழும் பெண்ணின் வாழ்க்கையில் கற்பே பொருளாகிறது; நாட்டை

முதற் பொருளாகக் கொண்டு வாழும் ஆணின் வாழ்க்கையில் பொருளே கற்பாகிறது. சொத்துரிமை அற்ற பெண் சொத்துக்குரிய வாரிசை விளைவித்துத் தருகிறாள். அனுபவ பாத்தியம் அற்ற அன்றாடக் கூலிகள் சொத்தை விளைவித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படி வீட்டளவில் பெண்ணும் நாட்டளவில் ஆணும் தம் விளைவிலிருந்து அந்நியமாகும் நிலையில்தான் ஆத்மாவைப் பற்றி ஆத்ம விசாரணைகள் அத்வைதமாக - துவைதமாக - விசிஷ்டாத்வைதமாக-சமயக் கோட்பாடுகள் உருவாகின்றன. பேரரசுகள் ஆளும் காலகட்டத்தில் பெருந்தத்துவங்களாக விவாதிக்கப் பட்ட இச்சமய தத்துவங்களே அவ்வக்காலத்தில் உருவான இலக்கியப் படைப்புகளை இயக்கும் இலக்கியக் கோட்பாடு களாக உருவாயின.

கம்பர் தமது படைப்பில் தழுவிய இலக்கியக் கோட்பாடு அத்வைதக் கோட்பாடாகும். சங்க இலக்கியத்தின் சாரமாக இருந்த 'யாரும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாழ்வியல் மெய்ப்பொருள் தான் பின்னாளில் தமிழ்ச் சைவமாகப் பரிமாண வளர்ச்சியுற்றது. இச்சைவ சித்தாந்தமே கி.பி. 8-ஆம் நூற்றாண்டளவில் ஆதிசங்கரரின் அத்வைதக் கோட்பாடாக உருப்பெற்றது. சங்க காலத்திற்கும் சங்கரர் காலத்திற்கும் இடையில் தோன்றிய திருமூலர் தம் திருமந்திரத்தில் கணியனின் வாழ்வியல் மெய்ப்பொருளைச் சமயத்தின் உரிப்பொருளாக மாற்றி, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' - என்கிறார்.

சமூகத்தின் ஊடு பயிராக விளைந்த சமயக்கோட்பாடு இலக்கியத்தின் பாடுபொருளாக மையம் கொள்கிறது. இளங்கோ அடிகள் காலத்தில் சமூகத்தின் மையங்களாகப் பெண்ணும் ஆணும் (கண்ணகியும் கோவலனும்) அமைகின்றனர். சமணமும் பவுத்தமும் மனிதரை மையப்படுத்திய ஆன்மீக நெறிகள். இந்த ஆன்மீக நெறியின் அடிப்படைகளாக அமைகின்ற பண்புகளே அன்பும் அறமும். ஆன்மீக நெறிப்படி வாழ்வையும் வரலாற்றையும் அமைத்துக் கொள்ள முடியாத நிலையில், சொத்துடைமைச் சமூக வளர்ச்சி அமையும்போது, அதன் நிழலுருவாகக் காட்சியளிக்கும் கற்புடைமையே இலக்கியக் கோட்பாடாக அமைகிறது. சிலப்பதிகாரம் இக்கோட்பாட்டை வரித்துக் கொண்ட வார்ப்பாகும். அரணாகத் தோன்றும் அடிப்படைகள் அனைத்தும் காலப்போக்கில் முரணாகத் தோன்றும் நிலையிலேயே பழையன கழிதலும் புதியன புகுதலும் - என்ற வழுவற்ற கோட்பாடுகள் புத்திலக்கியக் கோட்பாடுகளாகத் தோன்றுகின்றன.

ஊழை (விதியை) வற்புறுத்தும் வள்ளுவம் விதியை வெல்லத்தக்க வலு மதிக்குண்டு என்று கூறி உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ,

என்று கேட்கிறது. ஒரு புறம் கோட்பாடும் மற்றொரு புறம் விதிக் கோட்பாடும் தம்முள் உடன்பட்டும் முரண்பட்டும் போராடுகிற நிலையில்தான் இலக்கியக் கோட்பாடுகள் படைப்பிலக்கியத்தில் கருக்கொள்கின்றன.

இந்தச் சூழலைத்தான் 'அந்நியமாதல்' என்கிறோம். உழைப்பு, உடல் உழைப்பு, மூளை உழைப்பு என்று பிரிந்த நிலையில் மானுடம் ஆண், பெண்ணாக பிளவுண்ட நிலையில் செல்வம் தனிவுடைமை பொதுஉடைமை என்று சிதறிய நிலையில் இவ்வந்நியமாதல் தோற்றம் கொள்கிறது. இந்தச் சூழலிலிருந்துதான் அரசியல் கோட்பாடும் உருவாகிறது, இலக்கியக் கோட்பாடும் உருவாகிறது. இந்தச் சூழலை இறுக்கும் கோட்பாடு ஒரு புறமும் இந்தச் சூழலை இளக்கும் கோட்பாடு மறுபுறமும் தோன்றி இருமை எதிர்வுகளாக *(Binary Opposites)* உருக்கொள்கின்றன. இரண்டும் ஒன்றே - என்று அத்வைதம் சொல்ல, இரண்டும் ஒன்றல்ல என்று துவைதம் சொல்ல முரண்பாடு கூர்மை அடைந்தது. கூர்மையடைந்த முரண்பாடு தம்முள் முரண்பட்ட இரு கூறுகளிலிருந்தும் இணைப்பணுக்களைத் தேடியிணைத்து விசிஷ்டாத்வைதமாக (இரண்டும் ஒன்றாகவும் இருக்கிறது. வேறாகவும் இருக்கிறது) விரித்துப் பொருளுரைக்கிறது. கம்பனும் சேக்கிழாரும் தாம் சார்ந்த சமய நெறிகள் வேறு பட்டாலும் - 'யாதும் ஒன்றே' என்ற தமிழர் மெய்யியல் கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் வள்ளுவக் கோட்பாட்டை (பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்) தமது படைப்பியல் செல் நெறியாக உயர்த்திப் பிடிக்கின்றனர்.

இக்கோட்பாடு பிறப்பில் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் வருணாசிரமக் கோட்பாட்டிற்கு எதிரானது. பார்ப்பனியம் உச்சரித்த சாதிய ஏற்றத் தாழ்வுக்கு எதிரானது. எனவே வள்ளுவர் காலத்தில் தோன்றி இளங்கோ சாத்தனார் காலத்தின் ஊடே வளர்ந்து சித்தர்கள் காலத்தில் மலர்ந்து வள்ளலார் காலத்தில் மணந்த சன்மார்க்கக் கோட்பாடே ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக் கோட்பாடாக வளர்ச்சிற்றது. கம்பன், சேக்கிழார் காலத்தில் இலக்கியத்தில் வெளிப்பட்ட இறையியல் கோட்பாடு சித்தர்கள், வள்ளலார் படைத்த கலகப்புக்களிலும் அருபாக்களிலும் விடுதலை இறையியல் கோட்பாடாக முழு வளர்ச்சி பெறுகிறது.

இந்த விடுதலை இறையியல் கோட்பாடே பாரதியின் இலக்கியக் கோட்பாடாக அமைகிறது. கணியன் பாடிய புறப்பொருள் பாட்டு பின்வரும் இலக்கியங்களின் கருப்பொருள் ஆகியது. பாரதியின் ஆன்மீக இறையியல் கோட்பாடு அரசியல் இறையாண்மைக்

கோட்பாடாகத் தோன்றியது. இந்தியத் தேசியத்தின் இறையாண்மை (Sovernity) பாரதிதாசனின் கவிதைகளில் தமிழ்த் தேசியத்தின் இறையாண்மைக் கோட்பாடாக உருப்பெற்றது. இதற்குச் சித்தர் வழியில் தோன்றிய பெரியார் நெறிப்படுத்திய திராவிட இயக்கம் ஒரு காரணமாகும்.

ஈராயிரம் ஆண்டுக்கால தமிழர் மெய்யியலின் வெளிப்பாடாகத் தோன்றிய திராவிட இயக்கம் வருணாசிரமக் கோட்பாட்டையும் தனி உடைமைக் கோட்பாட்டையும் ஒருசேர எதிர்த்தீ திராவிட இயக்கம் இம்மண்ணில் ஒரு காலத்தில் நிலவிய அறநெறி இயக்கங்களாம் சமணபவுத்த நெறிகள் வற்புறுத்திய கோட்பாடு களே வளர்சிதை மாற்றமுற்றுத் திராவிட இயக்கத்தின் சமுதாயக் கோட்பாடுகளாக உருப்பெற்றன.

இருபதாம் நூற்றாண்டில் பாரதியின் இலக்கியம் வருண ஆதிக்கத்தையும் காலனி ஆதிக்கத்தையும் வர்க்க ஆதிக்கத்தையும் எதிர்த்த திரிசூலக் கோட்பாட்டு இலக்கியமாகும். மக்களே வாழும் சமூக நிகழ்வுகளின் வரலாற்று நாயகர்கள் என்று மார்க்சியம் கூறுகிறது. அந்த மக்களின் சார்பாக நின்று மக்களாட்சிக் கோட்பாடு 'விடுதலை - சமத்துவம் - சகோதரத்துவம்' என்ற மும்முறைக் கோட்பாட்டை ஆதிக்கத்திற்கு எதிரான கோட்பாட்டுக் கூறுகளாக முன் வைக்கிறது.

சமூக அமைப்பைத் தனது அதிகாரக் கருத்தியலின் பிடிக்குள் வைத்திருக்கும் பார்ப்பனியம் தனது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் பத்தாம்பசலித்தனமான மதிப்பீடுகளை விலக்கித்தன் முன்னேற்றத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் இலக்கியம் எப்படி தமிழன் இலக்கியமாகும்? எனவே, பாரதிதாசன், பட்டுக்கோட்டை, புதுமைப்பித்தன், ஆர்.சண்முகசுந்தரம், ஜெயகாந்தன், ரகுநாதன், விந்தன், அண்ணா, கலைஞர், முடியரசன் முதலான பாரதிதாசன் தலைமுறைக் கவிஞர்கள், கண்ணதாசன் (ஒரு பகுதி) வானம்பாடிக் கவிஞர்கள், நா.காமராசன், இன்குலாப், அப்துல்ரகுமான், கு. சின்னப்ப பாரதி, டி. செல்வராஜ், கி. இராஜநாராயணன், பூமணி, பா. செயப்பிரகாசம், (ஆரிய தீபன்), இராசேந்திரசோழன், வண்ணதாசன், வண்ண நிலவன், என்.ஆர். தாசன், சி.ஆர். இரவீந்திரன், சூரியகாந்தன், கோணங்கி, சிற்பி, க. இரத்தினம், கலாப்ரியா, கல்யாண்ஜி, வைரமுத்து, அறிவுமதி, தேவமகள், அம்பை, சீனி. மோகன், கனிமொழி, சல்மா, வெண்ணிலா என நூற்றுக்கணக்கில் இலக்கியப் படைப்புகளைப் படைக்கும் இருபதாம் நூற்றாண்டு எழுத்தாளர்களின் படைப்புகளில் காணப்படும் படைப்பிலக்கியக் கோட்பாடு ஐந்து நிலைகளில் இயங்குகின்றன.

1. தேசிய இனநீதி, 2. சமூக நீதி, 3. வர்க்க நீதி, 4. பால்நீதி, 5. சிறுபான்மை நீதி. சாதிகளுக்கும், வர்க்கங்களுக்கும், பாலினங் களுக்கும் தேசிய இனங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளும், முரண்பாடுகள் முற்றிய நிலையில் வெடிக்கும் உரிமை-விடுதலைப் போராட்டங்களும் போர்களும் இன்றைய இலக்கியத்தையும் இலக்கியக் கோட்பாடுகளையும் உருவாக்கி வருகின்றன.

மேலை நாடுகளிலிருந்து இறக்குமதியான இலக்கியக் கோட்பாடுகளில் பல, நமது சமூக வரலாற்றுச் சூழலுக்கு ஏற்ப அமைவதில்லை; சிலவே நமது தேவைகளை நிறைவு செய்கின்றன. எழுத்து, கசடதபற முதலிய இலக்கியச் சிற்றிதழ்களில் அறிமுகமான இலக்கியக் கோட்பாடுகள் நமது மண்ணில் வேர் பிடிக்காமல் போயின. அமைப்பியல், பின் அமைப்பியல், நவீனத்துவம், பின் நவீனத்துவம் போன்ற காலசட்டங்கள் ஐரோப்பிய சமூக வரலாற்றுச் சூழலை ஒட்டிப் பிறந்தவை என்பது மனங்கொளத்தக்கது. இதற்கு முன் மிகை நடப்பியலை (Sir realism) இருப்பியலை (Existentialism) ஞானக்கூத்தன் தனது படைப்பிலும் சா. கந்தசாமி தனது சிறுகதைகளிலும் வெளிப்படுத்திய போது, அப்படைப்புகள் போன்மையாக்க தயாரிப்புகள் (Cloning Productions) என்றே அழைக்கப்படுகின்றன.

தமிழன் இலக்கியக் கோட்பாட்டை வகுக்கத் தமிழனின் தமிழின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட வருணப் பார்வையை வரித்துக் கொண்ட கோட்பாடுகளே இலக்கியக் கோட்பாடுகளாக உருவாகும் தகுதி கொண்டவை. பார்ப்பனர் அல்லாதார் படைப்புகளில் காணப்படும் இலக்கியக் கோட்பாடு பார்ப்பனரின் இலக்கியக் கோட்பாட்டிலிருந்து முற்றிலும் வேறு பாடானது. முதலாவது சமூக மக்கள் சார்பானது; இரண்டாவது, தனிமனிதத்துவ சார்பு உள்ளது. மாற்றத்தை விளைவிப்பது திராவிட இலக்கியக் கோட்பாட்டின், இடதுசாரி இலக்கியக் கோட்பாட்டின் பயன் ஆகும், எவ்வித மாறுதலையும் ஏற்காமல் இருக்கிற நிலையையும் ஒப்பாமல் முணுமுணுக்கும் தனிமனிதம் சார்ந்த கோட்பாடே திராவிட இலக்கியக் கோட்பாட்டிற்கு எதிர்க் கோட்பாடாகும். சில எழுத்தாளர்கள் திட்டமிட்டுத் தமிழன் இலக்கியக் கோட்பாட்டை உருவாகாமல் தடுக்கும் முயற்சிகளில் வெளிப்படையாகச் செயல்படுகின்றனர். எனவே சிந்தனைப் பள்ளிகளின் தத்துவார்த்த விவாதங்களை 'குழுச்சண்டை' என்ற பெயரில் மறைக்கும் முயற்சியும் நடப்பது கண்கூடாகும்.

கலைஞர் மு. கருணாநிதியின் ஆளுமைத்திறன்

அ. ஜோதிரவீந்திரன்

ம.தி.தா. இந்துக்கல்லூரி
திருநெல்வேலி - 10

ஆளுமை - சொற்பொருள் விளக்கம்

தமிழில் ஆளுமை என்ற சொல் ஆங்கிலத்தில் இடம் பெறும் Personality என்ற சொற் பொருளின் வடிவமே ஆகும். இதன் 'மூலம்' இலத்தீன் மொழி ஆகும். நாடக மேடையில் நடித்துக் காட்டியபோது நடிகர்கள் தாங்கள் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் இயல்புக்கு ஏற்றபடி முகமூடி அணிந்து வருவர். இம்முகமுடிதான் இலத்தீனில் 'பர்ஸனா' (Persona) என்று அழைக்கப்பட்டது. இச்சொல்லில் இருந்து தான் Personality என்ற சொல் வழங்கி வந்தது. சொற்பொருள் வளர்ச்சியின் காரணமாக இன்று அச்சொல்லின் பொருள் ஒரு தனிமனிதனின் தனிப்பட்ட நடத்தை முறையைக் குறிக்கிறது. 'தற்காலத்தில் இச்சொல் விரிவான பொருளைப் பெற்று ஒரு மனிதனின் சீரான தனிப்பட்ட நடத்தை முறையைக் (unique pattern of behaviour) குறிப்பதாயிற்று. 'ஆளுமை' என்பது ஒருவனது உடலமைப்பே என்றும் ஒருவனுடைய உடலமைப்பும் அவன் வாழும் சமூகச் சூழ்நிலையும் ஆகியவற்றின் தன்மைக்குத் தக அமையும் இயல்புகளெல்லாம் ஒன்று சேர்ந்ததே என்றும் பாரம்பரிய இயல்புகளும் (Hereditary Traits) அனுபவத்தால் ஈட்டிய இயல்பு களும் (Acquired Traits) ஒருங்கே சேர்ந்து அமைவதே என்றும் பலவாறு ஆளுமைக்குக் கலைக் களஞ்சியம் விளக்கம் தருகின்றது.

உளவியல் ஆய்வாளர் கருத்து

உளவியல் பகுப்பாய்வாளர் ஆளுமை குறித்துக் கூறுவதாவது ''உளப்பாகுபாடு மனிதனின் நனவிலி மனத்தினின்று எழும் வலிமை வாய்ந்த 'இத்' Id என்கிற உளச்சக்தி சமூகச் சூழ்நிலையில் சட்ட திட்டங்களோடும் கட்டுப்பாடுகளோடும் இழைவதினால் ஏற்படுவதே ஆளுமை'' ஆகும்.

நடத்தைக் கொள்கையினர் கருத்து

அன்றாட வாழ்வில் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டிய விதிகளைப் பின்பற்றும் கொள்கை உடையவர்கள்

நடத்தைக் கொள்கையினர் ஆவர். ''ஆளுமை என்பது அச்சம், சினம், பால் ஆகிய இயல்பூக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தாகும் என்பது நடத்தைக் கொள்கையினர் கருத்து.''

உடலமைப்புக் கொள்கையினர் கருத்து

ஓர் ஆளைப் பார்த்ததும் அவனது எடுப்பான தோற்றத்தைக் கொண்டு வீரமிக்கவன் தன்னம்பிக்கை உடையவன் என்று எடை போடுவதும் ஆளுமையே என்பது உடலமைப்பினர் கருத்து. 'ஒருவன் உயரமாயும் விரும்பத்தக்கதும் அழகானதுமான முகத்தை உடைய வனுமாய் இருந்தால் அவன் தன்னம்பிக்கை, தைரியம் போன்ற இயல்புகளை உடையவனாயிருப்பான். அவனது ஆளுமை இவற்றிற் கேற்ப அமைகிறது என்பது உடலமைப்புக் கொள்கையாளர் கருத்து.

ஒரு மனிதனின் இயல்புகளுக்கு ஏற்றப்படி அமைவது ஆளுமை ஆகும். இந்த இயல்புகள் உடலையோ, உள்ளத்தையோ, சார்ந்து இருக்கலாம். பிறப்பாலோ, சூழ்நிலையாலோ அமையலாம் என்பது தெளிவாகிறது. ஒருவனது குறிக்கோள்களையும் அவனது வாழ்க்கையில் வாழ்ந்து காட்டிய முறைகளையும் பொறுத்து ஆளுமையை மதிப்பிடலாம். ஆளுமையின் தன்மைகளைப் பட்டறி வாலும் உணரலாம். ஒருவன் வாழ்ந்த சமூகச் சூழல் கொண்டும் அவனது வாழ்க்கைச் சூழல் கொண்டும், ஆளுமையை நிலை நிறுத்தலாம். எனவே அறிவு, உணர்வு, உள்ளம், சமூகம், பண்பாடு, சூழல் ஆகிய அனைத்துக் கூறுகளும் ஆளுமையில் அடங்கும்.

ஆளுமைப் பண்புகள்

ஒரு மனிதனின் எல்லாப் பண்புகளும் ஆளுமையில் காணப்படும் சமூகத் தூண்டல் குணப்பண்புகளை வெளிப்படுத்தும் தனித் தன்மை களைப் புலப்படுத்தும் இவற்றை ஆளுமைப் பண்புகளாக உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எ.ஜே. ஜான் என்பவர் ஆளுமைப் பண்பைப் பற்றிப் பட்டியல் இட்டுக் காட்டுகிறார். பார்க்கும் முறை, உடை உடுக்கும் முறை, பேசும் முறை, நடக்கும் முறை, செய் திறனுடன் செயல்களைச் செய்தல், உடல் நலம் போன்றவை ஆளுமையின் பண்புகளாகச் சுட்டுகிறார்.

ஆளுமை வரையறைகள்

எஸ். சந்தானம் என்பவர் வெளிநாட்டு ஆசிரியர்களான மக்டுகல், மார்டர் பிரின்ஸ், கில்போர்ட் ஆகிய மூவரின் வரையறைகளைத் தொகுத்து தந்துள்ளார். 'ஆளுமை என்பது கண்ணையும் கருத்தையும் கவரக் கூடிய உள்ளமும் அதனுடைய செயல்களும் ஒன்றிணைந்து தோன்றக் கூடிய ஒரு கூட்டுத் தொகுதி. என்கிறார் மக்டுகல். ''ஆளுமை என்பது ஒருவனுடைய உயிரியல் தொடர்பான உளவியல்

நிலைகள் உள்ளத் துடிப்புகள், உள்ளத் தூண்டல்கள், உள்தாக்கம், மனப்போக்கு, இயல்பூக்கம் போன்றவையும் ஒன்று சேர்ந்து மொத்தமாக உருவானதே'' என்கிறார் மார்டர் பிரின்ஸ். 'ஆளுமை யானது ஒருவனது பண்புகளின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு, என்பார் கில்போர்ட்.

ஆளுமையின் வகைகள்

'ஸ்ப்ரேன்கர்' மதிப்பு அடிப்படையில் ஆளுமையை ஆறு வகையாக்குகிறார்.

அவை

1. கொள்கை வகை ஆளுமை (Thoretical Personality)
2. அழகுணர்ச்சி ஆளுமை (Aesthetic Personality)
3. சமூக வகை ஆளுமை (Social Personality)
4. அரசியல் ஆளுமை (Political Personality)
5. பொருளாதார வகை ஆளுமை (Economic Personality)
6. சமய ஆளுமை (Religious Personality) என்பவை ஆகும்.

ஆளுமைத்திறன் வெளிப்பாடு

மனிதன் புறச் சூழலின் செல்வாக்கிற்கு உட்பட்டுச் செயல் படக் கூடியவன். அவ்வாறு செயல்படும் போது சமூக நடத்தையைப் பின்பற்றி நடக்கிறான். அவ்வாறு நடப்பதும் அவனுடைய ஆளுமைத் திறனே, காரண காரியத் தொடர்பில் ஒருவனுடைய செயல்பாடு முதிர்ந்த முழுநிலைமை அடையுமானால் அதுவும் ஆளுமைத் திறன் ஆகும். படைப்புகளைப் பகுத்து ஆராய்ந்தால் படைப்பாளரின் ஆளுமைக் கூறுகளை அறியலாம். பல்வேறு இயல்புகள் ஒன்று சேர்ந்து படைப்பாளரின் ஆளுமைத் திறனை வெளிப்படுத்துகிறது.

''கலைஞரின் படைப்புகளில் அவரது மொழிநடை, அவரது உணர்ச்சி அனுபவம், பண்பாடு சுயமரியாதை, கலையுணர்வு, மொழிப்பற்று, இனப்பற்று, அரசியல் நாகரிகம் ஆகியவற்றை யெல்லாம் உணர்த்தும் வகையில் அமைந்து அவருடைய ஆளுமையை வெளிப்படுத்தும்'' என்பார் டாக்டர் பொற்கோ.

கலைஞரின் ஆளுமைத்திறன்

பள்ளி இறுதிப் படிப்பைக் கூட முடிக்காத கலைஞர் எழுத்துத் துறையில் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றது வியப்பிற்குரியது. ஒரு மனிதனை உருவாக்குவது அவன் கற்ற கல்வி பெற்ற அனுபவம், உற்ற சூழல் போன்றவைகளாகும். கலைஞரின் வாழ்வியலைக் கூர்ந்து நோக்கும்போது அவரின் ஆளுமைத்திறனை உணரமுடிகிறது.

'தமிழிடம் அதன்
முகவரி கேட்டேன்
மேற்பார்வை மு. கருணாநிதி
என்றது'

என்றார் கவிஞர் அப்துல் ரகுமான்.

'கலைஞர் பகுத்தறிவுக் கொள்கை பரப்பும் சிந்தனையாளர் பழுமரக் கனிப்பயன் கொள்ளும் பேச்சாளர் படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர். கலைத்துறையில் வாகை சூடிய படைப்பாளர் தொட்டது துலங்கத் துறைதோறும் தம்முத்திரை பதிக்கும் திறமையாளர் அரசியல் சதுரங்கத்தில் வெற்றிவீரர். முத்தமிழிலும் வல்ல வித்தகர். செந்தமிழுக்கொரு தீமை எனில் தம்முயிரும் தந்திடத்துணியும் தியாகத் திருவுருவம்' என்பார் பேராசிரியர் அன்பழகன்.

கலைஞரது தமிழ், கலை இலக்கிய உலகில் தனக்கென தனிவழியும் தடமும் பதித்துக் கொண்டது. 'கன்னித்தமிழ் இருக்கிற வரை இருக்கிற பெயர் கருணாநிதி' என்பார் வலம்புரிஜான்.

கலைஞரின் தோற்றம் - பண்பு நலன்

''நடுத்தர உயரம், வழுக்கை விழும் தலை, ஒளிவு மறைவு இல்லாது மனத்தை திறந்து காட்டும் முகம் தோற்றத்திலேயே மதிப்பைத் தோற்றுவிக்கும் தன்மை இவற்றின் இணைப்பே கருணாநிதி.'' என்பார் பேராசிரியர் ந. சஞ்சீவி. கலைஞரின் பண்புகளைத் தம் நூலான இலக்கியத் தலைவர் கலைஞர் என்னும் நூலில் போற்றியுள்ளார்.

'படிப்படியாக வளர்ந்தவர் - படித்துப் படித்து வளர்ந்தவர் தம்பியுடையான் படைக்கஞ்சான் என்னும் பழஞ் சொல்லுக்கு எல்லாத் துறைகளிலும் புத்துரை காண்பவர். பின்னணி, சாதி, செல்வம், குடும்பப் பரம்பரை அல்லது வழிமரபு முதலிய பலம் ஏதுமில்லா நிலையில் இயற்கை நுண்ணறிவுத் திறத்தாலும் ஓயாது உழைப்பாலும் மக்களின் இனத் தெய்வமாய் உருவானவர் கலைஞர். பேரறிஞர் அண்ணாவும் விண்ணிலிருந்து வியப்பும் விம்மிதமும் கொள்ள ஏடாளும் - நாடாளும் - நல்லோர் நெஞ்சமெல்லாம் ஆளும் சான்றோர் கலைஞர்.

'கலைஞர் பட்டதாரி அல்லர். ஆனால் பட்டதாரிகளுக்குப் பட்டமளிப்பு விழா உரையாற்றும் அறிவாண்மை பெற்றவர்,

'தமிழால் கலைஞர்
பெருமை பெற்றார்

தமிழோ கலைஞரால்
பெருமை பெற்றது
என்கின்ற வரியில்லாத
இலக்கிய வரலாறு
இங்கே கிடையாது'

என்று பாடுவார் அரசு மணிமேகலை.

'தினமும் இப்படி மொழியைக் கையாண்ட தமிழ்ப் படைப்பாளி தமிழில் வேறு யாரும் இல்லை. என்பார் அசோகமித்திரன். 'அரசியல் சாணக்கியம் இலக்கியப் பிரக்ஞை' இரண்டும் இணைவது அபூர்வம் என்பார்' இந்திரா பார்த்தசாரதி.

முடிவுரை

இலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தனியிடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர் கலைஞர்.

கலைஞர் இளமையிலேயே பொது வாழ்விலும் அரசியலிலும் ஈடுபட்ட அன்று தொடங்கி இன்றளவும் அந்தப் பிடிப்பிலேயே இருந்து பணியாற்றி வருகிறார்.

சுயமரியாதை இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அதன் அங்கமான கலைஞர் அதுமுதல் பேச்சிலும் எழுத்திலும் செயலிலும் சமுதாயச் சீர்கேடுகளைக் களைவதையே தம் தலையாய பணியாகக் கொண்டிருக்கிறார். பதினைந்து வயது இளைஞராக இருந்த போதே எழுதத் தொடங்கிய கலைஞர், தொய்வின்றித் தொடர்ந்து எழுதிக் கொண்டே இருக்கிறார். எழுத்துத் துறையில் கலைஞரின் கை வண்ணம் இல்லாத துறையேயில்லை.

'வருணாச்சிரமம் ஆழமாக ஊடுருவிட்ட இந்தியச் சமூகத்தில் பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த ஒருவர் அரசியலுக்கு வருவதும் ஆட்சித் தலைமை பூணுவதும் தேசிய அரசியலில் அலைக்கழிவு மிக்க நேரங்களில் நங்கூரமாக நின்று திசை காட்டியாகச் செயல் படுவதும் வரலாற்றில் நிகழ்வன அல்ல' என்பார் முனைவர். கு.பெ.பாலசுப்பிரமணியன். எத்தகு பின்புலமும் வாய்ப்பும் வசதியும் வாய்க்கப் பெறாத கலைஞர் உயர்ந்த நிலைக்கு வர அவரின் ஆளுமைப் பண்பே காரணம் எனலாம். கலைஞரின் இளமைக் காலச் சூழல், இயக்கச் சார்பு, செயல் திறன், ஆர்வம், தன்முனைப்பு, சுற்றுச்சூழல் ஆகியனவும் எவரையும் கவரும் இனிய தோற்றமும் அவருடைய ஆளுமைப் பண்புக்குக் காரணிகள் எனலாம். மேலும் அவர் கொண்ட கொள்கை, இலக்கியத் தேடல், அழகுணர்ச்சி, சமூக அரசியல் பொருளாதாரத் தாக்கம் ஆகியனவும் அவருடைய ஆளுமைத் திறனைப் பண்படுத்தும் கருவிகளாக அமைந்தன எனலாம்.

தந்தை பெரியாரின் சிந்தனைகள்

ப. கமலக்கண்ணன்

சிக்கய்ய நாயக்கர் கல்லூரி

ஈரோடு - 4

உலகம் தோன்றிப் பலகோடி ஆண்டுகளாக எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் மனித குல வரலாற்றில் மட்டும் மாற்றம் என்பது மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது. இதற்குக் காரணம் மனிதனுக்கு ஆறாவது அறிவாகிய எதையும் பிரித்தறியும் ஆற்றல் இருப்பதேயாகும். அத்தகைய அறிவு எது என்பதை எடுத்துக்காட்டி மனிதனுக்குத் தேவையான அனைத்துத் துறைகளையும் சீர்திருத்திய பெருமை தந்தை பெரியாருக்கு மட்டும் உரியதாகும்.

அறிவுக் கோட்பாடு

மனிதன் மனிதத் தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய்த் தொல்லை கொடுக்காதவனாய், நாணயமாய் வாழ்வது தான் அறிவாகும். மனிதனிடம் காணப்படும் நேயம் தான் பெரியார் கூறும் அறிவு. இந்த அறிவு குறிப்பிட்ட முதிர்ச்சியை அடைந்து விட்டால் அது பகுத்தறிவாகவும் மாறிவிடுவதாகக் கூறுகிறார். அறிவு என்பது ஒருபக்கம் சார்ந்து கூறும் மனப்பான்மை இல்லாமை. விருப்பு-வெறுப்பின்றி உண்மைகளை நன்கு ஆராய்ந்து காரணம் கூறும் மனப்பான்மை எந்தவொரு செயலானாலும் அதில் காணப்படும் நிறை, குறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்க வேண்டும்.

நம்முடைய இலக்கியங்கள் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு கருத்தை எடுத்துக் கூறுவதாகவே உள்ளது. மேலும் ஒரு மையக் கருத்தை வலியுறுத்துவதாகவே உள்ளது.

ஒரு குறிப்பிட்ட மதம், இனம், சமயம், கடவுள் என்ற நிலைகளை நாம் காணலாம். இந்த நிலைகளைப் போல் அல்லாமல் மனித சமுதாய முழுமைக்கும் பொதுவான ஒரு கருத்தை, சமானியத்தை நிலைநாட்ட அந்த இலக்கியங்கள் தவறிவிட்டன என்று தான் கூறவேண்டும்.

''எதையும் திறனாய்வு முறையில் சிந்தித்தல்
உற்று நோக்கவும் செய்தல்
சுதந்திரமாகச் சிந்தித்தல்''

என்ற கருத்தின் அடிப்படையில் நாம் நமது இலக்கியங்களை ஆய்வு செய்தோமானால் அவற்றை முழுமையான இலக்கியங்களாக நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அறிவு என்பதை அளவுகோலாகக் கொண்டு எதையும் ஆராய்ந்து முடிவுகளைக் கண்டறிந்தார் பெரியார்.

அறிவியல் மனப்பான்மை

ஒரு மொழியானது அறிவியலின் வளர்ச்சிக்கு ஏற்ப இயைந்த வகையில் முன்னேற்றம் காண வேண்டுமானால் வளமான சொற்களும், புதுப்புது கருத்துகளும் உருவாக்கப்பட வேண்டும். அப்போது தான் அந்தமொழி உலக மொழிகளோடு போட்டியிடும் தன்மையைப் பெறும். உதாரணமாக

1. கலைச் சொல்லாக்கம்
2. மொழிபெயர்ப்பு

தமிழைப் புதுமையான மொழியாக மாற்றுவதற்கு நாம் சகல முயற்சிகளையும் எடுக்கவேண்டும். பிறமொழிச் சொற்களை நம் மொழியில் ஏற்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது அந்தக் கருத்துக்குண்டான வார்த்தைகளைத் தோற்றுவிப்பதில் நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று அறிவுறுத்துகிறார்.

மேலும் தமிழில் உரிய சொற்கள் கண்டுபிடிக்கும் வரையில் ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் பெரியார் கூறுகிறார். பெரும்பாலும் ''காப்பி'' என்ற பானம் இப்போது அவசியமாகி விட்டது. அதற்கு நேரடியான சொற்கள் கிடைக்கும் வரை அதே சொல்லை நாம் பயன்படுத்துவதில் தவறில்லை. ஹைட்ரஜன் என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் எவ்வாறு மொழி பெயர்ப்பது என்ற நிலையில் பெரியாரிடம் இந்தக் கருத்துக் கொண்டு வரப்படுகிறது. அப்போது ஒரு குழுவினர் 'ஆப்ஜனகம்' என்றும் மற்றொரு குழுவினர் நீரகம் என்றும் சொல்லாக்கம் செய்தனர். பெரியார் அவர்கள் அந்தக் குழுவிடம் 'நீரகம்' என்றால் நமக்கு புரியும். ஆனால் 'ஆப்ஜனகம்' என்று மொழி பெயர்ப்பீரானால் நமக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமான 'ஹைட்ரஜன்' என்ற சொல்லே இருந்துவிட்டுப் போகட்டும் என்று கருத்துத் தெரிவித்தார். தந்தை பெரியார் கருத்து கூறுகிற முறை மிகவும் நுட்பமான மதியின் புலப்பாடு என்றே கூறலாம்.

எந்தவொரு துறையானாலும் தனது கருத்துகளை நடுநிலையோடும் உலகியல் அறிவோடும் எடுத்துக் கூறுவதில் பெரியார் தன்னிகரற்று விளங்கினார்.

''தமிழில் பொது அறிவு ஏற்படும்படியான அளவுக்கு ஆதாரங்களே இல்லை. வடமொழி ஆதாரங்கள் தான் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. எனவே உலகியலை நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால் வடமொழியில் உள்ள கருத்துகளும், சிந்தனைகளும் நமக்குப் பயன்படாது. வெளிநாட்டு அறிவு, இலக்கியம், அறிவியல் நுட்பம் போன்ற பல்வேறு நூல்களை மொழி பெயர்த்து நமது மொழியின் மேன்மையை உயர்த்த வேண்டுமென்று பெரியார் விரும்பினார்.

இலக்கியக் கோட்பாடு

பொதுவாகச் சங்க காலத்தில் இலக்கியத்தைச் செய்யுள் என்ற சொல்லால் தமிழில் குறித்தனர்.

''மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப்பு எனாஅ
மரபே தூக்கே தொடை வகை எனாஅ''

என்று தொல்காப்பியம் மாத்திரை முதலாக இழைவு ஈறாக உள்ள 34 வகையான கூறுகளை விளக்கிச் சொல்கிறது.

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிடனாக உணர்வின் வல்லோர்
அணிபெறச் செய்வன செய்யுள்

என நன்னூல் செய்யுளுக்கு விளக்கம் கூறுகிறது. ஆனால் பெரியார் தருகின்ற கருத்து மிகவும் புதுமையானதாகவும் பயன்பாடு மிக்கதாகவும் உள்ளது. இலக்கியங்கள் மாந்தர்களின் பொழுதுபோக்கும் கருவியல்ல, மனித சமுதாயத்தை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். தமிழரின் பண்பாட்டை, நாகரிகத்தை, இனத்தின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்காமல் சீர்திருத்த வேண்டும். இத்தகைய இலக்கியம் தான் இன்றைக்குத் தமிழனுக்குத் தேவையெனப் பெரியார் கருதினார். பெரியாரின் கோட்பாடுகளில் இலக்கியம், மொழி, அறிவியல், சமுதாயம் போன்ற எதுவானாலும் அதில் ஒழுக்கம், பகுத்தறிவு, மனித நேயம் போன்ற கருத்தியல்கள் தான் முதன்மையானதாக இருக்கின்றன.

துணைநூல்கள்

1. டாக்டர். பொற்கோ, தமிழ் வரலாற்றில் தந்தை பெரியார்
2. பெரியார் ஈ.வெ.ரா. மொழியும் அறிவும்
3. மா. நன்னன், பெரியாரியல் (மொழி) (2)
4. க.ப. அறவாணன், தமிழர் சமுதாய வரலாறு

பெரியாரின் மனிதநேயம் பெற்றுத்தந்த வெற்றிகளிற் சில

பு. இராசதுரை
விருதுநகர்

சாதி

தம் இளமையிலிருந்தே பெரியார் ஈ.வெ. இராமசாமி சாதிக் கொடுமைகளை உணர்ந்தவர். இந்த நாட்டின் முன்னேற்றம் சாதி முறையால் தடைப்படுகிறது என்பதை உணர்ந்தவர். பிறவியினால் ஒருவன் உயர்ந்தவனாகவும் பிறவியினால் பிறிதொருவன் தாழ்ந்தவனாகவும் உள்ளமை கண்டு அவர் வேதனையுற்றார். தாழ்த்தப் பட்டுக் கிடந்தவர்கள் உயர் சாதியார்க்கு உரிய வசதிகள் இலராய்த் துன்புற்றமையையும் அவர் கண்டார். கல்விச் சாலைகளிலும் அரசு அலுவல்களிலும் உயர்ந்த சாதியார் மட்டுமே இருந்தமையையும் அவர் கண்டார். காங்கிரசில் அவர் பணியாற்றும்போதே இவ்வுணர்வுகள் இவரிடம் நிரம்பி இருந்தன.

நீதிக்கட்சி

1916-இல் நீதிக்கட்சி வகுப்புரிமைக்காகவே தோன்றியது. எல்லாச் சாதியார்க்கும் கல்வி நிலையத்தில் இடம் வேண்டும்; அரசு அலுவல்கள் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை அது அரசு முன் வைத்தது. 1920-இல் அது சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இவற்றிற்காகச் செயல்படத் தொடங்கியது.

காங்கிரசில் இருந்த பெரியார் நீதிக்கட்சியின் வகுப்புரிமைக்கு ஆதரவாக இருந்தார். இதில் வியப்புக்கு ஒன்றும் இல்லை. காங்கிரஸ் மாநாடுகளில் வகுப்புரிமை குறித்த தீர்மானங்களை முன்மொழிந்தார். பார்ப்பனர் ஆதிக்கம் நிறைந்திருந்த காங்கிரஸ் இவரது வகுப்புரிமைத் தீர்மானத்தை ஏற்கவில்லை. எனவே பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார்.

சுயமரியாதை இயக்கம்

காங்கிரசை விட்டு வெளியேறிய பெரியார் 1925-இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். நீதிக்கட்சியின்

வகுப்புரிமைக் கொள்கைக்கு ஆதரவு அளித்தார். சுயமரியாதை இயக்கத்தை அமைத்ததன் மூலம் தமிழரின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

> ''மனிதனுக்கு வெட்கமும் ரோஷமும் ஏற்படுவதற்காகவே சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டது; சுயமரியாதை இயக்கம் மனித சமூகத்தையே மாற்றி அமைக்க ஏற்பட்டதாகும்''

என்றும் ''ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும் ...மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும்'' என்றும் பெரியார் அறிவித்தார்.

வகுப்புரிமை

1920 முதல் நீதிக்கட்சி அரசு இடஒதுக்கீடு குறித்த தீர்மானங்களைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றிருந்தும் 1928 வரை அது நடைமுறைக்கு வரவில்லை.

1928-இல் நீதிக்கட்சி ஆதரவுடன் டாக்டர் பி.சுப்பராயன் அவர்களின் சுயேச்சை அமைச்சரவையிலிருந்த எஸ். முத்தையா முதலியார் தாம் இன்னின்னார்க்கு இவ்வளவு இடங்கள் என்று வரையறை செய்து ஓர் ஆணையைப் பிறப்பித்தார். (ஆணை எண். 744 பொது 03.09.1928)

எஸ்.முத்தையா முதலியார் இந்த ஆணையைப் பிறப்பிக்கக் காரணமாக இருந்தவர் பெரியார். எனவே சென்னை மாகாணத்தில் இடஒதுக்கீடு என்னும் வகுப்புரிமையை நிலைநாட்டிய பெருமை பெரியாரைச் சேர்கிறது.

சாதி ஒழிப்பு

சாதிமுறை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும் என்ற பெரியார் தம் மாநாடுகளில் ஆயிரக்கணக்கான சாதி மறுப்புத் திருமணங்களை எடுத்துக்காட்டாக நடத்திக் காட்டினார். மாநாடுகளில் தாழ்ந்த சாதியார்களைக் கொண்டு சமைக்கச் செய்து ''உயர்சாதியாரை'' உண்ணச் செய்தார். சேரிகள் தனித்து ஊருக்கு வெளியே இருத்தல் கூடாது என்றார். இன்னும் பல.

பெண்ணுரிமை

சாதி முறையில் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்ற பகுப்புக்கள் இருந்தமை போலவே குடும்பத்திலும் ஆண் உயர்சாதியாகவும் பெண் தாழ்ந்த சாதியாகவும் இருந்தமையைக் கண்டார். பெண் ஆண்களுக்கு ஒப்பச் சரிசமமாக உரிமை பெற வேண்டும் என உழைத்தார்.

பெண்களுக்குச் சொத்துரிமை

1929 பிப்ரவரியில் செங்கற்பட்டில் நடைபெற்ற இவரது மாகாண சுயமரியாதை முதல் மாநாட்டிலேயே பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும்; ஒரு ஆண் ஒரு பெண்ணைத்தான் மணந்து கொள்ளலாமே ஒழியப் பலரை மணந்து கொள்ளுதல் கூடாது; பெண்களுக்கு மணவிலக்கு, விதவை மணம் முதலியன வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெண்கள் எதிர்த்தார்கள்

இத்தீர்மானங்கள் சில பெண்களிடையே அந்நாளில் எதிர்ப்புணர்ச்சியையும் எழுப்பியுள்ளமை காண்கிறோம். இது குறித்துப் பெரியார் குறிப்பிட்டவை.

''இதற்காக அப்போது எங்களைப் பார்ப்பனர்களும் எதிர்த்ததோடு நாங்கள் எந்தப் பெண்கள் சமுதாயமானது முன்னுக்கு வரவேண்டும் என்ற காரணத்திற்காக இப்படியெல்லாம் தீர்மானம் நிறை வேற்றினோமோ அதே பெண்களே மாநாடு கூட்டி எங்கள் தீர்மானங்களைக் கண்டிக்கலாயினர். இத்தீர்மானங்களால் பெண் களுடைய ஒழுக்கங்களெல்லாம் குட்டிச்சுவராகப் போய்விடும் என்று கூக்குரல் இட்டனர்.

ஆனால் எங்கள் தீர்மானங்கள் கூப்பாடுகள் வீண்போகாமல் அவையெல்லாம் இன்று சட்டமாக அல்லவா ஆகிவிட்டன'' என்றார் பெரியார். இச்செய்தியை 1959 ஏப்ரல் 30 நாளிட்ட 'விடுதலை'யிற் காண்கிறோம்.

தேவதாசி முறை

கோவில்களில் பொட்டுக்கட்டும் முறை நடைமுறைக்கு வந்து பெண்கள் ஈனவாழ்க்கை நடத்த வேண்டிய நிலை இந்நாட்டில் ஏற்பட்டது. தேவதாசிகள் என்று பகுக்கப்பட்ட இவர்தம் வாழ்க்கை இரங்கத்தக்கது. இம்முறையை ஒழிக்கப் பெரியார் முற்பட்டார்.

நீதிக்கட்சி ஆதரவுடன் டாக்டர் பி. சுப்பராயன் முதலமைச்சராக அமைந்த ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தேவதாசி ஒழித்துக் கட்ட முன்வடிவு கொணர்ந்தார். இதற்குப் பெரியார் பேராதரவு அளித்தார். இதுகுறித்துப் பெரியார் 27.12.60 அன்று கரூரில் ஒரு திருமண விழாவில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு:

தேவதாசி முறையை ஒழித்தோம்

''தோழர்களே இந்த நாட்டில் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது என்றால் எவரால்? எங்களால்தான். எங்கள் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியில்

இருக்கும்போது அது ஒழிக்கப்பட்டது. தேவடியாள் என்று ஒரு சாதியா? இவர்கள் எல்லாம் யார்? நம் அக்காள் தங்கைகளாக இருந்தவர்கள்தானே; இப்படிப் பல ஜாதிகளிலிருந்தும் ஆண்டவன் பேரால் பொட்டுக் கட்டிவிட்டனர். தாசித் தொழில் பழகித் தேவடியாள் ஆனார்கள்.

இந்தத் தேவதாசிச் சட்டம் சட்டசபையில் வந்தபோது வைதீகர்கள் எல்லாம் எதிர்த்தனர். சத்தியமூர்த்தி அய்யர் ''இது கடவுள் காரியம்; இதில் கை வைப்பதா?'' என்றார். இதற்கு டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் எழுந்து ''அந்தக் காரியத்தை நாங்கள் ஏதோ இத்தனை நாள் பார்த்து வந்தோம். இனி அந்தப் புண்ணிய காரியத்தை உங்கள் இனத்தார்களே பார்த்துக் கொள்ளுங்களேன்'' என்று கூறினார். பிறகுதான் அவர் வாயடைத்து நின்றார் என்று குறிப்பிடுகிறார்.

வசதி படைத்தவர்களுக்கு மட்டும் கல்வியா?

தமிழகத்தில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டது குறித்துப் பெரியார் மகிழ்ந்தாலும் ''எவன் கெட்டிக்காரன் மார்க் அதிகம் வாங்கியுள்ளான் என்று வலைவீசிப் பூதக்கண்ணாடி வைத்துத் தேடி எடுக்கின்றார்களே ஒழிய நாட்டுப் பெரும்பான்மை மக்களை ஒதுக்கவே பார்க்கிறார்கள்; முன்னேற்றவில்லை'' என்றார். கல்விக்காகச் செலவிடப்படுகிற பணம் கெட்டிக்காரப் பையன்கள் தாய் தந்தையர் மட்டும் கொடுத்த வரிப்பணம் அல்லவே; கல்வி அறிவற்ற பாமர மக்கள் வரிப்பணமும் உழைப்பும் அதில் உள்ளன என்பதைக் கல்லூரி நிர்வாகிகளும் ஆசிரியர்களும் - ஏன் - அரசாங்கமும் கூட மறந்துவிடுகிறது என்றும் படிக்காத பரம்பரையில் வந்த பையனை வசதியற்ற குடும்பத்தில் வந்த பையனைப் பாஸ் செய்திருந்தாலும் நீ மார்க் வாங்கவில்லை. ஆதலால் நீ கல்லூரியில் சேரத் தகுதியில்லாதவன் என்று இப்படியே தட்டிக் கழித்துவிட்டால் அவர்கள் கதி என்னாவது பரம்பரை பரம்பரையாகவே இப்படியே இருந்து சாக வேண்டியது தானா? என்றும் வினவினார்.

கலைக் கல்லூரிகளில் இந்நிலை இன்றில்லை யென்றாலும் தொழிற் கல்லூரிகளில் இத்திட்டம் உள்ளமையைக் காண்கிறோம். திறமையற்றவனையும் மதிப்பெண் குறைவாகப் பெற்றவனையும் கல்விநிலையங்கள் கடைத்தேற்ற வேண்டும் என்பது பெரியார் கருத்து. இவையெல்லாம் பெரியாரின் மனிதநேயம் பெற்ற வெற்றிகளிற் சில.

பெரியார் யார்?

செல்வ வசதி மிக்கவராயிருந்த பெரியார் சமுதாயத்தை மாற்றி அமைக்கும் பொறுப்பைத் தாமாகவே ஏற்றுக்கொண்டார்.

இதனால் அவருக்கு என்ன ஊதியம் கிடைத்துவிட்டது? அவரே கூறுகிறார்.

''நமக்கென்ன இதனால் ஜீவனமா? பணம், புகழ், கீர்த்தி சம்பாதனையா? ஏன் நமக்கு இத்தனை எதிரிகள்? ஒரு பத்திரிக்கை யாவது உதவியுண்டா? ஒரு தலைவராவது உதவியுண்டா? ஒரு தேச பக்தராவது உதவியுண்டா? இமயமலை வெய்யிலில் காய்கிறது என்பதாக நினைத்து விலகி விடலாம் என்று யோசிப்பதுண்டு. ஆனால் விலகுவதில்தான் என்ன லாபம்? என்றார் 1.05.27 நாளிட்ட ''குடிஅரசு'' இதழில்.

இறுதிவரை

விலகக்கூடாது என்று முடிவு செய்துவிடுகிற பெரியார் தம் பணி எத்தகையது என்பதையும் 1948-இல் தூத்துக்குடி மாநாட்டில் அறிவித்தார்.

''நாதசுரக் குழாயாயிருந்தால்
ஊதியாக வேண்டும்;
தவுலாயிருந்தால் அடிபட்டுத் தானாக வேண்டும்;
என்பது போல் எனக்குத் தொண்டை, குரல் உள்ளவரையில்
பேசியாக வேண்டும்''

என்பதன் வாயிலாக,

தம் உடலில் கடைசி மூச்சு இருந்ததுவரை பெரியார் என்னும் நாதசுரக்குழல் ஊதிக்கொண்டே இருந்தது. பெரியார் என்னும் தவுல் அடிபட்டுக்கொண்டே இருந்தது; பெரியாரின் தொண்டை யிலிருந்து குரல் வந்துகொண்டே இருந்தது.

லேனா தமிழ்வாணனின் ஒரு பக்கக் கட்டுரைகள்

பொ. இராமநாதன்
எஸ்.ஆர்.என்.எம். கல்லூரி
சாத்தூர்

இக்கால இலக்கிய வகைகளுள் கட்டுரை இலக்கியம் சிறப்புற்றுள்ளது.

கட்டுரை - விளக்கம்

உரைநடையில் ஒரு கருத்தை அல்லது பொருளை விளக்கும் வகையில் எழுதப்படும் சொற்கோவையைக் கட்டுரை எனலாம். ''கட்டுரை வகையானெண்ணொடு புணர்ந்து''[1] என்னும் தொல்காப்பிய நூற்பாவிலுள்ள 'கட்டுரை' என்னும் சொல்லிற்குக் ''கட்டுரையாவது பாட்டின்றித் தொடுக்கப்படுவது'' என இளம்பூரணர் விளக்கமளித் துள்ளார். சிலப்பதிகாரத்தில், ''கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை''[2] என்னும் பாடலடியில் உள்ள 'கட்டுரை' என்னும் சொல்லிற்கு அடியார்க்கு நல்லார். 'பொருள் பொதிந்த உரை' என விளக்கம் தந்துள்ளார்.

கட்டுரையிலக்கியம் என்பது, ''பொருள் பொதிந்த சொற்களால் உலகக் காட்சிகளை, இயல்புகளை அவரவர் கண்ணோட்டத்திற் கேற்பச் சுவையான நடையில் வெறும் பொழுதுபோக்காக மட்டும் அமையாது சிந்திக்க வைப்பதாகவோ, அறிவூட்டுவதாகவோ அமைவது''[3] என அறிஞர் கூறுவர்.

எனவே, ஒரு பொருளை அல்லது சிக்கலான கருத்தைத் தனித்தன்மையுடன் ஆராய்ந்து சுருக்கமாக உரைநடையில் வெளி யிடுவதைக் கட்டுரை எனக் கொள்ளலாம்.

ஒரு பக்கக்கட்டுரைகள்

லேனா தமிழ்வாணன் சிறுகதை, நாவல், கவிதை போன்றவற்றை விடக் கட்டுரை வகையையே மிகுதியாகப் பயன்படுத்தி நூல்களை எழுதியுள்ளார். இவர் இதுவரை எழுதியுள்ள 60 நூல்களுள் 52 நூல்கள் கட்டுரை வடிவத்தைச் சேர்ந்தவை. இதிலிருந்து கட்டுரையிலக்கியத் திற்கு லேனா தமிழ்வாணன் தரும் சிறப்பிடத்தை உணரலாம்.

லேனா தமிழ்வாணன் கல்கண்டு இதழில் 1980 ஆம் ஆண்டு முதல், 'ஒரு பக்கக்கட்டுரைகள்' என்னும் பகுதியை எழுதி வருகிறார்.

இவை அனைத்தும் தொகுக்கப்பட்டு நூல்வடிவில் வெளிவந்துள்ளன. ஒரு நூலுக்குச் சராசரியாக அறுபது கட்டுரைகள் வீதம்,'லேனா தமிழ்வாணனின் ஒரு பக்கக் கட்டுரைகள்' என்னும் பெயரில் இதுவரை பதினெட்டுப் பாகங்கள் வெளிவந்துள்ளன.

வாழ்வியல் கட்டுரைகள் மிகவும் சுருக்கமாக இருக்கவேண்டும் என்பது கல்கண்டின் இதழாசிரியர் பி.வி. பார்த்தசாரதியின் கோட்பாடு. லேனா தமிழ்வாணன் 'மற்றவர்களின் நன்மதிப்பைப் பெறுதல் எப்படி?' என்ற தலைப்பிலமைந்த தன் முதல் கட்டுரையைப் பக்க வரையறையின்றி எழுதிப் பார்த்தசாரதியிடம் காட்டினார். 'ஒரு பக்கத்திற்குள் சுருக்கிக் கொடு' எனப் பார்த்தசாரதி கூறினார். தன் கட்டுரையின் பக்க அளவைக் குறைக்க லேனா தமிழ்வாணனுக்கு மனமில்லை. எனவே பார்த்தசாரதியே கட்டுரையில் திருத்தம் செய்து படித்துப் பார்க்கக் கூறினார்.

கட்டுரையைப் படித்த லேனா தமிழ்வாணன் வியப்படைந்தார். தன் கட்டுரையில் எந்தவித இன்றியமையாத் தன்மையும் குறைய வில்லை. மாறாகக் கட்டுரை முன்பைவிடச் சிறப்பாக இருந்தது. இதுவே லேனா தமிழ்வாணன் ஒருபக்க அளவில் கட்டுரைகள் எழுதுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' ஒரு பக்கக்கட்டுரைகளின் பொதுப் பண்பாக உள்ளது. தனிமனித மேம்பாடு குறித்த செய்திகள் இக்கட்டுரைகளில் பெரிதும் கூறப்பட்டுள்ளன. பொது இடங்களில் நடந்து கொள்ளும் முறைகள், நேர நிர்வாகம், நல்ல பழக்கங் களைக் கையாளுதல், பெண்கள் முன்னேற்றம், குடும்பத்தினரின் செயல்பாடுகள் எனப் பல்வேறு கருத்துகளை மையமாகக் கொண்டு ஒரு பக்கக்கட்டுரைகள் அமைந்துள்ளன. இவற்றுள் நேரநிர்வாகம் குறித்த லேனா தமிழ்வாணனின் கருத்துகள் குறிக்கத்தக்கனவாகும்.

நேரநிர்வாகம்

வாழ்க்கையை நேசிப்பவர்கள் நேரத்தை வீணாக்க மாட்டார்கள். உச்சரிக்கப்பட்ட சொல்லையும், கடந்து போன நிமிடத்தையும் திரும்பப் பெறமுடியாது என்பர். ஒருவருக்கு ஒரு நாள் சம்பளம் நூறு ரூபாய் எனக்கொண்டால் அதில் அவர் செலவழித்தது போகப் பத்து ரூபாயை மிச்சம் வைத்தால் ஒரு வாரத்தில் எழுபது ரூபாயைச் சேமிக்கலாம். ஆனால் ஒருநாளின் இருபத்தி நான்கு மணி நேரத்தில் ஒரு மணி நேரத்தைச் சேமித்து வைத்து வார இறுதியில் ஏழு மணி நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியமா? நிச்சயமாக முடியாது. நேரத்தைச் சேமிக்க முடியாது. எனவேதான் நேரத்தைப் பொன் போன்றது; விலை மதிப்புமிக்கது என்றெல்லாம் கூறுகின்றனர்.

நேர நிர்வாகத்தின் அவசியத்தை லேனா தமிழ்வாணன் தனது கட்டுரைகளில் வலியுறுத்தியுள்ளார்.

நேரத்தின் அருமை

நேரம் என்பது அற்புதமான பொருள். உரிய முறையில் பயன் படுத்தாவிட்டால் அழுகும் பொருளாகிவிடும். நேரத்தின் அருமையைப் பின்வருமாறு லேனா தமிழ்வாணன் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

ஓராண்டின் அருமையை ஆண்டுக்கொருமுறை நடக்கும் தேர்வில் பங்கேற்றுக் குறைந்த மதிப்பெண் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்த மாணவனிடம் கேட்க வேண்டும். மாதத்தின் அருமையை குறைப்பிரசவமாகக் குழந்தையைப் பெற்ற தாயிடமும், வாரத்தின் அருமையை வார இதழின் ஆசிரியரிடமும், ஒருநாளின் அருமையை அன்றாடம் கூலி வேலை செய்து பொருளீட்டும் தொழிலாளியிடமும், ஒரு மணி நேரத்தின் அருமையை மருத்துவரிடமும் கேட்க வேண்டும்.

ஒரு நிமிடத்தின் அருமையைக் கடைசி நேரத்தில் பேருந்தை, இரயிலைத் தவறவிட்டவர்களிடமும், ஒரு விநாடியின் அருமையை விபத்தில் சிக்கியவர்களிடமும், மில்லி விநாடியின் அருமையைப் போட்டியில் தோல்வியுற்ற விளையாட்டு வீரர்களிடமும் கேட்க வேண்டும். மைக்ரோ விநாடியின் அருமையை அதிவேக கணினியின் செயல்பாட்டின் மூலம் அறியலாம்.[4] இவ்வாறு நேரத்தின் ஒவ்வொரு துளியும் எவ்வளவு சிறப்பு வாய்ந்தது எனக்கூறும் லேனா தமிழ்வாணன் அதைப் பயன்படுத்தும் வழிமுறைகளையும் கூறியுள்ளார்.

அதிகாலை என்னும் அதிசய நேரம்

அதிகாலை நேரம் ஆனந்தத்தைத் தருவது. அதிகாலையில் எழுந்திருப்பது உடல் ஆரோக்கியத்திற்கு உதவும். இரவில் நன்றாகத் தூங்கி எழுவதால் அதிகாலை நேரத்தில் மூளை சிந்தனை நெரிசல் இன்றிச் சுறுசுறுப்பாக இயங்கும். எத்தகைய பெரிய முடிவையும் அதிகாலை நேரத்தில் எடுத்தால் மிகச் சரியாக இருக்கும். அதிகாலையில் படிக்கும் படிப்புதான் மாணவர் மனதில் நன்கு பதிகின்றது எனக் கண்டறிந்துள்ளனர். அன்றாட வேலைகளைத் திட்டமிடுவதற்கும் எதிர்காலத் திட்டங்களை உருவாக்குவதற்கும் ஏற்ற நேரம் இதுவேயாகும்.

இத்தகைய சிறப்புமிக்க அதிகாலை நேரத்தை அனைவரும் பயன்படுத்த வேண்டும் என லேனா தமிழ்வாணன் விரும்புகிறார். அதிகாலையில் எழுவதற்குச் சில வழிமுறைகளையும் கூறியுள்ளார். தலைமாட்டில் அலாரம் கடிகாரம் வைத்துக்கொண்டு தூங்காமல் சில அடிதூரம் நடந்து சென்று அலாரத்தை நிறுத்துவதைப் போல் வைத்திருக்கவேண்டும். கண்விழித்தவுடன் மனதிற்குப் பிடித்தமான சில செயல்களைச் செய்யவேண்டும். இதனால் தூக்கம் முழுமை யாகக் களையும். இரவு தூங்கப் போகும் போதே 'நாளை அதிகாலையில்

எழுந்திருக்கவேண்டும்' என்று நினைத்துக் கொண்டே தூங்க வேண்டும். கண்டிப்பாக மறுநாள்அதிகாலையில் எழுந்திருக்க முடியும்.[5]

பயணநேரத்தைத் திட்டமிடுதல்

நீண்டதூரப் பயணத்தின் போது பயணத்திற்கு ஒரு நாள் முன்னதாகவே தேவையான பொருட்களை எடுத்து வைத்துவிட வேண்டும். இதனால் பயண தினத்தன்று பதட்டமின்றி நிம்மதியாகப் புறப்பட முடியும்.[6]

கல்லூரி, அலுவலகம் பத்து மணிக்குத் தொடங்குவதாக இருந்தால் 9.45-க்கே தொடங்குவதாக நினைத்து அதற்குத் தகுந்தாற்போல் வீட்டிலிருந்து கிளம்ப வேண்டும். அதனால் பரபரப்பு இன்றிப் பயணம் செய்யலாம். காலை நேரத்தில் கடிகாரத்தைப் பத்து நிமிடம் முன்னதாகக் காட்டும்படி வைத்து கொள்வது நல்லது.

காத்திருக்கும் நேரம்

ஒவ்வொருவரும் பேருந்துநிலையம், கடைகள், மருத்துவமனை எனப் பல இடங்களில் காத்திருக்க வேண்டியுள்ளது. ஓய்வற்ற நமக்கு ஒதுக்கித் தரப்பட்ட இனிய நேரமே காத்திருத்தல் என நினைக்க வேண்டும். காத்திருக்கும் போது நண்பர் உடனிருந்தால் அவசியமான செய்திகளைப் பேசலாம். மேலைநாட்டினர் செய்தித்தாளை வீட்டில் படிக்காமல் வெளியிடங்களில் காத்திருக்கும் நேரத்தில் படிக்கின்றனர். அப்பழக்கத்தை நாமும் பின்பற்றலாம்.

இத்தகைய செய்திகளை லேனா தமிழ்வாணன் தனது கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார். பொதுவாக இவரது கட்டுரைகள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சிறுசிறு தொடர்களாக அமைந்து இவரைப் பத்திரிகையாசிரியராக அடையாளம் காட்டுகின்றன.

இன்றைய அவசரமான உலகத்தின் செயல்பாட்டை உணர்ந்து லேனா தமிழ்வாணன் ஒருபக்க அளவில் கட்டுரைகள் எழுதி சிறப்புடன் விளக்குகிறார். வாசகர்கள் குறைவான பக்கத்திலுள்ள செய்திகளைப் படிப்பதற்கு ஆர்வம் காட்டுவதால் இவருடைய கட்டுரைகள் அனைவராலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன.

குறிப்புகள்

1. *தொல்காப்பியம், நூற்பா : 1380*
2. *சிலப்பதிகாரம், 2 : 37*
3. *ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப. 656, 657*
4. *லேனா தமிழ்வாணன், நேரம் நல்ல நேரம், ப. 11 - 15*
5. *லேனா தமிழ்வாணன், லேனா தமிழ்வாணனின் ஒரு பக்கக்கட்டுரைகள் - பாகம் - 9, பக். 48, 49*
6. *லேனா தமிழ்வாணன், லேனா தமிழ்வாணனின் ஒரு பக்கக்கட்டுரைகள் - பாகம் - 9, ப. 129*